

Pests and dise
cularly.thicker one
which indicates
insect Agrilus a
a spiral gall is
tumescence.

Metasystox
of incidence hel
control would b
is large.

H. Cannabi
pathogenic fungi o
the most important

Anthracnose:
starts on young l
and wither. The g

[Issued 2—8—75]

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

WEDNESDAY 5th MARCH 1975

Volume CXXX—No. 1

©
GOVERNMENT OF TAMIL NADU
1975

*Legislative Council Department*
*Fort St. George, Madras-9.*

[PRICE 85 *Paise*]

63158

N21, 52 H25
H25 - 130 - 1

# Tamil Nadu Legislative Council Debates

FIFTIETH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

(5th to 8th, 10th and 11th March 1975.)

VOLUME CXXX (Nos. 1 to 6).

TABLE OF CONTENTS.


| | *Pages* |
|---|---|
| *Wednesday, 5th March* 1975. | |
| Personnel of the Government of Tamil Nadu ... | i—iv |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council ... ... ... ... ... ... | v |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies ... ... | vii—x |
| 1. Questions and Answers ... ... ... | 1—18 |
| 2. Calling attention to ineligibility of Assistant Professors working temporarily in Government Arts Colleges with less than Grade 'B' in Post-Graduate Course for recruitment by Public Service Commission ... | 18—24 |
| 3. General discussion on the Budget for 1975-76 —*cont.* ... ... ... ... ... | 24—61 |
| 4. Papers laid on the table of the House ... | 61—62 |

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU.

THIRU KODARDAS KALIDAS SHAH.

---

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THE HON. DR. M. KARUNANIDHI, Chief Minister incharge of Public, Finance, Planning, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition and Excise.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister incharge of Education including Technical Education, Official Language, Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN, Minister incharge of Public Health, Medicine and Town Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN, Minister incharge of Backward Classes, Registration, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRU P. U. SHANMUGAM, Minister incharge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

6. THE HON. THIRU S. MADHAVAN, Minister incharge of Food and Co-operation, Agricultural Refinance, Textiles, Yarn, Handlooms, Law, Courts and Prisons.

7. THE HON. THIRU S. J. SADIQPASHA, Minister incharge of Industries, Mines and Minerals, Iron and Steel Control, Companies Electricity and Waqfs.

8. THE HON. THIRU Si. Pa. ADITANAR, Minister incharge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing, Agro-Engineering and Service Co-operative Societies at the Block, District and apex level including the Federation.

9. THE HON. THIRU A. P. DHARMALINGAM, Minister incharge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Youth Service Corps and Prosperity Brigade.

10. THE HON. THIRU MANNAI P. NARAYANASAMI, Minister incharge of Municipal Administration, Community Development, Panchayat and Panchayat Unions and Water Board.

11. THE HON. THIRU K. RAJARAM, Minister incharge of Labour, Housing, Accommodation control, Legislation on Weights and Measures, Statistics, Employment and Training and Slum Clearance Boards.

12. THE HON. THIRU C. V. M. ANNAMALAI, Minister incharge of Social Welfare including Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages and Approved Schools and Vigilance Service.

13. THE HON. THIRU O. P. RAMAN, Minister incharge of Commercial Taxes, Forest including Cinchona, Animal Husbandry, Legislation on Moneylending, Rural Indebtedness and Legislation on Chits.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN, Minister incharge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN, Minister incharge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Projects, Milk, Operation Flood Project, Tamil Nadu Dairy Development Corporation, Information and Public Relations and Film Technology.

16. THE HON. THIRU N. RAJANGAM, Minister incharge of Harijan Welfare, Indians Overseas and Refugees and Evacuees, Newsprint Control, Passports and Cinematograph Act.

---

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

---

### தமிழ்நாடு ஆளுநர்

மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பொதுத்துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில்பணியாளர் தொகுதி, (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப்பணியாளர் தொகுதி, (ஐ.ஏ.எஸ்.), அதிகாரிகள், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள், காவல்துறை, தேர்தல்கள், மதுவிலக்கு ஆயத்தீர்வை.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (கல்வி அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழில்நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சிமொழி, சட்டமன்றம், சுற்றுலா மற்றும் வளர்ச்சிக் கழகம்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட துறைகளுக்குட்பொறுப்பு வகிப்பார் : பொதுச்சுகாதாரம், மருத்துவம், நகராமைப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : பின்தங்கிய வகுப்பினர் நலன், பத்திரப்பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராமதான இயக்கங்கள்.

5. மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : (பொதுப்பணித்துறை அமைச கீழ்க்கண்ட துறைகளுக்துப் பொறுப்பு வகிப்பார் : பொதுப் பணிகள், சிறப்புச் சிறுபாசனங்கள் உள்ளிட்ட சிறுபாசனத்திட்ட வேலைகள், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

6. மாண்புமிகு திரு. செ. மாதவன் : (உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : உணவு, கூட்டுறவு, வேளாண்மை, மறுநிதிஉதவி, ஆலைத்துணிகள், நூல், கைத்தறி, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள்.

7. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (தொழில்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிற்சாலைகள், சுரங்கங்கள், கனிப்பொருள்கள். இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, கம்பெனிகள், மின்சாரம், முகம்மதியர் அறக்கட்டளைகள்.

8 மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (வேளாண்மைத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை உணவு உற்பத்தி, வேளாண்மை பொறியியல் பிரிவு, கூட்டமைப்புக்கள், உள்ளிட்ட மாநில–மாவட்ட வளர்ச்சி வட்டார அளவிலான வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிமுறைக் கூட்டுறவுச் சங்கங்கள்.

9. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (வருவாய்த்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வருவாய், வருவாய்த்துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், இளைஞர் அணி, சீரணி.

10. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (உள்ளாட்சித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், குடிநீர் வாரியம்.

11. மாண்புமிகு திரு. க. இராசாராம்: (தொழிலாளர் நல அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர் நலன் வீட்டுவசதி, இடவசதிக் கட்டுப்பாடு, எடைகள்-அளவுகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், வேலைவாய்ப்பும் பயிற்சி அளித்தலும், குடிசைமாற்று வாரியம்.

12. மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: (சமூக நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மகளிர்-சிறுவர் நலன் உள்ளிட்ட, சமூகநலத்துறை, மீன்வளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள் மற்றும் சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள்.

13. மாண்புமிகு திரு. ஒ. பி. ராமன்: (வணிகவரிகள் அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வணிக வரிகள், காடுகள் மற்றும் சின்கோனா, கால்நடை வளர்ப்பு, கடன் கொடுத்தல், (கிராம வாசிகள் கடன் பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த [illegible] டம்

14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார். போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள் அச்சுத்துறை, மற்றும் அரசினர் அச்சகம்.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அறநிலையத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அறக் கட்டளைகள், காதி மற்றும் கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் உற்பத்தி, பால் பெருக்குத் திட்டம், தமிழ் நாடு பால்ப்பண்ணைவளர்ச்சிக் கழகம், செய்தி-விளம்பரம் திரைப்பட நுட்பவியல்.

16. மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: (அரிசன நலத்துறை அமைச்சர்). கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலன், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள், மற்றும் திரைப்படச் சட்டம்.

---

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்

---

மேலவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. சி. பி. சிற்றரசு

மேலவைத் துணைத் தலைவர்

திரு. ம. பொ. சிவஞானம்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. எஸ். டி. ஆதித்தன்.
2. திரு. ஏ. பாலசுப்பிரமணியம்.
3. திரு. கே. எஸ். கணபதி
4. திரு. எம். எம். பக்கர்.

மேலவைச் செயலாளர்.

திரு. இ. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

உதவிச் செயலாளர்.

திரு. த. பி. டெல்லிதுரை, பி.எஸ்ஸி.

விவாதப் பதிப்பாளர்.

திரு. நா. கோதண்டராமன், பி.எ. பி.ஜி.எல்., பி.…

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| | தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|---|
| 1 | அப்துல் வகாப், கே.எஸ். .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 2 | அய்யணன் அம்பலம், அ. .. | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 3 | அறிவழகன், க., எம்.ஏ. .. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதி. |
| 4 | அறிவுடைநம்பி, புலவர் ஓ. .. | வட ஆற்காடு-தென் ஆற்காடு ஆசிரியர் தொகுதி. |
| 5 | அனிபா, நாகூர், ஈ.எம்., .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 6 | ஆதித்தன், எஸ்.டி.,பி.ஏ., பி.எல். | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 7 | ஆறுமுகசாமி, எம். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 8 | இளம்பரிதி .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை, |
| 9 | இராசகோபால், சி.வி. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 10 | இராசமாணிக்கம், எஸ்.ஏ. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 11 | இராசாராம், கே. (எதிர்க் கட்சித்தலைவர்). | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 12 | இராஜு, ஜி.என். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 13 | இராமகிருஷ்ணத் தேவர், எஸ். | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 14 | இராமநாதன், எம். .. .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 15 | இராம சுப்பையா, காரைக்குடி .. | நியமனம். |
| 16 | இராமசாமி படையாச்சி, எஸ். எஸ். | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 17 | எல்லமந்தா, பி. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 18 | கணபதி, கே.எஸ். .. .. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி ஆசிரியர் தொகுதி. |
| 19 | குன்றக்குடி அடிகளார், தவத்திரு | நியமனம். |
| 20 | கோலப்பா, சி.ஆர். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 21 | சக்தி மோகன், ஆர். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |

| தொடரிலக்கமும் உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| 22 சங்கரலிங்கம், எம். | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர் தொகுதி. |
| 23 சந்தோஷம், டி., எம். ஏ., பி.எல். | சென்னை தெற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 24 சாம்பசிவம், இரா. | தென் ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 25 செங்கோட்டு வேலப்ப கவுண்டர், எஸ். சி. | கோயம்புத்தூர்—நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 26 சிவஞானம், ம. பொ. (துணைத் தலைவர்). | நியமனம். |
| 27 சிற்றரசு, சி.பி. (மாண்புமிகு தலைவர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 28 சுந்தரேசத் தேவர், என். | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 29 சுவாமிநாதன், ஜி., பி.ஏ.பி.டி. | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள் தொகுதி. |
| 30 தங்கபாண்டியன், வி., பி.ஏ. பி.டி. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 31 தங்கவேலு, ஏ. | மாநில சட்டப் பேரவை. |
| 32 தமிழரசி, சி. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 33 தாமஸ், பி.ஆர். | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 34 தாமோதரன், ஏ.ஆர்., பி.எஸ்.ஸி. (ஆனர்ஸ்). | சென்னை வடக்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 35 தாமோதரன், ஜி.ஆர். | சென்னை மேற்கு பட்டதாரிகள் தொகுதி. |
| 36 திராவிடமணி, ஆ. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 37 டிமாண்டி டென்சில் வின்சென்ட் | மாநிலச் சட்டப் பேரவை. |
| 38 தென்னரசு, எஸ்.எஸ். | நியமனம். |



| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| 39 தேவராஜ், வி.எம். | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 40 நடராசன், எம்.கே.டி. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 41 நடராசன், என்.வி. (பின் தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 42 நாராயணசாமி, மன்னை ப. (உள்ளாட்சித் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 43 நாராயணசாமி, எஸ். | சென்னை மாவட்ட பட்டதாரிகள் தொகுதி. |
| 44 பக்கர், எம். எம். | நியமனம். |
| 45 பலராமன், எல். | வட ஆற்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 46 பாலசுப்பிரமணியம், அ. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 47 பாலசுப்பிரமணியம், கு. மா. | நியமனம். |
| 48 பெரியண்ணன், வி. ஆர். | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 49 மணி, கோ. சு. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 50 மாசிலாமணி, மு. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 51 முத்து, எஸ். | மாநிலச் சட்டப் பேரவை. |
| 52 முத்துகிருஷ்ணன், டி. வி. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 53 முத்துசாமி, செ. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள் தொகுதி. |
| 54 முருகேசன், எச். எல். | நியமனம். |
| 55 ரஸ்ஸல் ராஜ் | நியமனம். |

56 வசந்தபாய், ஜி. .. .. .. சென்னை மாவட்ட பட்டதாரிகள் தொகுதி.

57 வில்வம், வ. கே. .. .. .. நியமனம்.

58 வில்சன் அப்போலோஸ், என். கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.

59 வெங்கா, வி. .. .. .. செங்கற்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி.

60 வெள்ளபாண்டியன், எஸ். .. திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி.

61 வெங்கடேஸ்வர தீக்ஷிதர், ஒய். .. திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி.

62 ஜார்ஜ் கோமகன் .. .. .. மாநிலச் சட்டப் பேரவை.

63 வெற்றிடம் .. .. .. சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி.

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

### புதன் கிழமை, 1975 மார்ச் 5.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள் —விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Recruitments made by the State Planning Commission.*

* 101 Q.—THIRU M. ARUMUGASWAMI: Will the Hon. the Chief Minister be pleased to state

(a) whether a large number of recruitments has been made by the State Planning Commission ;

(b) if so, the total number of (i) Gazetted and (ii) Non-Gazetted personnel now appointed to the Commission ; and

(c) the scales of pay attached to those posts ?

மாநிலத் திட்ட ஆணைக் குழுவில் நியமனம் பெற்றவர்கள்.

திரு. எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) மாநிலத் திட்ட ஆணைக் குழு பலரை வேலைக்கு எடுத்துள்ளதா ?

(இ) ஆமெனில், அத்திட்டக் குழுவில் தற்போது நியமிக்கப்பட்டுள்ள (i) அரசிதழ்ப் பதிவு பெற்ற (ii) அரசிதழ்ப் பதிவு பெறாத பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை யாது ?

(உ) அப்பதவிக்கான சம்பள விகிதங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாநிலத் திட்டக் ஆணைக் குழுவில் நியமனம் செய்யப்பெற்ற அரசிதழ் பதிவு பெற்ற, அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்களின் எண்ணிக்கை, அவர்களது சம்பளம் வீதங்கள் ஆகியவை குறித்த விவரங்கள்@ மேலவை முன் வைக்கப்பட்டுள்ளன.

@ 63-72-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. எம். ஆறுமுகசாமி : இந்த மாநிலத் திட்ட ஆணைக் குழுவுக்கு ஆண்டுக்கு ஆகும் மொத்தச் செலவு என்ன? இந்தத் திட்ட ஆணைக் குழு இதுவரையில் பணியாற்றியதால் ஏற்பட்டுள்ள பலன்களைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, 1971ஆம் ஆண்டு தொடங்கியதிலிருந்து 1975 ஏப்ரல் முதல் ஆகஸ்ட் முடிய மொத்தமாக ஏறத்தாழ 36 இலட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறது. இதனால் பயன் என்ன என்று தொடர்ந்து கேட்டிருக்கிறார்கள். மாநிலத்திலே என்னென்ன திட்டங்கள் நிறைவேற்றலாம் என்பதுபற்றி மிகப் பரந்த அளவிலே ஆராயப்பட்டு அவைகளைப்பற்றிய வரைவுகள் இந்த மாமன்றத்திலே தரப்பட்டு, முழுமையான வடிவத்துடன் விரைவில் அந்தத் திட்டம் பற்றிய குறிப்புகள் இரு அவைகளிலேயும் வைக்கப்படவிருக்கின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாநிலத் திட்டக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட திட்டங்கள் — ஸ்கீம்ஸ் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எவ்வளவு சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அரசு மாநிலத் திட்டக் குழுவைக் கேட்டுக்கொண்டதன் பேரில் அரசின் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தை மாநிலத் திட்டக் குழு தயார் செய்து அரசுக்கு அனுப்பப்பட்டு அந்த அடிப்படையில் தான் அந்தத் திட்டங்களை மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்தோம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : மாநிலத் திட்ட ஆணைக் குழுவின் தற்பொழுதிய தலைவர் யார், துணைத் தலைவர் யார், உறுப்பினர்கள்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் இப்பொழுது திரு. மதியழகன் அவர்கள்; தலைவர்—முதலமைச்சர். முழுநேர உறுப்பினராக டாக்டர் டி. பிரைட் சிங் இருக்கிறார். பகுதி நேர உறுப்பினர்கள், டாக்டர் வி. சண்முகசுந்தரம், நிதித் துறைச் செயலாளர், வேளாண்மைத் துறைச் செயலாளர், ஆர். டி. எல். ஏ. செயலாளர் இருக்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாவட்ட அளவிலே திட்டக் குழு, பிளானிங் செல், ஒன்று அமைத்து அதனுடைய ஆலோசனை கேட்கப்படும் என்று சொல்லப்பட்டது. அது மாதிரி ஒரு மாவட்ட பிளானிங் செல் அமைக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாவட்ட அளவில் திட்டமிடும் பணிக்காக மாதிரிப்படிவங்களோடு கூடிய விரிவான நேர்முறைக்குறிப்புகளைத் தீட்டி, ஆணைக்குழு திட்டம் தயாரித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தந்தது. மாவட்டத் திட்டக் குழுவின் பணியை மாநிலத் திட்டக் குழு மேற்பார்வை செய்து, அதன் அடிப்படையில் அறிக்கை தயார் செய்திருக்கிறது.



## Pickpocketing in the Buses.

* 102 *Q.*—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of persons apprehended by the Police for pick-pocketing in the buses plying in Madras City, during the year 1973;

(*b*) whether the pickpocketing is on the increase in these buses; and

(*c*) if so, the action proposed to be taken by the Government in the matter ?

## பேருந்துகளில் ஜேப்படி.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 1973-ம் ஆண்டில் சென்னை மாநகரில் பேருந்துகளில் ஜேப்படி செய்ததற்காக, காவல் துறையினர் கைது செய்த ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) பேருந்துகளில் ஜேப்படி அதிகரித்துள்ளதா?

(உ) ஆமெனில், இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) 104 பேர்.

(இ) நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது.

(உ) பேருந்து நிறுத்தங்களிலும், ஓடும் பேருந்துகளிலும் நெரிசல் நேரங்களில் ரோந்துக் காவல் முடுக்கப்படுத்தப்பட்டுள்ளது. ஜேப்படித் திருடர்களைப் பிடிக்கும் பொருட்டு ஒவ்வொரு திங்களிலும் முதல் வாரத்திலும், இறுதி வாரத்திலும் சிறப்புக் காவற்படையினர் பணியில் அனுப்பப்படுகின்றனர்.

திரு. ஜி. சுவாமிநாதன்: சம்பளம் வாங்கக் கூடிய நாட்களில் அதுவும் மாதத்தில் முதல் வாரத்திலே அதிகமாக ஜேப்படி நடந்திருப்பதாக ஏதாவது தகவல் வந்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது ஜேப்படிக்காரர்களுக்கு நல்ல ஒரு அறிவிப்பாக இருக்கும் என்றும் கருதுகிறேன்.

திரு. கே. ராஜாராம் : அதுமட்டுமில்லை காவலர்களும் அந்த முதல் வாரத்திலே மிகவும் உஷாராக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அதைவிட இந்தச் சட்டைப் பைகளை வைப்பதிலே சம்பளம் பெறுபவர்கள் காவலர்கள் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது.

THIRU A. R. DAMODARAN : Sir, may I know if after seeing the film 'Pickpocket', pickpocketing has increased in Madras City ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்தப் படத்தைப் பார்ப்பதற்காக க்யூ வரிசையிலே நிற்கும் போதே பல பேர் பிக்பாக்கட்டுக்கு ஆளாகிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: இந்த பஸ் ஜேப்படிக்காரர்கள் பர்சுகளை அதிகமாகத் திருடுகிறார்களா, அல்லது பெண்களின் நகைகளையும் சேர்த்துத் திருடுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு கருணாநிதி: ஜேப்படி அடிப்பவர்களை ஜேப்படி அடிப்பவர்கள் என்றும் பெண்களின் நகைகளைத் திருடுபவர்களை பெண்களின் கழுத்தை நெரிப்பவர்கள் என்றும் தான் சொல்லுவார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: பஸ்ஸிலே நடைபெறுகிற திருட்டைப்பற்றித் தான் நான் கேட்டேன். ஜேப்படி அடிப்பவர்கள் கணக்கு மட்டும் வருகிறதா அல்லது பெண்களின் நகைகளைத் திருடுபவர்களின் கணக்கும் வருகிறதா என்பதைத்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:— இரண்டு வகையிலேயும் வருகின்ற திருட்டுக்களைத் தான் சொன்னேன்.

*Central Investigation Training School in Tamil Nadu.*

* 103 *Q.*—THIRU WILSON APPOLLOS (on behalf of THIRU Y. VENKATESWARA DIKSHIDAR): Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether the State Government have any proposal to urge the Central Government for the establishment of a Central Investigation Training School in Tamil Nadu ; and

(*b*) if so, the action taken thereon ?



தமிழ் நாட்டில் மத்திய புலனாய்வுப் பயிற்சிப் பள்ளி

*திரு. வில்சன் அப்போலோஸ் (திரு ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் சார்பில்) மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) தமிழ் நாட்டில், மத்திய புலனாய்வுப் பயிற்சிப் பள்ளி ஒன்று நிறுவ வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தும் உத்தேசம் ஏதும் அரசுக்கு உண்டா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

*Overbridge across the Level Crossing near Ariyalur.*

* 104. *Q.*—THIRU WILSON APPOLOS (on behalf of THIRU Y. VENKATESWARA DIKSHIDAR) : Will the Hon. the Minister for Public Works be pleased to state ;

(*a*) whether there is any proposal with the Government to construct an overbridge across the Level Crossing near Ariyalur on Perambalur-Ariyalur Highways ; and

(*b*) if so, when it will be constructed ?

அரியலூர் அருகில் உள்ள இருப்புப் பாதை கடவின் குறுக்கே மேம்பாலம்

திரு. வில்சன் அப்போலோஸ் (திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் சார்பில்): மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பெரம்பலூர்-அரியலூர் நெடுஞ்சாலையின் மீது, அரியலூர் அருகில் உள்ள இருப்புப் பாதைக் கடவின்மேல், மேம்பாலம் கட்டும் திட்டம் அரசாங்கத்திடம் உள்ளதா?

(இ) ஆமென்றால், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: (அ) and (இ) நிதி வசதிக் குறைவுக் காரணமாக தற்போதைக்கு இப்பணியை எடுத்துக்கொள்ள இயலாது.

*Sub-way near Shanthi Theatre.*

*105Q.—Thiru WILSON APPOLLOS (on behalf of Thiru Y. VENKATESWARA DIKSHIDAR) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have any proposal to construct a sub-way near Shanthi Theatre in Anna Salai ; and

(*b*) if so, when it will be constructed ?

சாந்தி திரைப்பட அரங்கு அருகில் சுரங்கப்பாதை

*திரு. வில்சன் அப்போலோஸ் (திரு ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் சார்பில்) : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) அண்ணா சாலையில் சாந்தி திரைப்பட அரங்கு அருகில் சுரங்கப் பாதை அமைக்கும் உத்தேசம் ஏதும் அரசுக்கு உள்ளதா?

(இ) ஆமெனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அண்ணா சாலையில் அஞ்சல் அலுவலகமும் திரைப்பட அரங்குகளும் அமைந்துள்ள பகுதியில் சுரங்கப் பாதை அமைப்பது குறித்த வரைபடத் திட்டங்களும் மதிப்பீடுகளும் சென்னை பெரு நகர வளர்ச்சி அதிகார மன்றத்தைக் கலந்தாலோசித்து தலைமைப் பொறியாளரால் (நெடுஞ்சாலை-கிராமப் பணிகள்) தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : சென்னை நகரத்திலே இப்படிப்பட்ட சுரங்கப் பாதைகள் எவ்வளவு உள்ளன ? இன்னும் எத்தனை சுரங்கப் பாதைகள் கட்ட அரசு உத்தேசித்துள்ளது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏற்கெனவே இரண்டு இடங்களிலே சுரங்கப்பாதைகள் அமைத்திருக்கிறோம். மேற்கொண்டு இப்பொழுது இந்த சாந்தி திரை அரங்கத்திற்கு எதிரிலே ஒரு சுரங்கப் பாதை அமைக்கவேண்டும் என்று திட்டம் போட்டிருக்கிறோம். இன்னும் பத்து இடங்களிலே இப்படி அமைக்க வேண்டும் என்று திட்டம் போட்டிருக்கிறோம். முழு விவரங்கள் என்னிடத்திலே இல்லை.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : இரண்டு இடங்களிலே சுரங்கப் பாதை இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த இரண்டுக்கும் ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு செலவாகியிருக்கிறது என்பதைத் தெரிவிக்கவேண்டும். மேற்கொண்டு சாந்தி சுரங்கப்பாதை அமைப்பதற்கு என்ன திட்டம். எவ்வளவு செலவாகுமென்று உத்தேசித்திருக்கிறார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஏற்கெனவே அண்ணா சிலைக்கு அருகே அமைந்துள்ள சுரங்கப்பாதைக்கும், சென்டரல் ஸ்டேஷனுக்கு அருகிலே அமைக்கப்பட்டிருக்கும் சுரங்கப் பாதைக்கும் எவ்வளவு செலவாகியிருக்கிறது என்ற புள்ளி விவரம் என்னிடம் இல்லை. இதைப்பற்றித் தனியாக உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டால், பதில் தருகிறேன். சாந்தியின் பக்கத்தில் சுரங்கப்பாதை அமைப்பது பற்றித் திட்டம் தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் எவ்வளவு செலவாகும் என்ற மதிப்பீடு வரவில்லை. வந்தபிறகு தான் பரிசீலனை செய்யப்படும்.

Thiru A. R. DAMODARAN: Sir, will the Government consider the desirability of installing escalators in very busy areas like the Sub-way near the Central Station as in most metropolitan areas, instead of putting up a rigid structure like cement concrete sub-ways, since escalators are put up in many modern Cities ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : வளர்ந்துவருகின்ற எல்லா நகரங்களிலேயும் எஸ்கலேட்டர் போட்டிருக்கிறார்கள். அதைப்போல் சென்னையிலே போடப்படவேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் யோசனை தெரிவித்திருக்கிறார்கள். அந்த யோசனை பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது.

Thiru G. VASANTHA PAI : Sir, how much current will each escalator consume ?

The Hon. Thiru P. U. SHANMUGAM : Sorry, Sir, I am not aware of it. The deailed estimates have not yet been prepared.

Thiru G. SWAMINATHAN : Sir, what will happen to the escalators after they are installed when there is current cut ?

The Hon. Thiru P. U. SHANMUGAM : Naturally, it will stop, Sir.

*Hoarding of food and other essential commodities.*

*106. Q. Thiru M. SANKARALINGAM (on behalf Thiru V. THANGAPANDIAN) : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) the number of persons against whom prosecutions were launched from March to June 1974, for hoarding food and other essential commodities in Ramanathapuram district ;

(*b*) the number of persons from whom essential commodities were seized by the Government ; and

(*c*) the manner in which the Government disposed of the food and other essential commodities so seized ?

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களைப் பதுக்குதல்

திரு. எம். சங்கரலிங்கம் (திரு. வே. தங்கபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1974 ஆம் ஆண்டு மார்ச் முதல் ஜூன் மாதம் வரை, இராமநாதபுரம் மாவட்டத்தில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களைப் பதுக்கியதற்காக எத்தனை பேர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது ?

(இ) எத்தனை பேர்களுடைய பொருட்களை அரசு கையகப்படுத்தியுள்ளது ?

(உ) கைப்பற்றிய உணவு மற்றும் அத்தியாவசியப் பண்டங்களை அரசாங்கம் என்ன செய்தது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) எவர் மீதும் நீதிமன்றத்தில் வழக்கு போடப்படவில்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

(உ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : எத்தனையோ பேர்களுடைய பொருட்களை அரசு கையகப்படுத்தியுள்ளதாகச் சொன்னார்கள். அது மாதிரி கையகப்படுத்தி வழக்குப்போடாமல் இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சில வழக்குகளை நாம் நீதிமன்றத்திற்குக் கொண்டுபோகிறோம். சில வழக்குகளை ப்ரொக்யூர்மெண்ட் பேசிஸ்சிலே வாங்கிவிடுகிறோம். இந்தக் கேள்வியின் அடிப்படையில் வரும் எவர்மீதும் வழக்குப் போடவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : எத்தனை பேர் பதுக்கினார்கள் என்று அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எத்தனை பேர் பதுக்கினார்கள் என்று என்னிடத்திலே தகவல் இல்லை. சிலபேரிடத்திலே இருக்கிற நெல்லை புரக்கியூர்மெண்ட் ரேட்டில் புரக்கியூர் செய்துவிடுகிறோம். எவ்வளவு பதுக்கி வைத்திருந்தார்கள் என்பதுபற்றிய தகவல் என்னிடம் இல்லை.

THIRU A. R. DAMODARAN : Sir, may I know if the producers who have not given their levy paddy are being prosecuted under the Maintenance of Internal Security Act in Tamil Nadu ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மிஸா சட்டத்தின்படி செய்யப்படவில்லை.



*Assignment of land to the landless.*

*108 Q.—THIRU WILSON APPOLLOS (on behalf of THIRU S. RAMAKRISHNA THEVAR) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the total extent of lands assigned by the Government to the landless in Ramanathapuram district from 1970 to November 1974, year-wise ;

(*b*) whether lands have been assigned to the family members even in cases where the head of the family owned lands ; if so, whether any action will be taken to resume the said lands ;

(*c*) whether lands have been assigned in other Districts or Taluks to the same person, or in the names of members of the family ;

(*d*) whether any action will be taken against those who have taken loans from the Government for the development of the said lands, but have not developed the lands; and

(*e*) of the lands so assigned the extent cultivated and the period for which the lands assigned should not be sold ?

நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் ஒப்படைப்பு

திரு. வில்சன் அப்போலோஸ் (திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் சார்பில்) : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் ஜில்லாவில் நிலம் இல்லாதவர்களுக்கு 1970 ஆம் ஆண்டிலிருந்து 1974 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முடிய வருட வாரியாக மொத்தம் எவ்வளவு நிலங்கள் அரசால் ஒப்படை செய்யப்பட்டுள்ளது ?

(இ) குடும்பத்திலுள்ள தலைவர்களுக்கு நிலம் இருந்து அதே குடும்பத்தில் உள்ள மற்றவர்களுக்கும் நிலம் ஒப்படை செய்யப்பட்டுள்ளதா ? ஆமெனில், திருப்பி எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(உ) ஒரே நபருக்கு மற்ற ஜில்லாக்களில் அல்லது தாலுக்காக்களில் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறதா அல்லது அவர்கள் குடும்பத்தார் பெயரில் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

(எ) இந்நிலங்கள்மீது அரசு தரும் கடன்கள் வாங்கி, அபிவிருத்தி செய்யாமல் வைத்திருப்பவர்கள்மேல் ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(ஐ) கொடுக்கப்பட்ட நிலங்களில் சாகுபடி செய்திருப்பது எத்தனை ஏக்கர்? கொடுத்த நிலங்களை எத்தனை ஆண்டுகள் வரை விற்கக் கூடாது?

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம்: (அ)—

| வருடம். | | | | | விஸ்தீரணம். ஏக்கர். | செண்ட் |
|---|---|---|---|---|---|---|
| 1970 | .. | .. | .. | .. | 23,411 | 27 |
| 1971 | .. | .. | .. | .. | 24,214 | 39 |
| 1972 | .. | .. | .. | .. | 15,871 | 97 |
| 1973 | .. | .. | .. | .. | 6,137 | 61 |
| 1974 | .. | .. | .. | .. | 3,788 | 03 |
| | | | | | 73,423 | 27 |

(இ) 12 நபர்களுக்கு அவ்வாறு கொடுக்கப்பட்டு ஒப்படைப்பை இரத்து செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(உ) இவ்வித இனங்கள் இல்லை.

(எ) ஒப்படைப்பு பெற்ற நிலங்கள் மூன்று ஆண்டுகளுக்குள் சாகுபடிக்குக் கொண்டுவராவிட்டாலும், அரசு கொடுக்கும் கடன் வாங்கி அந்நிலங்களை அபிவிருத்தி செய்யாமல் வைத்திருந்தாலும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஐ) 35,141.24 ஏக்கர் ஒப்படைப்பு செய்யப்பட்ட நிலங்களை ஒப்படைப்பு பெற்ற தேதியிலிருந்து 10 ஆண்டுகள் வரை விற்கக் கூடாது. அவ்விதம் விற்றால் அந்நிலத்தை அரசு திரும்ப எடுத்துக் கொள்ள உரிமை உண்டு.

THIRU G. VASANTHA PAI: Sir, how many persons were benefited by this assignment of land in quantity?

(பிற்பகல் 4–10)

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்; தலைவரவர்களே, 1947-ம் ஆண்டிலிருந்து 1967-ஆம் ஆண்டு வரையில் 20 ஆண்டு கால அளவில் 1·15 லட்சம் மக்கள் பயனடையும் வகையில் 2.88 இலட்சம் ஏக்கர்கள்



ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து அதாவது 1967-68 லிருந்து 30—11—1974 வரையில் 6.98 லட்சம் ஏக்கர் நிலம் ஒப்படை செய்யப்பட்டு 3.57 லட்சம் மக்கள் பயன் அடைந்துள்ளனர்.

### *Tamil Nadu Cement to Uttar Pradesh.*

* Q. 107. THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) whether the Central Government have recently issued any direction to the State that a portion of the Cement produced in Tamil Nadu should be exported to Uttar Pradesh; and

(*b*) if so, the details thereof?

### உத்தர பிரதேசத்திற்கு தமிழ்நாடு சிமெண்ட்

திரு. எம். சங்கரலிங்கம்; மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) மத்திய அரசு அண்மையில் தமிழ்நாட்டிலிருந்து உற்பத்தியாகும் சிமெண்டின் ஒரு பகுதியை உத்தரப்பிரதேசத்திற்கு அனுப்ப வேண்டுமென்று தாக்கீது எதும் அனுப்பியுள்ளதா?

(இ) ஆமெனில் அதுபற்றிய விபரம் யாது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் (மாண்புமிகு தொழில் அமைச்சர் சார்பில்) (அ) and (இ); நம் நாட்டில் உள்ள சிமெண்ட் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் சிமெண்டை எல்லா பிராந்தியங்களுக்கும் மத்திய அரசின் சிமெண்ட் கட்டுப்பாடு அதிகாரி காலாண்டு அடிப்படையில் ஒதுக்கீடு செய்கிறார். தமிழ்நாட்டில் ஒரு சில சிமெண்ட் தொழிற்சாலைகளின் உற்பத்தியில் ஒரு பகுதியை 1974ஆம் ஆண்டில் உத்திரப்பிரதேசம் உள்ளிட்ட வடக்குப் பிராந்தியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இது சம்பந்தமாக இந்த அரசுக்கு எந்தவிதமான தாக்கீதும் அனுப்பப்படவில்லை.

திரு எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே, 1974 ஆம் ஆண்டில், மற்ற வருஷங்களை விட கூடுதலாக உத்தரப்பிரதேசத்திற்கு சிமெண்ட் ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. மாதவன்: தலைவரவர்களே, மொத்தம் எவ்வளவு என்ற புள்ளிவிவரம் என்னிடமில்லை. நம்முடைய சிமெண்ட் தொழிற்சாலைகளிலிருந்து உத்தரப்பிரதேசத்திற்குச் தனிச்சலுகை போல, உடனடியாக சில அளவு சிமெண்ட் அனுப்ப வேண்டுமென்று ஆலைகளுக்கு உத்தரவு இடப்பட்டிருக்கிறது.

## *Concessions to Students and Teachers in Tamil Nadu State Transport Buses.*

*109. Q—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether it is a fact that the Tamil Nadu State Transport Department and other Transport Corporations in Tamil Nadu, grant concession in bus fares to the teachers and students who go on educational tours and excursions ; and

(b) if so, the details thereof ?

## தமிழ்நாடு அரசு போக்குவரத்து பேருந்துகளில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கட்டணச் சலுகைகள்.

திரு கே. எஸ். கணபதி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்விச் சுற்றுலாக்களிலும், சுற்றுலாக்களிலும் செல்லும் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோருக்கு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையும், தமிழ்நாட்டிலுள்ள ஏனைய போக்குவரத்துக் கழகங்களும் பேருந்துக் கட்டணங்களில் சலுகை வழங்குவது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் விபரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : (அ) ஆசிரியர்களும் மாணவர்களும் கல்விச் சுற்றுலா செல்கையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறையும், ஏனைய போக்குவரத்துக் கழகங்களும் அளிக்கும் கட்டணச் சலுகைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.—

| | |
|---|---|
| தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை பல்லவன் போக்குவரத்துக் கழகம். | ஞாயிற்றுக் கிழமைகளிலும் ஏனைய [illegible] விடுமுறை நாட்களிலும் பேருந்தை நிறுத்தி வைத்துக்கொள்வதற்கான கட்டணங்களில் சலுகை அளிக்கப்படுகிறது. |
| பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம். | ஒப்பந்தக் கட்டணங்களில் 25 சதவீதம் மாணவர்களுக்கு மட்டும் அளிக்கப்படுகிறது. |
| கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம். | பேருந்தை நிறுத்திவைத்துக கொள்வதற்கான கட்டணங்சகளில் ரூ. 100/- சலுகையாக மாணவர்களுக்கு மட்டும் அளிக்கப்படுகிறது. |
| சேரன் போக்குவரத்துக் கழகம், சோழன் போக்குவரத்துக் கழகம், அண்ணா போக்குவரத்துக் கழகம். | சலுகை எதும் கொடுக்கப் படுவதில்லை. |



திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, ஒவ்வொரு போக்குவரத்துக் கழகமும் தனக்கென தனிவிதி வைத்துக்கொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவைகளிலே வேறுபாடுகள் இருக்கின்றன. என்றும் குறிப்பிட்டார்கள். அந்த வேறு பாடுகளை அகற்றி, அனைத்துக் கழகங்களுக்கும் ஒரே விதமான விதியை வகுத்து மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஒரே விதமான சலுகைகள் வழங்க அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பல்வேறான தனியார் நிறுவனங்களையெல்லாம் அரசு ஏற்று நடத்தியது. ஆங்காங்கே போக்குவரத்துக் கழகங்களாக,அவைகள் இயங்கி வருகின்றன. ஆகையினால் இப்படிப்பட்ட சலுகைகளை அந்தந்தக்கழகங்கள் தங்களது நிதிநிலையை மனதில் கொண்டு அளித்து வருகின்றன. ஆகையினால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையை ஏற்பதற்கில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அன்றாடம் பள்ளி செல்வதற்கு, மாதாந்திர பாஸ் சலுகை விகிதாசார அடிப்படையில் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால், எல்லா விவரங்களும் சேகரித்துக் கொடுக்கப்படுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI : Sir, will the Government also consider having such educational tours and excursions for legislators also in groups of 40, to other States also ?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, I am confident that the legislators need no such education.

திரு செ. முத்துசாமி : தலைவரவர்களே, இப்பொழுது மத்திய அரசின் ரயில்வேயில் கல்வி சம்பந்தமாக பள்ளிகள் சுற்றுப்பயணம் மேற்கொள்கின்ற நேரங்களில், 50 சதவீதக் கட்டணச் சலுகை கொடுக்கின்றார்கள். அதுமாதிரி தமிழகப் போக்குவரத்துக் கழகங்களில் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அத்தகைய வசதி அளிக்கப்படமாட்டாது.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, தமிழ்நாடு போக்குவரத்துக் கழகம் வழங்குகின்ற சலுகைகளை மற்ற போக்குவரத்துக் கழகங்களும் வழங்குவதற்கு அரசு பரிந்துரை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நாம் எதைச்சொன்னாலும், ஒவ்வொரு கழகத்தின் நிதி நிலைமையைப் பொறுத்துத்தான் செய்யப்படும். சில போக்குவரத்துக் கழகங்கள் நிதி நெருக்கடியில் இருந்துகொண்டு வருகின்றன. ஆகவே சலுகைகள் அந்தந்தக் கழகங்களுடைய நிதி நிலைக்கேற்ப வழங்குவார்கள்.

*Pallavan Transport Buses involved in accidents.*

*110. Q—Thiru D. V. D'. MONTE: Will the Hon. the Minister for Transport be pleased to state —

(*a*) the total number of accidents wherein the buses run by the Pallavan Transport Corporation were involved, since the Corporation came into being, year-war ; and

(*b*) out of them, the number proved fatal ?

விபத்துக்களில் சிக்கிய பல்லவன் போக்குவரத்து பேருந்துகள்.

திரு.டி.வி.டி.மாண்டி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பல்லவன் போக்குவரத்துக்கழகம் அமைக்கப்பட்டதிலிருந்து பல்லவன் போக்குவரத்துக்கழகம் இயங்கிவரும் பேருந்துகள் சம்பந்தப்பட்ட மொத்த விபத்துக்கள் ஆண்டு வாரியாக எத்தனை ?

(இ) அவற்றில், மரண விபத்துக்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பல்லவன் போக்குவரத்துக் கழகம் ஆரம்பித்ததிலிருந்து அதன் பேருந்துகள் சம்பந்தப்பட்ட மொத்த விபத்துக்களும், மரண விபத்துக்களும், ஆண்டு வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு. | விபத்துக்களின் மொத்த எண்ணிக்கை. | மரண விபத்துக்கள். |
|---|---|---|
| 1972 | 2,574 | 74 |
| 1973 | 2,546 | 67 |
| 1974 | 3,212 | 111 |



Thiru D. V. D' MONTE : Sir, may I know whether the Government have any proposal to instruct the drivers and conductors not to allow the passengers to travel on food-boards and stop the vehicles, if necessary?

The Hon. Thiru S. RAMACHANDRAN : Sir, already very serious thought is being given to reduce the number of accidents considerably in Madras City. As the hon. Members are aware, the Police have already taken action to prevent foot-board travelling and also the crossing by pedestrians at their own will and pleasure during the peak-hour period. At the same time, we are also thinking of introducing a point-demerit system for the drivers as well so that if they are found faulty in driving, points can be assigned, and say after the points reach a certain number, the licence of the driver will be liable for suspension or for some other action as it is deemed fit.

Thiru D. V. D' MONTE : There are some more points—poor maintenance of transport vehicles, particularly faulty brakes, thoughtless driving like the driving of more than two vehicles abreast. May I know whether steps are being taken for the preventive maintenance of such vehicles ?

The Hon. Thiru S. RAMACHANDRAN : Sir, it is not exactly correct to say that it is only due to the lack of proper maintenance that these accidents occur. The problem also lies in driving. In fact, when an analysis is made into the causes of the accidents, the fault due to driving probably assumes the major portion in contributing to the total number of accidents. Unless we take some serious steps to train our drivers and also to follow them up while they drive in actual practice, it will be very difficult to put down the number of accidents not only in Madras City but in the State as a whole.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, அரசுப் போக்குவரத்தில் டிரைவர்களாக நியமிக்க ஆள் எடுக்கும்போது, பயிற்சி பெற்றிருந்தாலும் எடுத்த பின்னர் இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. அந்தப் பயிற்சிக் காலத்தை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்தி அவர்களை மிகத்திறமை படைத்த டிரைவர்களாக்கினால், நல்லதாக இருக்கும் என்று கருதுகிறேன். இதுபற்றி அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோன்று அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் நாம் நியமிக்கின்ற ஓட்டுநர்களுக்குப் பயிற்சியளிக்கின்றோம். அவர்களுக்கு மட்டும் அளிப்பதால் விபத்துக்களை அறவே போக்கிவிட முடியாது. இன்னும் வேறு பல வண்டிகள், லாரி போன்றவைகளின் ஓட்டுநர்களாலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன. இது குறித்து மாநில போக்குவரத்துக் கழகங்களே பார்த்துக்கொள்ளட்டும் என்று இருந்து

விடாமல், அரசுப் போக்குவரத்துத் துறையைச்சார்ந்த ஆர். டி. ஒக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. நான் அண்மையில் சிங்கப்பூர் சென்றிருந்தபோது, அங்கு இது சம்பந்தமாக விதிமுறைகளைக் கொண்டு வந்திருப்பதைக் கண்டேன். இதை ஒரு சட்டமாகவே செய்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த முறையில் நம்முடைய விதிமுறைகளைக் கொஞ்சம் மாற்றி இந்த ஓட்டுநர்கள் கொஞ்சம் ஜாக்கிரதையாகவும் அதே நேரத்தில் நல்ல முறையாகவும் ஓட்டுவதற்கு கண்காணிப்பதற்காக சில நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு பரிசீலித்து வருகிறது.

THIRU G. VASANTHA PAI: Sir, since the Hon. Minister has talked about Singapore, may I invite the Hon. Minister's attention to the fact that there is a yellow line on one side of the road in Singapore and during the peak hour only buses can travel through this portion and buses cannot travel beyond this yellow line and those lanes are exclusively demarcated for public conveyances and for the buses? Can such a procedure be adopted in this country, Sir?

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, it is not so easy for adoption in our Cities. It requires bigger road spacing and also separate space for providing the bus-lanes. In fact, I myself have seen there during peak hours that the buses ply through the bus lanes only to clear the heavy congestion in traffic. Such system of roads, I am afraid, we are not having at present as far as Madras City is concerned. It is also a fact that Madras City is not so much congested as Singapore City. In course of time probably it may reach that level; but it is not so as it is. Anyhow, prevention is better than cure. If we introduce an element of careful driving in our own drivers, I think we will be able to reduce the number of accidents.

THIRU A. R. DAMODARAN: Sir, a good portion of the accidents arise because bus drivers do not observe the parking rules when they come near the kerb to pick up passengers. May I know whether the Government will consider any sort of incentive or bonus scheme to see that the drivers obey the laws of the land and see that they park the buses at the places where they should be parked and not in the middle of the road?

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, the hon. Member is well aware of the fact that driving is more a habit than a function which could be controlled by incentives. So, in order to cultivate good habits in driving, it is necessary to train them and also to observe whether they follow the rules over a period of time. Probably there may be some bad elements who did not qualify for driving but who might have ultimately got some driving licence and they may continue in the occupation for their whole lifetime. So, in order to eliminate such cases and in order to



have good drivers, I think, we may have to think on these lines as the other Governments have done in introducing some more measures to inculcate strict discipline among the drivers.

THIRU G. SWAMINATHAN: May I know whether the Government are aware that the driving licence is given indiscriminately nowadays by the Regional Transport Officers and corruption plays a large part in giving the Heavy Vehicle Licences? Before taking such drivers for service in the Transport Department, will the Government institute a separate test for these drivers, instead of relying only on the certificate that has been already given to them?

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, the Government are not aware of any such thing, as the hon. Member has stated. Anyhow, we are aware of one simple thing that when discretion is allowed to the staff in the lower rungs, naturally there is room for such allegations. So, in order to limit the area of discretion, we are trying to tighten the procedure in issuing driving licences.

THIRU K.S. ABDUL WAHAB: Which accidents are more in number, Sir, those that happen in the City or those that happen in the long routes?

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, the accidents are more in number in the City and the suburban areas.

THIRU G. SWAMINATHAN: Is there any test prescribed for the drivers, as in the case of other States, regarding Road Safety measures, in our State?

THE HON. THIRU S. RAMACHANDRAN: Yes, Sir. It is there in the Rules.

THIRU A. R. DAMODARAN: Sir, one small clarification. I asked the Government whether incentives would be given to Drivers of State Transport, because the moment the police constable takes any action against any driver, the entire transport comes to a standstill. I agree that driving is a habit; but these law enforcement authorities enforce it against law abiding individuals like myself and not against the drivers of State Transport.

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, that is why I have been suggesting that too much of discretion should not be allowed to the satff in the lower ranks so that they need not pick up quarrels. In fact, the mark system is envisaged for that purpose. For example, for reckless or dangerous driving—6 points are awarded. In the same way, points are

awareded for driving without due care and reasonable consideration, failing to give way to the pedestrians, disobeying the signal of the police at crossings. When we identify the areas of friction, probably even the staff may not give any grounds to complain against the law enforcing authorities. So, we want to analyse the various factors and limit the area of discretion which is infinite now, so that there may not be any quarrel between the police staff and the drivers.

THIRU G. SWAMINATHAN: Sir, may I know whether Tamil Nadu leads in the number of road accidents when compared with all other States in India?

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, unfortunately, it is Delhi City that leads us, next comes Bombay and we are only in the third place in the number of accidents.

THIRU G. SWAMINATHAN: Sir, in 1972, Madras State was the first in the number of road accidents and more than Bombay. I think we have gone from the first to the third place in the ranking now.

The Hon. Thiru S. RAMACHANDRAN: Sir, this ranking to be in the third place is best probably form the point of view of the safety of life and property of our people.

*மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.*

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்படாதது என்பதைக் குறிக்கும்.]

(பிற்பகல் 4-20)

2. கவன ஈர்ப்பு

மேற்பட்டப் படிப்பில் 'பி' தரத்திற்குக் குறைவாக வாங்கி அரசு கலைக் கல்லூரிகளில் தற்காலிகமாகப் பணியாற்றும் உதவிப் பேராசிரியர்கள் பொதுப் பணித் தேர்வாணைக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட தகுதியின்மை குறித்து.

THIRU G. SWAMINATHAN: Mr. Chairman, Sir, I wish to call the attention of the Hon. the Minister for Education to an urgent matter of public importance, namely:

"Ineligibility of the Assistant Professors working temporarily in Government Arts Colleges in Tamil Nadu who have secured less than Grade 'B' in their Post-Graduate Degree Courses for the purpose of recruitment by the Tamil Nadu Public Service Commission and the consequent hardship caused to hundreds of such individuals in the State."



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, புதிய பாடத் திட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு, அரசினர் கலைக் கல்லூரிகளில் உதவிப் பேராசியர் பதவிக்கு நியமனம் பெற இருப்பவர்கள் சென்னை அல்லது அண்ணாமலைப் பல்கலைக் கழகங்கள் நடத்தியுள்ள எம். ஏ., பி. ஏ. (ஆனர்ஸ்) அல்லது பி. எஸ். ஸி. (ஆனர்ஸ்) பட்டப் படிப்பில் அவரவர்கள் போதிக்க வேண்டிய பாடத்தில் முதல் அல்லது இரண்டாவது வகுப்பில் தேர்வு பெற்றிருக்க வேண்டும். பழைய பாடத் திட்டத்தின் கீழ் முதுகலைப் பட்டப் படிப்பில் முதல் வகுப்பு (I class) இரண்டாவது வகுப்பு (II class), மூன்றாவது வகுப்பு (III class) என்று வெற்றி பெற்றவர்கள் வரிசைப் படுத்தப்பட்டார்கள். 50 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றவர்கள் இரண்டாவது வகுப்பில் தேறியவர்களாகக் கருதப்பட்டார்கள். 1965-ஆம் ஆண்டு சென்னை பல்கலைக் கழகத்தால் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட எம். ஏ., எம். எஸ்.ஸி. புதிய பாடத்திட்டத்தில் முதல் வகுப்பு மற்றும் இரண்டாவது வகுப்பு மட்டுமே இருந்து வருகிறது. 45 விழுக்காடு மதிப்பெண்களிலிருந்து 60 விழுக்காடு மதிப்பெண்கள் வரையிலும் பெற்று தேர்ச்சி அடைபவர்கள் இரண்டாவது வகுப்பில் தேர்ச்சி அடைபவர்களாகக் கருதப்படுவார்கள். 45 விழுக்காடு மதிப்பெண்களிலிருந்து 49 விழுக்காடு மதிப்பெண்கள் வரையிலும் பெற்று வெற்றி பெறுபவருக்கு "சி" பிளஸ் நிலை வழங்கப்பட்டு வருகிறது. 50 விழுக்காடு மதிப்பெண்களிலிருந்து 59 விழுக்காடு மதிப்பெண்கள் பெறுவோர்க்கு "பி" நிலை ("பி" கிரேடு) வழங்கப்பட்டு வருகிறது. 60 விழுக்காடு மதிப்பெண்களுக்குமேல் பெற்று வெற்றி பெறுவோர் முதல் வகுப்பில் தேர்ச்சி அடைந்தவர்களாக கருதப்படுவார்கள்.

தமிழ்நாடு கல்வி சார்புப் பணிகளின்கீழ் வரும் பதவிகளுக்கு கல்வித் தகுதியாக கருதப்படும் எம். ஏ., எம். எஸ்ஸி. முது கலைப் பட்டப் படிப்பில் புதிய பாடத் திட்டத்தின்கீழ் வெற்றிபெறுவோர் அவரவர் போதிக்க வேண்டிய பாடத்தில் 50 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருந்தாலன்றி தகுதியுடையவராகக் கருதப்பட மாட்டார்கள் என்று 1965 ஜூன் திங்களில் தமிழ்நாடு கல்வி சார்புப் பணிகளின் தனி விதிக்கு அரசு திருத்தம் வெளியிட்டுள்ளது. ஆகையினால் இத்திருத்தம் தற்போதைய கல்வித் தகுதிக்கு ஒரு திருத்தமே தவிர புதிய நிபந்தனை ஏதும் இத்திருத்தத்தில் இல்லை. கல்வி போதிக்கும் பணிக்கு தேவைப்படும் உயர்ந்த தகுதிக்கு இது தேவையானது.

ஆகவே, உதவிப் பேராசிரியர் பதவிக்கு இப்போதைய எம். ஏ. எம்.எஸ்ஸி. முதுகலைப் பட்டப் படிப்பில் கல்வித் தகுதியாக கருதப்படும் "பி" நிலை ("பி" கிரேடு) முந்தைய எம். ஏ. இரண்டாவது வகுப்பிற்கு சமமானதே. ஆகையினால் உதவிப் பேராசிரியர் பதவிக்கு நியமனம் பெறுவதற்கு கல்வித் தகுதியில் எந்த மாற்றமும் இல்லை. உதவிப் பேராசிரியர் பதவிக்கு நியமனம் பெற கல்வித் தகுதி இப்போது தான் மாற்றப்பட்டுள்ளது என்ற கூற்று சரியல்ல.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 மார்ச் 5

பத்தி 2-ல் கூறப்பட்டுள்ள திருத்தத்திலுல் எம். ஏ., எம். எஸ்ஸி. முதுகலைப் பட்டப்படிப்பில் புதிய பாடத் திட்டத்தின்கீழ் 50 விழுக்காடு மதிப்பெண்களுக்கு குறைவாகப் பெற்று இரண்டாவது வகுப்பில் தேர்ச்சி பெற்றோருக்கு அரசினர் கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர் பதவியில் நியமனம் பெற சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடுகிறது என்று அரசுக்குக் கோரிக்கைகள் வந்தன. அக்கோரிக்கையினை அரசு பரிசீலனை செய்து 3—12—1969-ல் ஏற்கனவே பேராசிரியர்கள் அல்லது உதவிப் பேராசிரியர்கள் பதவியில் பணிபுரிபவர்கள், புதிய திட்டத்தின்கீழ் நடைபெற்ற தேர்வில் குறைந்த பட்சம் 50 விழுக்காடு மதிப்பெண்களைப் பெறாது இருந்தால், இவர்கள் பொருட்டு விதிவிலக்கு கொடுத்து அவர்களின் பணிகளை வரன்முறைப்படுத்த பொதுவான ஆணையிடப்பட்டுள்ளது. 3—12—1969க்கு பின் புதிதாகப் பணியில் சேரும் எல்லா நபர்களைப் பொறுத்தவரை, முதுகலைப் பட்டப் படிப்பில் அவரவர்கள் போதிக்க வேண்டிய பாடத்தில் குறைந்த பட்சம் 50 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும் என்ற விதி கட்டாயமாக அமுல்படுத்த வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

ஆங்கிலப் பாடத்தைப் பொறுத்தவரை, பத்தி 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பெற்றவர்கள் மிகவும் சொற்பமானதால், ஆங்கில உதவிப் பேராசிரியர்கள், போதனாசிரியர் பதவிகளுக்கு தகுதி உள்ளவர்கள், தேவைக்கேற்ப கிடைக்கவில்லை. ஆகவே, ஆங்கில உதவிப் பேராசிரியர் மற்றும் போதனாசிரியர் பதவிகளுக்கு நேரடியாக நியமனம் பெற இருப்பவர்கள் முது நிலைப் பட்டப்படிப்பில் இரண்டாவது வகுப்பில் தேறியுள்ளவர்கள், தற்காலிகமாக 2 வருடம் வேலை செய்த அனுபவம் உள்ளவர்களாக இருந்தால் 50 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும் என்ற விதியை கட்டாயமாக கடைபிடிக்காமல் இவர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று அரசு பணியாளர் தேர்வுக்குழு அவர்களைத் தேர்ந்தெடுக்கலாம் என அனுமதிக்கப்பட்டது. அவ்வாறு, அரசு பணியாளர் தேர்வுக்குழு இவர்களையும் தேர்ந்தெடுத்தால் அவர்கள் பொருட்டு அரசு கல்வித் தகுதி விதிவிலக்கு கொடுத்து நியமனம் செய்யும் எனத் தேர்வுக் குழுவிற்கு தெரியப்படுத்தப்பட்டது. பின்பு ஆங்கில உதவிப் பேராசிரியர்கள் மற்றும் போதனாசிரியர்கள் பதவிகளுக்கு அரசு கலலூரிகளில் மற்றும் தனியார் கல்லூரிகளில் தற்காலிகமாக நியமனம் பெற்றவர்கள், முதுநிலைப் பட்டத்தில் இரண்டாம் வகுப்பில் தேறியிருந்தால், அவர்கள் குறைந்தபட்சம் 50 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும் அல்லது 2 ஆண்டு முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும் என்ற விதிகளைக் கட்டாயமாக அமுல் படுத்தாமல், அவர்களிடமிருந்தும், விண்ணப்பங்களைப் பெற்று தேர்ந்தெடுக்க அரசு பணியாளர் தேர்வுக்குழு கேட்டுக்கொள்ளப்பட்டது.



1975 மார்ச் 5]

[பிற்பகல் 4-30]

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இது எப்போது கேட்டுக் கொள்ளப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, உண்மையில் ஆங்கிலப் பாடத்தைப் பொறுத்த வரையிலும், போதுமான அளவுக்கு 50 விழுக்காடு எண்களும் அதற்கு மேலும் பெற்றவர்கள் அதிகமாக இல்லாமல் இருப்பதன் காரணமாக, அதற்குக் குறைந்த விழுக்காடு பெற்றவர்கள் விண்ணப்பித்தாலும், இரண்டு ஆண்டுகள் அனுபவம் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையையும், 50 எண்கள் விழுக்காடு இருக்க வேண்டும் என்ற நிபந்தனையையும் விதிக்காமல் அரசு தளர்த்த ஆயத்தமாக இருக்கிறது. தேர்வாணைக் குழுவே தேர்ந்தெடுக்குமானால், அவர்களைப் பொறுத்து தளர்த்துவதாக இருக்கிறது என்று அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, ஆங்கிலம் தமிழ் பகுதிகளிலேதான் இந்தப் பிரச்சினை அதிகமாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். மற்ற பகுதிகளிலே இந்தப் பிரச்சினை அதிகமாக இல்லை. ஆனால் அரசாங்கம் அது மாதிரி நிலைமையில் இருக்கிறது என்று சொன்னால், அதுபற்றி எப்போது தெரிவிக்கப்பட்டுள்ளது என்று அறிய விரும்புகிறேன். ஒரு வாரத்திற்குள்ளாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றதா அல்லது அதற்கும் முன்னால் தெரியப்படுத்தப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த நிலை ஆங்கிலத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது. தமிழைப் பொறுத்துக்கூட அல்ல. மற்றப் பாடங்களைப் பொறுத்து 50 எண்களுக்கு மேல் பெற்றவர்கள் பல பேர்கள் கிடைக்கின்றார்கள். தமிழைப் பொறுத்தும் கூட கிடைக்கின்றார்கள். ஆங்கிலத்தைப் பொறுத்துத்தான் இந்த நிலை வருகிறது.

"The Commission has again been requested to admit applications for the posts of Tutors and Assistant Professors of English from persons with first and second-class M.A., without insisting on 50 per cent marks or two years of service in respect of persons holding temporary appointments in Government or Private Colleges. The Commission has been informed that in such cases, the Government will be prepared to relax the Educational qualifications rule in their favour."

THIRU G. SWAMINATHAN: Sir, may I know when the Public Service Commission was directed by the Government? That is one point I would like to know. Secondly, when a relaxation has been given for Assistant Professors in English, why is partiality shown to the people qualified in other subjects like Tamil? Now, because candidates with more than 50 per cent of marks are available in plenty, Government feel that only those who have got 50 per cent of marks and more and only those who have got two years' experience can be selected. For instance, there is an Assistant Professor with two years' experience either in Tamil or English who has got 49 marks. There is another candidate who has got just 50 marks. Simply because the former gentleman got one mark less, he was awarded 'C' plus grade but he has got an experience of two years. Do the Government really feel that the person who has got one mark more will be much better than a person who has got two years of experience? Two years of experience is much more valuable than one or two marks which place a person in Grade 'B'. I feel that Government should view this sympathetically. I am not talking about the persons concerned. I am only talking about the welfare of the Colleges which will be ensured by the experience of the candidates.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே, பேசுகிற போது இப்படிக் கூறுகிறார்கள். கல்வி மான்யத்திலே பேசுகிற போது அவர்கள் தரத்தைப் பற்றி அதிகமாகப் பேசுகிறார்கள் என்று கருதுகிறேன். ஆகவே இப்போது இருக்கின்ற நிலைமையில் ஆங்கிலத்தைப் பொறுத்து 50 விழுக்காடு வாங்கியிருப்பவர்கள் பல பேர்கள் இருக்கின்றார்கள். பல பேர்கள் இருக்கும் போது, தளர்த்த வேண்டிய அவசியம் இல்லை. ஆங்கிலத்திலே 170 பேர்கள் தேவைப்பட்டால், 40 அல்லது 50 பேர் தான் "பி" கிரேடு உள்ளவர்கள் கிடைக்கின்றார்கள். மற்றவர்களையெல்லாம் சேர்ப்பதா இல்லையா என்ற நிலைமைக்குட்படாமல் அரசு இருந்தால், நாம் பொருளாதார எம்.ஏ. படிப்பவர்களையும், மற்றவர்களையும் கொண்டு ஆங்கிலம் சொல்லிக் கொடுப்பதை விட, எண்கள் குறைந்திருந்தாலும் பரவாயில்லை, இவர்களைத் தேர்ந்தெடுக்கலாம் என்ற அளவுக்கு மட்டும் விதிவிலக்கு அளித்திருக்கின்றோம். ஆகவேதான் ஆங்கிலத்தைப் பொறுத்தவரையிலும், அந்த விழுக்காட்டுக்கு விதிவிலக்கு அளிக்கலாம் என்பதிலே ஆயத்தமாக இருக்கிறோம் என்று அவர்களுக்குத் தெரிவித்தோம். ஒரு மார்க்கு தானே குறைவு என்று சொன்னால், 49 என்றால் ஒரு மார்க்கு, 45 என்றால் 5 மார்க்கு என்று வரும். இரண்டு ஆண்டுகள் அனுபவம் இருக்கின்ற காரணத்தை வைத்துக்கொள்வோம் என்றால், எந்தக் கல்லூரியிலும் யாரையாவது



பிடித்து 45 எண்கள் வாங்கியவர்கள் 2 ஆண்டுக் காலம், 3 ஆண்டுக் காலம் "எக்ஸ்பீரியன்ஸ்" பெற்றுக்கொண்டு வருவார்கள். இன்றைக்கு அந்த அடிப்படையிலே அவர்கள் இங்கே வந்து நிற்பார்களானால், அந்த விதிவிலக்கை எல்லோருக்கும் கொடுப்போமானால், பி, பி. பிளஸ் பெற்றவர்கள் வந்தாலும் கூட அவர்களைச் சேர்க்க முடியாமல் இவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டிவரும். ஆகவேதான் விதிகள் அப்படியே இருக்க வேண்டும். தேவையானவர்களுக்கு தேவையானபோது விதிகள் தளர்த்தப்பட வேண்டும் என்ற நிலைமைதான் நல்லதே தவிர, 45 மார்க்குகளுக்கு மேல் வாங்குகின்றவர்களை எல்லாம் சேர்த்துக் கொள்வது என்று இருப்போமானால், இடர்ப்பாடு ஏற்படும். நெருக்கடி ஏற்படும்போது, போதுமான அளவுக்கு ஆசிரியர்கள் கிடைக்காத போது, தளர்த்திக் கொள்வது நல்லது. இப்போதிருக்கின்ற நிலைமை காரணமாக நாம் தளர்த்தியிருக்கின்றோம்.

திரு ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, 45 மார்க்குகள் வாங்கினாலும் கூட, உதவிப் பேராசியர்களாக இருக்கலாம். தனியார் கல்லூரியைப் பொறுத்த வரையிலே, 45-லிருந்து 50 வரை மார்க்குகள் வாங்கியவர்கள் இருக்க முடியாது என்று இருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சரியான முறையிலே ஆட்கள் கிடைக்கவில்லை என்பதற்காக இவர்களை உதவிப்பேராசிரியர்களாக நியமித்திருக்கிறோம். இரண்டுஆண்டுகள் அனுபவம் உடையவர்களாக அவர்கள் இருக்கின்றார்கள். ஒரு எண் தானே என்று அமைச்சர் அவர்கள் சொல்கின்றார்கள். 45 எண்ணிலிருந்து 50 எண்களை வாங்கி இருந்தாலும்கூட, 5 எண்கள் கூடுதலாக வாங்கியவர்களும் இரண்டு ஆண்டுகள் அனுபவம் உள்ளவர்களும் வருகிறபோது, நிச்சயமாக கல்லூரியிலே இரண்டு ஆண்டுகள் அனுபவம் உள்ளவர்கள் புதியவர்களைவிட நிச்சயமாக தரமாகச் சொல்லிக் கொடுப்பார்கள். இதுபற்றி ஆட்சேபனை எதுவும் இல்லை என்ற நிலைமை ஏற்பட்டாலும்கூட, அவர்களை சர்வீஸ் கமிஷனுக்கு வரச்சொல்லி, அந்த மாதிரி நிலைமை இல்லை என்று பார்த்து பின்னர் தள்ளிவிடலாம், அறவே வேண்டாம் என்று சொல்கிறபோது, நாம் அவர்களுடைய அனுபவத்திற்கு ஒரு சரியான மார்க்கைத் தரத் தவறுகிறோம், தரத்தைக் குறைக்கிறோம் என்ற அளவிலே தான் வருகிறோம் என்று சொல்லிக் கொள்கிறேன். தனிப்பட்டவர்களுக்காக நான் பேசவில்லை. கல்லூரிகளுடைய தரங்கள் குறைவதற்கு இது காரணமாக அமையும் என்பதற்காகத்தான் நான் இதைத் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இவர்களை நாம் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய நிலைமையும் இருக்கிறது. போதுமான அளவுக்குக் கிடைக்காது என்கின்றபோதுதான் அந்த இரண்டு ஆண்டுகள் தளர்த்துவதற்கு, ஆங்கிலத்தைப் பொறுத்த வரையில், தயாராக இருக்கிறோம். மற்ற பாடங்களைப் பொறுத்த வரையில், 60 பேர்கள் வந்தால், அவர்களில் 75 சதம் 80 சதம் வாங்கியவர்கள்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1975 மார்ச் 5

கூட தாராளமாகக் கிடைக்கின்றார்கள். அவர்களைப் பொறுத்த அளவிலே தளர்த்தவேண்டிய அவசியம் இல்லை. ஆங்கிலத்தைப் பொறுத்துதான் இந்த நிலைமை ஏற்படுகிறது. அப்படிப்பட்ட நிலைமை வருகிறபோது, நேரடியாக வருபவர்களைவிட, அவர்களில் கூட 2 ஆண்டு அனுபவம் பெற்றவர்களைவிட 3 ஆண்டு அனுபவம் பெற்றவர்களை எடுக்க வேண்டும், ஒரு ஆண்டு அனுபவம் பெற்றவர்களை விட 2 ஆண்டு அனுபவம் பெற்றவர்களை எடுக்க வேண்டும், ஒன்றுமே இல்லாதவர்கள் இருக்கும்போது, ஒரு ஆண்டு அனுபவம் பெற்றவர்களை எடுக்க வேண்டும். இப்படியெல்லாம் நிலைமைகள் வரும். அப்படிப்பட்டவர்களுக்கு விதியைத் தளர்த்துகிறோம் என்று தான் சொல்லியிருக்கிறோம். அப்படிக் கிடைக்காத நிலையில், 50 எண்கள் என்பதைத் தளர்த்தவும், இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்றவர்களாக இருக்கவேண்டும் என்பதையும் தளர்த்தலாம் என்று தான் எழுதியிருக்கிறார்கள். இந்த நிலைமையும் ஆங்கிலத்தைப் பொறுத்து மட்டும் தான் இருக்கிறது.

MR. CHAIRMAN: The hon. Member Thiru Swaminathan has already taken four chances to get clarifications on the Hon. Minister's reply. As per rules, the Member who calls the attention of the Minister can put only two questions after the Minister's reply. The hon. Member is well aware of the rules and regulations of this House and I hope he will not bypass them.

## 3. 1975-76 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது விவாதம்—தொடர்ச்சி.

திரு செ. முத்துசாமி: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, 1975-76-ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையைப் பற்றிப் பேசும்போது, நான் இந்த அவையிலே முதல்வர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆளுநர் உரை இரண்டு அவைகளும் கூடி ஒரே நேரத்தில் படிக்கப்பட்டு அறிக்கை தரப்படுவதுபோல, இந்த நிதி நிலை அறிக்கைகள் வழங்கப்படும்போது ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் இரு அவைகளும் கூடி இந்த பட்ஜெட்டைப் படிக்க வேண்டும், ஒரே நேரத்தில் பட்ஜெட்டை வழங்கவேண்டும் என்ற நடைமுறையை எதிர்காலத்தில் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். பாராளுமன்ற நடைமுறையிலேகூட அங்கு மக்கள் அவையிலும் மாநிலங்கள் அவையிலும் ஒரே நேரத்தில் பட்ஜெட் படிக்கப்படுவதாக நான் அறிகிறேன். ஆதலால், அடுத்த நிதிநிலை அறிக்கை, ஆளுநர் உரை ஒரே நேரத்தில் படிக்கப்படுவது போல, படிக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே ஊழியர்களுக்கு திருச்சியிலும், சேலத்திலும் நகர ஈட்டுப்படி கொடுத்திருப்பதற்காக நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1975 மார்ச் 5] [திரு. செ. முத்துச்சாமி]

அடுத்தபடியாக, 2 ஆயிரம் ஆசிரியர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கியிருக்கிறார்கள். இதைப் பொறுத்த அளவில், நான் அதைப் பாராட்ட முடியாமல் இருக்கின்றேன். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் வெளியே சென்று பேசும்போது, 18 ஆயிரம் பேர்கள், 20 ஆயிரம் பேர்கள் வேலையில்லாமல் இருக்கின்றார்கள் என்ற புள்ளி விவரத்தைச் சொல்கின்றார்கள். இங்கே ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புகள் ஒதுக்கப்படும்போது ஒதுக்கப்படும் மொத்த இடங்கள் 2,000 என்று இருக்கின்றது. இந்த நிலையில் எந்த அளவுக்கு அவர்கள் வேலைவாய்ப்புகள் பெற முடியும்? படித்துவிட்டு வெளியே நிற்கக்கூடியவர்கள் பலர் இருக்கின்றார்கள். ஒரு ஆசிரியருக்கு மாணக்கர்கள் அதிகமாக இருக்கின்றார்கள் என்று இந்தச் சபையிலேயே பிரச்சினை எழுப்பப்பட்ட நேரத்தில், அதற்கு நிதி நிலைமைதான் காரணம் என்பதை எடுத்துச் சொன்னார்கள். ஒரு ஆசிரியருக்கு மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தும், ஆசிரியர்கள் நியமிக்கப்படாமல் இருக்கக்கூடிய ஒரு நிலைமையை நாம் தவிர்க்க வேண்டும். அதிகமாக ஆசிரியர்களுக்கு இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்பதை நான் முதலிலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

[பிற்பகல் 4-40]

இவ்வாண்டு நிதி நிலை அறிக்கையில் 6 கோடி ரூபாய் வரி விதிப்போடு ரூ. 26.6 கோடி பற்றுக்குறையாக பட்ஜெட் இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. 26.6 கோடி ரூபாய் பற்றுக்குறையையும் சரிக்கட்ட முடியும் என்ற நம்பிக்கையோடுதான் இந்த அரசு இந்த நிதிநிலை அறிக்கையைப் படைத்திருக்கிறது. இதற்குக் காரணம் சில இனங்களில் வருவாய் மதிப்பீடு குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது என்பதையே நான் கூற விரும்புகிறேன். உதாரணமாக விற்பனை வரியை எடுத்துக்கொள்வோம். ஒவ்வொரு ஆண்டும் அரசு மதிப்பிட்டதை விட அதிகமான வருவாயைத் தேடித் தந்துள்ளது. தேடித் தந்து வருகிறது இந்த வரி. சென்ற ஆண்டு அந்த இனத்தில் ரூ. 138.74 கோடி வருமானம் வரும் என கணிக்கப்பட்டது. ஆனால் திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி வருவாய் 174.81 கோடி ரூபாயாகும். அதிக வருவாய் 36.2 கோடி ரூபாயாகும். இதே போன்று இந்த ஆண்டு 201.28 கோடி ரூபாய் என்று கணக்கிட்டாலும், சென்ற ஆண்டு போலவே இந்த ஆண்டும் குறைந்த அளவில் மதிப்பிட்டாலும், சுமார் 50 கோடி ரூபாய் உயரும் என்டதையும் கூறலாம். இன்னும் சொல்லப் போனால், சென்ற ஆண்டு வசூலான 174.87 கோடி ரூபாயை குறைவு என்றுதான் கூற வேண்டும். காரணம் விலைவாசிகள் எல்லாம் இரண்டு மடங்கு ஏறிவிட்டன. இரண்டு மடங்கு விலைவாசிகளிலே பொருட்கள் விற்கும்பொழுது விற்பனை வரியும் இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படி இருக்கும்போது, வரி வசூலானது மிகக் குறைவாகவே இருக்கிறது என்பதைக் காணும்போது உண்மையாகவே சொல்கிறேன், எங்கேயோ தவறு நடந்து கொண்டிருக்கிறது. அந்தக் கோளாறை நீக்கி, இரண்டு மடங்கு விற்பனை வரி பெறுவதற்கான முயற்சிகளிலே ஈடுபட வேண்டும். அதற்கு இந்த நாட்டு அதிகாரிகளும் தங்கள் இதய சுத்தியோடு ஒத்துக்கொள்ள வேண்டுமென்பதை நான் இந்த அவையிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வருவாய் மட்டும்

[திரு. செ. முத்துச்சாமி] [1975 மார்ச் 5

உயர்த்தப்படாத காரணத்தினால்தான் ஆறாவது நிதிக் குழுவிலே நமக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. எதிர்காலத்தில் ஏழாவது நிதிக் குழுவில் அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டுவிடக் கூடாது. மத்திய அரசாங்கம் மூன்றாவது ஊதியக் குழுவை நியமித்து 1—1—1973 முதல் புதிய சம்பளத்தைக் கொடுத்து விட்டது. ஆனால் இந்த மாநில அரசு 1965ஆம் ஆண்டிலேயே இரண்டாவது ஊதியக் குழுவை நியமித்து சம்பளம் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் 1967லும் நியமிக்கப்படவில்லை. 1969லே நியமித்து 1970ம் ஆண்டு அக்டோபருக்கு மேல் கொடுக்கப்பட்ட காரணத்தினால்தான் இதைப் பெற முடியவில்லை என்ற ஒரு துர்பாக்கிய நிலை ஏற்பட்டது. இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி 1970 ஆம் ஆண்டிலே மாற்றியமைக்கப்பட்ட ஊதியம் 5 ஆண்டுகளுக்கு மேல் செல்லக்கூடாது, அதற்கு உள்ளேயே மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று இரண்டாவது ஊதியக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. இன்றைக்கும் மூன்றாவது ஊதியக் குழு நியமிக்கப்படாமல் இருக்கக் கூடிய ஒரு சூழ்நிலையையும், ஊழியர்களுடைய ஊதியங்கள் மாற்றியமைக்கப் படாமல் இருக்கக் கூடிய ஒரு நிலைமையையும் நாம் பார்க்கிறோம். மூன்றாவது ஊதியக் குழுவின் அடிப்படையிலேயே, 200 வாழ்க்கைச் செலவுப் புள்ளிக்கு மத்திய அரசாங்கம் தன்னுடைய ஊழியர்களுக்குச் சம்பளத்தை நிர்ணயித்தது. மாநில அரசாங்கம் 2—10—1970லே 172 வாழ்க்கைச் செலவுப் புள்ளிக்குச் சம்பளத்தை நிர்ணயித்தது. 172 வாழ்க்கைச் செலவுப் புள்ளிக்கும் 200க்கும் 28 புள்ளி வேறுபாடு இருக்கின்றது. இந்த 28 புள்ளி வேறுபாட்டை நீக்கி 1—1—1973லே 200 புள்ளிக்கு நிர்ணயிக்கக்கூடிய நிலைமையை மாநில அரசாங்கம் முதலிலே சரி செய்யவேண்டும். ஆனால் இந்த அறிக்கையிலே ஓர் இடத்திலே சரி செய்து காட்டுகிறார்கள். எப்படி என்றால் 1—1—1973க்குப் பிறகு கொடுத்திருக்கக் கூடிய 9 ஊதிய உயர்வுகளுக்கு கீழ்மட்டத்திலே 300க்குக் கீழே சம்பளம் வாங்கக் கூடியவர்களுக்கு 36 சதவிகிதம்; 300க்கு மேல் சம்பளம் வாங்கக் கூடியவர்களுக்கு 27சதவிகிதம் என்று கணக்கிடுவதிலே சதவிகிதத்தைக் கணக்கிடுவதற்கு 1—1—1973ல் மாநில அரசு ஊழியர்கள் வாங்கிக் கொண்டிருக்கக்கூடிய சம்பளத்தையும் அகவிலைப்படியையும் இணைத்துக் கணக்கிடலாம். அப்படியானால் அந்த டி.ஏ., "டியர்னெஸ் பே" யாகவோ அல்லது சம்பளமாகவோ இணைக்கப்பட்டிருக்கவேண்டும். அதன் பிறகு மத்திய அரசாங்கம் 9 உயர்வுகளைத் தந்திருக்கிறது. ஆனால் 9 உயர்வுகள் என்று சொல்லும்போது, கீழ் மட்டத்திலே இருக்கக் கூடிய கடைநிலை ஊழியர்களுக்கு 8 ரூபாய்க்குக் குறைவில்லாமல் வழங்கப்பட வேண்டுமென்ற கொள்கையை நிர்ணயித்து வழங்கியிருக்கிறது.

[பிற்பகல் 4-50]

மாண்புமிகு முதல்வர் அவர்கள் கீழ் மட்டத்திலே கடை நிலை ஊழியர்கள் போல் இருக்கக் கூடியவர்கள் நல்ல பயன் பெறுவார்கள் என்று சொல்லியிருக்கிற அந்தச் சொல்லை நான் வரவேற்கிறேன். ஆனால் அதே சமயத்திலே மத்திய அரசாங்க ஊழியர்கள் ஒன்பது டி. ஏ. உயர்வு மூலம் 72 ரூபாய் பெற்றிருக்கிறார்கள். இன்றைக்கு இந்த மாநில அரசு



1975 மார்ச் 5] [திரு. செ. முயதுச்சாமி]

28 வாழ்க்கைச் செலவுப் புள்ளிக்கு கடை நிலை ஊழியர்களுக்கு 28 ரூபாய் சேர்த்துத் தந்திருக்க வேண்டும். 1—1—1973ல் 130 ரூபாயை ஊதியமாக அந்தக் கடைநிலை ஊழியர்கள் வாங்குகிறார்கள். 28 ரூபாயையும் சேர்த்தால் ரூ. 158. ஆனால் மத்திய அரசாங்கத்திலே 196 ரூபாயைக் குறைந்த சம்பளமாக நிர்ணயித்திருக்கிறார்கள். அந்த ஊதிய வேறுபாடு அப்படியே நிலைத்து இருக்கிறது. அதை மாற்ற வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அது இப்பொழுது கிடைக்கக் கூடிய சாத்தியமில்லாத காரணத்தால் அகவிலைப்படியையாவது ஒன்றாகத் தர வேண்டும் என்று கேட்கிறோம். இன்றைக்கும் சத விகிதத்திலே ஒன்றாக வைத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு 4 சத விகித உயர்வும் 8 ரூபாய் என்று கணக்கிடப்படவில்லை. ஆகவே நடுவண் அரசு ஊழியர்களைப் போல் இங்கே கொடுக்க வேண்டு மென்று சொன்னால், இங்கே இருக்கக் கூடிய கடை நிலை ஊழியர்களுக்கு ஏற்கனவே வாங்கி வந்த அகவிலைப் படியையும் சேர்த்து 230 ரூபாய் கிடைத்திருக்க வேண்டும். ஆனால் இந்த நிதி நிலை அறிக்கைபடி 72 ரூபாய் மட்டும் பெறுவார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இதை பல முறை நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். நடுவண் அரசாங்கத்திற்குத் தரக்கூடிய சதவிகிதத்தை தரக் கூடியதாக இருக்கிறதே தவிர, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய தொகை தரப்படவில்லை. அதே சமயத்தில் செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு 53 ரூபாயும், பட்டதாரி ஆசிரியர்களுக்கு 58 ரூபாயும் வேறுபாடு வருகிறது. 300 ரூபாய் சம்பளத்திற்கு மேல் இருப்பவர்களுக்கு குறைந்தது 3 சதவிகிதம் என்று மத்திய அரசு நிர்ணயிக்கும்பொழுது, 12 ரூபாய் குறைந்தது நிர்ணயிக்கப்பட வேண்டும். ஆகவே, பட்டதாரி ஆசிரியருக்கு 1—1—1973ல் 60 ரூபாயும், அதற்குப் பிறகு நடுவண் அரசு ஊழியர்களுக்குச் சமமாக என்று கொள்கையை ஏற்றுக்கொண்டிருப்பதால், 108 ரூபாய் ஆக 148 ரூபாய் என்ற அடிப்படையில் இருக்க வேண்டும். மத்திய அரசு நிர்ணயித்திருக்கும் கொள்கையும் விலைவாசி அடிப்படையில் சரியில்லை என்று இருக்கிறது. அந்த அளவு கூட மாநில அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு குறைந்த பட்சம் 20 ரூபாய், அதிகபட்சம் 30 ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள். அது மத்திய அரசாங்க ஊழியர்களுக்குச் சமமானதாக இல்லை. இதைக் கேட்டபோது பைனான்ஸ் செக்ரட்டரி 50 கோடி ரூபாய் வேண்டும், 60 கோடி ரூபாய் வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். 1974 நவம்பரிலே ஒரு முறை கொடுத்தார்கள். அதற்குப் பிறகு பொங்கல் பரிசு என்று அறிவித்ததை இப்பொழுது திருத்தி அமைத்ததாக வார்த்தையிலே இருக்கிறதே ஒழிய, அதுவும் திரும்பப் பெறப்பட்டு மீண்டும் ரூ. 22 கோடியாக அறிவித்திருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தாற்போல், தமிழுக்கு சேவை செய்யக் கூடிய வகையிலே இந்த அரசு ஒரு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதை நான் மனமாரப் பாராட்டுகிறேன். கடந்த காலத்திலே சென்னைப் பல்கலைக் கழகமும், அரசாங்கமும் சேர்ந்து தமிழ் அகராதி தயாரித்தது. அதிலே இருக்கக் கூடிய சீர்கேடுகளை எல்லாம் இன்றைக்கு வாழ்ந்து வரக்கூடிய தமிழ் அறிஞர் தேவநேயப் பாவாணர் அவர்கள் பல ஆண்டுகள் எடுத்துச் சொன்னதற்குப் பிறகு, இன்றைக்கு புதிய அகர முதலி ஒன்றைத் தயாரிக்கும் முயற்சியிலே

ஈடுபட்டதைக் குறித்து பெருமையடைகிறேன். ஆனால் அந்தச் செயல் சிறப்பாக நடைபெறுவதற்கு இரண்டொரு உதவிகள் இன்னும் அவசரத் தேவையாக இருக்கிறது என்பதை நான், அவரை ஆவலோடு சந்தித்துப் பேசிய நேரத்திலே அறியலானேன். அந்த மூதறிஞர் இன்றைக்கு தமிழ் நாட்டிலே இருக்கும் பழம் பெரும் அறிஞர். அவரை விட்டால் இந்தக் காரியத்தை செய்து முடிக்க வேறு ஆட்கள் இல்லை. இவ்வளவு பெரிய செயலைச் செய்யக் கூடிய அவருக்கு தமிழ்நாடு பூராவும் சுற்றிப் பார்த்து தமிழ்ச் சொற்களை சேகரிக்கக் கூடிய அளவிற்கு ஓர் "இயங்கி", அதாவது கார் கூடக் கொடுக்கப்படாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : காருக்கு என்னவோ சொன்னீர்களே?

திரு செ. முத்துசாமி : "இயங்கி" என்று சொன்னேன். அவரிடத்திலே அந்தச் சொல்லை நான் கேட்டேன், அதைத்தான் இங்கே அப்படிக் குறிப்பிட்டேன். அந்தக் கார் உடனடியாகக் கொடுப்பதற்கில்லை என்று அரசாங்கத்திலே இருக்கும் அதிகாரிகள் முடிவு எடுத்திருப்பதைப் போல அறிகிறேன். அதிலே கல்வி அமைச்சரும், முதலமைச்சரும் கவனம் செலுத்தி, எத்தனையோ காரியங்களுக்குக் கார் கொடுக்கும்பொழுது, ஒரு தமிழ் அறிஞருக்கு ஒரு காரைக் கொடுத்து அந்தப் பணியைச் செய்ய முடியாதா என்பதை இந்த நேரத்திலே ஒரு கேள்வியாகக் கேட்டு முதல்வர் சிந்தனைக்கு அதை விட்டுவிடுகிறேன். அடுத்தாற்போல் அவருக்கு உதவி செய்வதற்காக மதிவாணன் என்ற தமிழ்ப் பேரறிஞர் சேலம் கல்லூரியிலிருந்து இப்பொழுது நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். தமிழ்ப் பேரறிஞராக இருக்கக் கூடிய அவர் நான்கு மொழிகளில் வல்லவர். அதைச் சிபாரிசு செய்ததால்தான் அவர் வெளியிலிருந்து நியமிக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு ஏற்கெனவே பெறக்கூடிய சம்பளத்தை விடக் குறைந்தது 200 ரூபாய் அதிகமாக, தனி ஊதியமாகக் கொடுக்க அரசால் இயலாதா ? தயவுசெய்து அதைச் சிந்திக்க வேண்டும். அதிலே மிகக் குறைந்தது 50 ரூபாய் என்று போட்டு............

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏதாவது செய்யாமல் இருந்தால் சும்மா இருப்பது ; ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பித்தால் அது போதாது, இன்னும் வேண்டும் என்று சொல்லி, செய்தவர்களின் ஊக்கத்தைக் குலைப்பது. நம்முடைய தேவநேயப்பாவாணர் இந்தக் குறையை மேலவையில் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று திரு முத்துசாமியைத் தேடிப் பிடித்ததற்காக நான் வருத்தப்படுகிறேன்.

திரு செ. முத்துசாமி : நான் வருந்துகிறேன். இப்படிப்பட்ட நிலைமையில் முதல்வர் அவர்கள் கருதக் கூடாது. நான் உள்ளத்திலே இருக்கக் கூடியதைத்தான் எடுத்துச் சொன்னேன். தேவநேயப் பாவாணர் அவர்கள் என்னைப் பயன்படுத்தி இதைச் சொல்ல வேண்டும் என்ற நிலையில் இல்லை ; அவ்வளவு பெரிய தமிழர்............





மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்களே சில குறைகளைச் சொல்லி என்னைச் சந்திக்க வருவதாக அறிந்தேன். அவர் என்னை நாடி வந்து சந்திப்பது அவருக்குப் பெருமையாக இருக்காது என்பதால் நான் என்னுடைய அந்தரங்கச் செயலாளரை அவருடைய இடத்திற்கு அனுப்பினேன். அகர முதலி தயாரிக்க வேண்டுமென்று நமது சிலம்புச் செல்வர் அவர்களும், அடிகளார் அவர்களும் இந்த அவையிலே எடுத்துச் சொன்னார்கள். அதற்குப் பிறகு இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது. நானே அவரை வரவழைத்து அவருக்கு எல்லா வசதிகளும் அளிக்கப்பட்டு, மாதாந்திர ஊதியம் எவ்வளவு கேட்கிறாரோ அவ்வளவு தருவது என்று எடுத்துச் சொல்லப்பட்டு அவர் கேட்ட உதவிகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. அதற்கு மேலும் சில குறைகள் இருப்பதாகச் சொல்லப்பட்டு, அவர் என்னைச் சந்திக்க வேண்டுமென்று விரும்பினார்கள். அவர் கஷ்டப்பட்டு என்னுடைய இல்லத்திற்கு வரவேண்டாம் என்பதற்காக — வீட்டு மாடிப்படிகள் எல்லாம் ஏறவேண்டிவரும் வயதான காலத்திலே என்பதால்—என்ன தேவைகள், என்னென்ன குறைகள் சொல்லுங்கள் என்று நானே என்னுடைய செயலாளரை அனுப்பி தெரிந்து வரச் சொன்னேன். விவரங்களைச் சொல்லி அனுப்பியிருக்கிறார். அதை மேலவையிலே எடுத்துச் சொல்லும் அளவிற்கு ஒரு குற்றச்சாட்டாக ஆகி விட்டதே என்றும், நான் எதுவும் செய்ய முடியாதே என்றும்தான் என்னுடைய நெஞ்சம் பயப்படுகிறது.

திரு செ. முத்துசாமி : மேலவையிலே பிரச்சினைகள் சிலவற்றைச் சொல்லும்பொழுது குற்றச்சாட்டாகவும், பழியாகவும் எடுத்துக் கொண்டு, அதனால் முதல்வர் அவர்கள் உள்ளம் சங்கடப்படுவதாக இருப்பதென்றால், இப்படி என்னுடைய குறைகளை எடுத்துச் சொல்வது தவறு என்று முதலமைச்சர் அவர்கள் கருதுவார்களேயானால், நாங்கள் எந்தக் குறைபாடுகளையும் இந்த அவையில் எடுத்துச் சொல்லுவது பயனளிக்காது, நன்மை உடையதாகாது என்று............

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொதுவான குறைபாடுகளை எடுத்துச் சொல்லுவதில் எந்தவிதமான தவறும் இல்லை. கார் ஒன்று கொடுக்கக் கூடாதா ? 100 ரூபாய் ஸ்பெஷல் சம்பளம் கொடுக்கக் கூடாதா என்று இப்படியெல்லாம் பேசுவது அவ்வளவு சரியாக இல்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தனி மனிதனின் குறைகளைச் சொல்லாதீர்கள். பொதுவாகச் சொல்லுங்கள். உங்களைவிட தேவநேயப்பாவாணரைப்பற்றி எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

திரு செ. முத்துசாமி : தேவநேயப் பாவாணர் அவர்களை யார் முதலிலே அறிந்திருக்கிறார்கள் என்பதல்ல இப்பொழுதைய பிரச்சினை. அவர் மீது பற்றுக் கொண்டவன் நான். ஆரம்ப காலத்திலேயிருந்து பள்ளியிலே இருந்தபோதே பற்றுக் கொண்டவன். அவரைச் சென்று பார்த்தபொழுது, அவருக்கு என்னென்ன தேவைகள் எல்லாம் இருக்க வேண்டும் என்று நான் கருதியதைத்தான் எடுத்துச் சொல்லுகிறேன். அந்த விஷயங்களைச் சில பேர் சொல்லிவிட்டால் அது சரியாகாது என்று

பெரிய பொறுப்பிலே இருப்பவர்கள் நினைத்தால், நான் தமிழ் நாட்டிலே பிறந்து வளர்ந்து இந்த அவைக்கு உறுப்பினராக வந்ததைக் குற்றமாகக் கருதினுல், அது என்னுடையது ஆகாது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். மிகவும் மனவேதனையோடு சொல்லுகிறேன், தமிழனுகப் பிறந்துவிட்ட காரணத்தினுல் சில தேவைகளை எடுத்துக் கூறுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இனிமேல் என்ன வங்காளத்திலா பிறக்கப்போகிறேும் ; பிறந்தாகிவிட்டது.

திரு செ. முத்துசாமி: இவ்வளவு விஷயங்களையும் சொன்னதன் காரணமாக அதைச் செய்கிறேன் என்று சொல்லுவதில் சங்கடமில்லை. நான் சொல்லிவிட்டேன் என்பதிலே சங்கடப்படவேண்டிய அவசியமில்லை என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள் கிறேன். அந்தத் தேவைகளை உடனடியாகப் பூர்த்திசெய்யும் மனம் பாதிக்கப்பட வேண்டாம். இது தமிழ்நாட்டிற்குச் செய்யக்கூடியது, யாரோ ஒருவருக்கு உதவியாக அவரும் செய்யவில்லை. அவர் தமிழ் நாட்டிற்குக் காரியத்தைச் செய்கிறுர்.

(பிற்பகல் 5-00)

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: தலைவரவர்களே, நாட்டினுடைய தேவைகளையெல்லாம் உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்களைக் கேட்டுத்தான் பூர்த்திசெய்வதுபோல ஒரு கற்பனையைச் செய்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. தேவநேயப் பாவாணர் அவர்களைப்பற்றி நான் அறிவேன். அவருடைய அறிவு, ஆற்றல், அனுபவம் அனைத்தும் எனக்கும் தெரியும். அவரால் தமிழ் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும், "அகர முதலி" யின் மூலமாக எவ்வளவு பலன் கிடைக்கும் என்பதை நன்ருக அறிவேன். அவர் எந்த அளவுக்குப் பாதுகாத்துப் பேணப்பட வேண்டியவர் என்பதும் தெரியும். உறுப்பினர் திரு. முத்துசாமி சொன்னபிறகுதான், அவரது கோரிக்கைகளைத் தெரிந்து வழங்கும் அளவில் இந்த அரசு இல்லை. நாம் எல்லோருமே தமிழர்களாகப் பிறந்தவர்கள்தான்.

திரு செ. முத்துசாமி: தலைவரவர்களே, அந்த அளவுக்கு " நீங்கள் " தெரிந்துகொள்ள வேண்டிய நிலையில் இருப்பதாகக் கருதி நான் இவைகளைச் சொல்லவில்லை. நாம் அவருக்குச் செய்ய வேண்டியவற்றைச் சொல்கிறேனே தவிர, இதில் வருந்தத்தக்கதோ அல்லது மனம் உடைந்து போவதாகச் சொல்வதற்கு ஏற்பவோ எதும் இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. எதாவது விஷயங்களைச் செய்கின்றபோது, விரைவாகச் செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் சொல்லப்பட்டது. அதற்காக மனம் சங்கடப்பட்டு திரு. முத்துசாமியை விட நான் அதிகம் அறிவேன் என்று சொல்லியிருக்கிறுர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னை விட அதிகம் தெரிந்தவர் என்று எனக்குத் தெரியும். தலைவர் அவர்களுக்கும் அவரைப்பற்றி அதிகம் தெரியும் என்று எனக்குத் தெரியும். உங்களை எல்லாம் பின்பற்றி, அந்தக் காலத்தில் தமிழில் பற்று கொண்டவன் நான். ஆகவே இதிலே யாருக்கு அதிக அக்கறை இருக்கிறது



என்பதைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னைப் பார்த்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. நானே ஒத்துக்கொள்கிறேன். இதிலே முதலமைச்சர் அவர்களுக்கு ஆர்வம் இருக்கிறது, காரியங்களைச் செய்து வருகிறுர். அப்படிச் செய்யக்கூடியவற்றில் சில தடைகள் இருக்கின்றன. அந்தத் தடைகளை நீக்க வேண்டுமென்று சொல்கிறேனே தவிர, இந்த நாட்டிலிருக்கின்ற பிரச்சினைகளுக்கு எல்லாம் திரு முத்துசாமியை யோசனை கேட்க வேண்டும் என்று சொல்லவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோபம் அடைய வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைப் பற்றி அதிகமாகப் பேசி தேவநேயப் பாவாணர் அவர்களுக்குப் பாதகம் ஏற்பட்டுவிடக்கூடாது என்று நாங்கள் எல்லோரும் விரும்புகிறேும்.

திரு செ. முத்துசாமி: அவருக்கு எந்தவிதமான நட்டமும் இல்லை. அவருக்குக் கிடைக்கக்கூடிய வசதி எப்பொழுதும் கிடைக்கும். அவர் இந்த சேவையைச் செய்யாவிட்டால் தமிழ் நாட்டுக்கும், தமிழ் மொழிக்கும்தான் நட்டம் என்று பணிவன்புடன் தெரிவித்துக்கொள் கிறேன்.

அடுத்து, இன்றையதினம் இலவசக் கல்வித் திட்டத்தைப் பற்றி மறு பரிசீலனை செய்யச் சொல்லி ஒரு குழுவைப் போட்டிருக்கிறுர்கள். எதை மறுபரிசீலனை செய்கிறீர்கள் என்று கேட்ட நேரத்தில், கல்வித் துறை பொருளாதாரத்தை ஆராயத்தான் போடப்பட்டது என்றும், பத்திரிகை நிருபர்களை உள்ளே அழைத்ததுதான் தவருகப் போய் விட்டது என்றும் கூறப்பட்டது. ஆனுல் கல்வி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நான் தெளிவாகச் சொன்னேன். " பைனுன்ஸ் அண்ட் எடுகேஷனல் ரெவ்யூ " கமிட்டி, கல்வித் துறையினுடைய பொருளாதாரம், அதனுடைய தன்மை ஆகியவற்றை ஆராய்ச்சி செய்வதற்காக அமைக்கப்பட்ட ஒரு குழு. வேறு எதையும் பரிசீலனை செய்வதற்காக அமைக்கப்பட்டதல்ல. அதிலே இருக்கின்ற பல்வேறுபட்ட பிரச்சினைகளை ஆராய்ந்து எடுத்துச் சொல்ல வேண்டும் என்பதுதான். அது சம்பந்தமான நிலைமைகளை ஆராய்ந்து சொல்ல வேண்டும் என்பது தவிர, இந்த இலவசக் கல்வி வேண்டுமா, வேண்டாமா என்பதுபற்றி ஆராய்வதற்கு அமைக்கப்பட்ட குழு அல்ல, அல்ல, அல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, குழு அமைக்கப்பட்டது குறித்து யாருக்கும்ஆட்சேபணை இல்லை.பத்திரிகைகளில் பொறுப்பில் இருக்கின்றகல்வி அமைச்சர் அவர்கள் கூறுகின்ற கருத்துக்கள் வெளி வருகின்றபோது அவை முக்கியத்துவம் பெறுகின்றன, அதைப்பற்றி கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. அதற்கு மறு நாளே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இலவசக் கல்வியை எடுப்பது என்பதே இல்லை என்பதோடு கல்லூரிப் படிப்புக்கும் இலவசமாக்கலாமா என்பது யோசனையில் இருக்கிறது என்று கூறியது இந்த நாட்டு மக்களுக்குப் பெரிய ஆறுதலைக் கொடுத்தது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. செ. முத்துசாமி] [1975 மார்ச் 5

அடுத்தபடியாக, பென்ஷன் பெறுபவர்களைப்பற்றி, இரண்டாவது ஊதியக் குழுவின் அடிப்படையில்....

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மணி அடித்தால் மணி அடிப்பதன் அவசியம் என்னவென்று தெரிந்து கொள்ள வேண்டும். அதைப்பின் பற்ற வேண்டும். இல்லாவிட்டால், அதைப் போலவே எல்லோரும் செய் தால் நிலைமை என்னவாகும் ? ஓய்வு பெற்றவர்களைப்பற்றி இப் பொழுது பேச வேண்டிய அவசியம் என்ன ? அவர்கள் ஓய்வு பெற் றுள்ளவர்கள், வீட்டில் சுகமாக உட்கார்ந்துகொண்டிருக்க வேண்டியவர் கள்தானே. மற்றவர்கள் பேச வாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

திரு செ. முத்துசாமி : தலைவரவர்களே, அகவிலைப் படி கொடுக்கப்படு கின்றபோது, ஓய்வு பெற்றவர்களுக்கும் 50 சதவீதம் கொடுக்க வேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் கொடுக் காமல் ஐந்து ரூபாய் மட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. குறைந்த அளவு 20 ரூபாய் என்று வழங்கப்பட்டிருக்கின்றபோது, அவர்களுக்கும் குறைந்த அளவு பத்து ரூபாய் வழங்கப்பட்டிருக்கவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் 5 ரூபாய் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கல்வி பற்றிய குறிப்பு விவாதத் திற்கு வருகின்றபோது, விவரமாகப் பேசிக்கொள்ளலாம்.

திரு செ. முத்துசாமி : தலைவரவர்களே, அகவிலைப்படிக் குழுவின் அறிக்கையை நாளைக்கே மன்றத்தில் வைக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

THIRU A. R. DAMODARAN; Hon. Chairman, Sir, this is probably the ninth Budget that this Government are placing before this House for its consideration and I should first, without being misunderstood, felicitate this Government because according to my calculations, this is probably the only Government that has been able to present its ninth Budget in successive year in India since 1967. The only personwho could have competed with our Hon. the Chief Minister was Thiru Naik of Maharashtra and he is, unfortunately, not there to present the Budget of the Maharashtra Government this year. In a country where stability is at a discount and where Governments are being toppled all over the country due either to defections or to the machinations of other parties, we in Tamil Nadu must consider ourselves fortunate—those of us in the Opposition—that we have one Government to criticise all the time for their policies and those in the ruling party that they have at least one Government to carry out the policies of the ruling party.

Sir, yesterday my hon. Friends Thiru Adityan and Thiru Sankaralingam went into almost lyrical praise of the literary quality of th Budget and even suggested that it should be recommended as a course



1975 மார்ச் 5] [Thiru A. R. Damodaran]

of study in our schools. The Hon. the Chief Minister belongs to a party, Sir, where there is no dearth of "Naavalars" and "Peraasiriyars" and I am not, therefore, surprised that he should have produced a Budget which should be praised for its literary quality. At the same time, I must confess to my hon. Friends of the ruling party that since they had occasion to speak first on the Budget, they had occasion to taste the sugar which the Hon. the Chief Minister has always coated his Budget proposals with, and today when I speak on the third day, the sugar has slightly worn off and some of us can feel the nature, the real nature, of the Budget proposals that he has brought forward. Anyhow, it is not a very harsh Budget by any means. A moderate effort of Rs. 6 crores in these days, when the Central Government gone in for an effort of Rs. 300 crores, is, after all, a very minimal effort. Before I deal with some of the proposals of the State Government, may I be permitted to preface my remarks with a few comments on the general situation in our country because the State Budget, after all, is a part of the national Budget and the Central Budget and its proposals have a great deal to do with our Plans and our development programmes ? Therefore it is that I would like to make a very brief reference to the explosive situation in our country which the Hon. the Chief Minister has also mentioned in his Budget Speech.

Sir, every time we have a Central Budget, some of us have a sigh of relief that some new taxes have not been proposed and others also say that considering the big Budget deficit, an effort of Rs. 288 crores is, after all, very small and that therefore, this will not have any inflationary effect, etc., etc. But I wish to point out that over the past 2½ years, the Government of India have introduced taxation proposals and more particularly in the year 1974–75 over Rs. 1000 crores of taxation—almost Rs. 3 crores per day—was imposed by various Central Budget, by various revisions in Railway freight

[பிற்பகல் 5-10]

fares and by the revision of the Post and Telegraphs tariffs. When such was the case, where was the necessity for the Central Government to impose fresh taxes amounting to Rs. 28 crores in the year 1975–76 ? We are told, Sir, that this was due to the large dearness allowance payments that were rendered necessary because of the high rate of inflation that persisted in our country. Yet, Sir, one cannot help feeling that this extraordinary effort that has been made is only likely to accentuate the inflationary trend that exists in our country at present; and one is not at all sure that even with this massive taxation effort, the budget deficit of the Government of India

will be anywhere less than Rs. 400 to Rs. 500 crores at the end of the year 1975-76. Reference was made by the Hon. the Chief Minister to the fact that whereas State Governments have been advised tokeep their budgetary deficits under control, no such control is exercised by the Government of India in so far as its budgetary programme is concerned. The Reserve Bank Bulletin, at page 14–I quote the page number, because people must not think that I am manufacturing facts–has given the trends in budgetary deficits and the net Reserve Bank credit to the Governments over the period 1965-66 to 1973-74. I choose this period particularly because I forgot to mention that whereas this Government is the only Government that is surviving for nine years, probably the Government of India are also one of the Governments which have had a leader at its head for the past eight or nine years, resulting in a certain continuity of policy. For the period 1965–74, the Government of India have indulged in deficit budgeting to the extent of Rs. 3,305 crores and all the States put together over the same period of time have had a budgetary deficit ' of Rs. 962 crores. During the years 1971-72, 1972-73 and 1973-74—and I make particular mention of these years because this is the period when our economy has gone completely out of control, when the index number of whole-sale prices has increased by 50 per cent over a three year period and the index number of foodgrain prices has increased by 70 per cent over this three year period—the Government of India have indulged in deficit budgeting to the extent of Rs. 2038 crores whereas the StateGovernments over the same period have indulged in deficit budgeting to the extent of Rs. 507 crores.When such is thefinancial discipline exercised by the Government of India, with what face can they come and advise the State Governments that they should keep their budget deficits under control ? Quite apart from the fact that massive aid is required to combat drought relief, one of our most serious problems—and this has been referred to in every Budget document that we have read over the past eight years—is the question to which even my hon. Friend Thiru Muthuswami referred in detail, namely, the question of dearness allowance payments to the State Government staff and the non-consultation of the State Government when the Government of India increased the dearness allowance to their employees and the lack of resources of the State Governments to implement such revised scales of dearness allowance because of their financial stringency. I only wish to refer to this, Sir, to show that if the Government of India want to advise the State Governments on controlling the budgetary deficits, it would do well to practise what they preach before they venture to lecture to the State Governments. The entire growth and plan programme of the Government of Tamil Nadu depend to a very great extent on the resources of the Government of India which are collected not merely by taxation effort and by savings but also by the foreign aid that we receive from friendly





countries. This foreign aid is dependent to a very large extent on our foreign policy, on the directions of our foreign policy and the way in which we manage to make friends or enemies across our own land and sea borders. Over the past 27 years, we have not hesitated to accept foreign aid from every country. There is a very interesting document published along with the explanatory memorandum to the Budget which shows that we have borrowed from almost 78 countries and even such small Sheikhdoms like Kuwait and Abu-Dhabi have given us massive loans. I am very frank about this. I think the Members may not agree with me or may feel hesitant in voicing this opinion in State Legislatures ; but I venture to feel that there is a great deal of mis-direction in the way in which we are managing our foreign policy and the way in which we are making friends and enemies across the borders of our land. We are all happy that a settlement has been reached in Kashmir I venture to express this opinion because certain Delhi papers have given rather adverse comments about the reaction in Tamil Nadu to the special status that has been awarded to Kashmir. But we in Tamil Nadu are very happy, because we have felt over a period of 27 to 28 years that the people of India have suffered considerably because of this problem and a sum of over Rs. 25,000 crores has been wasted—perhaps, Sir, the word 'wasted' may be offending —has been spent in building up the defence potential.

Mr. CHAIRMAN.—The word 'wasted' is not offensive. The hon. Member can use it.

Thiru A. R. DAMODARAN.—It may be argued that we are not patriotic, if we say 'wasted' and, therefore, I say that is has been spent. I did not even use the word 'mis-spent'. It has been spent on various matters such as building our defence potential. The amount of money that we have spent in buying armament from other countries, the way in which we have argued in the United Nations over a period of 15 years—and for 10 years we had an excellent representative of India there who fought with everybody in the United Nations and I do not want to mention the name, because he is since dead and one—all theseg have weighed heavily on our country. I strongly condemn the American arms aid to Pakistan but if today Mr. Kissinger wants to give a 100 million dollar-worth of arms to Pakistan, it is not because he wants to give aid to Pakistan but because he wants to show certain leaders in our country that people in America also feels trongly about our views on certain other matters. A very interesting article came in the 'Times' Magazine recently and I would request the members of the ruling party to read this article wherein the amount spent by Nations on the purchase or sale of non-nuclear arms in 1974 has been given in extraordinary detail. We do not have a single research paper published

in our country about our defence expenditure which has gone up from Rs. 263 crores to Rs. 2271 crores in 1974. It was mentioned that of the 18 billion dollars—onebillion dollars is equal to Rs. 750 crores—worth of arms sold across the world by some of the principal countries, since we are now protesting against the sale of arms to one particular country, I would like to mention that the United States of America heads the list with 8·3 billion dollars, the U. S. S. R. comes a close second with 5·5 billion dollars, France three billion dollars and Great Britain, 1·5 billion dollars. It is also interesting to note that we in India are also selling rifles to Tanzania and this has also been mentioned in this article. I wanted to mention this because I have, after a great deal of mature consideration, come to the unshakable belief that the more we depend on foreign countries for aid the less will India progress, whether it is from the United States or from the U.S.S.R. We have to learn to be self-reliant and the massive of arms that is made by these countries is a natural corollary to the fact that all these countries have armament factories which cannot stop without producing unemployment in their countriesIonly wish to stress this because there is a mistaken impression that some countrie are being favoured with arms aid as far as we are concerned, while all these countries are out to sell their arms to any country in the world which has the money to purchase them.

[பிற்பகல் 5-20]

One of the trends in 1974 has been the fact that 45 per cent of the arms that have been sold have gone to the Middle East in 1974. I shall not go more into this because this is a speech that I should probably make elsewhere in Delhi and I hope I will have a chance some time to do it. But, as far as this Government are concerned, I only want to make it clear that we who want aid for development of our own State, have not indulged in any controversy about this point. But still, where mistakes are committed, I think we at least in the Opposition should be frank enough to analyse this.

Then Sir, mention has also been made of a very important matter regarding the three Ordinances that were issued by the Government of India in 1974, freezing wage-increase, freezing 50 per cent of the dearness allowance increase that was given and also the compulsory Deposit Scheme for Income-tax payers. I shall not refer to the last one because that is not a popular issue which is likely to be felt. But I certainly feel..and I have myself expressed it on many occasions..that the dearness allowance freeze is one of the most callous and cruel acts that any Government could practise because at least for persons drawing a wage of Rs. 500 or less per month there should not have been any



freeze in so far as payment of dearness allowance is concerned. If today the corridors of the Secretariats in many State Governments are besieged by Non-Gazetted Officers and by others who are drawing salaries below Rs. 500 a month, it is not a little due to this policy which, it has been rightly stressed, should be modifiedby the Central Government if it is to bring some measure of relief to the low salaried employees.

Sir, may I now turn to the sugar-coated pills of the Hon. the Chief Minister and refer to some aspects of the Tamil Nadu Budget? I was wondering, Sir, how with a loss of Excise revenue of over Rs. 30 to 40 crores..which would have been Rs. 50 to 60 crores if Excise revenue on liquors, etc. had been allowed..and the loss of the betting tax and with the tremendous expenditure on drought relief, the Hon. the Chief Minister would be able to produce a Budget of the magnitude of Rs. 501 crores. But, obviously, what he anticipated last year when he brought forth his measure to improve certain items of sales tax revenues ..and the wonderful expression he used then was rationalisation of taxes, has been excelled. The Hon. the former Minister for Surcharges is now in the Public Works Department; fortunately, surcharges in Revenue Departmient will bring revenue to the State but surcharges in Public Works Department may reflect on his own purse. These surcharges and rationalisation of surcharges have brought about a great improvement in the tax revenue of our Government and although this year we will be faced with the budgetary deficit of Rs. 30 crores taking both revenue and capital accounts into consideration, I still feel that from the taxation point of view it is a very moderate effort and one must feel happy that a larger number of items were not brought within the net. However, may I refer to one or two taxes which have been imposed in this . Budget, particularly with reference to the next tax on perishables such as prawns, lobsters, frogs and frog-legs? I agree, Sir, that most of these items, particularly frogs and frog-legs..I do not think many of us eat them in Tamil Nadu..will not go into the cost of living at all. But it is an item which is difficult to administer, because I come from a prawn-catching area myself..Cuddalore..where we do not get any prawns now as most of it is exported to Kerala for export to other countries.

I wonder whether it may not be administratively difficult for perishables to be taxed. In fact, one of the principles that have been observed in sales tax administration is to see that as far as possible, items like fish,egg, etc. are excluded because these get spoilt. One cannot obviously wait for sale tax officials to come and inspect these products before sale, because obviously they will get spoilt. Although I know that many of these exporters canafford to pay some sort of a licence fee as they are earning quite a lot of money, my only fear is that this should

not result in large scale distortions in the collection of alses tax money. When we introduce sales tax on grocery articles, most of the officials of the Sales Tax Department get grocery articles at fairly concessional rates and I do not want that prawns, lobsters, crabs, frogs and frog-legs should also be given at concessional rates. My only fear is that the revenue anticipated from this measure may not be as much as anticipated and the difficulties in administration should be considered before levying this sales tax.

Sir, I do not know why male Finance Ministers have come down so heavily on members of the fairer sex in the International Women's Year. My friend Thiru C. Subramaniam has started levying excise duty on cosmetics and the Hon. the Chief Minister wants to raise the sales tax on and perfumes. Why is it that women are being singled out by both scents these male Finance Ministers, particularly in this year? One can understand Thiru C. Subramaniam doing this because he is well above the age of 60; but I cannot appreciate our Hon. the Chief Minister, who by no means is old, doing this. From this consideration, why should he not extend a little bit of mercy to scents and perfumes which are used bythe womenfolk of Tamil Nadu? Probably, his idea was to discourage scents and perfumes being used by some males; it is quite possible. To that extent. if he could provide some sort of a differentiation between scents and perfumes used by males and females, it would be most welcome. I would, therefore, plead, because I have a duty to fulfil for the womenfolk of my house also, that as far as scents and perfumes are concerned, some consideration may be shown to the women of our country.

MR. CHAIRMAN: If the use of perfumes by women is agreeabel, what about the other sex?

Thiru A. R. DAMODARAN: It is extremely difficult, Sir, as one would have to go about smelling about all these things.

Yesterday, my hon. Friend Thiru Ganapathi referred to the formation of certain Seed Corporations in our State and the Hon. the Minister for Agriculture was frantic with worry. He was saying about paragraph 14 and after all, only four paragraphs are devoted to Agriculture. I did not notice paragraph 14 until the Hon. Minister pointed out and when I went and saw that paragraph, I did not find anything so very excisting about paragraph 14, because the only thing that is stated therein is that State Seed Farms are being strengthened with various faciliticeand that in 1975-76, three Seed Farms are proposed to be started in an area of 100 acres. We have been pleading for a long time that dry farming should be given encouragement because 65 per cent of our lands in Tamil Nadu are suited for dry farming. We should encourage millet



production and I think it is a very laudable effort. One thing that the Hon. Minister mentioned which worried all of us considerably in the Opposition was that the amount of State finance, the taxpayers' money would only be 10 per cent and that 90 per cent would be obtained from such institutions as the Life Insurance Corporation of India and others, giving the impression thereby that what he borrowed he would not have to return. I wish to state that if he does not return this money which is guaranteed by the Government of Tamil Nadu, the tax-payer is the guarantor for this. My hon. Friend Thiru Ganapathi pointed out with very great caution that in the administration of such seed farms, the irrigation facilities should be strengthened. We maintain this because of the cattle farms which are started in our State, the Public Accounts Committee noted that many cattle farms had been closed because of the lack of water facilities. The areas selected are extremely difficult drought-prone areas and I can well visualise what a tremendous amount of expenditure would have to be incurred in finding irrigation facilities. I wish the Hon. the Minister for Agriculture all luck in this, because, after all, anything that is directed to help farmers would benefit foodgrain production in our State.

(பிற்பகல் 5-30)

Sir, another point I want to mention.. and I will close in five minutes— is that on the 8th March, I believe, a meeting of the Chief Ministers has been convened in Delhi. I do not know if our Chief Minister is also going to attend. It is for dealing with the procurement price of wheat and I do not know if any invitation is extended to the Chief Minister of Tamil Nadu for that meeting. I only wish to state that one of the chief reasons for Dr. Minhas resignation from the Planning Commission's was about the question of wheat price given to Punjab farmers. Mr. D.P. Dhar, the great exponent of Planning who is now in well sequestered quarters of Kremlin wanted that we should import wheat. At that time in 1972-73, we had only 0·8 million tonnes and Mr. Dhar said that if at all there was any necessity, we could import wheat at Rs. 150 per quintal, when the procurement price that was being paid to Indian farmer was only Rs. 85 per quintal. Now Thiru C. Subramaniam has mentioned in his Budget that Rs. 259 crores would be spent on food subsidy during the year 1975-76. Not only that, Sir. Four million tons of wheat we are buying at Rs. 156 per quintal, whereas the Punjab farmers are being paid only Rs 105 per quintal. In other words, India, in spite of its poverty, is subsidising the farmers of the United States and Russia for producing more wheat and we are paying them a higher price. I cannot understand the logic of such a policy.

Although I realise that the increase in the price of rice is a very sensitive issue, there are many political parties in Tamil Nadu which claim that if they come to power they will be giving rice at rupee-a-measure and at 1½ rupees a measure. If they do so, a million farmers will go out of existence, because no production would be possible. As it is, farmers are finding it extremely difficult to exist on the prices that have been fixed. I have a feeling that while the State Government has pressed this issue with the Central Government, at the same time, when the Chief Minister goes back to his Chambers, he will be confronted with his finance Secretary who will say, "If you accept a higher price for rice, then you will have to pay more amount as dearness allowance". In spite of this, I hope the State Government will insist that a fair price be fixed as procurement price for rice, because in the coming years, in spite of all the Five-Year Plans and in spite of borrowing Rs. 1,500 crores from the Reserve Bank and having 10,000 crore Budget, the basic question in our country is not how much taxation effort is made and how it is deployed, but the basic question is that production must be increased in all sectors of the economy. Whether we are Communists or Socialists or Democratic Socialists or Congressmen or men belonging to no party—all of us are agreed on one thing and that is that production must be improved at all costs, in every sector of the economy, whether it is in the field or in the factory in Government offices or in private establishments. If we can increase production, then I am fairly certain that much of the inflation that has taken place over the past 2½ years may perhaps be met and checked by following such progressive polices as a higher procurement price for farmers, so that they may produce rice in larger quantities. It is not generally realised that in India the production of rice was of the order of 43 million tonnes whereas the production of wheat was only of the order of 26 million tonnes during the year 1970-71. Paddy, in terms of rice production, is the biggest crop in India and we must endeavour to see that production is kept up not only to satisfy the domestic consumption but to be a very important foreign exchange earner, provided we are able to provide the necessary inputs for agriculture. One does not visualise a massive State Farm and I would discredit such an assumption because if State Farms are started for producing foodgrains, they will end up in a loss as we know from actual experience. All that is required is a special impetus to those farms and that is why I wanted to stress that in case there was going to be a Chief Ministers' Conference, some effort should be made to see that this questionwas thrashed out because there can be no more unscientific body than the Agricultural Prices Commission. Two years ago I pointedit out and the Hon.the Chief Minister stated that a Committee would be appointed to go into ther cost structure of the agricultural commodities in the State. Now we have an Agricultural University in Coimbatore with Research Stations, and with a very good





Head of the Department of Agriculture there as Vice-Chancellor. I would request him kindly to entrust this work with the Coimbatore Agricultural University. Let us have an idea of the cost of production of foodgrains in our State. Let us talk with the papers in hand and press for the fixation of fair price for agricultural commodities in Tamil Nadu. Punjab has done like that and Dr. Minhas argued with the paper that was produced by the Punjab Agricultural University on the procurement price that should be paid for wheat. I would, therefore, plead that our Government should also take up this task without fearing the consequences. After all, this is only a research paper and our Statistical organisation is sufficiently strong to deal with this subject. I would only plead that the matter be pursued further. On Education, Road Transport, Food and Civil Supplies, we are having an opportunity to speak on the Policy Notes and so, I do not want to take up the time of the House on these questions. I would only like to stress that considering the overall restraint on resources, the present Budget of the Tamil Nadu Government is not excessive in any sense of the term and except for certain minor adjustments that may be required in the quantum or in the rate of sales taxes, there is nothing more that I would like to plead on this occasion. Thank you, Sir.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை.)

* திரு எஸ். ஏ. இராசமாணிக்கம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, நமது முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் இந்த அவையின்முன் வைக்கப்பட்டுள்ள 1975–76-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையையும், 1974–75 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீட்டையும் வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய மதிப்பிற்குரிய இந்த மன்றத்தின் உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் இந்தியாவில் காங்கிரஸ் அல்லாத ஒரு எதிர்க்கட்சி 9-வது ஆண்டுக் காலத்திலே ஒரு பட்ஜெட் இங்கே கொடுத்திருக்கிறது என்பதை எடுத்துக் கூறினார். இந்த பட்ஜெட்டைச் சமர்ப்பிக்கின்ற நேரத்தில் இந்த அரசாங்கத்துக்கு நாட்டிலே உள்ள பல்வேறு அரசியல் கட்சிகளும் எப்படிப்பட்ட தொல்லைகளைக் கொடுத்திருக்கின்றன என்பதை அவரும் அறிந்திருக்கின்றார், நாடும் அறிந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை. இவ்வளவு கடுமையான எதிர்ப்புகளுக்கு இடையே வேறு எந்த ஒரு அரசாங்கமாக இருந்தாலும், வேறு எந்த முதல்வராக இருந்தாலும், நிச்சயமாக பதவியை விட்டு ஓடிப் போயிருப்பார்கள். அவ்வளவு கடுமையான எதிர்ப்புகளையும் சமாளித்துக்கொண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த 9-வது ஆண்டு நிதி நிலை அறிக்கையை இந்த இடத்திலே கொடுத்திருக்கிறது. விலைவாசிகளைப் பொறுத்தவரை, கட்டுக்கடங்காத நிலையில் விலைவாசிகள் ஏறியிருந்தும், நமது மாநிலத்தின் பொருளாதார நிலை சீர்குலையாதபடி மிகக் குறைந்த அளவுக்கே வரி விதித்துள்ளதை வரவேற்கிறேன் என்றாலும் கூட,

இந்தச் சிறு அளவு வரியை கூடத் தாங்கிக்கொள்ள முடியாத சில அரசியல் கட்சிகள் இந்த வரி ஏழை மக்களைப் பாதிக்கும் என்று கூறுகிறார்கள். சென்ற ஆண்டு பிப்ரவரியிலிருந்து இந்த ஆண்டு பிப்ரவரிக்குள்ளாக மத்திய அரசாங்கம் 1,100 கோடி ரூபாய்க்கு வரி விதித்திருக்கிறது. இதை ஏன் என்று கேட்பதற்குக்கூட இந்த நாட்டிலே அரசியல் கட்சிகள் இல்லை. அவர்கள் மனச்சாட்சியை எங்கு அடகு வைத்தார்கள் என்பதைக் கூட நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. அந்த அளவிற்கு அவர்கள் மனச்சாட்சியை அடகு வைத்துவிட்டு நாம் ஏதாவது சிறு அளவு வரி விதித்தாலும் கூட, அதைக் கண்டிக்கக் கூடிய நிலையிலே இன்றைய தினம் இருந்துகொண்டிருக்கின்றார்கள். ஆகவே, இது குறித்து என்னுடைய தாழ்மையான கருத்தை நமது முதல்வர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். மத்திய சர்க்கார் மக்களின் அன்றாட உபயோகப் பண்டங்களின் மீது இதுவரை எவ்வளவு வரி விதித்திருக்கிறது, அந்தப் பண்டங்களின் அடக்க விலை என்ன, மத்திய சர்க்கார் மக்களிடத்திலே விற்கும் விலை என்ன, விற்கச் சொல்லும் விலை என்ன என்பதை "வால் போஸ்டராக" அச்சடித்து கிராமங்களிலும் நகரங்களிலும் ஒட்டி மத்திய சர்க்கார் எத்தனை ஆயிரம் கோடி ரூபாய்க்கு வரி விதித்திருக்கிறது என்பதை மக்களுக்குத தெரியப்படுத்த வேண்டுமென்பது என்னுடைய பணிவான வேண்டுகோள். முதல்வர் அவர்கள் அதைக் கண்டிப்பாகச் செய்வார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். மத்திய சர்க்கார் போடுகின்ற வரி தான் இந்த விலை உயர்வுக்குக் காரணமாக தமிழகத்தில் அமைந்திருக்கிறது என்பதை நாம் இந்த நேரத்திலே மறந்து விடுவதற்கில்லை.

அடுத்து, கொள்முதல் நடைமுறையைப்பற்றி, தமிழகத்தைப் பொறுத்தவரையிலே உள்ள அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான கருத்துக்களைக் கூறி வருகின்றார்கள்.

[பிற்பகல் 5–40.]

சில இடங்களிலே லெவி வாங்கக் கூடாது என்கிறார்கள். சில இடங்களிலே லெவி அதிகமாக வாங்கி விட்டதாகக் கூறுகிறார்கள். சில இடங்களிலே வீட்டிற்குள்ளே புகுந்து இருக்கின்ற நெல்லை எல்லாம் அளந்து கொண்டு வந்துவிட்டதாகக் கூறுகிறார்கள். ஆகவே, இப்படி ஒரு பக்கம் விவசாயிகளிடத்திலே போய் நெல்லுக்கு விலை கட்டியாகக் கொடுத்து விட்டதாகச் சொல்லும்பொழுது, மறுபக்கம் விவசாயிகளிடத்திலே போய் நெல்லை நீங்கள் இந்த விலைக்கு விற்காதீர்கள் என்று மறைமுகமாகப் பிரச்சாரம் செய்யக்கூடிய அளவிற்கு தி. மு. கழகத்தின் தோழமைக் கட்சிகள் தவிர மற்ற அனைத்து எதிர்க்கட்சிகளும் வந்திருக்கின்றன என்று நான் சொல்லுவேன். ஆனால், நகர்ப் புறங்களிலே வந்து குறைந்த விலைக்கு அரிசி விற்கப்படவேண்டுமென்றும் அரசாங்கம் இதிலே அதிக இலாபம் சம்பாதிக்கிறது என்றும் மக்களிடத்திலே பிரச்சாரம் செய்து வருகிறார்கள். மத்திய சர்க்கார் ஒவ்வொரு பொருள் மீதும் எவ்வளவு இலாபம் அடிக்கிறது என்பதை பொது மக்களிடத்திலே எடுத்துச் சொல்லுவதில்லை. இந்த அரசு இதிலே அதிக இலாபம சம்பாதிப்பதாகச் சொல்லி,





ஒரு தவறான எண்ணத்தை அரசாங்கத்திற்கு எதிராக உருவாக்கி வருகிறார்கள். அதுவுமின்றி கொள்முதல் செய்து வருவதைத் தடுத்துக் கொண்டு வருகிறார்கள். இந்த நிலையைத் தவிர்ப்பதற்காக இவர்கள் போடுகின்ற இரட்டை வேடத்தை நாம் நிச்சயமாக மக்களிடத்திலே சொல்லியாக வேண்டும். ஒரு பக்கம் விவசாயிகளிடத்திலே குறைந்த விலைக்கு நெல்லைக் கொடுக்க வேண்டாமென்றும் மறுபக்கம் நகரத்திலே வந்து குறைந்த விலைக்கு அரிசியைப் போடச் சொல்லுங்கள் என்றும் இரட்டை வேடம் போடுவதை நிச்சயமாக அரசாங்கம் பொதுமக்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, உணவு தானியக் கொள்முதல் நடைமுறைகளை நாம் சிறிது மாற்றியமைத்துக் கொண்டால், தமிழகத்திலே இன்னும் ஒரு பத்து மாத காலத்திற்குள் ஏற்படக்கூடிய வறட்சி நிலைமையைச் சமாளிப்பதற்கு வசதியாக இருக்கும். $\frac{1}{2}$ ஏக்கருக்குட்பட்ட நிலம் வைத்திருக்கும் விவசாயிகளை விட்டுவிட்டு, அதற்கு மேல் பூமியை வைத்திருக்கிற எல்லா விவசாயிகளிடத்திலேயும், அவர்களுடைய குடும்பத்தின் ஒரு வருஷத் தேவைக்குரிய நெல், விதைக்குரிய நெல், அவர்களுக்குத் தேவையான கூலி நெல் போன்றவற்றைக் கொடுத்துவிட்டு, மீதமுள்ள நெல் பூராவையும் அரசாங்கம் கொள்முதல் செய்ய வேண்டும். அரசாங்கக் கொள்முதல் போக மீதமுள்ள நெல்லைக் கொள்முதல் செய்வதற்கு போதிய சாதனங்கள் நம்மிடம் இல்லை என்றால், ஊராட்சி ஒன்றியங்கள் அல்லது வட்டங்கள் வாரியாக மொத்த வியாபாரிகளை அரசாங்க ஏஜன்சிகளாக நிர்ணயித்து அவர்களால் எந்த அளவிற்குக் கொள்முதல் செய்ய முடியும் என்று கண்டறிந்து, உடனடியாகக் கொள்முதல் செய்து அந்த நெல் அனைத்தையும் அரசாங்கம் நிர்ணயித்துள்ள நடைமுறைப்படி நேரடி விநியோகம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதை இந்த வருடம், மார்ச் எப்ரல், மே மாதங்களிலே நாம் செய்யவில்லை என்றால் ஜுலை, ஆகஸ்ட் மாதங்களிலே நாம் கடுமையான பஞ்ச நிலைமையைச் சமாளிக்க வேண்டியிருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு வியாபாரி 10 இலட்சம் ரூபாய்க்கு நெல் ஸ்டாக் வைக்க முடியும் என்றால், அதற்கேற்ற வசதியைச் செய்து கொடுத்து, அதற்குரிய வட்டியையும் கொடுத்து, அவனை நெல்லை ஸ்டாக் செய்ய வைத்து, அதைப் பரவலாக அரசாங்கம் சொல்லுகின்ற சில்லரை வியாபாரிகளுக்கோ ரேஷன் கடைகளுக்கோ விநியோகம் செய்ய வேண்டும் என்பதை வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்திலே ஏற்பட்ட கடுமையான உணவு நெருக்கடியை மூன்று ஐ. சி. எஸ். ஆபிசர்கள் 1940 முதல் 1946 வரை மிகத் திறமையாகச் சமாளித்தார்கள். உடனே நம்முடைய அமைச்சர்கள் அப்படிப்பட்ட நெருக்கடியைச் சமாளிக்கவில்லை என்று நான் இங்கே சொல்லவில்லை. அன்றைய தினம் ஜனநாயகம் இல்லை; அரசியல் கட்சிகள் இல்லை; பஞ்சாயத்து போர்டு இல்லை; சட்டமன்றமில்லை. ஆகவே, அவர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் மூலம் எதை வேண்டுமானாலும் செய்யக்கூடிய நிலைமை இருந்தது. இன்றைய தினம் ஜனநாயகம் என்ற அமைப்பு இருந்துகொண்டு, சட்ட மன்ற உறுப்பினர்களுடைய, ஊராட்சி மன்ற உறுப்பினர்களுடைய

ஒத்துழைப்பைப் பெற்று சீராகக் கொள் முதல் செய்யப் போனால், அங்கே வியாபாரிகளிடத்திலே போய் அதிக விலை கொடுத்து வாங்காதே என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த வறட்சிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் பெருமதிப்பிற்குரிய திரு. காமராஜர் கூட வறட்சிப் பிரச்சினையை வெறும் அரசியல் பிரச்சினையாக ஆக்க வேண்டாமென்று அரசியல் கட்சிகளுக்கு யோசனை கூறியிருக்கிறார்கள். ஆகவே, அந்த அடிப்படையில் நம்முடைய கொள்முதல் கொள்கையை ஓரளவிற்கு சிறிது மாற்றியமைக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த நேரத்திலே குறிப்பாக உணவு உற்பத்திக்காக எட்டு புதிய திட்டங்களை உருவாக்கியிருப்பதையும், இதன்மூலம் 49,000 எக்கரா விற்குப் பாசன வசதி ஏற்படவிருக்கிறது என்பதையும் மனதாரப் பாராட்டுகிறேன். இந்தத் திட்டங்களை நிறைவேற்றுகின்ற நேரத்தில் பாசன வாய்க்காலை நேரடியாக வயலுக்குச் சென்று தண்ணீர் பாயும் வரை நவீன மயமாக்க வேண்டும். பாசனக் கால்வாய்களை நவீன மயமாக்குவதின் மூலம் மேலும் சில ஆயிரம் ஏக்கர்களுக்குப் பாசன வசதிசெய்ய வசதியாக இருக்கும். கோவை விவசாயப் பல்கலைக் கழகத்தில் நான்கு பங்கு களிமண், நான்கு பங்கு மணல், ஒரு பங்கு சிமெண்ட் என்ற அளவில் கலவை செய்து சிறந்த வாய்க்கால்களை உருவாக்கியுள்ளனர். அப்படிப்பட்ட வாய்க்காலை ஏற்படுத்தினால், இன்னும் அதிகமான பூமிக்குப் பாசன வசதி செய்து தர வசதியாக இருக்கும்.

அடுத்து, தமிழர்களின் கலாசாரம், பண்பாடு, நாகரிகம் இவைகளைப் பாதுகாக்கவும், பிற்கால சந்ததி நமது வரலாற்றைத் தெரிந்து கொள்ளவும், பூம்புகாரையும், பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையையும், வள்ளுவருக்குக் கோட்டம் ஏற்படுத்தியிருப்பதையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன். அதே நேரத்திலே கன்னியாகுமரியிலேயுள்ள சீர்கேட்டை எடுத்துச் சொல்லாமலிருக்கவும் முடியவில்லை. இன்றைய தினம் கன்னியாகுமரியைப் பார்த்தால், அந்த இடம் தமிழ்நாட்டைச் சேர்ந்ததா அல்லது வடநாட்டைச் சேர்ந்ததா அல்லது சீனாக்காரனுக்குச் சொந்தமான இடமா என்று நாம் சொல்லக்கூடிய அளவில் நான் அது இருக்கிறதே தவிர, தமிழர்களின் கலாசாரத்தையும், பண்பாட்டையும் பிரதிபலிக்கக்கூடிய எந்தச் சின்னமும் அந்த இடத்தில் இல்லை. 1958-ம் ஆண்டு நாகர்கோவிலில் நடைபெற்ற தி. மு. கழக மாநாட்டில் அண்ணா அவர்கள் காந்தியார் நினைவுச் சின்னத்தைப் பார்த்து விட்டு, இமயம் முதல் குமரி வரை ஒன்று என்று சொல்லுபவர்கள் காந்தியாருக்கு வடநாட்டுப் பாணியில் சிலை எழுப்பியிருக்கிறார்கள், இது கண்டிக்கத் தக்கது என்றார்கள். காந்தியாருக்கு நினைவுச் சின்னம் அமைக்கலாம். ஆனால், அது வடநாட்டுப் பாணியிலே அமைக்கப்பட்டிருக்கிறது. அதை அடுத்து, விவேகானந்தருக்கு மண்டபம் கட்டி அதை வட இந்தியர்கள் ஆக்கிரமித்துக் கொண்டு அவர்கள் அதை நிர்வாகம் செய்து கொண்டு, இந்த அரசாங்கம் அதற்கு நன்கொடை ஒன்றும் கொடுக்கவில்லை என்பதற்காக இந்த அரசாங்கத்தை அவமானப்





படுத்தும் வகையிலே அங்கே போர்டு எழுதி வைத்திருக்கிறார்கள் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனவே அங்கேயிருக்கும் விவேகானந்தர் மண்டபத்தை இந்து அற நிலைய போர்டு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தமிழர்களின் பண்பாடு, கலாசாரம் போன்றவற்றை எடுத்துக்காட்டுகின்ற வகையில் தமிழகத்தின் தென்கோடி ஆரம்பமாகின்ற இடம் கன்னியாகுமரி என்பதை எடுத்துக் காட்டுகின்ற வகையில் அங்கேயுள்ள கன்னியாகுமரி கோவிலைப் புதுப்பித்து, திராவிட சிற்ப கலாசார அடிப்படையில் 200 அல்லது 300 அடி உயர கோபுரமொன்றைக் கட்டித் தருவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி நமது முதல்வர் அவர்களை விரும்பி வேண்டிக்கேட்டுக் கொள்ளுகிறேன்.

நம்முடைய காலத்தைத் தவிர, வேறு யார் காலத்திலேயும் தமிழர் என்ற உணர்வோடு யாரும் செயல்படப் போவதில்லை. ஆகவே, உடனடியாக கன்னியாகுமரியிலே இந்தக் காரியத்தை நாம் செய்து தீரவேண்டும். அதே நேரத்திலே அங்கேயுள்ள பாறைகளிலே திருவள்ளுவருக்கு ஒரு சிலையையும், அண்ணா அவர்களுக்கு ஒரு நினைவாலய மண்டபத்தையும் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கன்னியாகுமரி தமிழகத்தின் பகுதியாக தமிழ் மக்கள் கண்களிலே படவில்லை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, குடிநீர் வசதியைப் பொறுத்தவரையில், கோவை நகருக்கு குடிநீர் வினியோகிக்கும் சிறுவாணியிலிருந்து உடனடியாக அதிகப்படியான தண்ணீர் கிடைப்பதற்கு 1–3/4 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். சிறுவாணி திட்ட அணைக்கட்டுப் பகுதியில் காண்ட்ராக்ட் எடுத்துள்ளவர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். அங்கு மலையாளிகள் குடியிருப்புகள் இல்லை. ஆனால் அங்கே மலையாளிகளைத் தான் வேலைக்கு வைக்க வேண்டுமென்று அங்குள்ள மலையாள அதிகாரிகள் கிளர்ச்சி செய்கிறார்கள்.

(பிற்பகல் 5-50)

இதனால் அங்கே, அணைக்கட்டு வேலையே தாமதப்பட்டு விடுமோ என்று அஞ்சக்கூடிய நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. நமது அரசு தலையிட்டு, அந்த வேலை துரிதமாக நடைபெறுவதற்கான காரியங்களைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இடுக்கி திட்டத்தில் கம்யூனிஸ்டுகள் கலவரம் செய்து அந்தத் திட்டம் முழுமை பெறாமலிருப்பதால், இந்தத் திட்டமும் அவ்வாறு நடைப்படாமல் நடைபெற வேண்டும் என்பதற்காக இதைச் சொல்லுகிறேன்.

குடிநீர்ப் பிரச்சினை இந்த ஆண்டு சென்னை நகரத்தைக் கடுமையான அளவில் வாட்டிக்கொண்டிருக்கிறது. அதற்காக பாலாறிலிருந்து துரித காலத்தில் தண்ணீர் கொண்டு வருவதற்காக அரசு எடுத்துக்கொள்ளுகிற

முயற்சிகளைப் பாராட்டுகிறேன். இங்கே 15 அல்லது 20 அடி தோண்டினால் தண்ணீர் கிடைக்கிறது. அவிநாசி, பல்லடம், கோவை போன்ற பகுதிகளில் 400 அடி வரையில் துளைக் கிணறுகள் போட்டாலும் கூட தண்ணீர் கிடைப்பதில்லை. அந்தத் தாலுக்காக்களில் இருக்கின்ற மக்கள் குடி தண்ணீருக்குக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக சூலூரிலும், சோமனூரிலும் இருக்கின்ற பெண்கள் இரண்டு மைல் அல்லது மூன்று மைல் தூரம் சென்று, குடங்களை வைத்துக்கொண்டு கியூவில் நின்று கொண்டு தண்ணீர் கொண்டு வரவேண்டிய நிலைமை இருக்கிறது. இந்தக் கஷ்டத்தைப் போக்குவதற்கு, அங்கே உள்ள இரண்டு இலட்சம் மக்களுடைய குடிநீர்க் கஷ்டத்தைத் தீர்ப்பதற்காக P. A. P. கால்வாயில் மூன்று இடங்களிலிருந்து பம்ப் செய்து தண்ணீர் எடுத்து அந்தப் பகுதி மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற ஒரு திட்டத்தை குடி நீர் வாரியத்திடம் நான் கொடுத்தேன். மூன்று இடங்களிலிருந்து தண்ணீர் எடுத்தால் எல்லா மக்களுக்கும் கொடுக்கலாம், கொஞ்சம் செலவு அதிகமானாலும் பாதகமில்லை என்ற அளவில் திட்டத்தைக் கொடுத்தேன். ஆனால் வழக்கமாக அதிகாரிகள் இந்த மூன்று இடங்களுக்கும் ஒன்றாக பெரிய குழாய்களைப் போடுமளவுக்குத் திட்டம் உருவாக்கி, இரண்டு கோடி ரூபாய் செலவாகும் என்று அரசை பயமுறுத்தி அங்கே போர் கிணறுகளைப் போடும் நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள். இங்கே உள்ள சில அதிகாரிகளுடைய மனைவிமார்கள் மைல் கணக்கில் நடந்து போய், மணிக்கணக்கில் கியூவில் நின்று தண்ணீர் எடுப்பார்களா என்று இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன். ஈவு இரக்கமுள்ள நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் சிறிதளவு கவனம் செலுத்தி பல்லடம், அவினாசி தாலுக்காக்களில் உள்ள மக்களுக்குக் குடிநீர் வழங்க உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சமுதாயப் பாதுகாப்பு என்ற அடிப்படையில், நெசவாளர்களுக்கு ஏற்படுத்தியுள்ள திட்டத்தை மனதாரப் பாராட்டுகிறேன். இதில் ஒரே ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். இதற்குரிய தொகை ரூ. 4,320 என்று இருப்பதை ரூ. 5,000 என்று ஆக்கி முழுமையாகக் கொடுக்குமளவில் மாற்றியமைத்திட வேண்டுமென்ற வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மத்திய மாநில உறவைப் பற்றி எனது கருத்துக்களை இங்கே கூற விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய நண்பர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் காஷ்மீர் பிரச்சினையில் மத்திய சர்க்கார் எந்த அளவுக்கு நடந்துகொண்டிருக்கிறது என்பதை விளக்கிக் கூறினார். அங்கே வருஷம் ஒன்றுக்கு ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து அதை இதுவரையில் வைத்திருந்து, இன்றைய தினம், 1953-ல் காஷ்மீரில் பிரதமராக இருந்த ஷேக் அப்துல்லாவை, அமெரிக்கக் கைக்கூலி, பாகிஸ்தான் உளவாளி என்று பிரசாரம் செய்யப்பட்ட ஷேக் அப்துல்லாவை, 12 ஆண்டுக் காலம் உதகையிலும்,' கொடைக்கானலிலும் சிறை வைக்கப்பட்டு, திடீரென்று விடுதலை செய்யப்பட்ட ஷேக் அப்துல்லாவை வரவழைத்துப் பேச்சு வார்த்தைகள் நடத்தி, 1953-ல் காஷ்மீர் என்னென்ன உரிமைகளைப் பெற்றிருந்ததோ, அவற்றையெல்லாம் கொண்டே காஷ்மீர் சட்டம்



என்ற ஒன்று இயற்றி எடுத்துக் கொள்ளலாம் என்று கூறி, காஷ்மீருக்கு அந்த ஷேக் அப்துல்லாவைப் பிரதமராக்கி வைத்திருக்கின்றது நமது இந்திய மத்திய அரசாங்கம். அன்றைய தினம் அமெரிக்காவின் கைக்கூலியாக, பாகிஸ்தானின் உளவாளியாக இருந்தவர், இன்றைய தினம் மனம் மாறிவிட்டாரா என்று நமக்குப் புரியவில்லை. 12 ஆண்டுக் காலம் அவரை எதற்காகச் சிறையில் வைத்திருந்தார்கள் என்று நமக்குத் தெரியவில்லை. இவ்வளவு நாள் இந்திய அரசிடம் அடிமையாக இருந்து 20 ஆண்டுக் காலம் போராடி, மீண்டும் காஷ்மீர் பிரதமராக வந்துள்ள ஷேக் அப்துல்லாவை நான் பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன். 20 ஆண்டு காலம் உள்ள உறுதியோடு இருந்து காஷ்மீரின் அடிப்படை உரிமைகளைப் பெற்றிருப்பது மகிழ்ச்சி தரும் விஷயமாகும். 1953-க்கு முன் காஷ்மீர் இருந்த நிலைமையை எண்ணிப்பார்க்க வேண்டும். தனிக் கொடி இருந்தது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் அங்கு செல்லுபடி ஆகாது. காஷ்மீருக்குள் யார் போகவேண்டுமானாலும் சரி, பாஸ்போர்ட் இல்லாமல் போக முடியாது. இன்னும் ஆறு மாதங்கள் கழித்து மத்திய சர்க்கார் அமைச்சர்களே காஷ்மீருக்குள் செல்ல வேண்டுமானால், பாஸ்போர்ட் இல்லாமல் செல்லமுடியாது. அந்த அளவுக்கு அவர்களுக்கு சுயாட்சி கொடுத்திருக்கிறார்கள். அதை நான் சுயாட்சி என்று சொல்ல மாட்டேன். அந்த நாட்டைத் தனி நாடாகவே விட்டிருக்கிறது இந்திய அரசாங்கம் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். அதைத்தான் மனதில் வைத்துக்கொண்டு நம்முடைய கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் திரு. செழியன் அவர்கள் காஷ்மீருக்குக் கொடுத்ததுபோல் தமிழ் நாட்டுக்கும் மாநில சுயாட்சி கொடுக்க வேண்டுமென்று கேட்டதற்கு இந்தியப் பிரதமர் அவர்கள் அளித்திருக்கின்ற பதில் நம்முடைய மனதிற்கு அவ்வளவு திருப்தி அளிப்பதாக இல்லை என்பதை மட்டும் இந்த நேரத்தில் நான் சொல்ல விரும்புகிறேன். காஷ்மீர் பிரச்சினை தனித் தன்மை வாய்ந்தது என்று கூறியிருக்கின்றார். என்ன அந்தத் தனித் தன்மை என்று நமக்குப் புரியவில்லை. காஷ்மீரில் உள்ளவர்கள் முஸ்லீம்கள். பக்கத்தில் ஈரான், ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற முஸ்லீம் நாடுகள் ஏராளமாக உள்ளன. அண்டையில் மத்தியக் கிழக்கு ஆசிய முஸ்லீம் நாடுகள் இருக்கின்ற காரணத்தினால், என்றைக்காவது ஒரு நாள் காஷ்மீரில் உள்ள மக்கள் முஸ்லீம் மக்களோடு ஒன்றாகச் சேர்ந்து விட்டால், என்ன செய்வது என்று பயந்து கொண்டு, அந்த நாட்டுக்கு இன்றைய தினம் சுதந்திரம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் தமிழ் நாட்டுக்குப் பக்கத்தில் எந்த அந்நிய நாடும் இல்லை. பக்கத்தில் வங்காள விரிகுடாக் கடல்தான் இருக்கிறது. ஆகவே நாம் யாருடனும் சேர முடியாது, நமக்கு யாரும் துணைக்கு வர முடியாது என்ற ஒரு காரணம் கொண்டுதான் நம்முடைய கோரிக்கையை அந்த அம்மையார் மிகவும் அலட்சியப்படுத்தியிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, பலம் பொருந்திய மத்திய சர்க்கார் இருக்க வேண்டும், ஆகவே மாநில சுயாட்சி கேட்காதீர்கள் என்று நம்மிடம் சொல்லிவிட்டு, காஷ்மீருக்கு மாநில சுயாட்சி கொடுக்கின்றார்கள். பலம் பொருந்திய இந்த மத்திய சர்க்கார் கடந்த 25, 26, 27 ஆண்டுகளாக எந்தக் காரியத்தை உருவாகச் சாதித்திருக்கிறது என்பதைத் தான் இந்த நேரத்தில் நான் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். ஒரு ராஜ்யத்தில் கூட தண்ணீர் தகராறைத் தீர்க்க முடியவில்லை. இந்த பலம்

பொருந்திய மத்திய சர்க்கார் இரண்டு ராஜ்யங்களுக்குள் இருக்கின்ற தண்ணீர்த் தகராறைத் தீர்த்து வைக்க முடியவில்லை. இந்தியாவில் மழையாகப் பெய்கின்ற தண்ணீரில் கால் பங்குதான் விவசாயத்திற்குப் பயன்படுத்தப் படுகிறது. மீதி முக்கால் பங்குத் தண்ணீர் கடலில் போய் விழுகிறது. அந்தத் தண்ணீரை அண்டை மாநிலங்கள் எடுத்துக் கொள்வதற்குப் பேச்சு வார்த்தை நடத்தியோ, டிரிபியூனலுக்கு விட்டோ, சுப்ரீம் கோர்ட்டுத் தீர்ப்புக்கு விட்டோ அந்தக் காரியத்தைச் செய்து கொடுக்கக் கூடிய பலம் பொருந்திய மத்திய சர்க்காராக இல்லையே. இந்த பலம் பொருந்திய மத்திய சர்க்கார் என்று நாம் எப்படி ஒத்துக்கொள்ள முடியுமென்று நான் கேட்க விரும்புகிறேன்.

நாம் கேட்கின்ற மாநில சுயாட்சி காஷ்மீருக்குக் கொடுத்தது போன்ற நிலையில் உள்ளதல்ல. முக்கியமான நான்கு, ஐந்து அதிகாரங்களை மத்திய அரசு வைத்துக் கொண்டு, மீதியுள்ள அதிகாரங்களைக் கொடுக்க நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். எல்லா அதிகாரங்களையும் கேட்கவில்லை. நாம் கேட்கின்ற மாநில சுயாட்சி நம்முடைய மாநிலத்திற்கு மட்டுமல்ல. இந்தியாவிலுள்ள 60 கோடி மக்களுக்கும் சேர்த்துத்தான். இந்த நேரத்தில் காஷ்மீருக்கு மட்டும் தனி ஆட்சி கொடுத்து, அந்த ராஜ்ய முதலமைச்சரை மட்டும் பிரதம மந்திரி என்று போட்டிருக்கிறார்கள் என்றால், அவர்கள் இந்தியர்கள் அல்ல, காஷ்மீரிகள் என்பதை இந்திய சர்க்கார் ஒப்புக் கொண்டதாகத்தான் ஏற்படும். எனவே, இனியும் காஷ்மீர் இந்தியாவுடன் சேர்ந்த ஒரு ராஜ்யம் என்பதைவிட இந்தியாவின் ராணுவ தளம் என்று கூறலாமென்றுதான் நான் கருதுகிறேன். நமக்குப் பக்கத்தில் வேறு நாடுகள் இல்லை. வேறு நாடுகளின் உறவுமில்லை என்பதால்தான் நமக்கு மாநில சுயாட்சி இல்லை என்று உறுதியாகச் சொல்லிவிட்டார்கள். தமிழ் நாட்டைச் சுற்றிக் கடல்தான் இருக்கிறது. பக்கத்தில் உள்ள ஸ்ரீ லங்கா நம்மை மதிப்பதில்லை. அங்கே உள்ள தமிழர்களைக் கொடுமைப் படுத்தும் சிறுமதி படைத்த ஆட்சி அங்கே உள்ளது. தமிழ் மொழிக்கு ஏகப் பிரதிநிதியாக இருக்கும் நமது அரசை ஸ்ரீ லங்காவில் நடைபெற்ற உலகத் தமிழர் மூன்றாவது மாநாட்டிற்கு அழைக்கக்கூட இலங்கை அரசாங்கம் முற்படவில்லை. எப்படியோ அந்த மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டுமென்கிற எண்ணங் கொண்ட தமிழ் வாலிபர்கள் ஏதோ வழியில் சென்று அங்கே கலந்து கொண்டு புரட்சியை உருவாக்கிவிட்டு வந்துள்ளார்கள். அதன் விளைவுதான் ஸ்ரீலங்கா பெரியவர் செல்வநாயகத்தின் வெற்றி. இதோடு மட்டும் தமிழ் உணர்வு கொண்ட இளைஞர்கள் இல்லை. டெல்லிக்கு சமீபத்தில் வந்திருந்த ஸ்ரீ லங்கா பிரதமருக்கு தமிழ் இளைஞர்கள் கறுப்புக் கொடியும் காட்டியிருக்கிறார்கள்.

[பிற்பகல் 6-00]

இன்னொரு உதாரணத்தையும் கூறி எனது பேச்சை முடிக்க விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியை எப்படியாவது கவிழ்க்க வேண்டுமென்ற எண்ணமுடைய ஆனந்த விகடன் மணியன் கிழக்காப்பிரிக்கச் சுற்றுப் பயணம் என்கிற புத்தகம் ஒன்று எழுதியுள்ளார். அவர் கிழக்காப்பிரிக்காவில் மொரிஷியஸ் தீவைச் சேர்ந்த ரீ-யூனியன் என்கிற தீவிற்குச் சென்றுள்ளார். அந்த ரீ-யூனியன்





தீவில் மட்டும் ஒரு லட்சம் பேர் தமிழர்கள் உள்ளனர். அவர்களில் 95 சதவிகித மக்கள் தமிழ் நாட்டைப் பார்த்தவர்கள் அல்ல. 200 ஆண்டுகளுக்கு முன் பிரஞ்சுக்காரர்கள் கரும்புத் தோட்டம் அமைக்க கப்பலில் கூலிகளாகச் சென்றவர்கள். அவர்கள் ஆனந்த விகடன் மணியனைப் பேட்டி கண்டுள்ளனர். அதில் ஒரு தமிழ் இளைஞர் தமிழ் நாட்டையே கண்ணில் பார்த்தறியாதவர் கேட்கிறார்—"சின்னஞ்சிறு நாடுகள் எல்லாம் தனியாக இருக்கும்போது, தமிழ் நாடு மட்டும் ஏன் தனியாக இருக்கக் கூடாது"—என்று கேட்டுள்ளார். அதற்கு ஆனந்த விகடன் மணியன் அங்கு என்ன பதில் சொன்னாரோ தெரியவில்லை. இங்கு அவர் எழுதிய புத்தகத்தில் பதிலைப் போடவில்லை. தி. மு. க. வில் உள்ள தமிழர்கள் மட்டுமே இன்றைய தினம் சட்ட பூர்வமாக அமைதியாக மிதவாதத் தன்மையோடு மாநில சுயாட்சி கேட்கிறோம். எங்களையும் மீறி ஒரு கூட்டம் தன்னாட்சி கண்டுவிடக் கூடிய நிலையில் உலகெங்கும் இருந்து வருகிறது என்பதைத்தான் கிழக்காப்பிரிக்கா சம்பவம் நமக்கு உணர்த்துகிறது. எனவே, காலமறிந்து மாநில சுயாட்சிக் கோரிக்கை புரட்சியாக வெடிக்கும் முன்பே, மத்திய அரசு மாநில சுயாட்சிக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும். இல்லையேல் கிழக்காப்பிரிக்காவில் தமிழ் வாலிபருக்கு ஏற்பட்ட எண்ணம் இங்குள்ள இளம் தலைமுறைக்கு ஏற்படுமானால், நிலைமை என்னவாகும் என்பதை மத்திய அரசு உணர்ந்து அதற்கேற்ற வகையில் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

*திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1975–76ஆம் ஆண்டிற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த நிதிநிலை அறிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். நிதிநிலையிலே இம்மாநிலத்தின் வருமானம் ரூ. 501.4 கோடியாகவும், செலவினமானது ரூ. 537.5 கோடியாகவும் காட்டப்பட்டு, பற்றுக்குறை ரூ. 36.1 கோடியாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் வரியின் மூலமாக ரூ. 6 கோடி சமன் செய்யப்படும் என்ற ஒரு நம்பிக்கையும் காணப்படுகிறது. மேலும் உள்ள பற்றுக்குறையை மத்திய அரசு பஞ்ச நிவாரணத்திற்கும் திட்டச் செலவுகளுக்கும் கொடுத்தால், அதைச் சரிக்கட்டிக்கொள்ள முடியும் என்ற வாசகம் நம்பிக்கை உடையதாக இருக்கிறது. ஆனால் 6 கோடி வரிச்சுமையை ஏற்றியுள்ளதன் காரணத்தைக் காட்டும் வகையிலே திட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதும், மதுவிலக்கை அமுல் செய்ததில் ஏற்பட்டுள்ள இழப்பைச் சரிக்கட்டுவதும், குதிரைப் பந்தயத்தை ஒழித்ததால் ஏற்பட்ட இழப்பை ஈடுகட்டுவதும், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் ஆகியவர்களுக்குக் கொடுக்க வேண்டிய அதிகப்படியான அகவிலைப்படியைச் சரிக்கட்டவும், விவசாயிகளுக்கு விதிவிலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற இந்தக் கட்டாயப் பொறுப்புத் தொகையை நீக்குவதுமே காரணமாகக் காட்டப்பட்டிருப்பது வரவேற்கத் தக்கது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவிலே, உணவு உற்பத்திக்காக பாசனத் துறையிலே எடுத்துக்கொள்ளக்கூடிய எல்லாத் திட்டமும் வரவேற்கத் தக்க முறையில் இருக்கிறது. ஆனால், அகில இந்திய அடிப்படையிலே நீர்ப்பாசனத் திட்டமானது பல ஆண்டு காலமாக

பேசப்பட்டு வந்தும்கூட, அது செயலாற்ற முடியாத நிலையில் இருப்பதை நான் தற்போது குறிப்பிட விரும்புகிறேன். அகில இந்திய அடிப்படையிலே அனைத்து நதிகளையும் இணைத்து அதன் மூலமாக நாட்டை வளங்கொழிக்கச் செய்யவேண்டும் என்ற ஒரு திட்டம் கற்பனையாக இருக்கிறதே தவிர, செயலளவில் இல்லை என்பதைப் பார்க்கும் போது, அது மிகவும் வருந்தத் தக்கதாக இருக்கிறது. அத்தகைய ஒரு திட்டம் நிறைவேற்றப்பட்டால், நம் நாட்டினுடைய வளம் பெருகுவது மட்டுமல்ல, அதோடுகூட போக்குவரத்தும் மேம்பாடு அடையும். கடைசியாக அனைத்து மக்களுடைய நல்வாழ்வோடுகூட மேலும் பொருளாதாரத் துறையில் மேம்பாடு பெறுவதற்கும் இது நல்ல வாய்ப்பு என்று வல்லுநர்கள் தெரிவித்திருக்கிறார்கள். மூன்றாவதாக வட இந்தியாவில் உள்ள பெரும் வெள்ளப் பெருக்கினால் ஏற்படும் இழப்பினைத் தவிர்ப்பதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும். அதே நேரத்தில் தென்னாடுகளில் நல்ல வளங்கொழிக்கவும் வாய்ப்பாக இருக்கும் என்ற முறையிலே இந்தத் திட்டமானது மாநில அரசால் இன்னும் நல்ல முறையில் வலியுறுத்தப்பட வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்து, ஏராளமான கண்மாய்களும், குளங்களும் நீர் அற்று வறண்ட நிலையிலே இருக்கின்றன. இவை மழையை நம்பித்தான் இருக்கின்றன. அவற்றால் ஏற்படும் பாசன வசதி ஒரு 500 ஏக்கருக்கு உள்ளாகத்தான் இருக்கிறது. இந்தக் கண்மாய்களையும், குளங்களையும் நம்பிச் செய்கின்ற விவசாயம் ஒரு சூதாட்டம் போல்தான் இருக்கிறது. ஆகையால் மாநில அரசு, அத்தகைய சிறிய கண்மாய்களிலும் குளங்களிலும் சிறந்த முறையில் பெரிய கிணறுகளை வெட்டிக்கொடுத்தால், பயிர் சாகுபடி செய்வதற்கு மிகவும் உதவியாக இருப்பதோடு மட்டுமன்றி, தற்போது பயிர் விளையும் தருவாயில் தண்ணீர்த் தட்டுப்பாட்டின் காரணமாக பயிர் சாவியாகிப் போகும் நிலையும் தடுக்கப்படக்கூடிய வாய்ப்பும் ஏற்படும் என்பதோடு, மற்றக் காலங்களிலும் புஞ்செய்ப்பயிர் செய்வதற்கு இது மிகவும் உதவியாகவும் இருக்கும். பொதுவாக விவசாயிகளைப் பொறுத்த அளவிலே அவர்களுக்கு மின் கட்டணத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்த போதிலும், அநேக இடங்களில் குறிப்பிட்ட காலத்திலே மின்சாரம் கொடுக்கப்படாத காரணத்தினால், பொதுவாக மிகுந்த கஷ்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். பொதுவாக திட்டவட்டமான ஆணை பிறப்பித்தால்தான், அத்தகைய ஒரு அவல நிலை ஏற்படாது இருக்கும் என்ற காரணத்தினாலே விவசாயிகளின் பணி சிறப்பாக நடைபெறுவதற்காக மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில் —அரசு அதற்காகத் திட்டமான ஆணை பிறப்பித்து எந்தவிதத் தடங்கலும் ஏற்படாது பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கல்வித் துறையிலும், ஒவ்வொரு ஆண்டும், கல்வித் துறைக்கு அதிகப் பணம் செலவிடப்படுகிறது என்று கூறப்பட்டு வந்தாலும், அது வரவேற்கத் தக்க ஒரு செயல் என்பதைக் குறிப்பிட்டுக்கூற விரும்புகிறேன். கடந்த 8 ஆண்டு காலத்திலே ரூ. 48 கோடியாக இருந்தது ரூ. 118 கோடியாக உயர்ந்திருக்கிறது என்றால், இது நிச்சயமாக வரவேற்கத்தக்கதோடு, பாராட்டக்கூடியதுமாகும். " Whatever is spent on education is to be considered as an asset and not as a liability" என்ற வகையிலே





கல்விக்குச் செலவழிக்கப்படும் பணம் அனைத்துமே மூலதனமாகக் கருதப்பட வேண்டுமே தவிர, செலவினமாகக் கருதப்படக்கூடாது என்பதைத் திடமாக அறிவிக்க விரும்புகிறேன்.

மதுரை மாநகரைப் பொறுத்த அளவிலே, வைகை நதிக்கு வடபுறத்திலேதான் 4 பெண்கள் கல்லூரிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தென் பகுதியிலே எவ்விதப் பெண்கள் கல்லூரியும் இல்லாத காரணத்தினால், பள்ளிகள், கல்லூரிகள் ஆரம்பிக்கும் காலத்திலே அதிகமான இட நெருக்கடி ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ள காரணத்தினால், அந்தப் பகுதியிலும் ஒரு பெண்கள் கல்லூரி அமைக்கப்படும் என்றால், அது சிறந்த சேவையாக இருக்கும் என்று நான் மாநில அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்ள ஆசைப்படுகின்றேன். மதுரைப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த அளவிலே, ஒரு "வெட்டிரினரி" கல்லூரி மிக அவசியமாகத் தேவைப்படுகிறது. அத்தகைய கல்லூரி ஒன்று அங்கு திறக்கப்படுமென்றால், நிச்சயமாக தென் மாவட்ட மக்கள் யாவருக்கும் நல்ல வாய்ப்பாக இருக்கும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நம்முடைய மாநில அரசைப் பொறுத்த அளவிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த இந்த அகவிலைப்படி உயர்வைப்பற்றி சில கருத்துக்கள் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் என்னவென்றால், அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் எதிர்பார்த்த அளவுக்கு அது திருப்தி அளிக்கும் வகையில் இல்லை என்பதுதான். பொதுவாக மத்திய அரசிலே "அக்ராயிடு" என்ற ஒரு பேரறிஞர் நியமிக்கப்பட்டு விஞ்ஞான அடிப்படையிலே எவ்வாறு ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டுமென்று ஆராய்ச்சி நடந்த காலத்திலே, ஒரு உடல் உழைக்கக்கூடிய ஊழியர் எத்தனை மணி நேரம் வேலை செய்தால் என்னென்ன சத்துப் பொருள்களைக் கொண்ட உணவுப் பொருட்களைக் கொடுக்கவேண்டும் என்று கணக்கிட்டு, அவர் வாங்கிச் சாப்பிடவேண்டிய உணவுப் பொருட்களின் விலையை மதித்து, 314 ரூபாய் கொடுக்க வேண்டும் என்றார்கள். அப்படியானால் அந்த விலைவாசிப்புள்ளி 200 ஆக இருந்தால், அவர்களுக்குக் கொடுக்கவேண்டியது மொத்தம் ரூபாய் 314 என்ற ஒரு கணக்கு இட்டார்கள். அதன் அடிப்படையிலே ஒரு நீதிபதிக் குழு ஒன்று ஆராய்ந்து, உடல் உழைப்பு புரிபவர்களுக்கு 314 ரூபாய் என்று வைக்கப்பட வேண்டுமென்றால், மூளை உழைப்பு உடையவர்களுக்கு அதைவிட 80 சதவிகிதம் அதிகமாக அளிக்கவேண்டும் என்று கணக்கிட்டது. அந்தக் கணக்கின் அடிப்படையிலே, 200 விலைவாசிப் புள்ளியாக இருக்கும்போது, உடலுழைப்பு உள்ளவருக்கு ஒரு 1.57 என்றும், மூளை உழைப்பு உள்ளவருக்கு ரூபாய் 2.83 என்றும் ஒவ்வொரு புள்ளிக்கும் கொடுக்கவேண்டுமென்று கணக்கிடப்பட்டது. ஆனால் அந்த அடிப்படையிலே, விஞ்ஞான அடிப்படையிலே அது மாநில அரசாலும், மத்திய அரசாலும் பின்பற்றப்படவில்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டாவது ஊதிய ஆணைக்குழு மாநிலத்தில் நியமிக்கப்பட்டபோது, ஒவ்வொரு 5 ஆண்டும் ஒரு சம்பளக் குழு அமைக்கவேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. ஆனால் அந்தப் பரிந்துரையையும் நடைமுறைக்குக் கொண்டு வரவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மூன்றுவது ஊதியக் குழு மத்திய அரசினுல் நியமிக்கப்பட்டபோது, எவ்வெப்போது விலைவாசிப்புள்ளி 272-க்கு மேலாக உயர்ந்திருக்கிறதோ, அப்போது உடனடியாக ஒரு ஊதியக் குழு நியமிக்கப்பட வேண்டுமென்று கூறப்பட்டிருந்தும், மத்திய அரசும், மாநில அரசும் அதற்கு எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நிலைமையிலே இப்பொழுது அறிவிக்கப்பட்ட அகவிலைப்படி உயர்வு, சில வரம்புகளுக்கு உட்படுத்தப்பட்டு அதனுல் எந்த விதமான நன்மையும் இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கீழ்மட்டத்திலும், மேல்மட்டத்திலும், எந்தவிதமான வரம்பும் விதிக்காமல் இருந்தால், இது ஓரளவுக்கு நன்மையாக இருந்திருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். கோவை, திருச்சி ஆகிய நகரங்களைப் பொறுத்தமட்டில் அந்த நகரங்களுக்கும் நகர ஈட்டுப்படி அறிவிக்கப்பட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. ஆனுல் அனைத்து மாநிலத்தில் எல்லாப் பகுதிகளிலும், உள்ள ஊழியர்களுக்கு மிக அவசியமான இந்தத் தேவை பூர்த்தி செய்யப்படாமலிருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 6-10)

நகரங்களுக்குத்தான் வீட்டுவாடகைப்படி அளிக்கப்படுகிறது. எனவே மற்ற அனைத்து ஊழியர்களும் அல்லல்படுகிறுர்கள். மற்றவர்களுக்கு அளிக்கப்பட்டுவிட்டதனுல் அவர்கள் அதனை எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றுர்கள். காரணம் என்னவென்றுல் ஒரு சிலர் மட்டும் அந்தச் சலுகையை அனுபவித்துக்கொண்டிருக்க, மற்றவர்கள் அனுபவிக்காமலிருப்பது பெருத்த ஏமாற்றமாக இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

குடும்ப நலத் திட்டத்திலே முதலிலே அரசு அறிவித்த ரூ. 10-ஐ நம் ஊழியர்கள், ஆசிரியர்கள் டெப்பாசிட் செய்த முறையானது அனுஷ்டிக்கப்பட்டது. ஆனுல் பின்பு அரசே அந்தப் பத்து ரூபாயை டெப்பாசிட் செய்து ஊழியர்களுக்கு உதவி செய்துள்ளது. ஆனுல் இப்போதிருக்கிற நிலைமை என்னவென்றுல், ஒரே ஒரு ரூபாய் ஆசிரியர்கள், ஊழியர்கள் கொடுக்கிறுர்கள். அந்தப் பணத்தைத் திரும்பப் பெறக்கூடிய விதத்தை விதியிலே தெளிவாகக் கூறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனவே அதைப்பற்றித் திட்டவட்டமான ஒரு அறிவிப்பு தேவைப்படுகிறது. அனைவருடைய மனதிலும் ஒரு ஐயப்பாடு ஏற்பட்டிருக்கின்றது என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

முடிவாக கல்வித் துறையைப் பொறுத்த அளவிலே, ஒரே ஒரு முக்கியமான கருத்தைக் கூறி முடிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் நேற்றே கூறினுர்கள். அதாவது தேர்வு நிலை அளிப்பதுபற்றி அறிவிக்கப்பட்டிருக்கின்றது. தேர்வு நிலை 1-1-71 முதல் வழங்கப்பட்டும், குறிப்பிட்ட 3 பிரிவினர்கள் இந்தத்தேர்வு நிலையை வாங்க முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறுர்கள். முதல் நிலை உடற்பயிற்சி ஆசிரியர்கள், செயலகப் பிரிவு ஆசிரியர்கள், பொறியியல் பிரிவு ஆசிரியர்கள்—இவர்களில் பலர் இடையிலே ஓய்வு பெற்றிருக்கின்றுர்கள். சிலர் மரித்தும் இருக்கிறுர்கள். இந்த நிலையில் அவர்



களுக்கு ஓய்வு ஊதியம் வழங்கப்படவில்லை. குடும்ப ஓய்வு ஊதியம் வழங்கப்படவில்லை, கிராஜுட்டி வழங்கப்படவில்லை, அவர்களால் ஊதிய உயர்வு பெற்றுக்கொள்ள முடியவில்லை. இந்த நிலைமையில் இருப்பதனுல் இதற்கு உடனடியாக ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்காக அவைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி, முடிக்கிறேன்.

*திரு. ஆ. திராவிடமணி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1975-76-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையினை பேரவையிலும் மேலவையிலும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்றுர்கள். அந்த அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லுவதற்கு அனுமதித்த தலைவரவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சோதனையான சூழ்நிலையில், நம்முடைய முதல்வர் அவர்கள், சோதனைகள் ஏற்பட்டிருக்கின்றன், மக்களுக்குக் கஷ்டமும் கவலைகளும் ஏராளமாக இருக்கின்றன என்பதற்காக, அவர்கள் எந்தவிதத்திலும் கவலை கொண்டுவிடக்கூடாது என்ற நல்லெண்ணத்தில் மிகவும் கவனமாக இந்த அறிக்கையை இங்கே தாக்கல் செய்திருக்கின்றுர்கள்.

பருவ மழையைப் பொருத்து வறட்சி வருவதும், சரியான மழை எதிர்பாராமல் வந்து விட்டால் வறட்சி போக்கப்படுவதும் சாதாரண விஷயம் என்ற நம்பிக்கையில், மக்களுக்கு நாம் வாக்களித்திருக்கின்ற காரியங்களை மிக்க முறையாகச் செய்தாகவேண்டும் என்று உள்ளத்திலே உள்ள நல்லெண்ணங்களை முதல்வருடைய நிதிநிலை அறிக்கையில் வரிக்கு வரி பளிச்சிடுகின்றன என்று சொல்லிக்கொள்கின்றேன். ஆரம்பத்தில் மழையைத்தான் நம்பி இருக்கவேண்டும் என்ற எண்ணம் ஒரு பக்கத்திலே இருந்தாலும், அவர்களுடைய நல்லெண்ணத்திற்கு எடுத்துக்காட்டாக, இப்போது புதுக்கோட்டையிலே இருக்கின்ற அண்ணு விவசாயப் பண்ணையைப்போல, இந்த மாநிலத்திலே சேலம், தருமபுரி, முகவை, கோயம்புத்தூர் மாவட்டங்களிலும் அரசு விவசாயப் பண்ணைகளை விரிவாக அமைத்து, ஆயிரக்கணக்கான விவசாய நிபுணர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுத்து, அந்த இடங்களில் புதிய விவசாய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுவதற்கு வசதியாக விதைப் பண்ணைகள் இந்த ஆண்டு அமைக்கப்படும் என்று அறிக்கையின் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருக்கின்றுர்கள். புதுக்கோட்டை விவசாயப் பண்ணையில், ஜப்பானிய முறைச் சாகுபடியைப் போல, கால்வாய்களில் ஓடுகின்ற நேரத்திலே ஏற்படுகின்ற தண்ணீர் சேதாரத்தைத் தடுத்து, பரவலாக அந்தத்தண்ணீரைப் பயன்படுத்துகின்ற முறையிலே விவசாய நிபுணத்துவம் இருக்கின்றது. இந்தப் பண்ணைகள் மூலம் அப்படிப்பட்ட நல்லதொரு ஏற்பாட்டைச் செய்திருக்கின்றுர்கள். இந்த மாவட்டங்களிலே அமைகின்ற இந்தப் பண்ணைகள் நமக்குப் பயன்படும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

உயர்நிலைப் பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்கள் எஸ். எஸ். எல்.சி. படித்துவிட்டு எந்தவிதமான வேலைவாய்ப்புகளும் இல்லாமல் இருக்கிறுர்கள். மேற்கொண்டு கல்லூரி படிப்புக்கும் வசதி இல்லாமல் இருக்கிறுர்கள்.

பி. யூ. சி. வரையில் படித்தாலும்கூட, அதற்கு மேல் படிக்க முடியாமல் இருக்கிறார்கள். அவர்கள் தகுதிக்குத் தக்கபடி எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சில் பதிவு செய்துகொண்டு, எம்ப்ளாய்மெண்டிலே நம்பர் வராத,எதாவது வாய்ப்புக் கிடைக்காதா என்று பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களை மனதிலே வைத்துக்கொண்டு நம்முடைய முதல்வர் அவர்கள் அவர்களுடைய அறிக்கையிலே இனிமேல் பிள்ளைகள் தொழில் கலந்த படிப்பை உயர்நிலைப்பள்ளி மட்டத்திலேயே படிக்கவேண்டுமென்ற திட்டத்தினைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். உயர்நிலைப் பள்ளிகளில் விஞ்ஞான ஆய்வுக் கூடம் நாம் அமைத்ததன் மூலமாக பி. யூ. சி. படிக்கின்ற மாணவர்களுக்குச் செய்முறைக் கல்விக்கு அது ஒரு துணையாக அமைந்தது. அந்த மாதிரி எஸ். எஸ். எல். சி. முடிந்து அவர்கள் வந்தவுடனே மார்க்கைப் பற்றிக் கவலைப்படாமல், அவர்கள் தொழில் கலந்த கல்வி பெற்று வெளியே வந்தால், நாம் துவக்கி வருகின்ற சிறு சிறு தொழிற்சாலைகள் மூலம் அவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு கொடுத்துவிடும் நல்ல வாய்ப்பையும் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். எஸ். எஸ். எல். சி. முடிந்து ஐ.ஐ.டி.க்குப் போவதுபோல், எஸ். எஸ். எல். சி. படிக்கின்றபோதே, தொழிற் கல்வி படிக்கவேண்டுமென்ற எண்ணத்தில், இந்த ஆண்டு அப்படிப்பட்ட தொழிற் கல்வியும், வணிகக் கல்வியும் இணைத்து அளிக்கப்பட இருக்கின்றது. இதனால் இனிமேலாவது வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டிலே குறையும். பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர்களுக்கு 'நம்முடைய பிள்ளை எஸ். எஸ். எல். சி. படித்துவிட்டுச் சும்மா இருக்கின்றானே" என்ற ஏக்கம் குறையும். எஸ்.எஸ்.எல்.சி. படிப்பில் தொழிற் கல்வியை, வணிகக் கல்வியை இணைத்துக் கற்று, அந்தத் துறைகளில் வேலைக்குப் போவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இந்த 10 ஆண்டுகாலப் படிப்பைப் பயனுள்ள ஒரு நல்ல படிப்பாக ஆக்கித் தருவதற்காக நான் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நொடித்துப்போன தொழிற்சாலைகளைப்பற்றி இப்போது சொல்ல விரும்புகிறேன். நம்முடைய சென்னைக்குப் பக்கத்திலே வண்டலூரில் உள்ள ஸ்டாண்டர்ட் மோட்டார் ஓர்க்ஸ் தொழிலாளர்கள் 4 ஆயிரம் பேர்கள் அந்தத் தொழிற்சாலை மூடப்பட்ட காரணத்தினாலே வேலை இழந்திருந்தார்கள். மேல் நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தின்போது, நம்முடைய முதல்வர் அவர்கள் லண்டன் மாநகருக்குச் சென்றிருந்த நேரத்தில், வண்டலூரில் பொருளாதார வசதியின்மையால் மூடப்பட்டிருக்கின்ற ஸ்டாண்டர்ட் மோட்டார் ஓர்க்ஸை நினைவில் கொண்டு, அந்த ஸ்டாண்டர்ட் மோட்டார் கம்பெனியின் தலைமை அலுவலகம், லண்டன் மாநகரத்திலேதான் இருக்கிறது என்று தெரிந்துகொண்டு, அந்தக் கம்பெனியினுடைய அதிபர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அவர்கள், "அந்தக் கம்பெனியைத் திறப்பதற்கு எங்களிடத்திலே பொருளாதார வசதியில்லை, தமிழக அரசு அதற்கு உதவி செய்யுமானால், நாங்கள் அந்தக் கம்பெனியைத் திறக்கத் தயாராக இருக்கிறோம்" என்று சொன்னார்கள். உடனடியாக அந்த இடத்திலேயே "ரூ. 90 லட்சம் நாங்கள் தருகிறோம், எப்படியும் கம்பெனியை நீங்கள் திறக்க வேண்டும், 4 ஆயிரம்





தொழிலாளர்கள் இன்றைய தினம் நாதியற்று இருக்கின்றார்கள், அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்தாக வேண்டும்" என்றும் 'மின்சாரக் கட்டணத்திலேகூட சலுகைகள் கொடுக்கிறோம்' என்றும் சொல்லி, அந்த ஸ்டாண்டர்ட் மோட்டார் ஓர்க்ஸ் அதிபர்களிடத்திலே தொழிலாளர்களுக்காக நமது முதல்வர் அவர்கள் பேசினார்கள். இப்படி ஸ்தம்பித்துக் கிடக்கின்ற, நொடித்துப்போன கம்பெனிகளையெல்லாம் நம்முடைய அரசு அதன் நிர்வாகத்தின் பொறுப்பிலே கொண்டுவந்திருக்கின்றது.

(பிற்பகல் 6-20)

இவைகளை நாட்டுடைமை ஆக்கினால் இன்னும் நல்ல லாபத்தோடு நடத்தி அதிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு அதிகமான போனஸ் வழங்கலாம். மூலதனம் போடாமலேயே தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு வழங்கப்படும் என்று அந்த நாளிலே நாம் எதிர்க் கட்சியாக இருந்தபோதே சொல்லி வந்தோம். 10 ரூபாயை அதிகம் கேட்பதைவிட, 4 அணா போனஸ் அதிகம் கேட்பதைவிட, அந்தத் தொழிற்சாலையிலே பங்காளி ஆக வேண்டுமென்று தொழிலாளர் மத்தியிலே நாம் அந்த நாளிலே சொல்லுவோமே, அதை நடைமுறைப் படுத்தியது இந்தியத் துணைக் கண்டத்திலேயே நாம்தான் என்ற பெருமை நமக்குண்டு. மூலதனம் போடாமலேயே 24 சதவிகிதம் தொழிலாளர்களுக்குப் பங்குண்டு என்று அந்தத் தொழிற்சாலைகளைப் பொதுவுடைமை ஆக்கியிருக்கிறோம் நம்முடைய வரலாற்றில். அந்த முறையிலேதான் டெக்ஸ்டூல் கம்பெனியையும், "சகதி பைப்ஸ்" என்ற நிறுவனத்தையும் நாட்டுடமையாக்குவதற்கு மத்திய அரசு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். தொழிலாளர்கள்பால் நாம் கொண்ட நல்லெண்ணந்தான் அது. நம்முடைய நிதி நிலையில் 501 கோடி ரூபாய் வரவும், 537 கோடி ரூபாய் செலவும், 36 கோடி ரூபாய் துண்டு விழுகின்ற அளவிற்கு நாம் இன்றைய தினம் அறிக்கை சமர்ப்பித்திருக்கின்றோம். இது எப்படிப்பட்ட நேரம் என்பது இந்த அவைக்கும் தெரியும், நாட்டுக்கும் தெரியும். விவசாயம் சரியாக இல்லாத காரணத்தால், விவசாயிகள் தரவேண்டிய வரிகளுக்கு விலக்குத் தந்திருக்கிறோம். விலக்குகள் தந்திருக்கிறோம் என்பது மட்டுமல்ல, அந்த விவசாயிகளுக்கு உடனடியாகச் செய்ய வேண்டிய உதவிகளை வேறு செய்கிறோம். அதன் காரணமாகவும், மத்திய அரசினுடைய உதவிகள் நமக்குக் கணிசமாகக் கிடைக்கவில்லை என்ற காரணத்தினாலும், பல்வேறு தொல்லைகளினாலும் நமக்கு வருமானம் சரியாக இல்லை. மதுவிலக்கை மீண்டும் அமலுக்குக் கொண்டு வந்தால், நாங்கள் அதற்குப் பங்குத் தொகை தருவோம் என்று டாக்டர் சுசீலா நய்யார் அவர்கள் மத்திய சர்க்காரிலே முன்பு சொன்னார்கள். ஆனால் நாணயத்தை அவர்கள் காப்பாற்றவில்லை. என்றாலும் மக்கள் கோரிக்கைக்குச் செவிமடுத்து 40 கோடி ரூபாய் நட்டமானாலும் பரவாயில்லையென்று நாம் தியாக மனப்பான்மையில் மக்களுடைய

வேண்டுகோளை மதித்து அந்த மது விலக்கை மீண்டும் நாம் அமுல் படுத்தியிருக்கிறோம். தொடர்ந்து நமக்கு வந்த நஷ்டங்கள் ஏராள மானவை என்றாலும், மக்களுக்குச் சொல்லிய காரியங்களைச் செய்தேயாக வேண்டுமென்ற நல்லெண்ணத்திலே தான் இப்படிப் பட்ட சில நல்ல காரியங்களை நாம் செய்கிறோம். இவைகளைச் சரிக் கட்டுவதற்காக சில வரியினங்களைக் குறைந்த அளவுக்குப் போட்டுத் தீர வேண்டிய அவசியம் நமது அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. அண்ணா அவர்கள், "தாங்குகின்ற சக்தி படைத்தவர்களுக்குத்தான் வரி போடு வோம்" என்று சொல்லுவார்கள். இதை நமது தேர்தல் அறிக்கையிலும் சொல்லியிருக்கிறோம். நம்முடைய லட்சியமும் அது தான். வரிகளைப் போடும்பொழுது மிகக் கவனமாகத்தான் போட்டி ருக்கிறார்கள். ஏற்கெனவே வர்த்தகர்களுக்கு நாம் பல சலுகைகள் அளித்து வந்திருக்கிறோம். சிறிய வியாபாரிகள் கணக்கெடுத்தால், ஒரு நாளைக்கு 20 ரூபாய்க்கு வியாபாரம் நடக்கின்ற ஒரு கடையில் ஒரு மாதத்திற்கு 600 ரூபாய் என்ற கணக்கிலே விற்று முதல் வருகிறது. ஒரு ஆண்டுக்கு 7,200 ரூபாய் என்று வருகிறது. 7,200 ரூபாய்க்கு வியாபாரம் நடந்தாலே அவர்கள் 6 ரூபாய் 25 காசுக்கு "ரிஜிஸ்டர் பீஸ்" கட்டி தன்னை ஒரு வியாபாரி என்று பதிந்துக் கொள்ள வேண்டுமென்பது காங்கிரஸ் ஆட்சியிலே சட்டம். நம்முடைய அரசு பொறுப்புக்கு வந்த பிறகு சிறிய, வியாபாரிகள் நலன் கருதி நாம் அதை 10 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்திக் கொடுத்தோம். அதற்குப் பிறகு பேரறிஞர் அண்ணா அவர்கள் அதை 25 ஆயிரம் என்று விரிவுபடுத்திக் கொடுத்தார்கள். நம்முடைய கலைஞர் அவர்கள், இப்பொழுது சிறிய வியாபாரிகள் மீது பாசம் கொண்டு அதை 50 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறார்கள். வியாபாரிகளுக்கு பலவிதமாக இருந்த தொல்லைகளை எல்லாம் நீக்கிவிட வேண்டுமென்று திட்டமிட்டு, பலமுனையில் இருந்த விற்பனை வரியை ஒருமைப்படுத்தி, ஒருமுனை விற்பனை வரியாக ஆக்கியிருக்கிறோம். 59 பொருட்கள் என்று வரையறுக்கப்பட்டு, பிண்ணாக்கு, எண்ணெய் போன்ற 59 பொருள்களை வரிசைப் படுத்தி, அவைகளுக்கெல்லாம் நாம் இப்பொழுது ஒருமுனை விற்பனை வரியாக ஆக்கியிருக்கிறோம். வியாபாரிகள் முதன் முதலாகக் கொள் முதல் செய்கின்ற இடம், அதற்குப் பிறகு விற்கின்ற இடம், அதற்குப் பிறகு சிறிய வியாபாரிகள் கொள்முதல் செய்கின்ற இடம் இப்படிப் பல முனைகளிலே இருந்த வரிகளையெல்லாம் ஒரு முனையாக ஆக்கி குறைந்த அளவுக்கு வரி போட்டிருக்கிறோம். அந்த வரிகள் ஏழை எளிய பாட்டாளி மக்களைப் பாதிக்கின்ற வரியல்ல. மிகக் கவனமாகப் போட்டிருக்கிறோம். ஆடம்பரமான பொருட்களுக்கு வரி போட்டிருக்கிறோம். மின்சார சாதனங்களுக்கு வரி போட்டிருக் கிறோம். மின்சார உலர்த்தும் சாதனங்களுக்கு வரி போட்டிருக் கிறோம். இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில், நாம் வறட்சிக்காக நம்முடைய கையிலிருந்து செலவழித்துக் கொண்டிருக்கும் சூழ் நிலையில், விவசாயிகளுடைய வருமானம் சரியில்லாத நிலையில், இந்த வரி போட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டதே தவிர நாம் வரி போட்டுத்தான் ஆக வேண்டுமென்ற எண்ணத்திலே போடப் பட்ட வரியல்ல. நம்முடைய அரசு, யாரும் குறை சொல்ல





முடியாத அளவுக்கு இதை ஒரு பிரச்சினையாக, கட்சிப் பிரச்சினை யாகவோ, மேடைப் பிரச்சினையாகவோ ஆகிவிட முடியாத அளவுக்கு மிகக் கவனமாக இந்த வரிகளையெல்லாம் போட்டிருக்கிறது. உர வகைகள் என்று உணர்ந்தே நாம் உயர்த்தவில்லை. ஆனால் மத்திய சர்க்கார் விவசாயிகளை பாதிக்கக்கூடிய அளவுக்கு பம்ப் செட்டுகளுக்கு வரி போட்ட காரணத்தினால்தான் இன்றைக்கு பம்ப்செட்டுகளுடைய விலை உயர்ந்தது. உரத்தின்மீது அதிகமான விலை மத்திய சர்க்கார் போட்ட காரணத்தினாலேதான் உரத்தின் விலை உயர்ந்தது. நாம் உரத்தின் அவசியத்தை மிக உணர்ந் திருக்கிறோம். உர வகைகளுக்கு, பூச்சிக்கொல்லி மருந்துக்கு வரி உயர்வு இல்லையென்று நாம் வரையறுத்துச் சொல்லியிருப்பதன் மூலமாக விவசாயிகள் மீது நாம் எந்த அளவுக்குப் பாசத்தோடு இருக்கிறோம் என்பது தெரிகிறது. மின்சாரப் பொருட்கள் இயந்திரப் பொருட்கள், கருவிகள் ஆகியவைகளுக்கு 9 சதவிகிதம் என்று இருந்தது 12 சதவிகிதம், வாசனைத் திரவியங்களுக்கு 9 சதவிகிதம் என்று இருந்தது 12 சதவிகிதம், மின் விளக்கு, மின் விசிறி போன்றவைகளுக்கு 9 சதவிகிதம்தான் என்று மிகக் கவனமாக, நிதானமாக வரியைப் போட்டிருக்கிறோம். யாரையும் பாதிக்காத அளவுக்குப் போட்டிருக்கிறோம்.

நம்முடைய முதல்வர் அறிக்கை என்றால், அதில் ஏதாவது இனிக்கும் செய்தி இருக்கும், ஒவ்வொரு ஆண்டும். இந்த ஆண்டு அவர்கள் தந்திருக்கிற செய்தியில் ஆதரவற்ற அனாதைச் சிறுவர்கள், ஆதரவற்ற கைம்பெண்கள் ஆகியோர்க்கு உதவும் நல்லெண் ணத்தை இதயமுள்ள யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு சிறப்பு உண்டு. இந்த ஆண்டிலே திக்கற்ற குழந்தைகள், ஆதரவற்ற கைம்பெண்கள் ஆகியோருக்கு உதவுவது என்று அவர்கள் சொல்வதன் மூலமாக அந்தக் கைம்பெண்கள், திக்கற்ற குழந்தைகளுக்கெல்லாம் நம்முடைய தமிழகத்திலே ஒரு வாழ்வு இனிமேல் கிடைக்கப் போகிறது.

(பிற்பகல் 6-30).

சமுதாயத்திலே ஒதுக்கி வைக்கப்பட்டவர்களுக்கும், சமுதாயத்திலே புறக்கணிக்கப்பட்டவர்களுக்கும், அரசு உதவுகிறது. அப்பா, அம்மா இல்லாதவன், அனாதைப் பயல் என்றெல்லாம் சொல்லக்கூடிய கேவலமான சூழ்நிலை மாற்றியமைக்கப்படுகிறது. சமுதாயத்திலே அவர்கள் குறைத்து மதிப்பிடப்பட்டாலும், நல்லவர்கள் ஆளக் கூடிய தமிழக அரசு, "நீ செல்லப் பிள்ளை, அந்தச் செல்லப் பிள்ளைக்கு ஒரு வாழ்வு உண்டு, வாழ முடியாதவர்களை இந்த அரசு வாழ வைக்கும்", என்று சொல்கிறது. திக்கற்ற அனாதைச் சிறுவர்களுக்கும், ஆதரவற்ற கைம்பெண்களுக்கும் உதவி, வாழ முடியாதவர்களை வாழ வைக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் நமது அரசுக்கு இருக்கிறது என்பது இந்த அறிக்கையிலே தெரிகிறது.

அடுத்தபடியாக, சாதாரண நடுத்தர மக்களுக்கு வீட்டு வசதித் திட்டம் அமைத்துக் கொடுப்பதைப் போல், குடிசையிலே வசிக்கும் ஏழைகளுக்கு குடிசை மாற்று வாரியமும், தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் புதிதாக வீட்டு வசதி செய்து கொடுக்க தாழ்த்தப்பட்டோர் வீட்டு வசதிக் கழகமும் அமைப்பதைப்போல் வேறு எதுவும் இருக்க முடியாது. கடலை வாழ்க்கையிலே விளையாட்டுத் திடலாகக்கொண்டு கடலை நம்பி வாழ்கின்ற மனிதன் கடலோரத்திலே குடிசைகள் அமைத்து, அலைகள் வேகமாக வரும்பொழுது, அந்தக் குடிசைகள் மீது அலைகள் மோதி வீட்டிலேயிருக்கும் பாத்திரம் பண்டங்கள் எல்லாவற்றையும் இழந்து, அந்தக் குடிசையையும் இழந்து, அன்றைய சமையலுக்கு வைத்திருக்கும் அரிசியைப் பறி கொடுத்து, தொட்டிலிலே இருக்கும் குழந்தையைப் பறி கொடுத்து கரையோரத்திலே பரிதாபமாக நிற்கும் காட்சிகளை நாம் பார்த்திருக்கிறோம். அப்படிப்பட்ட மீனவர்களிடத்திலே வாக்குகளைச் சேர்க்கத்தான் சிலர் செல்லுவார்கள். ஆனால் அவர்களின் நிலைமையைப் பார்த்து இப்பொழுது அரிப்பு எடுக்காத வீடுகள் கட்டிக் கொடுக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். கடல் அலைகளால் அரிப்பு எடுக்காத வீடுகள் கட்டித்தரத் திட்டமிட்டிருக்கிறார்கள். பூம்புகாரிலே கட்டப்பட்ட வீடுகளைப்போல் கட்டிக் கொடுக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். சூறாவளிக்கும், சுறா மீன்களுக்கும் மத்தியிலே மூச்சை அடக்கி முத்து எடுத்தும், ஆழ் கடலிலே சென்று மீன் பிடித்தும் வரும் அந்தக் குடிமகனுக்கும் வீட்டு வசதி உண்டு என்று அறிவித்திருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்களின் கஷ்டங்களை உடுமலை நாராயண கவி பாடல் எழுதி, நம்முடைய நாகூரார் அவர்கள் பாடி, அன்றைக்கு அண்ணாவும் நமது தலைவர்களும் கைத்தறித் துணியைத் தோளிலே சுமந்து விற்ற காட்சிகள் என்னுடைய நினைவுக்கு வருகின்றன. அந்த நெசவாளர்கள் எங்களுக்கென்று ஒரு எதிர்காலம் இல்லையா, எங்களுக்கென்று ஒரு பாதுகாப்பு கிடைக்காதா என்றார்கள். நெல்லிக்காய் போல் சிதறிக் கிடக்கின்ற பீடித் தொழிலாளர்களைக்கூட ஒன்று சேர்த்து நமது தொழிலாளர் நல அமைச்சர் மாண்புமிகு திரு. இராசாராம் அவர்கள் 1.75 ரூபாயாக இருந்த கூலியை ரூ. 3.50 என்று வரையறுத்தார்கள். அது திருச்சியிலேயிருந்து வரும் ஆட்பியன் பீடியாக இருந்தாலும் அல்லது திருநெல்வேலியிலேயிருந்து வரும் பீடியாக இருந்தாலும், மாநிலம் பூராவும் இருக்கும் பீடித் தொழிலாளர்களை ஒன்றாகத் திரட்டி அந்தத் தொழிலாளர்களுக்கு ஒரு கூலி நிர்ணயித்தார்கள். அப்பொழுது எங்களுக்கும் ஒரு எதிர்காலம் இல்லையா என்று கேட்ட நெசவாளிகளுக்கு பிரதிநிதிகள் நாம்தான் என்பதை உணர்த்துகின்ற முறையில் அவர்களுக்கென்று ஒரு திட்டம் அறிவித்திருக்கிறோம். அவர்களது ஒரு ரூபாய் வருவாயில் 6 பைசா வருகிறது என்றால் அரசு 3 பைசா போடுகிறது. அவர்களுக்கென்று 4 ஆயிரம் ரூபாய் கிடைக்கின்ற வகையிலே, அந்த நெசவாளர் குடும்பப் பிள்ளைகள் "என் அப்பன் இறந்து எங்களைத் தவிக்க விட்டு விட்டார்" என்று சொல்லும் நிலைமையைத் தவிர்க்க இந்த அரசாங்கம் நெசவாளர்களுக்கும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் என்ற ஒன்றை அறிவித்திருப்பதை நான் மனமாரப்பாராட்டுகிறேன். நான் இறுதியாக ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.



மாநில சுயாட்சிபற்றி நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். இது அண்ணா அவர்கள் ஏற்கெனவே சொல்லிய ஒன்றுதான். நாம் கேட்பது மாநிலங்களுக்கு அதிகாரம் இந்தியாவிலுள்ள அத்தனை மாநிலங்களுக்கும் அதிகாரங்கள் என்று மிகத் தெளிவான வார்த்தைகளில், அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இது பிரிவினை கோஷமில்லை என்று மிகத் தெளிவாக அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 1962-ல் வேலூர் கோட்டை மைதானத்திலே பேசும் பொழுது, "திராவிட நாடு பிரிவினை இல்லை; சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுத முடியும்" என்று வேலூர் கோட்டை மைதானத்திலே சீறு படை எடுத்தபொழுது சொல்லியிருக்கிறார்கள். அந்தச் சமயத்திலே இந்த நாடு ஒன்று, வீட்டிற்கு ஒரு வீரர் தேவை என்று சொன்னார்கள். பிரிவினை என்பதில்லை. மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும், நம்முடைய மாநிலத்திலே விளைகின்ற நெல்லுக்கு விலை நிர்ணயிக்கும் அதிகாரம் நமக்கு இருக்க வேண்டும், நமது தமிழர்கள் ஸ்ரீலங்காவுக்குப் போய்ச் சீரழிகிறார்கள். அந்தச் ஸ்ரீலங்காவை சிங்காரச் சோலையாக மாற்றிய தமிழன் அங்கே சிதைபடுகிறான், கஷ்டப்படுகிறான், கண்ணீர் வடிக்கிறான், "கள்ளத் தோணி" என்ற கேவலமான பட்டத்தோடு இருக்கிறான் என்றார். , அப்படிப்பட்ட தமிழர்களுக்காகப் பேசுவதற்கு இந்தியா சார்பாக அனுப்பப்படுகின்ற தூதுவர் தமிழராக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை நமது முதல்வர் அவர்கள் எடுத்து பிரதமரிடத்திலே சொல்ல வேண்டும் என்று கேட்டு, எனக்குப் பேச வாய்ப்பு இந்த அவையிலே கிடைத்ததற்காக நன்றி கூறி, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை பிற்பகல் 4-00 மணிக்குக் கூடும்

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 6–38)

4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

**Nil.**

B. *Reports, Notifications and Other Papers.*

& 44 Detailed Agriculture Budget for the year 1975-76 (English).

&45 Detailed Roads and Bridges Budget for the year 1975-76. (English).

& 46 Detailed Irrigation Budget for the year 1975-76 (English).

& 47 Detailed Industries Budget for the year 1975-76. (English).

&48 Annual Financial Statement (Budget) of the Government of Tamil Nadu—Summary of the Financial Position 1973-74 (Accounts) (English and Tamil).

---

& Laid on the table of the House on 4th March 1975.



## இணைப்பு.

[1-ஆம் பக்கத்தில் 101 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க]

நிதித் (திட்ட) துறையில் 25—5—1971-ஆம் நாளிட்ட 773-774-ஆம் எண் அரசு ஆணைகளில், தமிழ்நாடு திட்ட ஆணைக்குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் அமைப்பு விவரம் வருமாறு :—

| | |
|---|---|
| தலைவர் .. .. .. .. | முதலமைச்சர். |
| துணைத்தலைவர் .. .. .. | ஒருவர். |
| உறுப்பினர்கள் .. .. .. | ஐவர் (முழுநேர உறுப்பினர் ஒருவர், பகுதி நேர உறுப்பினர் கள் நால்வர்.) |
| செயலாளர் .. .. .. | ஒருவர். |
| துணைச் செயலாளர் .. .. .. | ஒருவர். |

மாநிலத்திலுள்ள தொழில் நுட்பப் பணியாளர்கள், கிடைக்கக் கூடிய மூலப்பொருள், மூலதனம் ஆட்படை ஊற்றம் ஆகியவற்றை மதிப்பிட்டு, இந்த வாயில்கள் மாநிலத்தின் தேவைகளுக்குப் போதுமானவையாக இல்லாததால் இவற்றைப் பெருக்குவதற்கான வாய்ப்புகள் பற்றி ஆய்வு செய்யவும் மாநில ஆதாரங்களைச் சிறந்த முறையில் சரி சமமாகவும் பயன்படுத்திக் கொள்வதற்காக 1972 முதல் 1984 வரை 12 ஆண்டுகளுக்கு நீண்டகாலத் திட்டம் ஒன்றை வகுக்கவும் மாநில திட்ட ஆணைக்குழு அமைக்கப்பட்டது.

திட்டத்தை வகுப்பதில் ஆணைக்குழுவிற்கு உதவி செய்யும் பொருட்டு மாநில அரசு, மத்திய அரசைச் சேர்ந்த அதிகாரிகளும் பிறரும் அடங்கிய ஆலோசனைக் குழுக்களை மாநிலத் திட்ட ஆணைக்குழு அமைத்துள்ளது.

கீழ்க்காணும் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன :

1 புள்ளிவிவர சேகரிப்பும், மாவட்டத் திட்டமும்.

2 துறைவாரியான திட்ட அமைப்புகளும், நீண்டகால திட்டமிடுதலும்.

3 நூலகமும், ஆவண நிலையமும்.

4 நிர்வாகப் பிரிவு.

துறைவாரியான திட்ட அமைப்புகளைக் கவனிக்க 15 பணிக்குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன. புள்ளிவிவரங்களைச் சேகரிக்கவும் மாவட்ட திட்ட அமைப்பைக் கவனிக்கவும் வேண்டி, மாவட்டங்களில் மாவட்டத் திட்ட அமைப்பு குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

மாநிலத் திட்ட ஆணைக்குழுவில் 31—12—1973 வரை நியமிக்கப் பட்டுள்ள பணியாளர் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன—

## இணைப்பு 1.

| பதவியின் பெயர். (1) | சம்பள வீதம். (2) |
|---|---|
| 1 துணைத் தலைவர் (ஒரு பதவி) .. | வருவாய்த்துறை வாரியத்தில் முதல் உறுப்பினரது தரத்தில். |
| 2 முழுநேர உறுப்பினர் (ஒரு பதவி) | ரூ. 2,250—125—2,500. |
| 3 பகுதி நேர உறுப்பினர்கள் (நான்கு பதவிகள்) | சம்பள வீதம் எதுவுமில்லை. ஆனால் மாநிலத்திட்ட ஆணைக்குழு அலுவகத்தில் பணிபுரியும் நாள் ஒன்றுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 50 வழங்கப்படுகிறது. |
| 4 செயலாளர் (ஒரு பதவி) .. .. | அரசு இணைச்செயலாளர் பதவித் தரத்திற்குரிய சம்பளம் சிறப்புச் சம்பளம் ரூ. 300. |
| 5 துணைச் செயலாளர் (ஒரு பதவி) | அரசுத் துணைச் செயலாளர் பதவித் தரத்தில் முதுநிலை, ஐ.ஏ.எஸ். அதிகாரியின் சம்பள வீதம் சிறப்புச் சம்பளம் ரூ. 250 (திங்கள் ஒன்றுக்கு)· |
| 6 பணிக் குழுச் செயலாளர்கள் (15 பதவிகள்.) | |
| சுகாதாரம் ஊட்டச் சத்து குறித்த பணிக்குழுச் செயலாளர், கால் நடை வளர்ப்பு குறித்த பணிக் குழுச் செயலாளர், போக்குவரத்து குறித்த பணிக்குழுச் செயலாளர். | இப்பதவிகளுக்கு முறையே சுகாதாரப் பணிகள்—குடும்ப நலத் திட்டத்துறை இயக்குநர் (ஓய்வு பெற்றவர்), கால்நடை வளர்ப்புத துணை இயக்குநர் (ஓய்வு பெற்றவர்) அரசு இணைச் செயலாளர் ஓய்வு பெற்றவர்) ஆகியோர் நியமிக்கப் பட்டுள்ளனர். இவர்கள் கடைசியாக பெற்ற சம்பளத்தில் ஓய்வூதியத்தை கழித்துக்கொண்டு எஞ்சியசம்பளம் பெற அனுமதிக்கப்படுவர். |





| பதவியின் பெயர். (1) | சம்பள வீதம். (2) |
|---|---|
| கல்வி, அறிவியல், தொழில் நுட்ப இயல் குறித்த பணிக்குழுச் செயலாளர் (ஒரு பதவி). | ஊர் வளர்ச்சி இணை இயக்குநர் பதவித்தரத்தில் ரூ. 1,300—50 1,600 சம்பளமும் சிறப்புச் சம்பளம் ரூ. 100-ம். |
| வன இயல் குறித்த பணிக்குழுச் செயலாளர் (ஒரு பதவி). | வனத் துறை உதவித் தலைவர் பதவித் தரத்தில் ரூ. 700—40—1,100—50—1,200, சம்பளம். |
| வேளாண்மைக் குறித்த பணிக் குழுச் செயலாளர் (ஒரு பதவி). | வேளாண்மைத் துறை துணை இயக்குநர் பதவித் தரத்தில் ரூ. 800—40—1000—50—1,250 சம்பளம். |
| செயலாளர், மீன்வளம் குறித்த பணிக்குழு (ஒரு பதவி). | மீன்வளத் துறைத் துணை இயக்குநர் பதவித் தரத்தில் ரூ. 800—40—1000—50—1,250 சம்பளம். |
| செயலாளர், எரிபொருள்—மின்சக்தி குறித்த பணிக்குழு (ஒரு பதவி). | மேற்பார்வைப் பொறியாளர் பதவித் தரத்தில் ரூ. 1,300—50—1,600 சம்பளம். |
| செயலாளர், கனிவளம் குறித்த பணிக்குழு (ஒரு பதவி). | புவியியல் பேராசிரியர் பதவித் தரத்தில் ரூ. 1,000—50—1,400 சம்பளம். |
| செயலாளர், ஆட்படை ஊற்றம், பொருளாதார வளர்ச்சிக்கான சமூக மாற்றங்கள் குறித்த பணிக்குழு (ஒரு பதவி). | மாவட்ட வேலை வாய்ப்பு அதிகாரிப் பதவித் தரத்தில் ரூ. 525—25—600—30—690—35—900 சம்பளம். |
| செயலாளர், சிறு தொழில்கள் குறித்த பணிக்குழு (ஒரு பதவி). | தொழில் — வணிகத் துறை இயக்குநர் பதவித் தரத்தில் ரூ. 800—40—1,000—50—1,250 சம்பளம். |
| செயலாளர் ஊர்வளர்ச்சிக் குறித்த பணிக்குழு (ஒரு பதவி). | ஊர் வளர்ச்சி இணை இயக்குநர் பதவித் தரத்தில் ரூ. 1,000—50—1,400 சம்பளம். |

| பதவியின் பெயர். (1) | சம்பள வீதம். (2) |
|---|---|
| செயலாளர், நகர்ப்புற வளர்ச்சி—சுற்றுலா குறித்த பணிக் குழு. (ஒரு பதவி). | நகரமைப்புத் திட்ட இணை இயக்குநர் பதவித் தரத்தில் சம்பளம் ரூ. 1,250—50—1,600. |
| செயலாளர், நிதி வாயில்கள் திரட்டுதல் குறித்த பணிக்குழு. (ஒரு பதவி). | புள்ளி விவரத்துறை உதவி இயக்குநர் பதவித் தரத்தில் சம்பளம் ரூ. 575—25—600—40—1,000. |
| செயலாளர், பெருந்தொழில்கள் குறித்த பணிக்குழு. (ஒரு பதவி). | மாதத்திற்கு மொத்தச் சம்பளமாக ரூ. 1,000. |
| 7 இயக்குநர் (துறை வாரியான திட்டங்களும்—நீண்டகாலத் திட்டமும்) (ஒரு பதவியும்). | ரூ. 900—50—1,300. |
| 8 முதுநிலை திட்ட அதிகாரிகள். (மூன்று பதவிகள்). | ரூ. 600—40—1,000. |
| 9 திட்ட அதிகாரிகள் (ஆறு பதவிகள்) | ரூ 525—25—600—30—690—35—900. |
| 10 துணைத் தலைவர், உறுப்பினர்கள் ஆகியோரின் நேர்முக உதவியாளர் (அரசிதழ் பதவி பெற்றவர்கள்). (ஐந்து பதவிகள்). | ரூ. 475—25—650—30—900. |
| 11 கண்காணிப்பாளர்கள் (3 பதவிகள்) | ரூ. 425—25—500—30—650—40—850. |
| 12 பட்டதாரி நூலகர் (ஒரு பதவி) .. | ரூ. 400—15—475—20—575—25—650. |
| 13 தொழில் நுட்ப உதவியாளர்கள். (6 பதவிகள்). | ரூ. 350—15—500—20—600. |
| 14 புள்ளிவிவர உதவியாளர். (ஒரு பதவி). | ரூ. 350—15—500—20—600. |
| 15 நிலப்படி வரைவாளர் (முதுநிலை) (ஒரு பதவி.) | ரூ. 300—10—350—15—500 |



| பதவியின் பெயர். (1) | சம்பள வீதம். (2) |
|---|---|
| 16 நிலப்பட வரைவாளர் (இளநிலை) (ஒரு பதவி.) | ரூ. 200—5—250—10—300 |
| 17 உதவியாளர்கள் (6 பதவிகள்) | ரூ 300—15—420—20—500 |
| 18 நூலக உதவியாளர். (ஒரு பதவி) | ரூ 300—15—420—20—500 |
| 19 அந்தரங்க சுருக்கெழுத்தர் (7 பதவிகள்). | ரூ 300—15—420—20—500 சம்பளம். சிறப்பு சம்பளம் ரூ. 60. |
| 20 காசாளர் (ஒரு பதவி) .. .. | ரூ. 250—10—400 |
| 21 சுருக்கெழுத்து தட்டச்சர் (17 பதவிகள்). | ரூ. 210—5—245—10—325 சம்பளமும் அவர்களுடைய தகுதியைப் பொறுத்துச் சிறப்புச் சம்பளமும். |
| 22 இளநிலை உதவியாளர் (3 பதவிகள்). | ரூ. 210—5—245—10—325 |
| 23 தட்டச்சர்கள் (6 பதவிகள்) | ரூ. 210—5—245—10—325 சம்பளமும் தட்டச்சுத் தகுதிக்கான சிறப்புச் சம்பளமும். |
| 24 பதிவேட்டு எழுத்தர் (ஒரு பதவி) | ரூ. 140—3—155—4—175—210 |
| 25 வலவர் (ஒரு பதவி) .. .. | ரூ 150—5—170—5—225 சம்பளம் சிறப்புச் சம்பளம் ரூ. 15ம். |
| 26 டபேதார் (ஒரு பதவி) .. | ரூ 130—3—160—4—180—5—195 ரூ. 10 சிறப்புச் சம்பளம். |
| 27 கடைநிலை ஊழியர்கள் (60 பதவிகள்) | ரூ. 130—3—160—4—180—5—195. |

மாவட்டத் திட்டக் குழுக்கள் :—

| | |
|---|---|
| 28 மாவட்டத் திட்ட அதிகாரி (13 பதவிகள்). | ரூ. 575—25—600—40—1,000 திங்களொன்றுக்கு ரூ. 100 சிறப்புச் சம்பளம். |

| பதவியின் பெயர். (1) | சம்பள வீதம். (2) |
|---|---|
| 29 உதவியாளர்கள் (13 பதவிகள்) | ரூ. 250—10—300—15—450. |
| 30 சுருக்கெழுத்துத் தட்டச்சர் (13 பதவிகள்). | ரூ. 210—5—245—10—325 சிறப்புச் சம்பளம். |
| 31 கடைநிலை ஊழியர்கள் (13 பதவிகள்). | ரூ. 130—3—160—4—180—5—195. |
| 32 தனி அதிகாரி (மாவட்டத் திட்டமிடல்) (ஒரு பதவி.) | ரூ. 575—25—600—40—1,000 |
| 33 கண்காணிப்பாளர் (ஒரு பதவி) | ரூ. 425—25—500—30—650—40—850. |
| 34 உதவியாளர்கள் (2 பதவிகள்) | ரூ. 300—15—420—20—500. |
| 35 இளநிலை உதவியாளர் (ஒரு பதவி) | ரூ. 210—5—245—10—325. |
| 36 சுருக்கெழுத்துத்தட்டச்சர் (ஒருபதவி) | ரூ. 210—5—245—10—325 சிறப்புச் சம்பளம். |
| 37 கடைநிலை ஊழியர்கள் (2 பதவிகள்) | ரூ. 130—3—160—4—180—5—195. |
| 38 அட்டவணைப் படுத்துபவர் (ஒரு பதவி) | ரூ. 250—10—400. |

[நிதித் (மாநிலத் திட்ட ஆணைக்குழு) துறையில் 11—8—1973 நாளிட்ட 994 ஆம் எண் அரசாணையைக் காண்க.]





## இணைப்பு 2.

**1—1—1974 முதற்கொண்டு 30—4—1974 வரை தொடர்ந்து வைத்துக் கொள்ளப்பட்ட பணியாளர்கள் :—**

| பதவிப் பெயர். | பதவிகளின் எண்ணிக்கை. | சம்பள வீதங்கள் இணைப்பு 1-ல் குறிப்பிட்டுள்ளவாறு. |
|---|---|---|
| 1 துணைத் தலைவர் .. .. .. .. | 1 | .. |
| 2 முழுநேர உறுப்பினர் .. .. .. | 1 | .. |
| 3 பகுதிநேர உறுப்பினர்கள் .. .. | 4 | .. |
| 4 செயலாளர், மாநிலத் திட்ட ஆணைக்குழு | 1 | .. |
| 5 (1) செயலாளர், கல்வி, அறிவியல், தொழில் நுட்ப இயல் பணிக்குழு. | 1 | .. |
| (2) செயலாளர், நிதி வாயில்கள் குறித்த பணிக்குழு. | 1 | .. |
| (3) செயலாளர், ஆட்படை ஊற்றம், சமூக மாற்றங்கள் குறித்த பணிக்குழு. | 1 | .. |
| 6 திட்ட அதிகாரிகள் .. .. .. | 5 | .. |
| 7 உறுப்பினர்களின் நேர்முக உதவியாளர்கள் (அரசிதழ் பதிவு பெற்றவர்கள்). | 4 | .. |
| 8 பிரிவு அதிகாரிகள் .. .. .. | 3 | .. |
| 9 பட்டதாரி நூலகர் .. .. .. | 1 | .. |
| 10 தொழில்நுட்ப உதவியாளர்கள் .. | 5 | .. |
| 11 புள்ளிவிவர உதவியாளர் .. .. | 1 | .. |
| 12 உதவியாளர்கள் .. .. .. .. | 6 | .. |
| 13 நிலப்பட வரையாளர் (முதுநிலை) .. | 1 | .. |
| 14 அந்தரங்க சுருக்கெழுத்தர் .. .. | 7 | .. |
| 15 காசாளர் .. .. .. .. | 1 | .. |

| | | |
|---|---|---|
| 16 சுருக்கெழுத்து-தட்டச்சர் | 3 | |
| 17 இளநிலை உதவியாளர்கள் | 4 | |
| 18 தமிழ்த் தட்டச்சர் இருவர் உட்பட தட்டச்சர்கள். | 5 | |
| 19 பதிவேட்டு எழுத்தர்கள் | 2 | |
| 20 தவலவர் | 1 | |
| 21 கடைநிலை ஊழியர்கள் | 28 | |

மாவட்டங்களிலுள்ள மாவட்டத் திட்டக் குழுக்கள் :—

| | |
|---|---|
| 1 மாவட்ட அதிகாரிகள் | 13 |
| 2 உதவியாளர்கள் | 13 |
| 3 சுருக்கெழுத்து தட்டச்சர் | 13 |
| 4 கடைநிலை ஊழியர்கள் | 13 |

மொழிபெயர்ப்புக் குழு:—

| | |
|---|---|
| 1 உதவிப் பேராசிரியர் | 1 (ரூ. 475—25—650—30—800 + திங்களொன்றுக்கு ரூ. 50 சிறப்புச் சம்பளம்). |
| 2 மொழிபெயர்ப்பு உதவியாளர்கள் | 3 (ரூ. 300—15—420—20—500 + திங்களொன்றுக்கு ரூ. 30 சிறப்புச் சம்பளம். |





[நிதித் (மாநிலத் திட்ட ஆணைக்குழு) துறையின் 27—12—1973 நாளிட்ட 1627ஆம் எண் அரசாணையையும் அதே துறையின் 2—4—1974 நாளிட்ட 467ஆம் எண் அரசாணையையும் காண்க].

அரசு, மாநிலத் திட்ட ஆணைக்குழுவை நிலையானதோர் அமைப்பாக மாற்றியமைத்துள்ளது; இவ்வாணைக்குழு, தலைவர், துணைத் தலைவர், ஐந்து உறுப்பினர்கள் (முழு நேர உறுப்பினர் ஒருவர், பகுதி நேர உறுப்பினர் நால்வர்) ஒரு செயலாளர் ஆகியோரைக் கொண்டிருக்கும். திரு. கே. ஏ. மதியழகன், எம். எல். ஏ. அவர்கள் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். டாக்டர் டி. பிரைட்சிங் அவர்கள் முழு நேர உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். சென்னைப் பல்கலைக் கழகப் பொருளாதாரப் பேராசிரியர், டாக்டர் வி. சண்முகசுந்தரம் அவர்கள் மாநிலத் திட்ட ஆணைக்குழுவின் பகுதி நேர உறுப்பினராகத் தொடர்ந்து பணியாற்றி வருகிறார். நிதித் துறை, ஊர்வளர்ச்சி-உள்ளாட்சித் துறை, வேளாண்மைத் துறை அரசுச் செயலாளர்கள் திட்ட ஆணைக்குழுவின் பகுதி நேர உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். மாநிலத் திட்ட ஆணைக்குழு பணியாளர் அமைப்பு முறை குறித்து முடிவெடுக்கும் வரை, கீழ்க்கண்ட இணைப்பில் காட்டியுள்ள பணியாளர்கள் 31—7—74 வரை தொடர்ந்து பணியாற்றி வருமாறு ஆணையிடப்பட்டனர்:—

இணைப்பு 3.

| தொடர் எண் | பதவிப் பெயர்கள். | பதவிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1 | செயலாளர், மாநில திட்ட ஆணைக்குழு | 1 |
| 2 | செயலாளர், கல்வி, அறிவியல், தொழில் நுட்பவியல் குறித்த பணிக்குழு. | 1 |
| 3 | செயலாளர், ஆட்படை ஊற்றம், சமூக மாற்றங்கள் குறித்த பணிக்குழு. | 1 |
| 4 | செயலாளர், நிதிவாயில்கள் குறித்த பணிக்குழு | 1 |
| 5 | திட்ட அதிகாரிகள் | 5 |
| 6 | அரசிதழ் பதிவு பெற்ற நேர்முக உதவியாளர்கள் | 2 |
| 7 | பரிவு அதிகாரிகள் | 3 |
| 8 | பட்டதாரி நூலகர் | 1 |
| 9 | தொழில் நுட்ப உதவியாளர்கள் | 5 |

| | | |
|---|---|---|
| 10 | புள்ளிவிவர உதவியாளர் | 1 |
| 11 | உதவியாளர்கள் | 6 |
| 12 | நிலப்பட வரைவாளர் (முதுநிலை) | 1 |
| 13 | அந்தரங்க சுருக்கெழுத்து—தட்டச்சர்கள் | 5 |
| 14 | காசாளர் | 1 |
| 15 | சுருக்கெழுத்து—தட்டச்சர்கள் | 3 |
| 16 | இளநிலை உதவியாளர்கள் | 4 |
| 17 | தமிழ்த் தட்டச்சர் ஒருவர் உட்பட, தட்டச்சர் | 5 |
| 18 | வலவர் | 1 |
| 19 | பதிவேட்டு எழுத்தர்கள் | 2 |
| 20 | கடைநிலை ஊழியர்கள் | 22 |

**மாவட்ட திட்டக்குழுக்கள்.**

| | | |
|---|---|---|
| 1 | மாவட்ட திட்ட அதிகாரிகள் | 13 |
| 2 | உதவியாளர்கள் | 13 |
| 3 | சுருக்கெழுத்து—தட்டச்சர்கள் | 13 |
| 4 | கடைநிலை ஊழியர்கள் | 13 |

**மொழி பெயர்ப்புக் குழு :—**

| | | |
|---|---|---|
| 1 | உதவிப் பேராசிரியர் | |
| 2 | மொழி பெயர்ப்பு உதவியாளர்கள் | 3 |

[நிதித் (மாநிலத் திட்ட ஆணைக்குழு) துறையின் 20—5—1974 நாளிட்ட 718-ஆம் எண். அரசாணையைக் காண்க].

---

## தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

வியாழக்கிழமை, 1975 மார்ச் 6.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

**உடுக்குறியிட்ட வினாக்கள்**

***Houses on Instalment Basis.***

*111 *Q.*—THIRU WILSON APPOLLOS (on behalf of THIRU L. BALARAMAN): Will the Hon. the Chief Minister be pleased to state :—

(*a*) whether it is a fact that many persons have been cheated under the pretext of providing houses on instalment basis in Madras;

(*b*) if so, the amount involved; and

(*c*) the action taken in this regard by the Police?

**தவணை முறையில் வீடுகள்.**

திரு. வில்சன் அப்போலோஸ் (திரு. எல். பலராமன் சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையில் தவணை முறையில் வீடு தருவதாகக் கூறப்பட்டு பலர் மோசடி செய்யப்பட்டது உண்மையா ?

(இ) ஆமெனில், சம்பந்தப்பட்ட தொகை எவ்வளவு ?

(உ) இதன்பேரில், காவல்துறை என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) ரூபாய் 77,224.

(உ) ஆறுபேர் மீது காவல் துறையினர் ஆறு வழக்குகளைப் பதிவு செய்தனர். ஐந்து வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்ட ஐவர் தொகை முழுவதையும் புகார் செய்தோருக்குத் திருப்பிக் கொடுத்து சமாதானம்

செய்து கொண்டனர் அல்லது ஆவணங்களை ஒப்படைத்து விட்டுச் சமாதானம் செய்து கொண்டனர். 2334/71-ம் எண்ணுள்ள குற்றவியல் வழக்கொன்றில் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் சென்னை உயர் நீதி மன்ற நொடித்தவர் சொத்தாட்சியரிடம் (Official Assignee) நொடிப்பு மனு (Insolvency Petition) ஒன்றைத் தாக்கல் செய்து ஆவணங்கள், நிலங்கள் ஆகிய அனைத்தையும் ஒப்படைத்துள்ளார். அவர் கடன் கொடுத்தவர்களின் பட்டியல் ஒன்றை உயர்நீதி மன்ற நொடித்தவர் சொத்தாட்சியரிடம் கொடுத்துள்ளார். அவர் புகார் கொடுத்தவரின் பெயரையும் அந்தப் பட்டியலில் சேர்த்துள்ளார். எனவே, இவ்வழக்கு குறித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது நிறுத்திவைக்கப்பட்டது.

*Representation from Tamil Nadu Typists and Steno—Typists Association.*

*112 *Q.*—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THIRU M. SANKARALINGAM): Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether the Government of Tamil Nadu Typists-Stenographer's Association has sent any representation to the Government; and

(*b*) if so, the decision taken thereon?

தமிழ் நாடு அரசு தட்டச்சர், சுருக்கெழுத்துத் தட்டச்சர் சங்கத்திடமிருந்து கோரிக்கை மனு.

திரு. சி. வி. ராஜகோபால் (திரு. எம். சங்கரலிங்கம் சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாடு அரசு தட்டச்சர், சுருக்கெழுத்துத் தட்டச்சர் சங்கம் அரசுக்கு கோரிக்கை மனு ஏதேனும் அனுப்பியுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த முடிவு யாது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) தமிழ் நாடு அரசு தட்டச்சர் சுருக்கெழுத்துத் தட்டச்சர் சங்கம் அரசினால் அங்கீகரிக்கப்படாததால் நடைமுறையிலுள்ள விதியின் படி இக்கோரிக்கை மனுவை அரசு பரிசீலிக்கவில்லை.

*Government High School at Nemili.*

*113 *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether the Government have received any complaint to the effect that admission is refused to students in the Government High School at Nemili, North Arcot District, if they merely mention that they are Tamilians without mentioning the caste name; and

(*b*) if so, the action taken thereon?



நெமலியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) சாதிப் பெயர்களைக் குறிப்பிடாமல், தமிழர் என்று மட்டும் குறிப்பிட்டால், வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த நெமலியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில், மாணவர்கள் சேர்க்கப் பெறுவதில்லை என்று அரசுக்குப் புகார் ஏதேனும் வந்ததா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) செய்யார் மாவட்டக் கல்வி அலுவலருக்கு ஒரு புகார் வந்துள்ளது.

(இ) நெமலி அரசினர் உயர்நிலைப்பள்ளி தலைமை அசிரியர் அவர்களுக்கு மாணவி செல்வி த. அருள்மொழியை 6-ம் வகுப்பில் சேர்த்துக்கொள்ள ஆணையிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவரவர்களே, குறிப்பிட்ட ஜாதிப் பெயரைச் சொல்ல விரும்பவில்லை என்று சேர்க்க மறுத்து, அதற்குப்பிறகு பகீரதப் பிரயத்தனம் செய்து சேர்க்கப்பட்டிருக்கிறது. அப்படிச் சாதிப் பெயரைச் சொல்லித்தான் சேர்க்க வேண்டும் என்பது அரசு விதிமுறையா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அந்த உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் ஜாதிப் பெயரைக் குறிப்பிட வேண்டுமென்று கேட்டிருக்கிறார், ஜாதிப் பெயரைக் குறிப்பிட மாட்டேன் என்று இவர்கள் கூறியிருக்கிறார்கள். அதனால் சேர்த்துக்கொள்வதற்கில்லை என்று நிறுத்தி வைத்திருக்கிறார் தலைமை ஆசிரியர். பின்னர் மாவட்டக் கல்வி அதிகாரியின் கவனத்துக்கு வந்து, அவர் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று உத்தரவு போட்டு, சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்பொழுது எல்லா மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கும் இது குறித்து ஆணை அனுப்பப்பட்டிருக்கிறது.

THIRU G. VASANTHA PAI: Sir, are there any private instructions given by the Department of the Government that caste and other particulars should be got from every candidate?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பிற்பட்ட வகுப்பினர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பின்னால் அவர்களுக்குரிய சலுகைகள் கொடுக்கப்பட வேண்டுமானால், இதிலே போட்டால் தான் அதை வழங்க முடியும். இதிலே குறிப்பிடாமல் வேறு எந்த கோர்டிலே குறிப்பிட்டாலும், முற்போக்கு வகுப்பினர் என்றுதான் கருதப்பட்டு விடுவார்கள். அதற்காகத்தான் பிற்பட்ட வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்று போடவேண்டியதன் அவசியம் வற்புறுத்தப்பட்டு வருகிறது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவரவர்களே, ஆரம்பப் பள்ளியிலும், உயர்நிலைப் பள்ளியிலும் ஜாதிப் பெயரைப் போட்டுவிட்டு சர்ட்டிபிகேட்டில் கம்யூனிட்டி பெயர் மட்டும் போட்டால் என்ன ஏற்படும்? நடைமுறையில் இதற்கு ஏதாவது விதி இருக்கின்றதா? மேல் படிப்பு படிக்கின்றபோது உபகாரச் சம்பளம் கொடுப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அடிமட்டத்திலிருந்து வந்தால்தான், ஓரளவுக்குச் சரியாக வரும். சிலர் இடத்திற்குத் தகுந்தாற்போல் மாறியும் விடுகிறார்கள். உயர் கல்விக்கு வந்த பிறகு கூட சிலர் தாழ்த்தப்பட்டவர்கள் என்று கூறி சலுகைகள் பெற்றிருக்கிறார்கள். அது குறித்து இரண்டு மூன்று வழக்குகள் கூட வந்திருக்கிறது. அவர்களிடமிருந்து திரும்ப வசூல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் பார்க்கின்றபோது, ஆரம்பக் கல்வி, உயர் நிலைக்கல்வி ஆகிய கட்டங்களிலேயே இந்தக் குறிப்புகளைச் சரிவரக் கொடுத்துவிட்டால், பிற்காலத்தில் இப்படிச் சங்கடங்கள் இல்லாமலிருக்கலாம்.

### *Duty Allowance to Headmasters.*

*114 *Q.*—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that the Headmasters of High Schools are not being paid the duty allowance now;

(*b*) if so, whether the Government will renew the payment of the same to them; and

(*c*) whether the Government will consider giving Selection Grade scale of pay to the Headmasters also?

### தலைமை ஆசிரியர்களுக்கு அலுவல்படி.

திரு பி. ஆர் தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு அலுவல்படி (Duty Allowance) தற்போது வழங்கப்படுவதில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அரசு, மீண்டும் அவர்களுக்கு அத்தொகையை வழங்குமா?

(உ) தலைமை ஆசிரியர்களுக்கும், தேர்வு நிலைச் சம்பள விதம் வழங்குவதுபற்றி அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) and (உ) தலைமை ஆசிரியர்களின் சம்பள விகிதங்கள் 1970-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம்தேதி முதல் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. அதனால் அவர்களுக்கு தனிச் சம்பளம் வழங்க இடமில்லை. அவர்களுக்கு தேர்வுநிலை ஊதிய விகிதம் ஏற்படுத்தவும் தேவையில்லை.



### *Selection Grade to Secondary Grade Teachers.*

*115 *Q.* Thiru C. V. RAJAGOPAL (on behalf of Thiru K. ARIVAZHAGAN): Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) the number of Secondary Grade Teachers, stagnating before 1st October 1970 at the maximum of Rs. 140 who were promoted to Selection Grade from 1st January 1971;

(*b*) whether there has been any loss in emoluments to these teachers due to such promotion; and

(*c*) whether they will be given any advance increments from 1st January 1971, or started on Rs. 300 in the sanctioned selection grade scale, Rs. 250—10—400?

### தேர்வு நிலை உயர்வு பெற்ற இடைநிலை ஆசிரியர்கள்.

திரு சி. வி. ராஜகோபால் (திரு க. அறிவழகன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) 1970-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் தேதிக்கு முன்பு உயரளவு சம்பளம் ரூ. 140-ஐயே வாங்கிக் கொண்டு 1971-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதியிலிருந்து தேர்வுநிலை உயர்வு பெற்ற இடைநிலை ஆசிரியர்கள் எத்தனை பேர்?

(இ) இந்தப் பதவி உயர்வு காரணமாக இந்த ஆசிரியர்களுக்கு ஊதிய வகையில் ஏதேனும் இழப்பு ஏற்பட்டுள்ளதா?

(உ) 1971-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதியிலிருந்து முன் கூட்டிய சம்பள உயர்வுகள் அவர்களுக்கு அளிக்கப்படுமா? அல்லது ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள தேர்வுநிலைச் சம்பள விதமான ரூ. 250-10-400 என்கிற சம்பள விதத்தில் அவர்கள் ரூ. 300 சம்பளத்தில் தொடக்கப்படுவார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 1,348.

(இ) இல்லை. அவர்களுக்கு தேர்வுநிலை ஊதிய விகிதத்தில் சம்பளம் நிர்ணயிக்கையில், ஊதிய இழப்பு நேரிடா வண்ணம் அரசு ஆணையிட்டுள்ளது.

(உ) அவர்களுக்கு முன்கூட்டிய ஊதிய உயர்வு அளிக்கப்பட மாட்டாது. அவர்களின் ஆரம்பச் சம்பளம் மாற்றியமைக்கப்பட மாட்டாது.

[1975 மார்ச் 6

### *Grade I Tamil Pandits in Tirunelveli District*

* 116 *Q.* THIRU C. V. RAJAGOPAL (on behalf of THIRU M. SANKARALINGAM): Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether any representation has been received stating that the annual increment was not sanctioned for those who were promoted as Grade I Tamil Pandits after 1st April 1970 in Tirunelveli District,

(*b*) if so, the number of such teachers; and

(*c*) the reason therefor?

### திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள முதனிலைத் தமிழாசிரியர்கள்.

திரு சி. வி. ராஜகோபால் (திரு எம். சங்கரலிங்கம் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் 1970–ம் ஆண்டு எப்ரல் மாதம் 1–ம் தேதிக்குப் பின் முதனிலை தமிழாசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்றவர்களுக்கு வருட ஊதிய உயர்வு அளிக்கப்படவில்லை என முறையீடு எதும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில் அவ்வாறு உள்ளவர்கள் எத்தனை பேர்?

(உ) இதற்குக் காரணம் யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் 30 முதனிலைத் தமிழாசிரியர்களுக்கு வருட ஊதிய உயர்வு அளிக்கப்படவில்லை.

(உ) 1970–ஆம் ஆண்டு எப்ரல் மாதம் 1–ம் தேதிக்குப் பின்னர் நேரிடையாக முதனிலைத் தமிழாசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களாக நியமிக்கப்பட்டவர்களில் தகுதி படைத்தவர்கட்கு முதனிலைப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. 1970–ம் ஆண்டு எப்ரல் மாதம் 1–ம் தேதிக்குப் பின்னர் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களாக நியமிக்கப்பட்டு முதன் நிலைத் தமிழாசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பெற்ற 30 பேர்களின் பணி இரண்டாம் நிலையிலோ அல்லது முதனிலையிலோ வரன்முறை செய்யப்படாததால் அவர்கட்கான ஊதிய உயர்வுகள் அனுமதிக்கப்படவில்லை. இவர்களில் 29 பேர்களின் பணி இரண்டாம் நிலையில் 1974–ம் ஆண்டு மார்ச் மாதம் 21–ம் தேதியில் வரன்முறை செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள ஒருவரது பணி வரன்முறை செய்யப்படவில்லை. அதுபற்றி அரசு பரிசீலனையிலுள்ளது. இந்த 30 பேர்களது பணிகளை முதனிலையில் வரன்முறை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அதன் பின்னர்தான் ஊதிய உயர்வுகள் வழங்கப்படும்.



1975 மார்ச் 6]

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவரவர்களே, மற்ற மாவட்டங்களில் இம்மாதிரி முதல் நிலைத் தமிழாசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்றவர்களுக்கு வருடாந்திர ஊதிய உயர்வு அளிக்கப்படாமலிருப்பவர்களுடைய பட்டியல் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, எங்கேயாவது இப்படிப்பட்ட சங்கடங்கள் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கல்வித் துறையின் கவனத்துக்குக் கொண்டு வந்தால், பரிசீலித்து ஆவன செய்யப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### *Daily Allowance.*

* @ 93. Q. THIRU G. SWAMINATHAN AND THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether there is any disparity in the rate of Daily Allowance paid to the teacher educators working in in-service centres and the trainees who attend such training;

(*b*) if so, the reason therefor; and

(*c*) whether there is any proposal to remove the same?

### நாட்படி.

திரு. ஜி. சுவாமிநாதன் & திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்.

(அ) பணிக்காலப் பயிற்சி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்—பயிற்றுனர்களுக்கும் அப்பயிற்சி பெற வருபவர்களுக்கும் வழங்கப்படும் நாட்படி வீதத்தில் வேறுபாடு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) வேறுபாட்டினைப் போக்குவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, (அ) பயிற்சி அளிக்கும் இடத்தில் தங்கி, பயிற்சி பெற வந்த ஆசிரியர்களுக்கு தமிழ்நாடு பிரயாணப்படி விதிகளின்கீழ் தினப்படி அளிக்கப்படுகிறது. பயிற்சி அளிக்கும் ஆசிரியர்களுக்கு இவ்வாறு தினப்படி அளிக்கப்படவில்லை. ஆனால் நிர்ணயிக்கப்பட்ட விசேஷ மாதாந்திர ஊதியம் அளிக்கப்படுகிறது.

(இ) & (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

---

@ 4—3—1975 வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

4—3—1975 அன்று நான் துணைக் கேள்விகளுக்குப் பதில் அளிக்கையில், பயிற்சி பெறுகின்றவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 4·50 படி வழங்கப்படுகிறதென்றும், சொல்லிக்கொடுக்கின்ற ஆசிரியர்களுக்கு ரூ. 75 என்று நிர்ணயித்து கொடுக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டேன். ஆனால் இந்தச் சலுகை இரண்டு சாராருக்கும் ஒரே விகிதத்தில் அளிக்கப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி குறிப்பிட்டார்கள். நான் சொல்லுவதிலும் பொருள் இருக்கிறது, அவர் சொல்வதிலும் ஓரளவு பொருள் இருக்கிறது. காரணம் என்னவென்றால், அரசாங்கம் வகுத்திருக்கின்ற கொள்கையின்படி அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 4·50 தினப்படி வழங்கவேண்டும். ஆனால் நமக்கு வைத்திருக்கின்ற பயணப்படி மற்றும் நாள்படி கொடுக்கின்ற சட்டத் திட்டத்தின்படி 15 நாட்கள் வரையில்தான் தினப்படி கொடுத்துக் கொண்டிருக்கலாம். 15 நாட்களுக்கு மேல் "ஃபிக்ஸ்ட் பே" என்று தான் கொடுக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. ஆகையினால் அந்தச் சட்டத்தின் கீழ் சொல்லிக் கொடுப்பவர்களுக்கு 75 ரூபாய் என்று நிர்ணயித்தோம். அது போதாது, அதை ரூபாய் 150 ஆக உயர்த்த வேண்டுமென்று பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். அது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது என்று அன்றையதினமும் குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் வழங்கப்பட்டது என்று சொன்னார்கள். இத்தகைய மறுபயிற்சி நான்கு முறை அளிக்கப்பட்டிருக்கிறது. 1972-ல் 58,500 ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டு 39 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு, இந்த விகிதம்தான் கடைப்பிடிக்கப்பட்டது. 1973-ல் 6,600 ஆசிரியர்கள் பயிற்சி பெற்று, 3½ லட்சம் ரூபாய் செலவாகியது. 12 நாட்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு இதே ரூ. 4·50 தான் கொடுக்கப்பட்டது. 1974-ல் 31,000 ஆசிரியர்கள் மறு பயிற்சி பெற்றார்கள், 28 லட்சம் ரூபாய் செலவாகியது. எட்டு, எட்டு நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டு சொல்லிக் கொடுப்பவர்களுக்கு ரூபாய் 75 நிலையான ஊதியமும், சொல்லிக் கொள்பவர்களுக்கு நிலையான நாள் படி ரூ. 4·50 வீதமும் அளிக்கப்பட்டது. இது தவிர 1974-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் 14 நாட்களுக்கு 12,000 பேருக்கு 11,87,000 ரூபாய் ஒதுக்கப்பட்டு மறு பயிற்சி அளிக்கப்பட்டது.

(பிற்பகல் 4–10)

ஆனால் இவைகளுக்கெல்லாம் 4½ ரூபாயாகவும், 75 ரூபாயாகவும் இருக்கிறது. இப்பொழுது அதே நிலை தான் இருக்கிறது. ஆனால் "ஸ்பெஷல்" திட்டம் என்ற வகையிலே ஒரு தனித் திட்டம் வகுத்து அதற்கு யூனிசெஃப் பாதி உதவி தருகிறோம் என்றார்கள். யூனிசெஃப் பாதி தருகிறோம் என்றபொழுது அவர்களுக்கு விகிதாசாரம் போட்டுக் கொடுத்த காலத்தில், 1,550 துவக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு 20 நாட்களும், 3,600 நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு 45 நாட்களும் தனிப் பயிற்சி தரப்பட்டது. அந்த ஸ்பெஷல் பயிற்சிக்கு யூனிசெஃப் பாதி உதவி தருகிறோம் என்றார்கள். அந்தப் பாதி உதவித் தொகை தருகிறோம் என்று சொன்னதன் காரணமாக, சொல்லிக்





கொள்பவர்களுக்கு 4½ ரூபாய் என்றும், சொல்லிக்கொடுப்பவர்களுடைய தகுதியின் அடிப்படையில் 6 ரூபாய் என்றும் தரவேண்டும் என்று சொன்னோம். ஆக, அவர்களுக்கு மட்டும் தான் 4½ ரூபாய் என்றும், சொல்லிக் கொடுப்பவர்களுக்கு 6 ரூபாய் என்றும், இந்தத் தனித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. மற்றைய திட்டம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. 75 ரூபாய் அவர்களுக்கு நிலையான ஊதியம் தரப்படுகிறது என்பதுதான் இப்போதும் இருக்கிற விதி. 150 ரூபாய்க்கு உயர்த்தப்பட வேண்டும் என்று பள்ளிக் கல்வி இயக்குநர் வேண்டுகோள் விட்டிருப்பதும் உண்மை. அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருப்பதும் உண்மை; அன்றைக்கு அதுபற்றி நான் சொன்னதும் உண்மை. ஆனால் ஒரேயொரு திட்டத்திற்கு இருசாராருக்கும் சமமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் சொன்னதும் உண்மை. ஆனால் ஒரு தனித் திட்டத்திற்குத்தான் தரப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தனித் திட்டம் என்று சொல்லுகிறார்கள். கொடுக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்பதுதான் பிரச்சினை. அந்தப் பிரச்சினையிலே அமைச்சர் அவர்கள் சொன்னது 15 நாட்களுக்கு மேற்பட்டு இருப்பவர்களுக்கு 75 ரூபாய் என்று. 15 நாட்களுக்கு மேலாக இருப்பவர்களுக்கு 75 ரூபாய் மாத அளவிலும் 15 நாட்களுக்கு உள்ளாக இருப்பவர்களுக்கு 4½ ரூபாய் அளவிலும் கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். இப்போது அவர்களுக்கு—சொல்லிக்கொள்பவர்களுக்கு-6 ரூபாய் அளவிலே கொடுக்கப்படுகிறது. இதே வேளையில் மற்ற இடங்களில் இருப்பவர்களுக்கு 4½ ரூபாய் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கும் கூட்டிக் கொடுக்கவேண்டும் என்று சொன்னோம். அது ஆலோசனையில் இருக்கின்றது என்று சொன்னார்கள். தனித் திட்டத்திலே இப்போது கொடுக்கப்பட்டிருக்கிற................

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்பொழுதும், நாளைக்கு தனிப் பயிற்சித் திட்டத்துக்கென்று நாம் ஒரு 12 லட்சம் ரூபாய் ஒதுக்குவோமானால், 4½ ரூபாய், 75 ரூபாய் என்றுதான் கிடைக்கும். ஆனால் யூனிசெப் ஒரு திட்டத்தைக் கொடுத்து, அதற்கு நாங்கள் உதவி செய்கிறோம் என்று சொன்னதன் காரணமாக ஒரு ஸ்பெஷல் திட்டத்திற்கு மட்டும்தான் அப்படிச் செய்யப்பட்டது. பரிசீலனையில் இருப்பதும் உண்மை. ஆனால் இன்னும் கொடுக்கப்படவில்லை. அரசாங்கம் 150 ரூபாய் தரலாம் என்று சொன்னால்தான், இனிமேல் தரப்படுமே தவிர நாளைக்கு ஒரு தனிப் பயிற்சி, மறு பயிற்சி ஆரம்பித்தால் 75 ரூபாய்தான் இந்த ஆசிரியர்களுக்குக் கிடைக்கும், சொல்லிக் கொள்ளுபவர்களுக்கு 4½ ரூபாய்தான் கிடைக்கும். இப்போது இருக்கிற இந்தச் சட்டதிட்டத்தின்படி.

திரு. ஏ. சுவாமிநாதன்: இப்போதே 4½ ரூபாய்க்கு மேல் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள், அப்படி பல இடங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டது. அமைச்சர் அவர்கள் தனித்

திட்டத்தின் கீழேதான் கொடுக்கப்படுகிறது என்ற விளக்கத்தைத் தருகிறார்களே தவிர அப்படி கூட்டிக் கொடுக்கப்பட்டது என்னவோ உண்மை என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பல இடங்கள் என்று சொன்னார்கள். நான்கு இடங்களிலே $4\frac{1}{2}$ ரூபாயும் 75 ரூபாயும் என்றுதான் இருக்கிறது. ஒரேயொரு இடத்தில் தனித் திட்டத்திற்கு "**As a special case**" 6 ரூபாய் என்று தரப்பட்டிருக்கிறது.

*Incentive to persons who undergo Family Planning Operations.*

*** 117. *Q*. THIRU G. SWAMINATHAN** (on behalf of **THIRU K. S. GANAPATHI**): **Will the Hon. the Minister for Health be pleased to state—**

**(*a*) whether the District Collectors have introduced fresh incentives to persons who undergo Family Planning Operations, viz. allotment of cement, supply of additional quantity of rice, wheat, sugar, kerosene and other controlled commodities; and**

**(*b*) if so, whether the Government will consider extending these benefits to those who already got themselves operated for family planning?**

குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்து கொள்பவருக்கு ஊக்கச் சலுகைகள்.

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. கே. எஸ். கணபதி சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொள்பவருக்கு சிமிட்டி, அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய் மற்றும் கட்டுப்பாடு விதிக்கப்பட்ட ஏனைய பொருட்களைக் கூடுதலாக வழங்குவது போன்ற புதிய ஊக்கச் சலுகைகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அளிக்க முன் வந்துள்ளனரா?

(இ) ஆமெனில், ஏற்கெனவே குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொண்டோருக்கு இந்த நலன்களை நீட்டிப்பது குறித்து அரசு ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் மட்டுமே தீவிர குடும்ப நலத் திட்ட இயக்கத்தின்போது ஊக்கமளிக்கும் வகையில் கருத்தடை அறுவை செய்து கொண்டவர்





களுக்கு இரண்டு கிலோ அரிசியும், இரண்டு கிலோ சர்க்கரையும், ஆண்களுக்கு வேட்டி ஒன்றும், துவாலை ஒன்றும் பெண்களுக்கு சேலை ஒன்றும் கொடுக்கப்பட்டன. கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கு சிமிட்டி, உரம் முதலியன வழங்குவதிலும் முன்னுரிமை அளிக்கப் படுமென்று அவர் அறிவித்துள்ளார்.

(இ) ஏனைய மாவட்டங்களில் தீவிர குடும்ப நலத் திட்ட இயக்கத்தின் போதும் அத்தகைய ஊக்கச் சலுகைகள் எதுவும் அளிக்கப்படவில்லை.

(உ) கூடுதல் ஊக்கச் சலுகைகளை அளிப்பதனால் ஏற்படும் செலவு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், தொண்டு நிறுவனங்கள், ஆகியவை தாமே முன் வந்து அளிக்கும் நன்கொடைகளிலிருந்து ஈடு செய்யப்பட்டது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமான அறுவை சிகிச்சை செய்துகொள்ள முனைப்புத் திட்டம் நடக்கிறபோது, அரசினுடைய சார்பிலோ, அதிகாரிகளுடைய சார்பிலோ அவர்களுக்கு உதவிகள் எல்லாம் செய்யப்படும் என்று சொல்கிறார்கள். அதை மனதில் கொண்டு பலர் அறுவை சிகிச்சைக்கு வருகிறார்கள். உதாரணமாக தஞ்சாவூரில் உள்ளவர்களுக்கு நிலம் கொடுக்கப்படும் என்று அப்போது சொல்லப்பட்டது. ஆனால் அறுவை சிகிச்சை முடிந்த பிறகு, அவர்கள் சொன்னதுபோல கொடுக்கப்படவில்லை. ஆகவே, அதிகாரிகளால் சொல்லப்பட்டால் தொடர்ந்து அதைக் கொடுத்துவிட வேண்டும். இல்லாவிட்டால் மற்றவர்களுக்கு அது நல்ல முன்மாதிரியாக இல்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அப்படி நிலம் வழங்குவது என்று ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் சொன்னாலும், அவ்வாறு அந்த நிலம் வழங்குவதில் சில முறைகள் இருக்கின்றன. முதலில் நிலம் கிடைக்க வேண்டும். இரண்டாவது அந்த முன்னுரிமை பெறுவதற்கு அவருக்கு வாய்ப்பு இருக்க வேண்டும். அந்த வாய்ப்பு உள்ளவராக இருந்து, அவர் நிலம் இல்லாதவராகவும் இருந்து விண்ணப்பித்து, அவருக்குக் கொடுப்பதற்கு நிலம் இருந்து அதைத் தருவதாகச் சொன்னாலும், அந்த நிலம் ஓரிடத்தில் இருக்கும், அவர் வாழ்ந்து கொண்டிருப்பது மற்றொரு இடத்தில் இருக்கும். மாயவரம் பக்கத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு ஒரத்தநாடு பக்கத்தில் நிலம் கொடுப்பார்களேயானால், அது அவருக்குப் பயன்படாது. ஆகவே, அது கொஞ்சம் கடுமையான விஷயம். ஒத்துக்கொண்டால் கூட நிறைவேற்றுவதற்குக் கடுமையான ஒரு காரியம். இருந்தாலும் அப்படி வாக்குறுதி தரப்படுமானால், அதையெல்லாம் பரிசீலிக்கும்படியாக அரசு கேட்டுக்கொள்ளும்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, கொடுக்க முடியுமா, கொடுக்க முடியாதா என்பதல்ல என்னுடைய பிரச்சினை. முனைப்புத் திட்டத்திலே அதிகமான எண்ணிக்கை வரவேண்டும் என்றுள்ள ஒரு நிலைமையிலே அது மாதிரி சில சமயங்களில் அதிகாரிகளாலே வாக்குறுதிகள் தரப்படுகின்றன. அம்மாதிரி கொடுக்கப்படுகின்ற வாக்குறுதிகள் காப்பாற்றப்பட வேண்டும், அல்லது வாக்குறுதிகள் கொடுக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கேள்வி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் தெரிவிக்கப்படும். இனிமேல் வாக்குறுதிகள் கொடுப்பதை யாவது மிகவும் ஜாக்கிரதையாகக் கொடுப்பார்கள் என்று நான் எதிர் பார்க்கிறேன்.

*Medical Examination to School Children.*

* 118 *Q.* **THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Health be pleased to state the names of Districts where the Scheme of Medical Examination of School Children is in vogue?**

பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவ சோதனை.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவ சோதனை செய்யும் திட்டம் எந்தெந்த மாவட்டத்தில் நடைமுறையில் இருந்து வருகிறது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவ சோதனை செய்யும் திட்டம் தமிழ்நாட்டில் தர்மபுரி, புதுக்கோட்டை மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப் பட்ட 38 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் 5 நகரசபைகளிலும் செயல்பட்டு வருகிறது. சென்னை நகரிலும் இத் திட்டம் இப்பொழுது நடை முறையில் இருந்து வருகிறது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவர் அவர்களே, மருத்துவ சோதனை செய்த பிறகு காணப்படுகிற குறைகளை நிவர்த்தி செய்ய, பின் தொடர்ச்சி திட்டங்கள் ஏதேனும் நடைமுறையில் இருக்கின்றனவா என்றும் அதற்கு அரசினுடைய திட்டம் என்ன என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையத்தில் இணைக்கப்பட்ட ஒரு சிறப்பு மருத்துவர், மற்றும் அவருடைய உதவியாளர் இருக்கிறார்கள். அங்கு மருத்துவப் பரிசோதனை கள் செய்யப்படுகின்றன. குழந்தைகளுக்கு பலஹீனங்கள் போன்ற பல் வேறு குறைகள் இருக்குமானால், அவைகளுக்கு மருந்து தருவதற்கும், வைட்டமின்கள் வழங்குவதற்கும் அந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடர்ந்து பயன்படும். கடுமையான நோய் இருக்குமானால், அதற்குத் தனிச் சிகிச்சைதான் அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத் திலே இப்படி ஒரு வருட காலத்திலே எத்தனை மாணவர்களுக்குச் சோதனை செய்யப்பட்டது? சோதனை செய்யப்பட்ட மாணவர்களுக்கு என்ன





விதமான நோய்கள் அதிகப்படியாக இருப்பதாகக் காணப்பட்டன? அதி லும் குறிப்பாக கண்நோய்கள் போன்றவைகள் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டது உண்மையா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அது பற்றிய முழு விவரமும் என்னிடத்திலே இல்லை. ஒரு ஆரம்ப சுகாதார நிலையத் தில் பணியாற்றுகிற ஒரு டாக்டரும், அவரோடு உள்ள அலுவலாளர்களும் ஓராண்டிலே கூட அந்த ஊராட்சியிலே உள்ள எல்லாக் குழந்தைகளையும் சரியாகப் பரிசோதிக்க முடியாது. ஏறத்தாழ 3—4 ஆண்டுகளாகிறது என்று நான் பொதுவாக அறிந்திருக்கிறேன். சரியான விவரம் இல்லை. ஆகவே, இப்படி அவர்கள் செய்கின்ற அந்தச் சோதனை பற்றி திட்டவட்டமான புள்ளி விவரங்கள் எதுவும் இப்போது அரசாங்கத்திடத்திலே இல்லை. வேண்டுமானால் அதைப் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளலாம். சென்னை நகரத்திலே நடைபெறுகிற இப்படிப்பட்ட சோதனையில் முதல் கட்டத்திலே நடைபெற்ற சோதனையிலே 100-க்கு 2 குழந்தைகள் தொழு நோயினாலே பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். மற்ற எவ்வகை யான பாதகங்களும் அந்த அளவுக்கு இல்லை. ஆனால் எல்லாக் குழந்தை களுக்குமே கூட சரியான மருத்துவப் பரிசோதனை இல்லாமல் இருப்பார் களேயானால் இந்த ஆண்டு இல்லாவிட்டால் இன்னொரு ஆண்டிலே ஏதாவது ஒரு நோய்க்கு அவர்கள் ஆளாகக்கூடும் என்ற பொதுவான ஒரு கருத்து இருக்கிறது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவர் அவர்களே, இந்தக் குழந்தைகள் மருத்துவப் பரிசோதனைத் திட்டத்தை எல்லாப் பள்ளி களுக்கும் விரிவாக்குவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அரசாங்கத் திற்கும் அந்த நல்ல நோக்கம் இருக்கிறது. ஆனால் செயல்படுத்துகிற வகையிலே பார்க்கும்போது, இதற்காக தனியாக நிதி ஒதுக்கி ஏற்பாடுகள் செய்யவேண்டும். இப்போது 38 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தான் இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கின்றன. 5 நகரசபைகள் தான் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. ஏறத்தாழ 50 நகரசபைகளில் ஏறத்தாழ 380 ஆரம்ப சுகாதார நிலையங்கள் வேண்டும். ஆக, மக்கள் தொகையை வைத்து இந்தப் பணிகளை ஒவ்வொரு பகுதியிலும் செய்ய வேண்டும் என்று சொன்னால், பெரிய திட்டமாகப் போட்டு, நிதி ஒதுக்கினால்தான் முடியும். அந்த வாய்ப்பு இப்போது இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: இது ஒரு நல்ல திட்டம், தொழுநோய் உள்ள குழந்தைகள் எல்லாம் கண்டுபிடிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாணவர்கள் ஒரு ரூபாயாவது பணம் கொடுத்து இந்த மருத்துவர்கள் அங்கே வந்து ஆளுக்கு ஒருமுறை யாவது இப்படிப் பரிசோதனை செய்யக்கூடிய ஒரு திட்டத்தை அரசு நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன்</u>: தலைவர் அவர்களே, அப்படி ஒரு ரூபாயாவது ஒரு குழந்தைக்குக் கிடைக்கும் என்று சொன்னால், இந்தத் திட்டத்தின் செலவு அதிலே முடியும். ஆனால் ஒரு ரூபாய் என்று சொன்னவுடனேயே, அதற்கு கேலிச் சித்திரம் போடுவதும், கிண்டல் செய்வதும், அதுபற்றிய கண்டனம் செய்வதும், இவ்வளவும் நம் நாட்டிலே புறப்படுகிறது. நம் நாட்டினுடைய அரசியல் மக்களுடைய நன்மைக்காக அல்லாமல், மக்களை தங்கள் சார்பாகப் பயன்படுத்திக் கொள்வதைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கிற காரணத்தினால், எந்த ஒரு பொதுக் காரியத்திலும் வளர்ச்சிக்கான ஒரு அடிப்படையை உருவாக்க முடியவில்லை. ஏனென்றால் ஏற்கனவே பொது மருத்துவமனையிலே 4 அணா கொடுத்துவிட்டு உள்ளே வருகிறவர்கள் வரட்டும், இல்லையெனில் ஏராளமானவர்கள் வருகிறார்கள் என்ற ஒரு கருத்து பேசப்பட்டு 20 பைசாவாக அதை வைக்கலாம் என்று பேசப்படுகிறபோதே மருத்துவமனையில் நுழைவதற்குக் கூட கட்டணமா என்று கேலி செய்யப்பட்டது. பொதுமக்களிடத்திலே, அவர்களுக்கு இருக்கிற இந்த வறுமையிலே இப்படிப்பட்ட கருத்துக்கள் எடுபட்டு விடுகின்றன. ஆகவே, நம்முடைய நாடு முன்னுக்கும் போக முடியாது, பின்னுக்குப் போகும் வேகத்தையும் தடுக்க முடியாது என்ற அளவுக்கு இப்படிப்பட்ட முறையிலே பாதகமான எண்ணங்கள் உருவாக்கப் பட்டுவிடுகின்றன.

<u>திரு. கே. ராஜாராம்</u>: தலைவர் அவர்களே, குழந்தைகள், இளம் வயதினர் ஆகியோர் மத்தியிலே தொழுநோய் மிக வேகமாகப் பரவும் என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள். ஆகையினால் இதை ஏனோதானோ என்று விட்டுவிடாமல், இதில் ஒரு முனைப்புத் திட்டம் கொண்டு வந்து ஒரு "ஃபேஸ்ட் புரோகிராம்" என்ற முறையிலே வருஷத்திற்கு இத்தனை பள்ளிகள் பார்ப்பது என்று போட்டு, 2, 3 வகுப்புகள் என்று எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் மாறி மாறிப் பார்த்து, பள்ளிகளில் இருக்கக்கூடிய தொழுநோய் வந்த குழந்தைகளைப் பிரித்து அவர்களுக்கு ஏதாவது மருத்துவம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய அரசு திட்டம் வகுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-20)

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன்</u>: தலைவரவர்களே, இப்போது தமிழ் நாட்டிலே ஏறத்தாழ 75 சதவீதம் மக்கள் இருக்கின்ற வட்டாரத்திலே தொழு நோய் தடுப்புப் பணி அல்லது தொழுநோயினாலே பாதிக்கப்பட்டவர்களுக்கு, ஒரு பத்து நாட்களுக்கு ஒரு முறை அவர்களுக்குத் தேவையான சிகிச்சையை அளிப்பதற்கு—சிகிச்சை என்றால் பெரும்பாலும் புண் இருப்பவர்களுக்குக் கட்டுப்போடுவது அல்லது மாத்திரைகளை வழங்குவது அப்படிப்பட்ட பணிகளைச் செய்வதற்கு—என்று பாரா மெடிகல் ஒர்க்கர்கள் வைத்து, அவர்கள் மூலமாக பல்வேறு யூனிட்டுகள் ஏற்படுத்தி நடைபெற்று வருகின்றது. அவர்களை நகர்ப்பகுதியிலே கொண்டுவந்து அந்த பாரா மெடிக்கல் ஒர்க்கர்கள் மூலமாக பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளைச் சோதனை செய்யலாம் என்ற கருத்து இருக்கின்றது. சென்னை மாநகரம் போன்ற நகரத்திலே முதல் கட்டத்தைத்





தொடங்கலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த பாரா மெடிகல் ஒர்க்கர்கள் ஓரளவுக்கு மருத்துவத் தேர்ச்சி பெற்றவர்கள். அவர்கள் ஒரு பள்ளிக்கூடத்திற்கு வந்து சோதனை நடத்துவதற்கு அங்கே இருக்கின்ற ஆசிரியர்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும். டாக்டர்கள் என்று சொன்னால் அவர்கள் கொடுக்கும் ஒத்துழைப்புப் போல அல்லாமல் ஒரு சாதாரண பாரா மெடிகல் ஒர்க்கர் வந்தால் ஒத்துழைப்புக் கொடுப்பது கொஞ்சம் கடினம். மற்றொன்று தொழுநோய்க்காக சோதனை செய்ய வந்திருக்கின்றார்கள் என்று சொல்கின்றபோது, அந்த எண்ணமே சில பேருக்கு அருவருப்பைத் தந்து விடுகிறது. அதுவே பொதுச் சோதனையாக இருந்து அதிலே தொழுநோய் இருக்கின்ற குழந்தைகளைக் கண்டுபிடிக்கிற மாதிரி ஒரு நிலைமை இருக்க வேண்டும். எனவே அதைச் சற்று விரைவாக்க பள்ளிக்கூடத்தின் நிர்வாகத்தினர் மூலம் ஒரு ரூபாய் ஒரு குழந்தைக்குப் பெறுவது என்று ஒரு திட்டத்தை வகுத்து, தலைமை ஆசிரியர்களும் ஒத்துழைத்து, அதற்குமுன் வந்து ஏற்பாடு செய்வார்கள் என்றால், அதை நிறைவேற்றலாம். இப்போதே கூட உயர்நிலைப் பள்ளிக்கூடங்களில் அப்படிப்பட்ட ஒரு முறை வைத்து மதுரையிலே செம்மையாக நடைபெறுகிறது. இரண்டொரு மாவட்டங்களில் நடைபெற்றுவருகிறது. தலைமை ஆசிரியர்களும், கல்வி இலாக்காவைச் சேர்ந்த கல்வி அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் போன்றவர்கள் அடங்கிய குழுக்கள் மூலமாக மதுரை மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்டம் ஆகியவற்றில் சில பகுதிகளில் இப்படி நடைபெற்று வருகிறது. அதை விரைவுபடுத்த வேண்டுமென்ற ஆலோசனையை நான் தெரிவித்திருக்கிறேன். அது சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொண்டு செய்வார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

<u>தவத்திரு குன்றக்குடி அடிகளார்</u>: தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடுத்த தலைமுறையைப்பற்றிக் கவலைப் படுகிறோம் என்று அறிவித்திருக்கின்றார்கள். யாருடைய விமர்சனம் என்று கவலைப்படாமல், ஒரு 100 பேர்களுக்கு 17 பேர்கள்தான் சரியான முறையிலே போஷிக்கப்படுகிறார்கள் என்று சொல்கின்றார்கள். ஆதலால் அன்புகூர்ந்து வேறு மருத்துவ சோதனைக் கட்டணம் அல்லது வேறு வரி என்று போட்டு குழந்தைகளுக்கு மருத்துவ சோதனைகளைச் செய் வதற்குரிய வசதிகளை அரசு நிச்சயமாக ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அரசு இதைப்பற்றி ஆராயுமா?

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன்</u>: தலைவரவர்களே, அது பற்றி ஆராயலாம்.

<u>திரு. என். சுந்தரேசத் தேவர்</u>: தலைவரவர்களே, நம்முடைய புதுக்கோட்டை ஒன்றியத்திலே புதுக்கோட்டையிலுள்ள மருத்துவ டாக்டர்கள் இது மாதிரியான வசதிகளைச் செய்து கொடுத்தால், இலவசமாக வாரம் ஒரு நாள் ஒவ்வொரு கிராமத்திற்குச் சென்று குழந்தைகளை மருத்துவப் பரிசோதனை செய்து தருவதாகச் சொல்கின்றார்கள். லயன்ஸ் கிளப், ரோட்டரி கிளப் அங்கத்தினர்களாக இருக்கின்ற டாக்டர்கள் அப்படிச் சொல்கின்றார்கள். அவர்களுக்கு ஊக்கம் கொடுக்கக்கூடிய வகை

யில் அரசாங்கம் மருத்துவ மனைகளில் உள்ள கருவிகளை, மற்ற பொருள்களை உபயோகிப்பதற்கு வசதி செய்து கொடுக்குமானால், அப்படி நல்ல நோக்கத்தோடு வருகின்ற டாக்டர்களைப் பயன்படுத்தி இந்த மாதிரியான பரிசோதனைகளைச் செய்யலாம். அதற்கு ஆவன செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அது வரவேற்கவேண்டிய ஒரு கருத்து. பல இடங்களிலே பல ரோட்டரி கிளப்ஸ், லயன்ஸ் கிளப் அல்லது ஜே. சி. கிளப் அல்லது இன்னும் சில சமூக அமைப்புகள், கில்ட் ஆப் சர்வீஸ் போன்றவற்றின் மூலமாக பொது மக்களுக்குத் தொண்டு செய்ய விரும்புகிறவர்கள் இந்த நல்ல காரியங்களில் ஈடுபடுகின்றார்கள். அதற்கு அதிகக் கருவிகள் தேவையில்லை. டாக்டருடைய அறிவும், நேரமும்தான் தேவைப்படுகின்றன. அப்படி அவர்கள் முன்வருவார்களானால், எல்லா பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர்களுள் ஒத்துழைக்க வேண்டுமென்ற ஒரு முறையை ஒரு வேண்டுகோளாகப் பெற்று காரியங்களை நிறைவேற்றமுடியும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். வாரத்திலே ஒரு நாள் வருபவர்களுக்காக ஏற்பாடுகளைச் செய்வது என்பது முடியாது. அதில் சிக்கல்கள் ஏற்படும். மீதி 6 நாட்களுக்கு அந்தப் பணியைச் செய்ய ஆள் கிடைக்கமாட்டார்கள். எனவே அந்தந்த வட்டாரத்திலே இருக்கின்ற நிலைமைகளுக்கு ஏற்ப ஒரு ஏற்பாடு செய்வதை வரவேற்கலாம்.

திரு சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, தொழுநோய்த் தடுப்புக்காக அமெரிக்காவிலிருந்து எய்ட் ஏராளமாகக் கொடுக்கின்றார்கள் என்று சொல்கின்றார்கள். அதுமட்டுமின்றி "மிஷனரிஸ்", கிருத்துவர்கள் சார்பிலே நடக்கும் ஸ்தாபனங்களில் ஏராளமான டாக்டர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இந்தப் பரிசோதனையைச் செய்து இந்த நோய்க்கு முடிவு கட்டுவதற்கு நம்முடைய அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அமெரிக்காவிலிருந்து இப்போது நடைபெறுகின்ற தொழுநோய் தடுப்புப் பணிகளுக்கு எந்த ஒரு உதவியும் தரப்படுவதாகத் தமிழக அரசுக்குத் தெரியாது. ஒருவேளை நண்பர் திரு. ராஜகோபாலுக்குத் தெரிந்திருக்கலாம். மேல் நாடுகள் என்று சொல்லுகின்றபோது இப்போது அமெரிக்காவைச் சேர்த்துச் சொல்லுவார்கள். ஜெர்மன் லெப்ரசி இராடிகேஷன் அசோசியேஷன் என்று ஒன்று இருக்கின்றது. அதுபோலவே டென்மார்க் போன்ற நாடுகளிலே இருக்கின்றது. அதுபோன்ற அமைப்புகள் மூலமாக தமிழ் நாட்டில் சில மருத்துவ மனைகள் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இலெப் என்ற பெயரிலே இருக்கின்றன. அந்த மருத்துவ மனையிலே தொழு நோய் கொண்டவர்களுக்குத் தகுந்த சிகிச்சை அளிக்கப்படுகிறது. அத்தோடு சேர்த்து இணைக்கப்பட்ட பாரா மெடிகல் ஒர்க்கர்ஸ், தொழு நோய் தடுப்புப் பணியை; ஒவ்வொரு மாவட்டத்தில் 2 லட்சம் பேர் கொண்ட பகுதி, 4 லட்சம் பேர் கொண்ட பகுதி என்று ஒதுக்கப்பட்டு அரசாங்கம் செய்கின்றதைப் போல, செய்கின்றார்கள். அந்தந்த வட்டாரத்திற்குப் பொறுப்பு ஏற்றுக்கொண்டு செய்கிறார்கள்.



*Tamil Nadu Industrial Investment Corporation.*

*119. *Q.* THIRU S. NARAYANASWAMY (on behalf of THIRU K. S. GANAPATHI): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that there is a steep fall in the profits of the Tamil Nadu Industrial Investment Corporation; and

(*b*) if so, the steps taken or proposed to be taken to improve the state of affairs ?

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்.

திரு. எஸ். நாராயணசாமி (திரு. கே. எஸ். கணபதி சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் ஆதாயம் மிகவும் குறைந்துள்ளது என்பதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், இந்நிலையை மாற்றி ஆதாயத்தைப் பெருக்க மேற்கொள்ளப்பட்டுள்ள அல்லது மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) அண்ட் (இ): 31—3—73 ஆம் தேதியோடு முடிந்த ஒன்பது மாதங்களில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் இலாபம் குறைந்தது. ஆனால் 31—3—74 ஆம் தேதியோடு முடிந்த பன்னிரண்டு மாதங்களில் இலாபம் உயர்ந்திருக்கிறது. கழகம் மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு வேண்டிய சேவைகளை அதிகரிப்பதோடு இலாபத்தில் செயலாற்றுவதற்கு முழு முயற்சி எடுத்து வருகிறது

திரு. ஜி. சுவாமிநாதன்: 31—3—75-ஆம் தேதியோடு முடிந்த ஆண்டின் லாபம் எப்படி இருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, 31—3—74-ஆம் ஆண்டு முடிவிற்கான விவரம் தான் என்னிடத்தில் இருக்கின்றது. 31—3—74 முடிய "நெட் பிராபிட்" ரூ. 31.44 லட்சம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, டி.ஐ.ஐ.சி. சிட்கோ ஸ்கீம் மூலம் 90 சதம் கிடைப்பதாகச் சொன்னார்கள். இப்போது கொடுக்க முடியாத நிலையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா:—தலைவரவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும்.

THIRU S. NARAYANASWAMY : Sir, is the Hon. Minister aware of the recent trouble created for this Corporation in the Government of India's decision to cancel some of the mortgage loans given to the sick mills as a result of which the Tamil Nadu Industrial Investment Corporation have lost about Rs. 1·55 crores of its Reserve Fund for no fault of its own or that of the State Government ?

மாண்புமிகு திரு செ. மாதவன்: தலைவரவர்களே, அதைப்பற்றி அண்மையிலே நானும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அங்கேயுள்ள தொழிலமைச்சர் அவர்களைச் சந்தித்தோம். டி. என். டி. சி. எடுத்திருக்கக் கூடிய சிக் மில்ஸில் வரக்கூடிய கடன்களையெல்லாம் தருவதாக ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள்.

*Cutting of trees in Government Forests.*

*120 *Q.* THIRU GEORGE KOMAGAN (on behalf of THIRU M. SANKARALINGAM) : Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state—

(*a*) whether there is any rule that teak-wood, Etti, and Ayiani trees in Government Forests should be cut only after a prescribed period of years;

(*b*) if so, the details of the rules; and

(*c*) if not, whether there is any proposal to frame rules in this regard?

அரசு காடுகளில் மரங்களை வெட்டுதல்.

திரு ஜார்ஜ் கோமகன் (திரு எம். சங்கரலிங்கம் சார்பில்): மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு காடுகளில் வளரும் தேக்கு, ஈட்டி, ஆயினி போன்ற மரங்களைக் குறைந்த அளவு இத்தனை வருடங்கள் கழித்துத்தான் வெட்டலாமென விதியிருக்கிறதா ?

(இ) ஆமெனில், அவை யாவை ?

(உ) இல்லையெனில், விதிகளை உருவாக்கும் செயற்குறிப்பு உண்டா ?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன்: (அ), (இ), அண்டு (உ) ஆம்.

தேக்குமரங்களை, குறைந்தது 20 ஆண்டு முதல், அதிக அளவு 80 ஆண்டுகளுக்குப்பின் வெட்ட வேண்டுமென்று அந்தந்த பிராந்திய திட்டப்படி வரை முறை செய்யப்பட்டுள்ளது. ஈட்டி, ஆயினி மரங்களுக்கு அம்மாதிரியான வரைமுறை இல்லை.

THIRU G. VASANTHA PAI : Sir, in view of the shortage of rainfall, will the Government take special steps not to cut down forests-whother it be teak or any other commodity?





மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, இந்த மூன்று ஜாதி மரங்கள் எத்தனை ஆண்டுகளுக்குப் பின்னர் வெட்டப்படுகின்றன என்பது குறித்து விடை. இந்த மரங்களை வெட்டி கொம்புகளாகப் பயன்படுத்துவதற்காக என்றால், 20 ஆண்டுக்காலம், கூடி மரங்களாக வெட்டி பலகைகளாக அறுக்கும் அளவுக்கு 80 ஆண்டுக்காலம் என்று இருக்கின்றது. 80 ஆண்டுகளுக்குப் பிறகும் வெட்டி பயன்படுத்தா விட்டால், வீணாகிவிடும். முதிர்ந்த மரங்கள் வெட்டப்படுகின்றன என் இறார்கள். காடு வளர்க்க வேண்டும் என்பது நல்ல யோசனைதான்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. கவன ஈர்ப்பு.

(1) அரசு "ஏ" பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களுக்கும், புதுக்கோட்டையில் "ஏ" பிரிவு உயர் நிலைப் பள்ளிகளில் முதல் நிலைத் தமிழாசிரியர்களுக்கும் பி. டி. ஆசிரியர் ஊதியம் தரப்படாதது குறித்து.

THIRU G. SWAMINATHAN: Sir, I wish to call the attention of the Hon. the Minister for Education to a matter of urgent public importance, namely, the non-payment of B.T. scale of pay to Second Grade Tamil Pandits who are working in 'A' Wing High Schools of the Government contrary to G.O. Ms. No. 63, dated 17th January 1974 and also in the case of some of the First Grade Tamil Pandits working in 'A' Wing High Schools in Pudukottai Town, lowering of their B.T. scale of pay to that of Secondary Grade contrary to the above mentioned G.O.and the fact of not allowing B.T. scale of pay to only those Tamil Pandits who are working in the 'A' Wing School while the same scale has already been paid to those in the 'B' Wing and Aided Secondary Schools in the State.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அரசு "அ" பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள முதல்நிலை தமிழாசிரியர் பதவிகளில் நியமனம் அல்லது பதவி உயர்வு பள்ளிக் கல்வி இணை இயக்குனரால் செய்யப்படுகிறது. அரசு "பி"பிரிவு பள்ளிகளில் அதே தரத்தில் உள்ள பதவிகளில் நியமனம் அல்லது பதவி உயர்வு முதன்மைக் கல்வி அலுவலர்களால் செய்யப்படுகிறது. "அ" பிரிவு பள்ளிகளைப் பொறுத் தவரையில் முதல்நிலைத் தமிழாசிரியர் எவரும் இரண்டாம் நிலைக்குத் தரம் தாழ்த்தப்படவில்லை. மாறாக புதுக்கோட்டை இராணி அரசு பெண் கள் உயர்நிலைப் பள்ளியில் அரசு ஆணை எண். 63, கல்வி, 1974-ம் ஆண்டு ஜனவரி மாதம் 17-ம் தேதியின்படி இரண்டு இரண்டாம்

## அரசு 'ஏ' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களுக்கும் புதுக்கோட்டையில் 'ஏ' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளில் முதல் தமிழாசிரியர்களுக்கும் பி.டி. ஆசிரியர் ஊதியம் தரப்படாதது குறித்து

[மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1975 மார்ச் 6

நிலை தமிழாசிரியர்கள் முதல் நிலைக்கு பதவி உயர்வு தரப்பட்டுள்ளார்கள். தற்காலிகமாக இரண்டாம் நிலை தமிழாசிரியர்களாக நியமனம் செய்யப் பட்டவர்களையும் மற்றும் இரண்டாம் நிலையில் தகுதி காண் பருவம் முடிக்கப் பெறாதவர்களையும் முதல்நிலை பதவியில் அமர்த்துவது குறித்து பள்ளிக் கல்வி இயக்குநர் சில விளக்கங்களை அரசிடம் கோரியிருந்தார். இது அரசின் ஆய்வில் உள்ளது. விரைவில் விளக்கங்கள் அனுப்பப்படும். மதுரை தமிழ்ச் சங்கம் வழங்கும் புலவர், பண்டிதம் சான்றிதழ் பெற்றவர்களை முதல் நிலை பதவியில் அமர்த்துவது குறித்தும் சில விளக்கங்களை இயக்குநர் கோரியிருந்தார். அதற்கான விளக்கங்கள் அண்மையில் தரப் பட்டுள்ளன. அரசு "பி"பிரிவு பள்ளிகளைப் பொறுத்தவரையில் ஒரு 6 நபர்கள் தவிர மற்றெல்லோருக்கும் முதல் நிலை பதவிகள் அளிக்கப்பட்டு விட்டன. இந்த ஆறு பேர்களின் பணிப் பதிவேடுகள் கிடைக்கவில்லை என்றும் அவை கிடைக்கப்பட்டதும் அவர்களது பதவி உயர்வும் வழங்கப் படும் எனவும் தெரியவருகிறது.

(பிற்பகல் 4-30)

திரு ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, புதுக்கோட்டை உயர்நிலைப் பள்ளியினுடைய ஆசிரியர்களுக்கு முதல் நிலை தமிழ் ஆசிரியர்களுடைய ஊதியம் கொடுக்கப்பட்டு, பின்னர் அவர்கள் இரண்டாம் நிலைக்கு மாற்றப் பட்டு, அவர்களுடைய சம்பளமும் பிடிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது இந்த "கால் அட்டென்ஷன்" கொடுத்த பிறகுதான் சுமான ஈர்ப்பு கொடுத்த பிறகுதான் அவர்களுக்கு முதல் நிலைக்குரிய சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அத னுடைய நிலைமைகள் தெரியவில்லை. ஆனால் இரண்டு இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்கள் பதவி உயர்வு தரப்பட்டிருக்கிறார்கள். அது இன்றைய நிலைமை.

(2) ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் தனியார் பள்ளிகளிலும், பணியாற்றும் ஆசிரியர்களுக்கு "சரண்டர் லீவ்", 18 மாத முழுச் சம்பளத் துடன் கூடிய மருத்துவ விடுப்பு போன்ற சலுகைகள் வழங்கப்படாதது குறித்து.

திரு செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தமிழ் நாட்டிலுள்ள எல்லா ஊராட்சி ஒன்றியத்திலும் பணி புரியும் ஆசிரியர்களுக்கும் தனியார் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் "சரண்டர் லீவ்", 18 மாத முழுச் சம்பளத்துடன் கூடிய



## ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் தனியார் பள்ளிகளிலும் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 'சரண்டர் லீவ்' 18 மாத முழுச் சம்பளத்துடன் கூடிய மருத்துவ விடுப்பு போன்ற சலுகைகள் வழங்கப்படாதது குறித்து

1975 மார்ச் 6] [திரு. செ. முத்துசாமி]

மருத்துவ விடுப்பு போன்ற சலுகைகளை அரசு அறிவித்திருந்தும் இன்னும் நிர்வாகிகளால் வழங்கப்படாததால் பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அரசாணை எண் 783, நிதி, 1968-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10-ம் தேதியில் 20 நாட்களுக்குக் குறையாமல் ஈட்டிய விடுப்பு எடுக்கும் அரசுப் பணியாளர்கள் அவர்கள் கணக்கில் மீதியுள்ள ஈட்டிய விடுப்பில் 30 நாட்கள் வரை காசாக்கிக் கொள்ளலாமென்றும் அங்ஙனம் காசாக்கிக் கொள்ளுதல் 24 மாதங்களுக்கு ஒரு முறை என்றும் ஆணையிடப்பட்டது. அரசாணை எண் 226, நிதி 1971-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 8-ந் தேதியில் 15 நாட்கள் ஈட்டிய விடுப்பு எடுப்பவர்கள் 15 நாட்களுக் குண்டான ஈட்டிய விடுப்பினை காசாக்கிக் கொள்ளவும் அங்ஙனம் காசாக்கிக் கொள்ளுதல் 12 மாதங்களுக்கு ஒரு முறை செய்துகொள்ளலாமென்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அரசு குறிப்பாணை எண் 32820/ஐ.எப்.ஆர்/ 71-1, நிதி, 1971-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23-ம் தேதியில் அரசுப் பணியாளர்கள் 30 நாட்கள் ஈட்டிய விடுப்பில் சென்று 30 நாட்கள் ஈட்டிய விடுப்பை காசாக்கிக் கொள்பவர்கள் 12 மாத இடைவெளிக்குப் பின்பு 15 நாட்கள் ஈட்டிய விடுப்பை எடுத்துக் கொண்டு 15 நாட்கள் ஈட்டிய விடுப்பை காசாக்கிக் கொள்ளலாமென்றும், அதே போல, 15 நாட்கள் ஈட்டிய விடுப்பு எடுத்துக் கொண்டு 15 நாட்கள் ஈட்டிய விடுப்பைக் காசாக்கிக் கொள்பவர்கள் 24 மாத இடைவெளிக்குப் பின்பும் 30 நாட்கள் ஈட்டிய விடுப்பும், 30 நாட்கள் ஈட்டிய விடுப்பை காசாக்கிக் கொள்ளலாமென்றும் ஆணையிடப்பட்டது. மேற்கண்ட அரசுப் பணியாளர் களுக்குண்டான சலுகைகள் அனைத்தும் அரசு ஆணை எண் 1421, கல்வி, 1972-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4-ம் தேதியில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளன. அரசு ஆணை (நிலை) எண் 955, நிதி, 1974-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5-ம் தேதியில் அரசுப் பணி யாளர்களுக்கு 18 மாதங்கள் முழு ஊதியத்தோடு மருத்துவ விடுப்பு கொடுக்கவும், அரசாணை எண் 311, நிதி, 1974-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14-ம் தேதியில் ஈட்டிய விடுப்பில் செல்லாமலேயே ஈட்டிய விடுப்பினைக் காசாக்கிக் கொள்ளவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றி வரும் ஆசிரியர்களுக்கு மேற்படி இரண்டு சலுகைகளையும் விரிவு படுத்துவது பற்றிய கருத்துக்கள் அரசின் பரிசீலனையிலுள்ளன. ஈட்டிய விடுப்பினை விடுப்பில் போகாமலேயே காசாக்கிக் கொள்ளும் சலுகைகளை ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் இயங்கும் பள்ளி களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு விரிவாக்குவது ஊர் வளர்ச்சி உள் ளாட்சித் துறையின் ஆய்விலுள்ளது. 18 மாத கால முழு ஊதியத்தோடு மருத்துவ விடுப்பு எடுக்கும் சலுகை அரசாணை எண் 2283, ஊர்வளர்ச்சி உள்ளாட்சி துறை, 1974ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 22-ம் தேதியில் ஊராட்சி ஒன்றிய பணியாளர்களுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது.

திரு. செ. முத்துச்சாமி : தலைவரவர்களே, அரசு நிதித் துறையிலே போடப்படக்கூடிய ஆணைகள் அரசினரால் அறிவிக்கப்பட்ட எல்லா ஊழியர்களுக்கும் பொருந்தும் என்று இங்கே அமைச்சரவையிலே முடிவெடுக்கப்பட்டு அறிவிக்கிறோம். இந்த ஆணைகள் நீண்ட காலமாக ஆகியும் ஆசிரியர்களுக்குப் போய்ச் சேராமல் இருக்கக்கூடிய ஒரு நிலைமையை கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே சொல்லுகின்றார்கள். நீண்ட காலமாக தனியார் பள்ளிகளிலும், உள்ளாட்சித் துறையிலும் இருக்கும் ஆசிரியர்கள் கேட்டு வருகிற கோரிக்கை இது. எப்பொழுது நிதித் துறையிலிருந்து உத்தரவு வருகிறதோ, அது அரசு ஊழியர்களுக்குப் பொருந்துவது போலவே எங்களுக்கும் பொருந்தும் என்று உத்தரவு பிறப்பிக்கக்கூடிய இடைவெளி இன்னமும் நீடித்து வருகிறது. இது பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். எப்பொழுது அந்த உத்தரவு வெளியிடப்படும்? ஒரு "ஸ்டாண்டிங் ஆர்டர்" ஆக எதிர் காலத்திலே எந்தெந்தச் சலுகைகள் அரசு ஊழியர்களுக்குப் பொருந்தும் என்று பொதுக் கொள்கையாக அரசு ஏற்றுக்கொள்கிறதோ அவை அந்தந்த நேரத்தில் தனியார் பள்ளிகளிலும் உள்ளாட்சித் துறையிலும் பணியாற்றக் கூடிய ஆசிரியர்களுக்கும் பொருந்தும் என்று அரசு உத்தரவு இடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முதலில் குறிப்பிட்டபடி, இரண்டு ஆணைகள் 18 மாதங்கள் முழு ஊதியத்தோடு மருத்துவ விடுப்பு கொடுக்கவும், ஈட்டிய விடுப்பில் செல்லாமலேயே ஈட்டிய விடுப்பைக் காசாக்கிக் கொள்ளும் ஆணைகள்தான் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன என்று நான் குறிப்பிட்டேன். ஆகவே அதுபற்றிப் பரிசீலனை முடிவடைந்ததற்குப் பிறகு, அது கொடுக்கப்படும். ஆனால் அரசு ஊழியர்களுக்குத் தருகின்றபோது உள்ளாட்சித் துறை ஆசிரியர்கள் மற்றவர்களுக்கெல்லாம் தர வேண்டுமென்றால், அவைகள் பற்றி நிதி ஆதாரங்களைப் பொறுத்துத்தான் முடிவெடுக்க வேண்டியிருக்கின்றது. அரசுத் துறையைப் பொறுத்தவரையில், அரசே அதனுடைய நிதித் துறையைப் பார்த்து முடிவெடுத்து விடுகின்றது. மற்ற இடங்களிலே பல்வேறு பங்குகள், பல்வேறு முறைகள், நிதி ஆதாரங்கள் ஏற்படுத்த வேண்டும். அதற்கான வழிவகைகளைக் காணவேண்டும். ஆகையினால்தான் இதற்குத் தனியாக ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. விரைவிலேயே இதுபற்றி முடிவெடுக்கப்படும்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, பொதுவாக ஒரு சலுகை வழங்கும்போது எல்லா ஊழியர்களுக்கும் கணக்கிட்டு நிதி ஆதாரத்தைப் பொறுத்து நிதி ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. அப்படி ஒதுக்கப்படும் நிதியை, ஒவ்வொரு துறையிலும் நிதி ஆதாரங்கள் எப்படி என்று பார்த்து, வழங்குவதாக அமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். கடந்த காலத்திலிருந்து இப்படிப்பட்ட ஒரு பின்னடைவான முறை இருந்துகொண்டேயிருக்கிறது. இதை நீக்கி எல்லோருக்கும் பொருந்தக்கூடியவாறு ஒரு சுலபமான நடைமுறையை உண்டாக்குவதற்கு அரசு கொள்கை ரீதியாக முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆண்டுக்கு ஒரு குறிப்பிட்ட காலத்தில் "பட்ஜெட்" போடுவதற்கு முன்னால்தான் இது என்று சொன்னால் எல்லாவற்றையும் ஆராய்ந்து ஒரே உத்தரவு கூட போடலாம். உத்தரவுகள் எல்லாம் 6-வது மாதம், 8-வது மாதம், 11-வது மாதம், 12-வது மாதம் என்று அவ்வப்போது போடுகின்றபோது அரசுதான் பொறுப்பேற்றுக்கொள்ள முடியும். மற்றவைகளை நாம் ஆராய்ந்து இருக்கிற நிலைமைக்குத் தக்கபடி கூற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஏற்கனவே தனியார் பள்ளிகள், மற்றவைகள் எல்லாம் கூட தனியாக வைக்கப்பட்டு அரசுப் பள்ளிகளுக்குத் தனிச் சலுகைகள்தான் வழங்கப்பட்டு வருகின்றன. அவற்றை நாளடைவில் குறைத்துக் குறைத்து பொதுவாக்குகின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கு இடம் தருகின்ற வகையில் நிதி நிலைமைகள் இருந்தால், நிதித் துறையினுடைய நடவடிக்கைகள் எடுக்கின்ற தன்மை எல்லாம் மாறுகின்ற சூழ்நிலையில் வேண்டுமானால் ஒரே நிலைமைக்குக் கொண்டுவந்து எல்லோருக்கும் ஆக்க முடியுமா என்று பார்க்கலாம். ஆனால் அதில் சங்கடங்கள் இருப்பதன் காரணங்களால்தான் இப்படிப்பட்ட முடிவுகள் எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

## 3, 1975-76 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி

* Thiru C. RUSSEL RAJ: Hon. Chairman, Sir, considering it my be pleasant duty, I come forward to place a few points before this House in connection with the Budget Estimate for 1975—76 which has been placed before this House by the Hon. the Chief Minister and which is being considered right at this moment . If something is to be said in detail about anything, there should be some mistake or shortcomings or there should be some omissions or commissions. On the other hand, if anything is found in its state of perfection, it is rather difficult to say much on it. When we read through the Budget Speech of our Hon. the Chief Minister, we are pushed to the very same idea.

At the outset, Sir, I have to submit that the Indian economic system is in a confused state of affiairs as a result of unsteady and ill-conceived policies being adopted and followed by the Government of India. Our beloved leader, the late Peraringnar Anna rightly and frankly remarked in the Rajya Sabha, a few years back, that in the name mixed economy, the Government of India is following the principles of adulterated economy.

[Thiru C. Russel Raj] [1975 மார்ச் 6

Sir, in this connection, the drought situation that is prevalent now has aggravated the situation further. The drought situation which is now prevailing in our State, especially in certain districts, is one the kind of which has never been heard of or seen or experienced in the last hundred years. It is at this juncture that we see that the Central Government have placed a deficit Budget with taxation measures to the extent of Rs. 288 crores. At this moment, Sir, nobody on this earth will deny the fact that on account of the heavy taxation of the Central Government, naturally the already rising prices would again rise as a result of which surmounting it or imperturbability by the common man would be a matter of absoulte impossibility.

(பிற்பகல் 4-40)

At the same time, when the Indian economic situation is like this, our Government, through our Hon. the Chief Minister has succeeded in presenting this Budget with minimum taxation possible and, at the same time, envisaging a number of progressive schemes and developmental programmes. The foremost point which strikes my mind, with due respect, admiration and appreciation is the scheme envisaged towards development in the agricultural sphere. It has been pointed out that out of the 11 lakh acres of waste land, the Government have a scheme envisaging to bring a vast portion under cultivation. At this moment when food production is reduced to a great extent on account of shortage in rainfall and when the food situation in our State is so acute, it is only extremely fitting that such importance is given to agriculture.

In this connection, I wish to say, Sir, that it is general law that if one man's property is in the undisputed and uninterrupted possession of another person for over twelve years, that property belongs to the latter person who is in possession. This Government has gone one step further and brought forth a legislation to the effect that even the cultivating tenant can become the owner of the land of the landlord. At this moment I would like to suggest to the Government that a still further step has to be thought about. In this context, I would like to say that no landlord should be allowed to keep his land waste. I may point out, Sir, that a large area is now kept lying as waste. If may not be possible to give irrigation and other facilities and huge expenditure may have to be incurred for implementing programmes and giving those lands irrigation and other facilities. My suggestion to this Government would be, Sir, that in view of the fact that due to short-supply of chemical manure by the Central Government the agriculturists are already suffering a lot, such waste lands can be used for the growth of green manure plants even for cultivating cash crops like



1975 மார்ச் 6] [THIRU C. Russel Raj]

groundnut or cashewnut. Such type of cutivation may not require a lot of irrigation facilities or assured water-supply. Further the State Farms Corporation which is now formed would serve a great deal towards the advancement of agriculture and I am thankful, Sir, that the Government have included Kanyakumari district also for the extension of the Intensive Agricultural Area Programme.

It is also worth while to state that tapioca cultivation has been proposed to be increased to an extent of about one lakh of acres. Tapioca is cultivated mainly in Kanyakumari and Salem districts and it is a secondary and supplementary food also. So, any amount of interest taken for the expanded cultivation of tapioca would, at this juncture, solve the food problem to a great extent. So, the Government, and especially the Hon. the Chief Minister and the Hon. the Minister for Agriculture are to be praised at this moment for giving more attention to agriculture and especially to the cultivation of tapioca.

Sir, in the matter of schemes taken up for irrigation, I would like to thank the benign Government on behalf of the people of the Kayakumari district, because the long-desired and long-felt need of that area, namely, the Poigai Anicut Scheme has been included in the programme for the current year. So, on behalf of the people, I am bound to thank this Government for taking up that work.

In the matter of implementing social welfare schemes, Sir, no one can deny that our Government rank first. Tamil Nadu stands first in the matter of implementation of such schemes when compared to the other States in the whole of India. Especially, the scheme now envisaged for the construction of houses for the fisherfolk and also the Benefit Scheme envisaged in this Budget for the weavers go to show that wherevet any developmental programme is worked out or any such Programme is sought to be worked out, this Government have their eyes on the common man and the people at the bottom of the society, like the fisherfolk or the weavers who are distressed and who are in a state of poverty. So. in that respect also this Budget needs appreciation.

Coming to the benefits to the Government servants, it is an admitted fact that whenever prices rise, it is a need of the Government servants that their pay should be increased. Similarly, it is a fact that whenever pay and allowances are increased, naturally sudden further increases also come to help the already rising prices. Some hon. Members have been suggesting here that even after the increase now given, the increase in emoluments is not on a par with that of the Central Government employees.

[1975 மார்ச் 6

MR. CHAIRMAN : That is democracy. Democracy may be awfully bad, but it is better than any other form of Government. There is no democracy without Opposition. The Opposition may express their ideas.

THIRU C. RUSSEL RAJ : Sir, the principles of economics are that when pay is increased, naturally prices rise and when prices rise, again there will be a demand for higherwages. So much so, it is also a grievance that the present increase is not on a par with the Central Government scales of pay and allowances. May I humbly submit that, as suggested by the hon. Member Thiru Damodaran, the only solution for controlling prices and inflation, is increased production of all commodities ? Of course, issue of currency and bringing out black money are also other preventive steps. But the progressive step is only increased production.

Sir, human needs are increasing day by day ; man's desire to satisfy those wants is also increasing day by day. At such a stage, the commen man's viewpoint is only the State Government, and he feels as if the State Government alone were responsible for satisfying the people's wants. So, it becomes an added responsibility of the party of the State Government to create circumstances for the economic development of the common man. It is out of this sheer necessity that the Centre-State relationship has to be reconsidered. Perhaps, when the Constitution was framed in those days, the economic as well as the political situation would have been different. Now, conditions have changed a lot. So, in view of the changed conditions, it is high time for the Centre to think about giving some of its powers to the State Governments so that the State Government which is in close contact with the people can take immediate steps to redress the grievances of the people in the State. Sir, anything which is evolved out of necessity has never failed. Now, for the time being, the Centre may delay the issue saying that it will weaken the Centre ; or they may advance an argument that when we want more powers, it gives room for separation. My humble submission, at this moment is, out of sheer necessity and experience this notion has come forward and when anything comes out of sheer necessity, it is inevitable and indispensable that in the near future or a bit later surely this goal will be achieved. Only then, the ordinary man who expects something to be done immediately can get something done by the State Government. Unforunately, many may criticise. But, actually, there is no single instance of a single power being kept idle by the State Government. Their argument is to the effect that the powers given to the State Government are not utilised and then why the State Government should want more powers. Can thay show at least one instance in which the power is being kept idle ? All the powers available to the State Government have been used to the maximum extent to meet the situation. When something more is to be done, the State has no



1975 மார்ச் 6] [Thiru C. Russel Raj]

power. The Central Government should part with its powers in favour of the State Government earlier. Otherwise, the idea will be created that the Central Government are evading these things and have been standing in the way of the local development and one day or other the public will surely find fault with them. I am sure the Central Government will not give room for such long arguments but will soon come forward to discuss with the Chief Minister and other prominent leaders of political parties and come to the conclusion to share some of their powers and also responsibilities with the State Government so that the ordinary man may immediately get relief at least in times of necessity and with the hope that they will come forward soon, I retire with thanks.

(பிற்பகல் 4-50)

*திரு கு. மா. பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு தலைவரவர்களே, தமிழக அரசின் நிதி நிலை அறிக்கைபற்றி என்னுடைய கருத்தைச் சொல்ல வாய்ப்பு அளித்தமைக்கு, எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். பலவிதமான நெருக்கடிகளும், பற்றுக்குறைகளும் தொல்லைகளும், துயரங்களும் சூழ்ந்திருக்கின்ற இந்த நேரத்தில், அரசு எதைச் செய்தாலும் குறை கூறுவதற்கு என்றே நாக்கைத் நீட்டி வைத்திருக்கின்ற எதிர்க் கட்சியினரும், குறை பேச முடியாத வகையில் இந்த நிதி நிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதிலும் மதுவிலக்கை மீண்டும் அமுல்படுத்தியதால் ஏற்பட்ட இழப்பு, குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதால் ஏற்படக்கூடிய இழப்பு, எதிர்பாராது ஏற்பட்ட வறட்சிப் பணிகளுக்கு ஏற்படக்கூடிய பெரும் செலவு, இத்தனையும் சமாளிக்க வேண்டிய நிலைமையில் தமிழக அரசு இந்த பட்ஜெட்டைத் தயாரித்திருக்கிறது. ஆகையால், என்னென்ன புது வரிகள் போட வேண்டியிருக்குமோ, எந்தெந்த வரிகளை உயர்த்த வேண்டியிருக்குமோ; இப்படிச் செய்தால் மக்கள் பாதிக்கப்படுவார்களோ, ஆளுங் கட்சியினுடைய பெயர் பாதிக்கப்பட்டுவிடுமோ என்றெல்லாம் நாங்கள் அஞ்சிக்கொண்டிருந்தோம். அஞ்சுவதற்கு அஞ்சுவது அறிவுடைமை, அஞ்சுவதற்கு அஞ்சாமை பேதமை என்ற கருத்தை வள்ளுவப் பெருந்தகை திருக்குறளில் எடுத்துக் காட்டியிருக்கிறார். அப்படி வரி விதிக்க அஞ்ச வேண்டிய நிலை இன்றைய நிலை. ஆனால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நிதி நிலை அறிக்கையைப் பார்த்தால், நான் முன்பு குறிப்பிட்ட பிரச்சினைகளையெல்லாம் சமாளிக்கின்ற பொறுப்புகளுக்கு அப்பால், இன்னும் சில புதிய திட்டங்களும் உருவாக்கப்பட்டிருக்கின்றன ; நெசவாளர்கள் பாதுகாப்புத் திட்டம் ; திக்கற்ற அனாதைச் சிறுவர்களுக்கும், ஆதரவற்ற கைம் பெண்களுக்கும் உதவி அளிக்கும் திட்டம் ; இரண்டாயிரம் ஆசிரியர்களை ரூ. 14 லட்சம் செலவில் நியமிக்கின்ற திட்டம் என்று இந்தச் செலவினத் திட்டங்களை எல்லாம் பார்க்கின்றபோது எந்த அளவுக்கு வரி உயர்த்தப்படுமோ என்று நான் அஞ்சினேன். ஆனால் மொத்தமான வரி உயர்வு ஆறு கோடிதான் என்பதைப் பார்க்கின்றபோது, நமது முதலமைச்சர் அவர்கள் வரியை மிகவும் சிறிய அளவில்தான் உயர்த்தியிருக்கிறார் என்பதை உணர முடிகிறது. இந்த வரி எந்தெந்தப் பொருள்களின் மீது, எப்படி உயர்த்தப்பட்டிருக்கிறது என்று பார்த்தால், ஏழை மக்களுக்குக் கொஞ்சம்கூட பாதகம் ஏற்பட்டு

[திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்] [1975 மார்ச் 6

விடக்கூடாது என்று பயந்துகொண்டே வரியை உயர்த்தியிருக்கின்றார் என்பது தெளிவாகத் தெரிகிறது. குறிப்பாக ஏழை மக்கள் பயன்படுத்தும் காப்பி, தேயிலை போன்ற பொருள்களுக்கு வரி 5½ சதவீதமாக இருந்ததை, அரை சதவீதம் உயர்த்தி ஆறு சதவீதமாக ஆக்கியிருக்கிறார். எண்ணெய், பிண்ணாக்கு, பருப்பு போன்ற பொருள்களுக்கு 3½ சதவீதமாக வரி இருந்ததை 4 சதவீதமாக்கி அரை சதவீதம் மட்டும் உயர்த்தியிருக்கிறார். ஏழைகள், சாதாரண மக்கள் பயன்படுத்தும் மின் விளக்கு, மின் விசிறி, போன்றவற்றிற்கு 9 சதவீதமாக இருந்த வரியை அப்படியே வைத்திருக்கிறார். ஆனால் செல்வர்கள் பயன்படுத்தும் மின்சார அரைவை இயந்திரம், துணி துவைக்கும் இயந்திரம், குளிர் சாதன இயந்திரம் போன்றவற்றின் மீது 9 சதவீதமாக வரி இருந்ததை 12 சதவீதமாக்கி, மூன்று சதவீதம் உயர்த்தியிருக்கிறார். வாசனை அலங்காரப் பொருள்கள் மீதும் 9 சதவீதமாக வரி இருந்தது 12 சதவீதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இவைகளைப் பார்க்கின்றபோது தாங்கிக்கொள்ளக்கூடிய இடங்களில் கை கொஞ்சம் தாராளமாக நீண்டிருக்கிறது. தாங்க முடியாத இடங்களில் சிக்கனமாக அரை சதவீதம் மட்டுமே உயர்த்தியிருக்கிறார். இதிலிருந்து நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய எண்ணம் யார் பக்கம் இருக்கிறது என்பது நன்கு விளங்குகிறது. முதல்வருடைய பிறந்த நாள் ஒவ்வொன்றின்போதும் அறிவிக்கின்ற திட்டங்கள் ஏழைகளுக்கு நல் வாழ்வு அளிப்பதாகவே இருக்கும். பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம், குருடர்களுக்குக் கண்ணொளி வழங்கும் திட்டம், மீனவப் பெருங்குடி மக்களுக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் போன்ற பல சமுதாய நலத் திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கெல்லாமாகச் சேர்த்து வரி உயர்வு செய்யப்பட்டுள்ளது ஆறு கோடிதான்! 537 கோடி ரூபாய்க்குச் செலவுத் திட்டங்கள் போடுகின்றபோது, ஆறு கோடி ரூபாய்க்கு மட்டும் வரி உயர்த்தி இருக்கிறது என்பது அதிகமில்லை. மத்திய அரசாங்கத்திற்கோ மொத்தம் தேவையான வரி உயர்வே 513 கோடி ரூபாய். இதில் 288 கோடி ரூபாய்க்கு மட்டும் இப்பொழுது வரிகள் விதித்திருக்கிறது. மீதியுள்ள 225 கோடி ரூபாய்க்குத் துண்டு விழுந்துள்ளதாக அப்படியே வைத்திருக்கிறது. ஆனாலும் அந்தத் தொகைக்கு வரி விதிக்கவில்லை என்றும் கருதி விடக் கூடாது. இடைக்கால பட்ஜெட் என்று பிறகு போடுவார்கள். சென்ற ஆண்டும் அப்படித்தான் போட்டிருக்கிறார்கள். அதுவும் ஏழை மக்கள் தலையில்தான் விழப்போகிறது. இப்பொழுது மத்திய பட்ஜெட் மூலம் போடப்பட்டிருக்கின்ற வரிகள் யார் மீது விழுகின்றன என்றும், நம்முடைய அரசு போட்டிருக்கின்ற வரிகள் யாருக்கு என்பதையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இது தெரியும். இங்கே மத்திய அரசாங்கம் எந்தெந்தத் துறையில் வரி போட்டிருக்கிறதென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏழைகள் உபயோகப்படுத்துகின்ற சர்க்கரை, தேயிலை, பீடி, சிகரெட், அலுமினியப் பாத்திரங்கள், (ஏழைகள்தான் அலுமினியப் பாத்திரங்களை உபயோகப்படுத்துவார்கள் என்பது தெரியும்), பெட்ரோல், (இதன் மூலம் பஸ்ஸில் போகக்கூடிய ஏழை எளிய மக்கள் தான் அதிகக் கட்டணம் செலுத்திப் பிரயாணம் செய்ய வேண்டும்.) இவைகளுக்கெல்லாம் வரி உயர்வை மிக அதிகமாகவே



63158

1975 மார்ச் 6] [திரு. கு. மா. பாலசுப்பிரமணியம்]

செய்திருக்கிறார்கள். சீமான்கள் மாளிகை கட்டும் சிமிண்டின் மீது போடப்பட்டுள்ள வரியின் மூலம் ரூ. 16 கோடி தான். கஸ்டம்ஸ் வரியின்மூலம் 34 கோடிதான் தொழிற்சாலை வரிகூட ரூ. 19½ கோடி தான். ஆனால் சர்க்கரை மீது போடப்பட்டுள்ள வரி மூலம் 30½ கோடி ரூபாய்! ஜவுளி மூலம் ரூ. 49 கோடி! இப்படி மத்திய அரசினர் எங்கே அதிக வரியை விதித்திருக்கிறார்கள் என்பதைக் கவனித்துப் பார்க்க வேண்டும். ஏழைகள் பயன்படுத்துகின்ற பொருள்களின் மீது அதிக வரியையும், பணக்காரர்கள், வசதி படைத்தவர்கள் பயன்படுத்துகின்ற பொருள்களின் மீது குறைந்த வரி உயர்வையும் செய்திருக்கிறார்கள். இதன் மூலம் இரண்டு அரசாங்கங்களுக்கும் உள்ள மனப்பான்மையும் நன்கு தெரிகிறது. அது மட்டுமல்ல, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீனவர்களுக்கு வீடு கட்டும் திட்டம், அரசு சிப்பந்திகளுக்கு வீடு கட்டும் திட்டம், குடிநீர் வசதி செய்து கொடுப்பதற்காக இப்படிப் பல புதிய திட்டங்களை இந்த நெருக்கடி நேரத்திலும் செய்யக் கருணையுடன் முன்வந்து, இத்தனைக்குமாக ஆறு கோடி ரூபாய்க்கே வரி உயர்வு செய்திருக்கின்றார். இதில் தமிழ் வளர்ச்சிக்கு ஒரு கோடி ரூபாய் என்று கூறப்பட்டிருக்கிறது. இவ்வளவு புதுத் திட்டங்களுக்குப் பலப் பல கோடி ரூபாய் நிதி ஒதுக்கிடுகையில், தமிழ் வளர்ச்சிக்கு இன்னும் கொஞ்சம் அதிகம் போட்டிருக்கலாமே என்றுதான் நான் கருதுகிறேன்.

"அஞ்சுவதற்கு அஞ்சுவது அறிவுடைமை" என்பதற்கு ஒப்ப, வரி விதிப்பதற்கு அஞ்சுகின்ற நிலைமையில் தமிழக அரசு இருந்து வருகிறது. மக்களுடைய வாழ்க்கைத் தரம் மிகவும் சிக்கலாகிக் கொண்டும் விலைவாசி மிகவும் உயர்ந்துகொண்டே போய், மக்களுடைய வாங்கும் சக்தி குறைந்து கொண்டும் வருகின்ற இந்த நேரத்தில் மேலும் வரி உயர்வு செய்யக கூடாது என்று அஞ்சியே இந்த நிதி நிலை அறிக்கையைத் தமிழக அரசு தயாரித்து இருக்கிறது. அதே நேரத்தில் மத்திய அரசாங்கமோ கொஞ்சம் கூட அஞ்சாமல் (விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று பேசிக கொண்டே) வரி உயர்வை மிகுதியாகச் செய்து கொண்டே போகிறது. 1955-ல் மத்திய அரசாங்கத்தின் பட்ஜெட் ஆயிரம் கோடி ரூபாய்க்குக் குறைவாகத்தான் இருந்திருக்கிறது. கடந்த ஆண்டு 1974-75 ஆம் வருஷத்திய பட்ஜெட் 8,865 கோடி ரூபாய். இந்த ஆண்டு அதாவது 1975-76-க்கு 10,764 கோடி ரூபாய்க்கு பட்ஜெட் போட்டிருக்கிறது. இருபது வருடத்திற்குள் பத்து மடங்கு அதிகமாகியிருக்கிறது. இப்படி வரி உயர்வு செய்தால், விலைவாசி ஏறுவது எதிர்பார்க்கப்பட வேண்டியதுதானே. தமிழ் நாட்டில் எளிய மக்களுக்காகவே பாடுபடுகின்ற அரசாங்கம் இருந்து வருவதால், ஹரிஜனங்களுக்காக இந்த திட்டத்தில் 11 கோடி ரூபாய் செலவழிக்கிறது. ஆனால் மத்திய அரசாங்கம் ரூ 50 இலட்சம்தான் செலவிடுகிறது. பிற்பட்ட மக்கள் நலனுக்காக தமிழக அரசு ரூ 6 கோடி ஒதுக்கியிருக்கிறது. ஆனால் மத்திய அரசாங்கம் ஒன்றுமே இல்லை. இந்த நேரத்திலும் அஞ்சாமல் வரிச் சுமையை ஏற்றி, மக்களுடைய வாழ்க்கையைச் சிக்கலாக்கி வருவது மத்திய அரசாங்கம்தான் என்பது நன்கு விளங்குகிறது. இரண்டு அரசாங்கமும் வரி போடுவதில் மத்திய அரசாங்கமே அதிகமான வரியைப் போட்டாலும், வரி உயர்வுக்காக

மாநில அரசைத்தான் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர், அந்தப் பழிச் சொல்லுக்கு மாநில அரசுதான் ஆளாக்கப்படுகிறது. அபாண்டமாக இந்த நிலைமை மாநில அரசுக்கு ஏற்படுகிறது.

(பிற்பகல் 5-00)

நாங்கள் இதனால் தான், மாநில சுயாட்சி வேண்டும் என்கிறோம். எங்கே சுற்றினாலும் எங்களுக்குத் தெரிந்த ஒரே மருந்து மாநில சுயாட்சி தான். அதைப்பற்றி இன்றையப் பத்திரிகையிலே ஒரு செய்தி பார்த்தேன். மாநில சுயாட்சி தரமுடியாதென்று இந்திராகாந்தி அம்மையார் பேசியதாகச் செய்தி வந்திருக்கிறது. இந்த வார்த்தையை நான் ஏற்கனவே யாரிடமோ கேட்ட ஞாபகம். யார் சொன்னது என்று நான் சிந்தித்துப் பார்த்தேன், இது சர்வாதிகார வெறியன் யாகியாகான் ஜனநாயகவாதியான முஜிபுர் ரஹ்மான் அவர்களைப் பார்த்துச் சொன்ன வார்த்தை. அந்த வார்த்தையைச் சொன்னவன் என்ன ஆனான், அந்த வார்த்தையைக் கேட்டவன் என்ன ஆனான் என்பதை வரலாற்றிலிருந்தே நாம் தெரிந்து கொள்ள முடியும். ஆனால் அந்த சர்வாதிகார வெறியன் சொன்ன வார்த்தையை, ஜனநாயகத் தலைவி என்று நாம் நம்பிக் கொண்டிருக்கிற இந்திரா காந்தி அம்மையார் இன்று சொல்லியிருக்கிறார்களே. அதிலும் எந்த இந்திரா காந்தி அம்மையார், அதே முஜிபுர் ரஹ்மானுக்கு ராணுவ உதவிகள் தந்து........................

மாண்புமிகு மேலவைத் தலைவர் : பிரதம அமைச்சர் அவர்களை ரொம்பக் கடுமையாக விமர்சிக்கக்கூடாது.

திரு. கு. ம. பாலசுப்பிரமணியம் : சரி. இப்போது அப்படி அவர்கள் சொல்வதற்குக் காரணம் என்னவென்றால், பலமான மத்திய ஆட்சி தான் இருக்க வேண்டும் என்கிறார்கள். அப்படி இல்லாவிட்டால் பலவீனமான மாநிலங்களுக்கு எப்படி உதவ முடியும் என்று ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். இப்போது என்ன உதவினார்கள்? தமிழ் நாடு தண்ணீர் வசதியிலே பலவீனமான மாநிலமாக இருக்கிறது. வறட்சிப் பணிகளுக்குச் செலவிட முடியாதபடி நிதி வசதியிலே பலவீனமான மாநிலமாக இருக்கிறது. இதற்கெல்லாம் மத்திய அரசாங்கம் என்ன உதவியது என்று பார்த்தால் ஒன்றுமே இல்லையே! அதோடு இந்த "உதவி" என்ற சொல்லையே நான் வெறுக்கிறேன். உதவி என்னை யார் யாருக்கு உதவுவது? இந்திரா காந்தி அம்மையாருடைய பாட்டனார் காங்கிரஸ் கட்சிக் காரியாலயத்திற்காக "ஆனந்தபவன்" என்ற மாளிகையை எழுதிக்கொடுத்தார்கள். அதுதான் உதவி. ஆனால் மக்களிடத்திலிருந்து வசூலிக்கிற வரிப் பணத்தை, மக்கள் நலத் திட்டத்திற்காகப் பகிர்ந்து கொடுப்பதை "உதவி" என்று சொல்வதா? யாருடைய சொத்தை யார் உதவி கொடுப்பது இது பாட்டனார் சொத்து அல்லவே! மக்களிடம் வரிப்பணம் வசூலிக்கப்படுவதே மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காகத்தான். அதை உதவி என்று சொல்வது தவறு, பகிர்ந்து கொடுத்தல் என்ற சொல்லைத்தான் பயன்படுத்த வேண்டும். அதோடு காஷ்மீரத்துக்கு சுயாட்சி தந்திருப்பதை "ஒரு தனித்தன்மை வாய்ந்த நிலை" என்று நமது பிரதமர் காரணம் கூறியிருக்கிறார்கள். அந்த "தனித்தன்மை வாய்ந்த நிலை" என்ன என்பது நமக்குத் தெரியும். பொதுவாக மாநில சுயாட்சி கேட்பது தவறு என்று சொன்னால், அதற்காக போராட்டம் நடத்தி, அதற்கான செயல் திட்டத்திலே நாம் இறங்க வேண்டும் என்ற எண்ணத்திற்கு நம்மைத் தூண்டுகிறார்களா என்பது தெரியவில்லை. "என் உயிருக்கு ஆபத்து" என்று இந்திரா காந்தி அம்மையார் இப்போது அடிக்கடி முறையிடுகிறார்கள். ஆனால் அந்த அம்மையாரிடம் "எங்களுடைய உயிருக்கு ஆபத்து, பாதுகாப்பு வேண்டும்" என்று இங்கிருந்து தந்திகள் போகின்றன. அவருக்கே உயிருக்கு ஆபத்து என்று அயல் நாட்டு நிருபர்களிடம் முறையிடுகிறார். இங்கே இருப்பவர்கள் "எங்கள் உயிருக்குப் பாதுகாப்பு வேண்டும்" என்று அவரிடம் கேட்கிறார்கள். யாருக்கு யார் பாதுகாப்பு கொடுப்பது என்று தெரியவில்லை. பிறருக்குத் தீங்கு செய்யாதவர்கள், பிறர் பொருட்களை அபகரிக்காதவர்கள், பிறர் உரிமையை அபகரிக்காதவர்கள், யாருக்குமே அஞ்ச வேண்டியதில்லை. பிறருக்குத் தீங்கு செய்தவர்கள் தான் தனக்கு யாராவது தீங்கு செய்வார்கள் என்று அஞ்ச வேண்டிய நிலைமை இருக்கும். இவர்கள் நம்முடைய உரிமைகளை அபகரித்துக்கொண்டிருக்கிறார்கள், ஆகையினால் தான் உயிருக்கு ஆபத்து, உயிருக்கு ஆபத்து என்று குரல் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மாநில சுயாட்சி தருவது என்பது காந்தியடிகள் தந்த வாக்கு. காங்கிரஸ் கட்சி தந்த வாக்கு. அந்த வாக்குக்கு துரோகம் செய்துவிட்டு, மத்திய ஆட்சியை ஏகாதிபத்தியம் வாய்ந்ததாக நடத்திச் செல்ல அவர்கள் திட்டமிட்டார்கள் என்றால் அது நடக்காது. இரண்டு நாட்களுக்கு முன்னால் பேசிய நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். அவருக்குப் பின்னாலே அணிவகுத்துச் சிறை செல்லத் தமிழர் பெரும் கூட்டம் தயாராக இருக்கிறது என்பதைச் சொல்லி, இந்த மாநில அரசாங்கத்தினுடைய வரி உயர்வு மிகக் குறைந்த வரி உயர்வு, மிக நியாயமான வரி உயர்வு, பயந்து பயந்து செய்திருக்கின்ற வரி உயர்வு என்ற கருத்திலே இதை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.





திரு. இளம்பரிதி : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே 1975-76 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையினை மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் பேரவையிலும், மேலவையிலும் சமர்ப்பித்ததை மகிழ்வுடன் வரவேற்று நன்றி சொல்லும் முகத்தான் பாராட்டி சிலபல சொல்ல விழைகிறேன். தாது வருஷப் பஞ்சத்தை நான் பார்த்ததில்லை. அப்படிப் பார்த்தவர்கள், கேள்விப்பட்டவர்கள் அந்தப் பஞ்சத்தைவிட தற்போது ஏற்பட்டுள்ள வறட்சி மிகவும் மோசமானது என்று கூறத்தக்க வகையில் கடும் பஞ்சம் ஏற்பட்டுள்ளது. ஒரு சொட்டு மழை கூட இல்லாமல், பருவமழை பொய்த்து கடந்த இரண்டு மூன்றாண்டுகளாக வானம் வெறிச்சோடி, வையகம் வறண்டு கிடக்கும் நிலையினைப் பார்க்கிறோம். சில பேர் தி.மு.க.-க் காரர்களால் இந்தப் பஞ்சம் வந்து விட்டதுபோல் பாவனை செய்து பேசுகிறார்கள். ஒரு பஞ்சத்தை உண்டாக்கக் கூடிய மாய மந்திர இந்திர ஜாலங்கள் தி.மு.க.வுக்குத் தெரிந்திருக்குமானால், இந்த நாட்டில் கெட்டதையே பேசிவரும், தி.மு.க.வுக்கு எதிராகத் தப்புப் பிரச்சாரம் பண்ணும் கட்சிகளை இல்லாமல் செய்திருப்போம். அதைவிட மோசமாக எழுதிவரும் ஏடுகளை இல்லாமல் செய்திருப்போம். என்ன

செய்வது, நாங்கள் எதையும் நேருக்கு நேர் சந்தித்து, கருத்துக்கு கருத்து வைத்து, வாதத்துக்கு வாதம் என்ற வகையில் வெள்ளை மனதோடு நேர்மையான அரசியல் நடத்துகிறோம். போவோம் குணங்குடிக்கு எல்லோரும் என்று குணங்குடி மஸ்தானை அழைத்ததுபோல் எதிர்க் கட்சிக்காரர்களை நல்ல ஜனநாயகத்துக்கு வாருங்கள் என்று அழைக்கிறோம். வருவோர் வரட்டும், வராமல் இருப்போர் கெட்டுத் தொலையட்டும் என்று குணங்குடி மஸ்தான் பாணியிலே நடக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால் மாண்புமிகு கலைஞர் அவர்கள் கொண்டு வந்த இந்த பட்ஜெட் எல்லேரையும் மனநிறைவு செய்திருப்பதையும், நன்றி சொல்ல வைத்திருப்பதையும் நினைத்து, தி.மு.கழகம் பெருமையடைகிறது. குமரி மாவட்டம் சமஸ்த்தானத்தின் கீழிருந்தபோது, திருவிதாங்கூர் மகாராஜா காலத்தில் எழுப்பப்பட்டு நிறைவேறாமல் இருந்த கோரிக்கைகள் தமிழகத்தின் தலைமகனும் அண்ணாவின் நேர் வாரிசாம் செந்தமிழ் காவலனும் கலைஞர் அவர்களால் இன்று நிறைவேற்றப்பட்டு வருகிறது என்று நண்பர் திரு. சங்கரலிங்கம் சந்தோஷப்பட்டார். எப்பொழுதும் வறட்சி என்றிருக்கும் இராமநாதபுரம் மாவட்டம் இந்தக் கடும் வறட்சியால் தாக்குண்டு நிலைகுலைந்து போயிருக்குமே என்று அலறியடித்துக் கொண்டு தாயினும் சாலப்பரிந்து, வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட்டு மக்கள் கோரிக்கைகளை அந்தந்த இடங்களிலே ஏற்று அங்கேயே ஆணை பிறப்பித்த மனிதாபிமானத்தையும், மாசற்ற மாண்பையும், கலைஞரது அருளுடைமையையும், ஆளுந்திறமையையும் தெளிவாக்குகிறது.

மாண்புமிகு மேலவை துணைத் தலைவர் தலைமை)

100 ஆண்டுகளுக்கு மேலாகியும் மராமத்துச் செய்யப்படாத பெரிய கண்மாய்களையும், வாவிகளையும், குளங்களையும் ஆழப்படுத்தும் ஆணையைப் பிறப்பித்தார்கள் என்று மதிப்பிற்குரிய நண்பர் திரு. தென்னரசு, திரு. தங்கப்பாண்டியன் ஆகியோர் குரலிலே நன்றி தெரியும் வகையில் சந்தோஷப்பட்டார்கள். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இவ்வளவு கடும் பஞ்சத்திலும் அகவிலைப்படி உயர்வைப் பெற்றதற்கு தங்களுடைய மகிழ்ச்சியை நன்றியாகத் தெரிவித்தார்கள். இப்படி எல்லோருக்கும் மனநிறைவும் மகிழ்ச்சியும் தரக்கூடிய பட்ஜெட்டை கலைஞரைத் தவிர வேறு யாரால் கொண்டுவர முடியும்? ஆனால் ஒரு சிலர் இதுதான் உங்கள் கடைசி பட்ஜெட் என்று சொல்லுகிறார்கள் இதிலே என்ன அதிசயம் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை.

திரு. ஏ. பாலசுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, கடைசி பட்ஜெட் என்று சொல்வதிலே என்ன அதிசயம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள், அதை விளக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. இளம்பரிதி: ***..........

ஆனால் ஒன்று 1976-லே நடைபெறவிருக்கிற தேர்தலுக்கு முன்பு இதுதான் கடைசி பட்ஜெட், தேர்தலுக்குப் பின்பும் .......



மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அதைக் கையில் வைத்துக் கொள்ளலாம். அப்படியே படிப்பது முறையல்ல. பலமுறை இது ஆட்சேபிக்கப்பட்டு, தீர்ப்பாகியிருக்கிறது.

திரு. இளம்பரிதி: தேர்தலுக்குப் பின்பு நாங்கள்தான், அறிஞரும் எங்கள் கலைஞர்தான் பட்ஜெட் சமர்ப்பிப்பார்கள் என்பதை இந்த மதிவாணர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அப்படித் திட்டவட்டமாகச் சொல்லுவதற்கு என்ன காரணம்? இந்திரா அலை ஓய்ந்தது. ஜெயப்பிரகாஷ் அலை நாட்டு மக்களை ஈர்த்தது என்பதற்கு அடையாளமாக அண்மையில் நடைப்பெற்ற இடை தேர்தல்களில் ஆளும் காங்கிரஸ் மண்ணைக் கவ்வியது. இந்த நிலையில் திடீர்த் தேர்தலைப் பற்றி பேசிய இந்திராஜிக்கு இது நான் அழைக்க வில்லை, ஜெயப்பிரகாஷ் நாராயணன் ரொம்ப மதிப்போடு அழைக்கிறார், காந்திஜி, நேருஜி, இந்திராஜி, கக்கன்ஜி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: வடக்கிலே எல்லோரையுமே இப்படிதான் அழைப்பார்கள்.

திரு. இளம்பரிதி: 1976-ல் தேர்தல் நடத்தக்கூடிய தைரியம் இருக்குமா என்பதை அவரது கூட்டை விரும்பும் ஓட்டை உடைசல் அரசியல் வாதிகள் சிந்திக்கட்டும். ஆதிபராசக்தி, அன்னை வேளாங்கண்ணி என்பதெல்லாம் பழங்கதையாகிவிட்டது. அவரது கூட்டை விரும்புகிறவர்களுக்கும் இதுதான் கதி என்று ஆகாமல் இருக்குமா இந்த நிலையில் பொதுத் தேர்தலே வராமல் இருக்கலாம். அப்போது இது தான் கடைசி பட்ஜெட் என்று கொக்கரிக்கிறவர்களே, அடுத்த பட்ஜெட்டும் கலைஞருடையதுதான். சமர்ப்பிப்பார் என்பதிலே அச்சம் என்ன இருக்கிறது. இதற்கு அதிகாரமில்லை, அதற்கு அதிகாரமில்லை என்று நாம் சுட்டிக்காட்டினால், எதற்கு அதிகாரம் இல்லை என்று சொல்லுகிறீர்களே. பின் ஆட்சியை விட்டு ஓடுவதுதானே என்று சொல்லுகிறார்கள். நாம் ஆட்சியைவிட்டு ஓடுவதற்காகவா இன்றைய தினம் ஆட்சியைப் பெற்றிருக்கிறோம். நாம் ஆட்சியை விட்டு ஓடாமல் இருப்பதற்கும் இனி வந்து உட்காருவதற்கும் இந்த ஆட்சி, தனியாட்சி உள்ளதாக இந்த நாட்டு மக்களுடைய வாழ்க்கையை நிறைவுபடுத்துவதாக இருக்க வேண்டுமென்ற ஒரே குறிக்கோளில்தான் திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறதே தவிர, மற்றவர்களைப் போல நீங்கள் போய்விட்டால், அந்தப் பொம்மை நாற்காலியையாவது நாங்கள் பிடித்து உட்கார்ந்துகொண்டு ஆசை பார்ப்போம் என்ற கேவலமான புத்தி எங்களுக்கு இல்லை என்பதை நான் இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றும் நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் மிக அழகாகவே சொன்னார்கள். அண்ணாவின் பெயரை இன்றையதினம் விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ளுகிறேன். அண்ணாவைப் போன்ற ஒரு அரசியல் மேதை, அண்ணாவைப்போன்ற ஒரு வீரம்செறிந்த தமிழ் மகன்

***Expunged as ordered by the Chair

அண்ணாவைப்போன்ற தமிழ் உணர்வும், தமிழ்நாட்டினுடைய தன் மானமும், தமிழ் மக்களுடைய கலாச்சாரமும், கலையினுடைய பெருமையும், எல்லா நாடுகளிலும் பரவ வேண்டுமென்று தன் வாழ்நாள் பூராவும் கனவு காணும் ஒரு உத்தமமான தமிழ் மகன் மாநில சுயாட்சி என்பதைத் தவிர வேறு என்ன தன் வாழ்நாளிலே கனவாய் கண்டுகொண்டிருப்பான்?

(பிற்பகல் 5-10)

* * * * *

இன்றையதினம் அண்ணாவினுடைய பெயரைப் பயன்படுத்திக்கொண்டு அண்ணா மாநில சுயாட்சிபற்றிச் சொல்லவில்லை என்று சொல்கின்றார்கள் ஓரிடத்திலே. இன்னொரு இடத்திலே என்ன சொல்லுகிறார்கள் என்றால் நாங்கள் மாநில சுயாட்சியை, அந்தக் கருத்தை எதிர்க்கவில்லை என்கின்றார்கள். பின் ஏன் அதைப் பின்பற்றக்கூடாது என்று நாம் கேட்டால் அண்ணா சொல்லவில்லையே என்று சொல்கின்றார்கள். அண்ணா சொல்லி விட்டாரே என்று ஆதாரங்களை அடுக்கடுக்காகக் காட்டினால் அவர்கள் நீங்கள் தீர்மானங்கள் போடவில்லையே என்று சொல்கின்றார்கள். இதை நீங்கள் கவனிக்கவேண்டும். நாங்கள் தீர்மானங்கள் போடாதது ஒரு பக்கம் இருக்கட்டும். அண்ணா போன்ற பெரிய அரசியல் மேதை தன் வாழ்நாள் பூராவும் ஏகாதிபத்தியத்தை, இந்த நாலரை கோடி தமிழ் மக்களுக்காக, தமிழகத்திற்காக, தன் வாழ்நாள் முழுவதும் இந்தியை எதிர்த்து, அது ஏகாதிபத்தியத்தின் உருவிலே வந்தாலும், ஆதிபத்தியத்தின் உருவிலே வந்தாலும், அதை எதிர்த்து வெற்றி கொண்டார். அப்பேர்ப்பட்டவர் மத்திய ஆட்சியை எந்த ஆயுதத்தின் மூலம் எதிர்ப்பார் என்று *** கனவு காணுகின்றார்கள். அருள்கூர்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதற்கு ஒரே ஒரு ஆயுதம் மாநில சுயாட்சியே தவிர, வேறு எதனாலும் முடியாது. ஏனென்று கேட்டால், நான் திட்டவட்டமாகச் சொல்கின்றேன், காங்கிரஸ்காரர்கள் ஆண்டகாலத்திலே மத்தியிலேயும் அவர்கள் ஆட்சி, மாநிலத்திலேயும் அவர்கள் ஆட்சி, ஒரே கட்சி, ஒரே ஆட்சி. ஆனால் அவர்கள் கேட்டுப்பெற்றது என்ன? தமிழ் நாட்டினுடைய கோரிக்கைகளையெல்லாம் பெற்றார்களா? ஒரே கட்சி என்ற அடிப்படையிலே, அவர்கள் வாய் பொத்தி, கைகட்டி, சேவகம் செய்கின்ற பாணியிலே, நம்முடைய கழகத்தினர்கள் சொல்கின்ற பாணியிலே "காவடி தூக்கும்" பாணியிலே, சேவடி தொழுதுக் கொண்டிருந்தார்கள். ஒரே கொடி ஒரே ஆற்றல் என்கின்றபோது அவர்களுக்கு உண்மையிலேயே இன்றையதினம் "இண்டக்ரேஷன்" என்று சொல்கின்றார்களே, அந்த ஒருமித்த ஒருமைப்பாடு என்று ஒன்று இருக்குமானால், தமிழகம் திரு. வெங்கட்ராமன் காலத்திலேயே பெரிய அளவிலே வளர்ந்திருக்கும். திரு காமராசர் காலத்திலே வளர்ந்திருக்கும், திரு. பக்தவத்சலம் காலத்திலேகூட வளர்ந்திருக்கும் நீண்டு இருக்கலாம். அப்படி நீளாமல் இருந்ததற்கான காரணம் என்ன? ஒரே கட்சி என்ற காரணம்தான். அவர்கள் விட்டுவிட்டார்கள், ஒரே கட்சி என்ற காரணத்தால். "ஐயே, மெத்தக்கடினம்" என்ற அரசியல் வாழ்வைத் தான் அவர்கள் கொண்டிருக்கின்றார்களே தவிர, எதிர்த்துக்கேட்டு

*** Expunged as ordered by the Chair.





அதட்டிக்கேட்டு தங்களுடைய உரிமையை, அந்தக்குரலை நிலைநாட்டி, தமிழ்நாடு பெறவேண்டிய நலன்களைப் பெற்றார்களில்லை. இந்த நாட்டின் 4½ கோடி மக்களுடைய தலைநாயகனும், தமிழ்நாடு பெற்றெடுத்த தமிழ்நாட்டின் மூத்த மகனும், சொல்லேறு உழவன், எழுத்தாளன், பேச்சாளன், பீடுடைய பேரறிஞன் நாட்டு மக்களைக் கவர்ந்திழுத்த தத் திருமகனும் அவர்தம் வாழ்நாளிலே மக்களின் நலன்களைக் கனவு கண்டான். ஆகவேதான் அண்ணாவுக்கு யாருக்கும் இல்லாத செல்வாக்கு. பண்டித நேரு அவர்களுடைய பூர்வோத்திரம் என்ன, *** மோதிலால் நேரு அவர்களுடைய பூர்வோத்திரம் என்ன அவர்களெல்லாம் ததாஸ்து, ததாஸ்து என்று சொல்லக்கூடிய அளவிலே பெரிய மனிதர்கள். சாதாரண குடியிலே பிறந்த பேரறிஞர் அண்ணாவுக்கு ஒரு லண்டன் படிப்புக்கூட படிக்காத அண்ணாவுக்கு, ஒரு சாதாரண பச்சையப்பன் கல்லூரியிலே எம். ஏ. படித்த அண்ணாவுக்கு இந்த 4½ கோடி தமிழ்நாட்டு மக்கள் செவிசாய்த்தார்கள், அவர்களுடைய சொல்லுக்குக் கட்டுப்பட்டார்கள் என்றால் அது எதனால்? இந்தத் தமிழ்நாடு, இந்தத் தமிழ் மாநிலம் உண்மையான எழுச்சியைப் பெற வேண்டும், உண்மையான தேசியப்பற்று, நலன்களைப் பெற்றாக வேண்டும் என்பதற்காக அண்ணா அவர்கள் காட்டிய வழியிலே சென்றார்கள். அண்ணா அவர்கள் தன்னுடைய வாழ்நாள் பூராவும் இந்த மக்களுக்காக களைப்பாறுகின்ற நேரத்திலும் அல்லது நாட்டு மக்கள் சந்திக்கின்ற நேரத்திலும், அது இரவாக இருந்தாலும் சரி, பகலாக இருந்தாலும் சரி, உண்ணுகின்ற நேரமாக இருந்தாலும் சரி, உறங்குகின்ற நேரமாக இருந்தாலும் சரி, கனவு கண்டுகொண்டிருந்தார்கள். அப்பேர்ப்பட்ட அண்ணா ஆட்சி வந்தபிறகு இந்த மத்திய சர்க்கார் மாநிலங்களை விலங்கால் பூட்டிவைத்து கைகால்களைச் சேர்த்து விலங்கிட்டு வைத்திருக்கின்ற கொடுமையை, சிறையிலே அடைத்திருக்கின்ற கொடுமையை நாம் ஆராயவேண்டும். இதிலே என்ன ஆச்சரியம் இருக்கிறது என்றால் அப்படிப்பட்ட அண்ணாவை விளம்பரப்படுத்திக்கொண்டு அவருடைய கொள்கைகளை பின்பற்றுகிறோம் என்று சிலர் சொல்கின்றார்கள். ஆகவே அருள்கூர்ந்து நாம் இதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்</u>: நீங்கள் பட்ஜெட்டைப்பற்றி சொன்னால் போதும். மற்றவர்களைப்பற்றி ஏன் சொல்லவேண்டும்? பட்ஜெட்டைப்பற்றிப் பேசுங்கள்.

<u>திரு. இளம்பரிதி</u>: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதுவும் பட்ஜெட்தான். ஆகவே அப்படிப்பட்ட அண்ணா அவர்களுடைய கருத்துக்களை நம்முடைய கலைஞர் அவர்கள் சீரும் சிறப்புமாகச் செயலாற்றிக் கொண்டு வருகின்றார்கள். இன்றைய தினம் இந்த மாநிலம் அடக்கப்பட்டு இருக்கிறது. இந்த மாநிலம் கடுமையான வறட்சியிலே அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றது. மேற்கு வங்காளத்திலே பஞ்சம் என்கின்றபோது............

**Expunged as ordered by the Chair.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவரவர்களே, உருக்கமாகவும், வேகமாகவும் பேசுகின்ற நேரத்தில் பயன்படுத்திய சில * * * சொற்களை நம்முடைய நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுவது நல்லது என்று கருது கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தப்படி, அந்த வார்த்தைகள் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுக்கப்படும். பேசுகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பட்ஜெட்டுக்கு வெளியேயுள்ள விஷயங்களைச் சொல்லக்கூடாது என்று கட்டளை இல்லை என்றாலும், வெளியேயுள்ள விஷயங்களைப்பற்றிப் பேசுவதும் முறையானது அல்ல. கண்டனத்திற்கு என்று வருகிறபோது, இப்போது இல்லாத திரு. மோத்திலால் நேரு, திரு. ஜவஹர்லால் நேரு இவர்களைப்பற்றியெல்லாம் பேசும்போது, வார்த்தைகளைக் கொஞ்சம் கண்ணியமாகச் சொல்ல வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. இளம்பரிதி : துணைத் தலைவரவர்களே, இந்த அவை எப்போதும் கண்ணியமானது என்று அறிந்திருக்கிறேன். இந்த அவைக்கு நான் புதியவன் என்றாலும், என்னுடைய உணர்ச்சிகளைப் பூரணமாகப் பிரதிபலிக்க வேண்டியது என் கடமை என்று நான் கருதுகின்றேன். இதிலே யாருக்காவது சங்கடம் இருக்குமானால், அவர்கள் என்னை தயவு செய்து மன்னிக்கவேண்டும்.

திரு. கே. ராஜாராம் : உறுப்பினர் அவர்கள் பேசும்போது திரு. மோதிலால் நேரு, திரு. ஜவஹர்லால் நேரு அவர்களைப்பற்றி யெல்லாம் ஒன்றும் குறைவாகப் பேசியதாகத் தெரியவில்லை. அவர்களெல்லாம் பெரிய குடும்பத்தினைச் சேர்ந்தவர்கள், அண்ணா அப்படிப்பட்ட பெரிய குடும்பத்திலே இல்லாமல் ஒரு சாதாரண குடும்பத்திலே இருந்து வந்தவர்கள் என்று தான் கூறினார்கள். அதை நான் கூர்மையாகக் கவனித்துத் தான் வந்தேன். ஆக ஒன்றும் இழிவாகப் பேசியதாகத் தெரியவில்லை. இருப்பினும் சபையிலே இல்லாதவர்களைப் பற்றி நாம்.............

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்; எதிர்க் கட்சித் தலைவர் சொன்னது பற்றித் தப்பு இல்லை. *** அவர்கள் கொஞ்சம் கவனித்திருக்க வேண்டும். அவையின் விதிப்படி அப்படியெல்லாம் இந்தச் சபையில் உபயோகிக்கக்கூடாது.

திரு. கே. ராஜாராம் : துணைத் தலைவரவர்களே, இந்தச் சபையில் இல்லாதவர்களைப் பற்றி நாம் பேசவேண்டிய அவசியம் இல்லை என்பதை மட்டும் மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. இளம்பரிதி : இந்தச் சபையிலே இல்லாதவர்களைப்பற்றி எனக்கு ஒன்றும் இல்லை. இந்தச் சபையிலே இருப்பவர்கள் நாங்கள். இந்த ஆளும் கட்சியைப் பற்றி மற்றவர்கள் பேரவையிலே மேலவையிலே

***Expunged as ordered by the Chair.



என்ன பேசுகிறார்கள் என்பதைப்பற்றி நாங்கள் சொல்கிறோம். அதைப் பற்றி நான் பேசக்கூடாது என்றுசொன்னால், அதிலே உப்பு சப்பே இல்லாமல் போய்விடும்.

திரு. கே. ராஜாராம் : இங்கே பேசியதற்குத்தான் உறுப்பினர் அவர்கள் பேசவேண்டுமே தவிர, அந்தப் பேரவையிலே பேசியதற்கு இங்கே பேசக்கூடாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவர்களுடைய பெயரைக் குறிப்பிடாமல் கருத்துக்களுக்கு பதில் அளிக்கலாம். பேசும்போது வார்த்தைகளிலே கடுமை இருக்கவேண்டாம். உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கலாம்.

திரு. இளம்பரிதி : தலைவரவர்களே, கைம்பெண்களை, அனாதைக் குழந்தைகளை அரசு இனிமேல் பராமரிக்கும் என்பது ஒரு அரசின் சீரிய திட்டம். இந்த இந்திய உபகண்டத்திலேயே எந்த ஒரு மாநில சர்க்காரும் செய்யாத ஒரு புதுமையான, புரட்சிகரமான, தேவையான திட்டம். இந்தத் திட்டத்தையும் குறை சொல்கின்ற ஆட்கள் இருக்கின்றார்கள். அதை ஏன் சொல்கிறேன்? அவர்கள் அதைப்பற்றி "தர்ம ஸ்தாபனங்கள் செய்யவேண்டியதையெல்லாம் இந்தச் சர்க்கார் செய்கிறதே, இது என்ன ஒரு பெரிய சாதனையா?" என்கின்றார்கள். ஒரு தர்ம ஸ்தாபனம் எத்தனை பேருக்குச் செய்யமுடியும்? நாட்டிலே இருக்கின்ற எல்லா அனாதைகளையும் தர்ம ஸ்தாபனம் வாயைப் பிளந்துகொண்டு வா, வா என்று கூப்பிடுமா? இல்லை, நாட்டிலே இருக்கக்கூடிய கைம்பெண்களை எல்லாம், வாருங்கள் நாங்கள் காப்பாற்றுகிறோம் என்று சொல்ல முடியுமா? தர்ம ஸ்பதானங்களுடைய பொருளாதார நிலைமையை உத்தேசித்து, அவைகளின் சக்தியை உத்தேசித்து, கைம்பெண்கள் வருந்துகின்ற ஒரு நிலைமையில், அனாதைக் குழந்தைகள் அலைகின்ற ஒரு நிலைமையில் அவர்கள் வாழவேண்டும் என்பதற்காக, அவர்களுக்கு வாழ்வளிக்க வேணடும் என்பதற்காக இந்த மாபெரும் சீரிய திட்டத்தைக் கொண்டுவருகின்றார்கள் என்றால், அதைப் பாராட்ட வேண்டாமா? யாராக இருந்தாலும் அதைப் பாராட்ட வேண்டாமா? நல்லது யார் செய்தாலும் சரி, எந்த இடத்தில் இருந்தாலும் சரி, அவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்பதைக்கூட மறந்து, அவர்கள் என்ன சொன்னார்கள், அதிலே நன்மையிருக்கிறதா என்று அறிந்து அதைப் பாராட்டிய பெருந்தகை அண்ணா அவர்கள். அவர்களைக் கொடியிலே ஏற்றிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால் மனதிலே ஏற்றிக்கொள்ளவில்லையே என்றுதான் வருந்துகிறேன். *** அவரை, கொடியிலே ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். அது காற்றிலே ஏதோ பறப்பதுபோல இவர்களும் பறந்துகொண்டிருக்கின்றார்கள்.

இன்னொன்று சொல்லிக்கொள்கின்றேன். மீனவர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தைப்பற்றி நமது முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்கு மீனவர்களுக்கு ஒரு வீடு கட்டுவது ஒரு பெரிய சாதனையா

*** Expunged as ordered by the Chair·

என்று சொல்கின்றார்கள். மீனவர்களுக்கு வீடு வேண்டாமா ? காற்று அடித்தால், வெள்ளம் வந்தால், மணல் அரிப்பு ஏற்பட்டால், யார் காப்பாற்றுவார்கள் ? அரசு தானே காப்பாற்ற வேண்டும். அவர்கள், அவன் அடுப்பிலே புகைய வேண்டாமா என்கிறார்கள். அவன் வீட்டில் புகைய வேண்டும் என்பதற்காகத்தானே நைலான் வலைகள், விசைப் படகு அத்தனையும் கொடுக்கிறார்கள். அவனது வாழ்வுக்கு இந்த அரசு உத்தரவாதம் தந்திருக்கிறதே, இந்த அரசு அவன் இருக்கையிலே இருக்க வேண்டும் என்பதற்காக வீடு கட்டித் தருகிறேன் என்று சொல்கிறார்கள். இவர்களுக்கு அதிலே என்ன காழ்ப்பு, அதிலே என்ன பொறாமை, அதிலே என்ன அரசியல் வந்து புகுந்து கொண்டது ? அதைத் தான் நான் இன்றைய தினம் சொல்கிறேன். அவர்கள் மேல் தப்பில்லை. இது நல்ல திட்டம் என்று அவர்களுக்கும் தெரியும். ஆனால் சேர்ந்த இடம் சரியில்லை. இனத்தோடு இனம் சேர வேண்டும் என்று சொல்வார்கள். இவர்கள் இந்த இனத்தைவிட்டு வேறு இனத்தோடு சேர்ந்து விட்டார்கள். அதைப்பற்றி நான் ஒன்றும் தப்பாகச் சொல்லவில்லை.

(பிற்பகல் 5-20)

இன்னொன்றை நான் சொல்கிறேன், ஒரு மாலைப் பத்திரிகை, நமக்கெல்லாம் ஒரு குடிநீர்ப் பஞ்சம் இந்த சென்னையிலே, உடனே அந்த மாலைப் பத்திரிகையில் சென்னையே காலியாகிறது என்று செய்தி போட்டான். சென்னை ஒன்றும் காலியாகவில்லை. இருந்த இடத்திலே தான் இருக்கிறது சென்னை. இது அவனுக்கும் தெரியும். ஆனால் என் போட்டான் ? சென்னை காலியாகிறது என்று சொன்னால் திராவிட முன்னேற்றக் கழகம் காலியாகும் என்று அவனுக்கு ஆசை. திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு காலும் காலியாகாது. *** வயிற்றுப்பிழைப்புக்காக உன்னுடைய பத்திரிகை தர்மத்தை விற்றுக் கொண்டிருக்கிறாயே ! அதற்காக தி.மு.க. சாய்ந்து விடாது, ஓய்ந்து விடாது, தி.மு.க. நிலையாக நிற்கும். எந்த சென்னை காலியாகிறது என்று சொன்னாயோ அந்த சென்னை எப்படி அப்படியே இருக்கிறதோ அது போலத்தான் திராவிட முன்னேற்றக் கழகமும் நிலை குலையாமல் இருந்தே தீரும் என்பதை நான் *** தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்தப் பத்திரிகைக்காரர்களுக்கு எவ்வளவு வெறி இருந்தால், அது மாதிரி எழுதுவார்கள் ? இன்னொரு விஷயம் சொல்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்ட மன்ற உறுப்பினர்கள் மேலவை உறுப்பினர்கள் கூடுகின்ற ஒரு கூட்டத்தை நாம் கூட்டி அன்றைக்கு ஏனோ, "கேன்சல்" பண்ணிவிட்டோம். "கேன்சல்" பண்ணி விட்டோம் என்றால் அதை அவன் தெரிந்துகொள்ள வேண்டாமா ? தெரியாதே அவனுக்கு. வெறி அவனுக்கு. ரொம்ப வெறி. "ரெடி மேட்" செய்தி தயார் பண்ணி வைத்திருக்கிறான், அதைத் தயாராக வைத்திருக்கிறான், விடுகிறான் அதைக் காலையிலே. அங்கே இப்படி, இங்கே இப்படி, அவர் இப்படி எழுதி விட்டார், இவர் அப்படி எழுதி விட்டார் என்று போடுகிறான்***

*** Expunged as ordered by the Chair.



(மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் மணியை அடித்தார்.)

அவர்களுடைய வயிற்றுப் பிழைப்புக்காக இப்படிப்பட்ட காரியங்களை அவர்கள் செய்யலாமா ? பத்திரிகை என்பது நாட்டு நிலைமையைப் படம் பிடித்துக் காட்ட வேண்டும். உண்மையை நாட்டு மக்களுக்குத் தெளிவுற எடுத்துச் சொல்ல வேண்டும். மக்கள் பயன்படுகின்ற காலத்திலே ஆறுதல் சொல்ல வேண்டும். சர்க்கார் இந்தந்த காரியங்களைச் செய்திருக்கிறது என்ற உண்மையைச் சொல்ல வேண்டும். அவன்தான் பத்திரிகைக்காரன். அதை விட்டுவிட்டு ஏதோ காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்காகத்தான் நான் சொல்லுகிறேன். ஏனென்றால் பத்திரிகைக்காரர்கள் தனியாக வேறு வைத்து நடத்துகிறார்கள். அவர்கள் பெரிய மேதாவிகள், இந்த நாட்டிலே பெரிய பெரிய கட்சிக்காரர்கள் இருக்கிறார்கள். மாபெரும் தலைவர் திரு காமராஜர் இருக்கிறார். அவர்கூட மற்ற ஆட்கள் இருக்கிறார்கள். இன்னும் சில தலைவர்கள் இருக்கிறார்கள். துப்பாக்கி வைத்து சுட்டு விடுவேன் என்று மேடையிலே பேசக் கூடிய தலைவர்கள் இருக்கிறார்கள். அவ்வளவு பெரிய தலைவர்களெல்லாம் இருக்கிறார்கள். ஒரு ரூமுக்கு உள்ளே நான்கு சுவற்றுக்கு உள்ளே இருந்துகொண்டு சும்மா இருந்த ஆளை அமெரிக்காவுக்கு இழுத்தடித்து, அமெரிக்காவுக்குக் கொண்டு போனார்கள். எனக்கு அதைப் பற்றிய கவலையில்லை. அங்கே போய் என்ன சொன்னான்? காபிடலிசம், சோசலிசம். இதை நீங்கள் நன்றாகக் கவனிக்க வேண்டும். காபிடலிசம், சோஷலிசம், கம்யூனிசம், இந்த மூன்றும் சேர்ந்ததுதான் அண்ணாயிசம். அங்கு இருக்கிற அமெரிக்கக்காரன் என்ன சொல்கிறான்? இங்கே எதாவது தப்பு செய்தாலும், நாமாகப் பார்த்து ஒழிந்து போகிறான் என்று விட்டு விடுகிறோம். அங்கே போய் கேபிடலிசம் பற்றிச் சொல்கிறான். கேபிடலிசம் உனக்குத் தேவை. ஏனென்றால் தேர்தல் நடத்த வேண்டும். அதற்காக கேபிடலிசம் தேவை. கம்யூனிசம் உனக்குத் தேவை ஏனென்றால் இந்திரா கூட்டுஉனக்கு வேண்டும். அதனால்தான் உனக்கு கம்யூனிசம் வேண்டும். சோஷலிசம் உனக்குத் தேவை, ஏனென்றால் ஜனங்களை ஏமாற்ற வேண்டும்***

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முடிந்ததா ? நாழி ஆகி விட்டது. அடுத்தவர்களைப் பேசச் சொல்ல வேண்டும்.

திரு இளம்பரிதி : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களுடைய உத்தரவுப்படி முடித்துக்கொள்கிறேன்.

திரு சி. ஆர். கோலப்பா : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 1975-76 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையின் மீது நான் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த நிதி நிலை அறிக்கையில் பாமர மக்கள் பாதிக்கப்படாமல் 6 கோடி ரூபாய்க்கு வரியைப் போட்டிருக்கின்றார்கள். அது மட்டுமல்லாமல், இந்த நிதி நிலை அறிக்கையில் தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், விவசாயிகள், நெசவாளர்கள் போன்ற தொழிலாளர்கள் நல் வாழ்வுக்காக பல திட்டங்கள் இந்த நிதி நிலை அறிக்கை

*** Expunged as ordered by the Chair.

[திரு. சி. ஆர். கோலப்பா] [1975 மார்ச் 6

யிலே சேர்க்கப்பட்டிருக்கின்றன. உள்ளபடியே இந்த நிதி நிலை அறிக்கை பாமர மக்களுக்கு, விவசாயிகளுக்கு, தொழிலாளர்களுக்கு, நல்ல முறையிலே பயன்படும் என்பதிலே எந்தவிதமான சந்தேகமுமில்லை. இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசும்பொழுது, இந்த நிதி நிலை அறிக்கையைப் படிக்கும் பொழுது திருவாசகத்தைப் படிக்கும் ஒரு உணர்வு ஏற்படுகிறது என்றும், இதை உயர்நிலைப் பள்ளியிலேயும் அதை விட கல்லூரியிலே படிக்கும் மாணவர்களுக்கும் ஒரு பாடமாக வைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். அதுமட்டுமல்ல. இந்த நிதி நிலை அறிக்கை அச்சிட்டு தமிழகத்திலேயுள்ள அத்தனை வீடுகளிலேயும் கொடுப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். காரணம் எல்லா மக்களுக்கும் நல்ல பல திட்டங்களை இந்தத் திட்டத்திலே தீட்டியிருக்கின்றார்கள். உள்ளபடியே இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று நான் பேசுகின்றேன். அது மட்டுமல்ல, இந்த நிதி நிலை அறிக்கையைப் பற்றி, முன்னாள் முதல்வர் திரு. பக்தவத்சலம் அவர்கள் இந்த அவையிலே இல்லாவிட்டாலும் இந்த நாட்டை ஆண்டுகொண்டிருந்தவர் என்ற முறையில் ஒரு அபிப்பிராயத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். இந்த நிதி நிலை அறிக்கை, மத்தியசர்க்கார் நலனுக்கு உகந்ததாக இல்லாமல், மாநில அரசிலே உள்ள மக்களுக்கு மட்டும் தான் நன்மை செய்வதாக இருக்கிறது, மாநில சுயாட்சி கேட்கும் அளவிலே இந்த அறிக்கையிலே சில வார்த்தைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்று நம் முன்னாள் முதல்வர் திரு. பக்தவத்சலம் அவர்கள் கூறி இருக்கிறார்கள். ஒரு நாட்டு முதல்வர், அந்த நாட்டு மக்களினுடைய வளத்திலே, வளர்ச்சியிலே அவர்களைக் காப்பாற்றுவதிலேதான் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, எங்கோ உள்ள ஒரு மத்திய சர்க்காரைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. ஏற்கனவே திரு. பக்தவத்சலம் முதலமைச்சராக இருந்தபொழுது, இந்த நாட்டு மக்களை மறந்து விட்டதன் காரணமாகத்தான் 1967 க்குப் பிறகு இந்த நாட்டை நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆண்டார்கள் என்பதையும், அப்படிப்பட்ட பெரியவர்களுக்கு நான் இந்த அவையின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். அது மட்டுமல்ல, இந்த நாட்டிலே அரசாங்கத்திலே பணியாற்றக்கூடியவர்கள், அரசாங்கத்தின் சார்பிலே உள்ளவர்கள், இரண்டாவது தனிப்பட்ட தொழிற் சாலையிலே பணியாற்றக் கூடியவர்கள், தொழிலாளர்கள், ஆகிய இரண்டு பிரிவினர் வாழ்ந்துகொண்டு வருகிறார்கள். மூன்றாவது பிரிவினர் தினக்கூலிகளாக பாடுபட்டுக்கொண்டு வருகின்றார்கள். அவர்களுக்கு இந்த அரசாங்கத்தின் சார்பாக எந்தவிதமான நன்மைகளும் இல்லை என்பதை நான் இந்த அவையிலே தெரிவித்துக் கொள்ளுகின்றேன். காரணம் அரசாங்கத்திலே பணியாற்றக்கூடிய அதிகாரிகளுக்குப் பல சலுகைகளை அளித்துக் கொண்டு வருகின்றார்கள். பல முன்னேற்றங்களை அளித்துக்கொண்டு வருகின்றார்கள். தனிப்பட்ட கம்பெனிகளிலே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் அந்தக் கம்பெனிகளிலே நிர்வகிக்கும் அதிகாரிகளுக்கும் அந்தத் தொழிற்சாலைகளிலேயுள்ள நிர்வாகத்தினர் மூலமாக பல நன்மைகளைச் செய்து கொண்டு வருகின்றார்கள்: ஆனால் தினக்கூலியாக இந்த நாட்டிலே ஏறக்குறைய 2 கோடி மக்கள் இருக்கிறார்கள். விவசாயிகளாக, பீடித் தொழிலாளர்களாக, பாட்டாளி மக்களாக, ஜாதியின் பேரால் வாழையடி வாழையாக

*** Expunged as ordered by the Chair.



1975 மார்ச் 6] [திரு. சி. ஆர். கோலப்பா]

அவர்கள் தொழிலைச் செய்து கொண்டு வரும் நபர்களாக ஏறக்குறைய 2½ கோடி பேர் இந்த நாட்டிலே வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான முன்னேற்றமும் இந்த பட்ஜெட்டிலே இல்லை என்பதை நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 5-30)

கடந்த ஆண்டு என். ஜி. ஓக்களுக்குச் சம்பள உயர்வு கொடுக்க வேண்டும் என்று கேட்ட போது, நமது மாண்புமிகு டாக்டர் முதல்வர் அவர்கள், ஒன்றைக் குறிப்பிட்டார்கள். இந்த நாட்டிலே எந்தவிதமான நன்மையும் அடையாமல் கீழ் மட்டத்திலே உள்ள தொழிலாளர்கள் கோடிக்கணக்கானபேர் இருக்கிறார்கள். அவர்களையும் நாம் பார்க்க வேண்டும். அவர்களுக்கும் நாம் நன்மை செய்ய வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட உணர்வு அவர்கள் உள்ளத்திலே இருக்கிறது என்பதை நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதுமட்டுமல்ல, பிற்பட்ட சமூதாய மக்களுக்கு இந்த நிதி நிலை அறிக்கையிலே 5.8 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை போதாது என்பதை நான் இந்த அவையிலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நமது மாண்புமிகு டாக்டர் முதல்வர் அவர்கள் முதலமைச்சராகப் பதவியேற்ற பிறகு, பிற்பட்டோர் நலத் துறை என்ற ஒரு துறையைப் புதிதாக தமிழ் நாட்டிலே துவக்கினார்கள். அதைத் துவக்கியபோது, தாழ்த்தப் பட்ட மக்களுக்கும், மேற்குடி மக்களுக்கும், இந்தத் துறைமீது ஒரு சந்தேகக்கண் கொண்டே பார்க்கும் நிலைமை இருந்தது. நமக்குக் இடைக்கும் சலுகைகள் கெட்டுவிடுமோ அல்லது கிடைக்காமலே போய் விடுமோ என்ற ஒரு சந்தேகம் அவர்கள் உள்ளத்தில் ஏற்பட்டது. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலனையும் பாதிக்காமல், மேற்பட் டோர் வகுப்பின் நலனையும் பாதிக்காமல் பிற்பட்ட மக்களுக்குப் பல நன்மைகளை அவர்கள் செய்துகொண்டு வருகிறார்கள். நமது பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இப்பொழுது மருத்துவ மனையிலே இருக்கிறார்கள். அவர்கள் நல்ல முறையிலே நலம்பெற்று இங்கே வர வேண்டுமென்று விரும்புகிறேன். அவர்கள் அமைச்சராக வந்தபிறகு, எல்லா தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமூதாய மக்களும் முன்னேற நல்ல திட்டங்களை அவர்கள் வகுத்துக்கொண்டு வருகிறார்கள். அது மட்டுமில்லாமல், இந்தத் துறைக்கே தனி இயக்குநர் ஒருவரை நியமித்துள்ளார்கள். அதன் பிறகு, மாவட்ட அளவிலே மாவட்ட நல அதிகாரிகளை நியமித்து பிற்பட்ட மக்களுடைய நலன்களைக் கவனிப்பதற்காக இந்த அரசு பல காரியங்களைச் செய்துகொண்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கடந்த ஆண்டு கல்லூரிகளிலே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒருவருக்குக்கூட இடம் கிடைக்கவில்லை என்ற பிரச்சினையே எழாமல் இருந்தது என்பதையும் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ளுகின்றேன். சென்னையில் எத்திராஜ் கல்லூரி போன்ற பல கல்லூரிகள் இருக்கின்றன. பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு பெண்கூட அப்படிப் பட்ட கல்லூரிகளின் வாயிலை மிதிக்க முடியாத நிலைமை முன்பு இருந்தது. எத்திராஜ் கல்லூரியினுடைய முதல்வர் அவர்களை நான் அண்மை

யில் கண்டுபேசியபோது, இப்பொழுது பிற்பட்ட சமுதாய மக்களுக்கு நிறைய சலுகைகள் இருக்கின்றன, அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த பெண்களை இப்பொழுது அதிகமாகச் சேர்க்கலாம் என்று கூறினார்கள். அந்த நேரத்திலே நான் நமது மாண்புமிகு டாக்டர் முதல்வர் அவர்களைத்தான் நினைத்துக்கொண்டேன். இந்த அளவுக்கு கல்லூரிகளிலே பிற்பட்ட மக்களுக்கு இடம் கிடைத்திருக்கிறது. இடம் கிடைக்கவில்லை என்ற புகார் ஒருவரிடமிருந்துகூட வரவில்லை என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அளவுக்கு பிற்பட்ட மக்களுக்குச் சலுகைகள் கொடுக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பிற்பட்ட சமுதாய மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. அத்துடன் அவர்கள் தங்கிப் படிக்கும் இல்லங்கள் பல தமிழ்நாட்டிலே ஏற்பட்டிருக்கின்றன. இப்பொழுது பிற்பட்ட மாணவர்கள் மிக நிம்மதியாக படிப்பதற்கு உணவு வசதியும், தங்கும் வசதியும் கொடுக்க பல இலட்சக் கணக்கான ரூபாய் செலவு செய்து வருகிறார்கள். உத்தியோகத்துறைகளிலும் பலருக்கு அவர்கள் நினைத்துப்பார்க்க முடியாத அளவுக்கு, பல உத்தியோகங்களைக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். சலவையாளர் சமுதாயத்தில்கூட இரண்டுபேருக்கு டெபுடி கலெக்டர் உத்தியோகம் கொடுத்திருக்கிறார்கள். அந்தக்காலத்திலே, அதாவது 1947 முதல் 1967 வரையிலே இந்நாட்டில் காங்கிரஸ் கட்சி ஆண்ட காலத்தில், பிற்பட்ட சமுதாய மக்களுக்கு இந்த அளவுக்கு அக்கறை காட்டியதில்லை. சர்வீஸ் கமிஷன் குரூப் 1 தேர்வு எழுதிய தகுதி வாய்ந்த இரண்டு சலவைத் தொழிலாளர் குழந்தைகளுக்கு டெபுடி கலெக்டர் வேலை மாண்புமிகு டாக்டர் முதல்வர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் பல தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கும் அவர்கள் பல உயர்ந்த பதவிகளைக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். அப்படி நல்ல முறையிலே பிற்பட்டோர் நலத் துறை பாடுபட்டுக்கொண்டு வருகிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்படி பாடுபட்டுக் கொண்டுவரும் இந்தத் துறைக்கு இவ்வளவு சிறிய தொகை ஒதுக்கியிருப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதற்கு இன்னும் அதிகமான தொகையை ஒதுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த பட்ஜெட்டிலே மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுப்பதற்காக திட்டம் தீட்டியிருக்கிறார்கள். மீனவர்கள் மட்டுமின்றி, அரிஜன மக்களுக்குக்கூட ஒரு வாரியம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவை உள்ளபடியே வரவேற்கக்கூடிய நல்ல திட்டங்கள். இதைப்போலவே பிற்பட்ட சமுதாயத்திலே உள்ள மற்றவர்களுக்கும் வீட்டுவசதி செய்துகொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சலவைத் தொழிலாளர்களுக்கும், முடிதிருத்துவோருக்கும் அரசாங்க வீட்டுவசதி வாரியத்தின் மூலம் கட்டும் வீடுகளில் 5 சதவீத வீடுகள் ஒதுக்க வேண்டும் என்று அரசு உத்திரவிட்டிருக்கிறது. ஆனால் அதை நல்ல முறையிலே அமுலுக்குக் கொண்டுவருவதில்லை என்பதை நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது மீனவர்களுக்கும், அரிஜன மக்களுக்கும் மட்டும் கட்டும் அந்த வீடுகளிலே, சலவையாளர்களுக்கும் மற்ற பிற்பட்ட சமுதாய மக்களுக்கும் 25 சதவிகித வீடுகளை ஒதுக்கித் தரவேண்டும் என்று நான் மாண்புமிகு டாக்டர் முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.





அதுமட்டுமல்லாமல், கிராமங்களில் பல ஆண்டுக்காலமாக சலவையாளர்களும், முடிதிருத்துவோரும் குடியிருக்கும் நிலங்களை அவர்களுக்குப் பட்டா செய்துகொடுப்பதில்லை. தலைமுறை தலைமுறையாக கிராமங்களில் இருப்பவர்களுக்கு, பஞ்சாயத்து மூலமாக தீர்மானம் நிறைவேற்றி அனுப்பப்படுவதில்லை. இப்படி எத்தனையோ ஆண்டுக்காலமாக பட்டா செய்துகொடுக்கப் படாமல் இருந்துவருகிறது. அவர்களுக்கெல்லாம் பட்டா செய்துகொடுப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சலவையாளர்களுக்கும், முடி திருத்துவோருக்கும், மற்றவர்களுக்கும் இலவசத் தொழில் கருவிகள் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். நமது முதல்வர் அவர்கள் இப்பொழுது ஒரு மாவட்டத்திற்கு 250 இலவசத் தொழில் கருவிகள் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். அதற்குப்பதில் 500 தொழில் கருவிகளாவது கொடுப்பதற்கு நமது முதல்வர் அவர்கள் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பிற்பட்ட சமுதாய மக்களுக்கு பல முன்னேற்றங்களைச் செய்ய சட்டநாதன் குழுவினர் பரிந்துரை செய்திருக்கின்றார்கள். அந்தப் பரிந்துரைகளை நமது முதல்வர் அவர்கள் கருணை உள்ளத்தோடு இந்த அவையிலே கொண்டுவந்து, அதற்கான ஒரு சட்டத்தை இயற்றி, மிகவும் பின்தங்கிய மக்களுக்கு நல்ல நன்மைகளைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் சட்டமியற்றுவது ஒன்றுதான் எந்தவிதமான ஆதரவுமற்ற சமுதாய மக்களுக்குப் பயன்படும் என்பதை நான் இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். சர்க்காரிலே வேலை செய்யும் ஒருவர் கடைசி நேரத்திலே ஓய்வூதியம் பெறுகிறார். அவர் வீட்டிலே யாராவது ஒருவர் இறந்துவிட்டால், 10,000 ரூபாய் வாங்குகிறார்கள். அவர்களுக்கு வீட்டுவசதி போன்ற எல்லா வசதிகளும் கிடைக்கின்றன. அதேபோல ஒரு கம்பெனியிலே வேலைசெய்தால் போனஸ், கிராஜுவிடி போன்ற சலுகைகள் எல்லாம் கிடைக்கின்றன. ஆனால் தினக் கூலிகளாக உள்ள சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு எந்தவிதமான நன்மையும் கிடைப்பதில்லை.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : தலைவர் அவர்களே, அரசாங்க ஊழியர் வீட்டில் யாராவது இறந்துவிட்டால் 10,000 ரூபாய் கிடைப்பதில்லை. அந்த அரசு ஊழியரே இறந்துவிட்டால்தான் அந்தக் குடும்பத்திற்கு 10,000 ரூபாய் கிடைக்கிறது.

<u>திரு சி. ஆர். கோலப்பா :</u> தினக்கூலி பெறும் அந்தத் தொழிலாளர்களுக்கு நன்மை செய்யும் விதத்திலே சட்டநாதன் குழுவின் பரிந்துரை அமைந்திருக்கிறது. அதை உடனடியாக அமுலுக்குக் கொண்டு வருவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : தலைவர் அவர்களே, சட்டநாதன் குழு என்று குறிப்பிடுகிறார்கள். பின் தங்கிய, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக ஒரு குழு அமைக்கப்பட்டு அதன் பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஏறத்தாழ ஐந்து கோடி ரூபாய் பிற்பட்ட மக்களுக்குச் செலவு செய்யப் பட்டிருக்கிறது. அதன் பரிந்துரைகள் மூன்று நான்கு ஆண்டுகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவ்வப்போது நடைமுறைக்கு வந்து கொண்டிருக்கின்றன.

<u>திரு சி. ஆர். கோலப்பா :</u> அதற்காக டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இந்த அவையின் மூலம் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மேலும் அதை விரிவு படுத்த தீவிரமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இறுதியாக, நமது டாக்டர் அவர்கள் கொண்டுவந்த நிதிநிலை அறிக்கையை ஆதரித்து, இந்த அளவிலே என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர் : இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 5-40)

## 4. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. Statutory Rules and Orders.

123. Notification issued with G.O. Ms. No. 2232, Rural Development and Local Administration, dated 16th October 1974 in regard to variation in the approved list of open spaces and parks in the area within the jurisdiction of Thanjavur Municipality. (*Laid on the table of the House under section* 14(3) *of the Tamil Nadu Parks, Playfields and Open-spaces* (*Preservation and Regulation*) *Act*, 1959 (*Tamil Nadu Act* 26 *of* 1959).

124. Notification issued with G.O. Ms. No. 2557, Home, dated the 31st October 1974 in regard to collection of reduced rate of tax in respect of lorry MDN 2762 belonging to the Lawrence School, Lovedale, Ootacamund-3. (*Laid on the table of the House under section* 25(2) *of the Tamil Nadu Motor Vehicles Taxation Act*, 1974 (*Tamil Nadu Act* 13 *of* 1974).





125. Notification issued with G. O. Ms. No. 2297, Home, dated the the 24th September 1974 exempting from payment of tax leviable under the Tamil Nadu Motor Vehicles Taxation Act certain goods vehicles of private carriers operating on routes or in areas, partly in the State of Kerala and partly in the State of Tamil Nadu. (*Laid on the table of the House under section* 25(2) *of the Tamil Nadu Motor Vehicles Taxation Act*, 1974 (*Tamil Nadu Act* 13 *of* 1974).

126. Notification issued with G. O. Ms. No. 2760, Home, dated the 4th December 1974 in regard to amendment to Rule 363 of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. (*Laid on the table of the House under section* 133(3) *of the Motor Vehicles Act*, 1939 (*Central Act IV of* 1939).

### B. Reports, Notifications and Other Papers.

49. Notification issued with G.O. Ms. No. 787, Commercial Taxes and Religious Endowments, dated the 28th December 1974 appointing the 1st January 1975 as the date on which the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Third Amendment) Act, 1974 (Tamil Nadu Act 50 of 1974) shall come into force.

# தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

---

## வெள்ளிக்கிழமை, 1975 மார்ச் 7.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### *Alagar Anai Scheme*

*121 *Q*—THIRU A. AYYANAN AMBALAM (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Public Works be pleased to state with reference to the answer given to Legislative Council Question No. 64, on the floor of the Council on 13th August 1973.

(*a*) whether the Government have accorded their sanction for theAlagar Anai Scheme in Srivilliputhur taluk of Ramanathapuram district; and

(*b*) if so, when the work will be commenced?

### அழகர் அணைத் திட்டம்.

திரு. அ. அய்யணன் அம்பலம் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் 13—8—1973 அன்று சட்டமன்ற மேலவையில் 64ஆம் எண் வினாவிற்கு அளிக்கப்பட்ட விடையை ஒட்டி, கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டத்தில் அழகர் அணைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு அனுமதியளித்துள்ளதா?

(இ) ஆமெனில், இப்பணி எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### *Deepening of Wells in Salem district*

*123 Q—THIRU K. RAJARAM (on behalf of THIRU A. BALASUBRAMANIAM): Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government have received any note from the Engineer to the effect that adequate water will not be available in the wells in Salem district even if they are deepened further since the wells are already very deep and are very large in number; and

(b) if so, the action proposed to be taken by the Government for the storage of water in the district?

### சேலம் மாவட்டத்தில் கிணறுகளை ஆழமாகத் தோண்டுதல்

திரு. கே. ராஜாராம் (திரு. எ. பாலசுப்பிரமணியம் சார்பில்) மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலம் மாவட்டத்தில் கிணறுகள் அதிகமாகவும், ஆழமாகவும் இருப்பதால் மேற்கொண்டு தோண்டினாலும் போதுமான அளவு தண்ணீர் கிடைக்காது என்ற பொறியாளர் குறிப்பு எதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அம்மாவட்டத்தில், தண்ணீரைத் தேக்கி வைக்க, எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

### *Drinking Water Scarcity in Madras*

*124 Q—THIRU K. RAJARAM (on behalf of THIRU Y. VENKATESWARA DIKSHIDAR): Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Government have any emergency scheme to solve the problem of drinking water scarcity in Madrss City before executing the Veeranam Project; and

(b) if so, the details thereof?





### சென்னையில் குடிநீர்ப் பற்றாக்குறை

திரு. கே. ராஜாராம் (திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் சார்பில்) : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வீராணம் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னால், சென்னையில் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க அவசரத் திட்டம் எதும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) குழாய்க் கிணறுகள் பழுது பார்த்தல், தண்ணீர் வழங்க லாரிகள் வாங்குதல், இரும்புத் தொட்டிகள் அமைத்தல், கைக்குழாய் கிணறுகள் அமைத்தல், தாமரைப்பாக்கம், பஞ்செட்டி ஆகிய இடங்களில் உள்ள நிலநீர் கோட்டத்தில் உள்ள நீரை நகருக்கு வழங்கல், மற்றைய செலவுகள் ஆகியவற்றுக்காக ரூ. 53·87 இலட்சம் கடனாகவும், ரூ. 111·40 இலட்சம் மானியமாகவும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டதைத் தவிர, தாமரைப்பாக்கம், பஞ்செட்டி போன்ற இடங்களில் நிலநீர் கோட்டத்தினரால் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள குழாய்க் கிணறுகளிலிருந்து குடிநீரை புழலேரிக்கு உந்து குழாய்கள் மூலம் கொண்டு செல்லவும் வகை செய்யப்பட்டுள்ளது.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, அண்மையில் பாலாற்றிலிருந்து குழாய்கள் மூலமாக வீராணம் வாய்க்காலுக்குத் தண்ணீரைக் கொண்டுவந்து சப்ளை செய்யப்படுமென்று பத்திரிகைச் செய்தி ஒன்று பார்த்தேன். அது உண்மையா ? அப்படியானால் எந்த நிலைமையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, உண்மைதான். பாலாற்றில் இருபது கிணறுகள் தோண்டப்பட்டு, அதிலிருந்து தண்ணீரைத் திருக்கழுக்குன்றத்தில் சேர்த்து பின்னர் சப்ளை செய்யும் திட்டம் வேகமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இன்னும் ஒரு ஐந்து, ஆறு திங்களில் நடைபெற்று முடிந்துவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, கல்பாக்கத்திற்கு நாம் பாலாறு படுகையிலிருந்து தண்ணீர் கொடுத்து உதவி வந்தோம். அவர்கள் அந்தத் தண்ணீரை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. வீராணம் திட்டம் முடிவடைகின்ற காலம் வரையில், அந்தத் தண்ணீரைப் பயன்படுத்திக்கொள்ள இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த இருக்கிறோம்.

[1975 மார்ச் 7

THIRU G. VASANTHA PAI : Sir, will the Government consider providing better facilities for effecting borewells in the City of Madras than what are available at present, because I am told that the existing equipment for effecting borewells is so antiquated and anti-diluvian that it is not functioning at all ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, நான்கு போர் வெல்கள் இருக்கின்றன. அவற்றில் மூன்று மூடிந்து விட்டன. இன்னும் ஒன்று வெகு விரைவில் மூடிந்துவிடும். தினமும் நான்கு இலட்சம் கேலன் தண்ணீர் கொண்டு வந்து மேட்டுப் பகுதிகளுக்குச் சப்ளை செய்ய 30 லாரிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

THIRU G. VASANTHA PAI : Sir, I was not referring to the efforts the Government were making for providing drinking water. I was referring to the provision of equipment to individual households for making borewells. The equipment which is there for that purpose is so, inadequate and antiquated that it is impossible, it seems, to get water from those borewells.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, தனிப்பட்டவர்கள் வீடுகளிலே போட்டுக்கொள்ள வேண்டுமென்று வேண்டுகோள் வைத்தால், அவைகள் அனுமதிக்கப்படும். தனிப்பட்டவர்கள் மெஷினரியைக் கொண்டும் போட்டுக் கொள்ளலாம் அல்லது சர்க்கார் மூலமாக வேண்டுமானாலும் உதவி செய்து கொடுக்க முடியும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இப்போழுது ரெட் ஹில்ஸ் ஏரியில் எவ்வளவு தண்ணீர் இருக்கிறது, அந்தத் தண்ணீர் எவ்வளவு நாட்களுக்குப் போதுமானது என்று அறிய விரும்புகிறேன். சென்னையில் இப்பொழுது இரண்டு நாட்களுக்கு ஒரு நாள்தான் தண்ணீர் விடப்பட்டு வருகிறது. அதை மாற்றி தினமும் ஓரளவு தண்ணீர் விடுவதற்கு ஏற்பாடு செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, புழலேரியில் இருக்கவேண்டிய தண்ணீர் அளவு 18·72 அடி. 1973-ல் 17·80 அடி இருந்தது. 1974-ல் 12·62 அடி. ஆனால், இந்த ஆண்டு 3·32 அடிதான் இருக்கிறது. அதற்காக நாங்கள் திட்டம் போட்டு தாமரைப் பாக்கம், பஞ்செட்டி ஆகிய இடங்களிலிருந்து பத்து இலட்சம் கேலன் தண்ணீரை எடுத்துக்கொண்டு வருகிறோம். நமக்குத் தினமும் 53 மில்லியன் கேலன் தண்ணீர் தேவைப்படுகிறது. நான் இதைச் சொல்கிறபோது 18 அடிக்கும் மூன்று அடிக்கும் உள்ள வித்தியாசம் புரியும். இருப்பதையும், கிடைப்பதையும் சேர்த்து இரண்டு பகுதியாகப் பிரித்துக் கொடுத்துப் பார்த்தோம். ஒரு பகுதிக்கு 15 மில்லியன் கேலன் என்று கொடுத்து வந்தபோது 'tail end area'க்களுக்குப் பிரஷர் இல்லாத காரணத்தினால், தண்ணீர் போய்ச் சேராமலிருந்த காரணத்தினால் மொத்தத் தண்ணீர் 30 மில்லியன் கேலனையும் ஒரே பகுதியாக விட்டால் கடைசி வரையில் போகும் என்று கருதி, ஒரு நாள்



1975 மார்ச் 7]

விட்டு ஒரு நாள் விடப்பட்டு வருகிறது. இந்த நிலைமை இப்படியே போகுமானால், இன்னும் இரண்டு மாதத்திற்குப் பின்னால் கஷ்டம் அதிகரிக்கும். ஆகையினால் மாற்றுத்திட்டங்கள் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI : Sir, with reference to his answer to the previous supplementary question, will the Hon. Minister be pleased to state which are the authorities the private individual house-owners should approach for making borewells in their premises.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அதற்கென்று தனியாக எந்த விதமான ஏற்பாடும் செய்யப்படவில்லை. யாரும் அதற்கென வேண்டுகோளை நம்முடைய கமிஷனரிடம் சொன்னால் அதற்கான ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தனியார் யாரும் போட்டுக் கொள்ள தயாராக இருப்பார்களா என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. ஏனென்றால் நாங்கள் போட்ட சில இடங்களில் அடியில் உப்புத் தண்ணீர் வந்து விடுகிறது. உபயோகத்திற்கு லாயக்கற்ற "ப்ராக்கிஸ் வாட்டர்" வருகிறது. ஆகையினால் சுத்தமான தண்ணீர் கிடைக்குமா என்பது சந்தேகமாக இருக்கிறது. அப்படி யாராவது போடமுற்பட்டால், அரசாங்கம் அதனிடம் இருக்கின்ற இயந்திரங்களைத் தருவதற்குத் தயாராக இருக்கிறது. அதற்கான கட்டணத்தைச் செலுத்த வேண்டும். விரும்புபவர்கள் வேண்டுகோளை எழுதி அனுப்பினால், பரிசீலிக்கப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, சில ஆண்டுகளுக்கு முன்னால் சென்னையில் குடி நீர்ப் பஞ்சம் இருந்த நேரத்தில் பல இடங்களில் போர் பைப்புகள் அரசாங்கத்தால் போடப்பட்டன. பின்னர் பல பைப்புகள் திருட்டுப் போய்விட்டதாகத் தகவல் வந்தது. அவற்றில் இப்போது எத்தனை மீதமிருக்கிறது. அவற்றை மீண்டும் பயன்படுத்துவதற்கு வழி இருக்கிறதா, அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, ஆயிரத்திற்கு மேற்பட்டவை போடப்பட்டன. 'ஹேண்ட் போர்' என்று சொன்னாலேயே, அடிக்கடி கெட்டுப் போகின்ற சாதனமாகும். அவைகள் 1969-ல் போடப்பட்டன. இப்போழுது 5,000 பைப்புகள் போடுவதற்குத் திட்டம் ஆரம்பித்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தண்ணீர்ப் பஞ்சம் பற்றிப் பேசுகின்ற போது, தண்ணீர் குடிக்கின்ற அளவுக்கு அதிகமாகப் பேச வேண்டாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, கேள்விகள் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், கொஞ்சம் அதிக நேரம் கொடுக்கலாமென்று கருதுகிறேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ஆந்திரப் பிரதேசம் சோமசிலாவிலிருந்து 5,000 எம்.சி.எப்.டி. தண்ணீர் கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்யப் படுவதாகச் சொல்லப்பட்டது. அதைத் தொடர்ந்து எதாவது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஆந்திர அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதியதிற்கு தண்ணீர் கொடுப்பதில்லை என்று பதில் எழுதி விட்டார்கள்.

திரு. ஏ. பாலசுப்பிரமணியம் : தலைவரவர்களே, சென்னையில் ஏழைகள் வாழுகின்ற பகுதியில் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் வருவதே இல்லை என்று புகார்கள் செய்கின்றார்கள். அவர்களுக்கு ஒரு வாரத்திற்குக் கூட சேர்ந்தாற்போல் வராமலிருக்கிறது என்று கூறுகிறார்கள். மாற்று ஏற்பாடு எதாவது செய்து அவர்களுக்கும் தண்ணீர் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, மற்ற பகுதிகளுக்குத் தண்ணீர் போகும்போது, மேடான பகுதிகளுக்குப் போய்ச் சேராமலிருக்கலாம். முப்பது லாரிகளில், ஒவ்வொரு லாரியிலும் 1,400 கேலன் தண்ணீர் வீதம் ஏற்றி அந்த மாதிரியான பகுதிகளுக்குக் கொண்டு போகப்பட்டு சப்ளை செய்யப்பட்டு வருகிறது. இனி அவ்வளவு கஷ்டம் அந்தப் பகுதிகளுக்கு இருக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 4-10]

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, ஆந்திராவில் உள்ள சோமசிலா ப்ராஜக்டுக்கு நாம் ஏதேனும் உதவி செய்வதாக இருந்தால், 5 டி.எம்.சி. தண்ணீர் சென்னைக்கு எடுத்துக்கொள்ள அவர்கள் சம்மதம் தெரிவித்ததாக சமீபத்தில் பத்திரிகையில் செய்தி வந்தது. அது தற்போது எந்த அளவுக்கு இருக்கிறது என்றும், கடைசியில் கொடுக்க ஒத்துக்கொண்டிருக்கிறார்களா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அதைப் பற்றிய தகவல் எதுவும் என்னிடம் இல்லை. ஆனால் "கிருஷ்ணா அவார்ட்" வந்தவுடனேயே நமக்கு 5 டி.எம்.சி. தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று நாங்கள் கடிதம் எழுதினோம். ஆனால் கொடுப்பதற்கு தண்ணீர் மிச்சம் இல்லை, ஆகையால் கொடுக்க இயலாது என்று பதில் கடிதம் எழுதிவிட்டார்கள். மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிடுவது போல என்னிடத்தில் எந்தத் தகவலும் இல்லை, எனக்குத் தெரியாது.

## Ex-District Board Elementary School Teachers.

*125. Q. Thiru. P. R. Thomas (on behalf of Thiru K. S. Ganapathi : Will the Hon. the Minister for local Administration be pleased to state—





(a) whether it is a fact that the Government have issued orders to take the period of service, rendered by the Ex-District Board Elementary School Teachers absorbed into the Panchayat Union Service, into account for the purpose of seniority ; and

(b) if so, whether that service will be taken into account for the purpose of granting pension and gratuity also ?

முன்னாள் மாவட்டக் கழகத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள்

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. கே. எஸ். கணபதி சார்பில் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) ஊராட்சி ஒன்றியப் பணியில் சேர்த்துக் கொள்ளப்படுகின்ற முன்னாள் மாவட்டக் கழகத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் பணிக் காலம், அவர்களது பணி மூப்பு நிலை நிர்ணயிக்கப்படுகையில் கருத்தில் கொள்ளப்பட வேண்டுமென அரசு உத்தரவுகள் பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆமெனில் ஓய்வூதியம், பணிக்கொடை ஆகியவை வழங்கப் படுவதற்கும் அந்தப் பணிகாலம் கருத்தில் கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) and (இ) ஆம்.

## Drinking Water Supply Scheme or Terur Town Panchayat.

*126. Q. Thiru M. Sankaralingam : Will the Hon. the Minister for Local Administration be pleased to state with reference to the answer given to L. C. Question No. 175 (Starred) on the floor of the House on 12—3—1974.

(a) whether the survey undertaken in connection with the 'formation of Protected Drinking Water Supply Scheme' at Terur Town Panchayat, Kanyakumari District, has been completed and

(b) if so, when it will be implemented ?

தேரூர் பேரூராட்சிக்கு குடிதண்ணீர்த் திட்டம்

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், சட்ட மன்ற மேலவையில், 12-3-1974-ஆம் நாளன்று உடுக்குறியிட்ட வினா எண். 175-க்கு அளித்த விடையினையொட்டி, கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) கன்னியாகுமரி மாவட்டம், தேரூர் பேரூராட்சியில் பாதுகாக்கப் பட்ட குடி தண்ணீர்த் திட்டம் அமைப்பது குறித்து அரசு மேற்கொண்ட பரிசீலனை முடிவடைந்து விட்டதா ?

(இ) ஆமெனில், அத்திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

[1975 மார்ச் 7

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) இத்திட்ட சம்பந்தமான ஆய்வு வேலைகள் யாவும் முடிவடைந்து திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றது.

(இ) குடிநீர் வடிகால் வாரியத்தால் எந்தச் செயற்குறிப்பும் இது வரை வகுக்கப்படாததால், இக்கேள்விக்கு இப்போது இடமில்லை.

திரு.எம். சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்தும் இந்தச் சிபாரிசு செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அது நீண்டகாலமாக தாமதமாக்கிக்கொண்டிருக்கும் திட்டமாதலால் அரசு விரைவில் பரிசீலனை செய்து அமல் நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, அரசு பரிசீலனை செய்யும்.

## FISHERMEN CO-OPERETIVE SOCIETY.

*127. Q. THIRU. A. AYYANNAN AMBALAM : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state :

(a) whether any society as Fishermen Co-operative Society has been established in Madurai District ;

(b) if so, the details thereof ; and

(c) the number of tanks in North Taluk of Madurai D strict leased out to this society for fishing during 1974 ?

கூட்டுறவு மீன் பிடிப்போர் சங்கம்.

திரு. அ. அய்யணன் அம்பலம் : மாண்புமிகு சமூக நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்டத்தில், கூட்டுறவு மீன் பிடிப்போர் சங்கம் என்று ஒரு சங்கம் அமைக்கப்பட்டிருக்கிறதா?

(இ) ஆம் என்றால், அதன் விபரம் என்ன?

(உ) அந்தச் சங்கத்திற்கு 1974-ஆம் ஆண்டில் மீன் பிடிக்க குத்தகையாக, மதுரை மாவட்டம், வடக்கு தாலுகாவில் எத்தனை கண்மாய்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : (அ) ஆம்.

(இ) மதுரை மாவட்டத்தில் 6 பிரதம மீனவர் கூட்டுறவு சங்கங்களும் ஒரு மீனவர் கூட்டுறவு சம்மேளனமும் கீழ்க்கண்டவாறு இயங்கி வருகின்றன.



1975 மார்ச் 7]

1 வைகை அணை மீனவர் கூட்டுறவு சங்கம்.

2 பெரிய குளம் மீனவர் கூட்டுறவு சங்கம்.

3 குள்ளாபுரம் மீனவர் கூட்டுறவு சங்கம்.

4 மேலமடை மீனவர் கூட்டுறவு சங்கம்.

5 மதுரை வட்டம் மீனவர் கூட்டுறவு சங்கம்.

6 பழனி வட்டம் மீனவர் கூட்டுறவு சங்கம்.

7 மதுரை மற்றும் திருச்சி மீனவர் கூட்டுறவு சம்மேளனம்—இதன் தலைமையகம் மதுரை.

எல்லா கூட்டுறவு சங்கங்களிலும் 690 உறுப்பினர்கள் உள்ளனர்.

(உ) 1974-ம் ஆண்டு மதுரை வடக்கு தாலுகாவில் உள்ள குன்னத்தூர் கண்மாயின் மீன்பாசிக் குத்தகையை மதுரை—திருச்சி மாவட்ட மீனவர் கூட்டுறவு சம்மேளனத்திற்கு ரூ. 2,655-க்கு வழங்கப்பட்டது ஒப்பந்தத்தில் கண்ட சில முக்கிய விதிகளை மேற்குறித்த சம்மேளனம் மீறி நடந்ததால் 1974-ம் ஆண்டு மீன் பாசி உரிமை மதுரை மாவட்ட ஆட்சியாளரால் ரத்து செய்யப்பட்டது.

THIRU G. VASANTHA PAI : Sir, is this Fishermen Co-operative Society only for fishing in interior water or for fishing in deep seas also ?

மாண்புமிகு திரு. சி.வி. எம் அண்ணாமலை : தலைவர் அவர்களே பொதுவாக அங்கேயுள்ள நல்ல வளமுள்ள குளங்களிலே மட்டும் மீன் பிடிப்பதற்கான வகையிலே தான் துறையினர் ஏற்பாடுகள் செய்கிறார்கள். அவற்றைப் பிடிப்பதற்கு, சம்பந்தப்பட்ட கூட்டுறவுத் துறை சங்கங்களிலே அங்கத்தினராக இருப்பவர்களுக்கு, முறையான குத்தகை விடப்படுகிறது. மற்றப்படி வறட்சிப் பகுதியிலே இதுபோன்ற வாய்ப்புகள் செய்யப்படுவதில்லை.

திரு. அ. அய்யணன் அம்பலம் : தலைவர் அவர்களே, இந்த மீனவர்கள் கூட்டுறவு சங்கத்தில் அந்தப் பகுதியில் அந்தத் தொழிலைச் செய்பவர்கள் தான் அங்கத்தினர்களாக இருக்கிறார்களா, அல்லது மீன் வியாபாரம் செய்பவர்களே இந்த சொசைட்டியும் வைத்துக் கொண்டு, அந்தத் தொழிலையும் செய்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: தலைவர் அவர்களே, ஆங்காங்கு இருக்கின்ற மீன் துறை சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் ஒன்றுக்கூடி—கூட்டுறவு விதிகளின் மூலம் கூட்டுறவு ஐக்கிய நாணயச் சங்கம் எப்படி கிராமப் புறங்களிலே இயங்கி வருகிறதோ அதுபோல—சங்கம் ஏற்படுத்தவேண்டுமென்று கூட்டுறவுத்துறை இயக்குநர் அவர்களுக்கு விண்ணப்

பித்திருக்கிறார்கள். கூட்டுறவுத் துறை இயக்குநர்தான் அதனுடைய பதிவாளராக இருந்துகொண்டு சங்கங்களை அனுமதிக்கின்றார்கள். இந்த முறையிலேதான் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. அந்தச் சங்கங்களுக்குத்தான் முன்னுரிமையும், முதலுரிமையும் வழங்கப்படுகிறது. கூடுமானவரையில் அவர்கள் மீனவர்கள்தானா, மீன் தொழில் செய்பவர்கள்தானா என்பதை ஆராய்ந்தறிந்து, கீழ்மட்டத்திலே இருக்கின்ற அதிகாரிகளுடைய பரிந்துரையைப் பெற்று, அரசு அதுபோன்ற வாய்ப்புக்களை அவர்களுக்கு அளித்து வருகிறது.

திரு. அ. அய்யணன் அம்பலம் : தலைவர் அவர்களே, மீன் தொழிலைச் செய்யக்கூடியவர்கள் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். பழநி கூட்டுறவு மீனவர் சங்கத்தின் தலைவர் திரு. லட்சுமிராஜ் அவர்கள், அவர் மீன்பிடித் தொழிலைச் செய்கிறாரா? அவர் அந்தத் தொழிலில் எவ்வளவு காலமாக இருந்து வருகிறார்? மேலும் அவர் ஒரு முற்போக்கு இனத்தைச் சேர்ந்தவர் என்பதையும் அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, பழநியிலே இருக்கின்ற அந்த நண்பர் பற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை. ஆனால் பொதுவாக மீனவர் என்கின்ற ஒரு தனி இனம் இருப்பதாக இதுவரையில் நான் ஆய்வு செய்தவரையில் எனக்குத் தெரியாது. மீன்பிடித் தொழிலை ஒவ்வொரு மாவட்டத்திலும் பல இன மக்கள் தங்களுடைய தொழிலாகக் கொண்டு பணி செய்து வருகிறார்கள். அந்த வகையிலே உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற அந்த நண்பர் எந்த வகுப்பில் இடம் பெற்றிருக்கிறார் என்பதற்கு தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கம் 1974 ஆம் ஆண்டிலே தவறு செய்து அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். எடுக்கப்பட்ட நடவடிக்கை என்னவென்றால் அதற்குக் கொடுக்கப்பட்ட லைசென்ஸ் "கேன்சல்" செய்யப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னதாகக் கவனம். என்ன தவறு அந்தக் கூட்டுறவுச் சங்கம் செய்தது, அதற்கு ஏதாவது வேறு நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, 3—7—1974-ல் மதுரை மாவட்டத்தில் குன்னத்தூர் கண்மாய் என்கின்ற ஒரு கண்மாய் இருக்கின்றது. அந்தக் கண்மாயில் மீன்பாசி குத்தகை கூட்டுறவு சம்மேளனத்திற்கு வழங்கப்பட்டது. ஆனால் எந்த ஒரு அடிப்படையில் வழங்கப்பட்டதென்றால் இருக்கின்ற தண்ணீரை முறையாக வேளாண்மைத் துறைக்கு உபயோகப்படுத்திவிட்டு, மிச்சம் இருக்கின்ற நேரத்திலேதான் அங்கே மீன்பாசி குத்தகைதாரர்கள் மீன் பிடிக்கவேண்டும் என்று அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்தும், அங்கே இருக்கின்ற விளை நிலங்களுக்கு அந்தக் கண்மாயிலிருந்து பாசனத்திற்குத் தண்ணீர் வழங்கும் நிலைமை இருந்தும்கூட, அந்தக் குத்தகைதாரர்கள் கண்மாயைத் திறந்து விட்டு, நீரைச் சுருக்கி மீன்பிடிப்பதற்கு முனைந்ததை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரடியாகக்கண்டு—இரண்டு மாத நீர்த் தேக்க





அந்தக் கண்மாயில் இருந்தாகவேண்டும் என்ற அந்த நிபந்தனையை மீறி குத்தகைதாரர்கள் தண்ணீர் திறந்து விட்டதற்காக, அதை ரத்து செய்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. அய்யணன் அம்பலம் : தலைவர் அவர்களே, மேலமடை மீனவர் கூட்டுறவு சங்கத்திற்கு 600 ரூபாய்தான் அதனுடைய மூலதனம் என்றும் அதனுடைய கடன் ரூபாய் 1,600 ரூபாய் என்றும், முறையான ஆடிட்டோ மற்ற நிர்வாக முறைகளோ இல்லை என்றும், அது பங்குத் தொகையைச் சரியாகக் கொடுப்பதில்லை என்றும், அதில் வருகின்ற லாபத் தொகையினை சரியாகப் பங்கிட்டுக்கொள்வதில்லை என்றும், இவ்வாறாக அந்த மீனவர் சங்கம் சரியாகச் செயல்படவில்லை என்றும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, அந்த மேலமடை கண்மாய் குத்தகை கொடுக்கப்படவில்லை. தற்போது அந்தச் சங்கம் அந்தக் குற்றங்களையெல்லாம் நிவர்த்தி செய்திருக்கிறதா? அப்படிச் செய்யாவிட்டால், ஒவ்வொரு ஆண்டும் அதைக் கொடுக்கும்போது, இவ்விதமான குற்றங்கள் இல்லாமல் இருக்கிறதா என்று கண்காணிக்க அரசாணை இட்டு, அப்படிக் குற்றம் இல்லாவிட்டால் அந்தச் சங்கத்திற்கு கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, இதுபற்றிய விரிவான தகவல் எதுவும் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மீன்பிடிப்பது அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு குத்தகையாகக் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அந்தக் குத்தகை எந்த அடிப்படையிலே கொடுக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன். சில நேரங்களிலே, 40 ஆயிரம், 50 ஆயிரம் ரூபாய் வருமானம் வரக்கூடிய குத்தகைகள் 2 ஆயிரம், 3 ஆயிரம் ரூபாய் அளவிலே நிர்ணயிக்கப்படுகின்றன என்று சொல்கிறார்கள். அதனுடைய அடிப்படை என்ன என்பதையும், அப்படி ஏன் குத்தகை கொடுக்கப்படுகிறது என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, அந்தக் குத்தகையை, தனிப்பட்டவர்கள் அதிகமான தொகை கொடுத்து ஏலத்திலே எடுத்துவிடுகிறார்கள். ஆகையினாலே கூட்டுறவு யூனியன் மூலமாக, கூட்டுறவுத் துறை உறுப்பினர்களின் சங்கங்களை உள்ளடக்கி, அந்தச் சங்கத்தில் உறுப்பினராக இருப்பவர்களெல்லாம் மீன் பிடிப்பதற்கு ஒரு வாய்ப்பைப் பெறுவார்கள் என்பதற்காக அப்படி ஒரு தனிப்பட்ட குத்தகை ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் மூலம் 2,655 ரூபாய் கட்டப்பட வேண்டும் என்று கேட்டபடி கட்டியும் இருக்கிறார்கள். ஆனால் இப்போது வந்த பிணக்கு கண்மாயில் தண்ணீர் இருக்கிறபோது அந்தத் தண்ணீரை வெளியில் இறைத்து எடுத்துவிட்டு மீன் பிடித்திருக்கிறார்கள். அவ்வாறு செய்யக்கூடாது, இருக்கும் உத்தரவை மீறிச் செய்துவிட்டார்கள் என்பதற்காகத்தான் மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, என்னுடைய பிரச்சினை அடிப்படையான பிரச்சினை. 2,500 ரூபாய்க்கு குத்தகைக்குக் கொடுத்திருக்

கிறார்கள். எவ்வளவு வருமானம் வரக்கூடிய கண்மாய் இப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நான் அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :</u> அதுபற்றி தனிக் கேள்வி போடவும்.

<u>திரு. அ. அய்யண்ணன் அம்பலம் :</u> தலைவர் அவர்களே, 2,400 ரூபாய் அந்தக் கண்மாய்க்குப் பணம் கட்டிவிட்டார்கள் என்று சொல்கிறார்கள். சொசைட்டியில் வருமானம் இல்லாமலேயே இந்த 2,400 ரூபாய் கட்டுகிறார்கள். ஆக மீன்கடைக்காரர்கள்தான் அந்தப் பணத்தைக் கட்டுகிறார்கள். ஆகவே, சொசைட்டியின் வரவு செலவுகள், அந்த சொசைட்டிக்கு மூலதன பங்குத் தொகை இவைகளைப்பற்றி கூட்டுறவுச் சட்டத்திற்கு உகந்தபடி நடவடிக்கை எடுக்காமல் மீன் கடைக்காரர்கள் இந்த மாதிரி ஒரு சங்கத்தை வைத்துக்கொண்டு தவறான வழியில் உபயோகப்படுத்துகிறார்கள் என்பதை அரசு அறிந்து அதைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொண்டு, அவ்வாறு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

[பிற்பகல் 4-20]

<u>மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :</u> தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல், இதுபோன்ற பல புகார்கள் பல சங்கங்களிலிருந்து வந்திருப்பதனால், இந்த மாதிரியான புகார்களைப்பற்றி நிச்சயமாக ஆய்வு செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. எம். சங்கரலிங்கம் :</u> தலைவரவர்களே, இந்தக் கண்மாய்களை மீன் குத்தகைக்கு விடுகிறபோது, மீன்பிடி கூட்டுறவுச் சங்கங்களுக்கு இப்போது முன் உரிமை கொடுத்து வருகிறோம். மீன் பிடிக்கவேண்டும் என்னும்பொழுது நஷ்டம் வரக்கூடாது என்ற உணர்வினால் கண்மாயில் இருக்கின்ற தண்ணீரை விவசாயத்துக்குப் பயன்படாமல் செய்கிற சூழ்நிலை இருப்பதாகத் தெரிகிறது. இந்த கண்மாய்களுக்கான முன் உரிமையை விவசாய மக்களுக்கு விட்டு, இரண்டாவது உரிமையை மீன்பிடி சங்கத்திற்குவிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> தலைவரவர்களே, பாசிக் குத்தகை எடுப்பது என்று பெயர் இருந்தாலும், மாண்புமிகு அங்கத்தினர் திரு. சுவாமிநாதன் சொன்னதுபோல, இவைகளை ஏலத்தில் விட்டால் கொஞ்சம் அதிகமாக வருவாய் வரக்கூடும். ஆனால் இந்த முறை மீனவர்களைப் பெரிதும் பாதிக்கின்றது. பணம் படைத்தவர்கள் ஏலத்தில் எடுத்துவிட்டால், மீனவர்கள் பயன்படுத்த முடியாமல் போய்விடும் என்ற நிலைமை வருகின்ற காரணத்தினால், இந்த மீன்பிடி கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கும் முறை கடைபிடிக்கப்படுகிறது. மீனவர் அல்லாதவர்கள், இப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களிலே தாங்களும் மீன் பிடிப்பவர்களாகக் குத்தகை எடுத்துக்கொண்டிருக்கலாம். இவர்கள் ஒரு வேளை குழம்பிய குட்டையிலே மீன் பிடிப்பவர்களாக இருக்கலாம். இப்படிப்பட்டவர்கள் சில பேர் இதிலே கலந்துகொண்டு கூட்டுறவுச் சங்கங்கள் என்ற பெயரில்



சில தவறுகள் நடைபெற்றுவருவதாகப் புகார்கள் வருகின்றன. இங்கே எழுந்துள்ள கேள்விகளின் அடிப்படையிலே, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. சி. வி. ராஜகோபால் :</u> தலைவரவர்களே, தமிழ்நாட்டில் மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை இருக்கின்றன? அதில் எத்தனை தவறு செய்திருக்கின்றன? அப்படி தவறுசெய்து இயங்காமல் இருப்பவை எத்தனை? அப்படி மீனவர் சங்கங்கள் இல்லாத சில இடங்களில், சில ஏரிகளிலே, கடைசி நேரத்தில் தண்ணீர் வற்றிவிட்டபிறகு ஏராளமான மீன்கள் இருப்பதாகவும், அந்த கிராமத்திலே இருக்கின்ற இரண்டு மூன்று செல்வாக்கு உள்ளவர்கள், அந்த மீன்களைப் பிடித்து அதை விற்றுவருகின்ற பணத்தை அனுபவிக்கிறார்கள் என்ற பழிச்சொல் இருக்கின்றதே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> தலைவரவர்களே, மீனவர் சங்கங்கள் தமிழ்நாட்டில் பல இருக்கின்றன. தவறு செய்கின்றவைகள் எத்தனை என்று கேட்டால், சில தவறு செய்கின்றன. சில காய்ந்துபோன குட்டைகளில் மீன்கள் மீன்களாக இருப்பதில்லை. கருவாடுகளாக ஆகிவிடுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### *Doctors in Animal Husbandry Department*

*128. Q. THIRU P. R. THOMAS (on behalf of THIRU K. S. GANAPATHI) : Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state—

(a) whether it is a fact that some Doctors in Animal Husbandry Department of the State Government are deputed to undergo the Post-Graduate Course training in Sheep Husbandry in Australia and the International Course in Sheep Husbandry in Australia and New Zealand ; and

(b) if so, the number of persons so deputed during the yeare 1972-73 and 1973-74 ?

### <u>கால் நடை வளர்ப்புத் துறை மருத்துவர்கள்</u>

<u>திரு.பி. ஆர்.தாமஸ் (திரு. கே. எஸ். கணபதி சார்பில்):</u> மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சரவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆஸ்திரேலியாவில் செம்மறியாடு வளர்ப்பு குறித்து பட்டமேற்படிப்பிலும் ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து ஆகிய நாடுகளில் செம்மறியாடு வளர்ப்பு குறித்த அனைத்து நாடுகள் படிப்பிலும் பயிற்சி பெறுவதற்காக மாநில அரசின் கால்நடை வளர்ப்புத் துறை மருத்துவர்கள் சிலர் முகமையில் அனுப்பப்படுகின்றனரா?

[1975 மார்ச் 7

(இ) ஆமெனில், 1972–73, 1973–74 ஆண்டுகளில் அவ்வாறு எத்தனை மருத்துவர்கள் முகமையில் அனுப்பப்பட்டனர்?

<u>மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்</u> : (அ) & (இ) கால் நடை மருத்துவப்பணியில் (இதில் செம்மறியாடுகள் வளர்ப்பும் அடங்கும்) பயிற்சி பெறுவதற்காக கால்நடை வளர்ப்புத்துறையிலிருந்து 1972–73-ல் ஓர் அதிகாரி ஆஸ்திரேலியாவிற்கு முகமையில் அனுப்பப்பட்டார்.

<u>திரு. ஜி. சுவாமிநாதன் :</u> தலைவரவர்களே, சில சமயங்களிலே, உறுப்பினர்கள் வராதபோது, மற்ற உறுப்பினர்கள் அந்தக் கேள்விக்கு பதில் கேட்கிறார்கள். அநேகமாக "ஆம்", "இல்லை" என்ற அளவிலே அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றார்கள். அமைச்சர் அவர்களுக்குத் தக்க பதில்கள் வந்திருக்கின்றதால், அந்த உறுப்பினர் இல்லாவிட்டாலும், முழு பதிலையும் அவர்கள் படித்தால் இருப்பவர்களுக்கு அது பயன்படுவதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> தலைவரவர்களே, வரமுடியாத உறுப்பினர்கள், இருக்கின்ற உறுப்பினர்களிடத்திலே இன்னின்ன உப கேள்விகள் கேளுங்கள் என்று எழுதிக் கொடுத்துவிட்டுப் போய்விடுவார்களானால், போதுமானது.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர் :</u> பேசுகின்றவர்கள், பேசப் போகிறேன் என்று சொல்லி பெயர் கொடுத்துவிட்டு, வெளியே போய் விடுகின்றார்கள். அதற்கு என்ன பண்ணுவது?

<u>திரு. க. அறிவழகன் :</u> தலைவர் அவர்களே, செம்மறியாடு வளர்ப்பு பற்றி பயிற்சி பெறுவதற்காக ஆஸ்திரேலியா நாட்டிற்கு கால்நடை மருத்துவர்கள் அனுப்பப்பட்டதாகக் கேள்வி. இதைப் போன்று சில நிறுவனங்கள், அந்தத் துறையைச் சேர்ந்த ஐ. ஏ. எஸ். அதிகாரிகளை மேற்பயிற்சிக்காக அனுப்புகின்றன. அப்படியே பால் பண்ணையைப் பற்றித் தெரிந்து கொள்ள ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரி அனுப்பப்பட்டார். ஆனால் அவரை அதே துறையில் வைத்துக் கொள்ள முடியவில்லை. ஆகவே ஐ. ஏ. எஸ். அதிகாரிகளை அனுப்பாமல், அந்தந்தத் துறையைச் சேர்ந்தவர்களை அனுப்புகின்ற ஒரு புதிய முறையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் :</u> தலைவரவர்களே, தற்போது இந்தக் கேள்விக்கு இடமில்லை. செயலாளர் பதவியில் இருந்த ஒருவர்தான் அனுப்பப்பட்டார். அவர் ஐ. ஏ. எஸ். அதிகாரி. பாக்கி அனைவருமே இந்தத் துறையிலே பயிற்சி பெற்றவர்கள்தான். அவர்கள்தான் இப்போது இருக்கின்றார்கள். அவர்கள்தான் அனுப்பப்பட வேண்டுமென்ற முறை இப்போது இருக்கிறது. அவர்கள்தான் அனுப்பப்படுகின்றார்கள்.

### *Temple properties*

*** 129. Q. THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased o state—**



1975 மார்ச் 7]

(*a*) whether any representation has been received by the Government regarding the removal of time-limit for redemption of temple properties from those who have been enjoying the same unauthorisedly ; and

(*b*) if so, the action taken thereon ?

<u>திருக்கோயில்களின் சொத்துக்கள்.</u>

<u>தவத்திரு குன்றக்குடி அடிகளார் :</u> மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருக்கோயில்களின் சொத்துக்களை முறைகேடாக அனுபவிப்பவர்களிடமிருந்து மீட்க உள்ள காலத்தடையை நீக்கவேண்டும் என்று அரசுக்குக் கோரிக்கை வந்ததா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

<u>மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :</u> (அ) ஆம்.

(இ) வக்ப் போர்டு சொத்துக்கள் பராதீனம் செய்யப்பட்டிருந்தால் அவைகளை மீட்க நீதி மன்றத்தில் வழக்கு தொடுக்காது நேரடியாக மாவட்ட ஆட்சியாளர் மூலம் நடவடிக்கை தொடர்ந்து அச்சொத்துக்களை மீட்க வழிவகைகள் உள்ளன. இதே போன்ற வழிவகைகள் காண தமிழ்நாடு இந்து மத அறநிலையச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டுமென்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

<u>திரு. ஜி. சுவாமிநாதன் :</u> தலைவரவர்களே, இந்த திருக்கோயில்களினுடைய சொத்துக்கள் எவ்வளவு ஏக்கர் ? தமிழ்நாட்டில் தனி நபருடைய கையிலே எவ்வளவு இருக்கும் என்பதை அறிய ஒரு ஸ்பெஷல் ஸ்குவாட் அரசாங்கம் அமைத்தது என்று கேள்விப்பட்டேன். அப்படி எவ்வளவு ஏக்கர் எடுக்கப்பட்டது என்பதையும், எடுக்கப்பட்ட அந்த நிலத்திலிருந்து எவ்வளவு வருமானம் என்றும் அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :</u> தலைவரவர்களே, தனி ஸ்குவாட் அமைத்ததற்குப் பிறகு சுமார் 2 லட்சம் ஏக்கர் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. தேவையான நடவடிக்கைகள் எடுத்து சுமார் 85 ஆயிரம் ஏக்கர் நிலம் நம்முடைய துறையினுடைய ஆளுகையின் கீழே வந்திருக்கின்றது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதனுடைய வருமானம் பற்றி கணக்கு இன்னும் பார்க்கப்படவில்லை. சரியான புள்ளி விவரம் இப்போது என்னிடத்திலே இல்லை.

<u>திரு. கே. ராஜாராம் :</u> தலைவரவர்களே, வக்ப் போர்டுக்கு உள்ளது போன்ற ஒரு அதிகாரத்தை இந்து அறநிலையத் துறைக்குக் கொடுப்பதைப்பற்றி அரசு பரிசீலிப்பதாக அமைச்சர் அவர்கள்

சொன்னதற்கு மகிழ்ச்சி. இதில் எற்கெனவே எராளமான நம் கோயில் சொத்துக்கள் பலரிடம் இருக்கின்றன. இதை நாம் திரும்பப் பெறவேண்டும் என்றால், கோர்ட்டுக்குப் போய்த்தான் ஆகவேண்டியிருக்கின்றது. எக்சிகியூடிவ் ஆபீசர்கள் கோர்ட்டுக்குப்போய் சூட் போட்டுத்தான் ஆகவேண்டியிருக்கின்றது. வக்ப் போர்டுக்கு அந்தக் கஷ்டம் இல்லை. அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எழுதிய உடனே அந்த பராதீனம் செய்யப்பட்ட சொத்துக்களை மீட்டு போர்டு ஒப்புவித்துவிடுகிறார்கள். ஆனால் இந்து அறநிலைய போர்டுக்கு அந்த மாதிரி அதிகாரம் இல்லை.

திரு. கே. எஸ. அப்துல் வகாப் : தலைவரவர்களே, வக்ப் போர்டும் கோாட்டுக்குத்தான் போகவேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, கோர்ட்டுக்குப் போய்த்தான் ஆகவேண்டும். கோர்ட்டுக்குப் போய்க்கூட பல வழக்குகள் தோற்றுவிடுகின்றன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இதிலேயுள்ள சட்டதிட்டத்தைப் பொறுத்தவரையில், அறநிலையத் துறையினுடைய ஆணையாளர், அதாவது மேல் அதிகாரியின் அனுமதியில்லாமல் துறையைச் சேர்ந்த கீழிருக்கின்ற அதிகாரிகள், அறங்காவலர்கள் சொத்துக்களை அப்படி விற்று வாங்கியது செல்லாது என்பதற்கு கோர்ட்டுக்குப் போகவேண்டும். அந்த நிலைமையிலே மாவட்ட ஆட்சித் தலைவரவர்களே அதை "கான்சல்" செய்து மீண்டும் அந்த நிறுவனத்திற்கே கொடுக்கவேண்டும் என்பதற்காக இத்தகைய சட்டத்தைக் கொண்டு வர இப்போது பரிசீலித்துக் கொண்டிருக்கின்றோம்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு தலைவரவர்களே, வக்ப போர்டு சட்டபபடி 35-வது பிரிவில் மாவட்ட ஆட்சித் தலைவர் விசாரணை செய்து வக்ப் போர்டுக்குச் சொந்தமானது என்று அறிவித்துவிட்டால, சொத்தை துராக்கிரமமாக வைத்துக் கொண்டிருப்பவர்கள்தான் வழககுக்குப் போகவேண்டுமே தவிர, வகப் போர்டு போக வேண்டியதில்லை. அந்த மாதிரி நிலைமையில் இந்து அறநிலையத்துறை இல்லை என்பதை தலைவர் அவர்கள் மூலமாக அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அந்த வக்ப் போர்டிலே உள்ள சடட திட்டங்களையும் அந்த விதி முறைகளையும் ஆராய்ந்து நம்முடைய துறைக்கும் அது பயன்படுமானால், எதிர்காலத்தில் நம்முடைய துறையிலே இருக்கின்ற சட்டத்தைத், திருத்துவதற்கும நடவடிக்கை மேற்கொள்ளலாம.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இப்போது இந்து அறநிலையத் துறையிலே இருககின்ற சட்டத்தையே வக்ப் போர்டுககும் அமுல் படுத்தலாமா என்று பரிசீலிக்கப்படுகின்ற நிலைமைதான் இருக்கின்றது. இக்கரைக்கு அக்கரை பச்சை என்பது போலத்தான் நிலைமை இங்கும் இருக்கின்றது.



### *Thiruvarangam Temple.*

*130. Q. —THIRU A. BALASUBRAMANIAM (on behalf of THIRU Y. VENKATESWARA DIKSHIDAR): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether it is a fact that the inam dry lands of the 'Mottai Gopuram' donated for the right of way for conducting the 8th day of 'Panguni Uthiram' Festival in Thiruvarangam Temple has been alienated; and

(*b*) if so, the reason the for ?

### அருள்மிகு திருவரங்கம் கோயில்.

திரு.எ. பாலசுப்பிரமணியம் (திரு. ஒய். வெங்கடேஸ்வர தீஷிதர் சார்பில்) : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) அருள்மிகு திருவரங்கம் கோயில் பங்குனி உத்திர 8-ம் திருநாள் வழிநட உபயத்திற்கு விடப்பட்ட மொட்டைக் கோபுர இனும் புஞ்சை நிலங்கள் பராதீனம் செய்யப்பட்டது உண்மையா?

(இ) ஆமெனில், காரணம் யாது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) ஆம். செட்டில்மெண்ட் தாசில்தார் சில நபர்களுக்கு பட்டா வழங்கியுள்ளார். இதனை எதிர்த்து கோயில் திருச்சிராப்பள்ளி சப்கோர்ட்டில் வழக்கு தொடுத்துள்ளது. இந்த வழக்கு நிலுவையில் உள்ளது.

### *High level Meeting at Hogenekal.*

*122. Q. —THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether a High Level Meeting was held at Hogenekal in June, 1974, between the representatives of the Government of Karnataka and the Government of Tamil Nadu ;

(*b*) if so, the nature of the discussion held during the Meeting; and

(*c*) the follow-up action taken thereon ?

### ஹோகேனக்கல்லில் உயர் அதிகாரிகள் கூட்டம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாடு அரசுப் பிரதிநிதிகளுக்கும் கருநாடக அரசுப் பிரதிநிதிகளுக்குமிடையே (ஹோகேனக்கல்லில்) 1974 ஆம் ஆண்டு ஜூன் திங்களில், உயர் அதிகாரிகள் கூட்டம் ஒன்று நடைபெற்றதா?

(இ) ஆமெனில் அக்கூட்டத்தின்போது நடைபெற்ற விவாதங்கள் யாவை ?

(உ) அது குறித்து எடுக்கப்பட்ட தொடர் நடவடிக்கை யாது ?

<u>மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் :</u> (அ) & (இ) தமிழகப் பொதுப்பணித் துறை அமைச்சருக்கும் கருநாடக அரசின் பொதுப்பணி மின்சக்தி அமைச்சருக்கும் இடையே 5—6—1974 அன்று அமைச்சர்கள் நிலையில் ஹோகேனேக்கல்லில் நடைபெற்ற விவாதத்தில் சில முடிவுகள் எடுக்கப்பட்டன. ஆற்றின் பல்வேறு பகுதிகளில் மின்சக்தி உற்பத்தி செய்வதற்கான தகுந்த செயற்குறிப்புகளை இரு மாநிலங்களும் வகுக்க வேண்டும். அந்தந்த வட்டாரத்தில் மொத்த நலனை நிறைவு செய்யும் வகையில் மிகவும் ஆதாயம் தரத்தக்க சிக்கனமான திட்டத்தை வகுப்பதற்கான கருத்துப் பரிமாற்றங்கள் அதன்பின்னர் மேற்கொள்ளப் படும் என்பவையே மேற்சொன்ன முடிவுகளாகும்.

(உ) தொடக்க ஆய்வுப் பணிகள் தமிழ்நாடு மின்சக்தி வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

THIRU G. SWAMINATHAN : Sir, I asked this question of the Hon. the Minister for Public Works.

The Hon. THIRU S. J. SADIQ PASHA : Sir, because it relates to 'Electricity' it has come to the Minister for Electricity.

THIRU G. SWAMINATHAN : Sir, the question relates only to the Hon. the Minister for Public Works.

[பிற்பகல் 4–30]

THIRU G. SWAMINATHAN : Sir, may I know whether there was any move to have a feasibility report on a power project at Lower Cauvery and if so, what will be capacity of the power project and what will be the investment for that power project.

[பிற்பகல் 4–30]

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :</u> தலைவரவர்களே, காவிரி ஆற்றில் கிடைக்கக்கூடிய மின்சக்தி உற்பத்தி வளத்தினைப் பயன்படுத்திக் கொள்வதற்கான அவசரத் தேவையை இரு மாநிலத்து அமைச்சர்களும் பரிவர்த்தனை செய்து 100 டி.எம்.சி. முதல் 400 டி.' எம். சி. வரை நமது ஆற்றின் பல்வேறு பகுதிகளிலிருந்து மின் சக்தி உற்பத்தி செய்வதற்கும் அந்தந்த வட்டாரம் முழுவதற்குமான நல்ல ஆதாயம் தரத்தக்க சிக்கனமான திட்டத்தைத் திட்டவும் செயற் குறிப்புகள் இரு மாநிலங்களும் வகுக்க வேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.





<u>திரு. கே. ராஜாராம் :</u> தலைவரவர்களே, இந்த ஒகனேக்கல் திட்டம் இரு மாநிலங்களுக்கும் லாபகரமான திட்டம், பொதுவாக லாபகரமான திட்டம் என்று கருநாடக அரசு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. சென்ன பாசப்பா அவர்கள் ஒரு அறிக்கையை அந்த மாநில அரசுக்கு சமர்ப்பித்தார், என்று பத்திரிகையில் செய்தி வந்தது. அது இப்பொழுது அவர்களுடைய மனம் மாறியிருப்பதைத் தெரிவிக்கின்றது. பத்திரிகைச் செய்தியைப் பார்த்த அளவில், ஒகனக்கல் புராஜெக்டை எடுத்துக்கொள்வதற்கு அவர்கள் சம்மதிப்பார்கள் போன்று தென்பட்டது. ஆகையால் அது எந்த நிலைமையில் இருக்கிறது என்பதை அமைச்சரிடமிருந்து நான் அதிகாரபூர்வமாக அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> தலைவர் அவர்களே, ஹோகேனக்கல் திட்டம் சம்பந்தமாக கர்நாடக பொதுப் பணித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. சென்ன பாசப்பா அவர்களும் நானும் சந்தித்துப் பேசினோம். அந்த இடத்தையே நேரில் சென்று பார்த்தோம். எவ்வளவு தண்ணீர் வருமென்ற சர்ச்சைக்குரிய பிரச்சினையை அவர்கள் கிளப்பினார்கள். ஏன், இப்பொழுது வந்துகொண்டிருக்கிற 300 டி. எம். சி. தண்ணீர் குறையாமல் வருமே, 350 டி. எம். சி. தண்ணீர் வருமே என்று நான் சொன்னேன். ஆனால் காவிரிப் பிரச்சினை தீரவில்லை. ஆகவே 100 டி.எம்.சி. தண்ணீர் வந்தால் எவ்வளவு தண்ணீர் கட்ட வேண்டும், எவ்வளவு மின்சாரம் உற்பத்தியாகும், எவ்வளவு செலவாகும், 150 டி.எம்.சி-க்கு எவ்வளவு, 200 டி.எம்-சிக்கு எவ்வளவு, என்று கணக்குப் போட்டு வைத்துக்கொள்வது நல்லது என்று அவர்கள் சொன்னார்கள். இது தேவையற்றது என்று நான் சொன்னேன். காவிரிப் பிரச்சினை தீருகிற வரையில் இப்படிப் போட்டு வைத்துக்கொள்வது நல்லது, திறந்த உடனே எடுத்துக் கொள்ளலாமென்று சொன்னார்கள். ஆனால் திரு. சென்ன பாசப்பா அவர்களைப் பொறுத்த மட்டில், காவிரிப் பிரச்சினையிலேதான், தண்ணீர் கொடுப்பதிலேதான் தகராறு கிளப்பினார்களே தவிர ஹோகேனக்கல் திட்டம் நிறைவேற்றுவதில் ஆட்சேபணை இருப்பதாக நான் நினைக்கவில்லை. ஆனால் ஹோகேனக்கல்லில் எவ்வளவு தண்ணீர் வரும் என்பதுதான் பிரச்சினை. காவிரிப் பிரச்சினை தீர்ந்தால்தான், இதை நாம் முடிவு செய்ய முடியும்.

<u>திரு. ஜி. சுவாமிநாதன் :</u> தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு ரூபாய் செலவாகும் என்று தோராயமாகக் கணக்கிடப்பட்டதா என்பதையும், இரண்டு மாநிலங்களும் சேர்ந்து அந்தப் பணத்தைக் கொடுப்பதா அல்லது கர்நாடக அரசு மாத்திரமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> தலைவரவர்களே, எவ்வளவு பணம் செலவாகும் என்பதை எவ்வளவு தண்ணீர் வரும் என்பதைப் பொறுத்துத்தான் கணக்கிட முடியும். ஆனால் அந்த இடத்தில் ஆறு இரு பாகமாகப் பிரிந்து ஒரு கரை தமிழகத்திற்கும் ஒரு கரை கருநாடகத்துக்கும் இருக்கிற காரணத்தினால், இரண்டையும் சேர்ந்துதான் கட்ட

வேண்டிய நிலை இருக்கிறது. தண்ணீர் போய்த் தேங்குகிற இடம் கருநாடகத்திலே. ஆகவேதான், அந்த மாநிலத்துடன் சேர்ந்து செய்ய வேண்டியிருக்கிறது. அநேகமாக செலவை இரண்டு மாநிலங்களும் சேர்ந்து பகிர்ந்து கொள்ள வேண்டியிருக்கும். கிடைக்கும் மின்சாரத்தை இரண்டு மாநிலங்களும் சேர்ந்து எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை 'உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது' என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்பு.

### பேரவையிலிருந்து செய்தி.

Mr. CHAIRMAN : I have received a message from the Hon. Speaker, Legislative Assembly, that under rule 242 of the Tamil Nadu Legislative Assembly Rules, he has nominated the Hon. Thiru. A. P. Dharmalingam as an additional member of the Joint Select Committee on the Tamil Nadu Cultivating Tenants (Right to Purchase Landowners' Rights) Bill, 1973 (L.A. Bill No. 11 of 1973) and the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Conferment of Owner-ship) Second Amendment Bill, 1974 (L. A. Bill No. 13 of 1974).

THIRU G. SWAMINATHAN : Sir, the Bill lapsed because it ought to have been re-introduced in the Assembly within 7th February. The Joint Select Committee was appointed for the Bill which was passed into an Act and sent to the President. The President returned the Bill for reconsideration and proper re-introduction in the Assembly again. The Joint Select Committee was formed for the original Bill and that Bill has already lapsed by 7th February. Therefore, I think the Joint Select Committee also should have become defunct within that time. I want to know whether it is proper for a Joint Select Committee to continue for that Bill which has already lapsed. May I also know whether the Bill was re-introduced in the Assembly?

Mr. CHAIRMAN : Have they not re-introduced the Bill in the Assembly ?

THIRU G. SWAMINATHAN : Sir, the Joint Select Committee can be formed only..............

Mr. CHAIRMAN : I do not know whether the Joint Select Committee has been formed. I have received the message from the Hon. Speaker and I have announced it.





THIRU G. SWAMINATHAN : Sir, when the Bill has not been introduced in the Assembly, how can a Joint Select Committee function for a Bill which is not there ? A Select Committee can function only for a Bill which is there. This Bill was there originally and it lapsed on 7 th February. How can the Committee continue when there is no Bill? The Committee cannot continue when there is no Bill.

*திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, இன்று காலையில் அசெம்பிளி செக்ரட்டேரியட்டிலிருந்து தபால் வந்திருக்கிறது. சம்பந்தப்பட்ட ஜாயிண்ட் செலக்ட் கமிட்டியின் கூட்டம் வருகிற 10-ம் தேதி போடப்பட்டிருக்கிறது. இந்த பில்லை 6 மாதங்களுக்கு உள்ளாக பரிசீலனை செய்து திருப்பி பிரசிடெண்டுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்பது சட்ட சம்பிரதாயம் என்று நினைக்கிறேன். அப்படி ஒருகால் 6 மாதத்திற்குள் அனுப்பி வைக்காவிட்டால், பூரணமாக இறந்து விடுவதாக அர்த்தம் இல்லை நாம் புதிதாக பில்லுக்கு நம்பர் கொடுத்து புதுச் சட்டமாகவே ஆக்கி[illegible]பலாம். அதனால் ஒன்றும் கெட்டு விடாது. அது தவறினால் ஒன்றும் [illegible]ாசம் போய்விடாது என்று நினைக்கின்றேன். கூட்டம் 10ஆம் தேதி போ[illegible]ப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதில் ஒரு உறுப்பினராக இருக்கிறார்கள். நாம் அந்தக் கூட்டத்திலே சொல்லி விடலாம், வேறு நம்பர் கொடுத்து புதுச் சட்டமாகத் தருவதற்கு 10-ஆம் தேதி ஏற்பாடு செய்யலாமென்றுதான் நான் நினைத்திருந்தேன். அதனால் நான் நான் பிரச்சினையை எழுப்பாமல் இருந்தேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, ஒரு பில் கொண்டு வரப்பட்டது. அரசியல் சட்டப்படி 7-ஆம் தேதிக்குள்ளாக அதை மறுபடியும் அசெம்பிளியில் வைத்து அது அங்கே நிறைவேற்றப்பட்டு பிறகு மேலவையிலே வைத்து நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். அப்பொழுது தான் அந்த மூல பில்லுக்கு உயிரோட்டம் இருப்பதாக அர்த்தம். அந்த மூல பில் 7-ஆம் தேதியுடன் முடிவடைந்து விடுகிறது.

அதற்குமேல், அரசு வேண்டுமானால், மறுபடியும் ஒரு மசோதாவை நம்முடைய சட்ட மன்றத்தில் கொண்டுவந்து, பிறகு மேலவையில் கொண்டு வரலாம். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியதுபோல, அதற்கு மறுபடியும் ஒரு நம்பர் கொடுத்து புதிதாகக் கொண்டு வருவதற்கு அரசாங்கத்துக்கு உரிமை இருக்கிறது என்பதை நாம் "அட்வகேட் ஜெனரல்" மூலமாகத் தெரிந்து கொண்டோம். ஆனால் என்னுடைய பிரச்சினை எல்லாம் அந்த பில் முடிந்துவிட்ட பிறகு மறுபடியும் அதற்கு ஒரு நம்பர் கொடுத்து, அது அசெம்பளிக்கு வரும்பொழுதுதான் அதற்கு ஒரு செலக்ட் கமிட்டி போட முடியுமே தவிர அது வருவதற்கு முன்னாலே இல்லாத பில்லுக்கு எப்படி பழைய செலக்ட் கமிட்டி 10ஆம் தேதி கூட முடியும் என்பது. இன்னொன்று எப்படி அந்த செலக்ட் கமிட்டிக்கு ஒரு உறுப்பினரைப் போடமுடியும் என்பதற்கு நான் சட்ட ரீதியான ஒரு விளக்கத்தைத் தான் எதிர்பார்க்கிறேன் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[1975 மார்ச் 7

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இது ஒரு சட்டப் பிரச்சினை. அவர்கள் முடித்து என்னுடைய மேஜைக்கு வருகிறபோது அதைப்பற்றி விளக்கம் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

[பிற்பகல் 4–40]

## 3. கவன ஈர்ப்பு.

## தமிழ்நாடு மின் வாரியம் மின் சக்தி நுகர்வோரிடம் நான்கு மாத வைப்புத் தொகை கோருவது குறித்து.

*Thiru S. NARAYANASWAMY : Mr. Chairman, Sir, myself and my hon. Colleagues Thiru A.R. Damodaran and Thiru Swaminathan would like to call the attention of the Hon. the Minister for Industries to a matter of urgent public importance, namely, the serious situation caused by the abrupt demand made on all classes of consumers including domestic and industrial consumers for 4 months' deposit based on November 1974 consumption which are the highest, by the Tamil Nadu Electricity Board and the consternation with which the demand has been received by the consuming public at a time when they are not able to find the funds required for the purpose and the necessity for immediate revocation of such orders to provide relief.

Thiru G. VASANTHA PAI : On a point of order, Sir. I think the hon. Member, in his speech on the Governor's Address, mentioned about this and the Hon. Minister gave a reply. How does this call attention notice come up again ?

Thiru G. SWAMINATHAN : Sir, we have given a Call-attention notice. It has been accepted by the Hon. Chairman and the Hon. Minister is ready with his reply. I do not know why the hon. Member should intervene.

Thiru G. VASANTHA PAI: Sir, I was only suggesting that the reply had already been given.

Mr. CHAIRMAN : The Hon. Minister will give the reply.

*The Hon. Thiru S.J. SADIQ PASHA : Under rule 14 of "The Indian Electricity Rules, 1956", the Electricity Board is empowered to require any consumer to deposit security for the payment of monthly bills for energy supplied and for the value of the meter and other parts installed on his premises. The said



1975 மார்ச் 7] [Thiru S. J. Sadiq Pasha]

Rules also give the liberty to the Board or Licencees to enhance security deposit due from consumers at any time during the life of the contract. With reference to this legal position, the action of the Electricity Board shall be construed as being in order.

Hitherto, the security deposit was collected to cover 3 months' estimated current consumption charges. Normally it takes about a fortnight to prepare the bill for a month's consumption. Over and above this a period of 30 days is allowed to enable the consumers to make the payment. In case of default a period to the extent of 7 days is allowed on the basis of a registered notice issued to the consumer, and finally if default persists, the supply is disconnected. As this processing and bill collection covers roughly 2 to 3 months, the Electricity Board was previously collecting 3 months' deposit.

With a view to providing for any delays in dealing with defaulters, the Electricity Board has since decided to collect 4 months' current consumption charges as security deposit. The rate of interest which was 3½ per cent previously has been increased to 5 per cent to put it on a par with the savings Bank rate at present.

Having due regard to the difficulties that may be experienced by the consumers due to the power cut, the Electricity Board has decided to collect the security deposit on the average of 12 months' consumption in 1974. This will reduce the amount by about Rs. 1 crore. Permission is also given to pay these revised amounts of security deposit in instalments, the number depending on the amount involved.

The additional revenue expected by giving effect to this proposal is Rs. 7 crores. This will be of great help to the Board for financing the capital programme for the current year in the present context of financial stringency. Of this, the collection to be made from—

| Category. | | Anticipated in lakhs of rupees (based on consumption). | Reduction expected on the basis of monthly average during calendar year 1974 |
|---|---|---|---|
| | | (RS. IN LAKHS.) | |
| 1. | Industrial special .. .. .. | 30 | 4 |
| 2. | Other industries .. .. .. | 250 | 34 |
| 3. | Agriculture .. .. .. .. | 158 | 22 |
| 4, | Domestic .. .. .. | 105 | 14 |
| 5. | Commercial .. .. .. .. | 170 | 23 |
| 6. | Public Lighting .. .. .. | 13 | 1 |
| | | 726 | 98 |
| | | or Rs. 7 crores | or Rs. 1 crore. |

Agriculture consumers are exempt from paying connection charges. The tariff applicable (12 paise per unit) to them is one of the lowest in the country and is not subject to surcharge. They are also exempt from payment of special guarantee charges eventhough the service connection may not be remunerative. The services are also not subject to power cut and are thus exempt from penalty. In cases of drying up of wells, the tariff minimum is waived. The collection of additional security deposit for agricultural service has been deferred for the present.

Thiru S. NARAYANASWAMY : Sir, may I make it clear that the point raised was not whether it was legal or illegal to make this levy but whether it was expedient to call upon consumers who



were already suffering from a power-cut which had reduced their incomes, particularly in industry to make this deposit ? They have been called upon not to pay one month's deposit and it is not as if they have been asked to pay one-third of what they have paid, but they have been called upon to pay several times what they have already deposited. Because of the multiplier effect of the new tariff, the amount which they have been called upon to pay has increased. I am undoubtedly aware that since I raised this question in the course of my speech on the Governor's Address, the Government have been very pleased to exempt agriculture and also spread the number of months over which the computation is made over the whole of 1974 as an average and tried to minimise the hardship. All I want to point out is that in spite of this, the amounts that they are called upon to pay, even at the individual consumer level, are very much higher than the deposit already made. It is not as if they are asked to pay one-third of the total deposit but they are asked to pay several times the deposit already made. They just do not have the money to pay the deposit because they are being called upon to pay fantastic sums. After the power cut, they have incurred loss and they do not have the money to pay it.

The Hon. Thiru S. J. SADIQ PASHA : Sir, all these aspects have been gone through but we are not able to help the industry except that they are permitted to pay the security deposit in monthly instalments.

Thiru G. SWAMINATHAN : Sir, the Hon. Minister has stated that for the capital expenditure of the Electricity Board he is trying to squeeze the small consumer and the householders. But, bills have not been received for three months and I understand that a sum of Rs. 12 crores is in arrears for want of sending the bills. May I know why the Government have and not taken immediate steps. to collect those arrears? Not being able to do so, they are trying to get more deposits from the consumers.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, பில்களை சரிவர அனுப்புவதில்லை என்பது சரியல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. நாராயணசாமி அவர்கள் பேசியதற்குப் பிறகு, விசாரித்ததிலே, நவம்பர் மாத பில்களும், டிசம்பர் மாத பில்களும் போய்விட்டன. ஜனவரி மாத பில்கள் போய்க்கொண்டிருக்கின்றன. பில் போய் பணம் வருவதற்கு மூன்றரை மாதம் ஆகின்றது என்ற கணக்கைத்தான் சொன்

னேன். ஆகவே எலக்ட்ரிசிட்டி ரூல்சை உபயோகப்படுத்தித்தான் பணம் கேட்கப்படுகிறது. சரியான முறையிலேதான் பணம் கேட்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, எலக்ட்ரிசிட்டி போர்டு நிர்வாகம் சரியான முறையிலே நடக்காததால், அவர்களுக்கு பலவித இழப்புகள், நஷ்டங்கள், ஏற்படுகின்றன. இந்த டெபாசிட் உபயோகிப்பவர்கள் ஏமாற்றாமல் இருப்பதற்காகத்தான் வாங்கப்படுகிறதே தவிர, டெபாசிட்டை வாங்கி எலக்ட்ரிசிடி போர்டை நடத்த வேண்டும் என்பதற்காக வாங்கப்படுவதில்லை. ஆகவே சரியான முறையிலே நடத்தாததற்கு அதிகமாக டெபாசிட் கட்ட வேண்டும் என்று சொல்லலாமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மூன்று அல்லது நான்கு மாதம்கூட டெப்பாசிட் வாங்கலாம். எலக்ட்ரிசிடி ஆக்டிலே எவ்வளவு மாதத்திற்கு வேண்டுமானாலும் டெப்பாசிட் வாங்கலாம் என்று இருக்கிறது. அதை உபயோகப்படுத்தி வாங்குகிறோம். நான் சொன்ன கணக்கிலே மூன்றரை மாதம் ஆகிறது என்றேன். பில் அனுப்பி, நோட்டீஸ் அனுப்பி, பிறகு ரெஜிஸ்டர்டு நோட்டீஸ் அனுப்பி நடவடிக்கை எடுக்க அவ்வளவு நாள் ஆகிறது. ஆகவே செக்யூரிட்டி டெபாசிட்டை அதிகப்படுத்துகிறோம். ஏற்கெனவே மூன்று மாதத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது ஒரு மாதம் அடிஷனலாகக் கேட்கிறோம். அந்தப் பணம் தேவை. அப்படிக் கேட்பதிலே தவறொன்றும் இல்லை. அதைக் கட்ட முடியும். திரு. நாராயணசாமி அவர்கள் பேசிய பிறகு, அதன்படி ஆவ்ரேஜ் எடுத்ததிலே ஒரு கோடி ரூபாய் போய்விட்டது. மின்சார வெட்டு வந்தால் 12 மாதத்திற்குக் கணக்கெடுக்கும்போது, குறைந்துவிட்டது. விவசாயிகளுக்கு எக்ஸெம்ஷன் கொடுப்பதாலே $1\frac{1}{2}$ கோடி ரூபாய் போய்விட்டது. இந்த நிலைமையை அனுசரித்து சட்டத்திலே இருக்கிற விதிமுறைகளைப் பயன்படுத்தித்தான் வசூலிக்கப்படுகிறது. கேட்கப்படுவது செக்யூரிடி டெபாசிட்தான். அதற்கு இன்ட்ரஸ்ட்கூட கொடுக்கின்றோம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இன்ட்ரஸ்ட் கொடுக்கப்படுகிறது என்கிறார்கள். அது ஒன்றும் கொடுக்கப்படுவதில்லை. டெப்பாசிட்டோடுதான் இன்ட்ரஸ்ட்டைச் சேர்த்து எழுதிவைத்திருக்கிறார்களே தவிர, அந்த இன்ட்ரஸ்ட்டை யாரும் வாங்கியதில்லை. இப்பொழுது இருக்கிற நிலைமை என்னவென்றால், எலக்ட்ரிசிடி போர்டு எழுதி வர மூன்று மாதம் ஆகின்றது என்கிறார்கள். அது யாருடைய தவறு ? அதற்கு யார் பொறுப்பு? பில் வந்தவுடனேயே, 99% பேர் 15 நாட்களிலே கட்டிவிடுகிறார்கள். பில் வராததிற்குக் காரணம், அவர்களைக் கண்டிப்பாக நடத்தாமல் இருப்பதுதான். மின்சாரத்தை உபயோகப்படுத்துகிறவர்கள் சாதாரண்மானவர்கள். அந்த கன்ஸ்யூமர்களுக்கு மூன்று மாதம் தாமதமாக பில் வருவதற்குப் பொறுப்பு எலக்ட்ரிசிடி போர்டுதான். அதற்கு கன்ஸ்யூமர்கள் எவ்வாறு பொறுப்பாக முடியும் என்று கேட்க விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, தாமதம் ஒன்றும் ஏற்படுவதில்லை. முறைப்படி நான் நடந்து வருகிறது. பல விஷயங்களை ரெவ்யூ செய்கிறோம். வருஷா வருஷம் ரெவ்யூ செய்தால்கூட டெப்பாசிட் தொகை அதிகமாகும். அதையும் ரெவ்யூ செய்துகொண்டிருக்கிறோம்.

**Thiru S. NARAYANASWAMY :** Sir, the Hon. Minister was pleased to say that I mentioned that only the bill for Novemver had been received. On the day I spoke nothing more had been received. But after I mentioned about this in my speech, an official came in a great hurry, called on me and handed over the bill for December and January to me. I have since paid it. This is a point on which what I expressed to him, was correct, I am very grateful for the action taken on the statement made by me on the floor of this House.

**The Hon. Thiru S.J. SADIQ PASHA :** I have to thank the hon. Member for having paid the bill for January also.

**Thiru G. SWAMINATHAN :** Sir, because Thiru Narayanaswamy is an hon. Member of this House, after he made a complaint he got the bill. The same may not have happened in the case of others.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, டொமஸ்டிக் பர்ப்பஸ்—வீட்டு உபயோகத்திற்கு இருக்கிற இடத்தில் வீட்டிற்கு வீடு மீட்டர் இருக்கும். எனவே, அங்கேயே பில் கலெக்டர்கள் போய் பில்லைக் கொடுக்கும் முறை மேல் நாடுகளில் இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : கவன ஈர்ப்பிலே யார் பேசலாம் என்று தெரியுமா? கவன ஈர்ப்பிலே நீங்கள் பேசலாமா ? பேசக்கூடாது கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே நீங்கள் பேசக்கூடாது. முன்னறிவிப்புக் கொடுத்தவர்கள்தான் கேட்கலாம். அதுவும் இரண்டு முறைதான் கேட்கலாம்.

## (2) சைதாப்பேட்டையிலுள்ள நரிக்குறவர் மாணவர் விடுதிக்கு பல மாதங்களாக உதவித் தொகை கிடைக்காதது குறித்து.

தவத்திரு. குன்றக்குடி அடிகளார் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்—

"சைதாப்பேட்டையில் உள்ள நரிக்குறவர் மாணவர் விடுதிக்கு பல மாதங்களாக உதவித் தொகை கிடைக்காமையால் விடுதியை மூடும் நிலையால் மாணவர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது குறித்து."

[தவத்திரு குன்றக்குடி அடிகளார்] [1975 மார்ச் 7

சைதாப்பேட்டையிலே நரிக்குறவர் மாணவர் விடுதி—திருவள்ளுவர் குருகுலம்—இருக்கிறது. அங்கே 108 மாணவர்கள் இருக்கிறார்கள். அந்த விடுதி இன்னமும் நம்முடைய இலாகாவால் அங்கீகரிக்கப்படவில்லை. அந்த மாணவர்களுக்கு, 1973–74, 1974–75க்கான மானியம் இதுவரையில் வழங்கப்படவில்லை. 1972–73க்கு மட்டும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தம்முடைய சொந்த முதல்வர் நிதியிலிருந்து 25,000 ரூபாய் கொடுத்தார்கள். 1973–74, 1974–75 இதுவரை, ஒன்றரையாண்டுக் காலமாக நெருக்கடியான கால கட்டத்திலே, சாதாரண ஆரம்ப ஆசிரியர், அந்த விடுதியை நடத்திக்கொண்டு வருகிறார். மிக சங்கடமான நிலைமையில் அந்த விடுதியே கூட மூடப்பட்டுவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. இந்த முக்கியமான விஷயத்தை அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(பிற்பகல் 4-50)

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : மாண்புமிகு தலைவரவர்களே, தென்னிந்தியப் பழங்குடியினர் சங்கம், சைதாப்பேட்டையில் "திருவள்ளுவர் குருகுல பாடசாலை" எனப்படும் தொடக்கப்பள்ளி ஒன்றையும், நரிக்குறவர்கள் போன்ற நாடோடி வகுப்பினரின் நலனுக்காக விடுதி ஒன்றையும் நடத்தி வருகிறது. இந்தப் பள்ளியில் 124 மாணவர்கள் உள்ளனர். (75 மாணவர்கள் 33 மாணவிகள், 16 "நர்சரி" வகுப்புக் குழந்தைகள்.) இக் குழந்தைகள் 3 வயது முதல் 12 வயது வரை உள்ளவர்கள். இந்தப் பள்ளிக்கு கல்வித்துறை 31—12—1975 வரை ஏற்பளிப்பு வழங்கியுள்ளது. நான்கு ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக கல்வித் துறை, இந்தப் பள்ளிகளுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 1,200 மானியம் வழங்கி வருகிறது. விதிகளுக்கிணங்க, படிப்புதவித் தொகை அனுமதிப்பதற்கு இந்தப் பள்ளிக்கு தகுதி இல்லை. எனினும், 1972–73-ல் இந்தப் பள்ளி ஏற்பளிப்புப் பெறுவதற்கு முன்பாக பராமரிப்புச் செலவு, பணியாளர் சம்பளம், மாணவர் விடுதிப் பணியாளர்களின் சம்பளம் ஆகியவற்றிற்காக நிர்வாகம் செலவிட்ட தொகைக்காக முதலமைச்சரது பொதுத் துயர் தணிப்பு நிதியிலிருந்து ஒரு மொத்த மானியம் ரூ. 15,000 வழங்க அரசு அனுமதி வழங்கியது. 4—10—1974 அன்று கொண்டாடப்பட்ட காந்தி பிறந்தநாள் விழாவின்போது அரிசன நலத்துறையால் ரூ. 2,000 மதிப்புள்ள ஆடைகள் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டன. அரசின் வேறு எந்தத் துறைகளிலிருந்தும் இந்தப் பள்ளிக்கு மானியம் எதும் வழங்கப்படுவதில்லை. பொதுமக்களின் நன்கொடைகள் மூலம் இந்தப் பள்ளிக்குக் கிடைக்கும் வருவாய் திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 750 ஆகும்.

இந்தப் பள்ளியை நடத்த போதிய நிதி வசதியில்லாத காரணத்தினால் விடுதியில் உள்ள நரிக்குறவர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் 108 பேருக்கு 1973–74, 1974–75 ஆகிய ஆண்டுகளுக்கு உணவு மானியம் வழங்கப்படலாமென இந்தப் பள்ளியின் மேல் நிர்வாகி அரசுக்கு முறை



1975 மார்ச் 7] [திரு. என். இராஜாங்கம்]

யீடு செய்துள்ளார். நரிக்குறவர் வகுப்பைச் சேர்ந்தவர்களில் சேலம் மாவட்டதைச் சேர்ந்த 4 அல்லது 5 குழந்தைகள் நீங்கலாக பெரும்பாலானவர்கள் சென்னை மாநகரத்தையும் செங்கல்பட்டு மாவட்டத்தையும் சேர்ந்தவராவர். அவர் கீழ்க்கண்ட காரியங்களுக்காக நிதியுதவியும் கேட்டுக் கொண்டுள்ளார்:—

1. மாணவ, மாணவிகளுக்குப் புத்தகங்கள், எழுது பலகைகள் வழங்குதல்.

2. உடைகள் வழங்குதல்.

3. பள்ளிக்காக கொட்டகை ஒன்று வழங்குதல்.

மேற்சொன்ன கோரிக்கைகளுக்கு, கீழே குறிப்பிட்டுள்ளவாறு, ஓர் ஆண்டுக்கு ரூ. 45,888–00 செலவாகும்.

| | ரூ. பை. |
|---|---|
| 1. விடுதியில் தங்கியுள்ள 108 பேருக்கு 12 திங்கள் கால அளவிற்கு ஒருவருக்கு ரூ. 33 வீதம். உணவுச் செலவு. | 42,768·00 |
| 2. (அ) விடுதியில் தங்கியுள்ளவர்கள் 108 பேருக்கு ஆண்டுக்கு ரூ. 10 மதிப்புள்ள உடைகள். | 1,080.00 |
| (இ) 108 பேருக்கு ஆண்டுக்கு ரூ. 5 மதிப்புள்ள புத்தகங்கள், எழுதுபலகைகள். | 540.00 |
| 3. பள்ளிக்குக் கொட்டகை கட்டுதல் .. .. | 1,500.00 |
| மொத்தம் ரூ. .. | 45,888.00 |

சைதாப்பேட்டையிலுள்ள திருவள்ளுவர் குருகுல பாடசாலையின் மேல் நிர்வாகி கொடுத்துள்ள மேற்சொன்ன கோரிக்கைகள், அரசின் பரிசீலனையில் உள்ளன.

மேலும், ஏற்கனவே இந்தப் பள்ளி, கல்வித்துறையில் அரசிடமிருந்து திங்கள் ஒன்றுக்கு ரூ. 1,200 மானியம் பெறுகிறது. திங்கள் ஒன்றுக்கு ரூ. 750 நன்கொடைபெற்று வருகிறது. எனவே, படிப்புதவித்தொகை பெறுவதற்குரியதல்லாத இந்தப் பள்ளிக்கு அரசு படிப்புதவித் தொகை வழங்காத காரணமாக இந்தப் பள்ளியின் நிர்வாகம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதென்று கூறுவது சரியல்ல. மேற்சொன்ன காரணங்களினால், தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 42 (1) விதியின் கீழ் மேலவையில் நாட்ட ஈர்ப்பு அறிவிப்பு ஒன்றைக் கொண்டு வரவேண்டிய அவசியமோ, தேவையோ இல்லை.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு தலைவரவர்களே, நான் பள்ளிப்படிப்பு பாதிக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரவில்லை. விடுதியில் தங்கிப் படிக்கின்ற மாணவர்களுடைய உணவு பாதிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டேன். இந்த விடுதியில் இருக்கின்ற நரிக்குறவ மாணவர்கள் எந்தப் பட்டியலில், தாழ்த்தப்பட்ட பட்டியலிலா அல்லது ஷெட்யூல்ட் டிரைப்ஸ் பட்டியலிலா சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. நம்முடைய துறையினுடைய இயக்குநர் அவர்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இந்தப் பள்ளிக்கு ரூ. 25,000 வழங்கலாம் என்று பரிந்துரை செய்திருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன். உடனடியாக உதவி கிடைக்காது போனால், பள்ளி நிர்வாகம் நடந்துகொண்டிருக்கும், ஆசிரியர்களுக்குச் சம்பளம் கிடைத்துவிடும். ஆனால் அங்கு விடுதியில் தங்கிப் படித்து வருகின்ற 124 மாணவர்கள் மூன்று வேளை உண்ணவேண்டும். அதற்கு வேண்டிய வசதிகள் இந்த 750 ரூபாயைக் கொண்டு செய்ய முடியாது. ஆகையினால் உடனடியாக ஏதாவது உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : தலைவரவர்களே, ஒரு விதி முறையைச் சொல்லிவிட்டால் நல்லதென்று நினைக்கிறேன். ஹரிஜன இலாகா மூலம் ஹரிஜனங்களுக்கும் மலைஜாதி மக்களுக்கும் உதவி செய்வது நடந்து வருகின்ற ஒன்று. அந்த மலைஜாதி மக்கள் முதலில் பள்ளி வைத்து ஆரம்பிக்கும்போதே ஹரிஜன இலாகாவிற்கு எழுதி அனுமதி பெற்று ஆரம்பித்திருக்கவேண்டும். முதலில் பர்மிஷன் கேட்க வேண்டும். அப்படி வைத்தால் மானியம் கொடுக்கத் தயாராகவிருக்கிறோம். அரசாங்கமே வைத்து நடத்துவதாக இருந்தால், அதைப்பற்றிக் கவலையில்லை. தனியார் நடத்துவதானாலும் அல்லது ஏதாவது சங்கங்கள் வைத்து நடத்துவதானாலும் கூட, அதற்கு முன் அனுமதி தேவை. அந்த முன் அனுமதி பெறுவதை இவர்கள் மறந்திருக்கவேண்டும. அல்லது தெரியாமலிருந்திருக்கவேண்டும். ஆகையினால் அவர்களுக்கு கல்வி இலாகா மூலமாகத்தான் உதவி கிடைக்கிறது. பள்ளியை ஆரம்பித்து, பிள்ளைகளையும் விடுதியையும் கவனிப்பதில் முழு கவனத்தையும் செலுத்தி வந்துவிட்டார்கள் என்பதை இந்த விவரங்களிலிருந்து புரிந்துகொள்கிறேன். இப்பொழுதும் சொல்கிறேன், அந்த இலாகாவின் அனுமதி பெற்று ஆரம்பித்தால் உடனடியாக அந்த ஆண்டிலேயே, அவர்களுக்கு உதவி கிடைத்துவிடும். இப்பொழுது அடிகளார் சொன்னமாதிரி, அந்தப் பள்ளிக்கு உதவி செய்வதற்காக ரூ. 45,888–க்கு சிபாரிசு வந்திருக்கிறது. அது வருமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இந்த நரிக்குறவர் பள்ளி என்னுடைய தொகுதியான சைதாப்பேட்டையில் இருக்கிறது. இதை ஒரு பார்ப்பன வாலிபர் ஒரு நரிக்குறவப் பெண்ணை கலப்புத் திருமணம் செய்துகொண்டு அவர்கள் இருவரும் இணைந்து நடத்திவருகிறார்கள். அதற்கு சீரணியின் சார்பில் ஒரு கட்டடம் கட்டப்பட்டு, அதனுடைய தொடக்க விழாகூட இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நடைபெற்றது. அங்கே நரிக்குறவர்கள்



பிள்ளைகள் அன்னியில் இருளர்களும், மலைஜாதி வகுப்பினர் பிள்ளைகளும் படிக்கிறார்கள். அதற்கென சிறப்பு நிதியிலிருந்து 15,000 ரூபாய் சிறப்பாக வழங்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது அது எந்த விதி முறைக்குள்ளும் வரவில்லை என்றாலும் கூட நம்முடைய அடிகளார் சொன்னதற்கேற்ப அங்கேயிருக்கின்ற பிள்ளைகளுக்கு உணவு வசதிக்காக மீண்டும் அரசாங்க அல்லது முதலமைச்சர் நிதியிலிருந்து பணம் தர இயலுமா என்பதை அரசு பரிசீலிக்கும்.

## 4. 1975-76 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கைமீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. எம். எம். பக்கர் : மாண்புமிகு தலைவரவர்களே, 1975–76ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீது நான் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். நிதி நிலை அறிக்கை சமர்ப்பிக்கும் நேரம் வரும்போதெல்லாம் தமிழகத்திலே கொஞ்ச காலத்திற்கு, அதாவது இந்த அரசு வருவதற்கு முன்னால், மக்களிடையே ஒரு திகில் இருப்பதுண்டு. புதியதாக இந்த ஆண்டு என்ன வரிகள் கொண்டுவரப்போகிறார்களோ, எவ்வளவு நம்மைப் பாதிக்கப்போகிறதோ என்று மக்கள் அஞ்சிக்கொண்டிருப்பதுண்டு. ஆனால் இந்த அரசு வந்ததற்குப் பின்னால் அந்த பீதி நீங்கி, இந்த ஆண்டு புதியதாக என்ன வரி வரப்போகிறது என்பது நீங்கி, என்ன நன்மை வரவிருக்கிறது என்று ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். அதுவும் நம்முடைய கலைஞர் அவர்கள் நிதி இலாகாவை எடுத்துக்கொண்ட பிறகு தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் சமுதாயத்தில் கீழ்த்தரத்தில் வாழ்ந்து வருகின்ற மக்கள் தங்களுக்கு ஏதாவது கிடைக்குமா என்று ஆவலோடு எதிர்பார்த்து வருவதுண்டு. ஆனால் இந்த ஆண்டு மட்டும் பொதுவாக மக்களிடையே ஒரு பயம் தாண்டவமாடிக்கொண்டிருந்தது. காரணம், மதுவிலக்குக் கொள்கையாலே அரசு 40 கோடி ரூபாய் வரையில் வருமானத்தை இழந்திருக்கிறது. அரசு ஊழியர்களுக்கு அதிக ஊதியம் கொடுத்ததால், பல கோடி ரூபாய் செலவாகியிருக்கிறது. குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட்டதால், இன்னும் கொஞ்சம் வருமானம் குறைந்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல், யாரும் எதிர்பாராத விதத்தில் கடந்த 100 ஆண்டுகளாக ஏற்படாத அளவுக்குக் கடுமையான வறட்சி நிலைமை தமிழ் நாட்டில் ஏற்பட்டுவிட்ட காரணத்தினால், அதற்குப் பல கோடி ரூபாய் செலவழிக்கவேண்டிய நிலைமையில் அரசு இருந்துவருகிறது. இந்த நிலையில் அரசு ஏராளமான வரிகளைப் போடப்போகிறது என்று அனைவரும் இந்த அரசின்மீது நல்லெண்ணம் கொண்டவர்கள் கூட எதிர்பார்த்துக்கொண்டிருந்த நேரத்தில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையில் மீண்டும் மக்களிடம் மனக்களிப்பு உண்டாகும்படி செய்திருப்பது நாம் அனைவரும் பாராட்டுதற்குரியது.

(பிற்பகல் 5-00)

இந்த அரசு மீது நல்ல எண்ணம் கொண்டவர்கள்கூட ஏராளமான வரிகளை இந்த அரசு போடப்போகிறது என்று எதிர்பார்த்துக்கொண்டிருநத நேரத்திலே நம்முடைய முதலமைச்சர்

அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை வைத்து மீண்டும் மக்களிடத்திலே மனக்குளிர்வை உண்டாக்கியிருப்பதற்காக அவர்களை நாம் பாராட்டவேண்டும். பொதுவாகவே, நிதிநிலை அறிக்கையை சரிக்கட்டுவது என்பது பழங்காலக் கொள்கை என்று சொல்வார்கள். வரவையும் செலவையும் சரிக்கட்டுவதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ, அந்த ஒட்டு—வெட்டுகளைச் செய்து நிதி நிலையைச் சரிக்கட்டி சபை முன்னே வைப்பதுதான் பழங்காலத்திலே நிதி அமைச்சர்களுடைய வழக்கம். ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிதித்துறையை ஏற்றுக்கொண்ட பிறகு, மக்களுக்கு, அதுவும் கீழ்த்தளத்திலே வீழ்ந்து கிடக்கின்ற மக்களுக்கு, ஏதாவது செய்ய வேண்டுமென்ற எண்ணம் அவரது உள்ளத்திலே ஒரு சதம்கூட மாறாமல் இருப்பதனாலேதான் மக்கள் ஏதாவது அவர்களிடமிருந்து எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். வெறும் நிதியமைச்சர் என்று மாத்திரம் அவர்கள் இருந்திருந்தால், மக்கள் ஏதோ சர்க்கார் துறையிலே நிதி நிலையைச் சரிப்படுத்துகிறார்கள் என்று சொல்லிவிட்டுப் போயிருக்க முடியும். ஆனால் மக்கள் அவர்களிடத்திலே சதா ஏதோ எதிர்பார்க்கிறார்கள். காரணம் என்னவென்றால், அருள் நெஞ்சம் என்று சொல்வார்களே, இறைவன் அளிக்கும் அந்த அருள் நெஞ்சம் நம்முடைய முதல்வர் அவர்களுக்கு இருக்கின்றது. நம் நாட்டிலே மகான்கள் பலர் இத்தகைய அருள் நெஞ்சம் கொண்டு வாழ்ந்திருக்கிறார்கள். அருள் நெஞ்சம் என்றால், வேறு ஒன்றும் இல்லை. "மக்களிடத்திலே காண்கின்ற உணர்ச்சிகளை தானும் பிரதிபலிப்பது, அதைத் தானும் உணர்ந்து மக்கள் அழுதால் தானும் அழுது, மக்கள் சிரித்தால் தானும் சிரித்து, மக்கள் துயர் பட்டால் தானும் துயரடைந்து, மக்கள் மகிழ்ச்சியடைந்தால் தானும் மகிழ்ச்சியடைகின்ற "அந்த உள்ளத்தைத் தான் அருள் நெஞ்சம் என்று சொல்வார்கள். நம்முடைய இராமலிங்க சுவாமிகள்கூட பாடியிருக்கிறார்கள். "வாடுகின்ற பயிரைக் கடபோதெல்லாம் வாடினேன்." என்று. பயிர் வாடுகின்றபோது இவருடைய உள்ளமும் வாடியதாம். அப்படி ஒரு அருள் நெஞ்சம். மகான்களுக்குத்தான் அந்த நெஞ்சம் இருந்தது. அதைப்போல அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுக்கு அந்த நெஞ்சம் இருந்தது. மக்கள் யார் கண்ணீர் வடித்தாலும், அவரும் கண்ணீர் வடிப்பதை நான் பார்த்திருக்கிறேன். யார் வருத்தப்பட்டாலும், அவரும் வருத்தப்படுவார். அப்படிப்பட்ட நெஞ்சத்தை நம்முடைய கலைஞர் அவர்கள் பெற்றிருக்கிறார்கள். அண்ணா அவர்கள் இந்த உலகத்தைவிட்டு மறைந்தபோது, கலைஞர் அவர்கள் வானொலியிலே ஒரு கவிதை உரை நிகழ்த்தினார்கள். அதில் "அண்ணா நீ போகிறாய்—உன் நெஞ்சை எனக்குத் தந்து விட்டுப் போ" என்று அன்றைக்கு அவர்கள் கேட்பதற்கு முன்னே அண்ணா, அவர்கள் அந்த நெஞ்சத்தை கலைஞர் அவர்களுக்குத் தந்துவிட்டுப் போனதினாலேதான், இன்றைக்கு இந்த கற்பனை வளத்தோடு—எங்கே மக்கள் வீழ்ந்து கிடக்கிறார்கள், சமுதாயத்தில் மிக அடி மட்டத்தில் இருப்பவர் யார் என்பதைக் கண்டுபிடித்து அவர்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறையாவது ஏதாவது செய்ய எண்ணம இந்த அருள் நெஞ்சத்திலே வருகின்றது. அதற்காக





நான் இந்த நெஞ்சத்தை வாழ்த்துகிறேன். இந்த ஆண்டு விதவைகளுக்கும், அனாதைகளுக்கும் உதவி அளிக்கப்படுவதற்காக "நலத் திட்டம்" ஒன்றைக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஏற்கெனவே, ஆண்டுக்கு ஒரு முறை "கண்ணொளி வழங்கும் திட்டம், ஏழைகளுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம், பிச்சைக்காரர் மறு வாழ்வுத்திட்டம்"—இப்படியெல்லாம் அடி மட்டத்திலே இருக்கும் மக்களுக்கு பல திட்டங்களை வகுத்த கலைஞர் அவர்கள் இந்த ஆண்டு விதவைகளையும், அனாதைகளையும் காப்பாற்ற திட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதற்காக அவர்களை நான் பாராட்டுகிறேன். இப்பொழுது இந்த 100 ஆண்டு காணாத ஒரு பெரிய வறட்சி நிலை ஏற்பட்டு, எதிர்நோக்காத அளவுக்கு மக்கள் படாத பாடு பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை இந்த மாநிலத்திலே உள்ள நல்லவர்களுடைய உள்ளத்தையெல்லாம் உருக்கி, அனுதினமும் அவர்களுடைய கவனம் எல்லாம் அந்த வறட்சி நிலையால் பாதிக்கப்பட்டு வீடிழந்து, என் நாடிழந்து என்றுகூடச் சொல்லலாம், இடம் பெயர்ந்து வேறு இடங்களிலே குடியேறுகிற அளவுக்கு இருக்கின்ற மக்களைப் பற்றித்தான் இருக்கிறது. இன்றைக்கு தண்ணீர் பஞ்சமும், உணவுப் பஞ்சமும் ஏற்பட்டு மக்கள் வாடுகின்ற ஒரு நிலையிலே இருப்பதையும் அதற்காக இந்த அரசு போர்க்கால வேகத்தோடு நடவடிக்கைகள் தொடங்கியிருப்பதையும் நாம் நன்றாக அறிவோம். ஆனால் இந்த பயங்கரமான காலத்திலே அதுவும் ஒரு இரண்டு நாட்டுக்கு இடையிலே போர் நடந்தால் எவ்வளவு கவனத்தோடும், துரிதத்தோடும் நடந்துகொள்வோமோ அதுபோல் இந்த அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கும் நேரத்திலே, "இந்த நாட்டிலே சிலர், சில அரசியல் வாதிகள்கூட—இந்த மக்களுடைய வறட்சி நிலைமையையும், அவர்கள் பட்டினி கிடக்கும் நிலைமையிலும், வீடிழந்து போகும் நிலைமையிலும்—குட்டையைக் குழப்பி மீன் பிடிக்கின்ற வேலையிலே அவர்கள் ஈடுபட்டிருப்பதைப் பார்த்து வருந்துகிறோம். அரசியல வாதிகளுக்குச் சில பழக்கம் உண்டு. சில பேர் மக்களுடைய ரசிகத் தன்மையோடு விளையாடுவார்கள். இன்னும் சிலபேர் கவர்ச்சியோடு விளையாடுவார்கள். இன்னும் சில பேர் உணர்ச்சியோடு விளையாடுவார்கள். ஆனால் மக்களுடைய உயிரோடும், வயிரோடும் கூட விளையாட வேண்டுமா என்பதை அவர்கள் இன்னும் தெரிந்துகொள்ளவில்லை. மக்கள் வயிறு காய்ந்து, உயிருக்கு மன்றாடிக்கொண்டிருக்கும் நேரத்திலே கூட அவர்கள்—குழப்பிய குட்டையில் மீன் பிடிப்பது என்ற நிலையிலே—இதையும் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முன்வந்திருப்பது கண்டு தமிழ் நாடு வெட்கப்பட வேண்டும்.

நேற்றைய தினம் பொதுக்கூட்டம் ஒன்றிலே பேசிய முதலமைச்சர் அவர்கள் அந்த சில நண்பர்களுக்கு எப்படிப்பட்ட ஒரு வஜ்ஜிர புத்தி வந்திருக்கிறதென்று எடுத்துக்காட்டினார்கள். இப்போது மதுரையிலேயும், இராமநாதபுரத்திலேயும் மழை பெய்திருப்பதாகச் செய்தி வந்தது. நாட்டிலே உள்ள மக்கள் எல்லாம் மழை பெய்வதற்காக இறைவனைப் பிரார்த்தித்தார்கள். எல்லா வகுப்பு மக்களும் பிரார்த்தித்ததன் பலனாக மழை வந்தது என்று பெருமைக்காகச் சொல்லிக் கொள்ளமாட்டேன்—ஆக எப்படி மழை வந்தாலும், என் ம ॰

வந்தது, மக்களுடைய கஷ்டம் என் ஓரளவுக்காவது தீரப்போகிறது என்று கவலைப்படுகிற அரசியல் வாதிகள் கூட இந்த நாட்டிலே இருக்கிறார்கள் என்பதை அவர்கள் எடுத்துச்சொன்னார்கள். இதுபற்றியெல்லாம்கூட நாம் அதிகமாகக் கவலைப்படவேண்டியதில்லை. ஆனால் இந்த விஷயத்திலே நம்முடைய மத்திய அரசு நடந்துகொள்கிற முறையும், அவர்கள் காட்டுகிற மனப்பான்மையும் நமக்கு வேதனை தருவதாக இருக்கிறது என்பதை நாம் சொல்லித்தான் தீரவேண்டும். இந்த நாட்டிலே மற்ற பகுதிகளிலே பஞ்சம் ஏற்பட்டபோது உத்தரப் பிரதேசத்தில் பஞ்சம் ஏற்பட்டபோது, பீஹாரில் பஞ்சம் ஏற்பட்டபோது, மத்தியப்பிரதேசத்தில் பஞ்சம் ஏற்பட்டபோது, வரிந்துகட்டிக்கொண்டு போர்க்கால வேகத்தோடு துரிதமாகச் செயலிலே இறங்கிய மத்திய அரசினர் இங்கே பஞ்சம் ஏற்பட்டபோது, பட்டினியும் பசியும் ஏற்பட்டிருக்கின்ற இந்தக் காலத்திலே "எதற்காக யாருக்கோ வந்த விருந்தாக" இருக்கிறார்கள் என்று சொன்னால், அதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. பங்களா தேசத்திலே பஞ்சம் என்று கேள்விப்பட்டபோது நம்முடைய நாட்டிலிருந்து 3 லட்சம் டன் உணவு தானியங்கள் உடனடியாக அனுப்பிவைத்தது நம்முடைய மத்திய அரசு. அதுவும் ரயில் பாதைகள் அங்கே இல்லை என்பதற்காக அவசர அவசரமாகப் புதிதாகப் போட்டு, பங்களா தேசத்திற்கு உணவு தானியங்களை அனுப்பிவைத்தார்கள்; நான் இதை குறையாகச் சொல்லவில்லை. நம்முடைய அண்டைநாடு எத்தனையோ கஷ்டநஷ்டங்களுக்கு இடையே புதிதாகச் சுதந்திரம் பெற்ற ஒரு ஏழை. நாடு அந்த நாட்டுக்கு அனுப்பிவைத்தது குறித்து நாம் பெருமைப்படலாமே தவிர, அதற்காகக் குறை சொல்லவில்லை. ஆனால் நம்முடைய நாட்டினுடைய ஒரு பகுதி பஞ்சத்திலே வாடுகின்றபோது, இந்த அவசரத்தை என் மத்திய அரசு காட்டவில்லை என்பது வேடிக்கையாக இருக்கிறது. அண்மையிலே இந்த வறட்சி ஏற்பட்ட பிறகு, நம்முடைய மதிப்பிற்குரிய பிரதம மந்திரி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இங்கே வந்திருந்தார்கள். அவர்கள் இந்த நாட்டினுடைய பிரதம மந்திரி. 100 ஆண்டுகளாக ஏற்படாத ஒரு வறட்சிநிலை தமிழ்நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கிறது. இங்கே அவர்கள் வந்தபோது அந்த வறட்சிப் பிரதேசங்களுக்குப் போய் பார்க்கின்ற ஒரு அனுதாப புத்தியாவது அவர்களுக்கு இருக்கும் என்று நாம் எதிர்பார்த்தோம். அது அவர்களுக்கு இல்லை. சரி, போகத்தான் முடியவில்லை. வசதி இல்லாமல் இருந்திருக்கலாம். வேலைகள் இருந்திருக்கலாம். இருந்தாலும் சென்னையிலிருந்து அந்தப் பஞ்சத்தினால் வாடி வதங்கிக்கொண்டிருக்கிற மக்களுக்கு அனுதாப வார்த்தைகளாவது அனுப்புவார்கள் என்று எதிர்பார்த்தோம். அதுவும் இல்லை. ஆனால் அதற்கு மாறாக இங்கே ஒரு கூட்டத்திலே பேசுகிறபோது "பஞ்சநிவாரண நிதிகள் எல்லாம் சரியாகச் செலவழிக்கப்படவில்லை" என்று எனக்குப் புகார் வந்திருக்கிறது, அது சரியாகச் செலவழிக்கப்படவேண்டும்" என்று சொல்லுகிறார். நகர்வாலாக்கள் வாழ்கின்ற இடத்திலே தல்மோஹன்ராம்கள் வாழ்கின்ற இடத்திலே, 5கோடி ரூபாய் பெறுமானம் உள்ள ரயில்வே சொத்தைக் கூட்டுக் கொள்ளை அடிக்கின்ற கூட்டம் இருக்கின்ற இடத்திலே சொல்லியிருந்தால் இதை நாம் புரிந்துகொண்டிருக்கமுடியும். ஆனால் இங்கே வந்து சரியாக செலவழிக்கப்பட்டதாகத் தெரியவில்லை என்று சொல்லுகிறார்கள். எப்போதோ நடந்ததற்காகச் சொல்லுகிறார்கள். எல்லா ஆடிட் ரிப்போர்ட்டையும் பார்த்து எல்லாம் சரியாக இருக்கிறது என்று தெரிந்தபிறகு, இப்பொழுது இப்படிச்





சொல்கிறார்கள் அம்மையார் அவர்கள். இது என்ன மனப்பான்மை? மாற்றாந்தாய் மனப்பான்மை என்று பலநண்பர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் அது கூட அல்ல.***

(பிற்பகல் 5–10)

* * * இந்த குறுகிய அரசியல் கண்ணோட்டத்தில் எல்லாவற்றையும் பார்க்க வேண்டும் என்பது அவ்வளவு நல்லதல்ல. நம்முடைய நாடு பெரிய நாடு. பல மொழிகளையும், பல வகுப்பினரையும் கொண்ட ஒரு நாடு, யூனிட்டி இன் டைவர்சிடி என்று சொல்வார்களே, வேற்றுமையில் ஒற்றுமை.....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:—மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள், நல்ல விளக்கங்களை அளித்துப்பேசி வருகின்றார்கள். என்றாலும் அவர்பேசிய இந்த நேரத்தில்*** ஒரு குறிப்பிட்ட வார்த்தையை வெளியிலே பத்திரிகைக்காரர்கள் தவறாகப் பிரசுரித்துவிடக்கூடும். பிரதமரை அப்படிக் குறிப்பிட்டு அதை வெளியிட்டுவிடக்கூடும். ஆகவே அந்த வார்த்தையை மாத்திரம் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுவது நல்லது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். வேண்டுமென்றால் மாற்றாந்தாய் மனப்பான்மையை விட இது கொடுமையானது என்று அதை மாற்றிக்கொள்ளலாம். * * வார்த்தை இந்த அவையின் நடவடிக்கைக் குறிப்பிலே வருமானால் பத்திரிகைகளிலே வரும்போது வேறுவிதமாகத்தோன்றும்.

மாற்றுத்தலைவர் (திரு. ஆ. பாலசுப்பிரமணியம்): மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியதுபோல, * * என்ற வார்த்தை அவை குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. எம். எம். பக்கர்: தலைவரவர்களே, நான் அம்மையாரைப் பற்றிச் சொல்லவில்லை, மத்திய அரசைப் பற்றிக் குறிப்பிட்டு நான் அப்படிச் சொன்னேன்.

இந்த மனப்பான்மை நாட்டுக்கு மிகக் கெடுதலானது. இது பெரியநாடு ஆசிய கண்டத்தின் ராணியாக விளங்கவேண்டிய இந்தியத்திருநாடு. இந்த நாட்டிலே அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு, உச்சத்திலே இருக்கின்றவர்களுக்கு பெரியபுத்தி இருக்கவேண்டும். கோல்ட்ஸ்மித் Little minds and great empiros willnot go together என்று சொன்னார்கள். அதுமாதிரி பெரிய நாட்டினுடைய உச்ச மட்டத்திலே உட்கார்ந்து அரசாளுகின்றவர்களுக்கு பெரிய நோக்கம் இருக்க வேண்டும். குறுகிய அரசியல் கண்ணோட்டத்தோடு இருக்கக்கூடாது. ஏனென்றால் இந்த நாட்டிற்கு அது நன்மையானது அல்ல. இதை நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். அப்படி இருந்தால், நாம் நிறையப் பேசுகிறோமே, அந்த "இன்டக்ரேஷன்" ஒருமைப்பாடு, தேசிய ஒருமைப்பாடு,

*** Expunged as ordered by the Chair,

உணர்ச்சி ஒருமைப்பாடு, உணர்ச்சி பூர்வமான ஒருமைப்பாடு, என்றெல்லாம் பேசுகின்றோமே, அந்த ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்கு அந்தப் பெரிய புத்தி இருக்கவேண்டும். முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, மாற்றாந்தாய் மனப்பான்மையோடு அவர்கள் நடந்துகொண்டு போனால், இந்த நாட்டினுடைய தெற்குப் பகுதியை விட்டுவிட்டு மத்திய அரசு நடந்தால், தமிழகத்திலே வாடுகின்ற மக்கள் மத்திய அரசின்மீது நம்பிக்கை இழந்துவிடுவார்கள் என்பதைப்பற்றி நம்முடைய மத்திய அரசினர் சிந்திக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, இந்தப் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு போதிய அதிகாரம் எந்த மாநிலத்திலேயும் இருப்பதாகத்தெரியவில்லை. இப்படிப்பட்ட வறட்சிப் பிரச்சினைகளை, மற்ற பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்குரிய அதிகாரம் மாநிலங்களுக்குக் கிடையாது. அதுதான் பல மாநிலங்களில் தகராறு ஏற்படுவதற்குக் காரணம். இந்த அதிகாரக்குறைவுதான் இந்தத் தகராறுகளுக்குக் காரணம். இந்த அதிகாரங்களை மத்திய அரசு வைத்துக்கொண்டிருப்பதுதான் மாநில சுயாட்சியில் தலையிடுவதற்குக் காரணம் என்று எனக்குத் தோன்றுகிறது. மாநில சுயாட்சி என்று சொன்னால், சில பேருக்கு அலர்ஜி ஏற்படுகிறது. மாநில சுயாட்சி பற்றி வேறு இடத்திலே பேசுகின்றபோது நம் முதலமைச்சர் அவர்கள் அதைபற்றித் தெளிவாகப்பேசினார்கள். அது அண்ணாவினுடைய கொள்கை. ஏன் மாநில சுயாட்சி வேண்டுமென்பதைப் பற்றி அவர்களைக் கேட்டார்கள். அதற்காக சிறை செல்லத் தயாராக இருக்கின்றார்களா என்று கேட்டார்கள். முதலமைச்சர் அவர்கள் சிறைக்கு பயப்படுகின்றவர் போலவும், சிறை என்றவுடன் மீட்டிங்கை விட்டு சூட்டிங்கிற்கு ஓடிவிடுபவர் போலவும், ஏதோ சிறைக்குச் சென்றில்லாதவர் போலவும், சிறைக்குச் செல்லத் தயாராக இருக்கின்றார்களா என்று கேட்கிறார்கள். எனக்கு வேடிக்கையாக இருந்தது. அவர் இந்த இடத்திற்கு வந்ததே சிறைவழியாகத்தானே. ஆக இப்படியெல்லாம் பேசுவது அர்த்தமற்றதாகும். அதைக்கூடச் சொல்லவில்லை. ஆனால் அம்மையார் அவர்கள் பதில் சொல்லும்போது, நாடாளுமன்றத்திலே மாநில சுயாட்சி தரமுடியாது என்று சொல்லியிருக்கின்றார்கள். காரணம் ஏழை மாநிலங்கள் சிலவற்றைவிட கொஞ்சம் வசதியுள்ள மாநிலமாக நம்முடைய மாநிலம் முன்னேறியிருக்கின்றது என்ற நிலையில் சொல்லியிருக்கிறார்கள்.

இதற்கு ஒரு மத்திய அரசு ஆட்சி வேண்டுமா? ஏழை மாநிலங்களைக் காப்பாற்றுவதற்குப் பதிலாக முன்னேறும் மாநிலத்தைத் தடைபடுத்த ஒரு மத்திய அரசா ? இந்தப் பதிலைப் . பார்க்கின்றபோது ஏதோ ஒரு சுதந்திர நாட்டினுடைய, சுதந்திரம் உள்ள பிரதமர் சுதந்திர மக்களாக வாழ்கின்ற தமிழ் மக்களுக்குச் சொல்கின்ற பதிலாக எனக்குப் படவில்லை. ஏகாதிபத்திய ஆட்சியில் வின்ஸ்டன் சர்ச்சில் பேசியமாதிரி பிரதமர் அவர்கள் சொன்னார்கள். இங்கே கூட காங்கிரஸ்காரர்கள் இருக்கிறார்கள். நாட்டின் சுதந்திரத்திற்காக பலமுறை சிறை சென்றவர்கள் இருக்கின்றார்கள். நாட்டிற்குச் சுதந்திரம் கேட்டபோது, இந்தியர்களுக்குச் சரியாக ஆளத் தெரியாது,





சுதந்திரம் கொடுக்க மாட்டோம், இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்தால் ரத்தக் களரி ஆகிவிடும், இந்த நாடே சண்டை போட்டுக்கொண்டு அழிந்துவிடும் என்று சொன்னார்கள். அந்த மாதிரி பதில்தான் வந்திருக்கின்றது. மாநில சுயாட்சி (ஸ்டேட் அட்டானமி) என்றால் என்னவென்று தெரிவதற்கு முன்னாலே அதைக் கொடுக்க முடியாது என்று போல்டாக அடிக்கிறார். இந்த நாட்டினுடைய பொறுப்புள்ள பிரதமருக்கு, ஒரு பெரிய இடத்தில் இருப்பவருக்கு, இந்தியாவின் உச்சக்கட்டத்திலே பதவியிலே இருந்து அதிகாரம் செலுத்துபவருக்கு, மாநில சுயாட்சியைப்பற்றி உட்கார்ந்து பேசுவோம், விவாதிப்போம், மாநில சுயாட்சி என்ற வார்த்தையை உபயோகப்படுத்தாவிட்டாலும் கூட, "மாநில அரசுக்கு அதிகாரங்கள் கொடுக்கிறோம், மத்திய அரசுக்கும் அதிகாரங்கள் இருக்க வேண்டும் என்பதன் மீது விவாதிப்போம்" என்று ஒரு பெரிய புத்தி இருந்திருக்கலாம். மாநில சுயாட்சி என்றால் என்ன என்று தெரியாமல் கொடுக்க மாட்டோம், அது தேவையில்லை என்று பல்டி அடிக்கின்றார்கள். இதற்கெல்லாம் ஒரு முடிவு வேண்டும். முடிவு வேண்டுமென்று சொல்கின்றபோது, நான் புரட்சி, கிளர்ச்சி என்பதைப்பற்றியெல்லாம் பேசவில்லை. ஆனால் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் இரண்டு நாட்களுக்கு முன்னால் ("writing on the wall)" என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் எதை நினைத்துச் சொல்லியிருக்கின்றார்களோ அது எனக்குத் தெரியாது. ஆனால் காலத்தினுடைய போக்கில் எல்லோருமே தெரிந்து கொள்வது நல்லது. மக்களிடத்திலே ஒரு எழுச்சியும், ஒரு உணர்ச்சியும் ஏற்படுவதற்கு முன்னால், ஒரு கசப்புணர்ச்சியும் பரவுவதற்கு முன்னால் மாநில முதலமைச்சர்களை ஒன்று சேர்த்து மாநிலங்களுக்கு எவ்வளவு அதிகாரங்கள் கொடுக்கலாம், புரவின்சியல் அட்டானமியை எந்த அளவுக்கு மாநிலங்களுக்குக் கொடுப்பது என்பதைப்பற்றியாவது பிரதமர் அவர்கள் கொஞ்சமாகிலும் யோசிப்பதற்கு முன்வருவார்களானால், அது இந்த நாட்டிற்கு மிகவும் நல்லது என்று நான் நம்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த பட்ஜெட்டிலே விவசாயத் துறைக்கு 300 ஏக்கர் நிலத்திலே பரீட்சார்த்தமாக ஒரு பண்ணை தொடங்கப் போவதாகவும், இந்தப் பண்ணை மூலம் 11 லட்சம் நிலம் விவசாயத்திற்குக் கொண்டுவரப்படுவதாகவும் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப் பற்றி இங்கே ஒரு விவாதம் வந்தபோது, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே ஒன்றைச் சொன்னார்கள். அதாவது "நோ லாஸ் நோ கெயின்" பேசிஸிலே அதைச் செய்யப் போவதாகச் சொன்னார்கள். அது எனக்கு விளங்கவில்லை. "நோ லாஸ், நோ கெயின்" என்றால் என்ன என்பது எனக்குப் புரியவில்லை. அதற்கு நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் பேசும்போது, முதலிலே பண்ணையைத் தொடங்குவதற்கு முன் தண்ணீர் இருக்கின்றதா என்று பார்த்துக் கொள்ளுங்கள் என்றார்கள். வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது தண்ணீர் இருக்கிறதா என்று பார்த்துக்கொள்ளாமலா நாங்கள் இந்தப் பண்ணையை ஆரம்பிக்கிறோம் என்று கொஞ்சம் கடுமையாகக்கூட கேட்டார்கள். அதற்கு பதில் அளித்து திரு.

தாமோதரன் அவர்கள் பேசுகிறபோது அப்படிப்பட்ட பல பண்ணைகள் தண்ணீர் இல்லாத காரணத்தினாலே மூடவேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். இருந்தாலும் அந்தத் திட்டத்தை மனதார வரவேற்கிறோம் என்கிறேன். ஏனென்றால் நான் ஒரு விவசாயி, இந்த அரசு இந்த 300 ஏக்கர் நிலத்தில் விவசாயம் பண்ணி சாகுபடி செய்வதன் மூலம் விவசாயிகளுடைய கஷ்டநஷ்டங்களை நிச்சயமாக உணரும், அதனால் விவசாயிகளுக்கும் பல நன்மைகள் கிடைக்கும் என்ற அளவில் இந்தத் திட்டத்தை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

(பிற்பகல் 5–20)

அடுத்து, உணவுப்பொருள் பிரச்சினைபற்றி சில வார்த்தைகள் மட்டும் சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். உணவுப் பொருளை அரசு வாங்கி மக்களுக்கு விநியோகிப்பது மிகச் சிறந்த முறை. அதுவும் இப்படிப்பட்ட வறட்சியான காலங்களிலே நிச்சயமாக இது பெரிய பலனளிக்கக் கூடியது என்பதைப் பற்றி சந்தேகமே இல்லை. பதுக்குவோர்கள், கள்ளக்கடத்தல்காரர்கள் போன்றவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டியதுதான். எங்கள் நபிகள் நாயகம் சொல்லியிருக்கிறார்கள், உணவுப் பொருள்களை, விலை ஏறும் என்பதற்காக, பதுக்கி வைப்பவன் அல்லது தேக்கி வைப்பவனைப்போல் பெரிய பாவி உலகத்திலே வேறுயாரும் கிடையாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதை நம்புகிறவன் நான். ஆகையினாலே பதுக்கி வைப்பவர்கள், தேக்கி வைப்பவர்கள்மீது எவ்வளவு கடுமையான நடவடிக்கை எடுத்தாலும் அது தகும், இன்னும் கடுமை யான நடவடிக்கை எடுங்கள் என்று நானும் கூட ஒத்துழைக்கத் தயாராக இருப்பேன். ஆனால் அப்பாவிகளான ஏழை விவசாயிகள், இந்த லெவி முறை என்ற பெயரால் தஞ்சை மாவட்டத்திலே வெகு பேர் பாதிக்கப்படுகிறார்கள். வெகு பேர் கஷ்டத்துக்குள்ளாக்கப்படுகிறார்கள்.

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, நபிகள் நாயகம் 40 நாட்களுக்கு மேல் உணவு தானியங்களைக்கூட வைத்துக் கொள்ளக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே விவசாயிகள் அதிகமாக வைத்துக்கொள்ளக் கூடாது.

திரு. எம். எம். பக்கர் : தலைவரவர்களே, நானும் அதைத்தான் சொல்ல வருகிறேன். தேவைக்கு அதிகமாகத் தேக்கி வைத்துக் கொள்ளக் கூடாது என்றுதான் நானும் சொல்ல வருகிறேன். அமைச்சர் அவர்கள் 40 நாட்களுக்கு மேல் வைத்துக்கொள்ளக் கூடாது என்று சொல்வதை நான் படித்ததில்லை. தேவைக்கு அதிகமாக, விற்கின்ற மனப்பான்மையோடு பதுக்கி வைக்கக்கூடாது. அப்படிச் செய்பவன் பெரிய பாவி என்று சொல்லியிருக்கிறார்கள்.





திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் "தேவைக்கு அதிகமாக" என்று சொல்கிறார்களே, தேவை என்பது எவ்வளவு? இவ்வளவு தான் வைத்துக்கொள்ளலாமென்று ஏதாவது வரையறை உண்டா?

திரு. எம். எம். பக்கர் : தலைவரவர்களே, உண்டு. அவைப்பற்றியெல்லாம் தனியாக, வெளியிலே பேசிக்கொள்ளலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, குரானிலே 40 நாட்களுக்கு மேல் வைத்துக்கொள்ளக்கூடாது என்று நபிகள் நாயகம் சொல்லியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அதுமாதிரி இல்லையென்று உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அதில் எது சரியென்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, நபிகள் நாயகம் சொல்லும் 'Sayings of Prophet' வேறு, குரான் வேறு. நாளைக்கே வேண்டுமானாலும் "கொட்டேஷன்" தருகிறேன்.

திரு. எம். எம். பக்கர்: தலைவரவர்களே, இதை ஏன் சொல்ல வருகிறேன் என்றால், தஞ்சை மாவட்டத்திலே நிறைய நெல் வைத்திருப்பவர்களிடமிருந்து பலாத்காரமாக நெல்லை எடுத்துக்கொள்வதிலே எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால் சாதாரண அப்பாவி விவசாயிகளிடத்திலே அவர்களுடைய குடும்பத்துக்கு வைத்திருக்கும் நெல்லை சில அதிகாரிகள் மிகவும் கஷ்டப்படுத்தி வாங்குவதாக பலமான புகார்கள் எனக்கு வந்திருக்கின்றன. என்னைப் பொறுத்தவரையிலே என்னையே சொல்கிறேன். உதாரணமாக 20 மூட்டை நெல்லை நான் லெவிக்கு அளக்க வேண்டுமென்று எனக்கு ஒரு நோட்டீஸ் வந்திருக்கிறது. சாதாரணமான விளைச்சலாக இருந்தால் நான் அளித்திருக்க முடியும். ஆனால் சென்ற ஆண்டில் ஒரு பாதிகூட இந்த ஆண்டில் எங்களால் அறுவடை செய்ய முடியாது. காரணம் மேல்மழை இல்லாததும், ஆற்றிலே தண்ணீர் சீக்கிரம் நின்று விட்டதும், பிறகு விவசாயம் பிற்பட்டுப் போனதும் இதற்குக் காரணமாகும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, 400 மூட்டை விளை 200 மூட்டை தருவதில் ஒன்றும் தவறில்லையே?

திரு. எம். எம். பக்கர் : தலைவரவர்களே, நான் சொல்ல வருவதெல்லாம் 150 மூட்டை நெல் கூட விளையவில்லை என்பது தான். 150 மூட்டை கூட நான் அறுவடை செய்துகொண்டு வீட்டுக்கு வர முடியாத நிலையிலே, 100 மூட்டை தேறுமா என்று நான் சங்கடப் பட்டுக்கொண்டிருக்கக்கூடிய நிலைமையிலே, 200 மூட்டை அளக்க வேண்டுமென்று எனக்கு ஒரு நோட்டீஸ் வந்திருக்கிறது. நான் சொல்ல வருவதெல்லாம் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் அமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி தேவைக்கு அதிகமாக ஒரு மணி நெல் கூட வைத்துக்கொள்ளாமல் நானே மனப்பூர்வமாக அரசினிடத்திலே

கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்றேன். ஆனால் 200 மூட்டை என்றால், விளைவதே 100 மூட்டை, எப்படி 200 மூட்டை அளக்க முடியும்? எனக்காக மாத்திரம் நான் சொல்லவில்லை. பல விவசாயிகளுக்கும், எல்லா விவசாயிகளுக்கும் இப்படிப்பட்ட ஒரு நிலைமை. இந்த விஷயத்திலே சர்க்கார் சிரத்தை காட்ட வேண்டும், கவனம் செலுத்த வேண்டும், அவர்களுக்குக் கருணை காட்ட வேண்டுமென்று நான் முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து உரவு விலை குறித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். மதுரையிலே இன்றைக்கு 150 ரூபாய்க்கு ஒரு மூட்டை கிடைக்கவில்லையென்று பறக்கிறார்கள். 60 ரூபாய்க்கு தஞ்சாவூரிலே விற்க முடியாவிட்டாலும் பரவாயில்லை. விற்று அதிகமாகச் சம்பாதிக்க வேண்டாமென்று நான் சொல்லவில்லை. பாடுபட்டு, சிரமமெடுத்துக் கொண்டு பயிரிடும் விவசாயிகளுக்கு நல்ல விலை தர வேண்டும், அதை தமிழ் நாடு அரசு கொடுக்கத் தயாராக இருந்தாலும், நம்முடைய மத்திய அரசு அதற்கு அனுமதி அளிக்கத் தயாராக இல்லை. நம்முடைய நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் இங்கே பேசும்பொழுது, 159 ரூபாய்க்கு ஒரு குவிண்டால் என்று விலை கொடுத்து அமெரிக்காவிலிருந்து வருகிறது என்று சொன்னார்கள். ஆனால் இங்கே, நமது நாட்டிலே குவிண்டால் ஒன்றுக்கு 105 ரூபாய்க்கு மேல் கூட கொடுப்பதற்கு மத்திய அரசு மறுத்து வருகிறது. இது என்ன பொருளாதாரம் என்று கூட அவர்கள் கேட்டார்கள். வேறு ஒன்றுமில்லை. அமெரிக்காவிலிருந்து கடனுக்குத் தருகிறார்கள். அவ்வளவுதான். நம்முடைய விவசாயிகளுக்கு உடனே பணம் கொடுக்க வேண்டும். அமெரிக்காவிலிருந்து 40 வருஷத் தவணையிலே தருகிறார்கள். இத்தருணத்தில் எனக்கு ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது. யாரோ ஒருவன், வேறொருவனிடம் யானை வேண்டுமா என்று கேட்டானாம். யானையைக் கட்டிக் கொண்டு ஆற்றிலே போடு என்று சொன்னானாம். யானை வேண்டாமென்று சொன்னானாம். பக்கத்திலே இதைக் கேட்டுக்கொண்டு வந்தவன் சொன்னானாம் ரொக்கத்துக்கு இல்லை, கடனுக்கு என்று. அப்படியானால் இரண்டு யானை வேண்டுமென்று சொன்னானாம். அது போல் கடனுக்குக் கொடுக்கிறார்கள் என்பதாலே வெளிநாடுகளிலிருந்து எவ்வளவு வேண்டுமானாலும் கடன் வாங்குவதால் இந்தியாவினுடைய பொருளாதார நிலை எப்படியாகும்?

(மாண்புமிகு மேலவைத் தலைவர் மணியடித்தார்.)

நான் எதற்குச் சொல்லுகிறேன் என்றால், இந்த மாதிரிக் கடன் வாங்கிக் கொண்டேபோனால் நாளடைவில் டாலர் இம்பீரியலிசத்துக்கோ, ரூபில் இம்பீரியலிசத்துக்கோ இந்திய நாடு அடிமைப்பட வேண்டி வரும்.

<u>மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா</u>: தலைவர் அவர்களே, "சைனா இம்பீரியலிசத்துக்கு" ஆளாகாதா?

<u>திரு. எம். எம். பக்கர்</u>: தலைவரவர்களே, சைனாவில் இன்னும் இம்பீரியலிசம் தோன்றவில்லை.





ஆகையினாலே இந்தப் பிரச்சினைகளையெல்லாம் மத்திய அரசு அரசியல் கண்ணோட்டத்தோடு பார்க்காமல், குறுகிய அரசியல் கண்ணோட்டத்தோடு பார்க்காமல் கொஞ்சம் நிதானத்தோடு, கொஞ்சம் பரந்த மனப்பான்மையோடு, இந்த நாடு ஒன்று, இந்த நாட்டினுடைய ஒரு பகுதி தமிழ் நாடு, சமமான பகுதி, என்பதை மனதில் கொண்டு கொஞ்சம் பெருந்தன்மையோடு, கொஞ்சம் நல்லெண்ணத்தோடு நடந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி நண்பர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசுகின்றபொழுது, காவியம் மணக்கின்றது அறிக்கையிலே என்று சொன்னார்கள். அதிலே ஒன்றும் ஆச்சரியமில்லை. கவிதை உள்ளமும், காவிய கண்ணோட்டமுமுள்ள முதலமைச்சர் அவர்களிடமிருந்து வரும் எதிலுமே அப்படி ஒரு மணம் இருக்கத்தான் செய்யும். இப்படிப்பட்ட ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையை, இங்கே தமிழகத்துக்குத் தந்ததற்காக காவிய உள்ளமும், கவிதைக் கண்ணோட்டமும் உள்ள நமது முதலமைச்சர் அவர்களை வாழ்த்தி, அடுத்து வரும் நிதிநிலை அறிக்கைகளிலே, இன்னும் அதிகமாக அவர் செய்ய வேண்டுமென்று அவரைக் கேட்டுக் கொண்டு, அடுத்தடுத்துச் செய்துகொண்டே இருக்க வேண்டுமென்று அவரை வேண்டி நான் அமைகின்றேன்.

<u>திரு. கே. ராஜாராம்</u>: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் முதலமைச்சர் அவர்களை என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>திரு. எம். எம். பக்கர்</u>: தலைவரவர்களே, நிறைய புது மாதிரியான திட்டங்கள் எல்லாம் கொண்டுவர வேண்டுமென்று குறிப்பிட்டேன். ஏனென்றால் இந்த வருஷம் ஒன்றும் செய்ய முடியவில்லை. புதுப்புது மாதிரியான "வெல்பேர் ஸ்டேட்" என்று உலகமெல்லாம் பெருமைப்படுகின்ற அளவுக்கு தமிழகத்தை நம்முடைய முதல்வர் அவர்கள் உயர்த்த வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன். நன்றி.

(பிற்பகல் 5–30)

***Thiru P. YELLAMANDA**: Hon. Vice-Chairman, Sir, in the midst of soaring price and drought conditions, I thank the Hon. the Chief Minister for presenting this balanced Budget On the one side, we have lost the revenue on liquor, and on the other side, we have lost the revenue on the running of races. At this critical juncture, this is the only best alternative Budget that could be presented. Hence my thanks to the Hon. the Chief Minister. Among many of the items in the Budget, our Hon. Chief Minister has given equal importance and priority to the social welfare and security schemes covering the benefits of the poor, the neglected down-trodden masses in society. Our Hon. Chief Minister has initiated schemes like the Harijan Housing Develop-

ment Corporation to provide houses to the rural folk, housing for fishermen, Family Benefit Fund Scheme for Government Servants, Social Security Scheme and protection to the destitute widows and orphans, this year. These schemes are unparallelled, unquestioned, paramount, fundamental schemes which are nowhere implemented in India so rapidly and vigorously as in Tamil Nadu. This is acclaimed and accepted by the world, the Centre and all the States in India as a wonderful and beneficial scheme for the common man. But Dr. Kalaignar has got to implement all the schemes within the limited funds available and it will not be practicable to implement all the schemes with the money available. It is also needless to point out that the Hon. Central Ministers who come to Tamil Nadu do not fail to appreciate our schemes like anything; but what is the use? The Centre should come forward to give considerable assistance to the State. I am very sorry the Centre is always doing lip-service to the Tamil Nadu State, for what reason, I do not know. In this connection,

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

I would like to point out that our country aims at uplifting the poor and suffering masses through socialistic democratic process. Today we are talking about the common man. Today we are talking about inequalities, disparities and disabilities that exist in society. We want to achieve social equality, removal of poverty, and equal status for all people. But, what ameliorative measures have the Central Government taken so far to achieve this end? Nothing. Theoretically, so many: but practically nothing. After 27 years of independence, the common man remains where he was. That is the achievement we have made for the poor man. Hon. Chief Minister has tried hard and is still trying had to uplift these masses but it is a pity that his hands are tied up with limited funds. The entire power is vested in the Central Government. The true spirit of democracy, base of democracy is in great danger.

Mr. CHAIRMAN : Does the hon. Member know how many kinds of democracy there are? There are five kinds of democracy, What are these? I shall explain them. Direct Democracy, Indirect Democracy, Monarchic Democracy, Capitalist Democracy, tc. What sort of democracy have we got in our country.

Thiru P. YELLAMANDA : We are having indirect democracy, Sir, in this country.





Mr. CHAIRMAN : Very well, the hon. Member may proced.

Thiru P. YELLAMANDA : But anyhow it is a pity that the true spirit of democracy, the true base of democracy today, that s The common man, the ordinary man, is hanging on in between the Sky and the Earth. How long can he be like this? It is not correct to neglect the common man. Whether it is the Central Government or the state Government, the they must give top priority to the amelioration of the living conditions of the masses. But, unfortunately, in the name of democracy, we are denying the basic amenities to the common man. Then it is better to quit democracy and start dictatorship in this country. Today we are boasting about democracy. We go and tell lies to the ordinary people. After election we simply forget those people and we are enjoying. That is the position in the country. But Dr. Kalaignar has taken a lot of interest in the welfare of the people. It is he who encouraged the inter-caste marriages, it is he who has given houses for Harijans. No other Government have done so much good to the Harijans. These are ambitions and desires of Gandhiji, the Father of the Nation. People who are boasting themselves to be the Sishyas or the disciples of Gandhiji are not able to do what Kalaignar is to-day implementing boldly. Whether he is in power or not, people will not forget him; and he will remain in the heart of hearts of the poor as the true champion of their cause. His name will be written in golden letters in the history of Tamil Nadu and nobody on this earth can deny this fact.

Regarding Centre - State relations, I would like to associate myself with the feelings expressed by our late Anna, the great champion and lover of the common masses who pleaded for more powers to the State. On several occasions, on the floor of this House, all the hon. Members irrespective of political parties pleaded for State autonomy but our efforts so far remained on paper only. Once again, Dr. Kalaignar, in submitting the Budget, has stressed the need and importance of Centre-State relations which today occupies the pivotal and controversial position in this Budget. One might say that this Budget Speech is based on this demand because the entire financial position is linked up with ths demand only. I would like to impress upon my learned hon. Colleagues that it is a pity and it is horrible that we have to approach the Centre for each and everything and get its consent and approval. It may be allright in the matter of external affairs and defence

But today the ordinary man, the common man is in great danger, without food, clothing and shelter and that is his present position. He does not get the basic requirements without which nobody will survive in this world. We are not able to provide him at least those basic necessities. Then, why should we sit here ? What is our duty and obligation? As legislators is it not our duty to deliver at least the basic necessities ? Yes, it is our duty and it must be our intention. We must deliver these basic necessities. But we cannot do so because even these basic necessities are controlled by the Central Government.

Sir, in this context, I would like to point out the three lists envisaged in the Constitution—the Union List, the State List and the Concurrent List. But the Centre is controlling all the Lists. In the Constitution, it is very clear that the State Government have got powers in respect of agriculture, education, health and so many other subjects. But this is tall talk and it is there only in theory. Practically, all subjects are controlled by the Centre. Now, we are suffering for water. For this purpose, the Hon. the Chief Minister has gone to Delhi several times. But, still he is demanding Cauvery water and the matter is still pending. Water is a basic necessity of people, but, unfortunately, the Hon. the Chief Minister has to go and approach the Centre even for that. That is the postion of the State today. Now I am in a dilemma as to which is the State List, and which are Union and State Lists. It is just to misguide the people that they have given these Lists. It is burdensome on the part of the Centre with all the unlimited powers. The Centre should relinquish some of them and see that all the State subjects are under the control of the State. Otherwise, one day or other, the ordinary people, the ordinary masses, whose hearts are burning, will throw away all these Governments. This is going to occur one day or other unless and until the Centre realises that no power on earth is permanent. History is with us. Gone are the days of Zamindars, gone are the days of landlords and gone are the days of " Dikshidars " . Today, we are living in a democracy and the survival of this democracy depends upon the strength and cream of the ordinary man.

MR. CHAIRMAN : When the hon. Member mentions about " Dikshidars " let him remember that there is an hon. Member in this House by name " Dikshidar " and he should not think otherwise.





Thiru P. YELLAMANDA : Sir, the survival of democracy lies in the strength of the ordinary man. The Centre is not still realising its position it should give more power to the State to get over the difficulties that confront us in doing justice to the people. The Centre must come forward to give powers to the State. Otherwise, the Centre is bound to become weak because of its own actions as a matter of reaction. Anyhow, I am appealing to my learned hon. Colleagues, whether it is the D.M.K. in power or the Congress party, it is our duty to fight and get this autonomy. Unless and until we get this autonomy, nothing can be done in the State. So, our ultimate goal is autonomy. With these words, I am concluding my speech.

Thank you, Sir.

(பிற்பகல் 5–40)

திரு. ஏ. பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு தலைவரவர்களே, 1975–76–ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதன் முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். சோர்வுற்றிருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முகம் சென்ற மூன்று நான்கு தினங்களாக சற்று சுறுசுறுப்பாக இருப்பதைப் பார்க்கிறேன். காரணம் பெருந்தலைவர் காமராசர் தமிழ்நாட்டில் இப்பொழுது கால் எடுத்து வைத்தவிடமெல்லாம் மழை பெய்திருக்கின்றது என்ற செய்தி. இந்த மழை விரைவில் சென்னைக்கும் வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, பெருந்தலைவர் வெகுநாட்களுக்கு சென்னையிலேதான் தங்கியிருந்தார். ஏன் அப்பொழுது மழை பெய்யவில்லை?

திரு, ஏ. பாலசுப்பிரமணியம்: தலைவரவர்களே, பெருந்தலைவர் சுற்றுப்பயணம் செய்துவிட்டு இப்பொழுதுதான் சென்னை வந்திருக்கிறார். ஆகவே விரைவில் இங்கும் பெய்யும். மக்களும் அந்த மழையை வெகு ஆவலாக எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையில் ஏதாவது மகிழ்ச்சிகரமான செய்தி இருக்கின்றதா என்று பார்த்தேன். இந்த அறிக்கையை நான் துருவித்துருவிப் படித்தபோது, அதிலே வார்த்தை ஜாலங்களையும் எழுத்து ஜாலங்களையும்தான் பார்க்க முடிந்தது. அதைத்தான் மூன்று பகுதிகளாகப் பிரித்து சமர்ப்பித்திருக்கிறார்கள். முதல் பகுதியை எடுத்துக்கொண்டால் மத்திய–மாநில உறவைப் பற்றிக் கூறியிருக்கின்றார்கள். இறுதிப் பகுதியில் இவர்களுடைய உரிமைகளைப்பற்றி, அதாவது மாநில அரசுக்கு மத்திய அரசு கொடுக்கவேண்டிய உரிமைகளைப்பற்றி எடுத்துச்சொல்லப்பட்டிருக்கிறது. இடைப்பகுதியில் இந்தத்

[திரு. எ. பாலசுப்பிரமணியம்] [1975 மார்ச் 7

திட்டங்களைப்பற்றித் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும் கூட என்னைப் பொறுத்த வரையில், சொல்ல விரும்புவது, இன்றைக்கு இந்த மாநில அரசு எல்லாவற்றிற்கும் மத்திய அரசைக் குறை கூறிவிட்டு பிரச்சினையைத் தட்டிக்கழிக்க முயற்சிக்கிறது என்பதுதான். அதே நேரத்தில் மறைந்த அண்ணா அவர்களுடைய வார்த்தைகள் சிலவற்றையும் எடுத்து மத்திய அரசாங்கம் ஏகப்பட்ட அதிகாரங்களைக் குவித்து வைத்துக்கொண்டு, விலைவாசி ஏற்றம் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்ற நேரத்தில், அந்த விலைவாசி ஏற்றத்திற்கு மாநில அரசு பழிபாவங்களை ஏற்க வேண்டியிருக்கின்றது என்று அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் இன்றைக்கு தமிழக அரசுக்குச் சொல்லிக் கொள்வதெல்லாம், 1967 தேர்தல் பிரகடனத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆட்சி செய்யும் வாய்ப்பு அளிக்கப்படுமேயானால் விலைவாசி குறையும் என்று கூறியிருக்கின்றார்கள். அப்படியானால் மாநில அரசாங்கத்திற்கு விலைவாசியைக் குறைக்கிற அதிகாரம் இல்லை என்பது இந்த அரசு பொறுப்பு ஏற்ற பிறகுதான் தெரியுமா அல்லது முன்பே தெரியுமா? நீங்கள் எந்த எண்ணத்தில் தேர்தல் பிரகடனத்தில் அவ்வளவு தெளிவாகப் போட்டுவிட்டு, இப்பொழுது மத்திய அரசாங்கத்திடமிருந்து அதிக அதிகாரங்கள் கிடைக்கவேண்டுமென்று கூறுகிறீர்கள்? அந்த அதிகாரங்கள் வந்தால்தான் விலைவாசியைக் குறைக்க முடியுமென்று கருதினால், மத்திய அரசாங்கம் கேட்டுக் கொடுக்கவில்லை என்றால், கேட்டுக் கொண்டே இருக்கவேண்டிய அவசியமில்லை. போராடிப் பெற்றுத்தானாக வேண்டும். இதற்கு அழகான ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். மேற்கு வங்காளத்தில் டாக்டர் பி. சி. ராய் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, பெருபாரி என்ற பகுதியை பாகிஸ்தானுக்கு தாரை வார்த்துக்கொடுத்துவிட்டார், அப்பொழுது பாரதப் பிரதமராக இருந்த பண்டித நேரு அவர்கள். அப்பொழுது அங்கே முதலமைச்சராகவிருந்த டாக்டர் பி. சி. ராய் அவர்களைக் கேட்காமல் கொடுக்க முற்பட்டது தவறு, அதைக் கண்டிக்கும் வகையில், எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் அடுத்து வரக்கூடிய ஆகஸ்ட் 15-ஆம் நாள் சுதந்திர தினவிழா அன்று கறுப்புக்கொடி ஏற்றப்போகிறேன் என்று அறிவித்துவிட்டு அவ்வாறே ஏற்றியும் வைத்தார். அப்பொழுது அந்த மாநிலத்திலும் மத்தியிலும் ஒரே கட்சியின் ஆட்சி நடந்துகொண்டிருந்தது. இரண்டு ஆட்சியும் ஒரு கட்சியால் நடத்தப்பட்டு வந்தாலும், மாநில ஆட்சியைக் கேட்கத் தவறியது தவறு என்று அதை எடுத்துக்காட்டினார் டாக்டர் பி. சி. ராய். தமிழ்நாட்டில் பெருந்தலைவர் முதலமைச்சராக இருந்த நேரத்தில் இங்கே மேட்டூரில் இருக்கக்கூடிய "மால்கோ" அலுமினியம் தொழிற்சாலை வேறு மாநிலத்திற்குக் கொடுக்கப்படுகிறது என்று தெரிந்ததும் மத்திய அரசை எதிர்த்துப் போராடி, அந்தத் தொழிற்சாலையைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்த பெருமை அன்று முதலமைச்சராகவிருந்த பெருந்தலைவர் காமராசரைச் சாரும். அதைப்போலத்தான் இன்று தமிழக அரசு மத்திய அரசிடம் போராடிப் பெற வேண்டிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது என்று கருதுகிறேன். இல்லாவிட்டால் 1967-ல் இந்த மாநில அரசும். மத்திய அரசும் நெருங்கிக் கொண்டிருந்த நேரம், அப்பொழுது அவர்கள் கேட்டிருக்கலாம். ஆனால் அப்பொழுது அவர்கள் இவர்களைத் தட்டிக் கொடுத்து விட்டார்கள். அன்றைய தினம் இவர்கள் தட்டிக்



1975 மார்ச் 7] [திரு. எ. பாலசுப்பிரமணியம்]

கேட்காமலிருந்து விட்டார்கள். மத்திய அரசைப் பொறுத்த வரையில், இன்றைக்கு மாநில அரசு கேட்பதைக் கொடுக்க வேண்டும், கேட்டுப் பெற முயற்சியும் மாநில அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையில் இன்றைய தினம் சாதாரண ஏழை எளிய மக்கள் அன்றாடம் வாங்கி உபயோகிக்கும் தேயிலை, காப்பி, எண்ணெய், பருப்பு போன்ற பொருள்களின் மீது வரியை உயர்த்தியிருப்பதைப் பார்க்கிறோம். ஏற்கெனவே இந்த வறட்சிக் கொடுமையால் பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்கள் பயன்படுத்துகின்ற இம்மாதிரியான பொருள்கள் மீது வரியை உயர்த்தினால் அவர்களுக்கு ஏற்படக்கூடிய வேதனை தாங்க முடியாத அளவுக்குப் போய் விடுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக உபயோககரமான பல நல்ல திட்டங்களைப்பற்றி பத்திரிகையில் வருவதைப் பார்க்கிறோம். ஆனால் நடைமுறையில் பார்க்கின்றபோது, அவைகள் தடைப்பட்டிருப்பதைப்பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏறத்தாழ ஆறு ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் சேலத்திலிருந்து சென்னை செல்லும் ஆத்தூர் சாலையில் சேலத்திற்கு பக்கத்தில் ஒரு பைபாஸ் சாலை போடுவதற்கு லட்சக் கணக்கான ரூபாய் செலவு செய்து அங்கே வரக்கூடிய நிலங்கள் எல்லாம் ஆர்ஜிதம் செய்யப்பட்டன. இருந்தாலும் கூட இதுவரையில் அங்கு வேலை துவங்கப்படவில்லை. அந்த லட்சக்கணக்கான ரூபாய் நிலச்சுவாந்தார்களுக்குக் கொடுக்கப்பட்டு, ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலைமையிலேயே இருந்து வருகிறது. அந்த பைபாஸ் ரோடானது மிகவும் உபயோககரமான சாலை. சேலத்திலிருந்து திருச்சிக்குச் செல்லும் சாலையையும், அதாவது நேஷனல் ஹைவேஸ் ரோட் நம்பர் 7-ஐயும் கொண்டலாம்பட்டி அருகில் வருகின்ற நேஷனல் ஹைவேஸ் ரோட் நம்பர் 47-ஐயும் தொடர்பாக்கி இணைக்கும் பைபாஸ் ரோட்டுக்கு லட்சக் கணக்கில் ரூபாய் கொடுத்தாலும், இன்னமும் அமுல் படுத்தப்படாமல் இருந்து வருகிறதென்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இந்த நிதி நிலை அறிக்கையில் விவசாயிகளுக்கு எந்த விதமான உதவியும் செய்வதாகச் சுட்டிக்காட்டியிருப்பதாகத் தெரியவில்லை. காரணம் என்னவென்று தெரியவில்லை. நீண்ட நாட்களாக விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாக நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கின்ற பயிர் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. எந்த ஒரு தொழிலை ஆரம்பித்தாலும், தொழில் நிறுவனங்களாக இருந்தாலும், இன்ஷூரன்ஸ் செய்யப்பட்டு பாதுகாப்பு கொடுக்கப்படுகிறது. இந்த ஆண்டு அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுவார்களென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். நீண்ட நெடுநாட்களாகச் செயல்படுத்தப்படாத இந்தப் பயிர் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் திட்டத்தை, இப்பொழுதாவது செய்து கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், கிராமப் பகுதிகளானாலும் சரி, சென்னை நகரமானாலும் சரி, பிரச்சினை ஒன்றாகத்தான் இருக்கிறது. நீண்ட நாட்களாகவே குடிநீர்ப்

பிரச்சினை இருந்துகொண்டு வருகிறது. ஆகவே அரசாங்கம் சற்று கவனமாக இருந்து இன்னும் முன்னதாகவே நடவடிக்கைகள் எடுத்திருக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். முதலில் வீராணம் திட்டம் வரும் என்று சொன்னார்கள். அதில் உடனடியாகப் பலன் கிடைக்காது என்று தெரிவதால், பாலாற்றுத் திட்டம் என்று சொன்னார்கள். இதையே காட்டிக்கொண்டு சமாதானம் சொல்ல அரசு முயற்சித்தால், எத்தனை காலம்தான் மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்க முடியும் ?

அடுத்து, கிராமப்புறங்களை எடுத்துக்கொண்டால், குறிப்பாக நாமக்கல் தாலுகாவில் சேந்தமங்கலத்தில் இரண்டு வருஷங்களுக்கு முன்பு பணம் டெபாசிட் செய்யப்பட்டு இன்னும் குடிநீர் வசதி செய்து தரப்படவில்லை. காலாகாலத்தில் செய்திருந்தால், இந்த நேரத்தில் அந்தப்பகுதி மக்களுக்கு மிக உதவியாக இருந்திருக்கும். 17,000 ரூபாய் டெபாசிட் செய்து இரண்டு வருஷங்களுக்கு மேலாகிவிட்டது. நாமகல்லுக்கும் சேந்தமங்கலத்திற்கும் இடையே உள்ள தூரம் ஏழு மைல்கள் தான். ஆகவே சென்னை போன்ற நகரங்களுக்குச் செய்வதில் காட்டப்படுகின்ற ஆர்வத்தைப் போல் ஆர்வம் காட்டி, இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுககொள்கிறேன். குடிநீர் வாரியத்தால் போடப்படுகின்ற திட்டங்கள் சிறப்பாக நிறைவேற்றப்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு சர்ச்சைக்குரிய பிரச்சினையாக சட்ட மன்றத்திலும் மேலவையிலும் இருந்து வருவது மாநில சுயாட்சிப் பிரச்சினை. மாநில சுயாட்சி பற்றி அண்ணா அவர்கள் சொன்னாரா இல்லையா என்பது பற்றிச் சட்ட மன்றத்தில் பேசப்படுவது பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருக்கின்றது. நான் நமது முதலமைச்சர் அவர்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புவதெல்லாம், அண்ணா அவர்கள் சொன்னாரா இல்லையா என்பதல்ல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்கின்றார், என்ன செய்கின்றார் என்பதுதான்.

இதற்கு முன்பெல்லாம் நமது முதலமைச்சர் அவர்களை முஜிபிர் ரஹிமான், தென்னாட்டு ரஹிமான் என்றெல்லாம் குறிப்பிட்டுப் பேசி வந்தார்கள். ராஜபாளையம் மாநாட்டில் போடப்பட்ட போஸ்டருடன் தெரு வீதி வளைவுகளில் எல்லாம் தென்னக 'முஜிபிர் அவர்களே வருக, வருக' என்று போட்டிருந்தார்கள். இப்பொழுது அதை விட்டு விட்டு, ஷேக் அப்துல்லா என்று சொல்லி வருகிறார்கள். ஷேக் அப்துல்லாவைப் போல் சிறை செல்ல முதலமைச்சர் தயாராகவிருப்பதாகச் சொன்னதாகப் பத்திரிகைகளில் வந்தது. ஷேக் அப்துல்லா மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்டார் என்பதற்காகச் சிறைக்கு அனுப்பப்படவில்லை.

இந்த தமிழ் நாட்டுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்பதற்காகச் சிறை செல்ல வேண்டிய அவசியமில்லை. சி. பி. ஐ. சேர்மேன் ரிப்போர்ட் அனுப்பி வைத்தார். ஷேக் அப்துல்லா அயல்நாடுகளுடன் தொடர்பு கொண்டு காஷ்மீரை ஒரு ராணுவக் கூடமாக்க விரும்புகிறார் என்று ரிப்போர்ட் அனுப்பியதன் பேரில், அவர் கைது செய்யப்பட்டு சிறையில்





வைக்கப்பட்டார். சி.பி.ஐ. ரிப்போர்ட்டின்படி, அவர் அயல் நாடுகளுடன் தொடர்பு கொண்டு தேசத் துரோக வேலைகளில் ஈடுபட்டார் என்று தெரிய வந்த காரணத்தினால், கைது செய்யப்பட்டார்.

[பிற்பகல் 5-50]

மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட சொன்னார்கள். அன்றைக்கு திரு. வீரேந்திர பட்டீல் கூட அதிக அதிகாரம் கேட்டார்கள் என்று சொன்னார்கள்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவர் அவர்களே, ஷேக் அப்துல்லா அங்கே வெளி நாடுகளுடன் உறவு வைத்துக் கொண்டு ஏராளமான மிலிட்டரியை காஷ்மீருக்குக் கொண்டுவந்து நிரப்பினார் என்ற குற்றத்திற்காக சிறையிலே வைக்கப்பட்டார் என்று அவரால் குறிப்பிடப்பட்டது. என்னுடைய கேள்வி எல்லாம் அத்தனை மிலிட்டரியையும் கொண்டு வந்து காஷ்மீரில் "டம்ப்" பண்ணினால், அதன் பொருள் என்ன, எதற்காக யார் மீது படையெடுக்க அங்கே கொண்டு வந்தார்........

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அது அவரைக் கேட்டுப் பிரயோஜனம் இல்லை. அந்த அம்மாவைக் கேட்க வேண்டும்.

(பலத்த சிரிப்பு)

திரு. ஏ. பாலசுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, காஷ்மீரை ஒரு ராணுவ பீடமாக ஆக்குவதற்காக அவர் முயற்சி செய்து கொண்டிருந்தார். அப்படி இருந்ததற்காகத்தான் கைது செய்யப்பட்டார் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அங்கே ராணுவத்தை வைக்கவில்லை. வைப்பதற்கு அமெரிக்காக்காரர்களும், மற்றவர்களும்......

திரு. எம். எம். பக்கர்: தலைவர் அவர்களே, வெளிநாட்டு உதவியைப் பெறுவது ஷேக் அப்துல்லாவுடைய கொள்கையாக இருந்ததா? அல்லது அது வெறும் சி. பி. ஐ.-யுடைய அறிக்கைதானா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஏ. பாலசுப்பிரமணியம்: இந்திய அரசாங்கத்தினுடைய அனுமதி பெறாமலேயே பல வெளி நாடுகளுக்கெல்லாம் சென்று வந்து கொண்டிருந்தார். அப்படிச் சென்று கொண்டிருந்தபோது, அவருடைய நடவடிக்கையைப் புரிந்து கொண்டு, அந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவர் போவதற்கு பாஸ்போர்ட் இந்தியா கவர்ண்மெண்ட் தானே கொடுத்திருக்கும்.

திரு. ஏ. பாலசுப்பிரமணியம்: பாஸ்போர்ட் இல்லாமல் ஒரு தடவை போய்விட்டார். மாண்புமிகு முதல்வர் அவர்கள், கர்நாடக மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சராக இருந்த திரு. வீரேந்திர பாட்டீல் கூட அதிக அதிகாரம் கேட்பதாகக் குறிப்பிட்டார்கள். நாங்கள் இன்றைக்கு எங்கள்

நிலையிலேகூட, மத்தியிலே குவிந்திருக்கிற அதிகாரத்தைப் பகிர்ந்து தர வேண்டும் என்றுதான் சொல்கிறோம். எங்கள் பெருந் தலைவர் கூட ஒரு தடவை..........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திரு. வீரேந்திர பட்டீல் அவர்கள் தலைமை வகிக்கின்ற கருநாடக மாநில காங்கிரசின் சார்பில் சென்றமுறை நடைபெற்ற தேர்தலில் வெளியிடப்பட்ட தேர்தல் பிரகடனத்தில் "ஸ்டேட் அட்டானமி" வேண்டும் என்றுதான் வெளியிடப்பட்டிருக்கிறது.

திரு ஏ. பாலசுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, அதுதான் அதிக அதிகாரம் வேண்டும் என்று சொன்னார் என்று தான் சொல்கிறோம் நாங்களும் அதிக அதிகாரம் வேண்டும் என்று சொல்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: 'ஸ்டேட் அட்டானமி' என்றால் அதிக அதிகாரம் என்று பொருளல்ல. அதற்கு என்ன பொருள் கூறுகிறார் என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு ஏ. பாலசுப்பிரமணியம்: "ஸ்டேட் அட்டானமி" என்றால் மாநில சுயாட்சிதான். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'ஸ்டேட் அட்டானமி' என்றால் மாநில சுயாட்சி என்று அர்த்தம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, திரு. வீரேந்திர பட்டீல் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதே ஒரு கூட்டத்திலே பேசும்போது சொன்னார். மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்காவிட்டால்.. என்ற ஒரு நிபந்தனையோடு கூடிய பேச்சைப் பேசி, டெல்லியிலே இருக்கின்ற மாநிலங்களுடைய அலுவலகங்கள், மாநிலங்களின் தூதுவர் அலுவலகங்களாக மாறும் என்று திரு. வீரேந்திர பட்டீல் குறிப்பிட்டார். அதற்கு என்ன பொருள்? தனி நாடுகளாக மாநிலங்கள் ஆகிவிடும் என்கின்ற அளவுக்கு திரு. வீரேந்திர பட்டீல் முதலமைச்சராக இருந்த பொழுதே பேசினார். அதே உறுதியோடுதான் அவர் முதலமைச்சர் பதவியை இழந்த பின்பு கூட நடைபெற்ற தேர்தலில் அவர் கையெழுத்திட்டு வெளியிட்ட, அவர் புகைப்படம் போட்டு வெளியிட்ட தேர்தல் பிரகடனத்தில், மைசூர் பழைய ஸ்தாபன காங்கிரசின் தேர்தல் பிரகடனத்தில், "ஸ்டேட் அட்டானமி" வேண்டும், "கிரேட்டர் அட்டானமி" வேண்டும் என்றே குறிப்பிட்டிருக்கிறது.

திரு. ஏ. பாலசுப்பிரமணியம்; நாங்களும் அதிக அதிகாரம் வேண்டுமென்று சொல்கிறோம். எங்களுக்கு இந்த மாநிலத்தில் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "ஸ்டேட் அட்டானமி" என்றால் நேரடியாக அர்த்தம் என்ன என்பதுதான் இப்பொழுது தெரிய வேண்டும்





திரு. ஏ. பாலசுப்பிரமணியம்: "ஸ்டேட் அட்டானமி" என்பதற்கு (சிரிப்பு) நேரடியான அர்த்தம் மாநில சுயாட்சி என்பதுதான். இருந்தாலும் கூட இன்றைக்கு மக்கள் மாநில சுயாட்சி என்றால்,ஏதோ பிரிந்து போகிறார்கள் என்று நினைத்து பீதி கொண்டிருக்கிறார்கள். ஆகவே தான் அந்தப் பெயர் வேண்டாம், அதிக அதிகாரம் வேண்டுமென்று நாங்கள் சொல்கிறோம். இந்தப் பெயரைப் பொறுத்துதான் மக்களிடத்திலே பீதி ஏற்பட்டிருக்கிறதேயொழிய........

*செல்வி சி. தமிழரசி: தலைவர் அவர்களே, சென்ற சட்டசபைக் கூட்டத் தொடரில் நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கேட்டார்கள்; அதிக அதிகாரம் என்று நீங்கள் கேட்டால் என்ன என்று கேட்டதற்கு, அதிக அதிகாரம் என்றுகேட்டால் அது எளிமையாகத் தர முடியும், பிறகு எளிமையாக எடுத்துக் கொள்ளவும் முடியும், ஆனால், மாநில சுயாட்சி என்று கேட்டால், அதைக் கொடுத்துவிட்டால், பிறகு எடுத்துக் கொள்ள முடியாது என்று முதல்வர் அவர்கள் விளக்கம் தந்தார்கள். அதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. ஏ. பாலசுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையிலே, மக்களிடத்திலே பீதி ஏற்பட்டிருக்கின்ற இந்த நேரத்திலே, ஏன் திடீரென்று முதல்வர் இதைக் கேட்டார் என்று எல்லோருக்குமே ஒரு நினைவு ஏற்பட்டிருக்கிறது. சட்ட சபையிலும் அதற்கு முன்பும் இதுபற்றி நாம் விவாதித்திருக்கிறோம். இது ஏதோ நாகாஸ்திரம் போல்தான் இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் அடிக்கடி விட்டுவிட்டால் நம்முடைய அஸ்திரத்திற்கு மதிப்பே இல்லாமல் போய்விடும். ஆகவே, இது நாகாஸ்திரம் போல் இருக்க வேண்டும் என்று நான் முதல்வர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ளுகிறேன்.

இறுதியாக இன்றைக்கு சாதாரண, ஏழையெளிய மக்கள்இந்த வறட்சியின் கோரப்பிடியிலே இருந்துகொண்டு, இந்த நிதிநிலை அறிக்கை ஒரு வரப் பிரசாதமாக இருக்கும் என்று நினைத்தார்கள். ஆனால் இந்த வரி உயர்வின் காரணத்தினாலே, "டீ", "காப்பி", "எண்ணெய்" போன்ற இவைகளுக்கெல்லாம் வரி போட்டது சாதாரண மக்களுக்கு ஒரு பெரிய சுமையாக இருக்கிறது என்று நான் சொல்லிக் கொள்ளுகிறேன். ஆகையால் இதையெல்லாம் மனதில் கொண்டு, இனிமேலாவது விவசாயிகளுக்கு உத்தரவாதம் அளிக்கின்ற வகையிலே பயிர் பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் கொடுக்கத் தக்க ஏற்பாடுகளை இந்த பட்ஜெட் கூட்டத் தொடரிலே இணைக்க முடியுமென்றால் இணைக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன், வணக்கம்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவர் அவர்களே, 1975–76ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். 1975–76ஆம் ஆண்டு பெரிய வறட்சி ஏற்பட்டிருக்கிற நேரத்திலே மதுவிலக்கை அமுல்படுத்திய காரணத்தினால் ஏறத்தாழ 51 கோடி ரூபாயை இழந்த பிறகும், குதிரைப் பந்தயத்தை

ஒழித்ததனாலே பல கோடி ரூபாயை இழந்த பின்னரும், ஒரு நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்வது என்பது மிகச் சாதாரணமானதல்ல. பற்றாக்குறைய நம்முடைய நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த வரையிலே ஒரு 26 கோடி..........

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இந்த நிதிநிலை அறிக்கையைப் படித்துப் பார்க்கிறீர்களா?

திரு. சி. வி. ராஜகோபால்: இவ்வளவு பெரிய ஆபத்தான பண இழப்பின்போது நாம் நிதிநிலை அறிக்கையை 26 கோடி ரூபாய்தான் டிஃபிசிட் என்ற முறையிலே இங்கே சமர்ப்பித்திருக்கிறோம். அந்த நிலைமை இல்லை என்றால், மற்ற மாநிலங்களைவிட நம்முடைய மாநிலம் அதிகமாகவே ஒரு "சர்ஃப்ளஸ்;" பட்ஜெட்டை இங்கே தயார் செய்து கொடுத்திருக்க முடியும் என்பதற்காகத்தான் நான் இங்கே எடுத்துக் கூறினேன்.

எனக்கு முன்னர் பேசிய நண்பர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் மிக வேகமாகப் பேசினார். அழகாகப் பேசினார், நன்றாக இருந்தது. மழையில்லாமல் இவ்வளவு திண்டாடுகிற நேரத்திலே அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த காமராஜ் அவர்கள் செல்கின்ற இடமெல்லாம் மழை பெய்கிறது என்று அவர் சொன்னார். உண்மையாகவே மகிழ்ந்துதான் போனேன். ஆனால் அவர் அவ்வளவு பெரிய சக்தி படைத்தவராகவோ, பெரிய மகானாகவோ இருந்திருந்தால், இந்த மழை காலாகாலத்தில் பெய்யவேண்டி இருக்கிறதே, மும்மாரி பெய்யவேண்டி இருக்கிறதே என்று இங்கேயே இருந்துகொண்டு பெய்ய வைத்திருக்கலாம். அதற்காக நூற்றுக் கணக்கான மைல்கள் அவர் அலைய வேண்டிய தேவையில்லை. இங்கே இருந்து அந்த சக்தியை உண்டாக்கியிருக்கலாம். இந்த அணைக்கட்டு கட்டவில்லை, அந்தக் குழாயிலே தண்ணீர் இல்லை, சென்னையிலே தண்ணீர் இல்லை என்று சொன்னார்கள். எல்லாவற்றையும் நான் ஒத்துக் கொள்ளுகிறேன். இவ்வளவு பெரிய சிரமத்தில் 24 மணி நேரமும் அல்லோலகல்லோலப் படவேண்டிய நிலைமை தமிழகத்திற்கு, தமிழக அரசுக்கு இருந்திருக்காது அவர் இதைச் செய்திருந்தால். இப்படித்தான் எல்லோரும் சொல்வது வழக்கம். நான் அவர்மீது குற்றம் சொல்கிறேன் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எண்ணவேண்டாம். ராஜாஜி அவர்களை இப்படித்தான் சொன்னார்கள். நினைவிருக்கிறது. ராஜாஜி மகான் என்றார்கள். மழை பெய்தது. அவர் காலத்திலிருந்தே இதே தான் பழமொழி. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் அப்படிச் சொல்லவில்லை.

*திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, மேட்டூரிலே தண்ணீர் இல்லாத காலத்தில் 1967–ஆம் ஆண்டிலே திராவிட முன்னேற்றக் கழக அரசுக்குக் கஷ்டம் ஏற்பட்டது. ஆனால் சில மாதங்களிலே மழை பெய்தது. மேட்டூர் தேக்கம் நிறைந்தது. அப்போது நீங்களே சொன்னீர்கள், "நாங்கள் அரசாட்சியை ஏற்றுக் கொண்டதினால்தான் மழை பெய்திருக்கிறது" என்று. ஆக இப்படிச் சொல்வது பழக்கம். அதில் தவறு ஒன்றும் இல்லை.





[பிற்பகல் 6-00]

திரு. ஜி. சுவாமிநாதன்: ராஜாஜி அவர்கள் மழை பெய்யாமல் இருந்த ஒரு சமயத்திலே மாநிலத்திலே எல்லோரும் பிரார்த்தனை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அதே மாதிரி பிரார்த்தனை செய்தார்கள். மறு நாள் மழை பெய்தது என்பதனையும் அங்கத்தினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, திரு காமராஜர் அவர்கள் ராஜசிங்க மங்கலத்திலே மீட்டிங்கிலே எல்லோரும் பிரார்த்தனை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அவரேகூட எழுந்து நின்று பிரார்த்தனை பண்ணினார்கள் என்றும் பேப்பரிலே 'பார்த்தோம். அதனாலேயோ, வேறு எதனாலேயோ மழையும் பெய்துவிட்டது, அவ்வளவுதான்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, நான் திரு. காமராஜர் அவர்களையோ , திரு. ராஜாஜி அவர்களையோ குறைவாகச் சொல்வதாக எண்ணவேண்டாம். அவர்கள் எல்லாம் மகான்கள்தான். அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. அதை நான் ஏற்றுக் கொள்கின்றேன். மகான்களாக இருந்தால் லட்சக்கணக்கான, கோடிக் கணக்கான மக்கள், 4½ கோடி மக்களில் இரண்டே முக்கால் கோடி மக்களை தரித்திர நாராயணர்களாக அவர்கள்விட்டுச் சென்றிருக்க மாட்டார்கள். அவர்கள் காலத்திலேயே பாமர மக்களாக, பஞ்சைகளாக, பட்டினிகளாக, பராரிகளாக லட்சக்கணக்கிலே இருந்திருக்கிறார்கள். மேலும் எங்கள் ஆட்சி வந்த 6 வருடகாலத்தில்தான் ஏழை மக்கள் வாழ்வது எப்படி என்று கண்டுபிடித்து. . . .

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, சில நாட்களுக்கு முன்னர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்தி மோகன் அவர்கள் பேசுகிறபோது, கிருஷ்ண பரமாத்மா இருந்த காலத்திலேயே குசேலர் பட்டினியால் வாடினார் என்று சொன்னார்கள். ஆகையால், அந்தக் காரணத்தினாலேயே இவர்களையெல்லாம் மகாத்மாக்கள் இல்லையென்று சொல்லிவிட முடியாது.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, நான் அவர்களையெல்லாம் மகாத்மாக்களாகவே ஏற்றுக் கொள்கிறேன்.

"தக்கார் தகவிலார் என்பர் அவரவர்தம்
எச்சத்தால் காணப்படும்"

என்பதைப்போல் நான் அவர்களை வரவேற்கிறேன். பண்டித ஜவஹர்லால் அவர்கள், உத்தமர் காந்தியார் அவர்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: திரு. காமராஜ் அவர்கள் திருமணம் ஆகாதவர். அங்கத்தினர் அவர்கள் எச்சம் என்பதற்குத் தருகின்ற பொருள் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

__திரு. சி. வி. ராஜகோபால் :__ தலைவரவர்களே, அவரவர்கள் செய்த நல்ல காரியங்களை விட்டுச் செல்வது என்பது. அதைத் தான் நான் சொல்கின்றேன். உத்தமர் காந்தி அவர்கள், பின்னர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், பிரதமர் இந்திரா அம்மையார் அவர்கள், ராஜாஜி அவர்கள், காமராஜர் அவர்கள், அதற்குப் பின்னர் பேரறிஞர் அண்ணா அவர்கள், அதற்குப் பின்னர் தக்கார் டாக்டர் கலைஞர் அவர்கள். அவர் இருக்கிறாரே, அவர் எதிரேயே சொல்லக்கூடாது என்று அச்சப்படுகிறேன், அவரும் அந்த இடத்திலே அமருகின்ற நிலையில் இருக்கின்றார்,' அந்த பாரம் பரியத்திலே வரக்கூடிய நிலையில்தான் இருக்கின்றார்கள். அந்தக் காரணத்தினால் தான் இப்படி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வள்ளுவர் பெருந்தகை "தக்கார் தகவிலார்" என்று பிரித்துச் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே அந்த தக்கார் நிலையில் நமது கலைஞர் அவர்கள் இருக்கின்றார்கள். மகான்கள் என்று சிலரை ஆக்கிவிடுகிறோம். அந்த மகான்கள் பலர் மயக்கங்களுக்குட்பட்டு வேதனைப்படுகிறார்களே, அது இருக்கக்கூடாது. என் இதைச் சொல்கின்றேன் என்று சொன்னால், மனித சமுதாயத்திற்கு, ஏழை சமுதாயத்திற்கு, கீழே தள்ளப்பட்ட சமூகத்திற்கு அவர்கள் உள்ளபடியே சில காரியங்களைச் செய்தார்கள். அவர்களை மகான்கள் இல்லை யென்று சொல்லிவிட முடியாது. அவர்கள் மகான்கள் என்பதை ஒத்துக்கொள்கின்றேன். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியை எடுத்துக்கொண்ட பிறகு, ஏழை எளியவர்களுக்கு, குடிசைகளிலே குமுறிக்கொண்டிருப்பவர்களுக்கு, அபலைகளுக்கு, அலைந்து கொண்டிருக்கின்ற அனாதைக் குழந்தைகளுக்கு, வீதிகளிலே ஓடிக்கொண்டிருக்கிற பிச்சைக்காரர்களுக்கு, ஊனமுற்றவர்களுக்கு இப்படிப்பட்டவர்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறை முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். பிறந்த நாள் என்று ஒரு நாளைக் குறிப்பதற்காக பிறந்த நாள் என்று சொல்லுகிறார்கள். வைதீகர்களாக இருந்தால் ஏதாவது ஒரு நாள் நட்சத்திரம் என்று வைப்பார்கள். பஞ்சாங்கத்தைப்பார்த்து ஒரு நாளை வைத்துக்கொண்டு, ஏழை எளியவர்களுக்கு என்று அறிவிப்பார்கள். அதைப்போல, நமது முதல்வர் பிறந்தநாள் என்று வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். அன்றைய தினம் ஏழை எளியவர்களுக்கு கண்ணொளி வழங்குதல், மார்பு ஒடிய இழுக்கின்ற ரிக்ஷாக்காரனுக்கு ரிக்ஷா வழங்குதல் போன்ற திட்டங்களை நிறைவேற்றியிருக்கின்றார்கள். இப்படி பற்பல திட்டங்களை அவர்கள் செய்திருப்பதால், அவரை அதிகமாக வெகுவாகப் பாராட்டுகிறேன். ஏனென்றால் ஏறத்தாழ 30 அல்லது 35 ஆண்டுகளாக பொதுப்பணியிலே ஈடுபட்டு ஏழை எளியவர்களுக்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருப்பவர் அவர். அவரைப் பாராட்டுவது தான் "உலகத்தினுடைய மாட்டு" என்று தக்கார்கள் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே தான் அதை வைத்து நான் அவரை வெகுவாகப் பாராட்டுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். அவர்களோடு நான் சற்று 5 அல்லது 10 நிமிடங்கள் பேசினால், கோபமே வரும். இருக்கின்ற வேலைகளை எல்லாம் விட்டு விட்டு இந்த ராஜகோபாலோடு பேசி நேரத்தை வீணடிக்கிறார்களே என்று சொல்லுவார்கள். விடியற்காலையிலே எத்தனையோ இடங்களுக்கு அவர் போக வேண்டியிருக்கும். இயக்கத்தினுடைய எல்லா வேலைகளையும் முடித்துவிட்டுப் போகவேண்டியிருக்கும். அதில் ஒரு 5 நிமிடங்களை வீணாக்க முடிவதில்லை. எதற்கு இதைச் சொல்கின்றேன் என்றால், அவ்வளவு துருதுருவென்று இருப்பார்கள். அந்தச் சின்ன





வயதிலிருந்தே 35 ஆண்டுகள் அவர்களுடைய வாழ்நாள் பூராவும் ஏழை எளியவர்களுக்காக உழைத்தமைக்காக தமிழ் நாட்டு மக்கள் எல்லோரும் பாராட்ட வேண்டியிருக்கின்றது. எனக்கு முன்னாலே அங்கத்தினர் திரு. இளம்பரிதி அவர்கள் பேசினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தை யாரும் அழித்துவிட முடியாது, கலைஞர் அவர்களை முதலமைச்சர் பதவியிலிருந்து வெளியிலே தள்ள முடியாது என்று சொன்னார்கள். உள்ளபடியே அதை நான் பாராட்டுகிறேன். அப்படிப் பாராட்டுவது மட்டும் அல்ல. இராமாயணத்திலே ஒரு கதையையும் சொல்ல விரும்புகிறேன். தலைவரவர்களே, இராமாயணம் தெரிந்த உங்கள் முன்னாலேயே கதை சொல்வது என்பது கொஞ்சம் கஷ்டம்தான். இருந்தாலும் பரவாயில்லை, கொஞ்சம் சமாளித்துக்கொள்கிறேன்.

__மாண்புமிகு மேலவைத் தலைவர் :__ நீங்கள் சொல்வது எனக்குத் தெரியாமலும் இருக்கலாம் அல்லவா? சொல்லுங்கள்.

__திரு. சி. வி. ராஜகோபால் :__ தலைவரவர்களே, இராமாயணத்தில் இராமன் அயோத்தியில் இருந்தார். இராவணன் தெற்கே இலங்கையில் இருந்தார். அந்த இராவணனை அழிப்பதற்கோ, ஒழிப்பதற்கோ மத்தியிலே இருந்த சுக்ரீவர்களை அழைத்துக்கொண்டு அவனை மாய்த்திருக்கின்றார்கள் என்று வரலாறு சொல்கிறது. மாய்த்திருந்தாலுங்கூட இராவணனுடைய பெயர் இன்னும் நாட்டிலே பரவலாக இருந்துகொண்டிருக்கின்றது. இராவணன் மிகச் சாதாரணமானவன் அல்ல. பெரிய கவியிலே, இசையிலே, தெய்வ பக்தியிலே, ஆற்றலிலே மிகச் சிறந்தவன்.

"தென்திசைப் பார்க்கின்றேன், என் சொல்வேன்,
சிந்தையெல்லாம், தோள்களெல்லாம்........

__மாண்புமிகு மேலவைத் தலைவர் :__ இராமாயணம் பாடுவதற்கு பாரதிதாசன் பாடலைப் பாடுகிறீர்கள்......

__திரு. சி.வி. ராஜகோபால் :__ ....என்று பாரதிதாசன் பாடியிருக்கின்றார்கள். நான் எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், வடபுலத்திலே இருக்கின்ற இராமன், இவ்வளவு பெரிய ஆற்றல் மிக்க ஒருவரை, வல்லவனை, தமிழ் இனத்தவனை, காவியங்களை எல்லாம் மிக அதிகமாக அறிந்த இராவணனையே அழித்திருக்கின்றபோது, இங்கு யாரை வேண்டுமானாலும் அழிக்கட்டும். நான் சொல்கிறேன் அவர் விட்டுச் செல்லும் எச்சம் இருக்கிறதே அவர்களுடைய கண்ணொளித் திட்டம், ரிக்ஷாகாரர்களுக்குத் திட்டம், ஊனமுற்றோர்க்கு திட்டம், லெப்ரசியில் துன்பப்படுவோருக்குத் திட்டம், இப்படிப்பட்ட காரியங்கள் இருக்கின்றதே, அவைகளுக்கு வாய் இருந்தால் ஒவ்வொரு காரியமும் பிறகு பேசப் போகிறது. இப்போது அவைகள் பேசவேண்டாம். யார் வேண்டுமானாலும் அழிக்கட்டும். அதைப்பற்றிக் கவலையில்லை. அழித்ததற்குப் பிறகு தமிழகமே பேசப்போகிறது.

இந்தத் திட்டத்தில் தமிழக மக்களுக்காக, தமிழ் இனத்திற்காக, வளர்ச்சிக்காக ஒதுக்கியிருக்கின்றார்கள். இந்த நேரத்தில் உள்ளபடியே நான் கேட்கிறேன். நண்பர் திரு. எ. பாலசுப்பிரமணியம் அவர்களைக்

கேட்கிறேன். எவ்வளவோ திரு காமராஜர் அவர்கள், திரு பக்தவத்சலம் அவர்கள் செய்தார்கள், முதலமைச்சராக இருந்த காலத்தில் செய்தார்கள் என்று சொல்கின்றார்கள். இந்த தமிழ் மக்களுக்கு நாடே கிடையாது, அவர்கள் பாறைகளில் கிடந்து பாறைகளிலே இருக்கிறபோது, இந்தத் தமிழ் நாட்டுக்கு, இந்த மண்ணிலே பிறந்தவர்களுக்கு ஒரு பெருமை வேண்டும் என்பதற்காக, இதை தமிழ் நாடு என்று ஆக்க வேண்டும், தமிழ் மக்கள் ஒரு கவளம் சோறு இல்லாமல் போனாலும், அவர்களுடைய மரியாதை உலகத்திலே காப்பாற்றப்படவேண்டும் என்று சொன்னார்கள்.

திரு. ஏ. பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு தலைவரவர்களே, திரு. காமராஜர் முதலமைச்சராக இருந்தபோதே தமிழர்கள் பெரிய பெரிய பொறுப்புகளிலே இருந்தார்கள். அதை தந்தை பெரியார் அவர்களே சொல்லியிருக்கின்றார்கள்.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, நான் ஜஸ்டிஸ் கட்சியிலே இருந்தேன். 40 ஆண்டுகளுக்கு முன்னாலேயே தமிழ் மகன் ஜட்ஜ் ஆக வேண்டும் என்று அவர்கள் எவ்வளவோ விகிதாசாரம் ஒதுக்கினார்கள். திரு காமராஜர் காலத்திற்கு முன்னாலேயே ஜஸ்டிஸ் கட்சியினர் செய்திருக்கின்றார்கள். அதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. ஜஸ்டிஸ் கட்சி ஆண்ட பிறகுதான் தமிழ் மகன் ஜட்ஜ் ஆனான், அமைச்சர் ஆனான். இது திரு. காமராஜர் காலத்திற்கு முன்னாலேயே இருந்திருக்கின்றது. ஆகவே அதுவல்ல பிரச்சினை. தமிழுக்காக ஒரு கோடி ரூபாய்

[பிற்பகல் 6-10]

ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், திரு காமராஜரும் இவ்வளவு செய்திருக்கலாம், ஆனால் இந்தத் தமிழ் நாட்டுக்கு தமிழ் நாடு என்ற பெயரை வைக்கவேண்டுமென்ற எண்ணம் அந்தப் பெரிய மனிதருக்கு இருக்க வேண்டுமே? இருந்ததா? தமிழ் மகனே, உனக்கு என்று உரிமையோடு சொல்வதற்கு ஒரு நாடு, அது தமிழ்நாடு என்று இருக்க வேண்டாமா?

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, காங்கிரஸ் கட்சியில் ஆட்சி இருக்கும்பொழுதே தமிழில தமிழ் நாடு என்றும் இங்கிலீஷிலே மெட்ராஸ் ஸ்டேட் என்றும் இருநதது. தமிழிலே தமிழ் நாடு என்றும் ஆங்கிலத்திலே மெட்ராஸ் ஸ்டேட் என்றும் பெயரிட்டு தீர்மானம் கூட போட்டோம். இப்பொழுது திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் இங்கிலீஷிலேயும் தமிழ் நாடு என்று போட்டதே யொழிய தமிழ் நாடு என்பது தமிழ் ரெக்கார்ட் பூராவிலுமே காணப்படுகிறது. ரெசல்யூசன்கூட பாஸ் பண்ணியிருக்கிறோம். அப்பொழுதே தமிழ் நாடு என்று பெயர் இருந்தது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பாராளுமன்றத்திலே இதை தமிழ் நாடு என்று ஏற்றுக்கொண்டு தீர்மானம நிறைவேற்றுவது கழக ஆட்சி வந்த பிறகுதான் செய்யப்பட்டது.





திரு கே. ராஜாராம் : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தை நான் ஒத்துக்கொள்கிறேன். இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில், தமிழ் நாட்டை, தமிழ் நாடு என்று தான் சொல்ல வேண்டுமென்ற தீர்மானம் போட்டதே காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தான் என்பதை மாண்புமிகு அங்கத்தினருக்குத் தெரிவித்துக கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர்வர்களே, வெளி மாநிலத்தவர்களால் இது மதராஸ், சென்னை ராஜ்யம் என்று தான் அழைக்கப்பட்டது. இன்னும் சொல்லப்போனால் டில்லியிலே இப்பொழுது தமிழ் நாடு இல்லம் என்று அழைக்கப்படுகின்ற இல்லம் அன்றைக்கு மதராஸ் இல்லம் என்று தான் அழைக்கப்பட்டது. ஆகவே வெளி உலகத்திலே இது தமிழ் நாடு என்று ஆக வேண்டும் என்பதற்காகத் தான் நாம் பாடுபட்டோம். அரசியல் சட்டத்திலேயே இது தமிழ் நாடு என்று மாற்றப்பட வேண்டுமென்கின்ற அளவுக்கு நாடாளுமன்றத்திலே தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

திரு கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவரவர்களே, காங்கிரஸ் ஆட்சியிலே தமிழுக்காக ஒன்றுமே செய்யவில்லை என்று மட்டும் சொல்ல வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, செய்யவில்லை என்று சொல்லவில்லை. செய்து கூட இருக்கலாம். ஆனால் தீர்மானமிட்டு உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் அறியும்படியும், அகில உலகம் அறியும்படியும் செய்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு தான். உள்ளபடியே காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தமிழ் உணர்வு இருந்திருந்தால், அன்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு சங்கரலிங்கம் தமிழுக்காக, தமிழ் நாட்டுக்காக தன்னுடைய உயிரை மாய்த்துக்கொண்டிருக்க மாட்டாரே. அவர் உயிரைப் போக்கிக்கொண்டதிலிருந்து தெரிய வேண்டாமா அன்றைக்கு இருந்த ஆட்சிக்கு. திரு காமராஜர் அதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. முயற்சி எடுத்திருந்தால், திரு சங்கரலிங்கத்தினுடைய உயிராவது மீண்டிருக்குமே. ஏன் மீளவில்லை ? இப்படி தமிழுக்காக தன் உயிரை விட்டவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள் என்பதை இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட தமிழின் வளர்ச்சிக்காக, தமிழின் பெருமை உயர்வதற்காக, தமிழின் புலமைக்குப் பெருமை ஏற்படுவதற்காக தமிழ் அகராதிகள் அத்தனையையும், சங்க இலக்கியங்களையும் எடுத்து எழுதுவதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

விவசாயத் துறையைப்பற்றி திரு கணபதி அவர்கள் பேசுகிறபோது விலைகள் எல்லாம் ஏறிக்கொண்டிருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். இப்படி ஏறிக்கொண்டயிருக்கிறபொழுது, அலுவலகத்தில் வேலை செய்பவர்கள் எல்லாம் தங்களுக்கு கிராக்கிப்படி வேண்டும் என்கிறார்கள். இப்படி விலைவாசிகள் ஏறிக்கொண்டேயிருக்க, அலுவலர்கள் கிராக்கிப்படியை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்க, அரசாங்கமும் கிராக்கிப் படியை உயர்த்திக்கொண்டிருக்க, இப்படியே விஷச் சக்கரம் போல் சுற்றிக்கொண்டிருக்கிறது என்று சொன்னார் நண்பர் திரு கணபதி.

[திரு. சி. வி. ராஜகோபால்] [1975 மார்ச் 7

அதைப்பற்றி எனக்கு முன்னாலே பேசிய பல நண்பர்கள் மிக அழகாக எடுத்துச் சொன்னார்கள். நண்பர் திரு பாலசுப்பிரமணியம் கூட மிக அழகாகச் சொன்னார்கள். விலைவாசியைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரம் அனைத்தும் மத்திய சர்க்காரிடம் இருக்கும்பொழுது, இங்கே மாநில சர்க்கார் எவ்வளவுதான் திட்டங்கள் தீட்டினாலும், நல்ல காரியங்கள் செய்தாலும், விலைவாசிகளை எப்படி எங்களாலே தடுத்து நிறுத்த முடியும் என்று சொன்னார்கள். மத்திய சர்க்காரின் செயலால் மாநில சர்க்கார் பழி பாவத்துக்கு ஆளாகிறார்கள். அரிசியைக் குறைந்த விலைக்குப் போட வேண்டுமென்று அன்றைக்கு நாங்கள் சொன்னோம். இப்பொழுது கூட எங்களாலே படி அரிசி ஒரு ரூபாய்க்கு நிச்சயமாகப்போட முடியும். அரிசி உற்பத்தியை 73 லட்சம் டன் ஆக்க முடியும் என்பதை நாங்கள் நிரூபித்துக் காட்டியிருக்கிறோம். ஆனால் இப்பொழுது இருக்கும் நிலைமை என்ன என்பது உங்களுக்கே தெரியும். நெஞ்சிலே கை வைத்துப் பார்த்தால் தெரியும். அன்றைக்கு உரம் என்ன விலைக்கு விற்றது? யூரியா அன்றைக்கு 25 ரூபாய் 30 ரூபாய் என்று விற்கும்போது நாங்கள் ஒரு படி அரிசி ஒரு ரூபாய் என்று போட்டோம். ஆனால் இன்றைய உரத்தின் விலை என்ன? 25 ரூபாய், 30 ரூபாய் என்று விலை விற்ற உரம் இன்று 105, 110 ரூபாய் என்று ஏறியிருக்கிறதே. இப்படி விலைகளை எல்லாமே ஏற்றிக்கொண்டு வருவது மத்திய அரசுதான் என்பது உங்களுக்கே தெரியுமே, இப்படி உயர்ந்த விலைக்கு உரம் வாங்கிப்போட்டு கஷ்டப்பட்டு உற்பத்தி செய்யும் ஒரு விவசாயியை வேண்டுமானால் கேட்டுப் பாருங்கள். எவ்வளவு விலை உயர்வுக்கிடையே, எவ்வளவு பணச் செலவுக் கிடையே, நெல்லை உற்பத்தி செய்கிறார்கள். ஆகவே இந்த விஷச் சக்கரம் போன்ற விலைவாசி ஏற்றத்தை நிறுத்த வேண்டுமானால், நிச்சயமாக மாநில அரசாங்கம் எவ்வளவு தான் திட்டங்கள் போட்டாலும் அது முடியாத காரியம். அதை நிறுத்த வேண்டிய இடம் அங்கே தான். அவ்வாறு அவர்கள் நிறுத்த மாட்டார்கள், நிறுத்தப்போவதுமில்லை. அதை நிறுத்தத்தான் "மாநில சுயாட்சி" என்ற அதிகாரத்தைக் கேட்கிறோம். அது நமக்கு வேண்டும். விலைவாசிகள் ஏறிக்கொண்டு போவதற்கு முழுப் பொறுப்பும் மத்திய அரசுதான் என்பதற்கு ஒரு உதாரணத்தை நான் இத்தருணத்தில் சொல்ல விரும்புகிறேன். ஒரு வாரத்திற்கு முன்னாலே ஒரு பேல் நூல் விலை 1,000 ரூபாய். 15 நாட்களுக்கு முன்பு ஒரு முறை விலை ஏறிற்று. மறுபடியும் 15 நாட்களுக்குப் பிறகு 1,000 ரூபாய் விலை ஏறியிருக்கிறது. ஒரு பேலுக்கு ஆயிரம் ரூபாய் வித்தியாசம் என்றால், எவ்வளவு தூரம் விலை ஏறியிருக்கிறது என்பதைச் சற்று யோசித்துப் பாருங்கள். ஆயிரக் கணக்கான ரூபாய் வித்தியாசம் ஒரு சாதாரண பேலில் இருந்தால், விலைவாசியினுடைய கொடுமையால் தடுமாற்றமடைந்து, பாதிக்கப்பட்டுள்ள நெசவு மகனைக் காப்பாற்ற வேண்டுமென்று மாநில அரசு எண்ணுகின்ற போது அவனுடைய குமுறலுக்கு, வேதனைக்கு ஆட்பட வேண்டிய நிர்பந்தமும் இருக்கின்ற காரணத்தினால் தான் "மாநில சுயாட்சி" வேண்டுமென்று கேட்கிறோமேயொழிய பிரதமர் இந்திரா காந்தி இருக்கின்ற இடத்தில் நாங்கள் போய் உட்கார்ந்து நாட்டை ஆள வேண்டுமென்ற எண்ணம் எங்கள் யாருக்கும் இல்லை. நாட்டு மக்களைக் காப்பாற்றியாக வேண்டுமே, காப்பாற்றுவதற்கு வழிவகை செய்தாக வேண்டுமே என்பதற்காகத்தான் இவ்வளவு எல்லாம் நாம் செய்து வருகிறோம்.



1975 மார்ச் 7] [திரு. சி. வி. ராஜகோபால்]

அடுத்தபடி, மீனவர்களுடைய நிலைமை பற்றி ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். எந்தக் காலத்திலே மீனவர்களுக்கு நல்லது செய்திருக்கிறார்கள்? திரு. பக்தவத்சலம் இருந்தார்கள், திரு காமராஜ் இருந்தார்கள், இவர்களுடைய சிந்தனையில் எல்லாம் ஏறியிருக்க வேண்டாமா? ஏழை மீனவன் அவனுக்கு வீடு கூட இல்லை, ஏழை அரிஜன், வீடற்ற ஏழை, அவஸ்தைப்படுகிறான்—இதெல்லாம் ஆட்சியில் இருந்த அவர்களுக்கு அப்பொழுது ஏறியிருக்க வேண்டாமா? இதெல்லாம் அப்பொழுது அவர்களுக்கு ஏறவில்லை என்பதற்காகத்தான் நான் இப்பொழுது சொன்னேனேயொழிய வேறல்ல.

திரு கே. ராஜாராம்: தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழக அரசு நிறையச் செய்திருக்கிறது. செய்யவில்லை என்று நான் சொல்ல வரவில்லை. அதற்காக முந்தின சர்க்கார் ஒன்றுமே செய்யவில்லை என்று மட்டும் பேச வேண்டாம். மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை முதன் முதலாக அமுலுக்குக் கொண்டுவந்ததே காங்கிரஸ் அரசாங்கம் தான் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அந்தக் காலத்தில் தான் மீனவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை ஆரம்பித்தோம். ஆனால் அரசாங்கம் அதோடு மாறி விட்டது. தொடர்ந்து நடத்தி திராவிட முன்னேற்றக் கழக அரசு இப்பொழுது ஏராளமான வீடுகள் கட்டியிருக்கிறது. ஆகையினாலே முந்திய அரசாங்கம் ஒன்றுமே பண்ணவில்லை என்று சொல்ல வேண்டாம்.

திரு சி. வி. ராஜகோபால்: தலைவர் அவர்களே, சிலது, சில நேரத்தில் நம்முடைய உணர்வில் வர வேண்டுமென்பதற்காகத்தான், நம்முடைய நெஞ்சத்தில் வர வேண்டுமென்பதற்காகத்தான், ஏழை எளியவர்கள், சாதாரண மக்கள் உள்ளத்திலே ஏற வேண்டுமென்பதற்காகத்தான் நான் சொன்னேனேயொழிய மற்றப்படி வேறு எதற்காகவும் அல்ல. அவர்கள் செய்திருக்கக்கூடும்.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, கடற்கரை ஓரமாக காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் மீனவர்களுக்கு வீடுகள் கட்டப்பட்டுள்ளன என்பதை உறுப்பினர் அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, கடற்கரை ஓரமாகக் கட்டப்பட்டுள்ள வீட்டுக்குப் பக்கத்தில் நாங்களும் போய் உட்கார்ந்திருக்கிறோம், காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில். சென்னையில் மட்டும் ஏதோ இரண்டொரு இடங்களில் அந்த மாதிரிக் கட்டியிருந்தார்கள். ஆனால், அதற்குள்ளே மீனவர்கள் போனார்களா இல்லையா என்பது பற்றி எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. மீனவர்கள் பெயரால் இரண்டொரு கட்டிடங்கள் இருந்தன. அப்பொழுது யார் யாருக்கோ இருந்ததே. (மணியடிக்கப்பட்டது.)

*திரு. ஜார்ஜ் கோமகன்: தலைவரவர்களே, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே மீனவர்களுக்கு வீடு கட்டித் தரப்பட்டது என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், அந்த

வீடுகளில் மீனவர்கள் குடியேறவில்லை என்பதை எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்ததை ஒப்புக்கொள்கிறார்களா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, நான் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே எதுவுமே செய்யவில்லையென்று சொல்லவில்லையே. மக்களிடத்திலிருந்து வரியை வாங்கிய பிறகு செய்திருக்க வேண்டுமே. அதையா நான் மறுக்கிறேன்? செய்தார்கள். ஆனால் செய்ய வேண்டிய அளவுக்குச் செய்யவில்லை, யாருக்குச் செய்ய வேண்டும் என்பதையும் எண்ணிச் செய்யவில்லை.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, அப்பொழுது அரசாங்கத்தின் மொத்த வருமானம் 100 கோடி ரூபாய் என்பதை மறக்கக்கூடாது. இப்பொழுது அரசாங்கத்தின் மொத்த வருமானம் ரூபாய் 504 கோடி. அந்த 100 கோடி ரூபாயை வைத்து நாங்கள் அவ்வளவு செய்திருக்கிறோம். இப்பொழுது 504 கோடி ரூபாய் வருமானம் என்பதையும் மறந்திட வேண்டாம்.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, அப்பொழுது வருமானம் 100 கோடி ரூபாய்தான். ஆனால், 100 கோடி ரூபாய் வருவாய் வந்த காலத்தில் ரூபாய்க்கு 8 படி அரிசி விற்றது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அப்பொழுது சர்க்கரை 10 அணா விற்றது. இப்பொழுது கிலோ 4½ ரூபாய். மிளகாய் 9 அணாவுக்கு விற்றது. அப்பொழுதைய நிலையில் 100 கோடி ரூபாய் என்பது மிகச் சாதாரணமானது அல்ல. ஆகவே, 100 கோடி ரூபாயை இப்பொழுது இருக்கும் ரூபாய் மதிப்பில் கணக்கிட்டுப்பார்த்தால் நமக்கு 504 கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் இருந்தால்தான் நல்ல நல்ல திட்டங்களை நிறைவேற்ற முடியும்.

அடுத்தபடி, கைத்தறி நெசவாளர் பெருங்குடி மக்களைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நெசவாளர் பெருங்குடி மக்களை நாம் எப்படி எப்படிக் காப்பாற்றியிருக்கிறோம் என்பது பற்றி இந்த அவையில் இருக்கும் அனைவருக்கும் தெரியும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, நானும் இந்த அவையிலே கடந்த 6 வருடங்களாக இருக்கிறேன். இவ்வளவு ஆண்டுகளாக இல்லாமல் திடீரென்று தமிழ் நாடு காங்கிரசை நமது மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்த்துப் பேசிக் கொண்டே வருகிறார்கள். அதற்கு ஏதாவது காரணம் உண்டா? தனிப்பட்ட காரணமா, இல்லை அரசியல் காரணமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.





திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எனக்கு ரொம்ப நாளாக வேண்டியவர்கள் என்பதை என்னுடைய அருமை நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நான் ராஜாஜி அவர்களுக்குக் கறுப்புக் கொடி காட்டிய நேரத்திலிருந்து அவர் பக்கத்தில் இருந்தவர். அவர் நீண்ட நாள் வாழ்க. அவர் கட்சி ஆட்சியில் இருந்தபோது நடந்ததைச் சொல்லுகின்றபொழுது அவராகத்தான் தர்க்கத்துக்கு வந்தார், வேறொன்றுமில்லை.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, கறுப்புக் கொடி காட்டியது 1952-ல்.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, ஆகவே அப்படிப் பட்ட உறவுள்ள எங்களுக்கிடையே, கொள்கைகளைச் சொல்கின்ற பொழுது சில நேரங்களில் உடன்பாடு இருக்கிறது, சில நேரம் இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இப்படிக் கேட்ட காரணத்தினால், மதிப்பிற்குரிய ராஜாஜி அவர்களை எதிர்த்துப் பேசுவார் என்று தெரிந்திருந்தால், அந்தக் கேள்வியையே நான் கேட்டிருக்கமாட்டேன்.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, ராஜாஜி அவர்களை எதிர்த்துப் பேச வேண்டுமென்பதற்காக அல்ல. அவ்வளவு பெரிய நிபுணர்கள், அவ்வளவு பெரிய மேதாவிகளோடு நான் 5 நிமிடங்கள் பேசும் நேரங்களிலே ரகளை செய்திருக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களிடம் ரகளை செய்திருக்கிறேன். டாக்டர் கலைஞர் அவர்களிடமும் ரகளை செய்திருக்கிறேன். அது ஒரு இயல்பான சுபாவம். வாடிக்கையாக 40 வருடங்களாக வந்த கூற்று. ஆகவே நான் ஏதாவது காரணத்துடனோ காரணம் இல்லாமலோ சொல்லுவேன் என்பதை அவர்களும் சொல்லுவார்கள். காரணம் இல்லாமல் எதையாவது ஒன்றைச் சொல்ல வேண்டும். (மணியடிக்கப்பட்டது.)

(பிற்பகல் 6-20)

கைத்தறி நெசவாளர்கள் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் கைத்தறித் துணி விற்காமல் வறுமையில் வாடி, வேலையில்லாமல் சேலம் முதலிய மாவட்டங்களுக்கு நாடோடிகளாகச் சென்று அங்கே இருக்கிற மண்ணைக் கொத்திய காலங்களில், அந்த நெசவாளர்கள் பக்கம் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இருந்தார்கள். எனவே, நெசவாளர்களுடைய கஷ்டத்தை உணர்ந்த காரணத்தால், கூட்டுறவு சங்கத்திலே இருக்கும் நெசவாளர்களுக்கு உதவ முன்வந்திருக்கிறது எங்கள் அரசு. நெசவாளர்களுக்குத் திடீரென்று ஆபத்து வரும். ஏதாவது சாவு வரும். அப்பொழுது அவர்கள் 100 ரூபாய், 200 ரூபாய்க்கு அலையாய் அலைவார்கள். அப்படி அல்லற்படும் நெசவாளர்களைப் பார்த்துத் தான் அவர்

களுக்கு ஒரு அருமையான திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஒரு நெசவாளர் மாதம் ஒன்றுக்கு 6 ரூபாய் கட்டினால் அந்த 6 ரூபாயுடன் மேலும் ஒரு 3 ரூபாய் தருகிறோம் என்ற திட்டத்தை வகுத்து, 55 வயதிற்குள்ள நெசவாளர்கள் 2,000 ரூபாய் கட்டினால், சர்க்கார் 2,000 ரூபாய் போட்டுக் கொடுக்கிறார்கள். இடையிலே உயிர் போய்விட்டால், கட்டி 6 மாதம் ஆகியிருந்தால், 4,500 ரூபாய் கொடுக்கிறார்கள். 6 மாதத்திற்கு 36 ரூபாய் கட்டியிருப்பார். அவருக்கு 4,500 ரூபாய். இப்படிப் பட்ட திட்டங்களையெல்லாம் நாம் செய்து வருகிறோம். டாக்டர் கலைஞர் அவர்களுடைய எண்ணம், நான் முதலிலேயே சொன்ன மாதிரி, என்றென்றும் ஏழைகள்பால் இருக்கிறது. அவரைப் பெருந்தகை என்றுகூடச் சொல்லலாம். அந்தப் பெருந்தகைக்கு இந்த அவையின் சார்பிலே, நல்லவர்களெல்லாம் நீங்கள் பாராட்டியிருக்கிறபோது, என்னுடைய பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன், வணக்கம்.

* திரு. ஆ. தங்கவேல் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, 1975–76-வது ஆண்டின் சிறந்ததொரு நிதிநிலை அறிக்கையை நம்முடைய முதல்வர் அவர்கள் தந்ததற்காக நான் அவரைப் பாராட்டி, மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆஸ்யமாக நல்ல கருத்துக்களையெல்லாம் எடுத்துரைத்தார்கள். நம்முடைய முதல்வர் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் தயாரிக்கின்ற நிதிநிலை அறிக்கை, ஒன்றையொன்று மிஞ்சுகின்ற வகையிலேதான் அமைந்திருக்கிறதே தவிர, இது குறைந்தது, அது மேலானது என்று சொல்வதற்கில்லாமல் ஏழை எளிய மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் நல்வாழ்வுக்கான நல்ல சிறந்த திட்டங்களை அறிவிக்கக்கூடிய அளவுக்கு நல்ல நிதிநிலை அறிக்கையைக் கொடுத்துக் கொண்டே வருகிறார்கள். பத்திரிகையாளர்களில் நேர்மையானவர்களெல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டியிருக்கின்றார்கள். இந்த நிதிநிலை அறிக்கை மிகக் கஷ்டமான, நெருக்கடியான காலத்தில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அநேகம்பேர் எதிர்பார்த்தார்கள். மதுவிலக்கு இழப்பினாலே ஏற்பட்ட நஷ்டம், குதிரைப் பந்தய ஒழிப்பினாலே ஏற்பட்ட நஷ்டம், வறட்சிப் பணிக்காக 55 கோடி ரூபாய்க்கான திட்டம், இப்படியெல்லாம் அதிகமான செலவு வந்திருக்கிறபோது இந்த நிதிநிலை அறிக்கையிலே அதிகமான வரிகளை விதிப்பார்கள், நல்ல நிதிநிலை அறிக்கையை தயார் செய்ய முடியாது என்கிற மாதிரியெல்லாம் முன்கூட்டியே நினைத்துக் கொண்டிருந்தார்கள். அந்த நிலைமையெல்லாம் மாறி, கஷ்டங்களையெல்லாம் போக்குகின்ற வகையில் இந்தக் கடுமையான வறட்சியிலும் தென்றல் வீசுகின்றமாதிரி இன்றைய தினம் இந்த நிதி நிலை அறிக்கையைக் கொடுத்திருப்பது, உள்ளபடியே வரவேற்கத் தகுந்தது. இது ஒரு பாராட்டப்படக்கூடிய நிதிநிலை அறிக்கையாகும். இந்த மாதிரி நிதி நிலை அறிக்கையை நமது முதல்வரைத் தவிர வேறு யாராலுமே கொடுக்க





முடியுமா என்று சந்தேகப்படும்படியான அளவுக்கு இந்த நிதிநிலை அறிக்கை அவ்வளவு சிறப்பு வாய்ந்ததாக, மேன்மை உள்ளதாக சமுதாயத்தின் அடிமட்டத்திலே உள்ள மக்களின் வாழ்வுக்காகத் தயாரிக்கப்பட்டது என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படக்கூடியதாகும்.

இப்பொழுது இந்த நிதிநிலை அறிக்கையில் நல்ல பல திட்டங்களையெல்லாம் அறிவித்திருக்கிறார்கள். தமிழகத்திலேயே விவசாயத்திற்கு அடுத்தபடியாக கைத்தறி நெசவு உள்ளது. அந்தக் கைத்தறி நெசவாளர்கள் கண்கலங்கக்கூடாது என்பதற்காக எல்லோருக்குமே பிற்கால சேமிப்பு நிதி என்று அறிவித்திருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்கள் மிகவும் சங்கடமான நிலையிலே உள்ளார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் அவர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தபோது, ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி அவர்களுக்கெல்லாம் கொடுத்து நமது முதல்வர் அவர்கள் பிற்கால வாழ்வுக்கு சேமிப்புத் திட்டம் என்ற பெயரிலே, அவர்கள் வாழ்வு வளமாவதற்கு வேண்டிய திட்டத்தையும் அறிவித்திருக்கிறார்கள்.

மீனவ மக்களுக்காக 5,000 வீடுகள் கட்டித் தர திட்டமிடப்பட்டிருக்கிறது. கடலோரப் பகுதியிலே காற்றிலும் மழையிலும் குளிரிலும் தத்தளித்துக் கொண்டிருக்கக் கூடிய மக்களுக்கு, அதிலும் குறிப்பாக அநேக தடவை புயல் காற்றில் மிகவும் கொடுமையான நிலையை அனுபவித்து வந்த மக்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதுவரையிலும் இந்தியாவிலேயே முதன் முறையாக நம்முடைய அரசுதான் மீனவர்களுக்கு வீடு கட்டித் தருகின்ற திட்டத்தை அறிவித்திருக்கிறது.

திக்கற்ற இளைஞர்கள், சிறார்கள், அனாதையாக உள்ள கைம்பெண்கள் ஆகியோருடைய பாதுகாப்பிற்காக திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசியவர்கள் சொன்னதைப் போல, நாட்டிலே கீழ்மட்டத்திலே, அடிமட்டத்திலே உள்ள ஏழைகள், பாதுகாக்கப்படாமல் இருக்கக்கூடியவர்கள், யார் கண்களுக்கும் புலப்படாதவர்கள், அப்படிப்பட்டவர்களையெல்லாம் தேடிப்பார்த்து, அவர்களுக்கெல்லாம் ஆதரவு அளிக்கின்ற வகையிலேதான் கலைஞர் அவர்களுடைய திட்டம் இதுவரையிலும் இருந்துகொண்டு வருகிறது. அந்த வகையிலேதான் திக்கற்ற சிறார்களையும், ஆதரவற்ற விதவைகளையும் வாழவைக்கின்ற திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தை அரசாங்க அலுவலர்களுக்கு அறிவித்திருந்த நேரத்தில், கிராமத்திலே இருந்த மணியம், கணக்குப்பிள்ளை, தோட்டி, தலையாரி போன்றவர்களெல்லாம், எங்களுக்கு இல்லையே என்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கும் பிற்கால பாதுகாப்புக்காக, 55 வயதிற்கு உட்பட்ட கிராம அலுவலர்களுக்கும் குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தை இந்த ஆண்டு இந்த நிதி நிலை அறிக்கையிலே அளித்திருப்பது கிராமத்திலே உள்ள கிராமத் தலைவர்களுக்கும், கர்ணம், தோட்டி, தலையாரி முதலியவர்களுக்கும் மிக மிக ஆறுதல் அளிக்கக்கூடிய நல்ல சிறந்த திட்டமாகும். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சித் துறை ஊழியர்கள் இவர்களுக்கெல்லாம் அகவிலைப்படி வழங்க 24·5 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. பென்ஷன்தாரர்கள், எங்களுக்குப் போதவில்லையே என்று சங்கடப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்

கும் 5 ரூபாய் பென்ஷன் தொகையை உயர்த்தியிருக்கிறார்கள். இரண்டாயிரம் ஆசிரியர்களை புதிதாக நியமனம் செய்வதற்கும், ஆசிரியர் சமுதாயத்தை உயர்த்துவதற்கும் திட்டம் இங்கே அறிவித்திருக்கிறார்கள்.

தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு 20 புதிய இல்லங்கள் கட்டுவதற்காக திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் 20 இல்லங்கள் கட்டுவதற்குத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்கள் பல இடங்களிலே பேசிக்கொள்வார்கள், வாழ்கின்றபோது எவ்வளவு இருந்தாலுங்கூட, நாங்கள் கடைசியிலே சாகிறபோது சுடுகாட்டிற்குப் போகக்கூட பாதை இல்லையே, அரசாங்கம் என்ன செய்தும் பலன் என்ன என்று ஏங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில், தாழ்த்தப்பட்ட மக்கள் வாழக்கூடிய 6,800 பகுதிகளுக்கு குடியிருப்பிலிருந்து இடுகாட்டிற்குச் செல்வதற்கு, பாதை வசதியையும் அமைப்பதற்காக இந்த நிதி நிலை அறிக்கையிலே திட்டம் போடப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 6-30)

நகர ஈட்டுப் படி, சேலம், திருச்சி ஆகிய நகரங்களில் உள்ள அரசு அலுவலர்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டுவதற்குக் கடன் தொகை வழங்குவதற்கு இதுவரையில் 75 இலட்சம் ரூபாய் இருந்தது, இரண்டு மடங்கு ஆக்கப்பட்டு $1\frac{1}{2}$ கோடி ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது உள்ளபடியே அரசாங்கத்தில் பணி புரிகின்ற அலுவலர்கள் அத்தனை பேருக்கும் மகிழ்ச்சி தரக்கூடிய ஒன்றாகும். மற்றும் நீர்ப்பாசனம், கல்வி, சுகாதாரம் என்று ஒவ்வொன்றாகச் சொல்லிக்கொண்டே போனால் நேரமாகிவிடும். எல்லாவற்றிலும் முன்னேற்றம் காணுவதற்கு முதலமைச்சர் இந்தத் திட்டத்தில் வழி வகை செய்திருக்கின்றார். தமிழ் உணர்ச்சியைக் காட்டிக் கொள்கின்ற வகையில், அவர் உள்ளத்தில் நீர் ஊற்று போல் தமிழ் உணர்ச்சி ஓடிக்கொண்டிருப்பதைக் காட்டுவது போல், தமிழ் வளர்ச்சிக்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செய்கின்றபோது—மக்களுக்கு என்ன செய்ய வேண்டும், எப்பொழுது செய்யவேண்டும் என்று தெரிந்து செய்யும்பொழுது சில நேரத்தில் எதையும் செய்ய முடியாத அளவுக்குக் கைகள் கட்டப்பட்டு, கிராமப் பஞ்சாயத்துக்களுக்கிருக்கின்ற அதிகாரங்களைப் போன்று நம்முடைய மாநில அரசுக்கு அதிகாரங்கள் இருக்கின்றன என்பதால், அவை போதாது, இன்னும் தேவைப்படுகின்றன என்ற அளவில்தான் மாநில சுயாட்சி கோரப்படுகிறது. மாநில சுயாட்சி இருந்தால்தான் மேலும் பல நல்ல திட்டங்களை நிறைவேற்றலாம். எதற்கெடுத்தாலும் டெல்லிக்குப் போய்த் தீரவேண்டிய நிலைமை இருக்கிறதென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் கடைசியாகச் சொல்லிவிட்டுச் சென்ற நல்ல கொள்கையை இன்றைய தினம் வலியுறுத்தி வருகிறார்கள். சிலர் அண்ணா அவர்கள் மாநில சுயாட்சி வேண்டுமென்று சொன்னாரா என்று பிரச்சினையைத் திசை திருப்பி விடுகிறார்கள். இது மிகவும் வருந்தத்தக்குரியது. அவர்கள் கொடியிலும் அண்ணா உருவத்தை வைத்துக் கொண்டார்கள். பெயரிலும் அண்ணாவை வைத்துக் கொண்டார்கள்.





ஆனால் ஏன் அவர்கள் அண்ணா சொன்ன கொள்கையை மாற்றுவதற்காக அண்ணா சொல்லவே இல்லை என்று கூறி வருகிறார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை. அவர்களுடைய கட்சி மாநிலக்கட்சியாக இருந்தது, இப்பொழுது சில காலமாக அகில இந்தியக் கட்சியாக மாற்றப்பட்டிருக்கிறது. அகில இந்தியக் கட்சியாக மாறின பிறகு அவர்களுக்கு, இந்த மாநிலத்தைப்பற்றி..........

திரு. வி. வெங்கா: தலைவரவர்களே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மாநிலக் கட்சிதான், அதை அகில இந்தியக் கட்சி என்று யாரும் சொல்லவில்லை என்பதை தங்கள் மூலமாக உறுப்பினர் திரு. தங்கவேல் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ஆ. தங்கவேல்: நண்பர் திரு. வெங்கா இப்பொழுது தான் புதிதாக அங்கே சென்றிருக்கிறார், ஆகையினாலும் அவருக்கு அது விஷயம் தெரியவில்லை என்று நினைக்கிறேன். நீண்ட நாட்களுக்கு முன்னாலேயே அவர் அகில இந்தியக் கட்சி என்று அறிவித்த அன்றையதினமே, அது மாநில சுயாட்சிக் கொள்கைக்கு முரண்பட்டதாக இருக்கின்றது என்ற காரணத்தினால், நான் உடனடியாகத் திரும்பவந்துவிட்டேன் என்பதை நண்பர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: போவதற்கு முன்னால் தெரியவில்லையா? போன பிறகுதான் திரும்பி வரவேண்டுமென்று தோன்றியதோ?

திரு. ஆ. தங்கவேல்: தலைவரவர்களே, நான் அதையெல்லாம் இங்கே எடுத்துச் சொல்வதற்கு நேரமில்லை. நான் முன்பே சொன்னேன், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அந்தப் பெயரை வைத்துக் கொண்டிருப்பதும், அவர்களது கொடியில் அண்ணா உருவத்தைப் போடுவதும், அதிலே உள்ளவர்களையும் பொதுமக்களையும் ஏமாற்றுவதற்கே. நான் வீட்டிலேயே இரண்டு ஆண்டுகளாக என்னுடைய சொந்த தொழிலை கவனித்துக்கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் இந்தப் பெயரைப் பார்த்து, அந்தக் கொடியைப் பார்த்து அங்கே வலிய இழுத்துக் செல்லப்பட்டேனே தவிர, தலைவர் உட்பட...........

மாண்புமிகு மேலவைத் தலைவர்: தலைவர் என்று இங்கு குறிப்பிட்டால், நான்தான் இருக்கிறேன், என்னைத்தான் குறிக்கும்.

திரு. ஆ. தங்கவேல்: அந்தக் கட்சியின் தலைவர் வலிய இழுத்தாரே தவிர நானாகச் செல்லவில்லை. நான் இரண்டு ஆண்டுக்காலமாக எனது சொந்தத் தொழிலைக் கவனித்துக்கொண்டிருந்தவன்.

திரு. வி. வெங்கா: தலைவரவர்களே, ஒரு கட்சியினுடைய கொள்கைகளைப் புரிந்துகொண்டுதான் அந்தக் கட்சிக்குச் செல்ல வேண்டுமே தவிர, வலிய இழுத்தார்களா என்பது பிரச்சினையாகாது. அவர் எதற்காகச் சென்றார், எதற்காகத் திரும்பி வந்தார் என்பது உலகுக்குப்

[திரு. வி. வெங்கா] [1975 மார்ச் 7

புரியும். · கொள்கை புரிந்து செல்வதுதான் நியாயம் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. ஆ. தங்கவேல்: தலைவரவர்களே, அந்தக் கட்சியின் கொள்கை என்னவென்பதை, நண்பர், திரு. வெங்கா அவர்கள் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொளளுகிறேன்.

திரு. வி. வெங்கா: தலைவரவர்களே, அதை வெளியிடவேண்டிய நேரத்தில் வெளியிடுகிறேன் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. ஆ. தங்கவேல்: தலைவரவர்களே, இப்பொழுதும், எப்பொழுதும், அந்தக் கட்சியில் இந்த நிலைமைதான்.

*திரு. ஜார்ஜ் கோமகன்: தலைவரவர்களே, உறுப்பினர் திரு. தங்கவேல் நம்முடைய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்திற்கு வலிய இழுத்துச் சென்றார்கள் என்று குறிப்பிட்டார், உறுப்பினர் திரு. வெங்கா பேசுகிறபோது கொள்கையைப் புரிந்துதான் செல்வார்கள், அப்படித் தானே சென்றிருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். உடனடியாக திரு. வெங்கா அவர்கள் அவர் கட்சியின் கொள்கையை விளக்க வேண்டுமென்று தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்...

திரு. வி. வெங்கா: தலைவரவர்களே, நான் "வலிய இழுத்து" என்று சொல்லுவது தவறு, தானே போனார் என்று சொன்னேன், வேறு அல்ல.

திரு. ஆ. தங்கவேல் : தலைவரவர்களே, அவருடைய தலைவர் அதை அகில இந்தியக் கட்சி என்று சொன்ன பிறகு மாநில சுயாட்சியை எப்படி ஒத்துக்கொள்ளுவார் ? திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுடைய கட்சியோடு இருக்கின்றபோது, எப்படி மாநில சுயாட்சி கேட்க முடியும்? பிரதம மந்திரி அவர்கள் நேற்றைய முன் தினம் பார்லிமெண்டில் பேசுகிறபோது, மாநில சுயாட்சி கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்களே, மாநில சுயாட்சிக் கொள்கையை ஆதரித்தால் என்னவாகும் என்பதைப் புரிந்துகொண்டு அண்ணா அவர்கள் பலவிடங்களில் வலியுறுத்தி வந்த, பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் எழுதி வந்த மாநில சுயாட்சியை, அண்ணா சொல்லவே சொல்லவில்லை என்று சொல்லுகிற அளவிற்கு போய்விட்டார்களே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை பார்க்கின்றபோது வேதனையாகத்தான் இருக்கிறது. இந்த மாநில சுயாட்சியை அடைவதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்னென்னவோ முயற்சிகள் எல்லாம் எடுத்து வருகிறார்கள். அதை அடைந்தால்தான் தமிழ்நாடு உருப்படும் என்று வாதாடி வருகின்றார்கள். அதற்காகச் சிறை செல்லவும் தயாராகவிருக்கிறேன் என்று அறிவித்து விட்டார்கள். இன்றைய தினம் என்னைப் போன்ற லட்சக்கணக்கான தொண்டர்கள் அந்த தானைத் தலைவரைப் பின்பற்றிச் சிறை செல்லத் தயாராகயிருக்கின்றோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1975 மார்ச் 7] [திரு. ஆ. தங்கவேல்]

அடுத்து, என்னுடைய தொகுதியைப்பற்றி இரண்டொரு விஷயங்களைக் குறிப்பிட்டுவிட்டு எனது உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 6.40)

திண்டிவனம் தாலுக்காவில் ஓங்கூர் ஆறு என்ற ஒரு ஆறு இருக்கிறது. சென்னையிலிருந்து நாம் செல்லுகின்ற வழியிலே, தென்னாற்காடு மாவட்டத்திற்கும், செங்கற்பட்டு மாவட்டத்திற்கும் எல்லை அது. அந்த இடத்தில் அந்த ஓங்கூர் ஆறு குறுக்கிடுவதை எல்லோரும் அறிவார்கள். அந்த ஓங்கூர் என்ற இடத்தில் ஒரு அணை கட்ட வேண்டுமென்று காங்கிரஸ் அரசாங்கம் இருந்தபோது 1962-லிருந்து 1967 வரையில் நான் சட்டமன்ற உறுப்பினராக எதிர் கட்சியில் இருந்த நேரத்தில் வற்புறுத்தினேன். அந்த அணைக் கட்டு அது இன்னும் செய்யப்படாமல் விடுபட்டிருக்கிறது. அந்த அணைக் கட்டு வதனல் கம்சூர், ஓங்கூர், பாங்குளத்தூர், ஆவணிப்பூர் போன்ற கிராமங் களுக்குத் தண்ணீர் வசதி செய்துகொடுக்க இயலும். அந்த ஆற்றில் வரக்கூடிய தண்ணீர் எல்லாம் சீக்கிரமாகப் போய் கடலில் விழுந்து விடுகிறது. ஆகவே, அதில் ஒரு அணை கட்ட வேண்டுமென்று நான் நம்முடைய முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். முதல் வர் அவர்கள் இன்றையதினம் இராமநாதபுரம் மற்றும் பல மாவட்டங் களிலே வறட்சிப்பணிகளுக்கு பல லட்சம் ரூபாய் செலவிடும்படியான நல்ல திட்டங்களையெல்லாம் அறிவித்திருக்கிறார்கள். திண்டிவனம் வட்டாரத்தில் வறட்சி பீடித்திருக்கும் இந்த ஓங்கூர் பகுதிக்கும், இந்த அணை கட்டுவதற்கான திட்டத்தையும் அவர்கள் ஏற்று அறிவிக்க வேண்டுமென்று மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம்முடைய முதல்வர் அவர்கள், தமிழக மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, நடுத்தர மக்களுக்கெல்லாம் நல்வாழ்வு அளிக்கக் கூடிய, சமதர்ம மணங்கமழக்கூடிய சிறந்த திட்டங்களைக்கொண்ட நல்லதொரு நிதிநிலை அறிக்கையைத் கொடுத்ததற்காக அவர்களைப் பாராட்டி, நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 6–42)

## தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

---

### சனிக்கிழமை, 1975 மார்ச் 8.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்

### (உடுக்குறியிட்ட வினாக்கள்)

*Teachers Possessing Bogus Certificates.*

*131 *Q.* Thiru P.R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state :—

(*a*) whether it is a fact that some teachers are charged with possessing bogus certificates;

(*b*) if so, the number of teachers so affected, suspended, terminated and demoted ; and

(*c*) whether the Government will allow them to continue in their original posts till the disposal of the charges ?

போலிச் சான்றிதழ்கள் வைத்திருக்கும் ஆசிரியர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) போலிச் சான்றிதழ்களை வைத்திருப்பதாக சில ஆசிரியர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அவ்வாறு பாதிக்கப்பட்ட பதவியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்ட, பதவி நீக்கம் செய்யப்பட்ட, பதவி இறக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் எத்தனை பேர் ?

(உ) குற்றச் சாட்டுகள் குறித்து முடிவெடுக்கும் வரை அவர்களுடைய பழைய பதவிகளில் தொடர்ந்து பணியாற்ற அவர்களை அரசு அனுமதிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) போலிச் சான்றிதழ்கள், போலிப் பதிவுகள் கொண்ட சான்றிதழ்கள் ஆகியவை மொத்தம் 184 விசாரணையில் உள்ளன. இரண்டு ஆசிரியர்களின் சான்றிதழ்கள் பள்ளி இயக்குநரால் ரத்து செய்யப்பட்டுள்ளன. விசாரணைகள் முடிவடைந்த பின்னரே கேள்வியில் குறித்த தண்டனைகள் பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை தெரியவரும்.

(உ) பள்ளிக் கல்வி இயக்குநர் இறுதி ஆணை பிறப்பிக்கும்வரை அவர்கள் பணியில் தொடர அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொன்றும் தனித்தனியே பரிசீலனை செய்யப்பட்டு தக்க முடிவு எடுக்கப்படும்.

திரு. பி.ஆர். தாமஸ்: தலைவரவர்களே, பாதிக்கப்பட்ட ஒரு சில ஆசிரியர்கள் நீதி மன்றம் சென்று ஊதியத்தைப் பெற்று வருகிறார்கள் என்று கூறப்படுகிறது. அப்படியானால் நீதி மன்றம் செல்ல முடியாத ஏனைய ஆசிரியர்களுக்கும் அத்தகைய சலுகை வழங்கப்படுமா என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடமிருந்து அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இருவரது சான்றிதழ்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. அதிலே ஒருவர்விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பத்தில் "ஸ்டே" கொடுத்து மேல் விசாரணையில் உள்ளது. மற்ற வழக்குகள் பரிசீலனையில் இருக்கின்றன. நீதி மன்றம் அதைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கும்படியாக துறையினருக்கு அனுப்பியிருக்கின்றது. துறையினர் அதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, இவர்கள் ஆசிரியர்களாக இருந்துகொண்டு என்னவிதமான குற்றம் செய்தார்கள் ? தங்களுடைய சர்டிபிகேட்டுகளில் ஏதேனும் தவறு செய்ததற்காக இந்தக் குற்றச்சாட்டுகள் ஏற்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எஸ்.எஸ்.எல்.சி., டி.எஸ்.எல்.சி., ஈ.எஸ்.எல்.சி. போன்ற சர்டிபிகேட்டுகளில் போர்ஜரி செய்தது பற்றி சம்பந்தப்பட்ட வழக்குகள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, மற்ற ஆசிரியர்களுக்கும் அந்த மாதிரிச் சலுகைகள் காட்டப்படுமா என்று அங்கத்தினர் அவர்கள் கேட்டார்கள். அந்த மாதிரிச் சலுகை மற்றவர்களுக்கும் காட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன். அது மாதிரி எத்தனை ஆசிரியர்கள் இருக்கிறார்கள் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 181 பேர் என்று பொதுவாக இருக்கிறது. அதிலே பெரும்பகுதியினர் ஆசிரியர்களாக இருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது. அதிலே எல்லோருமே ஆசிரியர்கள் அல்லர். வேறு துறைகளிலே இருப்பவர்களும் இருக்கின்றார்கள். முழுவதும் ஆராய்ந்ததற்குப் பிறகு, அது போலிதான், போர்ஜரிதான் என்று கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்.



திரு. பி. ஆர். தாமஸ் : தலைவரவர்களே, இந்தக் குற்றமானது ஏறத்தாழ 17 ஆண்டுகளுக்கு முன்னால் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. ஆனால் இப்போது பணியில் இருக்கக்கூடிய ஆசிரியர்கள் தங்கள் குடும்பத்தை நடத்த முடியாமல் மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு ஏதாவது சப்சிஸ்டன்ஸ் அலவன்ஸ் என்று அறிவிக்க முடியுமா என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர்வர்களே, தனித்தனியாகத்தான் ஒவ்வொரு கேசையும் எடுத்துப் பார்க்க வேண்டும். எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்யாதவர்களுக்கு பாஸ் செய்ததாகப் புத்தகம் திருத்திக் கொடுத்தவரை எப்படி எடுத்துக்கொள்வது என்பது நாம் கவனிக்க வேண்டிய ஒன்றாக இருக்கிறது. ஒவ்வொரு கேசையும் பார்த்து எந்த அளவுக்குத் தண்டனை கொடுக்கலாம், தண்டனையை ரத்து செய்யலாம், மன்னித்துவிடலாம் என்று கவனிக்க வேண்டியிருக்கின்றது. கல்வித் துறை இயக்குநர் ஒருவருடைய சர்டிபிகேட்டை ரத்து செய்தார்கள். அவர் அப்பீல் செய்தார்கள். அந்த அப்பீலில் ஸ்டே கொடுத்து மறுபடியும் மேல் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, குற்றங்களைப் பார்த்தால் படித்தவர்கள், அதிலேயும் ஆசிரியர்களாக இருப்பவர்கள் மிகப் பெரிய கிரிமினல் குற்றம் செய்திருப்பதாகத் தெரிகிறது. தாமதமில்லாமல், மாண்புமிகு அங்கத்தினர் திரு. தாமஸ் அவர்கள் சொன்னதுபோல, இதுவரை பொறுத்திருந்து, காலம் தாழ்த்திக்கொண்டிருந்தது போலல்லாமல் ஒரு சில மாதங்களுக்குள் ஒரு "ஸ்பெஷல் ஆபீசர்" ஒருவரை நியமித்தாவது இவர்களை விசாரணை செய்து உடனடியாக டிஸ்போஸ் செய்வதற்கு ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதைப் பற்றித்தான் துறையினருக்கு எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொல்வதுபோல, எத்தனை விரைவில் முடிவு எடுக்க முடியுமோ அவ்வளவு விரைவில் எடுக்க வேண்டும் என்று நான் கூறியிருக்கின்றேன்.

### *Secondary Grade Teachers Qualified as B.T. Assistants.*

*132 Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to State :—

(*a*) whether it is a fact that a large number of Secondary Grade Teachers who have qualified as B.T. Assistants, are awaiting postings ; and

(*b*) if, so the number of such teachers ?

[1975 மார்ச் 8

## பி. டி. ஆசிரியர்களாகத் தகுதிபெற்ற இடைநிலைத்தர ஆசிரியர்கள்

திரு. பி.ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பி.டி. ஆசிரியர்களாகத் தகுதிபெற்ற இடைநிலைத்தர ஆசிரியர்கள் பலர் வேலை நியமனத்திற்காக காத்துக் கொண்டிருக்கின்றனரா ?

(இ) ஆமெனில், அத்தகைய ஆசிரியர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) and (இ) "ஏ" பிரிவு அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பி.டி. தகுதிபெற்று பதவி உயர்வு பெறாமல் 3 இடைநிலை ஆசிரியர்களும், "பி" பிரிவு அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பி.டி. தகுதி பெற்று பதவி உயர்வு பெறாமல் 173 இடைநிலை ஆசிரியர்களும் உள்ளனர்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு தலைவரவர்களே, இடைநிலைப் பயிற்சி பெற்று பணியாற்றிக்கொண்டு மேலும் பதவி உயர்வுக்கு பி.டி. தகுதி பெற்ற பல ஆசிரியர்கள் பணியாற்றிக் கொண்டு வருகின்றார்கள். அவர்களுக்கு பத்தாண்டுகள் சர்வீஸ் முடிந்திருந்தால் இடைநிலை ஆசிரியராக பி.டி. சம்பள ஊதியம் அறிவிக்கப்படுமா என்று வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதற்கு முன்னாலே பல தடவை இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். அடிப்படை வேலைக்குத்தான் ஊதியம் தர முடியுமே தவிர அவர்கள் பி.டி. படித்திருக்கின்றார்கள் என்பதற்காகத் தருவதற்கில்லை. ஆனால் காலி ஏற்படும்போது அவர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றேன். இவர்கள் அத்தனை பேரும் வரலாறு எடுத்துப் படித்து வெற்றி பெற்றிருப்பதன் காரணமாக அதிலே இடம் கிடைப்பது கடினம். எப்போது இடம் காலி என்று ஏற்பட்டாலும் இவர்களைத்தான் பதவி உயர்த்த வேண்டும் என்று திட்டவட்டமான ஆணை பிறப்பித்திருக்கின்றோம்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, இது அரசின் கொள்கையைப் பொறுத்திருக்கின்ற விஷயம். பி.டி. ஸ்தானங்கள் காலி இருந்து, இவர் நியமனம் செய்யப்பட்டு, பி.டி. சம்பள விகிதம் கொடுப்பது என்பது அரசின் கொள்கையைப் பொறுத்த விஷயம். அதிலே யாருக்கும் ஆட்சேபணை இல்லை. ஆனால் அரசாங்கப் பள்ளிகளிலே இருப்பவர்களுக்கு மட்டும் இது கொடுப்பதாகவும், தனியார் பள்ளிகளில், அதாவது உதவி பெறும் பள்ளிக்கூடங்களில் இருப்பவர்களுக்கு இந்த பி.டி. உயர்வு கொடுக்கவில்லை என்றும் சொல்கின்றார்களே, அப்படி ஏதாவது வித்தியாசம் காட்டப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.



1975 மார்ச் 8]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தனியார் பள்ளிகளிலே அந்த மாதிரி காலியிடங்கள் ஏற்படுமானால், பி.டி. ஆசிரியர்களை அந்த இடத்திற்குப் போட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கின்றார்கள். ஆனால் அதைக் கட்டாயப் படுத்த இயலுமா என்று ஆராயும்படி நான் கேட்டிருக்கின்றேன். கல்வித் துறை விதிமுறைகள் இடந்தருமானால், அங்கே காலியாகின்ற இடத்திற்கு அங்கே இருப்பவர்களைத்தான் போடவேண்டும் என்று வற்புறுத்த முடியுமா என்று ஆராயச் சொல்லியிருக்கிறேன். வேறு யாரையும் தேடக் கூடாது என்று சொல்லியிருக்கின்றேன். ஆராய்ந்து பார்த்த பிறகு, அந்த அடிப்படையிலே தனியார் பள்ளிகளுக்கு ஆணை பிறப்பிக்கலாமா என்று அரசு சிந்தித்துக்கொண்டிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களாக இருக்கக்கூடியவர்கள், முதல்நிலைத் தமிழாசிரியர்கள் நடத்தக்கூடிய வகுப்புகள் கிடைக்காமல் இருந்தாலுங்கூட, முதல் நிலை ஆசிரியர்களுடைய ஊதியத்தைப் பெறக்கூடிய வாய்ப்பை அரசு ஏற்படுத்தித் தந்திருக்கிறது. இந்த பி.டி. படித்திருக்கக்கூடிய இடைநிலை ஆசிரியர்களுக்கும் அவர்களுடைய கல்வித் தரத்தை வைத்து, தமிழாசிரியர்களுக்குக் கொடுத்த அதே வாய்ப்பைக் கொடுக்கக்கூடாதா என்று அறிய விரும்புகிறேன். இரண்டாவது, இந்த மாதிரி இடைநிலை ஆசிரியர்கள் எவ்வளவு பேர் மாநில அளவிலே இருக்கின்றார்கள் ? மிகவும் குறைவான அளவிலேதான் இருக்கின்றார்கள் என்று சொல்கின்றார்கள். ஆகவே அதைக் கொடுப்பதனாலே எவ்வளவு இழப்பு ஏற்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, செகண்டரி கிரேடைப் பொறுத்த வரையில் நாம் ஹையர் கிரேடே இல்லை, செகண்டரி கிரேடு ஆசிரியர்கள்தான் போடுவது என்று முடிவெடுத்ததன் காரணமாக, ஹையர் கிரேடிலே இருந்த செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கெல்லாம், செகண்டரி கிரேடு சம்பளமே கொடுப்பது என்று ஒரு முடிவுக்கு வந்தோம். அது போன்று முதல் நிலைத் தமிழாசிரியர்களை நியமிப்பது என்று கொள்கை எடுத்ததன் காரணமாக, இரண்டாம் நிலையிலிருந்த முதல் நிலைத் தமிழாசிரியர்களுக்குரிய சம்பளத்தைக் கொடுக்கின்ற நிலையையும் நாங்கள் ஏற்படுத்தியிருந்தோம். ஆனால் செகண்டரி கிரேடிலே இருக்கும் பி.டி.களை மாற்றியமைக்கும் கொள்கைக்கு நாம் வரவில்லை. செகண்டரி கிரேடு செகண்டரி கிரேடாகத்தான் இருக்கும். படிப்புக்கு ஏற்ற சம்பளம் தருவது என்றால், பல்வேறு இடர்பாடுகள், பல்வேறு தகராறுகள் ஏற்படும். ஆகவே உயர் தொடக்கப் பள்ளியிலே தலைமையாசிரியர்களாக இருக்கக் கூடியவர்கள் பி.டி. ஆசிரியர்களாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலே நிதி வசதி பெற்று நாம் பல்வேறு பதவிகளை ஏற்பாடு செய்தால், அப்படிப்பட்ட இடங்களிலே தேங்கியிருப்பவர்களை நியமிப்பதற்கு வழிவகைகள் ஏற்படக் கூடும். அந்த வகையிலேதான் நிதி வசதி ஆதாரங்களை அரசு ஆராய்ந்து கொண்டிருக்கின்றது.

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே, இந்த இடைநிலைத்தர ஆசிரியர்கள் பலரும் பி.டி. பட்டம் பெற்று "பி" விங்குகளிலே பல்வேறு மாவட்டங்களில் உடனடியாக பி.எ.பி.டி. ஆசிரியர்களுடைய நிலைக்கு உயர்த்

தப்பட்டு, சம்பளமும் பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள். "ஏ" விங்கிலும் பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள். இங்குமங்குமாக தனியார் பள்ளிகளிலேயும் திருநெல்வேலி மாவட்டத்திலும்தான் பெறவில்லை. இந்த இடைநிலைத்தர ஆசிரியர்கள் பி.டி. ஆசிரியர்களாகப் பட்டம் பெற்ற உடனே அவர்களுக்குத் தருவது மிக நியாயமானது என்கின்ற கோரிக்கை மிக நீண்ட காலமாக இருக்கின்ற காரணத்தால், அரசு இப்போதாவது முன் வந்து செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

(பிற்பகல் 4-10).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அது கொள்கையளவில் சரிப்பட்டு வராது என்று நான் முதலிலேயே சொன்னேன். ஆகவே இடம் ஏற்படுகின்றபொழுதுதான் அவர்களுக்குத் தர முடியும். இனிமேல் வேண்டுமானால் 170 பேர், 180 பேர் இருப்பதன் காரணமாக இந்த "ஷார்ட் டர்ம் கோர்ஸை" நிறுத்தி விடுவது ஏற்றதாக இருக்க முடியுமே தவிர, வேறு வகையில் அதற்குப் பரிகாரம் காண்பது என்பது கடினமாகத்தான் இருக்கும்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இப்பொழுது 160 பேர் தான் இருக்கின்றார்கள். எல்லோரும் பி.டி. பயிற்சி பெற்று எல்லோரும் பி.டி. ஆசிரியர்களுக்குரிய சம்பளம் கேட்டால் அரசு என்ன செய்வது என்று ஒருவேளை கொள்கையளவில் யோசனை செய்யலாம். ஆனால், அவர்கள் அவ்வாறு பி.டி. பயிற்சிக்குப் போவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. பி.டி. பயிற்சி பெறுவதற்கு இடம் 5, 6 ஆண்டுகள் கழித்துத் தான் கிடைக்கிறது. அதற்கு மேலாகத்தான் பி.டி. பயிலுகின்றார்கள். ஆகவே படித்து வருபவர்களாக இருந்தாலும், மேலும் குறைவான அளவிலேதான் வருவார்கள். பி.டி. படித்தவர்கள் இடைநிலைப் பள்ளிகளிலே ஆசிரியர்களாக இருந்து பாடம் சொல்லிக் கொடுத்தால் நல்ல முறையில் சொல்லிக் கொடுப்பார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு மிகவும் குறைவாக இருக்கிற காரணத்தினால், அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று நான் மீண்டும் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்பொழுது எண்ணிக்கை குறைவாக இருக்கலாம். நாளடைவில் இந்த எண்ணிக்கை வளர்ந்து கொண்டேயிருக்கும். இந்த ஆண்டுகூட ஏராளமான பேர் விண்ணப்பித்திருக்கிறார்கள். அதிலே 8 ஆண்டு ஆசிரியர் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள், 20 ஆண்டு பணியாற்றியவர்கள்கூட இருக்கிறார்கள். சென்ற ஆண்டு கணக்கிட்டுப் பார்த்ததில், 17 ஆண்டு பயிற்சி பெற்றவர்களுக்குக் கீழே இறங்காத அளவுக்குத்தான் பயிற்சி தர முடிந்தது. அவ்வளவு பேர் இதில் விண்ணப்பித்திருக்கிறார்கள். வரலாற்றுத் துறையில் பி.ஏ. படித்து பரீட்சை எழுதி உடனே பட்டம் பெற்று விடுகிறார்கள். உடனே 3 மாத காலம், 4 மாத காலம் பி.டி.யும் படித்து பயிற்சி பெற்று விடுகிறார்கள். ரொம்ப எளிதாகப் பெற்றுவிட முடியும். இந்த நிலையை நாம் ஆய்வோமானால், பின்னால் பல்வேறு சங்கடங்கள் வருமென்ற காரணத்தினாலேதான், இதை அரசு கொள்கை



யளவில் ஏற்றுக் கொள்ள இயலாததாக இருக்கிறது. இதற்குரிய வழி வகைகளை முறையாக நாம் ஏற்படுத்துவதிலும் கவனம் செலுத்தவேண்டியவர்களாக இருந்து வருகிறோம்.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே, இப்பொழுது ஆரம்பப் பள்ளியில் 3 ஆம் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கற்பிக்கிறோம். இடைநிலைப் பள்ளிகளில் தொடர்ந்து ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. இந்த பி.டி. ஆசிரியர்களுக்கும் வேலை கொடுக்கிற நிலையை மனதில் வைத்து, ஆரம்பப் பள்ளியோடு கூடிய 8-வது வகுப்பு வரையில் இருக்கிற பள்ளிகளில் ஒன்றோ அல்லது இரண்டோ பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கு அரசு ஒரு திட்டம் வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நிதிப் பற்றாக்குறை இல்லாமல் நமக்கு நிதி ஆதாயம் இருக்குமானால் ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வரலாம். உயர் துவக்கப் பள்ளிகளில் எல்லாம் பி.டி. ஆசிரியர்கள்தான் தலைமை ஆசிரியர்களாக இருக்கவேண்டுமென்று ஏற்படுத்தி இப்படிப்பட்ட பி. டி. ஆசிரியர்களுக்குத்தான் முதலிடம் தரவேண்டுமென்று சொல்வோமானால், இவர்கள் அத்தனை பேருக்கும்கூட வேலை கிடைக்கும். அந்த வகையில் வேண்டுமானால் நாம் ஆராயலாமே தவிர, ஒரிருவருக்கு என்று தொடங்கினால், அது எல்லோருக்கும் தந்து ஒரு முறையாகக் கொள்ள வேண்டிய அவசியம் வந்திருக்கும்.

திரு. க. அறிவழகன்: தலைவரவர்களே, பி.டி. பட்டத்தைப்பெற்ற இடைநிலைத் தர ஆசிரியர்களை நடுநிலைப் பள்ளிகளில், உயர் துவக்கப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாகப் போடுவதற்கு முடிவெடுக்கலாமென்று ஓர் உறுதிமொழியை நம்முடைய கல்வி அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அது உறுதி மொழியல்ல. ஆனால் ஆலோசிக்கலாமென்று தெரிவித்திருக்கின்றார்கள். நான் அதைத்தான் கேள்வியாகக் கேட்க வேண்டுமென்று கருதினேன். நாம் "ஹாப் எ மில்லியன் ஸ்கீமில்" இப்படி பி.டி. படித்துவிட்டு வந்திருக்கின்ற இளைஞர்களைத் தலைமையாசிரியர்களாகப் போட்டோம். அதை இப்பொழுது நிறுத்தி விட்டோம். ஆகவே இப்பொழுது அவர்கள் சொன்ன மொழியை நிறைவேற்றுவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நிதி ஆதாயம் இருக்குமானால், பி.டி. ஆசிரியர்களைப் போடலாமென்றுதான் நான் சொன்னேன். நிதி வசதி நமக்கு இடம் தருமானால், நிதி ஆதாயம் இருக்குமானால், அந்த வசதிகள் எல்லாம் வருமானால், ஒரு கொள்கையை ஏற்படுத்திக்கொண்டு, அந்தக் கொள்கை அடிப்படையில் வேண்டுமானால் நியமிக்கலாம். அந்தக் கொள்கை அடிப்படையில்தான் பி.டி. ஆசிரியர்களாக இருப்பவர்கள் தலைமையாசிரியராக வேண்டுமென்றுதான், 5 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு என்ற திட்டத்தின் கீழ், 900 பி.டி. ஆசிரியர்களைத் தலைமை ஆசிரியர்களாகப் போடுவதற்குக் கேட்டோம். அதற்கு மத்திய அரசும் இசைவு தந்தது. அவர்கள் ஓராண்டு தந்து பிறகு நிறுத்திவிட்டார்கள்.

ஆகவே அந்த அளவுக்கு நாம் அப்படித்தான் போட்டிருக்கிறோம். மேலும் தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். அந்த நிலைமை வருமேயானால், நாம் தொடர்ந்து இது பற்றி கவனிக்கலாம். நம்முடைய நிதிநிலை இடம் தருமேயானால், அந்தக் கொள்கையைப் பற்றி ஆராயலாம் என்று சொன்னேனே தவிர, இப்பொழுது தருவேன் என்ற உறுதிமொழி நான் தரவில்லை என்பதையும் உறுதியாகச் சொல்கிறேன்.

திரு. ஏ. பாலசுப்பிரமணியம் : தலைவரவர்களே, இப்பொழுது பி. ஏ. யிலே முக்கியப் பாடமாக எக்னமிக்ஸ், ஹிஸ்டரி எடுத்துப் படிக்கிறவர்கள் தேர்வு முடிந்தவுடனே முதல் ஆண்டிலேயே பி.டி.யில் சேர விண்ணப்பம் செய்தால், அவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டாமென்று அரசு ஏதாவது "இன்ஸ்ட்டிரக்சன்ஸ்" கொடுத்திருக்கிறதா அல்லது ஆணை பிறப்பித்திருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பள்ளியிலே எந்தெந்தப் பாடப் பகுதி சொல்லிக் கொடுப்பவர்கள் தேவைப்படுகிறார்களோ அவர்களுக்குத்தான் பி.டி.யிலே பயிற்சி தரவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே பள்ளியைப் பொறுத்த வரையிலே, ஹோம் சயன்ஸ் அல்லது எக்னமிக்ஸ் பாடப் பகுதி இல்லாத காரணத்தினால் பி.டி.யிலே பயிற்சி பெற வேண்டிய அவசியம் இல்லாமல் இருக்கிறது. ஏற்கெனவே அப்படித் தந்து பல்வேறு இடர்ப்பாடுகள் இருக்கிற காரணத்தினால்தான், அப்படிப்பட்டவர்களை பி.டி. பயிற்சிக்கு எடுக்க வேண்டிய அவசியமில்லாத சூழ்நிலை ஏற்படுகிறது.

**Mr. CHAIRMAN :** Supplementaries are becoming very long.

### *Present System of Education.*

***133 Q.**—THIRU P.R. THOMAS (on behalf of THIRU K. S. Ganapathi) : Will the Hon. the Minister for Education be pleased to state whether the Government agree with the view of the Director of Collegiate Education, who, in a meeting held at Tirunelveli, has characterised the present system of education as an " asphyxiating one " and also regretted that the present system of education was ill-planned and ill-executed and was expenditure-oriented and not programme-oriented ?

### தற்போதைய கல்வி முறை

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. கே. எஸ். கணபதி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:-



திருநெல்வேலியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கல்லூரிக் கல்வி இயக்குநர், தற்போதைய கல்வி முறை மாணவரைத் திணரடிக்கும் வகையைச் சேர்ந்தது என்றும், அது நன்கு திட்டமிடப்பட்டதல்ல, நன்கு நிறைவேற்றப்படுவதல்ல, செலவையே அது நோக்கமாகக் கொண்டது, திட்டமிட்ட பணியை நோக்கமாகக் கொள்ளாதது என்று மேலும் அவர் வருத்தத்தோடு தெரிவித்த கருத்தை அரசு ஒப்புக் கொள்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முன்னாள் கல்லூரிக் கல்வி இயக்குநர் திரு சிட்டிபாபு 6—9—1974 அன்று பாளையங்கோட்டை சாராடக்கர் கல்லூரி ஆண்டு விழாவில் பேசியதாகச் செய்தித் தாளில் வெளிவந்ததை மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறார் எனத் தெரிகிறது. நம் நாட்டுக் கல்வி முறையில் கோதாரி கல்விக் குழு போன்ற வல்லுநர்க் குழுக்கள் அவ்வப்போது சொல்லி வந்துள்ள பொதுவான குறைபாடுகளைச் சொல்லி அவற்றைப் போக்க அனைவரும் முயலவேண்டும் என்றுதான் தாம் பேசியதாக அவர் விளக்கம் தெரிவித்துள்ளார். கல்வித் தரத்தை மேலும் மேலும் உயர்த்த இடைவிடாது அனைத்து மட்டங்களிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது இவ்வரசுக்கு உடன்பாடான கருத்தாகும்.

திரு. ம. பொ. சிவஞானம் : தலைவரவர்களே, பள்ளிக் கல்வி முறையிலே மாறுதல் காண ஏற்கெனவே காந்தியடிகள் தயாரித்த ஆதாரக் கல்வித் திட்டம் நம் கையில் இருக்கிறது. டாக்டர் இராதாகிருஷ்ணன் கமிஷன், கோத்தாரிக் கமிஷன் கல்வியிலே மாறுதல் காண்பதற்கான திட்டங்களை விரிவாக ஆராய்ந்து பரிந்துரை செய்திருக்கின்றன. இந்தக் கமிஷன்களின் திட்டங்களை வைத்து ஒரு மாறுதல் காண்பதற்கான திட்டத்தைத் தயாரிக்க இந்த அரசு ஒரு தனிக் குழுவை அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தக் குழுக்கள் கொடுத்த கருத்துகளிலே சிலவற்றை ஆராய்ந்து அவற்றை நடைமுறைப்படுத்துகிற அளவுக்கு பள்ளிகளும் கல்லூரிகளும் வந்திருக்கின்றன. இந்த அடிப்படையிலே ஆராய்வதற்காகத்தான் நாம் தமிழகத்திலே கல்விக்காக ஒரு தனித் திட்டக் குழு அமைத்து, டாக்டர் மால்கம் ஆதிசேஷையா அவர்களுடைய தலைமையில் இரண்டு ஆண்டுகள் அவர்கள் ஆராய்ந்து ஒரு அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் சில பல நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம். மற்றும் பல நடவடிக்கைகளை ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். பல்கலைக் கழகத்திலே பாடத்திட்டங்களை மாற்றியமைக்கும் முறைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. பள்ளிகளில் பாடத்திட்டங்களை மாற்றியமைக்கும் முறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவேதான் இந்த 1-வது 3-வது வகுப்பிலிருந்துகூட அறிவியல் பாடம், கணக்குப் பாடம் ஆகியவற்றையெல்லாம் புதிய முறையிலே கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற முறைகளிலே பாடத்திட்டங்களை 5-வது, 6-வது வகுப்பு வரைக்கும் மாற்றிக் கொண்டு வந்திருக்கிறோம். 7-வது, 8-வது வகுப்புகளிலே வருகிற ஆண்டிலே மாறுதல் செய்யப்படும். பல்கலைக் கழகப் பாடத் திட்டங்களிலும் பல்வேறு மாறுதல்

களைப் பல்கலைக் கழகம் கொண்டு வந்திருக்கிறது. மேலும் டாக்டர் மால்கம் ஆதிசேஷையா இந்த அறிக்கைகளையெல்லாம் பார்த்து கொடுத்த அறிக்கையின் மீது நடவடிக்கைகள் எடுப்பதற்கான குறிப்புகளை அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே, டாக்டர் மால்கம் ஆதிசேஷையா அவர்கள் கல்வித் துறையிலே செய்ய வேண்டிய சீர்திருத்தம் பற்றிச் சொல்லியிருப்பதாக கல்வி அமைச்சர் சொன்னார். அவர்கள் 6வது வகுப்பிலிருந்து 8-வது வகுப்பு வரையில் இருக்கிற வகுப்புகளை செகண்டரி கிரேட் ஆசிரியர்களின்றி பி.டி. படித்தவர்கள்தான் நடத்த வேண்டுமென்று கூறியிருக்கிறார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது பற்றி விவரம் இல்லை. தனிக் கேள்வி போடலாம்.

*Apprentice Secondary Grade Teachers.*

*134 Q.—Thiru P.R. THOMAS (on behalf of Thiru K. S. Ganapathi) : Will the Hon. the Minister for Education be pleased to state :

(a) the number of Apprentice Secondary Grade Teachers appointed after 1—6—1972, in the Tiruchirappalli Revenue District;

(b) the number of cases where teaching grant has not been granted ; and

(c) the number of cases wherein the Director of Schoo Education has ordered payment of salary to such teachers, appo inted on or after 1—6—1972?

தொழில் பழகு இடைநிலை ஆசிரியர்கள்

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. கே. எஸ். கணபதி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி வருவாய் மாவட்டத்தில் 1—6—1972ஆம் நாளுக்குப் பிறகு நியமிக்கப்பட்ட தொழில் பழகு இடைநிலை ஆசிரியர்கள் எத்தனை பேர்?

(இ) கற்பித்தல் மானியம் வழங்கப்படாத பள்ளிகள் எத்தனை?



(உ) 1—6—1972-ஆம் நாளில் அல்லது அதற்குப் பிறகு நியமிக்கப்பட்ட அது போன்ற ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநரால் ஆணை பிறப்பிக்கப்பட்ட பள்ளிகள் எத்தனை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இரண்டு.

(இ) & (உ); அந்த இரண்டு நேர்வுகளில் ஒன்று சிறப்பு நேர்வாகக் கருதப்பட்டு மானியம் தர அனுமதிக்கப்பட்டுள்ளது. மற்றது பற்றிய கோரிக்கை பள்ளிக் கல்வித் துறையின் ஆய்வில் உள்ளது.

*Selection Grade Posts for Different Categories of Engineering Staff Members.*

*135 Q.—Thiru P.R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state whether Selection Grade posts for different categories of Engineering Staff Members serving in Bifurcated Courses of Study, have been sanctioned ?

பொறியியல் ஆசிரியர்களின் வெவ்வேறு பதவித்தரங்களுக்கு தேர்வு நிலைப்பதவிகள்

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

இரு கூறுக்கப்பட்ட பாட முறைகளைப் பயிற்றுவிக்கும் பொறியியல் ஆசிரியர்களின் வெவ்வேறு பதவித் தரங்களுக்கு தேர்வு நிலைப் பதவிகள் அனுமதிக்கப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்பொருள் அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. க. அறிவழகன் : தலைவரவர்களே, தேர்வு நிலை ஊதியம் என்பது 1970 ஆம் வருட ஊதியக் குழு பரிந்துரைகளிலே சொல்லப்பட்டதாகும். அதற்குப்பிறகு 10 ஆண்டுக்கால தேர்வு நிலை ஊதியம் அனைத்து ஆசிரியர்களுக்கும் நம்முடைய அரசு வழங்கியிருக்கிறது. ஆனால் இந்த இரு கூறுக்கப்பட்ட பாடமுறைகளைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு மாத்திரம் இன்னும் வழங்காமல் இருக்கிறது. அது போன்று உடற் பயிற்சி ஆசிரியர்களிலே உயர் நிலையிலே இருக்கின்ற உடற் பயிற்சி ஆசிரியர்களுக்கும் வழங்காமல் இருக்கிறது. ஆகவே அது ஒரு குறித்த காலத்திற்குள் வழங்கப்படுவதற்கு இந்த அரசு ஒரு குறிப்பிட்ட கால அளவைத் தெரிவிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, கால அளவை நான் இப்பொழுது நிர்ணயிக்கின்ற நிலையில் இல்லை. ஆனால் விரைவிலே இதற்கு ஒரு முடிவு காண வேண்டுமென்று நான் முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். துறையினரும் இதிலே விரைவிலே முடிவு காண வேண்டும். பி. டி. க்கு சமமாக இருப்பவர்களைப் பொறுத்த அளவிற்கு, நாம் முடிவு எடுத்திருக்கிறோம். செகன்டரி கிரேடுக்குச் சமமாக இருக்கிறவர்களைப் பற்றித் தான் பிரச்சினை இருக்கிறது. அதிலே பல்வேறு பகுப்புக்கள் இருப்பதன் காரணமாக, ஒரு முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது. முடிவுக்கு வந்தவுடன் அது நடைமுறைப் படுத்தப் படும்.

*Cattle Farm in North Arcot District*

* 136 *Q.*—THIRU A. BALASUBRAMANIAM (on behalf of THIRU L. BALARAMAN): Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state :

(*a*) whether the Government have examined the establishment of a Cattle Farm in North Arcot District; and

(*b*) if so, the decision taken thereon?

வட ஆற்காடு மாவட்டத்தில் கால்நடைப் பண்ணை

திரு. ஏ. பாலசுப்பிரமணியம் (திரு எல். பலராமன் சார்பில்): மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில், கால்நடைப் பண்ணை அரசு நிறுவ ஆராய்ந்ததா?

(இ) ஆமெனில், இது குறித்து எடுத்த முடிவு யாது ?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) அதற்காக வேண்டி இடம் தேர்ந்தெடுக்கும்படியாக கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு:—*ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக் குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக் கும்]



2. ஒழுங்குப் பிரச்சினை

ஜனாதிபதியால் திருப்பியனுப்பப்பட்ட நிலவுடமையாளர் உரிமைகளை வாங்கும் உரிமை குறித்த சட்ட முன்வடிவின் மீதான கூட்டு ஆய்வுக் குழு குறித்து

THIRU G. SWAMINATHAN : Sir, I rise on a point of order under rule 140 of the Council Rules and also as per Article 201 of the Constitution of India.

Sir, yesterday, I brought to your notice that the Bill relating to the purchase of land by the cultivating tenants had been returned by the President withholding assent. Article 201 of the Constitution says that "when a Bill is so returned, the House or Houses shall reconsider it accordingly within a period of six months from the date of receipt of such message and, if it is again passed by the House or Houses with or without amendment, it shall be presented again to the President for his consideration." So, under this Article, the Bill will have to be considered by the House or the Houses or by any Select Committee or Joint Select Committee appointed for that purpose within a period of six months. In this case, the period of six months wasover by the 6th or the 7th of February 1975. Now, yesterday, you announced to the House a message from the Speaker. I have also received a letter from the Secretary of the above Joint Select Committee to the effect that I may be present at the meeting of the Joint Select Committee on 10th to consider the above Bill clause by clause. I wanted to know from you yesterday the position since the Bill had already lapsed. The life of the Joint Select Committee is also over with the lapsing of the Bill. How can a Joint Select Committee function on an infructuous Bill? I am a Member of the Joint Select Committee and I want to know what I should do because I have received invitation to attend the meeting of the Joint Select Committee. I want a ruling on this since I want to know whether I should attend or not attend the meeting.

Thiru K. RAJARAM : Not only my hon. Friend, but there are also other members.

MR. CHAIRMAN : The point raised by the hon. Member seems to have some force. However, as the Joint Select Committee is a Committee of the Legislative Assembly, it is for the Committee

and the Hon. Speaker of the other House to consider the point raised by the hon. Member Thiru G. Swaminathan. As far as this House is concerned, it would be premature now and hence I am not giving my ruling. This can be raised by the hon. Member if the same Bill comes up before the House again.

THIRU K. RAJARAM : I hope the Hon. Chairman will indicate the opinion expressed here to the other House.

*(பிற்பகல் 4-20)*

மாண்புமிகு மேலவைத் தலைவர்: "கம்யூனிகேட்" பண்ணமாட்டோம். தெரிந்துகொள்வோம். அங்கே என்ன ஆகிறது என்று பார்ப்போம்.

## 3. 1975-76 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: பதினொரு பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். கடைசியிலே நெருக்கந்தான் வருகிறது. $5\frac{1}{4}$ மணிக்கு ஆளைத் தேடுகிறேன். இல்லை. $4\frac{3}{4}$ மணிக்குத் தேடுகிறேன். இல்லை. இப்பொழுது 11 பேர் இருக்கிறார்கள். எப்படிப் பங்கிட்டுக் கொள்வது? 10 நிமிடத்திற்கு மேலே முடியாது. நன்றாகப் பேசுகிறவர்கள் இருக்கிறார்கள். நன்றாகப் பேசுகிறவர்களுக்கு நேரம் போதிய அளவு இல்லை. பஜனை முடிகிறபோது எல்லோரும் வருகிறமாதிரி இருக்கிறது.

திரு என். சுந்தரேசத் தேவர்: தலைவர் அவர்களே, அவர்களையெல்லாம் நேற்றைய தினம் பேசவிட்டிருக்கலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்:—லிஸ்ட் கொடுத்தால்தானே கூப்பிடுவதற்கு. இரண்டு விப்ஸும் லிஸ்டைக் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் நான் கூப்பிடலாம். சும்மா கூப்பிட்டால் என்னத்திற்கு கூப்பிட்டீர்கள் என்பார்கள்.

*THIRU G. VASANTHA PAI : Hon. Chairman, may I take this opportunity, Sir, of elucidating some points on this Cauvery Water Dispute which, I think, if solved, will solve most of our drought problems which have been mentioned in the Budget? Sir, I wish to point out at the outset that the Brochure on the River Water Dispute with Karnataka State published by the Government of Tamil Nadu in 1971 speaks of a continuous dialogue with the Karnataka Government with or without the aid of the Union Government from 1968, that is, ever since the D.M.K. Ministry was formed in this State. Sir, I would, at the



outset, like to say after looking into this Brochure that this Government have been making efforts only to have the dispute referred under the Inter-State Water Disputes Act, 1956 for the consideration of a Tribunal to be constituted under that Act. Sir, I would like to point out that there are many avenues for this Government which ought to be explored on a matter of this vital significance. The first avenue I would like them to explore is this: Article 257(2) of the Constitution says: "The executive power of the Union shall also extend to the giving of directions to a State as to the construction and maintenance of means of communication, declared in the direction to be of national or military importance:

Provided that nothing in this clause shall be taken as restricting the power of Parliament to declare highways or waterways to be national highways or national waterways."

Now, Sir, what is it that has prevented our Government from moving the Union Government to declare the Cauvery River as a national waterway? If this Government have not yet moved in this matter, I nly request the Hon. the Chief Minister to move for the Cauvery to be declared as a national waterway under Article 257 of the Constitution, so that one Government alone under item 17 of List II cannot have control over that river. Sir, straightway, I will refer to item 17 of List II and item 56 of List II to show what powers can be exercised by the Union Government, so that our Government will get positive relief. Entry 17 of List II says: 'Water, that is to say, water supplies, irrigation and canals, drainage and embankments, water storage and water power subject to the provisions of entry 56 of List I." Entry 56 of List I says: "Regulation and development of inter-State rivers and river-valleys to the extent to which such regulation and development under the control of the Union is declared by Parliament by law to be expedient in the public interest."

Sir, the 39 Members of Parliament belonging to Tamil Nadu who are sitting in the Lok Sabha could well ask the Central Government to declare the Cauvery as a national waterway. Under Article 257, they could move the Parliament for that purpose. I would request the Hon. the Chief Minister to explore the possibility of moving the Parliament under Article 257 of the Constitution to declare this as a national waterway.

The second alteration I want to point out is this.

THIRU K. RAJARAM: I want one clarification, Sir. The hon. Member is speaking about declaring the Cauvery as a national waterway. It is not a waterway and it is used only for irrigation. I want to know whether this irrigation project will be covered by that provision.

(பிற்பகல் 4-30)

THIRU G. VASANTHA PAI: With great respect to my Friend the Leader of the Opposition, I would like to say that I have the authority of Seervai on Constitution on this problem. Sir, the learned author at page 105 of his book says, " Thus the right to have a water dispute referred to a Tribunal is not absolute but is dependent on the opinion formed by the Central Government whether the matter can be settled by negotiations or not. It is submitted, however, that the opinion must be capable of being supported on objective grounds for the Union Government cannot refuse to refer a dispute to a Tribunal if all attempts at negotiations have failed as when two states adhere to diametrically opposite views. So far no dispute has been referred to a Tribunal though long-standing river water disputes have been pending. This is one of the cases where the existence of the same party throughout India in the State Legislatures and the Parliament has prevented controversies from coming to the fore which would have come to the fore, if different parties were in power in different States and in the Union."

Sir, now this matter has come to the fore and I might say that there is no harm in exploring the possibility of declaring this as a national waterway under Article 257 of the Constitution. I am also suggesting another way-out for this tangle, because I find from this Brochure that has been given to us in 1971 and which till today seems to hold the field that no effort has been made by this Government or its lawyers to explore other avenues. Sir, there is a River Boards Act (Act XLIX of 1956) which is not at all mentioned in this Brochure. This Act was enacted long before this Government came into power and at a time when the Congress was in power. This Act was enacted to provide for the establishment of a River Board for the regulation and development of inter-State rivers and river valleys. Section 4 of the Act says :—

" The Central Government may, on a request received in this behalf from a State Government or otherwise, by notification in the Official Gazette, establish a Rivr Board for advising the Governments interested in relation to such matters concerning the regulation or development of an inter-State river or river valley or any specified part thereof and for performing such other functions as may be specified in the notification, and different Boards may be established for different inter-State rivers or river valleys."



Now, Sir, section 13 (1) of the said Act says: " A Board may be empowered under sub-section (1) of section 14 to perform all or any of the following functions, namely :—

(a) . . . . . . . . . .

(b) preparing schemes, including multi-purpose schemes, for the purpose of regulating or developing the inter-State river or river valley and advising the Governments interested to undertake measures for executing the scheme prepared by the Board." Now, Sir, why I am referring to this is : If there is a River Board constituted under this Act, and the advice of the Board is under dispute, then that inter-State water dispute can be referred to arbitration and the Arbitrator shall be a judge appointed by the Chief Justice of India to be assisted with two assessors, just like the arbitration provided for in the Inter-State Water Disputes Act also. Under the River Board Act, the Central Government will have to appoint or constitute a Board after consultation with the Governments interested when one State says that the water coming to it must be regulated. Our main grievance is that 320 TMC of water is being denied to us. Our main grievance is that contrary to the agreement of 1924 and also the earlier agreement of 1892, we, who as the lower riparian owners have a right over the water from Karikal Chola's time and a right to cultivate our lands as the lower riparian owners and have the prescriptive right over the water, have been denied our lawful rights to the Cauvery water. We want our problem to be solved. How can it be solved ? My submission is that the State Government must act in all the three ways : One is by raising this matter under Article 257 in the Parliament ; the second is by asking the Central Government to constitute a River Board for Cauvery under section 4 of the River Boards Act, 1956.

Thirdly, if it fails, we can go under the Inter-State Waters Act of 1956 for settling the dispute between Mysore and our State.

MR. CHAIRMAN : Where to go ?

Thiru G. VASANTHA PAI : Sir, we have to make a request to the Union Government and they will have to constitute the Board as far as the Inter-State River water dispute is concerned. The recent newspaper reports say that the Union Government and the Prime Minister have consented to appointing a Tribunal straightway. But I say that if we go under the River Boards Act, we will immediately get the regulation of the water-supply also through the River Board. Moreover, we do not have the ramifications of the Inter-State Water Disputes Act in the River Boards Act. Under the River Boards Act, a notification must immediately follow under section 4. So, I would suggest to the Hon. the Chief Minister and the Cabinet that they will consider asking for the appointment of a River Water Board under section 4 of the River Water Boards Act of 1956.

Thiru G. SWAMINATHAN : Sir, our Government have requested the Prime Minister to appoint a Tribunal to go into the merits of the case. It is only our request and as far as we know, the Prime Minister has not considered the appointment of a tribunal in this matter.

THIRU G. VASANTHA PAI : Sir, the Tribunal which is asked for is under the Inter-State Water Disputes Act, 1956. This Brochure says that the Tribunal has been asked only under the Inter-State Water Disputes Act. I am asking . . . . . . .

MR. CHAIRMAN : We are prepared to go to the Tribunal but it seems the Karnataka Government refuse to go to the Tribunal.

THIRU G. VASANTHA PAI : Sir, I want to submit to you that it is not necessary when we see this Act and that is why I am at pains to point out. Will you please permit me to read that section ?



" Under the River Boards Act of 1956, the Central Government may, on a request received in this behalf from a State Government ".

For that purpose " may " may means "shall " also. If we make an application under section 4 and if the Government do not appoint a River Water Board for the particular area, here the Cauvery river, then we have got a remedy to go in foramandamus. But, what we have done is to take a wrong step. We went and approached the Supreme Court under Article 131. When we knew that under Article 262, waters were out of it, we withdrew the dispute from the Supreme Court. We made an initial mistake but thereafter we have not tried any other avenue at all. We have not asked them to constitute a River Board under this enactment. I would suggest that this Government take up this matter under this enactment because this gives the Board the power to regulate. We can very well say, " Under 1924 Agreement and 1898 Agreement, you can only take so much and the balance must be released ". This River Board has got a power to appoint an assisting authority, say, a Commissioner to go into the whole system from the beginning right down to Hogenakal and find out how much water the other Government interested are releasing. So, our problem will be solved because this is the only enactment which gives us the right to have an interim Commissioner whereas the Inter-State Water Disputes Act does not give it. I shall be greatly obliged if the Hon. the Chief Minister is prepared to consider this suggestion. I think it is my duty as an Independent Member of this House, to place before this House the suggestions so that they may be accepted and acted upon. On the other hand, if the Hon. Minister, on consultation with his legal advisers still thinks that the suggestions are not worth consideration, of course, he will drop them at the Governments' and States' risk. That much, Sir, so far as the first point on river water dispute is concerned.

Then, Sir, I want to mention another matter which has been elaborately dealt with in the Budget Speech and that is about the benefits to Government servants. I am told, Sir, that two instalments of dearness allowance have been sanctioned during the period from the last Budget to the present Budget, but half of it goes back to the Central Government under the Compulsory

Deposit Scheme. Sir, if the State Government think that some amount should be sanctioned to the Local Government salaried staff or wage-earners under the employ of the Local Government, the actual benefit should go to these wage-earners. Now, there is an increase in prices. If half of the allowances given are taken away under the Compulsory Deposit Scheme, I would suggest that it will work very great hardship on the individuals concerned. I would request that this Government should have a dialogue with the Union Government and allow the entire dearness allowance to be drawn by the Non-Gazetted Officers of this State. I say this for this reason. A person in my position who earns money by way of a profession or calling or trade, or a person like my hon. friend Thiru Swaminathan or my hon. friend Thiru Narayanaswamy who is in business are not affected if our income be less than Rs. 15,000 per annum. Take an example of a self-employed person whose income may increase from Rs. 10,000 a year to Rs. 11,000 a year. He need pay to Government only after the income reaches Rs. 15,000. Why this discrimination, Sir, between persons belonging to a trade, occupation or business and Government servants who generally have very much lower incomes? They need more money to acquire more purchasing power. Why should the Government servants suffer? This is an obvious discrimination writ large on the face of the enactment by which it is evident that there is no relationship between the object sought to be achieved and the classification. I, therefore, request the Hon. the Chief Minister to take this up on behalf of the Non-Gazetted Officers of the Secretariat and other institutions like Banks and Public Sector and Private Sector undertakings who are affected by this and see that they get the benefit of the full increase of the emoluments to which they are entitled as dearness allowance till their income and emoluments reach Rs. 15,000 per annum. Since you have specified the time allotted to me, I do not want to take more time and I conclude my speech.

*(பிற்பகல் 4-40)*

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. பாய் அவர்கள் பேசிய விஷயம் ஏற்கெனவே விவாதிக்கப்பட்டு மத்திய அரசுடன் நமது சர்க்கார் பேச்சுவார்த்தை நடத்தி சம்பளத்தைப் பிடிப்பது நல்லதல்ல, ஊழியர்களுக்குக் கஷ்டமாக இருக்கும், ஆகவே அதைப் பிடிக்கத் தேவை யில்லை என்று ஏற்கெனவே எழுதி அது நிராகரிக்கப்பட்டதாக நான் பத் திரிகையிலே படித்தேன், பட்ஜெட்டிலேயும் போட்டிருக்கிறார்கள். ஆகை





யினால் முயற்சி செய்யாமல் இல்லை. ஏற்கெனவே முயற்சி செய்திருக் கிறார்கள். நமது சர்க்கார் மட்டுமல்ல மற்ற மாநில அரசுகளும் இதற்கு நல்ல முயற்சி எடுத்திருக்கிறார்கள். ஆக, பார்லிமெண்ட்லே தான் இதைச் செய்ய வேண்டுமே யொழிய நாம் ஒன்றும் செய்ய முடியாது.

Thiru G. VASANTHA PAI: Sir, I am only requesting that this may be referred by the Hon. the Chief Minister. I am not speaking on behalf of the friends in Parliament.

Mr. CHAIRMAN: First of all, before any drastic action is taken, one has to see the Exchequer of the Government. Has one not?

திரு ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, சில நாட்களுக்கு முன் னால் எனது நண்பர் திரு. தாமோதரன் அவர்கள், நமது நிதி நிலை அறிக்கையைப் பற்றி இந்த மாமன்றத்திலே உரையாற்றினார்கள். அவர்கள் பேசுகிறபோது, மத்திய அரசினுடைய நிதி நிலை அறிக்கையைப் பற்றியும் பரவலாகக் குறிப்பிட்டு இங்கே பேசினார்கள். கிட்டத்தட்ட ½ மணி நேர அளவிலே அவர்கள் பேசிய பேச்சில் ஒரு 15 நிமிடமாவது மத்திய அரசினுடைய நிதி நிலை அறிக்கையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள் என்பதை நாம் எல்லோரும் நன்றாக அறிவோம். அவர்கள் பேசிய போது மத்திய அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்களையும், நம்முடைய மாநில முதல்வர், நிதி அமைச்சர், மதிப்பிற்குரிய கலைஞர் கருணாநிதி அவர் களையும் ஒப்பிட்டு, யார் மூத்தவர், யார் இளையவர் என்ற கருத்துக்களை யெல்லாம் கூட சொல்லி, அதுவும் பத்திரிகையிலே சிறந்த முறையில் வெளியிடப்பட்டதை நாம் நன்றாக அறிவோம். அவர்கள் பேசிவிட்டுச் சென்ற பிறகு சில நண்பர்களும் பத்திரிகைக்காரர்களும் என்னைச் சந்தித்தார்கள். மிகச் சிறந்த முறையில் அவர்களுடைய பேச்சு அமைந் திருந்தது என்றுதான் நானும் மற்ற நண்பர்களும் கருதியிருக்கிறோம். ஆனால் அவர்கள் என்னிடத்திலே பேசுகிறபோது, ராஜ்ய சபையிலேயோ அல்லது பாராளுமன்றத்திலேயோ பேச வேண்டிய பேச்சை தமிழ் நாட்டினுடைய மேலவையில் திரு. தாமோதரன் அவர்கள் ஆற்றியிருக்கிறார் கள் என்ற பொருள்பட ஒரு சில கருத்துக்களைச் சொன்னார்கள். நான் ஏன் இதை முன்னோடியாகச் சொல்ல வேண்டிய அவசியத்திலே இருக்கிறேன் என்று சொன்னால், கிட்டத்தட்ட அவர் பேசிய பாணியிலே பேசவேண்டிய துர்பாக்கியமோ அல்லது பாக்கியமோ எனக்கும் ஏற்பட்டு விடுமோ என்றுதான். ஆகவே, அவர்கள் பேசியதன் மீது ஏற்பட்ட கருத்து என்னுடைய பேச்சைப்பற்றியும் வரக்கூடாது என்பதற்காகத் தான் நான் இதைக் குறிப்பிடுகிறேன்.

மத்திய அரசினுடைய நிதி உறவுகளைப் பற்றித் தொடாமல் மாநிலத் தினுடைய நிதி உறவுகளைப் பற்றி, அதனுடைய நிதி அமைப்புக்களைப் பற்றிச் சொல்ல இயலாது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால் மத்திய அரசினுடைய நிதியும், மாநில அரசினுடைய நிதி

யும் கிட்டத் தட்ட பிணைப்புடையது என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஏறத்தாழ நம்முடைய மாநிலத்தில் வரக்கூடிய நிதியிலே கிட்டத்தட்ட 55-லிருந்து 60 சதவீதம் வரை கூட மத்திய அரசாங்கத்தின் நிதியிலிருந்து பங்காகவும் மற்ற வழிகளிலும் நாம் பெற வேண்டிய ஒரு கட்டத்தில் இருக்கிறோம் என்பதையும், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப் போல "பிளான் ஃபண்ட்ஸ்" என்று சொல்லக்கூடிய திட்ட அமைப்புக்களின் மூலம் கோடிக்கணக்கான ரூபாயை நாம் பெற வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம் என்பதையும், மாநிலம் சரியான முறையில் நிர்வகிக்கப்பட வேண்டும் என்று சொன்னால், மத்தியத்தில் இருக்கக்கூடிய நிதி உறவுகள் நல்ல முறையில் அமைக்கப்பட்டால்தான் மாநில நிதிநிலைமையும் நல்ல முறையிலே அமைக்கப்படும் என்ற கருத்தையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டு நாட்களுக்கு முன்னால் நம்முடைய நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஒரு பெரிய புயல் வந்தால், அந்தப் புயலிலே எப்படி ஓடங்கள் சிக்கித் தவிக்குமோ அதுபோல மத்திய அரசாங்கம் என்று சொல்லக் கூடிய நிதியினுடைய சூறாவளியிலே மாநில அரசாங்கத்தினுடைய நிதி நிலை கட்டுப்பட்டிருக்கிறது என்ற ஒரு கருத்தை அழகான உவமையோடு சொன்னார்கள். மேலும் அந்த உவமையைப் பற்றி நான் ஆலோசனை செய்து பார்த்ததிலே, மத்திய அரசாங்கத்தினுடைய நிதி, அல்லது மத்திய அரசாங்கத்தை ஒரு கடலுக்கு ஒப்பிடுவோமானால், மாநில அரசு அல்லது அதன் நிதி நிலைமை என்பதை அந்தக் கடலிலே செல்லக் கூடிய ஒரு கப்பலுக்கு நாம் ஒப்பிடலாம். அந்தக் கப்பல் எவ்வளவு சிறந்ததாக இருந்தாலும், அதைச் செலுத்துகிற மாலுமி எவ்வளவு சிறந்த மாலுமியாக இருந்தாலும், அந்தக் கடலில் மிகவும் கொந்தளிப்பான ஒரு நிலைமை இருக்குமானால், அந்தக் கப்பலும் அதற்குத் தகுந்தவாறு தடுமாற வேண்டிய ஒரு அவசியத்தில்தான் இருக்கும் என்பதை நான் சொல்லத்தேவையில்லை. ஆனால் என்னைப் பொறுத்த வரையிலே நம்முடைய மாநில அளவிலே தயாரிக்கப்பட்டிருக்கும் இந்த நிதி நிலை அறிக்கை தற்போது இருக்கக்கூடிய நிதி அமைப்புக்களை வைத்துக்கொண்டு நல்ல முறையிலே தயாரிக்கப்பட்டிருக்கிறது என்ற என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக் கொள்ளுகிறேன். நல்ல முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்ற கருத்தைச் சொல்லுகிற போது, அதிலே குற்றங்கள் காண வேண்டும் என்று கருதித் தான் கிட்டத்தட்ட இரண்டு மூன்று நாட்கள் ஆராய்ந்து பார்த்து, நானோ அல்லது நம்மைப்போன்ற மற்றவர்களோ நம்முடைய மாநிலத்தினுடைய ஒரு நிதி அமைச்சராக இருந்தால் இந்த வரம்புக்குள் அகப்பட்டுக் கொண்டு என்ன செய்ய முடியும் என்று பார்க்கிறபோது, இதைவிட இன்னும் வேறு எந்த வகையிலும் சிறந்த முறையிலே யாராலும் செய்ய முடியாது என்ற கருத்தைத் தான் பாரபட்சமற்ற முறையிலே எதிர்க் கட்சியைச் சேர்ந்தவனாக இருந்தாலும் கூட சொல்ல வேண்டிய ஒரு கடமையில் இருக்கிறேன். மத்திய அரசினுடைய நிதி நிலைமைகளைப் பார்க்கிறபோது, மத்திய அரசிலிருந்து மாநிலங்களுக்கு வருகின்ற பணங்கள் கிட்டத்தட்ட மூன்று விதமான முறையிலே வருகின்றன என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். ஒன்று மத்திய அரசிலே இருக்கக்கூடிய வரி வாயில்கள், அதை மாநிலங்கள் வசூல் செய்து தாங்களாக எடுத்துக் கொள்ளக்கூடிய ஒரு விதி முறை. மத்திய வரி விதிப்பு மூலம் பணம் சேர்க்கக்கூடிய அந்த அதிகாரத்தை மாநில அரசுகளுக்குக் கொடுத்து, மாநில அரசுகள் அந்த வரி அமைப்பை தாங்களே எடுத்துக்கொள்வது இரண்டாவது கட்டம். மத்திய அரசே இந்த வரி வகைகளை வசூல் செய்து தக்க விதி முறைகளை அமைத்து அதிலே ஒரு பகுதியை மாநிலங்களுக்குக் கொடுப்பது என்பது மூன்றாவது ரகம். மேலும் இந்த மூன்று விஷயங்களுக்கும் அப்பாலே, "பிளான் ஃபண்ட்ஸ்" என்று சொல்லக்கூடிய அளவிலே திட்ட அமைப்பின் மூலம் மாநிலங்களுக்குப் பணம் கொடுப்பதை நாம் அறிவோம். ஆனால் கடந்த பல ஆண்டுகளாக, 1950ம் ஆண்டிலிருந்து இப்போது வரை 25 ஆண்டு காலத்தில் நம்முடைய மாநில மத்திய நிதி உறவுகளைப் பொறுத்த வரையிலே, இந்தத் திட்டக்கமிஷன் வந்த பிற்பாடு கொடுக்கப்படுகிற பணத்திலே மத்தியகிராண்ட் என்று சொல்லக்கூடிய மானியமாக கொடுக்கக் கூடிய பணத்துக்குக் காத்துக் கிடக்கும் ஒரு நிலைமைதான் மாநிலங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இது ஒரு துரதிருஷ்டமான நிலைமை என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எந்த அமைச்சராக இருந்தாலும், அல்லது எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், மத்தியத்திலே சென்று கை நீட்டி அவர்களது மானியத்தைப் பெறக்கூடிய ஒரு நிலைதான் இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம்.





தற்போது திட்டக் கமிஷன் என்ற ஒன்றை மத்தியத்திலே வைத்துக் கொண்டு அதன் மூலமாக கோடிக் கணக்கான பணத்தை இந்த ஐந்தாண்டுத் திட்டம் மூலமாக அவர்கள் செலவிடுகிறார்கள். சென்ற முறை நான் பேசுகிறபோது, இந்த ஐந்தாண்டுத் திட்டத்தை ஒத்தி வைப்பது நல்லது என்று சொன்னேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூட இது ஒரு பிற்போக்கு வாதம் என்ற ஒரு கருத்தை அப்போது சொன்னார்கள். ஆனால் நான் சொன்னபடியே இப்பொழுது பார்த்தால்—பிற்போக்கு வாதமாக இருந்தாலும், முற்போக்கு வாதமாக இருந்தாலும்—கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக ஐந்தாண்டுத் திட்டமே இல்லாமல் "ஆனுவல் பிளான்" என்று சொல்லக்கூடிய ஆண்டுத் திட்டமாக மாறி, எப்பொழுது இந்த ஐந்தாண்டுத் திட்டம் வரும் என்ற ஒரு நிலையில் எல்லோரும் இருப்பதைப் பார்க்கிறோம். கடந்த 25 ஆண்டுக் காலமாக ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டும், நாட்டினுடைய நலன்கள் எந்த நிலைமையில் இருக்கின்றன என்பதை நாம் பார்க்கிறபோது, ஒரு சில விஷயங்களை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். மேலும் மத்திய அரசினுடைய நிதிகளை அவர்கள் எப்படி வீணாக்கியிருக்கிறார்கள் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசிலே இருக்கக்கூடிய நிதி நிலைமை, 1939-லே இந்த நாட்டிலே கிட்டத்தட்ட 2500 கோடி ரூபாய் புழக்கத்தில் இருந்தது என்று சொல்கிறார்கள். ஆனால் 1974-லே இப்பொழுதுள்ள பணத்தின் புழக்கம் 11 ஆயிரம் கோடி ரூபாய் என்று சொல்கிறார்கள். அதிலே "பிளாக் மணி" என்று சொல்லக்கூடிய கறுப்புப் பணம் கிட்டத்தட்ட ஒரு 10 ஆயிரம் கோடி ரூபாயிலிருந்து 15 ஆயிரம் கோடி ரூபாய் இருக்கிறது என்ற அளவுக்கு மத்திய நிதி அமைப்பு இருக்கிறது.

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1975 மார்ச் 8

அடுத்தபடியாக "டெபிசிட் ஃபினன்ஸ்" என்று சொல்லக்கூடிய பற்றுக் குறை அளவு 1955–56 ல் 280 கோடி ரூபாயாக இருந்தது. 1974–75 ல் 5120 கோடியாக ஆகி, இப்போது மதிப்பிற்குரிய திரு. சுப்ரமண்யம் இன்னும் ஒரு 625 கோடியாகச் சேர்த்து 6065 கோடியாக நாட்டினுடைய பற்றுக்குறை அளவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். நாட்டினுள்ள பொருட்களின் விலைகளை பல மடங்கு ஏற்றி இன்றைய தினம் 1 ரூபாயினுடைய மதிப்பு 1961 க்கும் 1975 க்கும் இடையே 27 பைசாவா அல்லது 17 பைசாவா என்று தர்க்கம் இருக்கிற அளவுக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். இந்த 25 ஆண்டுக் காலத்திலே ஐந்தாண்டுத் திட்டங்களினாலே நாட்டிலே என்ன வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கிற போது, மக்களுடைய அத்தியாவசியமான பொருள்களான, துணி, அவர்களுக்கு வேண்டிய உரையுள், அவர்களுக்கு வேண்டிய உணவு இவைகளெல்லாம் கணிசமான அளவுக்கு உயர்ந்திருப்பதைத் தவிர வேறு நாம் எதைக் காண முடிகிறது. இவ்வாறு கஷ்டத்திலே உழன்றுகொண்டிருக்கிற மக்களுக்கு 25 ஆண்டுக்கால காங்கிரஸ் கட்சியின் ஆட்சியிலே, மத்திய ஆட்சியிலே, என்ன பலன் ஏற்பட்டது என்று பார்த்தால், அவர்களுடைய நிலைமை மேலும் மோசமாகப் போய்க்கொண்டிருக்கிறது என்ற கருத்தைத்தான் பொருளாதார நிபுணர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் ஒரே ஒரு குறிப்பைச் சொல்லுகிறேன், அதிலே 1960–61-லே 15 ரூபாய்க்குக் குறைவாக நம்முடைய நாட்டிலே பணம் வாங்கி ஏழ்மை நிலைக்கும் கீழான ஒரு நிலையில் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்று பார்த்தால் தமிழ் நாட்டிலே 1961–62 லே 46·45 சதவீதம் இருந்தார்கள். 1966–67 லே 51.98 சதவீதம்பேர் இருந்தார்கள். அதுபோல அகில இந்திய அளவிலே 38 சதவீதமாக இந்த 15 கோடி ரூபாய்க்கு உள்ளாக வாங்கிக் கொண்டிருந்தவர்கள் இன்றைய தினம் 53 சதவீதமாக ஆகி ஏழ்மை அதிகரிக்கிற ஒரு நிலைமை இருக்கிறதே தவிர, எந்தவிதத்திலும் அந்தத் திட்டங்களினாலே பலன் எதும் ஏற்படவில்லை என்று பார்க்கிறோம். நான் ஒரு ஆலோசனை சொல்ல விரும்புகிறேன். மத்தியிலே இருக்கக்கூடிய திட்டக் கமிஷன் இனி நல்லமுறையிலே இயங்க முடியும் என்ற நம்பிக்கையை நாம் இழந்து விட்டோம். காரணம் அகில இந்தியாவுக்கும் திட்டமிடுவது என்பது ஒரு சாதாரண காரியமல்ல என்பதை எல்லோரும் உணர்வார்கள் ஏதாவது ஒரு சிறிய போராட்டம்—பங்களா தேஷ் போராட்டம் போல வந்தால் கூட தாங்கள் போடுகிற திட்டமெல்லாம் மாறி வேறு திட்டங்களைப் போடுகிற அளவுக்கு நிலைமைகள் மாறி வருகின்றன.

(பிற்பகல் 4-50)

காரணம் அகில இந்தியாவுக்குத் திட்டமிடுதல் என்பது ஒரு சாமான்யமான காரியம் இல்லை என்பதை எல்லோரும் உணர்வார்கள். ஏதாவது ஒரு சிறிய. போராட்டம் பங்களா தேஷில் வந்தால்கூட போடப்பட்டிருக்கிற திட்டங்கள் எல்லாம் மாறி வேறு திட்டங்களாக ஆகிவிடுகின்ற அளவில் இருக்கிறது. நம்முடைய மாநிலத்திலே ஒரு திட்டம் போட்டிருக்கிறோம்



1975 மார்ச் 8] [திரு. ஜி. சுவாமிநாதன்]

மாண்புமிகு நண்பர் திரு ஆறுமுகசாமி அவர்கள் ஒரு கேள்வி கேட்டார்கள். மாநிலத் திட்டக் கமிஷனுக்கு எவ்வளவு செலவு செய்தார்கள் என்று கேட்டார்கள். நமது முதலமைச்சர் அவர்கள் ரூ. 38 லட்சம் செலவு செய்கிறோம் என்று சொன்னார்கள். அதற்கு நான் இந்த 38 லட்சம் ரூபாய் பணம் செலவு செய்து அதனாலே என்னென்ன புராஜக்டுகள் என்று சொல்லப்படுகின்ற திட்டங்களுக்கு மத்திய அரசாங்கம் ஒப்புதல் அளித்திருக்கிறது என்று கேட்டேன். அவர்களிடமிருந்து சரியான விளக்கம் எனக்குக் கிடைக்கவில்லை. அல்லது நாம் அதைப் புரிந்து கொள்ளவில்லை. இங்கிருந்து ஆலோசனை என்று சொல்லக்கூடிய அளவிலே அனுப்பத்தான் நம்முடைய திட்டக்கமிஷன் இருக்கிறதே தவிர, அந்த ஆலோசனைகளை அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவிலே இல்லை. இதைப் பார்க்கிறபோது, என்னுடைய ஆலோசனை எல்லாம், மத்தியிலே இருக்கிற திட்டக் கமிஷனைக் கலைத்துவிட்டு வேறு ஏற்பாடு செய்யலாம். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே கூட சொல்லிக்கொண்டிருந்தார்கள் என்னுடைய நண்பர்கள்.

"Tho biggest joke in India is the Planning Commission', என்று சொன்னார்கள்.

இந்திய நாட்டினுடைய பெரிய வேடிக்கை இந்த நாட்டிலே இருக்கக் கூடிய மத்திய திட்டக்கமிஷன் தான் என்று சொன்னார்கள். அந்த அளவிலே இருக்கின்ற திட்டக்கமிஷனைக் கலைத்துவிட்டு, கொடுக்கின்ற பணம் ரூ. 140 கோடியாக இருந்தாலும், ரூ. 120 கோடியாக இருந்தாலும் அது ரூ. 113 கோடியாக இருந்தாலும், இது உங்கள் மாநிலத்துக்கு ஒதுக்கப்பட்ட பணம், அந்தப் பணத்தை மாநில அளவிலே உங்களுடைய திட்டக்கமிஷனிலே எப்படிச் செலவு செய்ய வேண்டும் என்று எண்ணுகிறார்களோ அப்படி நீங்கள் செலவு செய்து கொள்ளலாம் என்று சொல்லிவிடுவார்களானால், நல்ல முறையிலே மாநிலத் திட்டக்கமிஷன் இயங்க முடியும். நம் திட்டங்களைப் போட்டுக் கொள்ள முடியும் என்று நாம் ஆலோசனை சொல்லுகிறோம்.

இரண்டாவதாக நம்முடைய நிதி நிலை அறிக்கையிலே இன்னொரு கருத்தைச் சொன்னார்கள். இங்கே வந்த பைனான்ஸ் கமிஷன் ஆறுவது பைனான்ஸ் கமிஷன், திரு பிரம்மானந்த ரெட்டி அவர்கள் தலைமையிலே அமைக்கப்பட்ட அந்த பைனான்ஸ் கமிஷன் நல்ல முறையிலே பணம் ஒதுக்கித் தரவில்லை என்ற ஒரு கருத்து சொல்லப்படுகிறது. நானும் இங்கே ஒரு. கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். பைனான்ஸ் கமிஷன் என்று சொல்லப்படுகின்ற முறையே தவறான முறை என்று பல முறை சொல்லப்பட்டிருக்கிறது. ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை இந்தக் கமிஷனைப் போடுகிறார்கள். அப்படி வருகின்ற போது அந்த நிதி ஒதுக்கீடுகளை எல்லாம் செய்கின்றார்கள். அப்போது திட்டத்திற்குள்ள நிதி ஒதுக்கீடுகளுக்கு ஒதுக்கும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அதற்கு அப்பால் இடை நடுவே என்ன செய்தார்கள் என்று யாருக்கும் தெரியாது என்ற நிலைமைதான் இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே பெர்மனன்ட்

பைனான்ஸ் கமிஷன் என்ற அடிப்படையிலே, ஆஸ்திரேலியன் பைனான்ஸ் கிராண்ட் கமிஷன் போன்ற ஒரு அமைப்பு இயங்க வேண்டும் என்ற ஒரு கருத்தைச் சொன்னேன். அப்படி அமைக்கப்படுகின்ற நிதிக்கமிஷன் மத்திய மாநிலங்களுக்குப் பொருளைப் பிரித்துக் கொடுக்கும் என்றும் ஒழுங்கான முறையிலே நடக்கும் என்றும் சொல்கிறேன். ஒழுங்கான முறையில் என்று ஏன் சொல்கிறேன் என்றால் அதிலே போடக்கூடியவர்கள் ஒழுங்காக இருந்தால் நிச்சயமாக நல்ல முறையிலே நடைபெறமுடியும். மற்ற நாடுகளிலே நடைபெற்று வருகின்றது. அவர்களுக்கு வேண்டியவர்களை அந்த மத்தியத் திட்டக்கமிஷனிலே கொண்டுவந்து போடுகின்றார்கள் என்பது தவறான காரியம். தற்போது திரு பிரம்மானந்த ரெட்டி அவர்களுக்கு அந்தப் பதவியைக் கொடுத்தார்கள். அந்தத் திட்டக் கமிஷனிலே உயர் மட்டத்திலே இருக்கக்கூடிய ஒரு நீதிபதியைப் போடவேண்டும். ஏனென்றால் நிர்ப்பயமாக நிர்தாட்சண்யமாகச் சொல்லக்கூடியவர்களைப் போடாமல் ஆளும் கட்சிக்கு வேண்டியவர்கள், பின்னாலே மந்திரி பதவி கொடுக்கவேண்டும் என்று நினைப்பவர்கள், மந்திரிசபையிலே இருந்து போனவர்கள், இவர்களை மத்திய திட்டக் கமிஷனிலே போட்டுவிட்டு, மத்திய அரசு என்ன சொல்கின்றதோ அதைக் கேட்டுக்கொண்டிருப்பவர்களை அங்கு தலைவர்களாக ஆக்கினால், நிச்சயமாக அங்கு இருக்கக்கூடிய அபைன் கமிஷன் என்று சொல்லக்கூடிய நிதிக் கமிஷன் நல்ல முறையிலே இயங்காது என்ற கருத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தமிழ் நாட்டினுடைய நிதிநிலை அறிக்கையை ஒரு பற்றுக் குறை பட்ஜெட்டாகப் போட்டிருக்கின்றார்கள் என்பதை நாம் கவனித்தோம். நம்முடைய பற்றுக்குறையைப் பொறுத்த வரையிலே கிட்டத்தட்ட ரூபாய் 26 கோடி பற்றுக்குறை பட்ஜெட் என்று போடப்பட்டிருக்கிறது. ஆனால் பற்றுக்குறை பட்ஜெட்டைப் போடாமல் ஒவ்வொரு பட்ஜெட்டும் சர்ப்ளஸ் பட்ஜெட் என்ற அளவிலேதான் இருக்கவேண்டும் என்று சொல்வது சரியானதா என்று கருத்துச் சொல்ல வேண்டித்தான் இருக்கின்றது. காரணம் உபரியாக இருக்கக்கூடிய பட்ஜெட்டைப் போட்டு இந்தச் சமயத்திலே நிதிக் கமிஷன் அல்லது மற்றவர்களிடத்திலே பணம் கேட்டால் "உபரி பட்ஜெட்டாக இருக்கிறது. நல்ல முறையிலே நீங்கள் நிர்வாகம் செய்து கொண்டிருக்கிறீர்கள். உங்களுடைய வரியினங்களை நல்ல முறையிலே வசூல் செய்து கொண்டிருக்கின்றீர்கள். ஆகவே, உங்களுக்குப் பணம் எதற்கு, உங்களுக்கு உபரியாக இருக்கின்றது" என்று சொல்லி பணத்தைக் குறைக்கின்றார்கள். ஆகவே, மாநில அரசுகள் இப்படிப் பற்றுக்குறை பட்ஜெட்டுக்களைப் போட்டால்தான் ஒழுங்கான . முறையிலே பணம் கிடைக்கும் என்ற அளவிலே செய்வது தவறு. அது மட்டுமல்ல. இப்படி நிதிக் கமிஷனும் மத்திய அரசும் இருப்பது தவறு. கிட்டத்தட்ட ரூபாய் 6 ஆயிரம் கோடிக்கு பற்றுக்குறை பட்ஜெட் போடக்கூடிய மத்திய அரசு, மாநில அரசு ரூபாய் 26 கோடி என்று போடுவது தவறு என்று சொல்வது ஒரு சரியான வாதமாக இருக்க முடியாது என்பதை, தலைவரவர்களே, தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன்.





மேலும், மற்ற மாநிலங்களைப் பொறுத்து அவைகள் போட்டிருக்கின்ற நிதி நிலை அறிக்கைகளைப் பார்க்கின்றபோது, தமிழ் நாட்டில் ரூபாய் 26 கோடி பற்றுக்குறை, கருநாடகத்திலே பற்றுக்குறை ரூபாய் 17·4 கோடி. பஞ்சாப் மிகச் சிறந்து விளங்குகிறது. விவசாயத்திலே சிறந்த மாநிலம் என்று சொல்கின்றார்கள். தொழில் துறையிலே சிறந்த மாநிலம் என்று சொல்கின்றார்கள். மத்திய அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களோடு சேர்ந்து ஓரிடத்திற்குப் போகக்கூடிய ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்படிப் போகிறபோது 'பஞ்சாபிலே மிகச் சிறந்த முறையிலே நடத்துகின்றார்கள். நானே சென்று பலகுடிசைத் தொழில்களையெல்லாம் பார்த்தேன்' என்று சொன்னார்கள். மேலும், அவர் ஓரிடத்திற்குப் போகின்றபோது, அந்தப் பகுதியில் இருப்பவர்களைப் பார்த்து "அரசாங்கத்தினுடைய உதவிகள் என்ன வேண்டியிருக்கின்றது?" என்று கேட்டார்களாம். அப்போது அவர்கள் "அரசாங்கத்தினுடைய உதவிகள் எதுவும் எங்களுக்குத் தேவையில்லை, அரசாங்கம் எங்கள் அருகிலே வராமல் இருந்தால், அதுவே பெரிய உதவி" என்று சொன்னார்களாம். அப்படித் தொழில்கள் வைத்து நடத்திக் கொண்டிருப்பவர்கள் எல்லாம், லைசென்ஸ் இல்லாமலே தான் ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். சிறந்த முறையிலே செய்கின்றார்கள் என்ற அளவுக்கு பஞ்சாப் இருந்துகொண்டிருக்கின்றது. அந்த பஞ்சாப் மாநிலத்திலே அவர்கள் கூட ரூபாய் 6 கோடிக்கு பற்றுக்குறை பட்ஜெட் போட்டிருக்கின்றார்கள். ஒரிசா மாநிலத்திலே பற்றுக்குறை பட்ஜெட் ரூபாய் 6·7 கோடி. ஆனால், ஒரே ஒரு மாநிலம் மட்டும் இவ்வாண்டு ரூபாய் 11 கோடி நெட் சர்ப்ளஸ் என்று சொல்லக்கூடிய அளவிலே உபரியாகப் பட்ஜெட் போட்டிருக்கின்றது. ஆனால் பத்திரிகையிலே உபரி என்று போட்டிருக்கின்றார்களே தவிர, மொத்தத்திலே எடுத்துப் பார்க்கின்றபோது சென்ற ஆண்டுகள் அதற்கு முன் ஆண்டுகள் ஏற்பட்டிருக்கின்ற பற்றுக்குறைகளை எடுத்துப் பார்த்தால், ரூபாய் 27 லட்சம் உபரியாகக் கிடைக்கக்கூடும் என்று நான் நினைக்கிறேன். அது ரூபாய் 27 லட்சம் சர்ப்ளஸ் என்று இருந்தாலும் சரி, அது பற்றுக்குறையாக இருந்தாலும் சரி, என்று வைத்துப் பார்க்கின்றபோது, மற்ற மாநிலங்களுடைய நிதிநிலை அறிக்கைகளை ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது நம்முடைய மாநில அரசு நல்ல முறையில் செய்திருக்கின்றது என்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மத்திய அரசை, மற்ற மாநிலங்களை, விட்டுவிட்டு நம் மாநில அளவிலே விமரிசனத்திற்கு வருகின்றேன். மாநில அரசினுடைய உணவுக்கொள்கை பற்றி நான் ஆளுநர் உரையின் மீது பேசும்போது சில கருத்துக்களைத் தெரிவித்தேன். அதைப்பற்றி இப்போதும் நான் தெரிவிக்க வேண்டிய அவசியத்திலே இருக்கின்றேன்.

நேற்றைய தினம் தஞ்சையிலிருந்துகூட அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் எல்லாம் இங்கே வந்து எங்களைப் பார்த்தார்கள். அங்கே இருக்கும் கெடுபிடிகளைப்பற்றி யெல்லாம் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் முதலமைச்சர் அவர்களைப் கூடப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் முதலமைச்சர் அவர்களைப் பார்த்தார்களா, பார்க்கவில்லையா என்று எனக்குத் தெரியவில்லை. நம்முடைய

மாநிலத்திலே உணவு உற்பத்தியிலே உபரியாக இருக்கக்கூடிய ஒரே ஒரு மாவட்டம் தஞ்சை மாவட்டம் தான் என்று நாம் அறிவோம். ஆனால் அந்தத் தஞ்சை மாவட்டத்திலே நெல்லை வைத்துக் கொண்டு கொடுக்காமல் இருக்கின்றார்கள் என்பது போன்ற ஒரு அபிப்பிராயம் நிலவுகிறது. அது தப்பபிப்பிராயம் என்று நான் சொல்ல மாட்டேன். ஒருவேளை நானே முதலமைச்சர் பொறுப்பில் இருந்தால் கூட அந்த மாதிரி நினைக்கக்கூடும். அன்றையதினம் கூட முதலமைச்சர் அவர்கள் 'உங்களுடைய இதயம் வரண்டு இருக்கின்றது, களஞ்சியமாக இல்லை' என்ற அளவிலே சொன்னார்கள். அதை முரசொலிப் பத்திரிகையிலே கூட எடுத்துப் போட்டார்கள். அவர்கள் சொன்னதை வைத்து அந்தப் பத்திரிகையிலே போட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் தவறாகச் சொன்னதாகச் சொல்லக்கூடாது. உங்களுடைய இதயம் வறண்டிருப்பதாக நான் சொல்லவில்லை. நீங்களாக கற்பனை செய்து கொள்ளக் கூடாது. நான் தஞ்சைக்கு வருகிறேன், நெல் கொடுக்கின்றீர்களா ? என்று கேட்டேன். "சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்!" என்று சொன்னீர்கள். இதயத்தைச் சொல்கின்றீர்களா, களஞ்சியத்தைச் சொல்கின்றீர்களா ? என்று கேட்டேன். அவ்வளவு இலக்கியமாகச் சொன்னதை நீங்கள் அவ்வளவு சாதாரணமாக ஆக்கி உங்களை அவ்வளவு மோசமாக வர்ணித்ததாக நீங்கள் சொல்லக்கூடாது.

திரு. ஜி. சுவாமிநாதன் : அந்த மாதிரி ஒரு பொருள்படும்படி தெரிந்தது என்பதற்காகச் சொல்கின்றேன். தஞ்சை மாவட்டத்தை எடுத்துப் பார்க்கின்றபோது, நேற்றுகூட நமது மதிப்பிற்குரிய நண்பர் திரு. பக்கர் அவர்கள், அங்கே இருக்கக்கூடியவர்களுக்குப் போட்டிருக்கின்ற லெவியையும் விளைச்சலையும் பார்க்கின்றபோது ஒன்றுக்கொன்று சம்பந்தமுள்ளதாக இல்லை என்றுதான் சொன்னார்கள். அவர்களுக்குப் போட்டிருக்கின்ற லெவி 200 மூட்டை, ஆனால் விளைவதோ 150 மூட்டை அல்லது 175 மூட்டைதான் என்று சொன்னார்கள். எனக்கு என்னுடைய கிராமத்திலே மொத்தம் 600 மூட்டை லெவி என்று விதித்திருக்கின்றார்கள். ஆனால், விளைந்தது 400 மூட்டைதான். அதற்கு 600 மூட்டை என்று லெவி போட்டு அனுப்பியிருக்கின்றார்கள். அங்கே இருக்கக்கூடியவர்கள் தாலூகா மட்டத்திலே அவர்கள் வீட்டிற்கே எடுத்துச் செல்ல முடியாத அளவுக்கு அங்கே கெடுபிடிகள் இருந்துகொண்டிருக்கின்றன. நம்முடைய சிவில் சப்ளைஸ் செக்கரட்டரி திரு. சுப்பிரமணியம் ஐ. ஏ. எஸ்., தஞ்சைக்கு வந்தார்கள் என்று செரன்னார்கள். ஒரு இடத்திலே அவர்கள் பேசுகிறபோது, இவர்கள் போகிற இடத்திலே எல்லாம் "விவசாயிகளுக்கு விளைந்திருக்கிறதா இல்லையா என்பதல்ல எங்கள் பிரச்சினை, அரசாங்கம் இவ்வளவு என்று டார்கெட் சொடுக்கின்றது" என்றார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர், "உங்களுக்குச் சரியாக விளையவில்லை என்றால், சொல்லுங்கள், அதற்குத் தகுந்த ஏற்பாடு செய்கிறேன்." என்று சொன்னார்கள். இன்று எல்லாமே டார்கெட்டிலேயேதான் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அது குடும்ப நலத் திட்டமாக இருந்தாலும், ஸ்மால் சேவிங்ஸ் ஆக இருந்தாலும், அந்த டார்கெட்தான் அதிகாரி



களுக்கு முக்கியம். அரசாங்கம் சொல்லிவிட்டது டார்கெட் என்று. நாளைக்கு முதலமைச்சர் அவர்கள் கூப்பிட்டு அவர்களிடம் 4 லட்சம் டன் வேண்டும் என்று கேட்டால், அவர்கள் எவ்வளவு சாமர்த்தியமாக முடித்துவிட்டோம் என்று சொல்கின்ற அளவுக்கு இருக்க வேண்டும் என்று நினைக்கின்றார்கள். அதிகாரிகளுக்கு டார்கெட் மட்டும்தான் தெரியும். திரு. சுப்பிரமணியம் சொன்னதைக் காதால் அங்கே இருப்பவர்கள் கேட்டிருக்கின்றார்கள். அரசாங்கம் டார்கெட் போட்டிருக்கின்றார்கள். அரசாங்கம் 4 லட்சம் டன் அரிசி வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள். விளைந்ததா விளையவில்லையா என்பதுபற்றிக் கவலையில்லை என்று சொன்னதாகச் சொன்னார்கள். அவர்களுக்கு விளைகிறதா என்பதுபற்றிக் கவலை இல்லை. அக்ரிகல்சரல் ஆபரேஷன் என்ற அளவிலே அவர்கள் விவசாயத்திற்குத் தேவையான அளவு வைத்திருக்கின்றார்களா என்பது பற்றிக் கவலை கிடையாது என்று சொன்னார்கள். நேற்றுக்கூட திரு. பக்கர் அவர்கள் சொல்கின்றபோது, 40 நாளைக்கு மேல் உணவு வைத்திருக்க வேண்டாம் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நபிகள் சொன்னதாகச் சொன்னார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, குரானிலே சொன்னார்களா, நபிகள் சொன்னார்களா என்று எனக்குத் தெரியாது. நாங்கள் 40 நாட்களுக்குத் தான் அரிசி வைத்துக் கொள்ள வேண்டும் என்றால், பாக்கி இருக்கும் 9 மாதங்களுக்கு, அடுத்த சாகுபடி வரும் வரை, தஞ்சை மாவட்டத்திலிருப்பவர்களுக்கு அந்த 40 நாட்களுக்குப் பிறகு யார் அரிசி போடுவார்கள் என்ற நிலைமை இருக்கின்றது. அது மட்டுமல்ல தஞ்சையிலிருந்து, வெளிமாவட்டங்களிலேயிருந்து, தங்களுடைய நிலத்திலேயிருந்து ஒரு மூட்டை இரண்டு மூட்டைகூட கொண்டு வர முடியாத துர்ப்பாக்கியம் இருக்கிறது. வெளி மாவட்டங்களிலே இருக்கக்கூடியவர்களுக்கும் இருக்கின்றது. நேற்று நான் இதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றபோது முதலமைச்சர் அவர்கள் "என்னவோ லெவியென்று சொல்கின்றார்கள். எனக்கே சென்னைக்கு அரிசி வருவதற்கு நோட்டீஸ் வந்திருக்கின்றது" என்று சொல்கின்றார்கள். "அவ்வளவு திறமையாக அரசாங்கம் இயங்குகிறது என்று சொன்னார்கள்."

(பிற்பகல் 5·00)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, "நோட்டீஸ்" வந்திருக்கிறது என்று சொல்லவில்லை. "லெவி" கட்டிய ரசீதைக்காட்டிய பிறகுதான் அனுமதித்திருக்கிறார்கள் என்றுதான் சொன்னேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, நானும் அதைத் தான் சொல்லுகிறேன். சென்னையிலே எனக்கு வேண்டுமென்று சொன்னால், "உங்களுடைய 600 மூட்டையையும் போட்டு விட்டு அப்புறம் வேண்டுமானால் நீங்கள் கேட்டால் நாங்கள் அனுமதி கொடுக்கிறோம்" என்று சொல்லுவார்கள். லண்டன் மாநகரத்திலே அரசனுடைய மைந்தனுக

இருந்தாலும் சரி, அல்லது பெரிய சர்ச்சிலாக இருந்தாலும் சரி, காரை ஓட்டிக் கொண்டுபோய் ஏதாவது ஒரு தவறை இழைத்து விட்டால், அங்கு இருக்கக்கூடிய போலீசார் அவருடைய காரை நிறுத்தி அதற்கு ஒரு "சார்ஜ் சீட்" கொடுப்பார்கள் என்று சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வராக இருந்தாலும் கூட லெவி கட்டினால் தான் சென்னைக்கு கொண்டு வர முடியும் என்ற அளவுக்கு திறமையாக தமிழ் நாடு அரசு இருக்கின்றது என்று அவர் சொல்வது கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். ஆனால், நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் முதலமைச்சர் அவர்களுக்கே இந்த நிலைமை என்றால்.......

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சில அதிகாரிகள் இந்த மாதிரி அமைச்சர்களிடத்தில் ரொம்ப கரெக்டா நடந்தால்தான் உத்தியோகத்தில் கரெக்டாக இருக்கிறார்கள் என்று நினைத்துக் கொள்வார்கள் என்ற நினைப்பு. எனக்கு வண்டி ஓட்டி வந்தால் அதற்கு 5 ரூபாய் வாங்கி விடுகிறார்கள். என்ன பண்ணச் சொல்கிறீர்கள்?

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, என்னுடைய பிரச்சினை எல்லாம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களுக்கே இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், எங்களைப் போன்று சாதாரணமாக இருக்கக்கூடியவர்களுக்கு என்ன நிலைமை ஏற்பட்டிருக்கும் என்பதை நீங்கள் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும் என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். நான் உண்மையிலேயே அரசுக்கு ஒரு ஆலோசனை சொல்ல வேண்டுமென்பதற்காகத்தான் இங்கு சொல்கிறேன். இவ்வளவு நாட்களாக அரசு கையாண்டு வந்திருக்கின்ற "டுயல் பாலிசி" படி அங்கு உள்ள மில்லர்களிடமிருந்து அரசு 50 சதவிகிதம் வாங்கி அரசுக்கு எவ்வளவு உபரி வேண்டுமோ அவ்வளவு உபரி எடுத்துக் கொள்ளலாம் என்ற கருத்தைத்தான் சொன்னேன். ஆனால், தாங்கள் போனால் எல்லாவற்றையும் கொண்டுவந்து விடலாமென்ற அளவிலே அரசுக்கு அதிகாரிகள் ஆலோசனை சொல்லியிருப்பார்கள். ஆனால், என்ன நடந்தது? தஞ்சையிலிருந்து 4 இலட்சம் டன் அரிசி நெல் லெவிக்காக மட்டுமே வாங்கலாமென்று சொல்லப்பட்டது. 75 சதவிகிதம் இப்பொழுது சம்பா அறுவடை முடிந்து விட்டது. தாளடியிலே கிட்டத்தட்ட 75 சதவிகிதம் பயனேயில்லை என்ற அளவிலே தஞ்சை மாவட்டத்திலே இருக்கிறது. ஆனால் அரசுக்கு எவ்வளவு கிடைத்திருக்கிறது என்றால், நான் அன்றைக்கே சொன்ன மாதிரி, அமைச்சர் அவர்களுக்குத் தெரியும்—$1\frac{1}{4}$ இலட்சம் டன்தான் வந்திருக்கிறது. அந்த $1\frac{1}{4}$ இலட்சம் டன்னும் எது என்று பார்த்தால் லெவியில் சம்பா, தாளடி இரண்டும் சேர்த்துத்தான் $1\frac{1}{4}$ இலட்சம் டன் வந்திருக்கிறது. இன்னும் பார்த்தால் $1\frac{1}{2}$ இலட்சம் டன் கூட அரசாங்கத்திற்குத் தேறாது என்ற முறையிலே இருக்கிறது என்று சொன்னால், அதிகாரிகள் போய் இப்படிக் கேட்பது ஏன்? அதனால் அரசாங்கத்துக்கு அவப் பெயர் தான் வரும் என்பதைத் தவிர வேறு எந்தவிதமான பயனையும் அரசாங்கம் அடைய முடியாது. ஏதோ பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்பதல்ல. நான் இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நம் முடைய நாட்டிலே உண்மையாகவே உணவுத் துறையிலே ஊக்கம் ஏற்பட





வேண்டுமானால், அங்கு இருக்கக்கூடியவர்களுக்கு ஆதாயம் வரக்கூடிய அளவிலே அவர்களுக்கு ஏதாவது ஓரளவாகிலும் செய்ய வேண்டும். "இன்செண்டிவ் போனஸ்" மாதிரிச் செய்ய வேண்டும். அப்படிச் செய்ய வில்லையென்றால், சாகுபடி செய்வதிலே செலவு 54 ரூபாயாக இருக்க 53 ரூபாய் நெல்லுக்குக் கொடுக்கிறேன் என்று சொன்னால், யாருமே கையிலே இருப்பதைப் போடாத நிலைமைதான் வரும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், இன்னொன்றைக்கூட நான் சொல்வேன். சென்ற சம்பா அறு வடையின்போது அரசு மூட்டைக்கு 80 ரூபாய் கொடுத்து வாங்கியிருக்கிறது. இப்பொழுது அவர்களிடமிருந்து 54 ரூபாய் கொடுத்துக் கேட்டால், மிகவும் மனச் சங்கடப்படுகிறார்கள். அதிலே அவர்களுக்கு நஷ்டம் ஏற்படக் கூடிய நிலைமை இருக்கிறதே என்ற நினைப்பும் அவர்களுக்கு ஏற்படுகிறது. ஓரளவுக்காவது அவர்களுக்கு ஊக்கம் கொடுத்தால்தான், கையில் இருப்பதை அரசாங்கத்துக்குக் கொடுப்போமே, நாமாவது எப்படியாவது பார்த்துக் கொள்ளலாம் என்று நினைக்கக் கூடிய நிலைமை அவர்களுக்கு வரும். அப்பொழுது அரசுக்கு நிச்சயமாக உபரி கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பும் ஏற்படும். தானாகக் கொண்டுவந்து கொடுப்பார்கள். அதை விட்டுவிட்டு, வீடு வீடாகச் சென்று ஒவ்வொரு வீடாகப் பார்ப்போம் என்ற ஒரு நிலைமையை ஏற்படுத்தினால், அங்கு இருக்கக்கூடிய இலட்சக் கணக்கான மக்களிடத்திலே அரசாங்கத்துக்கு அவப் பெயரும், கெட்ட பெயரும் ஏற்படும் என்பதோடு நம் கொள்கையை நிறைவேற்ற முடியாத நிலைமை கூட உருவாகும் என்பதை நான் உங்களுக்குச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, முன்பு நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். குவிண்டாலுக்கு 74 ரூபாய்க்கு மேல் தரக் கூடாது என்று மத்திய அரசு விலை நிர்ணயித்து, நாம் அதையும் மீறி இரண்டு மூன்று மாத காலம் கொடுத்து, அதற்கு ஒரு தடை விதிக்கின்ற அளவிற்கு நண்பர் திரு. ஷிண்டே அவர்களே இங்கு வந்து "நீங்கள் அதைக் கொடுக்கக்கூடாது" என்று கூறி, மறுபடியும் டில்லிக்குச் சென்று திரு. ஜெகஜீவன்ராம் அவர்களிடத்திலே மீண்டும் ஒரு மாத காலம் அவகாசம் பெற்று 74 ரூபாய்க்கு மேல் 90 ரூபாய் கொடுத்துக்கொண்டிருந்தோம். அந்த அவகாசம் முடிந்த பிறகு 74 ரூபாய் தான் நீங்கள் கொடுக்க வேண்டும். 74 ரூபாய்க்கு மேல் கண்டிப் பாகக் கொடுக்கக்கூடாது என்று மத்திய அரசு கூறிவிட்டது. நாம் 74 ரூபாய் என்ற அளவுக்கு மேலாக போனஸ் என்கின்ற அளவிலே ஒரு 10 ரூபாய், போக்குவரத்துச் செலவு என்கின்ற அளவிலே ஒரு 5 ரூபாய் ஆக கிட்டத்தட்ட 89 ரூபாய் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இதைவிட ஒரு மாநில அரசு என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்ல வேண்டு கின்றேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, அவற்றையெல்லாம் கொடுத்தும் 54 ரூபாய் தான் வருகிறது, அதைத்தான் நான் சொல்லு கிறேன். சென்ற முறை குறுவைக்கு நாம் 54 ரூபாய் கொடுத்தோம். இந்த முறை குறுவைக்கும் 54 ரூபாய் தான் கொடுக்கிறோம்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை.)

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்</u> : துணைத் தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்லுவது குவிண்டால் கணக்கு அல்ல. மூட்டைக் கணக்கு. 100 கிலோ கொண்ட ஒரு குவிண்டாலுக்கு 74 ரூபாய் கொடுக்கவேண்டுமென்று மத்திய அரசு நிர்ணயித்திருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சொல்லுவது 54 கிலோ கொண்ட மூட்டை என்று நினைக்கிறேன்.

<u>திரு. ஜி. சுவாமிநாதன் :</u> துணைத் தலைவரவர்களே, நான் மூட்டை கணக்குப்படி, 54 கிலோ கணக்குப்படி தான் சொல்லுகிறேன். 54 கிலோ கொண்ட தஞ்சாவூர் மூட்டைக்கு 44 ரூபாய் தான் வரும். அதற்கு மேலாக 10 ரூபாய் கொடுத்திருக்கிறார்கள், அதற்கு மேலாக 5 ரூபாய் தருகிறோம் என்று சொல்லுகிறார்கள். அவ்வாறு வரக்கூடிய எல்லா வற்றையும் சேர்த்து கிட்டத்தட்ட 54 ரூபாய் அளவுக்குத்தான் நிரந்தரமாகக் கிடைக்கக்கூடிய ஒரு வழி ஏற்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காரைக் கேட்டோம் என்று சொல்லுகிறார்கள். "அக்ரிகல்சுரல் பிரைஸ் கமிஷன்" இதற்காக ஒரு விலையை நிர்ணயிக்கிறது. இவர்கள் இந்த விலையைத்தான் கொடுக்கவேண்டு மென்று என்ன கணக்கை வைத்துக்கொண்டு சொல்லுகிறார்களோ அது ஆண்டவனுக்குத்தான் தெரியும். அந்த விலைக்குத்தான் நீங்கள் வாங்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். நம்முடைய பேரவையிலே நம் முதலமைச்சர் அவர்கள் மாநில சுயாட்சிக்காக சிறைக்கும் கூட செல்லத் தயார் என்று சொல்லுகின்றார்கள். அது 4 நாட்களாக பத்திரிகையிலே வந்துகொண்டே இருக்கிறது. நான் சொல்லுவேன் நம்முடைய மாநிலத் திலே இருக்கும் விவசாயிகளுக்கு நல்ல முறையிலே விலையைக் கொடுத்து அதற்காக மத்திய சர்க்கார் நம்மீது போராடத் தொடங்கினால், அதற்காக நாம் போராடினால், அதுதான் உண்மையான சுயாட்சி. அது மாநில சுயாட்சிக் கோரிக்கையாக, நாட்டிலுள்ள விவசாயிகளுக்காக, ஏழை எளிய மக்களுக்காக . . .

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்</u> : அவ்வாறு விவசாயிகளுக்கு என்று ஆரம்பிக்கப்படும் மாநில சுயாட்சிப் போராட்டத்துக்கு விவசாயிகளும் அரசோடு சேர்ந்து வருவார்களா என்று தெரிந்தால், நன்றாக இருக்கும்.

<u>திரு. ஜி. சுவாமிநாதன் :</u> துணைத் தலைவரவர்களே, இப்பொழுதும் விவசாயிகள் முதலமைச்சர் பக்கம் தான் இருக்கிறார்கள். இப்போது விவசாயிகள் முதலமைச்சர் பக்கம் இல்லாததுபோல அவர்கள் சேர்ந்து வருவார்களா என்று மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் கேட்டார்கள். இப்பொழுதும் முதலமைச்சரோடுதான் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் நிச்சயமாக வருவார்கள். விவசாயிகளுக்கு அதிகக் கொள்முதல் விலை கொடுக்க டெல்லி சர்க்கார் தடையாக இருந்தால் இதையே கோரிக்கை ஆக்கிப் போராடவேண்டும். இதுதான் உண்மையான "மாநில சுயாட்சி". அங்கே மத்திய சர்க்கார் கோதுமைக்கு அதிகமான விலை கொடுக்கிறார்கள்.



இதற்காக போராட்டம் நடந்தால், நாங்களும் சேரத் தயாராக இருக்கிறோம் என்பதை முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : துணைத் தலைவர் அவர்களே, கோதுமைக்கு டெல்லி சர்க்கார் அதிக விலை கொடுத்து வாங்குவதையும் ஆனால் நெல் லெவிக்கு நியாயமான விலை நிர்ணயிக்க மத்திய அரசு மறுப்பதையும் குறிப்பிட்டு, நண்பர் திரு. சுவாமிநாதன் இந்தக் கோரிக் கைக்கே போராட்டம் நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். அப்படி மத்திய அரசு நிர்ணயித்திருக்கும் விலைக்கு நாம் லெவி கொள்முதல் செய்யாமல் நாமே அதிக விலை கொடுத்து லெவி வாங்கினால், மத்திய அரசு என்ன செய்யும் என்று நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கேட்டார்கள். டெல்லி சர்க்கார் சொல்லும் கொள்முதல் விலையைப் புறக்கணித்து அதிக விலைதான் கொடுப்போம் என்று நாம் அறிவித்தால், இந்த வறட்சி நேரத்தில் அவர்கள் மாதந்தோறும் கொடுக்கும் 50 ஆயிரம் டன் கோதுமையை நிறுத்திவிடுவார்கள் என்று நான் குறிப் பிட்டேன். அப்படிப்பட்ட ஒரு நிலைமை தமிழ் நாட்டுக்கு வந்தால், மக்களை பட்டினி போட்டுப் போராடவேண்டுமா என்று இங்கிருப்பவர்கள் கேட்பார்கள். மேலும், போராட்டம் என்பது ஒரு நாள் அறிவித்துவிட்டு, மறுநாள் உடனடியாக நடத்துவதல்ல. கொஞ்சம் கொஞ்சமாகத்தான் போராடவேண்டும். மாநில சுயாட்சியை நண்பர் திரு. சுவாமிநாதன் வரவேற்றதற்கு நன்றி. அவர் தெரிவித்த ஆதரவை "மாநில சுயாட்சி"க்குக் கொடுத்த முதல் போர் குரலாக நான் எடுத்துக்கொள்ளுகின்றேன்.

<u>திரு. ஜி. சுவாமிநாதன் :</u> துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்துக்கும் தீர்த்து வைப்பதற்கென்று பிரச்சினைகள் வேண்டும். இது நல்ல பிரச்சினையாக இருக்கிறது என்பதற்காகத்தான் நான் சொன் னேன். மத்திய அரசு கோதுமை கொடுக்காவிட்டால் என்ன செய்வது என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அவர்களும் அரசி யலிலே இருக்கக்கூடியவர்கள். அப்படி தமிழ் நாட்டு மக்களைப் பட்டினி போட்டுவிட்டு அவர்கள் நிம்மதியாக அரசோச்சும் நிலை இன்றைக்கு இல்லை. இங்கிருந்து 39 இடங்களுக்கும் பேரம் பேசி 30 இடமாவது வாங்கிக்கொடுத்து, அங்கு போனபின்தான், அங்குள்ள ஆட்சி நிலைக்கும் என்ற நிலைமையிலே அவர்களும் இருந்துகொண்டிருக்கிறார்கள். பாராளு மன்றத்துக்கு ஏதோ இங்கு இருக்கக்கூடியவர்களை இங்கிருக்கக்கூடிய காங் கிரஸ்காரர்கள் மட்டும் தேர்ந்தெடுத்து அனுப்பப்போவதில்லை. அவர் களுக்கும் அரசியல் நடக்கவேண்டும். வடநாட்டிலே இருக்கக்கூடிய மாநிலங் கள் இந்திரா சர்க்காருக்கு ஓட்டுப்போடுகின்ற நிலைமை இல்லை. ஆகவே தென் பிரதேசங்களில் இருக்கும் மாநிலங்களை நம்பித் தான் இன்றையதினம் மத்தியிலே அரசியல் நடந்தாக வேண்டிய நிலைமை இருக்கிறது. சென்ற முறை நீங்கள் அவர்களுக்கு உதவி செய்து அவர்கள் எல்லாம் பாராளுமன்றத்துக்குப் போனார்கள். இதிலே மற்றவர்கள் உதவியை வாங்கிக்கொண்டு போவதில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவ்வளவு விரைவாக தமிழ் நாட்டு மக்களைப் பட்டினி போட்டு விட்டு, அப்படித்தான் அரசியல் நடத்துவேன் என்று சொல்லக்கூடிய

துணிவு அவர்களுக்கு வருமா என்பதை மட்டும் நான் நிச்சயமாக உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்றைன்று அவர்கள் கொடுத்ததற்கும் நாம் கொடுப்பதற்கும் ஒரு இடைவெளியை வைத்து, நம்முடைய ஆட்சியை சங்கடத்திலே வைக்க வேண்டுமென்று தான் மத்திய ஆட்சி நினைக்கிறது என்பதை நான் திட்டவட்டமாக அரசுக்குச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் நம்முடைய ஆளுநர் அவர்களுடைய உரையாக இருந்தாலும், நிதிநிலை அறிக்கையாக இருந்தாலும் கூட, ஏதோ மத்திய அரசு ஓரளவுக்குக் கருணை காட்டும், ஓரளவுக்கு நமக்கு உதவி செய்யும் என்பது போன்ற அபிப்பிராயம் மாநில அரசுக்கு இன்னும் கொஞ்சம் கொஞ்சம் இருக்கிற மாதிரித் தெரிகிறது. அவர்கள் நிச்சயமாக ஒரு முடிவுக்கு வந்து விட்டார்கள் என்று நான் நினைக்கத் தோன்றுகிறது. உங்களை நிச்சயமில்லாத ஒரு நிலையிலே வைத்துக்கொண்டேயிருக்கவேண்டும் என்பதுதான் அவர்களுடைய முடிவே தவிர வேறு அல்ல. அவர்களோடு போராட வேண்டுமென்ற காரணத்தினால், அந்தப் போராட்ட நிலைமையை நீங்கள் விரைவாக உருவாக்கிக்கொள்வது நல்லது என்ற என்னுடைய யோசனையைச் சொல்ல விரும்புகிறேன். காரணம் என்ன ? ஆதி காலம்தொட்டு சுதந்திரா கட்சியானது அவர்களுடைய பிளானிங் கமிஷனை எதிர்த்தது. நேருவினுடைய பரம்பரை போன்றவர்களையே எதிர்த்து ராஜாஜி போர்க்கொடி தூக்கினார் தமிழகத்திலே. அதே கொள்கையில் உறுதியாக நாங்கள் அதிகம் பேர் இல்லாவிட்டாலும் கொஞ்சம் பேர்ாவது இருக்கிறோம். ஆகவே, நீங்கள் போராடினால் அந்தப் போராட்டத்தின் ஆரம்பத்தில் நாங்களும் உங்களுக்கு உறுதுணையாக இருப்போம் என்ற என்னுடைய கருத்தை நான் சொல்லிக் கொள்வேன்.

அடுத்தபடியாக, உணவுக் கொள்கையைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். உணவுக் கொள்கையைப் பொறுத்த வரையிலே,

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் மணி அடித்தார்.)

எப்படி இந்தப் பிரச்சினையை அணுகுகிறோம் என்பது மிக முக்கியமான காரியம். உணவுத் துறையை நிர்வகிக்கும் அமைச்சர் பதவி ஒரு முக்கியமான பதவி. உணவுப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டுமென்றால், நிரந்தரமாக உணவுத் துறைக்கு என்று ஒரு அமைச்சர் இருப்பது அவசியம். ஆனால், உணவு அமைச்சர்களைப் பொறுத்தவரையிலே, அடிக்கடி இலாக்கா மாற்றப்படுகிறது. கிட்டத்தட்ட 1971ஆம் ஆண்டுக்கும் 1975ஆம் ஆண்டுக்கும் இடையே நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் 3 அமைச்சர்கள் மாறியிருக்கிறார்கள்.

[பிற்பகல் 5-10]

முதலிலே உணவுத் துறையிலே திரு. ப. உ. சண்முகம் அவர்கள் அமைச்சராக இருந்தார்கள். அதற்கு அடுத்தபடி எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. மன்னை நாராயணசாமி அவர்கள் உணவுத் துறை அமைச்சராக இருந்தார். இப்பொழுது திரு. மாதவன் வந்திருக்கிறார்.





மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, உணவு நிலைமை எப்படி இருக்கிறது என்பதை உருவகப்படுத்துவதற்காக முதலில் திரு. மன்னை இருந்தார். இப்பொழுது திரு. மாதவன் இருக்கிறார். (சிரிப்பு).

திரு. ஜி. சுவாமிநாதன் : அரசாங்கக் கொள்கை தொடர்ந்து நடைபெற வேண்டுமென்றால், ஒரு அமைச்சர் தொடர்ந்து இருந்தால்தான் உறுதியாக அந்தக் கொள்கை இருக்க முடியும். முன்பே அந்தத் துறை எப்படியிருக்கும் என்று தெரிந்துகொண்டு யாரும் அமைச்சராக வர முடியாது அந்தத் துறைக்கு வந்து இரண்டு மூன்று ஆண்டுகள் ஆனபிறகுதான் அந்தத் துறையைப் புரிந்துகொள்ள முடியும். ஒரு துறையிலே அமைச்சராக இருப்பவர்கள் குறைந்தபட்சம் ஐந்தாண்டு காலமாவது தொடர்ந்து இருந்தால்தான், அந்தத் துறையைப் புரிந்துகொள்ள முடியும். உணவுத் துறையிலே இப்படி மாறிக்கொண்டே இருந்தால் நிலையான கொள்கை இல்லாமல் போய்விடும். மற்றத் துறைகளிலேயும் இப்படித்தான். விவசாயத் துறையிலே 1971-74-க்குள் மூன்று அமைச்சர்கள் மாறியிருக்கிறார்கள். முதலிலே திரு. அன்பில் தர்மலிங்கம் இருந்தார். அடுத்து திரு. மன்னை நாராயணசாமி இருந்தார். பிறகு திரு. ஆதித்தனார் இருக்கிறார். அடுத்து, ரெவின்யூ டிபார்ட்மெண்டிலே, மூன்று ஆண்டுகளுக்குள் மூன்று அமைச்சர்கள் மாறியிருக்கிறார்கள். முதலில் திரு. சாதிக் பாட்சா. பிறகு திரு. சண்முகம். அதற்குப் பிறகு திரு. அன்பில் தர்மலிங்கம். அதேபோல கூட்டுறவுத் துறையை எடுத்துக்கொண்டால், அதுவும் விவசாயத்தோடு இணைந்த துறை. அந்தத் துறையிலே 1971-74-க்குள், திரு. ஆதித்தனார், திரு. மன்னை நாராயணசாமி, திரு. மாதவன் வந்திருக்கிறார்கள். இப்படி அமைச்சர்கள் மாறிக்கொண்டேயிருந்தால், நிலையான கொள்கை அரசுக்கு இருக்க முடியாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். அமைச்சர்கள் மட்டும் மாறுவதில்லை. அந்தத் துறையிலே இருக்கும் அதிகாரிகள் அமைச்சர்களுக்கு நல்ல ஆலோசனை சொல்கிறார்கள். ஆகவே, அமைச்சர்கள் மாறினாலும், அதிகாரிகள் நல்ல ஆலோசனை சொல்வதால், அந்தத் துறை ஒழுங்காக இயங்கும் என்று சொல்லக்கூடும். ஆனால் அந்த அதிகாரிகளாவது நிலையாக இருக்கிறார்களா என்று பார்த்தால், அவர்களும் நிலையாக இல்லை. உணவுத்துறையை எடுத்துக் கொண்டால், 1971-74-க்குள், முதலிலே திரு. இராமச்சந்தர், அடுத்து திரு. ஜே. எஸ். பாங்கோ, அடுத்தபடி திரு. கே. எஸ். சிவசுப்பிரமணியம். இப்பொழுது திரு. திரவியம். இப்படி நான்கு செயலாளர்கள் மூன்று ஆண்டுகளிலே என்று இருக்கிறது. அடுத்தபடி, விவசாயத் துறையிலே உள்ள செயலாளர்களைப் பார்க்கிறபோது . . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவர் அவர்களே, இது பெரிய புகாராக ஆகிவிடக்கூடாது. திரு. சிவசுப்பிரமணியம், இதய நோயின் காரணமாக மருத்துவ மனையிலே சேர்ந்துவிட்டார். திரு. பாங்கோ அவர்களுக்கு காலிலே ஒரு ஆப்பரேஷன் செய்யப்பட்டு, மருத்துவ மனைக்குச் செல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டு, நடமாட முடியாத நிலைமையில் இருந்தார். இப்பொழுது திரு. திரவியம் வந்திருக்கிறார். அவ்வளவுதான்.

திரு ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவர் அவர்களே, நாம் பல்வேறு காரணங்களைக் கூறலாம். ஆனால் வெளியிலே இருப்பவர்கள், வருகிறார்கள், போய்க்கொண்டிருக்கிறார்கள், நிலையாக இல்லை என்றுதான் சொல்கிறார்கள். அதைப் போலவே விவசாயத் துறையைப் பார்த்தால்கூட, நான்கு செயலாளர்கள். திரு. பாலகிருஷ்ணன், செல்வி அன்னா ஜார்ஜ், திரு. வேதநாராயணன், திரு. கே. சொக்கலிங்கம். அடுத்தபடியாக, கூட்டுறவுத் துறையிலே கூட்டுறவு ரெஜிஸ்டிராராக 1971-74க்குள் ஐந்து பேர் வந்திருக்கிறார்கள். திரு. கே. எஸ். நரசிம்மன், திரு. கே. ஜே. எம். ஷெட்டி, திரு. பெல்லியப்பா, திரு. கிருஷ்ணசாமி, திரு. விஜயராகவன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவர் அவர்களே, அவர்களெல்லாம் டெபுடேஷனிலே டெல்லிக்குப் போகிறார்கள். அந்த இடம் காலியாகும்போது, இன்னொரு செயலாளரைப் போடவேண்டியிருக்கிறது. அப்படிப் போடுகிறபோது இப்படிப்பட்ட சைக்கிள் வருகிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: துணைத் தலைவர் அவர்களே திரு. பாலகிருஷ்ணன் இறந்து போய்விட்டார். செல்வி அன்னா ஜார்ஜ் டெல்லிக்குப் போய் ஐந்து வருஷம் ஆகிறது. 1971-74க்கு 4 ஆண்டுகள் தான். ஐந்து ஆண்டுகள் எப்படி வந்தது ?

திரு. ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவர் அவர்களே, ஆண்டுகள் நான்காக இருக்கலாம். நான் சொல்வதெல்லாம், அரசாங்கத்தின் கொள்கை நிலையாக இருக்கவேண்டும் என்றால், ஒரே அமைச்சராக இருக்க வேண்டும் என்பதுதான். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் நெடுநாட்களாக ஒரே துறையிலே இருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரே துறையிலே இருக்கிறார்கள். மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரே துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பல விஷயங்களைப் புரிந்துகொண்டு செயலாற்றுகிறார்கள். அது பாராட்டக்கூடியது. அப்படித் தொடர்ந்து இருக்கலாம். ஆனால் ஓராண்டு இரண்டாண்டு இருந்தால் போதாது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : துணைத் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்களைப் பாராட்ட வேண்டுமென்பதற்காக இதையெல்லாம் சொல்லிக்கொண்டு வருகிறார்களா, அல்லது கல்வி அமைச்சர் அவர்களை மாற்றவேண்டும் என்பதற்காகச் சொல்கிறார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, இதிலே மாற்றங்கள் அதிகம் இல்லை என்பதற்கு இதுவும் ஒரு எடுத்துக்காட்டு. ஆக அவசியமானபோதுதான் மாற்றம் ஏற்படுகிறதே தவிர, இல்லையென்றால் மாற்றம் இல்லை என்பதற்கு இது எடுத்துக் காட்டு.

திரு. ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவர் அவர்களே, முடிவாக ஒரேயொரு விஷயத்தை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். நமது கல்வி அமைச்சர் அவர்கள் இருக்கின்ற காரணத்தாலே சொல்கிறேன்,



கல்வித் துறைக்கு நிதிநிலை அறிக்கையிலே 25 சதவீதம் செலவு செய்கிறோம் என்று சொல்கிறார்கள். உயர்நிலைப் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் நிறைய செலவு செய்கிறோம் என்கிறார்கள். இலட்சக்கணக்கான பேர் கல்லூரிகளிலேயும் பள்ளிகளிலேயும் சேர்ந்திருக்கலாம். ஆனால் கல்வியின் நிலைமை என்ன ? குவான்டிடி இருக்கிறது. ஆனால் குவாலிடி என்று சொல்லக்கூடிய தரம் இருக்கிறதா ? அண்மையில் பப்ளிக் சர்விஸ் கமிஷன் நடத்திய தேர்வை பட்டதாரிகள் எழுதினார்கள். அவர்கள் "ஜெனரல் நாலட்ஜ்" என்ற பொது அறிவுக்கான தாளை எழுதியிருக்கிறார்கள். அதிலே சில தகவல்களை கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்காக, மாணவர்களின், அதுவும் பட்டதாரி மாணவர்களின் தரம் எப்படி இருக்கிறது என்பதற்காகச் சொல்லுகிறேன்.

ரஷ்யாவின் பிரதமர் யார் என்பது கேள்வி. அதற்கு எழுதிய பதில் மா சே துங். அதிபர் நிக்சன்.

பி. எல். 480 என்றால் என்ன ? இது கேள்வி. இதற்கு பதில்: அது ஒரு வகை நெல்லின் பெயர்.

டாக்டர் கிஸ்ஸிங்கர் என்பவர் யார் ? பதில் : ரஷ்யாவினுடைய வெளிநாட்டு மந்திரி.

அடாமிக் சென்ட்டர் பிரசிடென்ட் யார் ? பதில் : இந்தியாவின் பிரதமர்.

இப்படிப்பட்ட பதில்களை ஒருவர் எழுதவில்லை. பலர் எழுதியிருக்கிறார்கள்.

பாரத் ரத்னா பட்டம் பெற்றவர் யார் ? இதற்குப் பதில் : எம்.ஜி.ஆர்., சஞ்சீவ் குமார், டாக்டர் கிஸ்ஸிங்கர்.

கீதாஞ்சலி எழுதியவர் யார் ? இராஜாஜி.

W. H. O. என்றால் என்ன ? விமன் ஹெல்த் ஆர்கனைசேஷன்.

இதைவிட இன்னும் மோசமான முறையிலே கல்வியின் தரம் அமைந்திருக்கமுடியாது என்பதையும் கல்வி அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, இந்தத் துறையிலே இன்னும் அதிகமான முயற்சி செய்யவேண்டும் என்று வேண்டிக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். எஸ். ராமசாமி படையாச்சி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் இந்த மன்றத்தில் கொண்டுவரப்பட்ட நிதிநிலை அறிக்கையின்மீது சில கருத்துக்களைச் சொல்ல நான் முற்படுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டிருப்பது இந்த மாநிலத்தினுடைய வறட்சி நிலைமைபற்றிதான். வறட்சியினால்

வந்த விளைவுகள், அவற்றை நிவர்த்தி செய்யவேண்டிய முயற்சிகள், அதற்கான உதவிகள், அதற்கு மாநில அரசும் மத்திய அரசும் சேர்ந்து செய்கின்ற உதவிகள் முதலியன பற்றி யெல்லாம் விளக்கமாகக் கூறியிருக்கின்றார். இந்த வறட்சியும் மாநிலத்திற்குப் புதியது அல்ல. இந்த அரசுக்கும் அது புதிய நிலை அல்ல. 1969லே இந்த மாநிலத்தில் வறட்சி நிலை வந்து, அதை இந்த அரசு சமாளித்திருக்கிறது. அடுத்து 1972ஆம் ஆண்டிலே வெள்ளப் பாழினால் ஏற்பட்ட விபரீதத்திற்கும் இந்த அரசு ஈடுகொடுத்து சமாளித்திருக்கிறது. அதற்கான உதவிகளையெல்லாம் செய்து நல்ல நிலையை உருவாக்கியிருக்கின்றது. இன்றைக்கு நமது தமிழகத்தில் வறட்சிநிலை பொதுவாகப் பெருவாரியாக இருக்கின்றது. கடந்த காலத்தை விட இப்பொழுது வறட்சியினால் மக்கள் அதிக அவதிக்குள்ளாகி இருக்கின்றார்கள். ஆனால் அவற்றையெல்லாம் சமாளிக்க மாநில அரசு முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கின்றது.

(பிற்பகல் 5-20)

சென்ற முறை வறட்சியால் பாதிக்கப்பட்டிருந்த நேரத்திலே அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்களுக்குச் செய்த உதவிகளிலே பல முறைகேடுகள் இருந்ததாக பல குற்றச்சாட்டுகளை பல அரசியல் கட்சிகளும் மத்திய அரசாங்கமும் எடுத்துக்கூறியதைப் பார்த்தோம். அவற்றுக்கு நமது முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் உத்தியோக பூர்வமாக பதிலைத் தந்திருக்கின்றார்கள். வறட்சி நிவாரணப் பணிகள் பற்றிய மாநில மத்திய ஆடிட் ரிப்போர்ட்டுகளையெல்லாம் எடுத்துக்காட்டி, அவற்றிலே இத்தகைய குற்றங்கள் குறைகள் இருப்பதாகச் சொல்லவில்லை என்றும் அந்த அறிக்கைகளை அங்கீகாரம் செய்திருக்கின்றார்கள் என்றும் முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் கீழ்மட்டத்திலே இங்கும் அங்குமாக சில தவறுகள் நடைபெற்றிருக்கலாம். உதாரணமாக 1972லே தென்னாற்காடு மாவட்டத்திலே பல உதவிப் பணிகளைச் செய்திருந்தாலும் — உதாரணமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடிசைகளை மீண்டும் கட்டிக்கொள்வதற்காக குடும்பம் ஒன்றுக்கு ரூ. 80 வீதம் உதவித்தொகையை அளித்தார்கள். ஆனால் அரசாங்கம் நல்லெண்ணத்தோடு அத்தகைய உதவிகளைச் செய்திருந்தாலும், அதிலும் சிலர் தங்கள் குடிசைகளைப் பிரித்து வைத்துக்கொண்டு உதவிப்பணத்தை வாங்கியிருக்கின்றார்கள். இன்னும் விழுப்புரம் தாலூக்கா என்று நினைக்கிறேன், அங்கே ஒரு கிராமம் முழுவதும் ஒன்று சேர்ந்து உள்ளூர் அதிகாரிகள், அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் இவர்களையெல்லாம் வைத்துக்கொண்டு அப்படிப்பட்ட உதவிப்பணத்தை வாங்கி கோயில் திருப்பணி செய்திருக்கின்றார்கள் என்று கேள்விப்படும்போது என்ன சொல்லுவது என்று தெரியவில்லை. நாம் எல்லாம் சேர்ந்ததுதான் அரசாங்கம். அப்படி இருக்கும்போது கீழ்மட்டத்திலே இப்படி ஒரு சிலர் ஏமாற்றுகிறதைப் பார்க்கும்போது, வேதனையாகத்தான் இருக்கின்றது. இப்படியெல்லாம் கடந்த காலத்திலே நடந்திருப்பதை எண்ணிப்பார்த்து, இப்போது செய்யும் உதவிகளிலே அரசாங்கம் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்று இதைச் சொல்லுகிறேன். குற்றம் அல்லது குறை சொல்லவேண்டுமென்று இவற்றைச் சொல்லவில்லை.





மற்றபடி இந்த நிதிநிலை அறிக்கையில் முக்கியமாகக் கூறியிருப்பது விலைவாசி ஏற்றத்தைப் பற்றித்தான். விலைவாசி ஏற்றம் என்பது தமிழகத்திலே மட்டுமில்லை, நாடு முழுவதிலும், உலகம் முழுவதிலும் இருக்கின்றது என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதிலேகூட அரசாங்க ஊழியர்கள், ஆலைத் தொழிலாளர்கள் என்று சங்கம் வைத்துக்கொண்டிருப்பவர்கள் இந்த விலைவாசி ஏற்றத்துக்குத் தக்கபடி ஊதிய உயர்வு தங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று பலவிதமான நிர்பந்தங்களைக் கொண்டு வந்து, சில நேரங்களிலே வேலை நிறுத்தம் போன்ற நிர்பந்தங்களைக்கூடப் பயன்படுத்தி அதிக ஊதியத்தைப் பெற்றுவிடுகிறார்கள். ஆனால் இவர்களைவிட கோடிக்கணக்கான மக்கள், விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் அவர்களுடைய ஊதியம் உயர்வதற்கு எந்த வழி வகையும் இல்லாமல் இருக்கின்றது. அவர்கள்தான் இன்று ரொம்பவும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இப்படி பாதுகாப்பு ஒன்றும் இல்லாது சிரமப்படும் இவர்களையும் சேர்த்துத்தான் நாட்டிலே ஒரு பொருளாதாரப் புரட்சியைக் கொண்டுவர வேண்டும் என்று இந்த நிதி நிலை அறிக்கையில் நமது முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். எனவே அவர்களுக்கு ஏற்ற வகையில் அதைத் தாமதமின்றி செய்ய வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களையும் அரசாங்கத்தையும் வற்புறுத்த விரும்புகிறேன்.

அடுத்து, நலிந்துபோன மில்களையெல்லாம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று இதிலே எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அதிலிருந்து தள்ளி வைக்கப்பட்டுள்ள வேலையற்ற தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்க வேண்டும், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள்.

ஆனால் ஏன் இப்படி நஷ்டம் ஏற்பட்டது அந்த மில்களைப் பொறுத்த வரையில் என்று இதிலே தெரிவிக்கப்படவில்லை. நஷ்டப்பட்டுக்கொண்டே இருக்கும் மில்களை அரசாங்கம் ஏன் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றுதான் நானும் கேட்க ஆசைப்படுகிறேன். முன்பு மேட்டூரிலுள்ள அலுமினியம் தொழிற்சாலையை அரசாங்கம் எடுத்துக்கொள்ள இருக்கின்றது என்று சொன்னார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது என்றும் தெரியவில்லை, அது மாநில அரசாங்கத்தினிடம் வந்ததாகவும் தெரியவில்லை. லாபகரமான முறையில் அது நடந்துகொண்டிருக்கின்றது என்கின்றார்கள். அதை எடுத்துக்கொள்ள முடியாதபடி காரணங்களையெல்லாம் சொல்லும்போது, இப்படி தொடர்ந்து நஷ்டப்படும் மில்களை ஏன் இப்போது எடுத்துக் கொள்ள வேண்டும் என்றுதான் நான் கேட்கிறேன். இந்த நஷ்டத்தை மக்கள் ஏன் சுமக்க வேண்டும் என்றுதான் கேட்க ஆசைப்படுகிறேன்.

கல்வியைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்த மன்றத்திலே அன்றுடம் முழு நேரமும் குறிப்பாக கேள்வி நேரத்தின்போது கல்வி பற்றித்தான், அதற்கான நடவடிக்கைகள் பற்றித்தான் கல்வி அமைச்சர் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் கூறிக் கொண்டிருக்கின்றார்கள். அதிலே அரிசனங்களுக்கும் பிற பின் தங்கிய வகுப்பினருக்குமாக

ஒதுக்கப்பட்ட பணம் சென்ற நிதி ஆண்டிலே முழுவதுமாகச் செலவிடப் படவில்லை என்று குறிப்பிட்டிருக்கின்றது. ஸ்காலர்ஷிப் போன்ற பல் வேறு இனங்களுக்காக பின்தங்கிய வகுப்பினருக்கும் அரிசனங்களுக்குமாக ஒதுக்கப்பட்டிருக்கின்றது. எந்தெந்தப் பகுதியில் அப்படி மிகவும் பின் தங்கிய மக்கள் அல்லது அரிசனங்கள் இருக்கின்றார்கள் என்று பார்த்து, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய முறையில் செய்திருந்தால், அந்தப் பணம் முழுவதையும் செலவிட்டிருக்க முடியும். நமது மக்கள் தொகையில் இவர்கள்தான் மிக அதிகமாக இருக்கின்றார்கள். எனவே அவர்களுக்கு வேண்டிய அளவில் இதையெல்லாம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு நமது மாநிலத்தில் ஏற்பட்டுள்ள வறட்சியின் போது நமக்கு நேரிடையாகக் கண்ணில் படுவது பாசன வசதிக் குறைவு தான். மழையில்லாதுபோய் பாசன வசதி அடியோடு பாழ்பட்டுவிட்டது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், மிகப்பெரிய பாசனவசதி காவிரியால் கிடைக்கும் நீர்ப்பாசன வசதிதான். அது இன்றைக்குப் பல குழப்பங்களுக் குள்ளாகி மூன்று மாநிலங்களுக்கிடையிலும் மத்திய அரசின் கையிலும் உள்ள பிரச்சினையாகி விட்டது. வெகுகாலமாக தமிழகத்தில் காவிரி ஆற்றுத் தண்ணீரை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு வந்தோம். ஆனால் இன்றைக்கு அந்த உடன்படிக்கை காலாவதியாகி விட்டது என்று கூறி கருநாடக மாநிலத்தில் இப்போது நமக்குக் கிடைத்துவந்த தண்ணீரை முடக்கி வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். முடக்கி வைத்துக்கொண்டுள்ளதற்காக என்னென்னமோ காரணங்களை யெல்லாம் அவர்கள் சொல்லுகிறார்கள். இங்கே பேசிய திரு வசந்த பாய் அவர்கள் சில் சட்ட நுணுக்கங்களை யெல்லாம் எடுத்துக்காட்டிப்பேசினார்கள். கேட்க ஆசையாகத்தான் இருக்கின்றது. கடந்த எழெட்டு ஆண்டுகாலமாக இந்தப் பிரச்சினையில் எந்தவிதமான தீர்ப்பும் கிடைக்காமல் இனி பேச்சு வார்த்தைகளிலே பயன் இல்லை என்ற நிர்பந்தத்திற்கு வந்திருக்கும் போது இதிலே மற்ற மாநில அரசுகளும் மத்திய அரசும் எந்த அளவிற்குப் பாரா முகமாக இருக்கிறார்கள், இதை தீர்க்காமல் விட்டிருக்கிறார்கள் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. இது மிகவும் வேதனைக்குரிய விஷயம். எனவே இதிலே நமது தமிழக அரசு திட்டவட்டமான ஒரு முடிவினை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதிலே நாம் பிறரோடு போர் தொடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை. நமக்கு இப் போதுள்ள ஆயக்கட்டு பாதிக்கப்படாமலிருக்கும் அளவிற்கு—வேண்டு மானால் புதிய ஆயக்கட்டிற்கு அதைப் பயன்படுத்த வேண்டாம், ஆனால் இருக்கும் ஆயக்கட்டு பாதிக்கப்படாமல் நமது அரசாங்கம் முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்று நாம் எடுக்கக் கூடிய முயற்சிகளுக்கு மற்ற மாநில அரசு களும் மத்திய அரசும் நமக்குச் சாதகமாக இருப்பதாகத் தெரியவில்லை. இந்த தேசம் மிகப் பெரிய தேசம். அதிலே தமிழகமும் ஒரு பகுதி தான். இந்தப் பகுதியிலுள்ள மக்களும் வாழ வேண்டும், அவர் களுக்கும் வேண்டிய பாதுகாப்பினை அளிக்க வேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணத்தோடு மத்திய அரசு செயல்பட வேண்டும் என்றுதான் நான் எதிர்பார்க்கிறேன்.



(பிற்பகல் 5-30).

இந்தப் பாசன வசதி காவிரி ஆற்றோடு முடிந்துவிடவில்லை. நமது தமிழகத்திலே மின் வசதிகளைக் கொண்டு பெரிய கிணறுகளையும், போர் பைப்புகளையும் போட்டு நாம் இன்றைக்கு விவசாயம் செய்து கொண் டிருக்கிறோம். அடிக்கடி பல புள்ளி விவரங்களை சர்க்கார் நமக்குக் கொடுக்கிறது. 1967-க்கு முன்பு 2 லட்சம் பம்புசெட்டுகள் தமிழகத்திலே இருந்தன. இந்த ஐந்து, ஆறு, எழு வருஷத்திலே 7 லட்சம் பம்பு செட்டுகளுக்கு அனுமதி வழங்கி இன்றைக்கு செயல்பட்டுக்கொண்டிருக் கிறோம் என்று சொல்கிறார்கள். இன்னும் 1 லட்சம் பம்புசெட்டுகளுக்கு வேண்டிய மின் இணைப்புக் கொடுக்க முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இன்னும் எத்தனையோ இந்த மாதிரியான இணைப் புகள் கொடுத்து உதவிகள் செய்தால், தமிழகத்தில் நாம் இயற்கையை அதிகமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்காமல் சொந்த முயற்சியாலே இயற்கைக்கு எதிர்ப்பாகவே இருந்து, இந்த உணவுப் பிரச்சினையை நாம் தீர்க்க முடியும் என்பதை நான் இங்கு சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

மின்சார வசதி என்றால், ஏதோ தஞ்சையிலே தண்ணீர் ஓடுவது, அது தானாகப் பாய்வது என்ற எண்ணம் இல்லை. ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் போகும்போது, மின்சாரத்திற்கு அதிகக் கட்டணம் செலுத்தவேண்டிய நிலை இருக்கிறது. குறிப்பாக இந்த வறட்சி நிலைமை யிலே மின்சாரம் சாதாரணமாக 3 மணி நேரத்திலே பாய்கின்ற தண்ணீர் போதும் என்று இருக்கின்ற ஒரு நிலப்பரப்புக்கு—இன்றைக்கு இந்த மழை இல்லாததன் காரணமாக தண்ணீர் வற்றி கீழே போயிருக்கின்ற நிலைமையிலே—6 மணி நேரத் தண்ணீர் தற்போது தேவைப்படுகிறது. 6 மணி நேரம் மின்சாரத்தை உபயோகித்து தண்ணீர் இறைப்பது என்றால், இன்றைக்கு ஒன்றுக்கு இரண்டு பங்காகச் செலவு ஏற்படுகிறது. அந்த இரண்டு பங்குச் செலவையும் அந்த விவசாயிகள் செய்துகொண்டிருக்கும் போது, அதற்கான சில உதவிகளையாவது அரசு தற்காலிகமாகவாவது செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். குறிப்பாக கீழ் மட் டத்திலேயிருந்து தண்ணீர் இறைக்கின்ற நிலையில் இருக்கும் இந்த ஏழை விவசாயிகளுக்கும் உதவ வேண்டும். ஏதோ மின் கட்டணத்தைத் தள்ளிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லவில்லை. இந்த லெவியிலே அதிகமாக இல்லாமல், இந்த மூன்றும் போகத்துக்கு லெவி இல்லை என்று இந்த அரசு சொல்லியிருப்பது போல, இரண்டாம் போகத்துக்கும் இவ்வாறு தண்ணீர் இறைக்கும் மூகத்தான் ஏற்படும் அதிகச் செலவுகளைக் கருத்தில் கொண்டு, அந்த லெவி அளவைக் கொஞ்சம் தளர்த்திக் கொடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படிச் செய்தால்தான், மின்சாரத் துக்கும் மற்றவற்றுக்கும் அவர்கள் செலவழிக்கும் அதிக அளவுச் செலவு களை கொஞ்சம் சரிக்கட்ட இயலும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைக்கு விவசாய மக்கள்தான் நாட்டிலே பெருவாரியாக இருக் கிறார்கள். இயற்கையின் நிலைமையை நாம் விவசாயத்திற்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்பதை கடந்த காலத்தினுடைய

அனுபவங்களைக்கொண்டு நாம் தெரிந்துகொள்ளலாம். பல விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் இது பற்றிப் பத்திரிகைகளிலே எழுதியிருக்கிறார்கள். 40 ஆண்டுக்காலமாக, இந்த நாட்டிலே, உலகத்திலே சீதோஷ்ண நிலைமை மாறி மாறி வருகின்றது. அதற்குத் தகுந்தபடி இங்கு விவசாயத்தையும் நாம் மாற்றிக்கொள்ள வேண்டும். உற்பத்தியை உண்டு பண்ணுவதிலும் நாம் தற்போதைய நிலைமையை மாற்றிக் கொள்ளவேண்டும். எச்சரிக்கையாகவே இன்றைக்கு அந்த அறிக்கைகள் வந்துகொண்டிருக்கின்றன. அதையெல்லாம் நாம் மனதில் வைத்துக்கொண்டு அதற்குத் தக்கபடி இன்றைக்கு விவசாயத்திலே இன்னின்ன நெல்களை, இன்னின்ன குறைந்த காலத்திலே விளைகின்ற நெல்களையெல்லாம் உற்பத்தி செய்யவேண்டும் என்பதற்காக அதற்கு வேண்டிய ஆராய்ச்சிகளை ஒரு "சயன்டிஃபிக் ரிசர்ச்" என்ற முறையில் செய்யவேண்டும். இன்றைக்கு பஞ்சாப் மாநிலம் விவசாயத்திலே முதன்மையாக இருக்கிறதென்றால், அங்கே ஒரு "அக்ரிகல்சுரல் யுனிவர்சிட்டியை" ஏற்படுத்தி அங்கே விவசாயத்திற்குத் தேவையான அத்தனை ஊக்கமும், உதவியும் செய்கின்ற காரணம்தான். இன்றைக்கு அரசாங்கத்தினுடைய தயவே எங்களுக்குத் தேவையில்லை என்ற அளவுக்கு அவர்கள் அறிந்து கொண்டு, தெரிந்து கொண்டு, புரிந்து கொண்டு விவசாயம் செய்கின்றார்கள். நாமும் நம்முடைய மாநிலத்தில் அம்மாதிரி ஒரு நிலை ஏற்படச் செய்யவேண்டும். ஏதோ சீசன் வரும், மழை வரும், மின்சாரம் வந்துவிடும், தண்ணீர் வந்துவிடும், ஜூன் 6-ம் தேதி காவிரி திறக்கப்படும் என்ற நிலைமைகள் எல்லாம் வர வர மாறிக் கொண்டிருக்கிறது. இந்த மாறும் நிலைமைக்கேற்றபடி நம்முடைய விவசாயத்தையெல்லாம் செய்வதற்காக ஒரு சீரிய எண்ணத்தை, சீரியசாகவே நாம் சிந்தித்துச் செயல்படவேண்டும். மழையை, இயற்கையை நம்பியிருந்து, பிறகு இயற்கை சாதகமாக வரவில்லை என்று சமாதான அறிக்கைகள் சொல்லுவது நல்ல "ஸ்டேட்ஸ்மேன்" தன்மையாக ஆகாது. ஆகையால் எதிர்காலத்திலே என்னென்ன நடக்கும் என்று முன்கூட்டிப் பார்த்து, ஆராய்ந்து—யார் பொறுப்பில் இருந்தாலும் சரி—அவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். உணவுப் பிரச்சினை, நீர் பிரச்சினை, மற்ற மக்களுடைய எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், அந்த நிலைமைகள் இருக்கும்போது, எந்தக் கட்சி ஆட்சியாக இருந்தாலும், எதிர்கால நிலைமைகளை கவனத்தில் வைத்துக் கொண்டு காரியங்கள் செய்ய வேண்டுமென்று குறிப்பாக நான் இந்த மாமன்றத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு மக்களுக்குச் செய்ய வேண்டிய பல நன்மைகளுக்கெல்லாம், மத்திய அரசினுடைய ஒத்துழைப்பு சரியாக இல்லை. அது காலாகாலத்திலும் செய்யப்படுவதில்லை. செய்யப்படும் உதவியும் சரியாக வந்து சேருவதில்லை. உணவு உற்பத்திக்காகத் தேவைப்படும் உரங்களை கேட்கின்ற அளவுக்குக் கொடுப்பதில்லை. இன்னும் மின்சார உற்பத்திக்கு வேண்டிய சாமான்களையோ அல்லது அதற்கான திட்டங்களையோ அனுமதிப்பதில்லை. இதையெல்லாம் பார்க்கும்போது, மாநிலத்திற்கு உள்ள ஒரு இக்கட்டான நிலை, ஒரு சங்கடமான நிலை, ஒரு ஆட்சியிலே மக்களுக்கு நேரடியாக தங்கு தடையின்றி உதவி செய்கின்ற அதிகாரம் உள்ள ஒரு நிலை, இவையெல்லாம் இல்லாமல், மக்களுக்கு நேரடியாகக் கடமை





யாற்ற வேண்டிய ஒரு மாநில அரசு எந்த அளவுக்குச் சங்கடப்படுகிறது என்பதையெல்லாம் நாம் பார்க்கும்போது, இந்த மாநிலத்திற்கு வேண்டிய அதிகாரங்கள் கண்டிப்பாகக் கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்கிறோம். அதிலே யாருக்கும் மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் ஏதோ மாநில சுயாட்சி என்றால், அது என்னவோ ஒரு பெரிய பூதம், என்னவோ ஒரு பெரிய விபரீதம், அது எந்த நிலைக்குக் கொண்டுபோய் விடுமோ என்றெல்லாம் கற்பனை செய்துகொண்டு ஒரு பீதியை, பயத்தைக் காட்டிக் கொள்ளுகிறார்கள். முதல்வர் அவர்கள் பல இடங்களிலே அதற்குத் தக்க விளக்கங்களைக் கூறியிருக்கிறார்கள். என்னென்ன அதிகாரங்கள் தமிழக அரசுக்கு இருக்க வேண்டும், என்னென்ன அதிகாரங்கள் மாநில அரசுகளுக்கு இருக்க வேண்டும் என்றெல்லாம் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அந்த மாதிரி அதிகாரம் அதிகமாக வேண்டும். மக்களுக்கு காலதாமதமில்லாமல் உடனடியாக வசதிகளைக் செய்து தருவதற்கு வேண்டிய அதிகாரம் மாநில அரசுகளுக்கு இருக்க வேண்டும். மாநில அரசு என்றால், எத்தனையோ அரசுகளை நாம் பார்த்திருக்கிறோம். மாறி மாறி வேறுபட்ட கட்சிகள் ஆட்சிக்கு வருகின்றன. ஆனால் அந்த அதிகாரம் இருந்தால்தான், நிரந்தரமாக மக்களுக்கு எந்தவிதச் சங்கடமும் இல்லாமல் இப்படி நெருக்கடியான காலங்களிலே செய்ய முடியும் என்ற ஒரு நல்ல எண்ணத்திலே, நோக்கத்திலேதான் மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று சொல்லப்படுகிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை. இதை உடனடியாக மத்திய அரசு உணரும்படி செய்ய வேண்டும். அவர்கள் எதையெதையோ மனதில் வைத்துக் கொண்டு, எதையெதையோ சொல்லிக் கொண்டு என்னென்னமோ பயங்களையெல்லாம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி நீண்ட நாட்களுக்கு மக்களை தொல்லைக்குள்ளோ, துன்பத்துக்கு உள்ளோ, ஒரு அருவருப்புக்கு உள்ளோ வைத்துக்கொண்டிருக்க முடியாது. அப்படி வைத்துக் கொண்டிருப்பார்களேயானால், அதனுடைய விளைவு வேறு விதமாகவே முடிந்துவிடும் என்பதை நான் எச்சரிக்கையாகவே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் இங்கு அடிக்கடி அமைச்சர்கள் எல்லாம் இலாக்காவை விட்டு மாறுகின்றார்கள், செக்கரட்டரிகள் எல்லாம் மாறுகின்றார்கள் என்று சொன்னார்கள். நான்கூட நமது இண்டஸ்ட்ரீஸ் அமைச்சர் அவர்களிடத்திலே ஒரு வாரத்திற்கு முன் ஒரு சீட்டைக் கொடுத்து, நீங்கள் இருப்பதற்குள் செய்து விடுங்கள், அடுத்தவாரம் போர்ட்ஃபோலியோ சேஞ்ச் ஆகப்போகிறது என்று சொன்னேன். இன்றைக்கு அப்படி சொல்லக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. மக்களுக்கு நல்லது செய்ய வேண்டுமென்றால், அமைச்சர் அவர்கள் எந்த சப்ஜெக்ட் பார்க்கிறார்களோ அது அவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் ஒரு விஷயத்தைப் பார்த்த உடனே இது இந்தக் காரணத்தால் செய்ய முடியும், இது செய்ய முடியாது என்று சொல்ல முடியும், அப்படிச் சொல்லக்கூடிய ஒரு நிலைமை ஏற்படும். இல்லாவிட்டால் அந்த இலாகா என்னிடத்திலே இல்லை, எனக்குத் தெரியாது என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்படும். இந்த நிலைமை எல்லாம் இருக்கக்கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு மாநிலத்திலே போலீஸ் நிர்வாகத்திலே நல்லதும் இருக்கிறது, ஆனால் கெடுதலும் சில இடங்களிலே நிகழ்ந்திருக்கிறது என்பதை மாத்திரம் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். கடந்த டிசம்பர் 15ஆம் தேதியிலே, சேலத்திலே தாராமங்கலம் என்ற ஒரு தொகுதியிலே மாச்சியம்பட்டி என்ற ஒரு கிராமத்திலே சித்த கவுண்டர் என்ற ஒருவர் ஏதோ நிலம் வாங்கியிருக்கிறார். அந்த நிலத்தில் ஏற்கெனவே பயிர் வைத்துக்கொண்டிருந்தவர்கள் குடியானவர்கள். அந்த சித்த கவுண்டர் அந்த நிலத்தை எடுத்துக்கொள்வதற்கு, அந்த குடியானவர்களை அப்புறப்படுத்துவதற்கு கொஞ்சம் தவறுதலாகக்கூட நடந்திருப்பதாக நான் கேள்விப்பட்டேன். பிறகு அந்தக் குடியானவர்களும் அதைவிட்டு விலகி விட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பிறகு எந்தக் காரணத்தினாலோ, யாருடைய தூண்டுதலினாலோ அங்கு சென்று அந்தப் பெரியவரை—இரண்டு முறை பஞ்சாயத்துத் தலைவராக இருந்தவர், இன்றும் பஞ்சாயத்துத் தலைவராக இருப்பவர், மேலும் பல லட்சத்திற்கு அதிபதியாக இருப்பவர், அவருக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும், அல்லது உதவி அளிக்க வேண்டும் என்று சொல்லவில்லை, அவர் செய்த தப்புக்கு, என்ன தண்டனையோ அதைச் செய்யட்டும், அதில் நாம் குறுக்கிடவில்லை—போலீஸ்காரர்கள் கட்டி இழுத்து, வெளியிலே கொண்டுவந்து போலீஸ் ஸ்டேஷன் வரையில் நிர்வாணமாக நடத்திச் சென்று, அந்த நிர்வாணத்தை மறைத்த கையிலே தடியால் அடித்து கையை உடைத்து, அதற்கு ஆஸ்பத்திரியிலே நீண்ட கட்டு கட்டிவைத்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 5-40.)

அங்கே இருந்த சொந்தக்காரர்களுடைய மோட்டார் சைக்கிள்களெல்லாம் போலீஸ்காரர்களாலே அடித்து உடைத்து நொறுக்கப் பட்டிருக்கின்றன. அப்புறம் அந்த வீட்டிலே இருந்த கார், மோட்டார் சைக்கிள் நொறுக்கப்பட்டிருக்கின்றன. அதையெல்லாம் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு வந்திருக்கின்றார்கள். அவரிடத்திலே 30 வெள்ளைக் காகிதங்களில் போலீஸ்காரர்கள் கையெழுத்து வாங்கியிருக்கின்றார்கள். அவரவர்களுக்கு சாதகமாக அவைகளை எப்படி உபயோகப்படுத்த முடியுமோ அதற்காக அப்படிச் செய்திருக்கின்றார்கள். அதிலே ஒரு கண்டிஷன் போட்டிருக்கின்றார்கள். அது என்னவென்றால் வெளியேற்றப்பட்ட குடியானவர்கள் அவர்களுடைய வீட்டிலே வந்து புகுந்து அவர்களுடைய காரை உடைத்திருக்கின்றார்கள், மோட்டார் சைக்கிளை உடைத்திருக்கின்றார்கள் என்றெல்லாம் எழுதி வைத்த கடிதத்திலே கையெழுத்து வாங்கி வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். இன்னும் அவர் வீட்டிலே ஏதோ ரூ. 20 ஆயிரம் பணம் இருந்ததாகவும் அதை எடுத்துவிட்டதாகவும், பல நகைகளை போலீஸ்காரர்கள் கைப்பற்றிவிட்டதாகவும், பக்கத்து வீட்டிலே ஒரு பெண்ணின் கொலுசை எடுத்துச் சென்று விட்டார்கள் என்றும், அந்த வீட்டிலே ரூ. 700 பணத்தை எடுத்துச் சென்று விட்டார்கள் என்றும் சொன்னார்கள். நான் என்னுடைய கட்சிப் பொதுக் காரியதரிசியை அனுப்பிவைத்து, அந்த கிராமத்தில் விசாரிக்க வேண்டும் என்று சொன்னேன். அது உண்மைதான் என்று அவர் வந்து என்னிடத்தில் சொன்னார். அவர் சொன்னதையெல்லாம் அந்த கிராமத்து



மக்கள் சொல்கின்றார்கள். அந்த ரூ. 20 ஆயிரம் பணத்தை மட்டுமல்ல, அந்தப் பெண்ணுடைய நகை போனது மட்டுமல்ல, அது குறித்து நாங்கள் கவலைப்படவில்லை, அந்த கிராமத்து ஏழை எளியவர்கள் வைத்திருந்த சுமார் 200 கோழிகளையும் பிடித்துக் கொண்டு போய்விட்டார்கள். அதுதான் பெரிய தவறாக இருக்கின்றது. அந்த ஏழைகள் அதை ஏதோ ஒரு பெரிய செல்வமாக எண்ணி வைத்திருந்தனர். அந்தச் செல்வங்களும் அந்தப் போலீஸ்காரர்களாலே போய்விட்டன என்று சொல்லியிருக்கின்றார்கள். ஐந்து ஆடுகளை வேனிலே ஏற்றிக்கொண்டு போய்விட்டார்கள்.

இந்த இருபதாம் நூற்றாண்டிலே நாமெல்லாம் இவ்வளவு விழிப்போடு, எச்சரிக்கையோடு இன்றைக்கு நாம் ஆட்சி செய்து கண்காணித்துக் கொண்டிருக்கும்போதே, இப்படிப்பட்ட கொடூரமும், அநீதியும், அக்கிரமும் நடப்பது என்றால், அது ஒரு பெரிய வேதனையாக இருக்கின்றது. யுத்த காலங்களிலே பெரிய நகரங்களிலே வீழ்ச்சி ஏற்படும்போது, அந்தந்த ராணுவ வீரர்கள் தங்கள் இஷ்டப்படி சூறையும், கொலையும் எது வேண்டுமானாலும் செய்கிறார்களே அப்படித்தான் இன்றைக்குச் செய்திருக்கின்றார்கள். இதை நான் முதலமைச்சர் அவர்களுக்கு எழுதியும் அனுப்பியிருந்தேன். அவர் அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்தார் என்பது எனக்குத் தெரியவில்லை. அங்கே இருக்கின்ற சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர்கள்தான் இந்த அளவுக்குச் செய்திருக்கின்றார்கள் என்று சொன்னார்கள். நானும் சேலம் போனபோது, மற்ற பெரிய மனிதர்கள் எல்லாம் என்னிடத்திலே சொன்னார்கள். இந்த நிலைமையெல்லாம் மாநிலத்திலே மாற வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோளாகும். எனக்கு இந்த நேரம் பேச வாய்ப்பளித்த உபதலைவரவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைச் சொல்லிக்கொண்டு விடை பெறுகிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, 1975–76-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின்மீது என்னுடைய சில கருத்துக்களை இங்கே கூற விரும்புகிறேன். பொதுவாக 26 கோடி ரூபாய் துண்டு விழக்கூடிய ஒரு நிதி நிலை அறிக்கையை இங்கே சமர்ப்பித்திருக்கின்றார்கள். 6 கோடி ரூபாய் வரி போட்டிருக்கின்றார்கள். இதையெல்லாம் பல நண்பர்கள் விரிவாக எடுத்துப் பேசினார்கள். மத்திய அரசும் 288 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கக்கூடிய நிலையையும், அதே நேரத்திலே மாநில அரசு 6 கோடி ரூபாய் வரி போட்டிருக்கக் கூடிய நிலைமையையும் பார்க்கும்போது, மாநில அரசைவிட மத்திய அரசு இந்த நிதிநிலை ஆண்டிலே கடுமையான வரி போட்டிருக்கின்றது என்ற நிலையை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகின்றேன். அதே நேரத்திலே ஒரு பட்ஜெட் விவாதம் என்று சொன்னால், நாம் நிதிநிலையை மட்டும் பரிசீலிக்கக் கூடியதாக அமையாது. நாட்டிலுள்ள பலவிதமான அரசாங்கத்தினுடைய நிர்வாக அமைப்புகளை எல்லாம் நாம் பரிசீலிக்கின்ற அளவுக்கு நாம் இங்கே பேசுகின்றோம். இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையிலே, முக்கியமாக நம் மாண்புமிகு

முதல்வர் அவர்கள் பல திட்டங்களுக்காக உரை நிகழ்த்தியபோது, மாநில சுயாட்சி பற்றி அதிக நேரம் ஒதுக்கிப் பேசியிருக்கின்றார்கள். அது பற்றி பின்னர் நான் கூற விரும்புகிறேன்.

முக்கியமாக அரசாங்க நிர்வாகத்தைப் பொறுத்தவரையிலே, இந்த அரசாங்கத்தினுடைய நிர்வாகச் செலவு ஏறிக்கொண்டே போகிறது என்ற நிலைமையை, தலைவரவர்களே, தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். 60 சதவிகிதத்திற்கு மேலும் அரசாங்கம் அரசு ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்குகிறது. ஏறத்தாழ 60 சதவிகிதத்திலிருந்து 63, 64 சதவிகிதத்திற்கு உயர்ந்திருக்கின்றது. 536 கோடி ரூபாய் செலவு செய்கிறோம். என்ன செலவு செய்கிறோம் என்பதை நாம் பார்க்கும் போது அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதைத் தவிர வேறு ஒன்றையும் நாம் அதிலே காண முடியவில்லை.

கல்வித்துறைக்கு 120 கோடி ரூபாய்க்கு மேலாகச் செலவழிக்கின்றார்கள். 120 கோடி ரூபாய் செலவு செய்தும் பள்ளிகளிலே போதுமான தளவாடங்கள், கருவிகள், விஞ்ஞானம் போதிப்பதற்கான கருவிகள் மற்றும் வேறு எந்தவிதமான கருவிகளையும் காண முடியவில்லை. இந்த 120 கோடி ரூபாய் எதற்குச் செலவாகிறது என்று சொன்னால், பெருமளவிற்கு நாம் ஆசிரியர்களுக்கே சம்பளமாகக் கொடுக்கிறோம். ரூ. 536 கோடிக்கு இந்த நாட்டினுடைய செலவு நிலைமையில் சம்பளமாக ரூ. 300 கோடிக்குமேல் கொடுக்கின்ற நிலை இருக்கிறதே தவிர நாட்டு மக்களுக்குச் செய்யக்கூடிய சேவையானது அற்பசொற்பமானதாகத்தான் இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். நிர்வாகச் செலவைச் சிக்கனமாகச் செய்யாத வரையில், நாட்டிலே ஒரு நல்ல நிர்வாகத்தை நாம் ஏற்படுத்தியிருப்பதாகக் கருத முடியாது. அந்த நிலையிலே ஒரு நல்ல சிக்கனத்தை நாம் கையாளவில்லை என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பொதுவாக நிர்வாகத் துறையிலே பல இடங்களிலே பல கஷ்டங்கள் ஏற்பட்டுக்கொண்டு வருகின்றன. நான் அதிகநேரம் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. இப்போது நான் குறிப்பாகவே கூற ஆசைப்படுகிறேன்.

மருத்துவ மனைகளை எடுத்துக்கொண்டால், மருத்துவ மனையிலே இன்றைய தினம் செல்லக்கூடிய நோயாளிகளுக்குப் போதுமான வசதி இருக்கிறதா என்று பார்த்தால், வசதிகள் குறைவாகத்தான் இருக்கின்றன. வசதிகள் இருக்கின்றனவோ இல்லையோ, நோயாளிகள் லஞ்சம் கொடுக்காமல், தயவு இல்லாமல், நோயைத் தீர்த்துக்கொள்ள வகை இருக்கிறதா என்றால் அதையும் காண முடியவில்லை. அப்படியே சென்றாலும், இன்றுள்ள கணக்கை எடுத்துக்கொள்வோமானால், நோயாளிகள் வைத்திய மனைக்குச் சென்று நோயால் இறப்பவர்கள் குறைவாகவும், போலி மருந்துகள், தகாத மருந்துகள் மூலமாக இறக்கக்கூடியவர்கள் எண்ணிக்கை அதிகமாகவும், டாக்டர்கள் காலாகாலத்தில் பார்க்காது அஜாக்கிரதையாக இருக்கின்றதால் ஏற்படும் இறப்பு எண்ணிக்கை அதிகமாகவும் இருக்கின்ற அளவுக்கு நிர்வாகம் காணப்படுகிறதே தவிர,



நோயாளிகளைச் சரியான முறையிலே கவனித்து இறந்தவர்கள் எண்ணிக்கை மிக அற்பசொற்பமாகவே இருக்கின்றது. இப்படி நிர்வாகத் துறையிலே பல நேரங்களிலே பல குறைகள் ஏற்படுகின்றன.

நம்முடைய உறுப்பினர் திரு. ராமசாமி படையாச்சி அவர்கள்கூட போலீஸிலே பெரிய கஷ்டங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். உண்மையிலே குறிப்பாக அதிலே ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இன்றுள்ள போலீஸ் நிர்வாகம் இந்த நாட்டினுடைய நல்ல நிர்வாகமாக இருக்கின்றது என்று கருத முடியாது. தமிழ் நாட்டினுடைய போலீஸ் மிகச் சிறப்புடையதாக இருந்தது. ஆனால் இன்றைய நிலையிலே எப்படி இருக்கின்றது என்று சொன்னால், யார் பணம் கொடுக்கின்றார்களோ அவர்களுக்காகச் செல்லக்கூடிய நிலைதான் இன்றைய தினம் நாட்டிலே இருப்பதைக் காண்கின்றோம். எங்கே யாவது ஏதாவது காரியம் செய்ய வேண்டுமென்றால், அதற்காக போலீஸை வகைப்படுத்திக்கொள்ளக்கூடிய அளவுக்கு இன்றைக்கு தமிழ் நாட்டிலே நிலைமை இருக்கின்றது என்று சொன்னால், அது மிக மோசமானதாக இருக்கின்றது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல பல திருட்டுக்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. உண்மையாகக் கூறுகிறேன், பல நேரங்களில் சந்தேகப்படக்கூடிய நிலைமைகூட ஏற்பட்டிருக்கின்றது. பல பாக்கெட் திருடர்கள் பல இடங்களிலே புகுந்து கொள்ளையடிக்கின்றார்கள். பல இடங்களிலே அவர்கள் புகுந்து கொள்ளையடிப்பதற்கு போலீஸார் பலர் உடந்தையாக இருக்கின்றார்கள் என்ற நிலைகூட இருந்து வருகிறது. இப்படியெல்லாம் நிர்வாகம் மிகமிக ஊழலாக, மோசமானதாக இருக்கக்கூடிய நிலையைச் சீர்திருத்தம் செய்திருந்தால், இந்த பட்ஜெட்டை வரி குறைவாகப் போட்டதற்காகப் பாராட்டிப் பேசியிருக்க முடியும். ஆனால் வரி போடவில்லை என்பதை அதிகமாகப் பாராட்டாததற்குக் காரணம், நிர்வாகத்திலே இருக்கின்ற மிகுந்த செலவுகள், மலிந்த நன்மைகளும்தான். அதனால் நிர்வாகம் மோசமாக இருக்கிறது என்று சொல்லவேண்டியிருக்கின்றது.

ஒரு அரசாங்கம் வரி போடவேண்டுமென்று எண்ணினால், எவ்வளவு வேண்டுமானாலும் போடலாம். வரி போடுவதிலே யாரும் ஆட்சேபணை சொல்ல முடியாது. ஒரு நாட்டிற்கு நல்ல காரியங்கள் செய்யவேண்டுமானால் வரி போடவேண்டுமே தவிர, வேறு வழியில்லை. அந்த வரிகளைப் பயன்படுத்தி நல்ல காரியங்களைச் செய்வார்களானால், அது பாராட்டக்கூடியதாக இருக்கும் என்று நான் கூறிக்கொள்கின்றேன்.

(பிற்பகல் 5-50)

ஆகையால் வரி போடவில்லையென்று அரசாங்கத்தைப் பாராட்டுவதோ, வரி போட்டுவிட்டார்களென்று அரசாங்கத்தை குறை கூறுவதோ சரியான வாதமாகாது, ஒப்புக்கொள்ளமுடியாது. வரி போட்டாலும் சரி, போடாவிட்டாலும் சரி, இருக்கக்கூடிய நிதியைச் சரியான முறையில் பயன்படுத்தி நாட்டை ஆளுகின்றார்களா என்பதைப் பார்க்க வேண்டும். இன்னும் அதிகமாக நான் கூறமுடியும். நான் குறிப்புக் குறிப்பாகக் கூறுகின்றேன்.

அற நிலையத் துறையை எடுத்துக்கொண்டால் அந்தத்துறை மூலமாக இந்து மதம் க்ஷீணித்துக்கொண்டு வருவதைப் பார்க்கின்றோம். குறிப்பாக அதிலே பணிபுரிபவர்கள் மத அடிப்படையிலே மதத்தை நம்பக்கூடியவர்களாக, தெய்வத்தை நம்பக்கூடியவர்களாக, தெய்வபக்தியுடையவர்களாக இருப்பதில்லை. அது ஒரு தனி நிர்வாகம். அது தெய்வத்திற்குப் பணி செய்யக்கூடிய நிர்வாகம். அதிலே பணிபுரிபவர்களில் பல பேர் தெய்வநிந்தனை செய்யக்கூடியவர்கள் எக்ஸிகியூடிவ் ஆபீசர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு என்ன வேலை, என்று சொன்னால், கோயில் கணக்கை எப்படி எழுதுவது என்று கண்டுபிடித்து. கணக்கு எழுதி கோயில் சொத்து எல்லாம் ஊர் சொத்தாக மாறி விட்டது. கோயில் சொத்து பூராவையும் ஊரிலுள்ளவர்கள் எடுத்துக் கொள்கின்றார்கள் அல்லது அதிகாரிகள் எடுத்துக்கொள்கின்றார்கள், அல்லது அங்கு இருக்கக்கூடிய அறங்காவலர்கள் எடுத்துக்கொள்கின்றார்கள். இப்படியெல்லாம் குறைகள் இந்த நாட்டிலே வந்துகொண்டே இருக்கின்றன. இது ஒரு மதப்பிரச்சினையாக இருக்கின்ற காரணத்தினாலே நான் இதையும் சொல்லுகிறேன்.

புலவர் ஒ. அறிவுடை நம்பி : துணைத் தலைவர் அவர்களே, குறிப்பாக இந்த இடத்திலே தவறு நடந்தது என்று சொன்னால் நிர்வாகம் அந்தக் குறையை சரிசெய்வதற்கு வசதியாக இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : துணைத்தலைவர் அவர்களே, இந்த நிலைகள் எல்லாம் பரவலாகப் பேசப்படுகின்றவைகள். குறிப்பாக நான் சொல்ல வேண்டுமென்று அதிக நேரம் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. இது உண்மையான ஒரு விஷயம் என்று நான் கூறுகிறேன். பல உறுப்பினர்களுக்கே தெரியும். தெரியாமல் அவர்கள் என்னிடம் கேட்கவில்லை. எங்கே என்று அவர்கள் என்னிடம் ருஜூ கேட்டு எங்கே என்னை மடக்கி உட்கார வைக்கலாமா என்று எதிர்பார்க்கிறார்கள். அவ்வளவுதானே தவிர இது சரியான விஷயமல்ல, என்று உறுப்பினர் அவர்கள் சொல்லமாட்டார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்லுவதிலிருந்து உறுப்பினர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும் என்று தோன்றுகிறது.

திரு. என். சுந்தரேசத் தேவர் : துணைத்தலைவர் அவர்களே, இந்த அறநிலையத்துறைக்கு கமிஷனரை நியமிக்கிறபோது ஐ. ஏ. எஸ். அதிகாரிகளைப் போடுகிறார்கள். இது அவசியமா ? இதைப் பற்றி இந்த அரசு சிந்திக்கவேண்டும். நல்ல பக்தி உள்ளவர்கள், சிறந்தவர்கள், நல்ல விதமாக மார்க்கங்கள் தெரிந்தவர்கள், இந்து மதத்தைப்பற்றி நன்றாக அறிந்தவர்களை அந்தத் துறைக்குகமிஷனராக நியமனம் செய்தால் அதிலே என்ன தவறு ? இதற்குச் கூட ஐ. ஏ. எஸ். அதிகாரியைத்தான் போடவேண்டுமா ? பக்திமான்களை அறநிலையத் துறைக்கு அதிகாரிகளாக அல்லது அறங்காவலர்களாக....





மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : துணைத் தலைவர் அவர்களே, பக்திமான்களை அறங்காவலர்களாக, அதிகாரிகளாகப் போடவேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் சொல்வது உண்மை. அந்த பக்தியை எப்படி மனிதன் சோதித்து மனிதனை பக்தியுடையவன் என்று கண்டுபிடிப்பது ? தயவுசெய்து அதற்கு விளக்கம் வேண்டும். நான் மதத்தை எடுத்துக் கொள்ளமுடியாதவனாக இருந்தாலும், நான் எண்ணுவது என்ன ? என் இருதயம் என்ன எண்ணுகிறது என்பதைக் கண்டுபிடிப்பது யார் ?

திரு. என். சுந்தரேசத் தேவர் : துணைத் தலைவர் அவர்களே, தெய்வ பக்தியுடையவனை, தெய்வ நம்பிக்கையுடையவனை, பார்த்தாலேயே தெரியும். அவனை ஒன்றும் கண்டு பிடிப்பது பெரிய விஷயமல்ல. ஆளைப் பார்த்தாலேயே உடனே கண்டு பிடிக்கலாம்.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: துணைத் தலைவரவர்களே, என்னை பக்தியுடையவன் என்று கண்டுபிடித்திருக்கிறார்களா? அல்லது இந்து மதமே தவறு என்று சொல்லுகிறேன். தவறு என்று சொல்லுகிறவன் இந்து மதத்துக்கு விரோதி என்று சொல்ல விரும்புகின்றார்களா? எதைச் சொல்லுகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: துணைத் தலைவரவர்களே, அது ஒரு சர்ச்சையான விஷயம். இந்து மதமே தவறு என்று சொல்லக் கூடிய வாதம் நம்முடைய நாட்டிலே பலராலே துவக்கப்பட்டு அதைத் தாங்கள் பின்பற்றியவர்கள்.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: துணைத் தலைவரவர்களே, என்னைப் அதைப் பற்றித்தான் நான் முன்னாலேயே பேசி விட்டேன். பார்த்து, தெய்வ பக்தி உடையவன், அல்லவன் என்று நிர்ணயிக்க என்ன அளவுகோல் இருக்கிறது என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: துணைத் தலைவரவர்களே, இவ்வளவு தூரம் மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிந்து பரிந்து பேசுவதிலிருந்து அமைச்சரவர்களுக்கு தெய்வ பக்தி இருக்கின்றது என்று எண்ணுகின்றேன் (சிரிப்பு) நான் எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால்......

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: துணைத் தலைவர் அவர்களே, தெய்வ பக்தி இருக்கிறது என்று உறுப்பினர் அவர்கள் என்னைச் சொல்லுகிறார்கள். ஆனால் எனக்கு தெய்வத்தின் மீது ஒன்றும் கோபமில்லை. தெய்வம் இருக்கிறது என்று, என்னுடைய தலைவர் அண்ணா அவர்கள் ஒன்றே குலம் ஒருவனே தெய்வம் என்று அன்றே சொல்லிவிட்டார்கள். அதற்குக் கட்டுப்பட்டவர்கள் நாங்கள். ஆகவே ஒருவன் தேவன் என்பதை ஒப்புக்கொள்ளுகிறவர்கள். ஆனால் இப்படிச் சொல்லிவிட்டு 'கோடிக்கணக்கான மக்களை தேவன் மறுத்தானா? அல்லது தேவன் பெயரைச் சொல்லுகிற மாதிரி மக்கள் மறுத்தார்களா?" என்ற கேள்வி

வரும்பொழுது வேறுபாட்டு எண்ணம் வருகிறதா? ஆகவே அந்த எண்ணத்தின் அடிப்படையில் எங்களை உங்களோடு ஒத்து வராதவர்கள் என்று எண்ணுவது சரியா?

திரு. என். சுந்தரேசத் தேவர்: துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பற்றியோ, இந்த அரசை நடத்துகின்றவர்களைப் பற்றியோ நான் குறை கூறுவதாக அவர்கள் எண்ணியிருப்பார்களானால் அது தவறு. கோயில் நிர்வாகத்தை நடத்துகிறவர்களைப் பற்றித்தான் நான் இருக்கின்ற குறைகளை கூறுகின்றேனேயொழிய, இங்கு இருக்கக்கூடிய அமைச்சர்கள் கோயில் நிர்வாகத்தைச் செய்யக்கூடியவர்களல்ல. அமைச்சரவர்கள் கோயிலில் நிர்வாகம் செய்பவர்களை நியமனம் செய்பவர்கள். நல்ல தெய்வ பக்தி உடையவர்களாக இருப்பவர்களை அப்படி நியமித்தால், கோயிலுக்கும் மதத்துக்கும் நல்லது என்றுதான் நான் சொல்லு கின்றேனேயொழிய வேறு ஒன்றுமல்ல. பொதுவாக இதில் கமிஷனர் போன்ற பதவிகளுக்கு ஐ.ஏ.எஸ். பட்டம் பெற்றவர்களைப் போடுவது விரும்பத்தக்கதன்று. டெக்னிக்கல் குவாலிபிகேஷன் உடையவர்கள் எஞ்சினியர் வேலைக்குத் தேவை, டாக்டர் வேலைக்கு வேண்டும். அது மாதிரி சில குறிப்பிட்ட வேலைகளுக்குத் தான் டெக்னிக்கல் குவாலிபி கேஷன் வேண்டும். அறநிலைய கமிஷனர் யாராக இருக்க வேண்டும்? அதற்கு டெக்னிக்கல் குவாலிபிகேஷன் வேண்டும், தெய்வத்தை நன்றாக வழிபடக் கூடியவர்களாக, நன்றாக மதத்தினுடைய ஆச்சாரம் தெரிந்த வராக இருப்பது தான் அதற்குப் பெரிய குவாலிபிகேஷனே தவிர வேறொன்றுமில்லை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: துணைத் தலைவரவர்களே, இப்பொழுது இருக்கக்கூடிய கமிஷனர் திரு. நரசிம்மன் அவர்கள் நல்ல பக்திமான்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: துணைத் தலைவரவர்களே, அவர் ரிட்டையராகிவிட்டார். இரண்டு மாத காலம் ரஜா போட்டிருக்கின்றார்கள். இப்பொழுது கேஸ்கள் எல்லாம் குவிந்து கிடக்கின்றன. அங்கு கவனிப்பாரற்ற முறையிலே நிர்வாக வேலைகளெல்லாம் குவிந்து கொண்டே இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் போக்கப் பட வேண்டுமென்பதற்காகத்தான் குறிப்பிடுகின்றேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: துணைத் தலைவரவர்களே, அவர் ரிட்டையராகி போகக்கூடிய காரணத்தாலே வரக்கூடியவரும் அப்படிப் பட்ட பக்திமானாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் அவர் அந்தக் கருத்தைக் கூறுகிறார்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக பாட்சா: துணைத் தலைவரவர்களே, என்னைப் பொறுத்தவரை, இதுவரை இருந்தவர்கள் எல்லாம் பக்திமான் களாகத்தான் இருந்திருக்கிறார்கள். கோயிலுக்கு வரும்போது பார்த் தால், ரொம்ப பய பக்தியாக, துண்டெடுத்து இடுப்பிலே கட்டி, கை பொத்தி, வாய் பொத்தித் தான் கோயிலுக்கு வருவார்.





திரு. ஜி. சுவாமிநாதன்: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மிக நல்லவர்களாக இருப்பதால், யாரைப் பார்த்தாலும் அமைச்சரவர்களுக்கு அந்த ஒரு அபிப்ராயம்.

புலவர் ஒ. அறிவுடை நம்பி: துணைத் தலைவரவர்களே, எங்களுடைய இயக்கத்தைச் சேர்ந்த நண்பர் ஒருவர் அறங்காவலராக, தலைவராக திருவேற்காடு மாரியம்மன் கோயிலிலே இருக்கிறார். அவருடைய பெயர் மணிவண்ணன் என்பது. முழுக்க முழுக்க பக்திமானாக மாறி அங்கே கடமை செய்துகொண்டிருக்கிறார் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர் களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் சிந்தனை செய்து இவ்வளவு நேரமாக ஒரு பக்திமானைத்தான் கண்டு பிடித்திருக்கிறார்.

திரு. ஜி. சுவாமிநாதன்: துணைத் தலைவரவர்களே, ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

திரு. என். சுந்தரேசத் தேவர்: துணைத் தலைவரவர்களே, ரொம்ப நன்றி. அப்படிப்பட்ட பக்தி ஒரு சோறு பதம். அப்படிப்பட்ட ஒரு பக்தி உருவாகுமேயானால், அது நாட்டுக்கு நல்லது, நான் அதை வர வேற்கிறேன் என்று கூறுகிறேன்.

அடுத்து, தொழில் துறைக்கு அதிகமாக இந்த அரசாங்கம் உதவி செய்வதைவிட விவசாயத் துறைக்கு அந்தப் பணத்தைச் செலவு செய்யு மானால், உணவு உற்பத்தித் துறையிலும் சரி, இந்த நாட்டிலே பலவித மான மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் விஷயத்திலும் சரி, நல்ல விதமான ஒரு வளத்தைக் காணமுடியும்.

அதற்கு அடுத்தாற் போல் காவிரி நீர் பிரச்சினைபற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். காவிரி நீர் பிரச்சினையிலே ஒரு முக்கியமான விஷயத்தை நான் இந்த சபையிலே தெரிவிக்க ஆசைப் படுகிறேன். இன்றையதினம் காவிரித் தண்ணீர் நமக்குக் கிடைக்க வில்லை என்பதற்காக மைசூர் அரசோடு நாம் போராடுகின்றோம். பல விதமான வாக்கு வாதங்கள் எல்லாம் செய்கின்றோம். நண்பர் திரு வசந்தபாய் அவர்கள் நீண்ட நேரம் இங்கே அதைப்பற்றிப் பேசினார்கள். நம்முடைய முதல்வர் அவர்கள் அதற்காக நிறைய நேரம் எடுத்துக் கொண்டு எப்படிச் சமாளிப்பது என்பது பற்றியே சிந்தித்துக்கொண்டு வருகிறார்கள். அதிலேயுள்ள தாவா என்ன? காவிரியிலிருந்து நமக்குத் தண்ணீர் வரவில்லை என்ற தாவா தான். காவிரித் தண்ணீர் பாய வேண்டிய நேரங்களில் பாய்வதற்குப் போதுமான தண்ணீர் கொடுக் காமல் கருநாடக அரசு தடுத்து வேறு நிலங்களுக்குப் பாய்ச்சுகின்றது என்ற ஒரு நிலைதான் அங்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. இந்த நிலையை கருநாடக அரசு செய்தால் என்ன? இன்றைய தினம் நான் ஒரு குறிப்பு கூறுகின்றேன். இதை இந்த அரசாங்கம் கவனமாக, உன்னிப்பாகப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன். சேலம்

மாவட்டம், மோகனூர் வட்டாரத்தில் மோகனூர், மாப்பள்ளி என்ற இரண்டு கிராமங்களிலே பல ரூபாய் மதிப்புள்ள கிணறுகள், பெரிய கிணறுகள் காவிரி பக்கத்திலே கட்டப்பட்டு பெரிய ராட்சஸ பம்ப்செட் வைத்து, 3 ஆயிரம் எக்கர் கரும்புப் பயிரிருக்கு லிப்ட் இரிகேஷன் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு, எக்கர் ஒன்றுக்கு 7,500 ரூபாய் எஸ்டிமேட்டுடன் பெரும் கோடிக்கணக்கான ரூபாயை அந்த வட்டாரத்திலுள்ள ஒரு பிரமுகர் வசூல் செய்து கொண்டிருக்கின்றார். ஒரு எக்கருக்கு இப்பொழுதே அட்வான்ஸாக 2 ஆயிரம் ரூபாய், 2,500 ரூபாய் என்று ஏறத்தாழ 15 இலட்சம் ரூபாய் வாங்கிவிட்டார்கள். பல ரோடுகளைக் கடந்து செல்வதற்காக மதகுகள் எல்லாம் போடப்பட்டிருக்கின்றன. பைப் குழாய்கள் எல்லாம் பொருத்தப்பட்டிருக்கின்றன. இதற்கு அரசு எந்தவிதமான ஒப்புதலும் கொடுக்காமல், அரசினுடைய சம்மதத்தைப் பெறாமல், இப்படித் தவறான முறையில் நடந்து கொண்டிருப்பதை இந்த அரசு தெரிந்து கொண்டிருக்கிறதா, அல்லது அறியாமலிருக்கிறதா என்ற உண்மையை அறிய நான் ஆசைப்படுகின்றேன். அப்படித் தெரியாமல் இருந்திருக்குமானால், உடனடியாக அதைக் கண்டுபிடித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

(பிற்பகல் 6-00)

தஞ்சை மாவட்டத்திற்கும், சோழமண்டலத்திற்கும் வரவேண்டிய காவிரித் தண்ணீரை கருநாடகக்காரர்கள் அணை கட்டிவிட்டார்கள் என்று தமிழகம் முழுவதும் கொதித்தெழுந்தது எதற்காக? சட்டபூர்வமாகக் கொடுக்கப்படவேண்டியதை தடுத்துவிட்டார்கள் என்பதற்காக. அதே நேரத்திலே கருநாடகத்தை விட்டு விட்டு சேலத்திலே உள்ளவர்கள் கருநாடகக் காரர்கள் செய்வதுபோலவே செய்துகொண்டிருந்தால் என்ன அர்த்தம்? "அப்பர் டேம்" என்று கரூருக்குப் பக்கத்திலே கட்டப்பட்டிருக்கிறது. அதிலேயிருந்து வாய்க்கால் வெட்டப்படுவதாக அறிகின்றேன். இப்பொழுது காவிரியிலேயிருந்து பலவித சட்ட விரோதமான திட்டங்கள் பல தனிப்பட்டவர்களால் போடப்பட்டு வருகின்றன. அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன். அதை இதுவரை கவனிக்காமல் இருந்திருப்பார்களானால், உடனடியாகக் கவனித்து, டைமாஷ் கணக்கிலே காவேரிப் பாசனம் எதற்கு இருக்கிறதோ, அதற்குத்தான் என்ற நிலையை ஆக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இதைச் செய்யவில்லையென்றால், தஞ்சை மாவட்ட விவசாயிகளும், சோழ மண்டல திருச்சி விவசாயிகளும் பெருமளவிற்குப் பாதிக்கப்படுவார்கள். ஏற்கெனவே கருநாடகம் சரியாக தண்ணீர் விடவில்லை. விடக்கூடிய தண்ணீரையும் எடுக்கக்கூடிய நிலை ஏற்படுமேயானால், அதுவும் நெல்லுக்கு வரக்கூடிய தண்ணீரை 3,000 எக்கர் கரும்புக்குப் பாய்ச்சக்கூடிய நிலை ஏற்படுமானால், மிகவும் கஷ்டம் ஏற்படும். 15 லட்ச ரூபாய் வசூலிக்கக்கூடிய நிலை அங்கே இருக்கிறது. இதைக் கவனிக்கவேண்டும். இதைச் செய்யாவிட்டால், தஞ்சை மாவட்டத்தின் தலைவிதியையே மாற்றும் படியாக இருக்கும் என்று கூறுகிறேன்.

இறுதியாக, மாநில சுயாட்சிபற்றி என்னுடைய கருத்தை இந்தச் சபையிலே குறிப்பிடும் முடிவுக்கு வந்திருக்கின்றேன். மாநில சுயாட்சி என்ற விஷயத்தை நண்பர்கள் ஆவலோடு எதிர்பார்க்கின்றார்கள்.





மாநில சுயாட்சி என்பது இந்த அரசுக்கு முன்னால் எங்களாலே கோரப்பட்ட ஒரு விஷயம். ஆகையினாலே அதிலே எங்களுக்கு ஆட்சேபணை கிடையாது. ஆனால் காங்கிரஸ்காரர்கள் மாநில சுயாட்சிக்குமட்டும் கோரவில்லை. காந்தியடிகள் கிராம ராஜ்யம் வேண்டும் என்று கோரினார்கள். கிராமத்தினுடைய தேவையை அந்தக் கிராமத்திலே உள்ளவர்களே பூர்த்தி செய்து கொண்டு அவர்களுக்குத் தேவையான வசதிகளை அவர்களே செய்து கொண்டு, நிர்வாகத்தை அவர்களே நடத்த அதிகாரத்தைக் கொடுத்து, செம்மையாக நடத்த கிராம ராஜ்யம் வேண்டுமென்று காந்தியடிகள் கூறினார்கள். அதன் காரணமாகத்தான் கிராமப் பஞ்சாயத்து, பஞ்சாயத்து கூட்டுமன்றம் என்றெல்லாம் வைத்திருக்கிறோம். அந்த அடிப்படையிலே இயங்கிவந்த பஞ்சாயத்தும், கூட்டுமன்றமும், இந்த அரசிலே எவ்வளவு மோசமாக இந்த எட்டு ஆண்டு காலத்திலே வந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது, நீங்கள் ஏன் மாநில சுயாட்சி கேட்கிறீர்கள் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : மாநில சுயாட்சி அவர்களுக்கு இல்லை. நாட்டிற்கு.

திரு. என். சுந்தரேசத் தேவர்: துணைத் தலைவர் அவர்களே, கூட்டு மன்றத்தினுடைய பல அதிகாரங்கள் எடுக்கப்பட்டுவிட்டன. ஒரு கிராமத்திற்குத் தண்ணீர் வேண்டும் என்றால் கூட, சென்னைக்கு வந்து திரு. கந்தப்பனைப் பார்த்து, எனக்குக் குடிக்கத் தண்ணீர் வேண்டும் என்று கேட்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஒரு கிராமத்திலே கிணறு வெட்ட வேண்டுமென்றால் கூட, சென்னைக்கு வரவேண்டியதாயிருக்கிறது குடிசைகள் கட்டவேண்டுமென்றால், குடிசை மாற்று வாரியத்திற்கு சென்னைக்கு வரவேண்டியிருக்கிறது. இதையெல்லாம் யார் செய்ய வேண்டும் ? கூட்டுமன்றங்கள் செய்யவேண்டியதல்லாவா? அதையெல்லாம் நாளாவட்டத்திலே எடுத்துக்கொண்டு வாரியம் என்று ஆக்கினார்கள். இந்த வாரியம் எல்லாம் வந்தபிறகு இந்த நாட்டிற்கு மாநில சுயாட்சி வந்தால் என்ன, வராவிட்டால் என்ன? மாநில சுயாட்சி கேட்பதன் அடிப்படையான நோக்கம், இந்த நாட்டில் கிராம ராஜ்யம் ஏற்பட வேண்டும், கிராம மக்களிடத்திலே எழுச்சி ஏற்படவேண்டும் என்பது என்று தெரிவித்துக்கொள்ளுறேன். ஆகவே மாநில சுயாட்சி கேட்க உங்களுக்கு என்ன வாய்ப்பு இருக்கிறது? உங்களிடம் ஆட்சி இருக்கிறது. நாளைக்கே திட்டம் போடுங்கள். இந்த நாட்டை நாங்கள் மட்டும் ஆட்சி செய்ய வேண்டும் என்று ஆசைப்படவில்லை. இந்த நாட்டிலே உள்ள நிர்வாகம் பரவலாக நடக்க வேண்டும். அந்த அதிகாரத்தைப் பரவலாக பகிர்ந்தளிக்கத் தயாராக இருக்கின்றோம் என்று கூறி, பதினாயிரம் ஜனத்தொகை உள்ள இடத்திலே பஞ்சாயத்திற்கு அதிகாரத்தைக் கொடுங்கள், ஒரு லட்சம் ஜனத்தொகை உள்ள இடத்திலே பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்திற்கு அதிகாரத்தைக் கொடுங்கள், அதற்கு மேல் ஜில்லா மட்டத்திலே செய்யுங்கள். இப்படியெல்லாம் செய்துவிட்டு, பிறகு நீங்கள் மாநில சுயாட்சி என்று கேட்டால், தமிழ்நாடு முழுவதுமே உங்கள் பின்னால் நின்று மாநில சுயாட்சிக்காகப் போராடக் கூடிய நிலையைக் காண முடியும். அதை விட்டுவிட்டு. கிராமத்திலே யாரும் ஆட்சி செய்யக்கூடாது, நகரத்திலேயும் ஆட்சி செய்யக்கூடாது, மாவட்டத்

திலேயும் ஆட்சி செய்யக்கூடாது, ஆனால் சென்னையிலே நான் ஆட்சி செய்வேன், எனக்கு மாநில சுயாட்சி வேண்டுமென்றால், அதற்கு நாங்கள் ஒத்துப்பாடத் தயாராக இல்லை என்பதை இந்த மன்றத்திலே தலைவர் அவர்கள் மூலமாக நான் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. மு. மாசிலாமணி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய 1975–76 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீது பேசுவதற்கான வாய்ப்பை நல்கியமைக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் முதற்கண் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த நிதிநிலை அறிக்கையில் கிட்டத் திட்ட 26 கோடி ரூபாய் துண்டுவிழுந்திருந்தாலும், இந்த நிதிநிலை அறிக்கை என்னைப் பொறுத்தவரையிலே, ஒரு புனித சாசனம் என்பதை நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். இந்த நாட்டிலே அடித்தளத்திலே வாழ்கின்ற தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் நல்வாழ்விற்காக, பேரறிஞர் அண்ணா அவர்கள் எந்தக் கனவைக் கண்டாரோ, தந்தை பெரியார் அவர்கள் எதை நினைத்து அவர் காலம் பூராவும் தள்ளாடித் தள்ளாடி இறுதி மூச்சுவரை நினைத்துச் சென்றாரோ, இந்த நாடு வெள்ளையனுடைய ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெற்று, இந்திய பூபாகம் சுபிட்சம் அடைய வேண்டும் என்று உத்தமர் காந்தியார் நினைத்தாரோ, அதற்கெல்லாம் பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த ஆட்சியில் முதன்முதலாக முதலமைச்சராக வந்தபோது, இரண்டே கால் ஆண்டிலே ஒரு பாரம்பரியத்தை உருவாக்கிச் சென்றுவிட்டார்கள். அந்த அடிப்படையிலே, பேரறிஞர் அண்ணா அவர்கள் விட்டுச் சென்ற அடிச்சுவட்டில், இன்றையதினம் 4½ கோடி மக்களுக்கு தளநாயகனை, தாழ்ந்துகிடக்கின்ற சமுதாய மக்களை தட்டியெழுப்புகின்ற பிரச்சினையிலே கவனம் செலுத்தி, இன்றைக்கு புரட்சிகரமான திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். குறிப்பாக இந்த நிதிநிலை அறிக்கையில் 1975–76 ஆம் ஆண்டிற்கு தமிழக அரசு தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்திற்காக 10·88 கோடி ரூபாய் செலவிடத் திட்டமிட்டிருக்கிறது. இந்த மாநிலத்தைப் பொறுத்தமட்டிலே, இதற்காக மத்திய அரசு தர இருக்கின்ற பணம் ரூ. 50 இலட்சம்தான். ஏதோ கருணையோடு ஒதுக்கியிருக்கின்றது. ஆனால் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒரு பைசாகூட அளிக்கவில்லை. தமிழ்நாட்டிலே இருக்கிற பிற்படுத்தப்பட்ட மக்களில் யாராவது ஒருவர் பட்டதாரியாக வருவாரேயானால், அவருக்கு உபகாரச் சம்பளம் தருவதற்கு ஏற்கெனவே மத்திய அரசு இரண்டு அல்லது மூன்று இலட்சம் ரூபாய் கொடுத்து வந்தது. ஆனால் இன்றைக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் பிற்படுத்தப்பட்ட மக்கள் இரண்டு கோடி பேர் வாழ்கிற தமிழகத்தில் அவர்களுக்கென்று ஒரு துறையை ஆரம்பித்து, அந்தத் துறையில் 168 வகுப்பாராகப் பின்னடைப்பட்டு இருக்கிறவர்களுக்கு, பிற்பட்டோர் நலத்துறை என்று ஏற்படுத்தி, அது நாளொருமேனி பொழுதொரு வண்ணமாக, பாங்காக நல்ல பல திட்டத்தினைச் செய்து வருவதை மத்திய சர்க்கார் உணர்ந்து, அது கொடுத்துக்கொண்டு வந்ததைக் கூட இன்றைய தினம் நிறுத்திவிட்டது. இதை நான் மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.



இன்றைய தினம் கல்வி வசதியைப் பரவலாக்க, அதனுடைய தரத்தை மேலும் உயர்த்த நம்முடைய அரசு கருதுகின்ற நேரத்தில், நான் ஒன்றைக் கவனப்படுத்த ஆசைப்படுகின்றேன். இதே மாமன்றத்தில் 8—12—1972 அன்று நான் கன்னிப் பேச்சைத் துவக்கியபோது, இந்த நாட்டின் கல்வித் தரம், இந்த நாட்டில் பிற்படுத்தப்பட்ட மக்களாக இருக்கின்ற முடி திருத்துவோர், சலவையாளர், விஸ்வகர்ம சமுதாயம், இன்னும் மற்ற சமுதாயம் என்று 168 வகையாக பின்னடைப்பட்டு இருக்கின்ற மக்களுடைய பிள்ளைகள், எஸ் எஸ். எல். சி. தேர்வு பெற்று, பப்ளிக் சர்விஸ் கமிஷன் தேர்வு எழுத வேண்டும் என்றால், ஆங்கிலத்தில் 40 மதிப்பெண்கள் பெறவேண்டும், தமிழில் 40 மதிப்பெண்கள் பெறவேண்டும் என்று இருப்பதை, ஆங்கிலத்தில் 35 மதிப்பெண்கள் பெற்றால் போதும், அதைப் போலவே தமிழில் 35 மதிப்பெண்கள் பெற்றால் போதும் என்று திருத்த வேண்டுமென்று நான் குறிப்பிட்டேன் அன்றைய தினம். பிற்பட்ட மக்களாக இருப்பவர்கள் பொருளாதார ஏற்றம் உள்ளவர்களாக இல்லாமல், தாழ்ந்து தாழ்ந்து வாழ்ந்து கொண்டு இருப்பவர்கள், அவர்களுடைய பிள்ளைகள், எஸ். எஸ். எல். சி. தேர்வில் 40 மதிப்பெண்கள் ஆங்கிலத்தில் வாங்க முடியவில்லை. 38 மதிப்பெண்கள், 39 மதிப்பெண்கள் பெற்றுத் தேறியவர்கள் எத்தனையோ பேர் சர்விஸ் கமிஷன் தேர்வு எழுத முடியாமல் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, தலைவர் அவர்கள் மூலமாக இந்த அரசைக் கேட்டுக்கொண்டேன். அவர்களுக்கெல்லாம் வாழ்வளிக்க வேண்டும் என்றால், மதிப்பெண்களைக் குறைக்க வேண்டும், அப்படிக் குறைத்து அவர்கள் தேர்வு எழுத அனுமதிக்கவேண்டும் என்று சொன்னேன்.

(பிற்பகல் 6–10)

அதை இந்தக் காருண்யமிக்க அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்பட்ட மக்களுக்கும் சமீபத்தில் போட்ட உத்திரவின் மூலம் அண்மையில் செயல்படுத்தியிருக்கிறது. அந்த உத்தரவு என்னவென்றால், எஸ்.எஸ்.எல்.சி.-யில் தேறிய மாணவர்கள், கல்லூரிப் படிப்பிற்குத் தகுதி பெறும் அளவிற்கு எண்களை வாங்கியிருந்தால், அவர்கள் தமிழ்நாடு பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் தேர்வையும் எழுதலாம் என்று 31—10—1974 முதல் அமுல்படுத்தியிருக்கிறது. இது சாதாரணமான காரியம் இல்லை. முதலில் இந்தச் சலுகையை பிற்பட்ட மக்களுக்காகவே கேட்டோம். ஆனால் கருணை மிக்க இந்த அரசு இதை நாட்டிலுள்ள எல்லா சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் கொடுத்திருக்கிறது. இதற்கு நாம் நன்றி செலுத்த வேண்டாமா? "நன்றி மறப்பது நன்றன்று, நன்றல்லது அன்றே மறப்பது நன்று" என்று திருவள்ளுவர் சொல்லிருக்கின்றார். எதிர்க் கட்சியினருக்கு, முக்கியமாக கண்ணியமிக்க எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளுவேன், 1967-லே நம்மால் போற்றப்படும் பெருந்தலைவர் திரு காமராஜர் அவர்கள் விருதுநகர் தொகுதியில் நின்று தோல்வியடைந்து, திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் அங்கே வெற்றிபெற்றார். இதை அடுத்து, பத்திரிகை நிருபர்கள் அண்ணாவிடம் அது பற்றிக் கேட்டபோது, நான் அது கேட்டு அதிர்ச்சி அடைந்தேன் என்றார். ஆனால் பத்திரிகை

நிருபர்கள் அவ்வளவு சுலபமாக விடுபவர்கள் இல்லையே. எனவே அவர்கள் தொடர்ந்து கேட்டார்கள், அந்தத் தோல்விபற்றி தாங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? என்று. அப்போது அறிஞர் அண்ணா அவர்கள், காமராஜர் அவர்கள் தங்கக் காப்பு போன்றவர். அவரது தோல்வி எனக்கு அதிர்ச்சியாகவே இருக்கின்றது என்றார். அவர் அரசியலில் எதிர்க் கட்சித் தலைவர்களையும் அவ்வளவு கண்ணியத்தோடுதான் கருதி வந்தார்கள். ஆனால் அவரால் உருவாக்கப்பட்ட இந்த அரசு செய்து வந்துள்ள நல்ல பல காரியங்களை எதிர்க் கட்சித் தலைவர்கள் அதே கண்ணியத்தோடு பாராட்டுவதில்லை. ஏனோ தெரியவில்லை.

அடுத்து ஒன்று குறிப்பிட விரும்புகிறேன், இன்று தொழில் நுட்பப் பள்ளிகளிலே 39 சதவிகிதம் மார்க் வாங்கியிருந்தால்கூட அவர்களுக்கு அங்கே சேருவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது. இதுபற்றிய விதி முறைகளைச் சற்றுத் தளர்த்த வேண்டும். நேற்றுக்கூட செங்கற்பட்டில், முடி திருத்துவோர் மகன் டைப்ரைடிங் வகுப்பில் சேர 44 ரூபாய் உபகார சம்பளம் கொடுக்கப்படுகிறதைப் பெற வேண்டும் என்று விண்ணப்பம் செய்துகொண்டும் அந்த மாணவருடைய மார்க்குகள் 38 என்று இருந்தால் உபகாரச் சம்பளம் இல்லை என்று சொல்லப்பட்டுவிட்டது என்று கேள்விப்பட்டேன். அன்றாடம் முடிதிருத்திப் பிழைக்கும் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர் எவ்வளவோ கஷ்டப்பட்டுப்படித்து மேலும் ஒரு தொழிலைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்றால், 1½ மார்க்குகள் குறைவாக இருக்கிறது என்று உபகாரச் சம்பளம் மறுக்கப்படுகிறது. நான் நமது மாண்புமிகு தலைவர் அவர்கள் மூலம் நமது கலைஞர் அவர்களுக்கு இதைக் காணிக்கையாக வைக்கிறேன், நல்ல பல உத்தரவுகளைப் பிறப்பித்துள்ள இந்த அரசு, இது விஷயத்திலும் எஸ். எஸ். எல். ஸி.–யில் தேர்வு பெற்றிருந்தால் போதும் என்று உத்தரவிட்டு பிற்பட்ட சமூதாய மக்களுக்கு உதவியினை அளிக்க வேண்டுமேன்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து அண்மைக்காலத்தில் என். ஜி. ஓக்களுக்கும் மற்ற தொழிலாளர்களுக்கும் இன்னும் நகர சுத்தித் தொழிலாளர்களுக்கும் கூட அரசாங்கத்தில் வீடுகட்டித் தந்திருக்கின்றார்கள். அதைப் போன்றே முடிதிருத்துவோருக்கும் . வீடுகளைக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இவர்களுக்காக வட சென்னையிலே 500 வீடுகளையும் தென் சென்னையிலே 500 வீடுகளையும் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கட்டிக்கொடுத்து மாதா மாதம் ரூ. 15 என்று வாடகை வாங்கிக்கொண்டால் அந்த சமூதாயத்தினர் அனைவருமே இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுவார்கள். மேலும் இந்த நிதி நிலை அறிக்கையில் வாழ்விழந்த கைம்பெண்களுக்கும் அனாதைச் சிறார்களுக்கும் மீண்டும் நல் வாழ்வினை அளிப்பதற்காக வாய்ப்பையும் வசதியையும் செய்து தந்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இதைப் பார்க்கும்போது அன்று கைம்பெண் நிலை பற்றி புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடினாரே, அவர் இன்று கலைஞர் அவர்களின் ஆட்சியைக் காண நம்மிடையே இல்லையே என்றுதான் எண்ணத் தோன்றுகின்றது. அவர் பாடினார், கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே இங்கு வேரில் பழுத்த பலா, என்று. அவர் அன்று பாடியதை எண்ணி இன்று நமது கலைஞர்



ஆட்சியிலே அவர்களுக்காக இந்தத் திட்டத்தினை நமது அரசு செயலாற்ற இருக்கின்றது. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அன்று நினைத்ததை நமது கலைஞர் அவர்கள் இன்று செயலாற்றி வருகின்றார்.

இன்னும் ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன், நெசவாளர்களின் துயரைத் துடைப்பதற்காக இந்த அரசு பல நல்ல திட்டங்களைத் தீட்டித் தந்திருக்கின்றது. நெசவாளர்களுக்கென திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு மட்டுமில்லை, 15 ஆண்டுகளுக்கு முன்பே அதன் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களும், நாவலரும், கலைஞரும், பேராசிரியரும், தங்கள் தோளில் துணிகளைச் சுமந்து சென்று தெருத் தெருவாக அலைந்து விற்றிருக்கின்றார்கள். இன்றைக்கு அவர்களுக்காக பல திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்த இருப்பதைப் பார்த்து அவர்களும் மற்றவர்களும் இந்த அரசுக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கின்றார்கள். இந்த நிதி நிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு மிகக் குறுகிய நேரத்தையே எனக்குத் துணைத் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கின்றார்கள். நாங்கள் எல்லாம் சமூதாயத்தின் அடித்தளத்தில் வாழ்கின்றவர்கள். எனவே..

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :</u> ஐந்து பேர் இன்னும் பேசவேண்டும். வகுப்புவாரியாகப் பிரிப்பதற்கு நேரம் எங்கே இருக்கின்றது?

<u>திரு மு. மாசிலாமணி :</u> துணைத் தலைவரவர்களே, இந்த நாட்டிலே 17 லட்சம் முடிதிருத்துவோரும் 17 லட்சம் சலவைத் தொழிலாளர்களும் இருக்கின்றார்கள். அவர்கள் என்ன நினைக்கின்றார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த நாட்டிலே பஞ்சை பராரிகள், ஏனோ தானோக்கள், சின்னதுகள், பிளாட்பாரத்தில் வசிப்பவர்கள் இப்படிப்பட்டவர்கள் எல்லாம் இந்த மாமன்றத்திலே வந்து அமருகின்றதா என்று பயப்பட்டார்கள் ஒரு நேரத்திலே. அப்படிப்பட்ட சமூதாயத்தைச் சேர்ந்தவர்கள் இந்த மாமன்றத்திலே பெரும் பெரும் பட்டதாரிகள் முன்பு, பெரும் நிலப்பிரபுக்கள் முன்பு இன்று உறுப்பினர்களாக அமர்ந்திருக்கிறோம் என்றால், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கே நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று சொல்லி நமது கலைஞர் அவர்கள் சமர்ப்பித்த இந்த நிதி நிலை அறிக்கையினை வரவேற்று இம்மா மன்றத்தில் இந்த வரவு–செலவுத் திட்டத்தின்மீது பேச வாய்ப்பினை அளித்த மாண்புமிகு தலைவரவர்களுக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்து அமருகின்றேன், வணக்கம்.

<u>புலவர் ஓ. அறிவுடை நம்பி :</u> மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, 1975–76–ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையினை, தம்பிகளில் தலை சிறந்த கலைஞர் கோமான், தமிழ்நாட்டு மலைச்சாரல், குளிர்ப் பூங்காற்று, கொம்புத்தேன் பேச்சாளர், கொள்கைக் கோமான், நாடகத்தால், திரைப்படத்தால், நலம் மிகுந்த சொல்லால் நாட்டார் உளங்கவர்ந்த எந்தன் ஆசான் கலைஞர் கருணாநிதி அவர்கள் இதனை வழங்கியுள்ள இதனை வரவேற்றுச் சிலபல வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகின்றேன்.

இந்த நிதிநிலை அறிக்கையினைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசும்போது அதன் காவிய நகையினைப் பாராட்டும் வகையில் திருவாசகம் என்றார். திருவாசகத்துக்கு உருகார் —இங்கு ஒரு வாசகத்துக்கும் உருகார் என்று சொல்லுவார்கள். "வான் கலந்த மாணிக்கவாசக, நின் வாசகத்தை நான் பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே தேன் கலந்து பால் கலந்து தீங்கனிச் சுவை கலந்து ஊன்கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே" என்ற அந்தப் பாடலோடு இங்கே நம் டாக்டர் அவர்கள் வழங்கியுள்ள நிதிநிலை அறிக்கையினை ஒப்பிட்டால், அது மிகையாகாது என்றே கருதுகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை சமதர்மப் பொழில்! சமுதாயப் பாதுகாப்புக் கழனி!! அரசு ஊழியர் வாழ்வில் பயிர்வேறு படைக்கின்ற மேகம், திமிரெடுத்த அதிகாரக் குவியல் எனும் ஆதிக்கக் கழுகின் சிறகுகளை கருக்கிப் பொசுக்கிடச் செய்யும் சுயாட்சித் தீப்பந்தம், இதிலே ஏழையர்க்கு வரியில்லை, வசதியுடையவர்க்கே வரி என்று குறிப்பிடும் போது சிலர் குறிப்பாகச் சொன்னார்கள், தேயிலைக்கும் காப்பிக்கும் வரி போடப்பட்டிருக்கின்றதே என்று. ஆனால் தேயிலைக்கும் காப்பிக்கும் பிரெஞ்சுக் காப்பிக்கும் சிக்கரிக்கும் இத்தனைக்கும் போடப்பட்டுள்ள வரி, பிற மாநிலங்களிலுள்ள வரியினையொட்டி 5½ சதவிகிதம் என்று இருந்ததை 6 சதவிகிதம் என்றுதான் மாற்றியிருக்கின்றார்கள். ரூ. 100க்கு ஒருவர் தேயிலை வாங்கினால் இனி 50 காசு அதிகமாக அதற்கு வரி கட்ட வேண்டும். ரூ. 10க்கு வாங்கினால் ஐந்து காசு அதிகமாகக் கொடுக்க வேண்டும் வரியாக. அதைத் தவிர அதிகப்படியான வரியை விதிக்கும் எண்ணம் இந்த மாமன்றத்திலே அமர்ந்துள்ள அமைச்சர் பெருமக்களுக்கு இல்லை என்ற முறையில்தான் நமது டாக்டர் கலைஞர் அவர்கள் ரூபாய் ஆறுகோடிக்குத்தான் வரியை விதித்தார்கள். ஆறு கோடிக்கு வரியா என்று கேட்பவர்களுக்கும் இம்மாமன்றத்திலே இருக்கின்றார்கள். அவர்களுக்கு நான் பணிவன்புடன் எடுத்து வைக்க விரும்புவது, நாம் நமது நாட்டின் பாதுகாப்பு நிதியாகத் திரட்டித் தந்ததுகூட ஆறு கோடிக்கு மேலேதான் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

விலைவாசி பற்றிக் குறிப்பிட்டு, அது ஏறியிருப்பதை மிக அழகாக எடுத்துச்சொல்லியிருக்கின்றார்கள் டாக்டர் கலைஞர் அவர்கள்.

(பிற்பகல் 6-20).

இன்றைக்கு விலைவாசி மிகக் கடுமையாக ஏறியிருக்கிறது. ஆனால் இந்த விலைவாசி ஏற்றத்திற்கு உரிய காரணத்தை டாக்டர் விஜயலட்சுமி பண்டிட் அவர்களுடைய மகளார், இந்திரா காந்தியினுடைய மருமகள், நயனதாரா அவர்கள் மறைந்துபோன "சமஸ்காரின் தலை" என்கின்ற ஒரு கட்டுரை எழுதி அதிலே குறிப்பிட்டுள்ளார்கள். தேர்தலுக்காகத் திரட்டிய கறுப்புப் பணம் இன்றைக்கு அரசின் பொருளாதாரத்தோடு போட்டியிட்டு விலைவாசி விஸ்வரூபம் எடுத்திருக்கிறது என்பதைச் சொல்லியிருக்கிறார்கள். சொல்லியிருப்பவர் நயனதாரா. அவர் இந்திரா காந்தியினுடைய மருமகள்.





அது மட்டுமல்ல, முன்னைய நிதி அமைச்சராக இருந்த திரு ஒய். பி. சவான் அவர்கள், ராஜ்ய சபையில் சொல்கிறபோது, ரூபாயினுடைய மதிப்பு மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சுட்டிக்காட்டிய விதத்தில், 22 காசு என்று சொன்னார்கள். அன்றைய தினம் ஜனசங்கத்தினுடைய தலைவரான திரு அத்துவானி அவர்கள், 22 காசுக்கு ரூபாயினுடைய மதிப்பு குறைந்திருக்கிறது என்று சொன்னால், இனி 5 ரூபாயை ஏன் ஒரு ரூபாயாக ஆக்கக்கூடாது என்று கேட்டார்கள். இன்றைய தினம் ஜனநாயகத்தின் தலைவர் என்று சொல்லிக்கொள்கிற சிலபேர், சட்ட மன்றத்திலே வந்து பேசக் கூடிய சிலபேர், சட்டமன்றத்திலே வந்து வாதாடாமல் நான் ஜனநாயகத்தினுடைய காவலன் என்று சொல்லிக்கொண்டு, வெளியே போய் 100 ரூபாய் நோட்டை செல்லாதாக்கு என்று பேசுகிறார்கள். அது மட்டுமல்ல நானும் கறுப்புப் பணம் வாங்கியிருக்கிறேன் என்று சொல்லுகிறார்கள். இங்கே நமது மாண்புமிகு உறுப்பினர் திரு சுவாமிநாதன் அவர்களும், அவருக்கு முன்னால் பேசியவர்களும் குறிப்பிட்டுச் சொன்ன விதத்தில், ஊதியக் கட்டுப்பாடு இருக்கிறதல்லவா, அந்த ஊதிய முடக்கத்தின் பெயரால் சாதாரண ஊழியர்கள் வாங்குகின்ற தொகையிலே இருந்து பங்கு போட்டுக்கொள்ளுகிற மத்திய அரசு 22 லட்சம் ரூபாய் வரி கட்டாதவர்களிடம் உறவு வைத்துக்கொள்ள ஆசைப்படுகிறது என்று சொன்னால், எந்த நிலையிலே நாடு போய்க்கொண்டிருக்கிறது என்பதை இங்கே வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள அவசியத்திலே இருக்கிறேன். இன்றைக்கு நாட்டிலே கவர்ச்சி அரசியல் பெருகிக்கொண்டிருக்கிறது. கவர்ச்சி அரசியல் என்று சொல்கிற போது, எனக்கு மத்தாப்பு நினைவுக்கு வருகிறது. மத்தாப்பு எரிகிற போது அழகாகத்தான் இருக்கும். நீலம் விழும், ஊதா விழும், சிகப்பு விழும், பச்சை விழும், மஞ்சள் விழும். ஆனால் எரிந்து முடிந்தற்குப் பின்னால் அது தூக்கி எறியப்படவேண்டிய கம்பித் துண்டுதான். அதுபோல இன்றைய தினம் அரசியலில் கவர்ச்சி, அரசியல் மத்தாப்பாக எரிந்துகொண்டிருக்கிறது. அது விரைவில் எரிந்து முடிந்துவிடும். தூக்கி எறியக்கூடிய ஒரு இரும்புத் துண்டாக மாறிவிடும். டாக்டர் கலைஞர் அவர்கள் சமுதாயப் பணிக்கு இந்த நிதிநிலை அறிக்கை மூலமாக சொல்லியிருக்கிற காரியங்கள் இருக்கின்றனவே அவை ஏழைகளுடைய இதயத்தையும் மற்றும் எல்லோருடைய இதயத்தையும் கவரக் கூடிய விதத்தில் அமைந்திருக்கிற சிறப்பான திட்டங்கள். மீனவர்களுக்கு வீடுகட்டும் திட்டம், நெசவாளர்களுக்கு சேமிப்புப் பாதுகாப்புத் திட்டம், தாய்தந்தையற்ற அனாதைக் குழந்தைகளுக்கு "கொல்லையிலே மண்ணைவிட்டு கொதித்தெழும் முத்து மல்லிகைகளாக" இருக்கக்கூடிய அந்தக் குழந்தைகளுக்கு, நீர் என்றும் மண் என்றும் அறியாத அந்தக் குழந்தைகளுக்கு அந்த அனாதைச் சிறுவர்களுடைய வாழ்வுக்கு ஒளியேற்ற ஏற்படுத்தப்பட்ட திட்டம்; புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஏக்கத்தோடு பாடினார்:

"கோரிக்கையற்று கிடக்குதன்னே-இங்கே
வேரில் பழுத்த பலா—அதனுடைய
வாழ்வுக்கு யாரும் பொறுப்பேற்றுக் கொள்வதில்லை
வெட்கம் ல்லை, வெட்கம் இல்லை யாருக்கும் வெட்கம் இல்லை"

என்று. ஆனால் கலைஞர் எங்களுக்கு வெட்கம் இருக்கிறது என்று சொல்லக்கூடிய விதத்தில் இன்றையதினம் அந்த ஆதரவற்ற, வாழ்விலே சுவை வற்றிப் போயிருக்கிற விதவைகளுக்கு, வாழ்க்கையிலே ஒளியேற்றக் கூடிய திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், உள்ளாட்சி ஊழியர்களுக்கும் 24.5 கோடி ரூபாயைக் கொடுத்து 7 லட்சம் பேர் பயனடையும் விதத்தில் ஊதிய உயர்வு தரப்பட்டிருக்கிறது. ஓய்வூதியம் பெறக்கூடியவர்கள் 5 ரூபாய் அதிகம் பெறுகிறார்கள். 14 லட்சம் ரூபாய் செலவு—2 ஆயிரம் ஆசிரியர்களுக்கு வேலை, திருச்சி—சேலம் ஆகிய இடங்களுக்கு நகர ஈட்டுப்படி, கிண்டியிலே பொறியியல் கல்லூரி இனி தொழில் நுட்பப் பல்கலைக்கழகமாகப் போகிறதாம். தாழ்த்தப்பட்டோருக்கு 11 கோடி ரூபாய், பிற்படுத்தப் பட்டோருக்கு 5.8 கோடி ரூபாய் இப்படியாக புதியதோர் உலகு செய்து, கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்த்து சமதர்மம் நடமாடும் சதிராட கூடமாக இந்த நிதிநிலை அறிக்கையை கலைஞர் அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள்.

எழுத்து வேந்தன் பேராசிரியர் மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை அவர்கள் 6–ஆம் அங்கத்தில், 3–ஆம் களத்தில் 2 வரிகளை எழுதியிருக்கின்றார்கள். அது வைர வரிகளாக, வரலாற்று வரிகளாக இன்றைய தினம் வடிவம் எடுத்திருக்கிறது. அவர் எழுதி வைத்திருக்கிற வரிகளை நான் நினைக்கிறேன்—புல்லரித்துப்போகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : On a point of order, Sir, உறுப்பினர்கள் மன்றத்திலே தூங்கலாமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : யாரும் தூங்குவதாக எனக்குத் தெரியவில்லையே. இதற்கு முன்பும் பேரவையில் மாண்புமிகு திரு. சிவஷண்முகம்பிள்ளை தூங்கலாம், ஆனால் கொறட்டை விடக் கூடாதென்று ஒரு தடவை தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. கே. ராஜாராம் : தூங்கிக்கொண்டே இருந்து, சொன்னவுடனே விழித்து விட்டார்கள்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : தமிழ் இலக்கியப்பாட்டிலே சொக்கி இருந்ததனால்தான் தூங்குகிறார்கள் போல் இருக்கிறது.

புலவர் ஓ. அறிவுடைநம்பி : துணைத் தலைவர் அவர்களே, நான் முன்பு எடுத்துச் சொன்னதுபோல், பேராசியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் இந்த இரண்டு வரிகளை வைர வரிகளாக, வரலாற்று வரிகளாக வடித்து வைத்திருக்கிறார்கள். அந்த இரண்டு வரிகளை நான் நினைக்கிறபோது, புல்லரித்துப்போகிறது என்று சொன்னேன். அந்த இரண்டு வரிகளும்—

“ எங்குலம் காக்க என அருள் பழுத்து
கங்கணம் கட்டிய கருணாநிதி கான் ”.

என்று எழுதி வைத்திருக்கிறார்கள். அப்படி இன்றையதினம் நம் குலம் காக்க என அருள்பழுத்து கங்கணம் கட்டிய கருணாநிதியாக தமிழகத்து முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவரை நான் நினைக்கிறேன்,



“ சீர்மேவும் கீழ் வானில் உதித்தெழுந்த வெஞ்சுடர் ” “ கார்மேக குன்றம் நவழ்ந்து வரும் மென்காற்று ”, “ உச்சிமலைதேன் உயர் சாரல் நீர் அருவி, பச்சைமலைப் பாறை பயிலும் புலிக்குட்டியாக ” கலைஞர் அவர்கள் விளங்குகிறார்கள். அண்ணா அவர்கள் சொன்னதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். மாநில சுயாட்சியை அறிஞர் அண்ணா அவர்களுடைய வாசகத்தோடு இங்கே குறித்து வைத்திருக்கிறார்கள். அண்ணா மக்களை ஆளுவது மாநில அரசு, மண்ணை ஆளுவது மத்திய அரசு என்று சொன்னார். அண்ணா மாநில சுயாட்சி என்று சொன்னாரா என்று கேட்கிறார்கள் இன்று. அண்ணா சொன்னார் என்பதற்குச் சான்று 1967–ஆம் வருஷம் தேர்தல் முடிவடைகிறது, திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றிபெற்ற திருவிழா, அண்ணா ஆட்சிப் பொறுப்பு ஏற்கிறார், ராஜாஜி அவர்கள் அன்றையதினம் அறிஞர் அண்ணா அவர்களுக்கு நல்வாழ்த்து சொல்லக்கூடிய பெருந்தகையாக விளங்குகிறார். அவர்கள் ஒரு கட்டுரை எழுதினார்கள். “ வெளியேறுக மிகுதியான அதிகாரக் குவியல், வருக உண்மையான கூட்டாட்சி ” என்கின்ற கட்டுரை எழுதினார்கள். அந்தக் கட்டுரையில் ராஜாஜி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். “ திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு பிராந்தியக் கட்சி என்று மேலோட்டமாகச் சிலர் கருதலாம். ஆனால் எல்லா மாநில அரசுகளுக்கும் நியாயமான சுயாட்சி என்ற அடிப்படையில், உண்மையான கூட்டாட்சியை உருவாக்கத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் பிரதிநிதியாக இருக்கிறது ” என்று சொன்னார். பிறகு சொல்கிறார் மத்திய அரசினுடைய நிலையை விளக்கி, “ செயல்பட முடியாத, திறமையற்ற, கடுமையான மத்திய அரசின் தேசிய எதிர்ப்பு தான் திராவிட முன்னேற்றக்கழகம்” என்று. “ பிரிவினை வாதிகள் ” என்று அவர்களைச் சொல்லுவது ஒரு கட்சிக் கொடுங்கோன்மையை நிலைநாட்டிக்கொள்வதற்காகக் கண்டுபிடித்திருக்கிற பூச்சாண்டித்தனம். இந்தியாவின் அளவுக்கும், இயல்புக்கும் ஏற்ற திறமையான அமைப்பு உண்மையான கூட்டாட்சி தான். தி.மு.க. என்பது அந்த எதிர்ப்பு இயக்கத்தின் அடிப்படை, அடையாளம் ” என்பதை பெரும் மதிப்பிற்குரிய மூதறிஞர் ராஜாஜி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அண்ணல் காந்தியடிகள் அவர்கள் சொன்னதைக்கூட என்னுடைய பெரும் மதிப்பிற்குரிய நண்பர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் இங்கே கோடிட்டுக் காட்டினார்கள். தலைவர் அவர்களே, “டெல்லி டைரி” என்கின்ற புத்தகத்தில் காந்தியடிகள் அவர்கள் “ இந்தியாவிற்கு எத்தகைய சுதந்திரத்தை நான் விரும்புகிறேனோ அத்தகைய பூரண சுதந்திரத்தை நான் ராஜ்யங்களுக்கும் விரும்புகிறேன், ஆனால் சுய ராஜ்யம் என்று சொல்வது, பூரண சுதந்திரம் என்று சொல்லுவது பிரிந்து போகக்கூடியதல்ல ” என்பதை கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். நமக்கென ஒரு இன உணர்ச்சி உண்டு. நமக்கென ஒரு மொழியுணர்ச்சி உண்டு. ஆனால் மொழியுணர்ச்சியினுடைய அடிப்படையிலேதான் இந்த மாநில சுயாட்சி அமைகிறது என்பதை “ டாயின்பீ ” என்கின்ற வரலாற்றுப் பேராசிரியர் அவர்கள் மிகச் சுவையாகச் சொன்னார்கள். அவர் சொன்னார், “வளர்ந்து வருகின்ற தேசிய இன உணர்ச்சி இருக்கிறதே அது தொன்மையான எல்லைக்கோடுகளாலோ, பூகோள காரணங்களாலோ ஏற்படக்கூடியதல்ல. அது தாய் மொழியின் காரணமாகவே ஏற்பட்டிருக்கிறது” என்ற கருத்தைச் சொன்னார்.

இன்றைய தினம் உலகத்திலே இருக்கின்ற சிறிய நாடு "ஸ்விஸ்" நாடு. அங்கே நான்கு மொழி பேசுகிறார்களாம். ஒன்று ஜெர்மன் மொழி, இன்னொன்று பிரஞ்சு மொழி, வேறொன்று இத்தாலி மொழி, மற்றொன்று ரோமன் மொழி. 100-க்கு 70 பேர் அங்கே பேசக்கூடியது ஜெர்மன் மொழி, 21 பேர் பேசக்கூடியது பிரஞ்சு மொழி, 8 பேர் பேசக் கூடியது இத்தாலி மொழி. ஒரேயொருவர் பேசக்கூடியது ரோமன் மொழி. ஆனால் அந்த அத்தனை மொழிகளுக்கும் பொதுமொழித் தன்மைகள் உண்டு. அங்கே போய் ஸ்விஸ் நாட்டுக்காரன் என்று கருதிக் கொண்டு ஒரு ஜெர்மானியனைக் கேட்டாலோ அல்லது ஒரு பிரஞ்சுக் காரனைக் கேட்டாலோ, ஒரு இத்தாலிக்காரனைக் கேட்டாலோ, ஒரு ரோமன் காரனைக் கேட்டாலோ, நீ யார் என்று கேட்டால், நான் ஒரு ஸ்விஸ் என்று அவன் சொல்வதில்லை. நான் ஒரு ஜெர்மன்-ஸ்விஸ் என்கிறான். நான் ஒரு இத்தாலி-ஸ்விஸ் என்கிறான், நான் ஒரு ரோமன்-ஸ்விஸ் என்கிறான். நான் ஒரு பிரஞ்சு-ஸ்விஸ் என்கிறான். அந்த விதத்தில் என்னைக் கேட்டால், துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரு இந்தியத்-தமிழன் என்று சொல்லிக் கொள்வதற்குத்தான் விரும்புகிறேனே யொழிய, இந்தியன் என்றுதான் சொல்லிக் கொள்ள வேண்டும், தமிழன் என்று சொல்லிக்கொள்ளக்கூடாது, இணைத்துச் சொல்லக்கூடாது என்று சொல்வார்களேயானால், இன்றையதினம் ஒருமைப்பாடு என்பது ஒரு நூலாகக் கட்டப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்களே, அந்த நூலை அறுத்துக் கொள்வதற்குக் கூட நான் தயாராக இருக்கிறேன் என்று சொல்லத்தான் வேண்டும். இங்கே தமிழ் மொழிக்கு இருக்கிற இன உணர்ச்சியை மறந்து விடலாகாது. இந்தத் தமிழினுடைய வளர்ச்சியை, வரலாற்றை மறந்து விடக்கூடாது. இந்த மொழி இன்றையதினம் இந்தியாவிலே இருக்கிற பிற மொழிகள் போன்றதா ? கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி என்கிறோம் தமிழ் மொழியை. அது மட்டுமல்ல இன்றையதினம் இந்திய வரலாற்றை எடுத்துப்பார்ப்போமானால் கி.மு. 8-ஆம் நூற்றாண்டிலே .. .. ..

<u>மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்</u> : நிறைய பேர்கள் பேச இருக்கிறார்கள். முடித்துக்கொள்ளுங்கள்.

<u>புலவர் ஓ. அறிவுடைநம்பி</u> : மன்னிக்கவேண்டும், இன்னும் ஒரு ஐந்து மணித்துளிகள் தாருங்கள்.

(பிற்பகல் 6–30.)

தலைவரவர்களே, கி.மு. 800-ஆம் ஆண்டு வேத மொழி பிறந்தது. அது இறந்துபட்ட பின்னர், அதற்கு 200 ஆண்டுகளுக்குப் பின்னர், இதிகாச மொழி வந்து, அதுவும் செத்துப்பட, அதற்குப் பின்னர் புத்தர் மகாவீரர் காலத்திலே பாலி மொழி தோன்றி, அதற்குப் பின்னர் பிராகிருதம் தோன்றி, அதற்குப் பின்னால் கி.பி. முதல் நூற்றாண்டில் தான் சமஸ்கிருதம் பிறந்தது என்று சொல்கிறார்கள். அது இத்தனை மொழிகளினுடைய கூட்டு சேர்க்கை என்று சொல்கின்றார்கள். ஆனால் அதுவும் நீண்ட நாள் வாழாத காரணத்தால், கி.பி. 500-ஆம் ஆண்டில்





புதிய பிராகிருதம், அதற்குப் பின்னர் ஆயிரத்திற்குப் பின்னர் அபி பிராகிருதம், அதற்குப் பின்னர் ஆயிரத்தி அறுநூறாவது ஆண்டுக்கு இடையிலேதான் இன்றைக்கிருக்கின்ற இந்தியாவில் இருக்கின்ற வட மொழிகள் தோன்றின என்று சொல்கின்றார்கள். புத்தர் காலத்து, அசோகர் காலத்து இலக்கியங்கள் வட இந்தியாவில் இருக்கின்றதா என்று கேட்டால், சொல்ல முடியாது. ஆனால் தமிழிலே இத்தனையும் இருக்கின்றன. அப்படிப்பட்ட தமிழ், அந்தத் தமிழுக்கு இருக்கின்ற சிறப்பு, அந்தத் தமிழினத்திற்கு இருக்கின்ற, உணர்ச்சிக்கு இருக்கின்ற பெருமைகளை நாம் காப்பாற்ற வேண்டும்.

கபினியிலே நீரை அடைத்து வைத்திருக்கின்றார்கள். கருநாடகத்தைத் தட்டிக் கேட்பதற்கு இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டை வலியுறுத்துகின்ற தாயாலே முடியவில்லை. சோழர்குலக் கொடி என்று காவேரி ஆற்றைப் பற்றி இலக்கியம் பேசுகிறது. அது சோழர்களுடைய மனைவி என்று சொன்னார்கள். சோழர்கள் பயன்படுத்திக்கொண்டு வந்தது என்று அவர்கள் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட காவிரி ஆற்றின் பயனை தமிழகம் மீண்டும் பெற வேண்டும் என்பதற்கான வாய்ப்பை ஒருமைப்பாடு பற்றிப் பேசுகின்றவர்கள் உணர வேண்டும். அதைத் தீர்த்துக் கொடுக்க வேண்டும். நான் இறுதியாக ஒன்றை வலியுறுத்திச் சொல்வேன். கடந்த முறை, தலைவரவர்களே, நீங்கள் பேசியிருக்கின்றீர்கள் வலியுறுத்திச் சொல்லியிருக்கின்றீர்கள். தமிழுக்கான வளர்ச்சியைப் பற்றி இந்த மன்றத்தில் நீங்கள் எடுத்துப் பேசுகின்றபோது, குறிப்பாகச் சொல்லியிருக்கின்றீர்கள். தமிழுக்கான ஒரு திட்டத்தை அமைத்து அதற்காக ஒரு தமிழ் வாரியம் அமைக்க வேண்டுமென்று நீங்கள் வலியுறுத்தியிருக்கின்றீர்கள். அன்றைய தினம், என்னுடைய நினைப்புச் சரியாக இருக்குமானால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நிதிநிலை அறிக்கையிலே பதில் தருகின்றபோது "விரைவிலே தமிழ் வாரியம் ஏற்படுத்தப்படும்" என்று சொன்னார்கள். ஆனால் இதுநாள் வரை அந்த வாரியம் ஏற்படுத்தப்படவில்லை. நான் உங்கள் மூலமாக பெருமதிப்பிற்குரிய டாக்டர் கலைஞர் அவர்களுடைய திருவடியைத் தொட்டு வேண்டிக் கொள்கிறேன். சீக்கிரம் தமிழ் வாரியம் அமைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல வேறு ஒன்றையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நமது எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கூட சொல்வார்கள். தமிழறியும் பெருமாளாக இந்த மன்றத்தில் 9 ஆண்டு காலம் முதலமைச்சராக இருந்தார்கள் பெரியவர் திரு காமராஜர் அவர்கள். அதற்குப் பின்னர் 9 ஆண்டுகாலம் தமிழாய்ந்த தமிழனாக தமிழ் நாட்டினுடைய முதலமைச்சராக பேரறிஞர் அண்ணாவும், அவரைப் பின்பற்றி அவர்கள் தம்பி மாண்புமிகு டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்கள் இருந்துகொண்டிருக்கின்றார்கள். ஆக நீண்டகாலம் ஓடிவிட்டிருக்கின்றது. ஆனால் இந்த மாமன்றத்திலேயிருந்து வருகின்ற வரைவுகள் எல்லாம் தமிழிலே உண்டா ? என்று வரும் அந்த நிலை ? என்றைக்குப் போகும் இந்த நிலை? வேதனையாக இருக்கின்றது. நான் இதற்கு பாரதியார் அவர்களுடைய பாட்டு போன்ற ஒன்றினை எடுத்துக்கூறி ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

" என்று தணியும் எங்கள் தமிழின்தாகம்,
என்று மடியும் இந்த ஆங்கில மோகம் "

என்று எடுத்துச் சொல்லவேண்டிய அவசியத்திலே நான் இருக்கின்றேன். அந்த அளவுக்கு இன்னமும் ஆங்கிலத்திலேதான் இந்த மசோதாக்கள் வருகின்றன. எங்களையெல்லாம் சோதாக்கள் ஆக்கி வருகின்ற அந்த மசோதாக்கள் மிக்க வேதனையை அளிக்கின்றன. எனவே தமிழிலே அவைகள் தரப்பட்டால், நாங்களும் அதைப் புரிந்து கொண்டு பேச முடியும். எங்களாலே புரிந்துகொள்ள முடிகின்றது, ஆனால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. நமது பெருமதிப்பிற்குரிய நண்பர்கள் திரு. சுவாமிநாதன் அவர்களால், திரு. தாமோதரன் அவர்களால் புரிந்து கொள்ளவும் முடிகிறது, உணர்ந்துகொள்ளவும் முடிகிறது ஆங்கிலத்தில். எங்களாலே உணர்ந்து கொள்ளவே முடியவில்லை. ஏதோ அறிந்து கொள்ள முடிகிறது, ஆனால் உணர்ந்துகொள்ள முடியவில்லை. அப்படி உணர்ந்துகொண்டு பேசவேண்டுமென்று சொன்னால், நாங்களும் எல்லாப் பேச்சுகளிலும் பங்கெடுத்துக்கொள்ளவேண்டுமென்றால், எங்களுக்குத் தமிழிலே தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். தமிழிலே டாக்டர் கலைஞர் அவர்கள் காலத்திலே செய்யாவிட்டால், வேறு யார் காலத்திலே செய்யப்போகிறார்கள் ? இனி வருகின்ற கார்கால தொடர் கூட்டத்திலேனும் இந்த வரைவுச் சட்டங்கள் இங்கே தமிழிலே வைக்கப்பட வேண்டும் என்று வேண்டிக்கேட்டுக் கொள்கின்றேன்.

கடைசியாக துணைத் தலைவரவர்களே, நான் ஆசிரியர்கள் தொகுதியிலிருந்து வந்திருக்கின்றேன். இங்கே இந்த அரசு ஆசிரியர்களுக்கு நிறைய செய்திருக்கிறது. ஆனால் ஆசிரியர்கள் தொகுதியிலிருந்து வந்திருக்கின்ற நண்பர்கள் நன்றி கூடச் சொல்லவில்லை. எனவே நான் நன்றி சொல்ல விரும்புகிறேன். எனவே எனக்கு நேரம் கொடுத்து சற்றுப் பேச அனுமதியுங்கள். " நன்றி மறப்பது நன்றன்று " என்று சொல்லியிருக்கிறார்கள். " நன்றி மறப்பவர்க்கு உய்வில்லை " என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்த நன்றி சொல்லுவதற்கு இடம் இல்லாது போய் விட்டிருக்கின்றது. 7 லட்சம் பேருக்கு இன்றைக்கு 24·4 கோடி ரூபாய்க்கு ஊதிய உயர்வு தரப்பட்டிருக்கின்றது. சுமார் இரண்டாயிரம் ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு காரணமாக ரூ. 14 லட்சம் செலவாக இருக்கின்றது. இதற்கெல்லாம் நன்றி உண்டா என்று கேட்டால், இராமயணப் பிரசங்கி கதைபோல் இருக்கின்றது. ஒரு இராமயணப் பிரசங்கி சிற்றூருக்குப் போகிறார். போனவர் அந்த ஊர்க்காரர்களைக் கேட்கிறார் "இராமயணம் தெரியுமா, தெரியாதா " என்று. அவர்கள் தெரியாது என்று சொல்கிறார்கள். பதிலுக்கு, பிரசங்கி பதில் சொல்கிறார், தெரியாதவர்களுக்குச் சொல்லிப் பயன் இல்லை என்று திரும்பிவிட்டாராம். சமாதானம் சொல்லி அழைத்து வைத்தார்கள். மறு நாள் அவர் மீண்டும் ஊராரைக் கேட்டார். "இராமாயணம் தெரியுமா ?" என்று "தெரியும்" என்றார்கள் ஊரார்—தெரிந்தவர்களுக்கு என் சொல்வது என்று கூறித் திரும்பி விட்டார். மறுநாள் ஊர்க்காரர்கள் எப்படியேனும் அவர்களுடைய புத்திசாலித்தனத்தை காட்டி அவரை இராமாயணம் சொல்ல வைக்கவேண்டும் என்று பாதிபேர் தெரியும்



என்றும் பாதிபேர் தெரியாது என்றும் சொல்லக் கருதி இரண்டு பிரிவாகப் பிரிந்து ஒரு பிரிவினர் தெரியும் என்று சொல்ல, மறு பிரிவினர் தெரியாது என்று சொல்ல, இரு பிரிவினருக்கும் பிரசங்கி சொன்னாராம், தெரிந்தவர் தெரியாதவர்களுக்குச் சொல்லுங்கள் என்று சொல்லிவிட்டு வந்து விட்டாராம். இந்த அரசு என்ன செய்தாலும் சரி, நம் நண்பர் திரு. முத்துசாமி அவர்கள் இராமாயணப் பிரசங்கி போல் என்ன செய்தாலும், நன்றி சொல்ல மாட்டார். அப்படி இருக்கக்கூடாது என்ற காரணத்தால், நான் நன்றி சொல்கின்றேன். அது குறித்து மேலும் விரிவாகச் சொல்லவேண்டும் என்று நினைத்தாலும் காலம் இல்லாத காரணத்தால் இன்னொன்றை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

1975–76-க்கு டெல்லியிலே ரூ. 295 கோடி உணவு மானியத்திற்காக ஒதுக்கியிருக்கின்றார்கள். 55 லட்சம் டன் கோதுமை இறக்குமதி செய்யப்படும் என்கின்றார்கள். கோதுமையை குவிண்டாலுக்கு இன்றைக்கு ரூ. 180-92 காசுக்கு வாங்கி ரூ. 175-க்கு மானியமாக அளிக்கின்றார்கள். குறைந்த விலைக்கு அளிக்கின்றார்கள் கோதுமையை. ஆனால் அரிசியை ரூ. 148·26 காசுக்கு வாங்கி, ரூ. 1·74 லாபம் என்று கூட்டி ரூ. 150-க்கு விற்கிறார்கள். எனவே கோதுமைக்கு ஒரு நீதி, அரிசிக்கு ஒரு நீதியா ? இந்த நிலை இன்னமும் மத்திய அரசிலே நீடிக்கவேண்டுமா ? இந்த மாற்றாந்தாய் மனப்பான்மை நிலைமை ஒழியவேண்டாமா ? அதற்கு மாநில சுயாட்சி கேட்க வேண்டும் என்று மீண்டும் நினைவுபடுத்துகிறேன். துணைத் தலைவர்வர்களே, இந்த நிதிநிலை அறிக்கை ஒரு சமதர்ம பொழில், சமுதாய பாதுகாப்புக் கழனி, அரசு ஊழியர்கள் வாழ்வில் பயிர் பேறு படைக்கின்ற மேகம், திமிர் பிடித்த அதிகாரக்குவியல் எனும் ஆதிக்கக் கழுகின் சிறகுகளை கருக்கிப் பொசுக்குகின்ற மாநில சுயாட்சி தீப் பந்தம் என்று சொல்லிக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

*__செல்வி சி. தமிழரசி :__ மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, " வான் பொய்ப்பினும் தான் பொய்யா " நெஞ்சினையுடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் சமர்ப்பிக்கப் பட்டிருக்கின்ற, 1975–76-ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கைமீது பேசுகின்ற பெரு வாய்ப்பினைப் பெற்றமைக்காக பெரு மகிழ்வு எய்துகின்றேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் சோஷலிஸத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் சமுதாயத்தின் அடித்தளத்திலே அல்லல் படுகின்ற பகுதியினர் ஆதிக்கக்காரர்களுக்குச் சவால் விடுகின்ற அளவுக்கு உயர்ந்து அப்படி அல்லல் பட்ட வர்க்கம், ஆதிக்கம் செலுத்துகின்ற வர்க்கத்திற்கு விடுகின்ற எச்சரிக்கை ஒலியினின்று பிறப்பதுதான் சோஷலிஸம் என்று எழுதினார்கள். எழுதியது மட்டுமல்ல, அந்த சமதர்ம சமுதாயத்தை உருவாக்குவது என்னுடைய தூய்மையான லட்சியம் என்றார்கள். அந்த லட்சியத்தின் அடிப்படையிலேதான் ஏராளமான திட்டங்கள் இந்த நிதி நிலை அறிக்கையிலே இருக்கின்றது என்று நான் சொல்வேனானால் அது மிகையாகாது.

நேற்றைய தினம் இந்த நிதி நிலை அறிக்கை மீது உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் ஒரு சில வரிகள் குறித்து குறைபட்டுக்கொண்டிருக்கின்றார்கள். இயற்கையின் சீற்றம், மத்திய அரசினுடைய மாற்றாந்தாய் மனப்பான்மை, இவைகளுக்கு இடையேயும் மது விலக்குக் கொள்கையை அமுல்படுத்துவதால் ஏற்படுகின்ற இழப்பு, நிலவரி வஜா இவைகளால் ஏற்படுகின்ற இழப்பு, குதிரைப் பந்தயத்தை ஒழித்திருப்பதால், ஒழிக்க இருப்பதால் ஏற்படவிருக்கிற இழப்பு ஆகியவைகளுக்கு இடையேயும் ஒரு $5\frac{1}{2}$ சதவிகிதத்தை 6 சதவிகிதமாகவும் அல்லது $3\frac{1}{2}$ சதவிகிதத்தை 4 சதவிகிதமாகவும் வரியை உயர்த்தியிருப்பதை மிகைப்படுத்திக் கொள்ளவேண்டிய அவசியமில்லை என்பது என்னுடைய பணிவான கருத்தாக இருக்கின்றது. அதே நேரத்தில் இந்த நிதிநிலை அறிக்கையிலே ஏராளமான திட்டங்கள் அடித்தளத்திலே அல்லல்பட்டு ஆற்றாது அழுகின்ற மக்களுக்காகவும், ஏறெடுத்துப் பார்ப்பாரற்று எள்ளி நகையாடப்பட்டவர்கள் எல்லாம் சமூதாயத்திலே தலை நிமிர்ந்து வாழ்கின்ற வகையிலே தீட்டப்பட்டிருக்கின்றன என்றும் இங்கே பல உறுப்பினர்கள் எடுத்துப் பேசியிருக்கின்றார்கள். என்னுடைய கடமையின் காரணமாக நானும் சிலவற்றைக் குறிப்பிட்டுப் பேச விழைகிறேன். தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் ஆகியவர்களுடைய முன்னேற்றத்திற்காக 16·69 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பது, ஹரிஜனங்கள் காலனியிலிருந்து இடுகாட்டுக்குப் பாதை அமைத்தல், மீனவர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம், திக்கற்ற அனாதைச் சிறார்களுக்கும் ஆதரவற்ற கைம்பெண்களுக்கும் உதவி செய்ய சிறப்புத் திட்டம் இப்படி பல்வேறு திட்டங்கள் இருக்கின்ற நேரத்திலே, இங்கே எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் கைம்பெண்களுக்காக இருக்கின்ற அந்தத் திட்டத்தைப் பற்றிப் பேசினார்கள்.

(பிற்பகல் 6-40)

அதிலும், குறிப்பாக பாவேந்தன் பாரதிதாசன் அவர்களுடைய பாட்டினைக் கோடிட்டுக் காட்டினார்கள். "கோரிக்கையற்று கிடக்குது அண்ணே வேரில் பழுத்த பலா" என்பதை எடுத்துச் சொன்னார்கள். நான் அந்தக் கருத்தைச் சொல்வதற்கு முன்பு இன்னொரு கருத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன். நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் எழுதிய படங்களிலே ஒன்றான பராசக்தி படத்தில் கல்யாணி என்ற ஒரு விதவைப் பாத்திரம் வரும். அந்தக் கல்யாணி ஒரு இடத்திலே குறிப்பிடுவார்—விதவை என்ற காரணத்தினால் வேறு வழியின்றி இட்டிலிக் கடை வைத்திருப்பாள். அதுபற்றிக் கேட்கிற நேரத்திலே அவள் குறிப்பிடுவாள், தமிழ் நாட்டிலே தாலி அறுத்தவர்களுக்கு இட்டிலிக்கடை வைத்திருப்பது தாசில்தார் உத்தியோகம் போல் என்று. அன்றைய தினமே அந்தக் கைம்பெண்களைப்பற்றி நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் எண்ணிப்பார்த்திருக்கிறார்கள். இன்றைக்கு அந்த வேலை கூட செய்ய இயலாதிருக்கிறது விலைவாசி உயர்வு காரணத்தினால். அந்தக் கைம்பெண்களுக்கு உதவி செய்வதற்குத் தான் திட்டங்கள் தீட்டியிருப்பதில் ஆச்சரியமில்லை. அதே நேரத்திலே பாவேந்தன் பாரதிதாசன் கைமை துயர்பற்றிக் குறிப்பிடுகிற நேரத்திலே, மாலையிட்ட மணவாளன் இறந்துவிட்டால் மங்கை நல்லாள் என்ன செய்வாள் என்று வேதனைப்பட்டாரே,





இளங்கோவடிகள் கணவனை இழந்தார்க்கு காட்டுவது இல் என்று நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தின் வாயிலாகப் பட்ட வருத்தம்—ஆக அவர்கள் எல்லாம் பட்ட வருத்தங்களுக்கு ஆறுதல் கிடைத்திருப்பது டாக்டர் கலைஞர் காலத்திலேதான் என்று சொல்லுவேனானால், அது மிகையாகாது. அதே நேரத்திலே இந்த அரசாங்கம் அவர்களுக்காக என்ன திட்டங்களை வைத்திருந்தாலும், என்னுடைய பணிவான ஒரு கருத்தைச் சொல்லிக்கொள்ள நான் ஆசைப்படுகின்றேன். அனாதைச் சிறார்களுக்கும் கைம்பெண்களுக்கும் உதவி செய்ய என்று இரண்டு திட்டங்கள் வந்திருக்கிற காரணத்தினால், அந்த அனாதைக் குழந்தைகளைப் பராமரிக்கின்ற பொறுப்பினை அந்த விதவைத் தாய்மார்களிடத்திலே ஒப்படைத்தால், ஒரே கல்லிலே இரு மாங்காய் என ஆகும் என்பது என்னுடைய கருத்து. அது மட்டுமல்லாமல், அந்த விதவைப் பெண்களுக்கு உள்ளத்திற்கும் கொஞ்சம் ஆறுதலாக இருக்கும் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, என்னுடைய புதுக்கோட்டையை ஒட்டியிருக்கிற காரைக்குடியிலே தமிழ்த்தாய் கோயில் நிறுவுவதற்காக நம்முடைய அரசு இந்த நிதி நிலை அறிக்கையிலே அறிவித்திருப்பது குறித்து என்னுடைய தமிழ் நெஞ்சம் எந்த அளவுக்குப் பாராட்ட முடியுமோ அந்த அளவுக்குப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று அழகு தமிழை அரியணையில் ஏற்றியிருக்கிற டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழ்த்தாய் கோயில் ஒன்றை நிறுவுவதைப் பாராட்டாமல் எந்தத்தமிழ் நெஞ்சமும் இருக்காது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதே நேரத்தில் தொழில் மேம்பாட்டுக்காக நம்முடைய தமிழ் நாடு அரசு "டிட்கோ, சிட்கோ, சிப்காட்" என்ற பல்வேறு தொழில் வளர்ச்சிக் கழகங்கள் மூலமாக பல்வேறு தொழிற் கூடங்களை அமைக்கவும், பல பேருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரவும் முன் வந்திருக்கிற நேரத்தில், நான் அது குறித்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிற நேரத்திலே, புதிதாக உருவாக்கப்பட்டிருக்கிற புதுக்கோட்டை மாவட்டம் குறித்து நான் இங்கே சிலவற்றைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். புதுக்கோட்டை மாவட்டத்தைப்பற்றிப் பேசத் தொடங்குகிற நேரத்திலேயே, முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்க வேண்டும். புதுக்கோட்டையை தனி மாவட்டம் ஆக்க வேண்டுமென்பது நீண்ட நாட்களாக இருந்துவந்த ஒரு கோரிக்கை. அந்த நீண்ட நாள் கோரிக்கை டாக்டர் கலைஞர் காலத்திலேதான் நிறைவேற்றப்பட்டது. ஆக, புதுக்கோட்டை தனி மாவட்டம் ஆக்கப்பட்டதற்கும், வாட்டி வதைத்துக்கொண்டிருக்கிற வறட்சி நேரத்திலே ஏறத்தாழ ஒரு கோடி கவிநாடு கண்மாய்த் திட்ட அனுமதியையும் சேர்த்தால், ஒரு கோடியே $11\frac{1}{2}$ இலட்சம் ரூபாயை புதுக்கோட்டை மாவட்டத்துக்கு ஒதுக்கியிருப்பது குறித்து எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அதே நேரத்திலே ஒரு காலத்திலே ஒரு சமஸ்தானமாக இருந்த என்னுடைய புதுக்கோட்டை

இப்பொழுது தனி மாவட்டமாக்கப்பட்டாலும் கூட, நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்வேன், அது ஒரு தாலுகாவுக்கு உள்ள சிறப்புகளைக் கூட இன்னும் பெறவில்லை, அது பொலிவற்று இருக்கிறது, முன்னேற்றமே இல்லை. அதற்காக நான் தமிழ் நாடு அரசைக் குறை சொல்லவில்லை. எவ்வளவோ திட்டங்களை அந்த மாவட்டத்துக்காகத் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள். புதுக்கோட்டை மாவட்டத்தில் பாலையூர் கிராமத்தில் மக்காச்சோள ஆலை ஏற்படுத்தவேண்டி மத்திய அரசிடமிருந்து **letter of intent** பெறப்பட்டுள்ளது. குளுகோஸ், மாட்டுத்தீவனம் போன்றவற்றை தயாரிப்பதற்காக தற்காலிகமாக நிலத்தைத் தேர்ந்தெடுத்து மண்சோதனை, நீர் சோதனை முதலியவைகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், இயந்திரங்கள் வாங்குவதற்காக ஏற்பாடுகள் துரிதமாக நடந்து கொண்டிருக்கின்றன. **16—2—1975** ஆம் நாளோடு இந்த **intent** காலாவதி ஆவதால், மீண்டும் அதை ஓராண்டுக்கு நீட்டித்துக் கொடுப்பதற்கு மத்திய அரசை இநத அரசு கேட்டிருக்கிறது என்பனவற்றையெல்லாம் நான் எண்ணிப்பார்க்கிற நேரத்தில் பூரிப்படைகிறேன், நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆனால் இவற்றையெல்லாம் துரிதப்படுத்தி என்னுடைய மாவட்டத்தைப் பொலிவோடு விளங்கச் செய்ய வேண்டுமென்று டாக்டர் கலைஞர் அவர்களை நான் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்திலே இன்னும் பல சலுகைகள் புதுக்கோட்டை மாவட்டத்துக்குச் செய்யப்பட்டிருக்கின்றன. புதிதாக தொழில்கள் தொடங்குவோருக்கு மின் கட்டணச் சலுகை, வரி செலுத்துவதிலே சலுகை போன்றவற்றை மாநில அரசு அறிவித்திருக்கிறது. இன்னும் கூட தொழில் துறையிலே மிகவும் பின் தங்கிய மாவட்டம் "இண்டஸ்டிரியலி பேக்வேர்டு" "இண்டஸ்டிரியலி அண்டர் டெவலப்ட்" என்றெல்லாம் அறிவித்து அதற்காக பலவித சலுகைகளைச் செய்திருக்கிறார்கள். அந்தச் சலுகைகளைப் பயன்படுத்தப் பல பேர் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்திலே நான் இங்கே இன்னும் விடுகிற வேண்டுகோள் : சர்க்கரை தொழிற்சாலைபற்றி இந்த நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே நேரத்திலே புதுக்கோட்டைக்கு சர்க்கரை ஆலை வேண்டுமென்று கேட்டால், அதற்குரிய தண்ணீர் வசதியில்லையென்று சொல்லுகிறார்கள். ஆனால் சமீபத்திலே நில நீர் ஆய்வாளர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் நிலத்துக்கடியில் நீர் நிரம்ப இருக்கிறது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். எனவே அதை வைத்து துளைக் கிணறுகள் மூலமாக தண்ணீர் வசதி செய்து, புதுக்கோட்டை மாவட்டத்துக்கு சர்க்கரை ஆலையைத் தர வேண்டுமென்று நான் இங்கே கெஞ்சிக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். இன்னும் கூட என்னுடைய புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கி பகுதி ஒன்று தான் கடற்கரைப் பகுதி. அந்தக் கடற்கரைப் பகுதியிலே இருக்கிற ஒரு குறை என்னவென்று சொன்னால், அங்கே மீன்பிடி விசைப் படகுகள் தரப்படவில்லையென்று சொல்லுகிறார்கள். அதே நேரத்தில், அவர்களிடம் சீனியாரிடி என்ற காரணத்தைக் காட்டி அவர்களை ஒதுக்கிவிடாமல் தனிச் சலுகை தந்து அறந்தாங்கி பகுதிகளுக்குத் தரப்பட வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன். அதே நேரத்தில் இன்னும் பலவற்றை நான் கேட்டுக்கொண்டே போகலாம். அதற்குக் காலம் இடம் தராது என்பதைவிட இங்கே நிதியும் இடம் தராது. நம்முடைய முதல்வர் அவர்கள் சொல்லுவார்கள், என்னுடைய பெயர்



கருணா நிதி என்று. கருணா என்பதற்கு 3 எழுத்துக்கள். நிதி என்பதற்கு இரண்டு எழுத்துக்கள். எனவே, என்னிடம் கருணை அதிகமாக இருக்கிறது, நிதி குறைவாக இருக்கிறது என்று சொல்லுவார்கள். அதைவிட இன்னும் மிக்வும் வருந்தத்தக்க ஒன்று, எப்படி கருணை அதிகமாக இருந்து நிதி குறைவாக இருக்கிறதோ அதுபோல ஒவ்வொரு மாவட்டத்திற்கும், மொத்தத்தில் இந்த மாநிலத்திற்கு அதிகம் செய்ய வேண்டுமென்ற ஆசை இருக்கிற அளவிற்கு அதிகாரம் இல்லை. அதிகாரங்களை வைத்திருப்பவர்கள் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் ஆசையற்றவர்களாக இருக்கிறார்கள். எனவேதான் ஏதோ செய்கின்ற வகையிலே கொஞ்சம் கொஞ்சமாக, படிப்படியாக உதவிகளைச் செய்து என்னுடைய மாவட்டத்தை நல்ல முறையிலே, நாங்களெல்லாம் மகிழ்ச்சியடையத்தக்க வகையிலே, பொலிவோடு விளங்கத்தக்க வகையிலே செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதே நேரத்திலே இந்த நிதி நிலை அறிக்கை விவாதம் எப்படியிருக்கிறது என்று சொன்னால், நீங்கள் எல்லாம் மன்னித்துக்கொள்ள வேண்டும், மாநில சுயாட்சி விவாதமாகவே பேரவையிலும், மேலவையிலும் காரசாரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற நிலைமையிலே இருக்கிறோம். ஏனென்று சொன்னால் அதிகாரங்கள் அதிகமில்லை, எனவே, இவ்வளவு தான் செய்ய முடிந்திருக்கிறது என்றும், மாநில சுயாட்சி குறித்து நம்முடைய இதய தெய்வம் பேறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்ட கருத்து கூறப்பட்டிருக்கிற காரணத்தாலே இது வேண்டுமா வேண்டாமா, அது அண்ணா சொன்னாரா இல்லையா என்கின்ற அளவுக்கு இன்றைக்கு விவாதங்கள் நடைபெறுகிற நேரத்திலே நான் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்வேன். நமக்கெல்லாம் சொல்வதைவிட படிக்காத பாமர மக்களுக்காக அண்ணா அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னால் எழுதியதை "அண்ணாவின் பொன்மொழிகள்" என்ற புத்தகத்திலே கொஞ்ச நாட்களுக்கு முன்பு நான் படித்தேன்.

(பிற்பகல் 6-50)

இங்கே நான் அந்தப் புத்தகத்தை எடுத்துவரவில்லை என்றாலும், யாராவது கேட்டால் எடுத்துவர என்னால் முடியும். அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். "மானாட, மழுவாட, மதியாட, புனலாட, மங்கை சிவகாமியாட" என்று பாடல் உண்டு. இப்படித்தான் அன்றைய அரசியல் நிலை. அன்றைக்கு அமெரிக்கா ஆட, டாடா பிர்லா ஆட, டெல்லி நடராஜர் ஆட, சென்னை சிவகாமியும் சேர்ந்து ஆட என்று இருக்கிறது. யார் யாரோடு ஆடினாலும் எங்களுக்குக் கவலை இல்லை. டெல்லி நடராஜர் சென்னை சிவகாமியை எப்போதும் ஆட்டி வைத்துக்கொண்டிருக்கிற ஆதிக்கக் கயறு அறுபட்டு கொஞ்ச நேரமாவது சென்னை சிவகாமியை சுதந்தரமாக ஆடவிட டெல்லி நடராஜர் அனுமதிக்க வேண்டும் என்று எழுதினார்கள். இதைப்போல, "ஸ்டேட் ஆட்டானமி" என்று குறிப்பிடுவதற்கு ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன. ஆனால், "மோர் பவர்ஸ்" என்பதைவிட, ஒட்டு மொத்த வடிவம் தந்து, மாநில சுயாட்சி

என்று நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். மாநில சுயாட்சியைத் தர முடியாது என்று நம்முடைய வணக்கத்திற்கும், மரியாதைக்கும் உரிய பிரதமர் அவர்கள் அறிவித்துவிட்டார்கள் என்று சிலபேர் வருத்தப் பட்டார்கள். ஆனால், என்னைப் பொறுத்து, வருத்தம் கிடையாது. காரணம் என்னவென்றால், ஏதோ ஒரு முடிவு நமக்குத் தெரிந்துவிட்டது. இதுவரையிலும் நம்பிக்கொண்டிருந்தோம். சரி, அவர்கள் மாநில சுயாட்சியைத் தரக்கூடிய நல்லவர்களாக இருந்தால், பெறக்கூடிய வல்லவர்களாக நாம் இருப்போம் என்றுகூட சொல்லிக்கொண்டிருந்தோம். அவர்களும் எழுதினார்கள். டாக்டர் ராஜமன்னார் குழு அறிக்கையைப் படித்துவிட்டு, " These are important issues. I intend to consult all the Chief Ministers " என்று எழுதினார்கள். அப்படி எழுதிய பிறகு, எல்லா மாநில முதல்வர்களையும் கலந்தாலோசித்து நிச்சயமாக அந்த மாநில சுயாட்சியைத் தந்துவிடுவார் என்று நினைத்தோம். ஆனால், இப்பொழுது தரவே முடியாது என்று சொன்னதால், நாம் தெளிவாகச் சிந்தித்து, திட்டவட்டமான ஒரு முடிவுக்குப் போகவேண்டிய காலகட்டத்திலே இருக்கிறோம். அதே நேரத்திலே கொடுக்க முடியாது என்று சொன்னதன் அர்த்தம் என்ன தெரியுமா ? கொடுக்கப்படும் விரைவில் மாநில சுயாட்சி என்பதற்கு முன் உதாரணம் இருக்கிறது. பாகிஸ்தான் பிரிவினை கேட்கப்பட்ட நேரத்தில் ஒரு பசுவை இரண்டாகப் பிளப்பதைப் போல் இருக்கிறது அது, ஆகவே பாகிஸ்தான் பிரிவினையை விரும்பவில்லை என்று சொன்ன உத்தமர் காந்தி அவர்களே, சிறந்த ஜனநாயகவாதியாக இருந்த காரணத்தால், மக்களுடைய கருத்திற்கு மதிப்பளிக்கத்தக்க வகையிலே அதை ஒத்துக்கொண்டார். மொழிவாரி மாநிலங்கள் தருவதற்கு தாமதப்படுத்தினார் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள். ஆனால், அவர்களும் மொழிவாரி மாநிலங்கள் பிரிவதற்கு கடைசியிலே ஒத்துக்கொள்ள வேண்டிய அவசியம் வந்தது. எனவே மாநில சுயாட்சி கொடுக்க முடியாது என்று இந்தியப் பிரதமர் இந்திரா அவர்கள் கூறியிருப்பது, மாநில சுயாட்சி விரைவிலே கொடுக்கப்படும், அதை மாநிலங்கள் அத்தனையும் பெறும் என்பதற்கு முன் உதாரணம் என்று சொல்லி விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. இராம சுப்பையா : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையிலே அளித்த 1975-76 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினைப் பாராட்டி என்னுடைய நன்றியினைத் தெரிவித்து, ஒரு சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன்.

இந்த மாமன்றத்திலே இருக்கின்ற அத்தனை பேரும் இப்பொழுது மாநில சுயாட்சி பற்றிய எண்ணத்தோடுதான் இருக்கிறார்கள். அவர்களுக்கு நான் ஒன்று கூறுகிறேன். இவ்வளவு காலமாக மாநில சுயாட்சி வலுப் பெறவில்லை. எப்பொழுது மத்திய அரசிலே இருக்கிற பிரதமர்



அவர்கள் மாநில சுயாட்சி கொடுக்க முடியாது என்று கூறினார்களோ, அப்பொழுதுதான் அந்த மாநில சுயாட்சி வலுப்பெற்றிருக்கிறது என்று கூறுகிறேன். ஏற்கனவே நமது மூதறிஞர் இராஜாஜி அவர்கள் நாட்டிலே கட்டாயமாக இந்தியைப் புகுத்துவேன் என்று சொன்ன பிறகுதான் இந்த நாட்டிலே அதிக உணர்ச்சி ஏற்பட்டு, கட்டாய இந்தியை எதிர்த்து இன்றுவரையிலும் அந்த இந்தியை இந்த நாட்டிலே நுழைய விடாதபடி பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதற்கு நமது தமிழக அரசு உறுதுணையாக இருக்கிறது. அதுபோல் பிரதமர் அவர்கள் மாநில சுயாட்சி கொடுக்க இயலாது என்று கூறியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு தான் மாநில சுயாட்சிபற்றி நாட்டிலே சூடுபிடித்திருக்கிறது என்று கூறுகிறேன். ஆனால் நமது தமிழக முதல்வர் அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்னாலே மயிலையிலே கூறினார்கள். மாநில சுயாட்சிபற்றி இனிமேல் இந்த நாட்டிலே ஒரு நல்ல நிலைமை ஏற்படப்போகிறது என்று விரிவாக, விளக்கமாகக் கூறினார்கள். இந்த மாநில சுயாட்சி இந்த நாட்டிற்குக் கிடைக்காவிட்டால், இந்த நாட்டிலே இருக்கிற மக்களும், மற்ற மாநிலங்களிலே இருக்கிற மக்களும் நன்கு வாழ இயலாது என்பதற்கு ஒரு சில காரணங்களைக் கூறுகிறேன்.

இந்த நாட்டிலே இருக்கின்ற நெசவாளர்களுக்கு நூல் நிறையக் கிடைப்பதில்லை. அந்த நூலை நூற்கின்ற மில் அதிபர்கள் எல்லாம் ஏராளமான நூல்களை நூற்றுவைத்துக்கொண்டு, நெசவாளர்களுக்குக் கொடுக்காமல் வெளியிலே விற்றுவிட்டு நூல் இல்லை என்று கூறுகிறார்கள். இதைக் கண்டுபிடிப்பதற்கு நம்மிடத்திலே அதிகாரம் இல்லை. நூற்பு ஆலைகளுக்கு அதிகாரங்கள் வழங்குவது மத்திய சர்க்கார். அதுபோல எத்தனையோ காரியங்களை நாம் கூறலாம். இந்த நாட்டு மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்வதற்கு மத்திய அரசு அனுமதி கொடுக்க வேண்டியிருக்கிறது. இன்று எவ்வளவோ தொல்லைகள் ஏற்பட்டிருந்தும்கூட, இந்த நிலைமையில் நாம் தாய்லாந்து போன்ற பிற நாடுகளிலேயிருந்து அரிசியைக் கொண்டுவந்து மக்களுக்குக் கொடுக்கலாம் என்றால் கூட, அவர்கள் மறுக்கிறார்கள். ஏன் இந்தப் பண்பு மத்திய சர்க்காருக்கு இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. அவர்கள் ஒருமைப்பாடு, ஒருமைப்பாடு என்று கூப்பாடு போடுகிறார்களே தவிர, அவர்களிடத்திலே ஓரவஞ்சனை அதிகமாக இருக்கிறது. எல்லா மாநிலத்திற்கும் ஒரே மாதிரியாகத்தான் அவர்கள் நடுநிலைமையில் இருக்க வேண்டும். இந்த மாநிலத்தைத் தவிர, மற்ற மாநிலங்களுக்கு அவர்கள் இஷ்டம் போல் செய்கிறார்கள். இவைகளையெல்லாம் எண்ணும்போது கூடிய விரைவிலே இந்த நாட்டிற்கு மாநில சுயாட்சி கிடைத்தால் தான் மக்களுக்கு கலைஞர் அவர்கள் எண்ணுவது போல் செய்ய முடியும். மனம் இருந்தால் வாழ்க்கையிலே செம்மையாக நடத்திக் கொடுக்க முடியும். மனம் இருக்கிறது. ஆனால் மார்க்கம் இல்லை. மார்க்கம் அவர்கள் கையிலே இருக்கிறது. அந்த அரசினுடைய அதிகாரத்தை நம்முடைய மாநிலங்களுக்குப் பகிர்ந்து கொடுத்தால்தான் அவர்களுடைய சுமையும் குறையும். ஆகவே இந்த நாட்டிற்கு மாநில சுயாட்சி வேண்டிய காரியங்களையெல்லாம் மக்கள் எல்லோரும் எல்லாக் கட்சியிலே இருக்கிற தலைவர்களும் செய்து, இதற்கு

ஆதரவு தந்து, மாநில சுயாட்சிக்கு வேண்டுவன செய்யுமாறு கேட்டுக் கொண்டு பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் 10—3—1975 திங்கட்கிழமை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 6–57)

---

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

## திங்கட்கிழமை, 1975 மார்ச் 10.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Craft Teachers.*

*137 *Q.*—Thiru P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the Craft Teachers' Association has made an appeal to the Government, to make them full-time Craft Teachers ; and

(*b*) if so, the action proposed to be taken thereon?

### கைத்தொழில் ஆசிரியர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன். :

(அ) கைத்தொழில் ஆசிரியர்கள் சங்கம் தங்களை முழு நேர கைத்தொழில் ஆசிரியர்களாக நியமிக்கும்படி அரசுக்கு முறையீடு செய்துள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், அதுகுறித்து எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) தொடக்கப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள் ஆகியவற்றில் எங்கெங்கு தேவை ஏற்படுகிறதோ அங்கெல்லாம் முழு நேரக் கைத்தொழிலாசிரியர்களை அரசு நியமித்து வருகிறது.

திரு. பி. ஆர். தாமஸ்: தலைவரவர்களே, பிற்பட்ட நலத்துறைப் பள்ளிகள், அரிசன நலத்துறைப் பள்ளிகள் பலவற்றிலே முழுநேர ஆசிரியர்களை இதற்காக நியமிக்கத் தகுதியிருந்தும் அங்கே பகுதிநேர ஆசிரியர்கள்தான் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். இப்படி எல்லாவகையிலும் முழுநேர ஆசிரியர்களை வைத்திருக்கத் தகுதி பெற்றுள்ள பள்ளிகளிலே முழுநேர ஆசிரியர்களை நியமிக்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, 1—8—1973-ம் தேதியுள்ள கணக்குப்படி பார்த்தால், 2,629 முழுநேர ஆசிரியர்களும் 1,764 பகுதிநேர ஆசிரியர்களும் இருந்தார்கள். பின்னர் 1973-74லே "ஐந்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தின்" கீழ் 556 பேர் முழு நேர ஆசிரியர்களாக ஆக்கப்பட்டிருக்கின்றார்கள். 1975-76-ல் 150 பேரை முழுநேர ஆசிரியர்களாக ஆக்குவதற்குத் திட்டமிட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய கருத்தை கவனத்தில் கொண்டு அத்தகைய பள்ளிகளில் தகுதியின் அடிப்படையிலே இந்த 150 பேரை எந்தெந்தப் பள்ளிகளிலே ஒதுக்கலாம் என்பதைக் கவனத்தில் கொண்டு இதுபற்றி முயற்சிக்கலாம்.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, சில பள்ளிகளிலே முழுநேரக் கைத்தொழில் ஆசிரியர்கள் பதவி இருந்தும்கூட, அங்கே பகுதிநேரக் கைத்தொழில் ஆசிரியர்களையே நியமித்திருக்கின்றார்கள். இப்படி முழுநேர ஆசிரியர்கள் இருக்க வேண்டிய இடங்களிலே பகுதிநேர ஆசிரியர்களை வைத்து, முன்பிருந்த நிலை மாற்றப்பட்டிருப்பது பற்றிய செய்தி அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அது பற்றிய முழுவிவரங்கள் கைவசம் இல்லை. ஆனால் அவர்கள் 17 அல்லது 18 மணி நேரம் பணியாற்ற வேண்டியிருக்கிறது. அந்த நிலையில் ஆசிரியர்களுடைய தகுதி போன்றவற்றைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அவர்களை முழுநேர ஆசிரியர்களாக ஆக்கவேண்டும் என்கின்றார்கள். இப்போது 150 பேரை முழுநேர கைத்தொழில் ஆசிரியர்களாக நியமிக்க இருக்கின்றோம். இவர்களை நியமிக்கும்போது, எவ்வளவு பேர் வருகின்றார்கள் என்பதைப் பார்த்து அதிலே 150 பேரைத் தேர்ந்தெடுக்கும்போது இதைக் கருத்தில் கொண்டு எங்கெங்கே முழுநேர ஆசிரியர்கள் அவசியம் இருக்கவேண்டுமோ அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய விடையிலிருந்து இன்னும் கிட்டத்தட்ட 850 கைத்தொழில் ஆசிரியர்கள்தான் முழுநேர ஆசிரியர்களாக ஆக்கப்படாமல் இருக்கின்றார்கள் என்று தெரிகின்றது. நான் கேட்க விரும்புவது, பகுதிநேர ஆசிரியர்களுடைய ஊதியம் என்ன, முழு நேர கைத்தொழில் ஆசிரியர்களுடைய ஊதியம் என்ன? ஒரு ஆண்டுக்காலத்திலே இந்த 850 பேரை முழுநேர ஆசிரியர்களாக ஆக்குவதனால் அரசுக்கு ஏற்படும் செலவு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அது பற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்டால், அது பற்றிய விவரங்களைச் சேகரிக்கலாம்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவரவர்களே, இப்படி பகுதி நேரத் தொழிலாசிரியர்கள் முழுநேரக் கைத்தொழில் ஆசிரியர்களாக ஆக்கப்பட்டாலும், அவர்களுக்குத் தேவையான கருவிகள் இல்லை என்று பல இடங்களிலே சொல்லப்படுகின்ற குறை இருக்கின்றது. இது பற்றி அரசு என்ன செய்ய இருக்கின்றது? மேலும் இப்படி கைத்தொழில் ஆசிரியர்களால் பள்ளிக்கு ஏற்படும் செலவுகளுக்குத் தக்க வருவாய் இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தகுதியில்லாமல் இருக்கின்றார்கள் என்பது உண்மைதான். எனவே தான் தகுதிபற்றிக் குறிப்பிட்டேன். அவர்களுடைய கல்வி யோக்கியதாம்சங்கள், தகுதி ஆகியவற்றை வைத்துக்கொண்டுதான் முழுநேரக் கைத்தொழில் ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவரவர்களே, நான் குறிப்பிட்டது தகுதிபற்றி அல்ல, கைத்தொழில் ஆசிரியர்களுக்காக வழங்கப்பட வேண்டிய கருவிகள் போதிய அளவில் இல்லாமை குறித்துச் சொன்னேன். பல பள்ளிகளிலே இதுதான் பெரிய குறையாக இருக்கின்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பல்வேறு காரணங்களின் அடிப்படையில்தான் முழுநேர கைத்தொழிலாசிரியர்கள் நியமனம் பெறுகின்றார்கள். சில இடங்களிலே இப்படிப்பட்ட குறைபாடுகள், போதிய கருவிகள் இல்லாதவை போன்ற குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. அப்படிப்பட்ட இடங்களிலே முழுநேர ஆசிரியர்களை வைப்பதிலும் சங்கடங்கள் இருக்கத்தான் செய்கின்றன. அவர்கள் 17 மணி நேரம், 18 மணி நேரம் கவனிக்க வேண்டும் என்று வரும்போது, கருவிகள் பற்றிக் கவனிக்க வேண்டிய அவசியமும் ஏற்படுகிறது. எங்கேயாவது கருவிகள் பற்றிய தட்டுப்பாடுகள் இருந்தால், முறைப்படி கல்வி அதிகாரிகள் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால் அதுபற்றி கவனிக்கலாம்.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து மாநிலம் முழுவதுக்குமாக இன்னும் 700 அல்லது 800 பகுதிநேர கைத்தொழிலாசிரியர்கள்தான் இருப்பதாகத் தெரிகிறது. கல்வி மற்ற தகுதிகளின் அடிப்படையில் அவர்கள் முழுநேர ஆசிரியர்களாக அமர்த்தப்படும்போது, அவர்கள் தங்கள் துறையில் கற்றுக் கொடுக்கும் நேரம் போக எஞ்சியுள்ள நேரங்களிலே வேறு சில வகுப்புகளுக்குச் சென்று பாடங்களை நடத்துமளவிற்கு அவர்களை முழுநேர ஆசிரியர்களாக ஆக்குமளவிற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1975 மார்ச் 10

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, முதலிலே அதற்கான தகுதிகளை அவர்கள் பெற்றிருக்கின்றார்களா என்று பார்க்க வேண்டும். அவர்கள் பிற வகுப்புகளிலே பாடங்களை எடுத்து நடத்துவது என்றால், அதற்கான தகுதி, கல்வியறிவு, பயிற்சி இவைகளைப் பெற்றிருக்கின்றார்களா என்று பார்க்க வேண்டும். இப்போதைக்கு 150 பேரை முழுநேர ஆசிரியர்களாக எடுத்துக்கொள்ளலாம் என்று நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது.

*138 *Q.*—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the Craft Teachers who have passed B.A. Degree Examination, are not permitted to join the shortened B.Ed. Course ; and

(*b*) if so, whether the Government propose to take suitable action to facilitate their admission to that Course?

திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பி.ஏ. பட்டம் பெற்றுள்ள கைத்தொழில் பயிற்சி ஆசிரியர்கள் குறுகியகால பி.எட். வகுப்பில் சேர அனுமதிக்கப்படுவதில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அவர்கள் அவ்வாறு சேர அனுமதிக்கப்படுவதற்கு உரிய நடவடிக்கை அரசு எடுக்கக் கருதியுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, கைத்தொழிலாசிரியர்களாக பணியாற்றுகின்றவர்கள் எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்வு பெற்றிருந்தால், அவர்கள் ஆசிரியர் பயிற்சிக்கான தேர்வினை டி.எஸ்.எல்.ஸி. எழுத அனுமதிக்கப்படுகின்றார்கள். அதேபோல அவர்கள் பி.ஏ. பட்டப்படிப்பு அல்லது பி.எட். அல்லது பி.டி. எழுதுவதற்கான அனுமதியினை அரசு அவர்களுக்கு அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, என்னிடமுள்ள குறிப்புகளின்படி, கைத்தொழிலாசிரியர்கள் பி.ஏ. அல்லது பி.டி., யில் சேருவதற்கான அனுமதி மறுக்கப்படுவதாக தகவல் இல்லை. அவர்கள் எந்தவிதமான பாடத்திட்டங்களை எடுத்திருக்கின்றார்கள் என்பதைப் பொருத்திருக்கிறது. எகனாமிக்ஸ் அல்லது ஸயன்ஸ் ஸப்ஜெக்டை எடுத்திருந்தால், இது பொருந்தாது. ஆனால் சரித்திரம் (வரலாறு) போன்றவற்றை எடுத்திருந்தால் அவர்கள் அதிலே சேரலாம். ஆனால் முழுத்தகவலும் கைவசம் இல்லை.



1975 மார்ச் 10]

### *Representation to the Hon. Minister for Education.*

*139 *Q.*—Pulavar O. ARIVUDAINAMBI (on behalf of THIRU K. ARIVAZHAGAN) : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether any representation was submitted to the Hon. Education Minister at the First Conference of the Tamil Nadu Inter-Collegiate Employees Welfare Association, held on 11th February 1973; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனு

புலவர் ஒ. அறிவுடைநம்பி (திரு. க. அறிவழகன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) 11—2—1973ஆம் நாளன்று நடைபெற்ற தமிழ்நாடு அனைத்துக் கல்லூரி ஊழியர்கள் பொதுநலக் கழகத்தின் முதல் மாநாட்டின்போது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை மனு கொடுக்கப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) கோரிக்கை மனு அரசுக்கு வந்துள்ளது.

(இ) சில கோரிக்கைகளின் மேல் ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது. சில கோரிக்கைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, அரசின் பரிசீலனையிலுள்ள கோரிக்கைகள் யாவை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அவர்கள் கோரியுள்ள சில கோரிக்கைகளை பல்கலைக் கழகம்தான் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது.

அவர்கள் கோருவது கல்லூரி ஊழியர்களின் ஓய்வு ஊதிய திட்டம். கல்லூரி ஆசிரியர்களுக்கு 1—4—62-லிருந்து அளித்ததைப் போலவே கல்லூரி ஊழியர்களுக்கும் அளிக்க வேண்டும் என்கிறார்கள். கல்லூரி ஆசிரியர்களுக்கான தளர்த்தப்பட்டுள்ள ஓய்வு ஊதிய திட்டம் 2—10—70

முதல் அமுல் செய்யப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் அல்லாத ஊழியர்களுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் என்ற குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. கல்லூரிக் கல்வி இயக்குநரின் அறிக்கை இது விஷயத்திலே எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்து, பல்கலைக் கழகத்தினால் ஆசிரியர்களுக்கு திருத்தப்பட்டுள்ள யூனிவர்ஸிடி ரெம்யூனெரேஷன்—ஆசிரியர்கள் விஷயத்தில் இது உயர்த்தப்பட்டுள்ளதைப்போல, ஊழியர்களுக்கும் உயர்த்தித் தரப்படவேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். இதைப் பல்கலைக் கழகம்தான் ஆராய வேண்டும். அவர்கள் இதை ஆராயும்படி கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கின்றார்கள்.

மேலும் பிராவிடெண்டு ஃபண்டுத் தொகையை அரசு நிதியில் சேர்த்து அதற்கான பலன்களை ஊழியர்களுக்கும் பெற்றுத் தரும்படி வேண்டிக் கொள்ளுகின்றார்கள்.

தற்போது ஆசிரியர்களும் ஊழியர்களும் க்ஷேமநலநிதித் திட்டத்தில் சேர வழி உள்ளது. இதன்படி ஒரு ஊழியர் தன்னுடைய ஊதியத்திலே ஆறு விழுக்காட்டை க்ஷேமநலநிதிக்குச் செலுத்த வேண்டும். மொத்த முள்ள 6 விழுக்காட்டிற்கு அரசும் கல்லூரி நிர்வாகமும் சமமான அளவில் பங்கினை அளிக்கின்றது. இந்தத் திட்டத்தில் வேறு எந்த மாறுதலும் தேவையில்லை என்று அவர்களுக்கு விளக்கம் சொல்லப்

(பிற்பகல் 4-10)

பட்டிருக்கின்றது விடுமுறை வசதிகள் அரசு ஊழியர்களுக்குத் தரப் படுவது போலவே இந்த ஊழியர்களுக்கும் வழங்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இதுவும் பரிசீலனையில் இருக்கிறது. கல்லூரிக் கல்வி இயக்குநரின் முடிவான பதிலை அரசு எதிர்பார்க்கிறது. மூன்று வருடங்களுக்கு மேற்பட்டு பணியாற்றிக் கொண்டுள்ள அனைத்து ஊழியர்களும் நிரந்தரம் செய்யப்பட்டு அவர்களுக்கு உரிய சலுகைகளும், உரிமைகளும் வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது நிர்வாகம் சம்பந்தப்பட்ட பிரச்சினை. இதில் அரசு தலையிடுவதற்கில்லை. இருப்பினும் ஆசிரியரல்லாத ஊழியர்களுடைய பணிப் பாதுகாப்புக்கு தக்க நடவடிக்கை எடுக்கும்படி பல்கலைக் கழகங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. அரசு அவ்வப்போது கொடுக்கின்ற ஊதிய உயர்வினை ஆணை பிறப்பிக்கப்பட்ட மூன்று மாத கால வரம்பிற்குள் கொடுக்க ஏற்பாடு செய்யப்படவேண்டும் என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதையும் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. மத்திய அரசின் யூ.ஜி.சி. நிர்ணயிக்கப்பட்ட ஊதியக் குழுவில் கிளாஸ் 4 ஊழியர்களை முற்றிலும் நிராகரித்ததைப்பற்றி இக் கழகம் மனவேதனையுடன் தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறது. இந்த முறை வெளியாகிற குழுவின் அறிக்கையில் தக்க பரிகாரம் செய்திட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். இது பல்கலைக் கழக மான்யக் குழு நடவடிக்கை எடுக்க வேண்டிய பொருள், இதுவும்



எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. முதல் சம்பளத் திட்டம் 1961-ஆம் ஆண்டு, அடுத்து இரண்டாவது சம்பளத் திட்டம் 1969ஆக இவ்விரு சம்பளத் திட்டங்களில் நீண்ட கால ஊழியர்களுக்கு பெரும்பாலும் அவர்களது சர்வீஸ் சரிவரக் கணக்கிடப்படவில்லை. இதனால் நீண்டகால சர்வீஸ் உடைய எம்பிளாயீஸ் லாபமற்ற நிலையில் உள்ள ஓர் இன்னலை நீக்குவதற்கு எய்டட் காலேஜஸ் 4-வது பிரிவு ஊழியர்கள் கமிஷன் அமைத்து அதன் வாயிலாக இந்த ஊழியர்களின் குறையினை நீக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அதை உடனடியாக அமைக்க முடியாது. மற்றவர்களுக்கு அமைக்கப்படும்போதுதான் அமைக்கப்படும். அனைத்துக் கல்லூரி ஊழியர்களுக்கும் கிராஜுட்டி திட்டத்தை அமுல்படுத்தும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, பல்கலைக் கழக மானியக்குழு பல்கலைக் கழகங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஒரு தனி ஊதிய விகிதத்தைப் பரிந்துரை செய்திருக்கிறது. அந்தப் பரிந்துரை செய்த ஊதிய விகிதங்களை தமிழ்நாட்டில் மூன்று பல்கலைக் கழகங்களிலும் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கும் திட்டமானது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு மத்திய அரசோடு மேலும் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறது. பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த கல்வி அமைச்சர்களைக் கலந்து கொள்ளாமல் அவர்களாகவே இந்த முடிவை எடுத்தார்கள். இதன் நிமித்தம் ஏற்படும் செலவுகளையெல்லாம் மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இது பற்றி முழு விவரங்களையும், குறிப்புக்களையும் மத்திய அரசிடம் கேட்டிருக்கிறோம்.

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன் சிபாரிசு செய்கிறார்கள். அப்படிச் செய்யும்போது அதிகப் பணத்தை அவர்களே கொடுக்கிறோம் என்று சொல்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தப் பரிந்துரைகளை அவர்கள் செய்யும்போது மாநிலங்களையோ, மாநிலக் கல்வி அமைச்சர்களையோ கலக்காமல் அவர்கள் வைத்து விட்டார்கள். அப்படி வைத்து விட்டு கூடுதல் ஆகிற செலவில் 80 சதவீதம் ஐந்தாண்டுகளுக்கு அவர்கள் தருவதாகவும், அதற்குப் பிறகு முழுச் செலவையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் இருக்கிறது. அதில் இருக்கிற சங்கடங்கள் எல்லாம், இந்தத் திட்டத்தை அமுல் செய்த பின்பு, இதன் விளைவாக அடிமட்டத்திலே இருக்கிறவர்கள் எல்லாம் ஏற்படுத்திக் கொண்டு வருகின்ற பிரச்சினைகளுக்கு எல்லாம் தீர்ப்புக்கு மத்திய அரசு உதவிக்கு வரவேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம். அதற்காக மத்திய அரசு ஒரு மாநாடு கூட்டப் போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இன்றைய தினம் பத்திரிகையிலே, யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன் கல்லூரி ஆசிரியர்களுக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளின் சம்பள வீதத்தில் சம்பளம் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருப்பதாகப் பார்த்தேன். அது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பற்றிய விவரக் குறிப்பு எதுவும் இல்லை.

*Distribution of Fertilizers.*

*140 *Q.*—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state :

(*a*) whether any complaint has been received in 1973, regarding the distribution of fertilizers by the Kanyakumari District Co-operative Societies ; and

(*b*) if so, the action taken thereon?

உரங்கள் விநியோகம்.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களில் நடந்த உரங்கள் விநியோகம் பற்றி, 1973 ஆம் ஆண்டில், முறையீடுகள் ஏதேனும் வந்ததுண்டா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு விற்பனை விநியோக சங்கத்திலிருந்த விற்பனையாளர் அகஸ்தீஸ்வரம் பகுதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட உரங்களை சட்ட விரோதமாக விற்று வருகிறார் என்று புகார் செய்யப்பட்டது. இது குறித்து விசாரணை செய்ததில் புகாரை நிரூபிக்க ஆதாரம் ஒன்றும் இல்லை என்று தெரிகிறது.

2. வன்னியூர் கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கத்தில் சில முறைகேடுகள் ஏற்பட்டதற்குப் பொறுப்பான அதன் செயலாளர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்.



*Procurement of Paddy.*

*141 *Q.*—THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state —

(*a*) the quantity of paddy procured in the State by the Civil Supplies Corporation during the period of one year from 1st September 1973 to 31st August 1974 ;

(*b*) the total cost of procurement including incidental and handling charges ; and

(*c*) the net profit made in procuring paddy and selling rice through fair price shops?

நெல் கொள்முதல்.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1973 செப்டம்பர் 1-ஆம் நாளிலிருந்து 1974 ஆகஸ்ட் 31-ஆம் நாள் வரை உள்ள ஓராண்டில் உணவுப்பொருள் வழங்கல் கழகம் இம் மாநிலத்தில் எவ்வளவு நெல் கொள்முதல் செய்தது?

(இ) இது தொடர்பான செலவுகள் உட்பட கொள்முதல் செய்ததற்கான மொத்தச் செலவு எவ்வளவு?

(உ) நெல்லைக் கொள்முதல் செய்ததிலும் நியாயவிலைக் கடைகள் மூலம் அரிசியை விற்றதிலும் அடைந்த நிகர ஆதாயம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, (அ) 1973 செப்டம்பர் 1-ஆம் நாளிலிருந்து 1974 ஆகஸ்ட் 31-ஆம் நாள் வரை தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கு கழகத்தால் மொத்தம் 1,56,595 டன் 154 கிலோ அரிசி கொள்முதல் செய்யப்பட்டது.

(இ) இடைநிலைச் செலவு, சரக்கை ஏற்றி இறக்குவதற்குரிய செலவு உட்பட கொள்முதலுக்கான செலவு ரூபாய் 15.74 கோடி ரூபாய்.

(உ) 1973–74 மற்றும் 1974–75 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் கழகத்தால் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லிய பதிலிலிருந்து, ஒரு கிலோவுக்கு கொள்முதல் விலை, மற்ற செலவுகள் எல்லாம் உட்பட கிட்டத்தட்ட ஒரு ரூபாய் வருகிறது. நாம்

அதை விற்பனை செய்யும்போது, சென்ற ஆண்டு சராசரியாக ஒரு கிலோ சன்ன ரகம், மோட்டா ரகம் எல்லாம் சேர்த்து, ஒன்றரை ரூபாய்க்கு விற்பனை செய்தோம். மூன்று இடங்களிலே, சென்னை, கோயம்புத்தூர், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் குறைந்த விலையும் மற்ற இடங்களில் அதிக விலையும் இருப்பதனாலே ஒரு கிலோ சராசரியாக ஒரு ரூபாய் ஐம்பது பைசா என்று விற்பனை செய்யப்பட்டது. அந்த அடிப்படையிலே, குறிப்பிட்ட அந்த ஆண்டில் சுமார் 50 லட்சம் ரூபாய் லாபம் கிடைத்திருக்க வேண்டும். அப்படி லாபம் கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. அவ்வாறு லாபம் கிடைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தக் கணக்கை இன்னும் பரிசீலனை செய்து முடிவு செய்யப்படவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : இந்தக் கொள்முதல் 1,56,595 டன் அரிசியா அல்லது நெல்லா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரிசி.

திரு. ஜி. சுவாமிநாதன் : தற்போது ஒரு கிலோ என்ன விலைக்கு விற்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதற்குத் தனிக்கேள்வி போட வேண்டும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இது தொடர்புடைய கேள்விதான். ஒரு கிலோ வாங்கும் விலையையும், விற்கும் விலையையும் பார்க்கும்போது, அரசாங்கத்துக்கு ஒரு ரூபாய்க்கு மேலாக லாபம் கிடைக்கின்றது. போக்குவரத்துச் செலவு இருக்கிறது என்றும் சொன்னார்கள். இந்த சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஒரு "ஒயிட் எலிபெண்ட்" மாதிரி, வெள்ளை யானையாக இருக்கிறது. அதனுடைய செலவுகளை இன்னும் சிக்கனமாக ஆக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசாங்கம் வியாபாரம் செய்கின்றது எனகிறபோது இப்படிப்பட்ட குற்றச் சாட்டுகள் வந்துதான் தீரும். பெரும்பாலும் அதிக செலவுக்குக் காரணம், இதிலே போடுகின்ற முதல் அத்தனையும் அரசின் சார்பிலே வங்கியிலேயிருந்து வட்டிக்கு வாங்கிப் போடப்படுகிறது. அந்த வட்டிச் செலவு மட்டும் மிக அதிகமாக ஆகிறது என்பதை நாம் கண்டுபிடித்தோம். அதைப்போல இன்னும் பல செலவுகளையும் குறைக்க முடியுமா என்று பரிசீலித்தோம். இவற்றையெல்லாம் பார்த்து, அதற்குப் பின்னால்தான் இந்த 15 ரூபாய் கொள்முதலுக்குக் கூட்டிக் கொடுக்கவேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, ரொம்ப அதிகமான வட்டிக்கு வாங்கினால்கூட ஒரு ரூபாய்க்கு ஒரு ஆண்டு காலத்திற்கு 12 பைசாதான் ஆகிறது. அந்த அடிப்படையிலே கொள்முதல் விலை வட்டி





யுடன் சேர்த்து 1 ரூபாய் 12 பைசாதான் ஆகிறது. விற்பனை விலை சராசரியாக 1 ரூபாய் 50 பைசா. எனவே, அந்த அடிப்படையில் பார்த்தால் கூட, கிட்டத்தட்ட 38 லட்சம் ரூபாய் குறிப்பிட்ட ஆண்டில் அரசுக்கு லாபம் கிடைத்திருக்க வேண்டும். இந்தக் கருத்து அரசின் பரிசீலனையிலும், கட்டாயம் இருக்குமென்று தெரிகிறது. இருந்தாலும் இதில் தீவிர நடவடிக்கை எடுத்து இந்த லாபம் எங்கு செல்கிறது, அரசுக்கு ஏன் கிடைக்கவில்லை என்பதை அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : லாபம் இருப்பது உண்மை. அரசுக்கு அது கிடைக்கவில்லை என்று சொல்லக் கூடாது. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு அந்த லாபம் வந்திருக்கிறது. அந்த லாபத்தைப் பார்த்துத்தான் இன்றைய தினம் கொள் முதலுக்கு 10 ரூபாய் அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறோம். பொதுவாக இந்த சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் உள்ள அட்மினிஸ்ட்ரேட்டிவ் எக்ஸ்பண்டிச்சரைப் பார்த்தால், சாதாரண வியாபாரிகள் நடத்துகின்ற வியாபாரத்திற்கும், இந்தக் கழகம் நடத்துகின்ற வியாபாரத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக நெல் கொடுத்ததிலே கூட கிட்டத்தட்ட 96 லட்சம் ரூபாய் 1971–72-லே மில்லர்கள் மூலமாக நஷ்டம் ஏற்பட்டதாகச் சொன்னார்கள். அது மாதிரி நஷ்டங்கள், ஊழல்கள் ஏற்படுகின்றன. அந்த நஷ்டமும் இங்கேதான் வருகிறது. எனவே, அந்த நெல்லை மில்லர்களிடம் கொடுக்காமல் தனியார்களிடம் கொடுத்துச் செய்தால் இன்னும் அதிக லாபம் வரும் என்பதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விவசாயிகளிடத்தில் நெல்லை அதிகாரிகளின் உதவியோடு ஒரு வியாபாரி வாங்கி, அந்த வியாபாரி வாங்கிய நெல்லை ஒரு அரிசி ஆலைக்காரரிடத்தில் கொடுத்துவிட்டு, இரட்டைப் பூட்டு என்று ஒரு சால்ஜாப்பைச் சொல்லிவிட்டு, மீண்டும் ஒரு சாவி இருக்கிறதே, அதையும் கொடுத்துவிட்டு அரிசி இவ்வளவு தரவேண்டும் என்று நாம் கணக்கிட்டுப் பார்க்கின்ற இன்றைய நிலை நீங்கும் வரை இந்த ஊழல் போகுமென்று நான் நம்புவதற்குத் தயாராக இல்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஊழல் என்று சொல்லுவதே ஊழல் என்று பிரதம மந்திரி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மில்லர்கள் அவர்களுடைய பணத்தைப் போட்டு வாங்கி அரசாங்கத்துக்குக் கொடுக்கக்கூடிய ஒரு முறையை 1972-லே நம்முடைய எஸ்டிமேட்ஸ் கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறதே, அதுபற்றி அரசின் கருத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, வியாபாரிகள் வாங்கினாலும்கூட, நாம் கொடுக்கின்ற நெல்லுக்கு எவ்வளவு அரிசி தர வேண்டும் என்பதுதான் சர்ச்சைக்கு உரிய பிரச்சினையாக இருக்கிறது. அதில் ஏற்படும் குறையை நாம் நஷ்டம் என்கிறோம். ஆனால் அவர்கள் அதை இழப்பு என்கிறார்கள். இயற்கையாக வியாபாரத்திலே இருப்பவர்கள் எல்லாம் இதை இழப்பு என்கிறார்கள். இந்த ஒரு பாகுபாடு அவர்கள் சொன்ன முறையில் இருக்கத்தான் செய்யும். இதைச் சரிக்கட்ட புதிய யோசனைகள்தான் நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : The supplementaries seem to be large in number. இங்கே பண்ணை முதலாளிகள் விவசாயிகள் நிறையபேர் இருக்கிறார்கள். கேளுங்கள்.

திரு. கே. எஸ். கணபதி : Hon. Chairman, Sir, that seems to be the major problem now. தலைவர் அவர்களே, எந்த ஒரு நிர்வாகத்தை எடுத்துக்கொண்டாலும், மொத்த "டர்ன் ஓவரிலே" 15 சதவீதத்துக்கு மேற்படாமல் அந்த நிர்வாகச் செலவு இருக்க வேண்டும் என்பதுதான் ஒரு கொள்கை. அந்த அடிப்படையில் பார்த்தால் கூட, மிக அதிகமான லாபம் இருக்கும். எனவே, உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு அதிகமாக, தற்போது இருப்பதைவிட சற்று அதிக அளவில், கொள்முதல் விலை கிடைப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது நிறைய கடைகள் திறக்கப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஒரு கடையில் 2,000 கார்டுகள் என்று இருக்கும்போது, நிறையபேர் நீண்ட க்யூவில் நிற்கிறார்கள். அரிசியையும், மற்ற உணவுப் பொருட்களையும் மட்டுமே அந்தக் கடையிலே வழங்கும்போது, நமக்கு நஷ்டம்தான் ஏற்படுகிறது. நாம் தற்போது 250 ரூபாய் சம்பளம் கொடுக்கிறோம். அவ்வாறு கொடுத்தும் ஸ்டிரைக் போன்றவைகளை சந்திக்கும் நிலை ஏற்படுகிறது. தற்போதுள்ள நிலையை விட இந்தப் பிரச்சினையை வேறு எந்த முறையினும் மாற்ற முடியும் என்று நான் கருதவில்லை.

*Small Farmers' Co-operative Irrigation Societies.*

*142 *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state :—

(*a*) the number of Small Farmers' Co-operative Irrigation Societies registered in East Ramanathapuram District ; and

(*b*) the number of societies which are functioning actually?





சிறு நில விவசாயிகள் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் பதிவாகியுள்ள சிறு நில விவசாயிகள் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை?

(இ) அவைகளில் எத்தனை நடைமுறையில் இயங்குகின்றன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 176.

(இ) செயற்படுத்தவியலும் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சங்கங்கள் 36.

(பிற்பகல் 4-20)

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, மற்ற சங்கங்கள் என்ன ஆயிற்று என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, சிலவற்றை அங்கே ஆரம்பித்தது தவறு என்று முடிவெடுத்திருக்கின்றார்கள். சிலவற்றிலே இன்று தோன்றுவதற்கு வாய்ப்பில்லை என்று முடிவு செய்திருக்கின்றார்கள்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : இந்த 30 சங்கங்களில் இப்போது இயங்குகிற, நடைமுறையில் வேலை செய்துகொண்டிருக்கின்ற சங்கங்கள் எத்தனை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இன்று அறிக்கை தயாரித்துள்ள சங்கங்கள் என்று சுமார் 47 இருக்கின்றன. இதிலே எந்தெந்த சங்கங்களுக்கு கடன் வழங்க முடியுமோ அப்படி 20 சங்கங்களுக்குக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

திரு. வி. வெங்கா : தலைவரவர்களே, பாதிக்கு மேற்பட்ட சங்கங்கள் இயங்கவில்லை என்று அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து தெரிய வருகிறது. அதுமாதிரி தமிழகம் பூராவிலும் இருக்கிறது. இப்படி இயங்கமுடியாத சங்கங்களைக் கலைத்துவிடுகிற உத்தேசம் ஏதாவது அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இந்த நீர்ப் பாசன வசதியை உருவாக்குகின்ற வசதி வாய்ப்புகள் எல்லாம் எங்கெங்கு இல்லையோ அங்கெல்லாம் இருக்கும் சங்கங்களைக் கலைத்துவிடுகின்ற முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது.

### *Fuel Oil Factory.*

*143 *Q.*—THIRU WILSON APPOLLOS (on behalf of THIRU Y. VENKATESWARA DIKSHIDAR): Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) whether there is any proposal to approach the Central Government for the establishment of a factory for the manufacture of fuel oil from coal; and

(*b*) if so, the present stage thereof?

### எரி எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை.

திரு. வில்சன் அப்போலோஸ் (திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) நிலக்கரியிலிருந்து எரி எண்ணெயைத் தயாரிக்கும் ஆலையை நிறுவ, மத்திய அரசைக் கேட்கும் உத்தேசம் எதும் உள்ளதா?

(இ) ஆமெனில், அது தற்போது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) வினா எழ இடமில்லை.

### *Factory for production of Sodium Dichromate.*

*144 *Q.*—THIRU WILSON APPOLLOS (on behalf of THIRU L. BALARAMAN): Will the Hon. the Minister for Industries be pleased to state:

(*a*) the amount invested by the Government on the Sodium Dichromate Factory in Ranipet, North Arcot District, towards the erection of machines and buildings;

(*b*) the date on which the factory will commence production; and

(*c*) the quantum of production per day?





### சோடியம் டைகிரோமேட் தயாரிக்கும் தொழிற்சாலை.

திரு. வில்சன் அப்போலோஸ் (திரு. எல். பலராமன் சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டம், இராணிப்பேட்டையில் உள்ள சோடியம் டைகிரோமேட் (Sodium Dichromate) என்னும் இரசாயனப் பொருள் தயாரிக்கும் நிறுவனத்திற்கு இயந்திரம், கட்டிடம் முதலியவைகளை நிறுவ அரசு எவ்வளவு முதலீடு செய்தது?

(இ) இவ்வாலை எப்போது வேலை செய்யத் துவங்கும்?

(உ) நாள் ஒன்றுக்கு எவ்வளவு இரசாயனப் பொருள் உற்பத்தியாகும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: (அ) நிலம், கட்டிடம் ரூபாய் 2.11 இலட்சம். இயந்திரங்கள் ரூபாய் 2.357 இலட்சம்.

(இ) சோதனை ஓட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சில இயந்திரக் கோளாறுகளை சரி செய்த பிறகே உற்பத்தியைத் துவக்க இயலும்.

(உ) தொழிற்சாலையின் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 2 டன்.

### *Arulmigu Sankaramurthi Nainar Koil at Courtallam.*

*145 *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:—

(*a*) whether the Government have received any representation requesting to being Arulmigu Sankaramurthi Nainar Koil at Courtallam Tirunelveli district, under the control of the Hindu Religious and Charitable Endowments (Administration) Deparment; and

(*b*) if so, the action taken thereon?

### திருக்குற்றாலத்தில் உள்ள அருள்மிகு சங்கரமூர்த்தி நயினார் கோவில்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருக்குற்றாலத்தில் உள்ள அருள்மிகு சங்கரமூர்த்தி நயினார் கோயிலை அறநிலைய ஆட்சித்துறையின் கீழ் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்ததா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை. ஆனால் சென்னை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் அவர்கட்கு ஈரோடு சிவலிங்கம் என்பவரிடமிருந்து இந்தக் கோவிலையும் அதைச் சார்ந்த சத்திரம் கட்டளைகளையும் இலாகா பார்வையின் கீழ் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை வந்துள்ளது.

(இ) சென்னை ஆணையர் இந்தக் கோரிக்கையை முழுமையாக விசாரித்து முடிவு தெரிவிக்குமாறு மதுரை துணை ஆணையரைக் கேட்டுள்ளார்.

*Collection of dues to the Temples in Tamil Nadu.*

*146 *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :—

(*a*) whether any representation has been received by the Government requesting that the Assistant Commissioners, Hindu Religious and Charitable Endowments (Administration) Department should be delegated powers analogous to the Sub-Registrars of Co-operative Societies, so as to enable them to recover the arrears due to the temples of Tamil Nadu and take necessary steps therefor ; and

(*b*) if so, the action taken thereon by the Government?

தமிழகத் திருக்கோவில்களுக்குரிய வசூல் பாக்கிகள்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழகத் திருக்கோயில்களுக்குரிய பாக்கிகளை வசூலிக்கவும் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவும், இந்து சமய ஆட்சித்துறை உதவி ஆணையர்களுக்கு கூட்டுறவு உதவிப் பதிவாளர்களுக்குள்ள அதிகாரங்களைப் போல வழங்கவேண்டும் என அரசுக்குக் கோரிக்கை ஏதும் வந்ததா ?

(இ) ஆமெனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) இதைப் பரிசீலனை செய்ததில் தற்போது உள்ள 1962 ஆம் ஆண்டின் பொது நம்பகச் சட்டத்தின் 19 வது பிரிவிலுள்ள பாதுகாப்பு போதுமென அரசு முடிவெடுத்துள்ளது.





தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, தற்போது சமய நிறுவனங்களுக்கு வசூலாகவேண்டிய பாக்கிகளாக எவ்வளவு இருக்கின்றன என்று அரசுக்குத் தகவல் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அதுபற்றித் தகவல் இல்லை. தனிக்கேள்வி போடும்படியாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த மாதிரியான பொதுவான கேள்விகளுக்கு உபகேள்விகள் கேட்கும்போது, அது குறித்த சில விவரங்களை அமைச்சர்கள் வெளியிட்டால் நன்றாக இருக்கும். ஏனென்றால் ஒவ்வொன்றுக்கும் தனிக்கேள்வி போடுவதென்றால்......

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அமைச்சர்கள் பதில் சொல்லவில்லை என்றால் பதில் அவர்களுக்கு வரவில்லை அல்லது முழுமையாக பதில் அறியவில்லை என்று அர்த்தம். உள்ளபடியே தனிக்கேள்வி போட்டால் சரியான பதில் கிடைக்கும்.

(திரு. ஜி. சுவாமிநாதன் இருக்கையை விட்டு எழுந்தார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உடனே பதில் வேண்டும் என்று நீங்கள் வலியுறுத்துகிற மாதிரி இருந்தால் முடியாது. அப்படி உடனே பதில் வேண்டுமென்று கேட்டு அவர்களும் எதையாவது சொல்லவேண்டும் என்று எண்ணுகிறீர்களா ?

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 2. கவன ஈர்ப்பு

கல்வித் துறையின் 5-2-1968 நாளிட்ட 168 ஆம் எண் அரசாணை, பள்ளிக் கல்வி இயக்குநரின் 23—1—1975 நாளிட்ட நடவடிக்கைகள் காரணமாக மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு வேலை நீக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது குறித்து.

THIRU K. S. GANAPATHI : Hon Chairman, Sir, I wish to call the attention of the Hon. the Minister for Education to a matter of urgent public importance, namely, the large scale issue of orders of termination of services of non-teaching staff of the Aided High Schools in the State who have completed four years of service and more as a result of the implementation of G.O. Ms. No. 168, Education, dated 5th February 1968 and the proceedings of the Director of School Education, dated 23rd January 1975 and the resultant hardship caused to hundreds of families in the State.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அரசாணை எண் 168 கல்வி நாள் 5-2-1968-ன் கீழ் திருத்தி அமைக்கப்பட்ட தமிழ்நாடு கல்வி விதி 13-ன்படி உதவிபெறும் பள்ளிகளில் நியமனம் பெறும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் (எழுத்தர், நூலக எழுத்தர், பதிவு எழுத்தர், கடைநிலை ஊழியர் போன்றோர்) அரசுப் பணியில் அந்த அந்தப் பதவிகளுக்குத் தேவையான தகுதிகளை அனைத்தும் பெற்றிருக்கவேண்டும். பல உதவிபெறும் பள்ளிகள் மேற்கண்ட விதி கல்வித் தகுதிகளுக்கு மட்டுமே பொருந்துமெனக் கருதி 25 வயதுக்கு மேற்பட்டவர்களை பணியில் அமர்த்திவிட்டன. மேற்கண்ட கல்வித் தகுதியல்லாத வயது வரம்பு தகுதிகளுக்கும் பொருந்தும். எனவே 5-2-1968 லிருந்து மேற்கண்ட பதவிகளில் அதிக வயதுடையவர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்தால் அந்த நியமனங்கள் நடைமுறையில் உள்ள விதிகளுக்குப் பொருந்தாது என பள்ளிக் கல்வி இயக்குநர் அரசு குறிப்பாணை எண் 33744/டி2/73-6 கல்வி நாள் 7-2-1974 ல் தெரிவிக்கப்பட்டார். இதை பள்ளிக் கல்வி இயக்குநர் 2-7-1974 தேதியில் கல்வித்துறை அலுவலர்களுக்கு அனுப்பியுள்ளார். (23-1-1975 தேதியில் அல்ல). பள்ளிக் கல்வி இயக்குநர், வயது வரம்பு குறித்து குறிப்பாக எதும் விதியில் இல்லாததால் வயது வரம்பைக் கருதாது பல உதவிபெறும் பள்ளிகளில் நியமனங்கள் செய்யப்பட்டுள்ளனவென்றும் அதற்கு அரசு பின் ஏற்பு வழங்குமாறு கேட்டுக்கொண்டு ஒப்பளிப்பு வழங்கப்படவில்லையெனில் அந்தப் பணியாளர்கள் அனைவரும் பணியினை இழந்து பெரும் அல்லலுக்குள்ளாவார்கள் என்றும் அரசுக்குத் தெரிவித்தார். அரசு, பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரையை ஏற்றுக்கொண்டு 5-2-1968 அன்று 25 ஆண்டுகள் நிரம்பப்பெற்று, உதவிபெறும் பள்ளிகளில் 5-2-1968 முதல் 1973-74 கல்வி ஆண்டு முடிய ஆசிரியரல்லாத பணியிடங்களுக்கு செய்யப்பட்ட நியமனங்கள் அனைத்துக்கும் அரசு ஆணை (நிலை) எண் 327 கல்வி நாள் 3-3-1975 ல் பின் ஏற்பு வழங்கியுள்ளது. எனவே கவன ஈர்ப்பில் குறிப்பிட்டுள்ள அல்லல்கள் எழா.

திரு கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, இந்தப் புது ஆணை பிறப்பித்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் சேலம், கோவில்பட்டி, திருநெல்வேலி ஆகிய கல்வி மாவட்டங்களிலே இந்த அரசாணையைக்கொண்டும், பள்ளிக் கல்வி இயக்குநருடைய நடவடிக்கைகளைக்கொண்டும் பல ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னர் வேலை நீக்கம் செய்யப்பட்ட அந்த ஊழியர்களைத் திரும்ப வேலைக்கு எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்த ஆணையின்படி 5-2-1968 முதல் 1973-74 கல்வி ஆண்டுக்கு இடையிலே வயது வரம்புக்குட்பட்டிருந்தாலும்கூட அவர்களைச் சேர்த்துக்



கொள்ளலாம் என்று இருக்கிறது. 3—3—1972-ம் ஆண்டு ஆணை வழங்கப்பட்டிருக்கின்றது. அதன் காரணமாக நீக்கப்பட்டிருந்தால் மறுபடியும் சேர்த்துக்கொள்ள வழி ஏற்படும் என்று கருதுகிறேன். ஏதாவது சங்கடம் இருந்தால், மறு விளக்கங்கள் பெறலாம்.

திரு கே. எஸ். கணபதி: தலைவர் அவர்களே, அவர்களுக்கு பணிப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது என்று இருந்தாலும், உத்தரவு நாளிலே சென்றுவிட்ட காரணத்தாலே, அவர்கள் பலர் வேலையிழந்திருக்கின்றார்கள். அவர்களுடைய பணிப் பாதுகாப்பு நியாயமானதுதான். எனவே அந்த அடிப்படையில் அரசு மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதைப்பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் கவனிக்கலாம். ஆனால் அதற்கிடையிலே வேறு யாரையாவது போட்டிருப்பார்களானால் அவர்களைக் கொண்டுவந்து வைத்து, பின் இவர்களை அனுப்ப வேண்டி வரும்.

## 3. தகவல் கோரல்.

### மாநில முதலமைச்சர்கள் மகாநாட்டு முடிவுகள் குறித்து.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்னால் மாநில முதலமைச்சர்கள் மகாநாடு டெல்லியிலே நடைபெற்றிருக்கிறது. அந்த மகாநாட்டின் முடிவுகள் இன்றைய தினம் பத்திரிகைகள் மூலமாகத் தெரியவருகின்றன. மகாநாட்டிலே கோதுமை, அரிசி சம்பந்தமான பல முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய மாநில அரசு அரிசியை தாய்லாந்து, பர்மாவிலே இருந்து இறக்குமதி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தது. மத்திய அரசைப் பொறுத்த வரையிலே, கோதுமைதான் இறக்குமதி செய்யப்படும். இந்த அரிசி இறக்குமதி செய்யப்படாது என்று சொன்னதாக அந்தப் பத்திரிகைச் செய்திகள் மூலம் நான் அறிந்தேன். இந்த மகாநாட்டின் முடிவுகளைப் பற்றி நமது முதலமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்ல முடியுமா என்று அறிய விரும்புகிறேன். காரணம் இதற்கு முன்னாலேகூட ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி, இந்த அவையிலே விவாதம் நடந்து கொண்டிருந்த போது, ஒரு பிரச்சினையை எழுப்பியபோது, டெல்லி போய் வந்த முதலமைச்சர் அவர்கள் அதைப்பற்றி இங்கே ஒரு விளக்கம் தந்திருந்தார்கள். அது போன்று ஒரு நல்ல விளக்கத்தை இங்கே தந்தால் நல்லது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 4–30)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த மாநாட்டிற்கு டெல்லிக்குச் சென்றுள்ள வேளாண்மைத் துறை அமைச்சர் வந்ததும் அதுபற்றி விவரங்களை அவர்களிடத்திலே கேட்டுத் தெரிந்து அவைக்கு அறிவிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## 4. 1975–76-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கைமீது பொது விவாதம்—தொடர்ச்சி.

* திரு. வி. வெங்கா: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே 1975–76-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை வைத்ததையொட்டி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நான் என்னுடைய கருத்துக்களைக்கூற ஆசைப்படுகின்றேன். பொதுவாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிதி நிலை அறிக்கையை ஆரம்பிக்கின்ற நேரத்திலே அவருக்கேயுரிய மிக சாதுரியமான முறையிலே அந்த அறிக்கையை இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள் என்பதை நாமெல்லாம் அறிந்திருக்கின்றோம். பொதுவாக விலைவாசியினுடைய நிலையை அவர் குறிப்பிடுகின்ற நேரத்திலே கட்டுக்கு அடங்காத நிலையிலே விலைவாசி ஏறிக்கொண்டு போகிறது என்பதையும், அதை எட்டிப் பிடிக்க முடியாத அளவிற்குத்தான் நாட்டு மக்கள் இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் தங்களுடைய நிதி நிலை அறிக்கையிலே ஒத்துக்கொண்டிருக்கின்றார்கள். அதே நேரத்திலே அதைப் போக்குவதற்கு இந்த நிதி நிலை அறிக்கையிலே ஏதாவது வழி வகைக்ள் சொல்லப்பட்டிருக்கின்றனவா என்று திரும்பத் திரும்பப் பார்க்கின்ற எனக்கு எதும் இல்லையென்ற நிலைமைதான் தென்படுகிறதே தவிர, அதற்கு மாறாக உலகம் பூராவிலுமே விலைவாசி உயர்ந்திருக்கிறது என்று ஒரு பக்கத்திலே சமாதானத்தைக் கூறிவிட்டு அதை அடுத்து இதற்கெல்லாம் காரணம் மத்திய அரசு கடைப்பிடிக்கக் கூடிய பொருளாதாரக் கொள்கைகள்தான் என்பதை திரும்பத் திரும்ப தங்களுடைய உரையிலே வலியுறுத்தியிருக்கின்றார்கள். மத்திய அரசினுடைய பொருளாதாரக் கொள்கைகள் இந்த நாட்டினுடைய விலைவாசிகள் ஏறுவதற்கு ஒரு வகையிலே காரணம் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடியது. நான் மத்திய அரசு மட்டுமே தான் விலைவாசி உயர்வுக்கு காரணமா என்று பார்க்கின்ற நேரத்திலே அது மட்டும் காரணமல்ல, மாநில அரசினுடைய நிர்வாகத் திறமையின்மையும் அதற்குக் காரணம் என்பதை என்னால் காண முடிகிறது. பொதுவாக இந்த ஆண்டு வறட்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் அனைவரும் உணர்ந்திருக்கிறோம். இந்த ஆண்டிலே வறட்சி ஏற்பட்டது விலைவாசிகள் ஏறியதற்கு ஒரு காரணம் என்பதோடு விளைபொருளும் உற்பத்தி குறைந்து விட்டதும் விலைவாசி உயர்வுக்குக் காரணம் என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடிகிறது. ஆனால், கடந்த ஆண்டு அரசு கொடுத்துள்ள புள்ளி விவரத்தைப் பார்க்கின்ற நேரத்திலே, அரிசி 56 இலட்சம் டன் உற்பத்தியானது என்றும், தினை வகைகள் 15 இலட்சம் டன் உற்பத்தியானது என்றும், பயறு வகைகள் 2 இலட்சம் டன் உற்பத்தியானது என்றும், கடந்த ஆண்டில் நிலவரத்தை இங்கே அரசு கொடுத்திருக்கிற புள்ளிவிவரத்தில் காண



முடிகிறது. ஆனால், வறட்சி ஆரம்பமாவதற்கு முன்னாலே கடந்த ஆண்டு அக்டோபர் நவம்பர் மாதங்களிலேயே தமிழகத்திலே விலைவாசிகள் அதிகமாக இருந்ததை நாம் பார்த்தோம். அரசினுடைய பசுமைப் புரட்சி வெற்றி கண்டிருக்கிறது என்று கூறுகிறார்கள். ஆனால் வறட்சிக் காலத்திலேயே இன்றைய தினம் இருக்கக்கூடிய விலையைக் காட்டிலும் தன்னிறைவு பெற்றிருந்த காலத்திலே, பசுமைப் புரட்சி வெற்றி பெற்றிருந்த காலத்திலே, அதிகமாக விலைவாசி ஏறியிருந்தது என்பதை நம் நாட்டு மக்கள் பார்க்கின்ற போது நம்முடைய மதிப்பீட்டுக் குழு கூறியிருப்பதுபோல். இன்றைய தினம் விலைவாசிகள் ஏறியிருப்பதற்கு நிர்வாகக் கோளாறும், கள்ளச் சந்தைக்காரர்களும் காரணமாயிருப்பதோடு 700 வேகன் அரிசியை வெளி மாநிலங்களுக்கு அனுப்பிவிட்டார்கள், அதன் காரணமாகத்தான் விலைவாசி உயர்ந்து விட்டது என்று நாம் பார்க்கின்றோம். அதோடு மட்டுமல்லாமல், பொதுவாக இந்த நாட்டிலே நாம் லெவியை அறிமுகப்படுத்தியிருக்கின்றோம். இன்றையத் தினம் லெவியை அமுல்படுத்துவதற்கு நமக்குச் சொல்லப்பட்ட காரணம், பொது மார்க்கெட்டிலே விலைவாசிகள் ஏறியிருக்கின்ற நேரத்திலே, லெவி விலைக்கு நெல்லை வாங்கி குறைந்த விலைக்கு அரிசியை மக்களுக்கு விநியோகிக்க வேண்டுமென்பது. கடந்த அக்டோபர் நவம்பர் மாதங்களிலே அதிக நெல் இருந்தது. ஆனால், இன்றையதினம் விலைவாசிகள் கட்டுக்கு அடங்காது படி ஒன்றுக்கு 6 ரூபாய், 8 ரூபாய் என்று உயர்ந்திருக்கிறது. இருந்த நெல்லை என்ன செய்தார்கள்? எஸ்டிமேட் கமிட்டி சொன்ன குற்றச்சாட்டுகளிலிருந்து தப்புவதற்காக அப்போது உணவு தானியங்களை கூட்டுறவுச் சங்கங்களைக் கொண்டு வெளி மார்க்கெட்டில் கொள்முதல் செய்து கையிருப்புச்செய்து விநியோகித்தார்கள். தமிழக அரசு தன்னுடைய லெவி கொள்முதல் நெல்லைச் சரியாகப் பயன்படுத்தாத காரணத்தால் தான், விலைவாசி உயர்ந்தது. ஆக விலைவாசி உயர்வுக்கு மத்திய அரசு கடைபிடிக்கும் பொருளாதாரக் கொள்கைகள் மட்டும் காரணமல்ல. அதிலும் குறிப்பாக உணவுப் பொருள் விலையேற்றத்திற்கு தமிழக அரசினுடைய திறமையின்மைதான் காரணம் என்று நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

புலவர் ஓ. அறிவுடைநம்பி: தலைவரவர்களே, கறுப்புப் பணக்காரர்களும், கள்ளச் சந்தைக்காரர்களும் இதற்குக் காரணம் என்பதை உறுப்பினர் அவர்கள் ஒத்துக் கொள்கிறார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

திரு. வி. வெங்கா: தலைவரவர்களே, நாட்டிலே இருக்கக்கூடிய கறுப்புப் பணக்காரர்களைப் பிடிப்பதில் மத்திய அரசுக்கு கடமையிருப்பது போலவே, மாநில அரசுக்கும் கடமையிருக்கிறது. அதை ஆட்சியிலே பொறுப்பிலே இருப்பவர்கள் சரியாகச் செய்யவில்லையென்றுதான் நான் கருதுகின்றேன். அடுத்தபடியாக, இந்த நிலைமை இன்றுதான் நம் நாட்டிலே ஏற்பட்டதல்ல. அறிஞர் அண்ணா அவர்கள் இந்த நாட்டினுடைய முதலமைச்சராக இருந்த காலத்திலேயும் இவ்வாறு விலையேற்றங்கள் இருந்தன என்பதை நாம் அறிவோம். பிறகு அவர்கள்

[திரு. வி. வெங்கா] [1975 மார்ச் 10

படிப்படியாக எவ்வாறு நிர்வாகத்தைச் சீர் செய்து நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்தார்கள் என்பதையும் நாம் அறிவோம். இன்றையதினம் இருக்கும் இதே அதிகாரங்களைத்தான் அன்றையதினம் அறிஞர் அண்ணு அவர்களும் பெற்றிருந்தார்கள். அன்றையதினம் மத்திய அரசு இதே மாதிரிப் பொருளாதாரக் கொள்கையை வைத்திருந்த நேரத்திலே, அண்ணு அவர்கள் மாநில அரசால் முடிந்ததைச் செய்து விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவோம் என்ற நோக்கத்திலே விவசாயிக்குக் கட்டுப்படியான விலைக்கு நெல்லை வாங்கி, பிறகு சப்சிடி கொடுத்து, அதைக் குறைந்த விலைக்கு ஏழை மக்களுக்குக் கொடுப்பதற்கான திட்டங்களை உருவாக்கினுர்கள். இன்றையதினம் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயி கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறுன். அதே நேரத்திலே வாங்கிச் சாப்பிடக்கூடிய ஏழை எளிய மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறுர்கள். இருசாரர் வாழ்க்கையிலும் இன்றையத்தினம் கஷ்டம் இருந்து கொண்டிருக்கக்கூடிய நிலையை நாம் பார்க்கிறேம். நெல் உற்பத்தி செய்யக்கூடிய விவசாயி விலை அதிகம் உயர்த்திக் கொடுங்கள் என்று கோருகிறுன். ஆனுல், நண்பர் திரு. சுவாமிநாதனும், நண்பர் திரு. கணபதி அவர்களும் கூட இதைப் பற்றிச் சொல்லுகின்ற நேரத்தில் அதற்குப் பதிலாக "மத்திய அரசு கொடுக்க மறுக்கிறது, எனவே கொடுக்க முடியவில்லை" என்று சொல்லுகிறுர்கள். மத்திய அரசு கோதுமைக்கு அதிக விலையை நிர்ணயித்துக் கொடுப்பதும் நெல்லுக்கு நியாயமான விலையை நிர்ணயிக்காமல் இருப்பதும் அர்த்தமற்றது என்பதை நான் ஒத்துக் கொள்கின்றேன். அதே நேரத்தில் அதை மட்டும் சாக்காக வைத்து விவசாயிக்குக் கூடுதல் விலை தர முடியாது என்று சொல்லும் வாதத்தை என்னுலே ஏற்றுக் கொள்ள முடியவில்லை. மத்திய அரசு நிர்ணயித்திருக்கும் விலையுடன் கூட குவிண்டால் ஒன்றுக்கு போனஸ் 10 ரூபாய் என்றும், டிரான்ஸ்போர்ட் வகைக்கு 5 ரூபாய் என்றும் கொடுத்திருக்கும் மாநில அரசு விவசாயிகளின் கஷ்டத்தை உண்மையிலேயே உணர்ந்திருப்பார்களானுல், ஒரு 30 ரூபாய் அல்லது 40 ரூபாய் நிச்சயமாகக் கூடுதலாகக் கொடுத்து விவசாயியின் துயரைத் துடைத்திருக்க முடியும். ஆகவே, இந்த நிலைமை இன்னும் நீடிப்பது விவசாயிகளுக்கும் நல்லதல்ல, இந்த அரசுக்கும் நல்லதல்ல என்பதை நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகின்றேன். பொதுவாக இங்கே லெவியை நிர்ணயிக்கின்ற நேரத்திலே ஒரு சரியான கொள்கையை வகுக்கவில்லை. ஏதோ தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என்பது போல், அதிகாரிகள் தங்களுக்கு வேண்டியவர்களிடமிருந்து சரியாகக் கொள்முதல் செய்யாது விட்டு விடுவதும் தங்களுக்கு வேண்டாதவர்களிடமிருந்து அதிகமாக லெவி கொள்முதல் கட்டாயமாகச் செய்யும் நிலைமையும் இருக்கிறது. குறிப்பாக ஆட்சிக்கு யார் யார் வேண்டியவர்களோ, அவர்களை விட்டு விடுவதும், ஆட்சிக்கு வேண்டாதவர்களிடமிருந்து சாப்பாட்டுக்குக் கூட நெல் கொடுக்காமல் பிடுங்கிவிடும் நிலையும் இருக்கிறது. என்னுடைய பகுதியிலே கூட........

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஆட்சிக்கு யார் யார் வேண்டியவர்கள், யார் யார் வேண்டாதவர்கள் என்று பட்டியல் தர முடியுமா ?



1975 மார்ச் 10]

திரு. வி. வெங்கா : தலைவர் அவர்களே, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் வேண்டியவர்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : "லிஸ்ட்" போட்டுக் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. வி. வெங்கா : தலைவரவர்களே, அரசாங்கக் கணக்குப்படி 20 குவிண்டால் நெல் வைத்துக் கொள்ளலாம் என்றும், அரிசியாக இருந்தால் 13 குவிண்டால் வைத்துக் கொள்ளலாம் என்றும் இருந்தும், சட்டப்படி அதிகாரிகள் செய்வதில்லை. ஆளும் கட்சிக்கு வேண்டாதவர்களிடம் இந்த 20 குவிண்டால் நெல்லுக்குக் கீழ் இருந்தாலோ அல்லது 13 குவிண்டால் அரிசிக்குக் கீழ் இருந்தாலோ, அதைப் பறிமுதல் செய்யும் நிலைமையைத்தான் நான் இன்றையதினம் பார்க்க முடிகிறது.

(பிற்பகல் 4.40)

திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் ஒரு சிறு விளக்கம் தேவை. எங்கே பறிமுதல் செய்தார்கள், யாரிடம் பறிமுதல் செய்தார்கள் ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நெடுநாட்களாக உள்ள உறுப்பினர் இன்றைக்கு மெம்முறை கட்சியில் உறுப்பினராகக் கன்னிப் பேச்சு பேசுகிறுர். பிறகு பேசுகிறவர்கள் அதைப்பற்றிப் பேசலாம். அதிலே என்ன கெட்டுப் போகிறது ?

திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம் : யாரிடம் பறிமுதல் செய்தார்கள் என்று சொன்னுல பரவாயில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதை நானே கேட்டேனே.

திரு. வி. வெங்கா : மதுராந்தகம் தாலுக்காவைச் சேர்ந்த திருமுக்காடு கிருஷ்ண ரெட்டியார் என்பவரிடத்தில் பறிமுதல் செய்திருக்கிறுர்கள். அவர் அச்சிறுப்பாக்கம் அரிசி ஆலையிலே அறுவை செய்துகொண்டிருந்தார். மொத்தம் 13 குவிண்டால் அரிசி இருந்தது. பறிமுதல் ஏன் செய்தீர்கள் என்று கேட்டால், சரியாகக் கணக்கிலே பதிவு செய்யவில்லை என்று சொல்கிறுர்கள். ஒரு சாதாரண விவசாயி எந்தெந்த ரெஜிஸ்டரை வைத்துக் கொள்ள வேண்டும் என்று அவனுக்குத் தெரியாது. அவர் வியாபாரி அல்ல. அந்த மில்லுக்குச் சொந்தக்காரர். மில் பதிவேடுகளிலே பதிவு செய்யவில்லை என்றுல், அதற்கு விவசாயியைத்தான் கண்டிக்க வேண்டுமா ? மில்லின் லைசென்ஸை ரத்து செய்யலாம். ஏன் நீங்கள் பதிவு செய்யவில்லை என்று மில்லின் சொந்தக்காரர் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்வதிலே நியாயம் இருக்கிறது. அதற்கு மாறுக விவசாயியிடத்திலே பறிமுதல் செய்தது தவறு என்பதுதான் என்னுடைய வாதம். ஏதோ இட்டுக்கட்டி இந்த சர்க்கார் மீது ஒரு குறை சொல்லவேண்டும் என்பதற்காக, தலைவரவர்களே, நான் இதைச் சொல்லவில்லை. பெயர் தேவை

யில்லை என்பதற்குத்தான் நான் முதலிலே குறிப்பிடவில்லை. இன்றைய தினம் உள்ள பிரச்சினைக்கு எல்லாம் அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள், உற்பத்தியாளரிடத்திலே அதிக விலை கொடுத்து வாங்கி கட்டுப்படியான விலையிலே விநியோகிக்க வேண்டும் என்று. அதைத்தான் முதலமைச்சர் அவர்கள் கூட சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். விலை ஏறுகிறது. ஆகவே ஊதியங்கள் உயர்த்தப் படுகின்றன. அப்படி உயர்த்தப்படும் ஊதியம் மேலும் விலைவாசி உயரக் காரணமாக ஆகிவிடுகிறது என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நிலைமை இது. இதை உத்தேசித்துத்தான் அறிஞர் அண்ணா அவர்கள் தீர்க்கமாகச் சிந்தித்து விலைவாசி ஏறுகின்றபோது, ஊதியத்தை உயர்த்திக் கொடுப்பதிலே மட்டும் லாபமில்லை. அதற்கு மாறாக விலையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் அவருடைய பொருளாதாரத் திட்டமே. அதிக விலை கொடுத்து வாங்கி கட்டுப்படியாகக்கூடிய விலைக்குக் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். அண்ணா அவர்களின் அடிச்சுவட்டிலே போய்க்கொண்டிருப்பதாகச் சொல்லக்கூடிய முதலமைச்சர் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையிலே ஏதாவது இருக்கிறதா என்று பார்க்கும்போது, இது ஒரு நடைமுறை அறிக்கையாகத்தான் இருக்கிறது. இதுவெல்லாம் அன்றாட நிகழ்ச்சியைக் விவரித்துக் காட்டுகிற அறிக்கை மாதிரியாகத்தான் இருக்கிறது. இதையெல்லாம் மூடி மறைப்பதற்காகத்தான் கடைசியிலே முதலமைச்சர் அவர்கள் மாநில சுயாட்சியைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். மாநில சுயாட்சி என்பது அறிஞர் அண்ணா அவர்களால் கூறப்பட்ட கொள்கை என்பதை நான் மனமார ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறேன். அறிஞர் அண்ணா அவர்களால் சொல்லப்பட்ட கொள்கைதான். ஆனால் அவர்கள் திராவிட நாட்டுப் பிரிவினையை விட்டுவிட்டார்கள், சீன ஆக்கிரமிப்பிற்குப் பிறகு தனி நாடு தேவையில்லை என்று கருதி அதைக் கைவிட்டுவிட்டார்கள், அதற்குப்பிறகு மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்பதை அறிஞர் அண்ணா அவர்கள் உணர்ந்திருந்தார்கள். என்னுடைய கேள்வி எல்லாம் அறிஞர் அண்ணா அவர்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று சொன்னார்கள்; ஆனால், அறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன பொருளாதாரத் திட்டங்களையெல்லாம் கைவிட்டுவிட்டு இதை மட்டும் தூக்கி எடுத்துக் கொண்டிருப்பதுதான் எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் கூடப் பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நான் ஷேக் அப்துல்லாவைப்போல சிறை செல்லத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவரவர்களே, ஒரு விளக்கம் தேவை. அண்ணாவின் பொருளாதாரத் திட்டங்களைக் கைவிட்டு விட்டார்கள் என்றார்கள். என்ன பொருளாதாரத் திட்டத்தைக் கைவிட்டு விட்டார்கள் என்று விளக்க முடியுமா?

திரு. வி. வெங்கா: அதைத்தான் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டேன். விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு, உற்பத்தியாளர்களிடத்திலே கட்டுப்படியாகக்கூடிய விலையிலே பொருள்களைப் பெறுவதும், அதற்குப் பிறகு விநியோகிக்கின்ற நேரத்திலே வாங்குபவர்களுக்குக் கட்டுப்படியாகக்கூடிய



அளவுக்கு அதைச் சீராக விநியோகம் செய்வதும் அறிஞர் அண்ணா அவர்களுடைய பொருளாதாரக் கொள்கை என்றேன். அதைக் கைவிட்டு விட்டார்கள். அதை விட்டுவிட்டு அண்ணா அவர்களுடைய மாநில சுயாட்சி கொள்கையை மட்டும் எடுத்துக் கொண்டார்கள் என்றுதான் சொன்னேன். ஷேக் அப்துல்லாவைப் போல் சிறை செல்லத் தயார் என்று சொல்கிறார்கள். ஷேக் அப்துல்லா எதற்காகச் சிறை சென்றார்? காஷ்மீர் நாடானது இந்திய நாட்டோடும் சேராமல் பாகிஸ்தானோடும் சேராமல் தனி நாடாக இருக்க வேண்டும் என்பதற்காக அந்த மாநிலத்தினுடைய முதலமைச்சராக இருந்துகொண்டு சதி செய்து கொண்டிருந்தார். அந்தச்சதி அம்பலமாகிய காரணத்தாலேயேதான் அன்றைக்கு பாரதத்தின் பிரதமராக இருந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், அவர் இந்த நாட்டிற்கு சதி செய்கிறார், தனி நாடு வேண்டும் என்பதற்காகச் சதி செய்கிறார், எனவே சிறையிலே அடைக்க வேண்டும் என்றுதான் சிறையிலே அடைத்தார்களே தவிர, நானும் அது மாதிரிப் போராடுவேன் என்றால், எனக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. ஒருவேளை முதலமைச்சர் ஷேக் அப்துல்லா கேட்ட மாதிரி தனி நாடு கேட்கின்றாரா அல்லது மாநில சுயாட்சி அடிப்படையில் அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்கின்றாரா என்று எனக்குச் சந்தேகம் ஏற்படுகிறது. அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்டால், அதை எங்களால் ஒத்துக்கொள்ள முடியுமே தவிர, தனி நாடு வேண்டும் என்று கேட்பதை எங்களால் நிச்சயமாக ஒத்துக்கொள்ள முடியாது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். அதிக அதிகாரங்கள் கேட்கின்றபோதுகூட கேட்கக்கூடியவர்கள் யார் என்பதைப் பொறுத்துத்தான் அதை ஒத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இன்றைய தினம் மாநிலங்களுக்கு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதை நல்ல முறையிலே பயன்படுத்துகிறார்களா என்று பார்க்கின்றபோது, நிச்சயமாக இல்லை என்று எங்களுக்குத் தோன்றுகிறது. நாட்டிலே ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் எங்கு பார்த்தாலும் தங்களுடைய சொந்த செல்வாக்கினைப் பெருக்கிக்கொள்ள அராஜகங்களை விளைவிக்கின்றார்கள். என்னுடைய பகுதியாகிய மதுராந்தகத்திலே 1974 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ம் தேதி அன்று ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் நெல்வாய், நீலமங்கலம் என்ற கிராமங்களிலே இருக்கக்கூடிய விவசாயிகளின் பம்ப் செட்டுகளைப் பகலிலே 12 மணிக்கு ஏறக்குறைய 500 பேர் சென்று 22 ஆயில் என்ஜின்களை உடைத்து நொறுக்கி எறிந்திருக்கிறார்கள். அந்த 22 பம்ப் செட்டுகளின் விலை ரூ. 60,000. அறுவடைக்குத் தயாராக இருந்த 2 லட்சம் ரூபாய் பெறுமான விலை பொருளான நெல்லை அந்த 500 பேரும் பாழாக்கியிருக்கிறார்கள். அன்றைய தினமே அதைப் பற்றிக் காவல் துறையிடத்திலே புகார் செய்யப்பட்டிருக்கிறது. யார் யார் வந்தார்கள், யார் யாருடைய தலைமையிலே வந்தார்கள் என்றெல்லாம் புகார் செய்யப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய 2 மாதங்கள் ஆகியும் இந்நேரம் வரையிலே அவர்கள் மீது எந்தவித வழக்கும் பதிவு செய்யப்படவில்லை என்ற நிலைமை இருக்கிறது. அது மட்டுமல்ல. பவுஞ்சூர் காலனி என்ற ஒரு அரிஜன காலனி இருக்கிறது அங்கே இருக்கக்கூடிய அரிஜன மக்களை ஆளும் கட்சிக்காரர்கள் துன்புறுத்தி அங்கே இம்சை செய்கிறார்கள். அதுமட்டுமல்ல. அதற்கு அருகிலே இருக்கக்கூடிய அருங்குளம் காலனியிலே துன்புறுத்துகிறார்கள்.

[1975 மார்ச்

**திரு. ஜார்ஜ் கோமகன்**: அரிஜன மக்களை ஆளும் கட்சியினர் துன்புறுத்துகிறார்கள் என்று திரு. செங்கா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த ஆளும் கட்சிக்காரர்கள் யார் என்பதை அவர்கள் விளக்கிச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வி. செங்கா**: அந்த மாதிரித்தான் பெரிய கலவரம் கடந்த ஆண்டு நடைபெற்றது. இதையெல்லாம் பார்க்கின்றபோது, ஆளும் கட்சிக்காரர்கள் என்ன தவறுகளைச் செய்தாலும், அதற்கு நமது முதலமைச்சர் அவர்கள் தாம் எப்படியாவது பதவியில் இருந்தால் போதும், தட்டிக் கேட்டால் அவர்கள் கோபித்துக்கொள்வார்கள் என்ற காரணத்தினாலே கேட்காமல் இருக்கின்றார்களோ என்ற ஐயப்பாடுதான் நமக்கு ஏற்படுகிறது. இதையெல்லாம் பார்க்கின்ற நேரத்திலே, இருக்கக்கூடிய அதிகாரத்தையும் பொறுப்பையும் காப்பாற்றிக்கொள்ள துஷ்பிரயோகம் செய்யக்கூடியவர் கையிலே மாநில சுயாட்சி என்ற அதிக அதிகாரங்களைக் கொடுத்தால் நிச்சயமாக இந்த மாநிலத்தினுடைய நலன்கள் கெட்டுப்போகுமே தவிர, நிச்சயமாகச் சீராகும் என்ற நம்பிக்கை இல்லை. மாநில சுயாட்சி வேண்டும், அதிக அதிகாரங்கள் வேண்டும் என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றுதான். இப்போது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்பவர்கள் கேட்டுக் கொண்டு வருகிறார்கள். நாளைக்கு நல்லவர்கள் ஆட்சிப்பொறுப்புக்கு வருகிறபோது, அதைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்ற நம்பிக்கையிருக்கிறது. தற்போது மாநில சுயாட்சி என்று சுய விளம்பரத்திற்காகச் சொல்லப்படுகிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை என்று கூறி, இந்த நிதிநிலை அறிக்கை ஒரு சாதாரண நிர்வாக அறிக்கையாகத்தான் இருக்கிறதே தவிர, இதன் மூலமாக தமிழகத்திற்கோ தமிழக மக்களுக்கோ எந்தவித நன்மையும் ஏற்படாது என்பதை மட்டும் சொல்லி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

* **திரு. மு. இராமநாதன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1975-76 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினை நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சமர்ப்பித்து, அந்த நிதிநிலை அறிக்கையிலே பேசுகின்ற வாய்ப்பை தாங்கள் தந்திருப்பதற்காக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் 501.4 கோடி ரூபாய் வரவு இனமாகவும், 537.5 கோடி ரூபாய் செலவு இனமாகவும், ஏறத்தாழ 36.1 கோடி ரூபாய் பற்றுக்குறை என்கிற நிலையிலும் இந்த நிதிநிலை அறிக்கையினை இந்த அவை முன்னாலே சமர்ப்பித்து, தாம் ஏற்றுக்கொண்டிருக்கிற பொறுப்பின் காரணமாக, தமிழகத்திலே இருக்கின்ற மக்களுக்கு நல்வாழ்வு தருகின்ற வழிவகைகளை விரிவான முறையிலே சொல்லியிருக்கின்றார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிடுவது என்னுடைய கடமையாகும்.



1975 மார்ச் 10] [திரு. மு. இராமநாதன்]

ஒரு முறை அவர்கள் இந்த மன்றத்திலும், பேரவையிலும், "நான் இந்த சமுதாயத்திலே அந்தஸ்துமிக்க குடும்பத்திலே பிறந்தவன் அல்ல. அல்லது அதிகாரம் செலுத்தும் பரம்பரையிலும் நான் தோன்றியவன் அல்ல. சமுதாயத்திலே மிகவும் அடித்தளத்திலே ஒதுக்கப்பட்ட ஒரு பிரிவிலே பிறந்தவன் நான். என்னுடைய சிந்தனைகளும் என்னைக் களும் சமுதாயத்திலே தாழ்த்தப்பட்டிருக்கின்ற, பிற்படுத்தப்பட்டிருக்கின்ற, ஒடுக்கப்பட்டிருக்கின்ற மக்களுடைய நல்வாழ்வை மேம்படுத்தவே இருக்கின்றன" என்று குறிப்பிட்டார்கள்.

(பிற்பகல் 4·50).

அதைப் போல இந்த நிதிநிலை அறிக்கையினைச் சமர்ப்பித்து அதற்கான வழி முறைகளை காட்டும் முறையிலே, [illegible] நின்று கொண்டு, சமுதாயத்திலே தாழ்த்தப்பட்டிருக்கின்ற, பிற்பட்டிருக்கின்ற, ஒதுக்கப்பட்ட மக்களுடைய [illegible] எல்லா [illegible] நிறைவேற்றித்தர முடியுமோ அந்த அந்த வகைகளை [illegible] இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த நேரத்திலே கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரை [illegible] ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நீண்ட நெடுங்காலமாக அந்நகரில் குடிநீர் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருந்து வந்ததை மாற்றும் முறையில் இந்த நிதிநிலை அறிக்கையில் ரூ. 1·71 கோடி அதற்காக ஒதுக்கப்பட்டு கோவை நகர மக்கள் ஒவ்வொருவரும் 30 லிட்டர் தண்ணீரைப் பெறும் ஏற்பாட்டைச் செய்திருப்பதற்கு அந்நகர மக்கள் சார்பிலே எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோன்று குடிசை சீரமைப்புத்திட்டம் என்ற முறையில் ரூ. 3.5 கோடியை ஒதுக்கீடு செய்து, அதன் மூலமாக சென்னை நகரிலும் அதன் சுற்றுவட்டாரத்திலும் அதிலே ரூ. 45 லட்சம் செலவு செய்யக்கூடிய வகையிலே, மற்றும் வேறு சில நகரங்களிலே ரூ. 40 லட்சம் செலவு செய்யக்கூடிய வகையிலே இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்வது எல்லாம் ஏற்கனவே முதல் பகுதி சீரமைக்கப்பட்டுள்ள கோவை மாநகரத்தின் சுற்றுவட்டாரத்திலே, நான் சார்ந்துள்ள ஒரு பகுதி மட்டும் செம்பட்டிக் காலனிப் பகுதியிலே பனையம் தோட்டச் சாலையிலே இன்னும் சீரமைக்கப்படாமல் இருந்து வருகின்றது. எனவே இந்த குடிசை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் இப்போது ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 40 லட்சம் திட்டத்தில் உள்ளடங்கிய பகுதியாக இதை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இது போன்று மற்றக் காரியங்களையெல்லாம் இங்கே கோடிட்டுக்காட்டி, அவற்றுக்காக மத்திய அரசிடமிருந்து நாம் எந்தெந்த அளவிலே நிதி உதவிகளை எதிர்பார்க்கிறோம் என்றெல்லாம், குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலே. ஆனால் பொதுவாக பேரவையிலும் சரி,

இருக்கும் சரி பேசும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் மாநில சுயாட்சி பற்றிக் குறிப்பிடுகின்றார்கள். இன்று பேரவையில் நடந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இப்போது இதுபற்றி அதிகமாகப் பேசும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கின்றது. எனக்கு முன்னர் பேசிய திரு. வெங்கா அவர்கள் கூட, அண்ணா அவர்கள் இதுபற்றி என்னென்னவெல்லாம் சொன்னார்கள் என்பதெல்லாம் பேசினார்கள். பொதுவாக இப்போது யார் பேசுவதாக இருந்தாலும்—அரசை வாழ்த்திப் பேசுவதாக இருந்தாலும் சரி அல்லது கண்டித்தோ குறைகூறியோ பேசுவதாக இருந்தாலும் சரி, அவர்களுக்கெல்லாம் ஆதாரமாக அண்ணா அவர்கள் இருக்கின்றார்கள் என்பதை எண்ணிப்பார்க்கும்போது, திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய எங்களுக்கெல்லாம் பெருமைதான். ஆனால் அண்ணா அவர்கள் ரோஜாவும் காட்டத்தோடு ஒரு குறிப்பினையும் சொல்லியிருப்பதை நாம் இந்த நேரத்திலே மறந்துவிடுவதற்கில்லை. எனவேதான் காசு அவர்கள் அன்றைக்குச் சொன்னதை, தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு இந்த மாமன்றத்திலே மீண்டும் எடுத்துக்காட்ட விழைகின்றேன். அன்று அவர்கள் அன்று "தம்பி, தோட்டத்திலே பச்சைக் கொடியும் இருக்கும்; அந்தக் கொடியோடு சுற்றிக் கொண்டு அதிலே பச்சைப் பாம்பும் இருக்கக்கூடும்; ஆனால் அது பச்சைக் கொடிதானே என்று கருதி நீங்கள் வேலியில் போய் விவரம் தெரியாமல் கையை வைக்காதீர்கள். பச்சைக்கொடி போன்றுள்ள பாம்பு கையைக் கடித்துவிடக்கூடும். அதிலே நீங்கள் கவனமாக, எச்சரிக்கையாக இருக்க வேண்டும்'', என்று சொல்லியிருக்கின்றார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் நினைவுபடுத்துவது என்னுடைய கடமையாகும்.

இந்த நிதிநிலை அறிக்கையினைப் பார்க்கும்போது, தமிழகத்தின் சார்பிலே நமது முதலமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையினைத் தந்திருந்தாலும், தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு எனக்குக் கிடைத்துள்ள சில புள்ளி விவரங்களை இந்த நிதிநிலை அறிக்கையையொட்டி எடுத்துச் சொல்லுவது என்னுடைய கடமையாகும்.

நடந்துமுடிந்த 1973-ஆம் ஆண்டிலே இந்திய அரசின் வருமானம் இந்திய நாட்டின் தேசிய வருமானம் ஆறு சத விகிதம். ஆனால் பணப் புழக்கம் எவ்வளவு என்று பார்த்தால், 14.2 சதவிகிதம். 1961–லே இந்திய நாட்டின் பணப்புழக்கம் ரூ. 3,046 கோடியாகும். ஆனால் 1974 லே அது ரூ. 10,750 கோடி என்ற அளவிற்குப் போயிருக்கின்றது. ஒவ்வொரு ஆண்டும் இது பத்து சத விகிதம், 11 சத விகிதம் என்ற அளவிற்கு உயர்ந்து கடந்த மூன்று ஆண்டுகளிலே அது 15 சத விகிதம் ஆகியிருக்கின்றது என்பதையும் அதே நேரத்திலே பணப்புழக்கம் என்பது 200 சத விகிதத்திற்கு உயர்ந்திருக்கின்றது என்பதையும் இந்த மன்றத்திலே நான் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனால் தேசிய வருமானம் என்று சொல்லுவது 45 சத விகிதம் என்ற அளவிற்குத்தான் உயர்ந்திருக்கின்றது. இந்தத் தேசிய வருமானம் 1963-க்கும் 1964-க்கும் பின்னர் 1973-க்கும் 1974-க்கும் என்று ஒரு பத்தாண்டு கால இடைவெளியில் இதைக் கணக்கிட்டுப் பார்த்தால், அப்பொழுது இருந்த ரூ. 4,845 கோடியிலிருந்து இப்போது ரூ. 20,835 கோடிக்கு உயர்ந்





திருக்கின்றது. இந்த அசாதாரண உயர்விற்கு ஏற்றபடி தனி நபருடைய வருமானம் உயர்ந்திருக்கின்றதா என்று பார்த்தால், இல்லை. கடந்த பத்தாண்டுக்காலத்தில் அகில இந்திய ரீதியில் தனி நபரின் வருமானம் 33 சதவிகிதம் என்ற நிலையில், அந்த நேரத்திலே பணப்புழக்கம் 200 சதவிகிதமாக உயர்ந்திருக்கின்றது. நான்காவது திட்டக் காலத்திலே மத்திய அரசின் பற்றாக்குறை ரூ. 850 கோடிதான். ஆனால் திட்டத்தின் முதலாண்டிலே உள்ள பற்றாக்குறை என்னவென்று சொன்னால், ரூ. 2,230 கோடி என்று இருக்கின்றது. நமது நாட்டிலே விலைவாசி உயர்வு என்பது ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்துகொண்டே இருக்கின்றது. இப்படி உயர்ந்து கொண்டே போய் கடந்த பத்தாண்டு காலத்திலே இது கிட்டத்தட்ட 125 சதவிகிதத்திலிருந்து 130 சதவிகிதம் என்ற அளவிற்கு உயர்ந்திருக்கின்றது. ஆனால் தனி நபருடைய வருமானம் இந்த அளவிற்கு உயர்ந்திருக்கின்றதா என்றால், 20 அல்லது 30 சதவிகிதம் என்ற அளவிற்குத்தான் உயர்ந்திருக்கின்றது. பிற நாடுகளோடு இந்திய நாட்டின் விலைவாசி உயர்வினையும் அந்த நேரத்திலே தனி நபர் வருமானத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால், கடந்த பத்தாண்டுக் காலத்திலே இங்கிலாந்து நாட்டிலே விலைவாசி ஏற்றம் 45 சதவிகிதம் என்றால் ஊதிய உயர்வு 67.5 சதவிகிதம் என்று ஏறியிருக்கின்றது. ஜப்பான் நாட்டிலே விலைவாசி ஏற்றம் 40 சதவிகிதம் என்றால் ஊதிய உயர்வு 87.5 சதவிகிதம் என்றும் அமெரிக்கா நாட்டிலே விலை ஏற்றம் 25 சதவிகிதம் என்று இருக்கும்போது, ஊதிய உயர்வு 37.5 சதவிகிதம் என்றும் ஏறியிருக்கின்றது. அதுபோலவே மேற்கு ஜெர்மனி நாட்டிலே விலைவாசி ஏற்றம் 37.5 சதவிகிதம் என்றால் ஊதிய உயர்வு 40 சதவிகிதம் என்றும் பிரான்ஸ் நாட்டிலே விலைவாசி ஏற்றம் 32.5 சதவிகிதம் என்று இருக்கும்போது ஊதிய உயர்வு 65 சத விகிதம் என்றும், பெல்ஜியம் நாட்டிலே விலையேற்றம் 10 சதவிகிதம் என்று இருக்கும்போது ஊதிய உயர்வு 75 சதவிகிதம் என்ற அளவிலும், இதாலி நாட்டிலே விலை ஏற்றம் 47.5 சதவிகிதம் என்ற நிலையில் ஊதிய உயர்வு 62.5 சதவிகிதம் என்றும் கனடா நாட்டிலே 35 சதவிகிதம் விலையேற்றம் இருக்கும்போது ஊதிய உயர்வு 45 சதவிகிதம் என்றும் ஆஸ்திரேலியா நாட்டிலே விலை ஏற்றம் 30 சதவிகிதம் என்றுள்ள நிலையிலே ஊதிய உயர்வு 52 சதவிகிதம் என்றும் ஏறியிருக்கின்றது. விலை ஏற்றம் எல்லா இடங்களிலும் இருக்கின்றது. ஆனால் அதற்கு ஏற்றபடி, ஏற்றபடி மட்டுமல்லாமல் மிக அதிகமாகவே ஊதிய உயர்வும் அங்கெல்லாம் ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் இங்கே நமது பாரத நாட்டிலே விலை யேற்றம் 150, 200 சதவிகிதம் என்றுள்ள நிலையில் ஊதிய உயர்வு வெறும் 30 சதவிகிதம் என்று சொன்னால், இதற்கு நமது முதலமைச்சர் அவர்கள் என்ன செய்ய முடியும்? கட்டுக்கடங்காத விலைவாசி ஏற்றத்தில் நாம் எந்த அளவிற்குச் சிக்கிக் கொண்டிருக்கின்றோம், இதற்கு மத்திய அரசு எந்த அளவிற்குப் பொறுப்பு என்பதையும் இந்த நேரத்திலே நாம் சிந்தித்துப் பார்க்கத் தவறக்கூடாது. இன்று நமக்குள்ள வசதிகளை வைத்துக்கொண்டு, வாய்ப்புகளை வைத்துக்கொண்டு நமது மக்கள் எத்தகைய வகையிலே மேம்பாடு அடையவேண்டும் என்று பாடுபட்டுக்கொண்டிருக்கிறோம். இன்னும் ஒன்றை, தலைவர் அவர்களே, தங்கள் மூலம் இந்த அவைக்கு எடுத்து வைக்க விரும்புகிறேன். நாம் நீண்ட காலமாக எடுத்துச்சொல்லிவருகிறோம், தமிழ் நாட்டிலிருந்து அல்லது இந்திய நாட்டிலுள்ள பல்வேறு மாநிலங்களிலிருந்து இந்தியப்

[திரு. மு. இராமநாதன்] [1975 மார்ச் 10

பேரரசு நேரடியாக வசூலித்துக்கொள்ளும் வரி வகைகள், அவர்களுக்கு அதற்காக உள்ள துறைகள் இவைகளையெல்லாம் வைத்துக்கொண்டு வசூலிக்கும் பெரும் வரிப்பணத்திலே மாநில அரசுக்களுக்காகப் பிரித்துக் கொடுக்க ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை ஒதுக்கிவிட்டு மிச்சமுள்ள பெருந் தொகையை மாநிலங்களுக்குக் கொடுக்காமல் மத்திய அரசே தன் கையில் வைத்துக்கொள்ளுகிறது. இவற்றிலே சில வரிகளிலே குறிப்பாக கம்பெனிகளிடமிருந்து வசூலிக்கும் கார்பொரேஷன் டேக்ஸ் மரணவரி என்று சொல்லப்போனால் அந்த எஸ்டேட் ட்யூடியிலும் மாநில அரசுகளுக்குச் சிறிதும் பங்கில்லை, இவற்றால் மத்திய அரசுக்குக் கிடைக்கும் மொத்தத் தொகையை, தலைவரவர்களே, எனக்குக் கிடைத்துள்ள விவரப்படி, இந்த மன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன்.

1972–73-லே தமிழ் நாட்டுக்கு மட்டும், தமிழ் நாட்டிலே இருந்து வசூலித்து தமிழ் நாட்டுக்குத் திருப்பித் தராமல் டெல்லி வைத்துக் கொண்டிருக்கின்ற தொகை 1972–73-லே 67 கோடி ரூபாய். 1974–75-லே 153.43 கோடி ரூபாய். 1974–லே இருந்து 1978–79 முடிய ஒரு ஐந்தாண்டு காலம் என்ற ஒரு கணக்கு எடுத்தால் இந்த ஐந்தாண்டுக் காலத்தில் 1974–1979 வரைக்கும் 732.37 கோடி ரூபாய் நமக்குத் திருப்பித் தரப்படாமல் டெல்லியிலே வைத்துக்கொள்ளுகிற தொகை 10 ஆண்டுக்கு, 1974–லே இருந்து 1984 வரை கணக்கிட்டால், தமிழ் நாட்டிலே இருந்து வசூலித்து நமக்குத் திருப்பிக் கொடுக்காமலே டெல்லி வைத்துக்கொள்ளும் தொகை 1,748.58 கோடி ரூபாய் என்பதை நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். இப்படி நம்முடைய மாநிலத்திலிருந்து வேறு தலைப்புக்களின் கீழ் வசூலித்துக் கொண்டுபோய் மத்திய அரசு வைத்திருக்கிற இந்தத்தொகை மட்டும், நான் ஒரு ஆண்டுக்குக் கணக்கிட்டுச் சொல்லுகிறேன். 1974–75–ல் 153.43 கோடி ரூபாய். இந்த 153.43 கோடி ரூபாய் ஒருவேளை நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய கைக்கு வருமானால், மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கா அவர்கள் சொன்னதுபோல, 2 படியல்ல, $2\frac{1}{2}$ படிகூடப் போடலாம் இந்தத் தமிழ் நாட்டு மக்களுக்கு. அண்ணா அவர்கள் கோயம்புத்தூருக்கும் சென்னைக்கும் படி அரிசி போட்டார்கள், அதை என்ன செய்தீர்கள் என்று அவர்கள் கேட்டார்கள். அண்ணா அவர்கள் இருந்த காலத்தில், இவ்வாறு கோயம்புத்தூருக்கும், சென்னைக்கும் படி அரிசி போட்டதனால், எத்தனை 8 கோடி ரூபாய் கிட்டத்தட்ட நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம்பார்க்க வேண்டும். இன்றைய தினம் தமிழ் நாடு முழுவதும் வறட்சி நிலவியிருக்கிறது. அதிலும் மதுவிலக்குச் சட்டத்தை அமல் நடத்திய பிறகு, பல கோடிக்கணக்கான ரூபாய் இன்றைக்கு இழந்திருக்கிற நிலையில் 2 படி போட்டால் அதை ஈடுகட்டுவதற்கு—வருடத்திற்கு ஏற்படும் 8 கோடி ரூபாய் நஷ்டத்திற்கு— இன்றைய தினம் நாடு தாங்குமா என்று யோசிக்க வேண்டுகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அண்ணா ரூபாய்க்கு ஒரு படி போடும்போது 8 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு, அதுவும் எப்படிப்பட்ட நிலையிலே என்றால் அப்போது குவிண்டால் ஒன்றுக்கு 35 ரூபாய் என்று இருந்தது. இப்போது குவிண்டால் ஒன்றுக்கு 74 ரூபாய்.



1975 மார்ச் 10]

திரு. வி. வெங்கா: விவசாயிகளுக்கும் லாபம் இருக்கவேண்டும், வாங்ககக்கூடியவர்களுக்கும் நன்மைகள் இருக்கவேண்டும் என்பதுதான் அண்ணாவினுடைய நிலை. ரூபாய்க்கு 1 படி 2 படி 3 படி, என்பதல்ல பிரச்சினை. அதனால் எவ்வளவு இழப்பு என்று சொல்கிறார்கள். ஊதிய உயர்வு மூலமாக மட்டுமே கடந்த 4, 5 ஆண்டுகளாக ஏறத்தாழ 75 கோடி ரூபாயை அரசு ஊழியர்களுக்குக் கொடுத்திருக்கிறது. இன்றைக்குள்ள பொருளாதார நிலையிலே குறைந்த விலையில் அரிசிபோன்ற பொருட்கள் கொடுக்கக்கூடிய நேரத்திலே அந்த ஊதிய உயர்வு கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. மு. இராமநாதன்: தலைவர் அவர்களே, இன்று கூட நம்முடைய அரசின் சார்பில் இப்போது தமிழ்நாடு முழுவதும் ஏற்பட்டிருக்கின்ற வறட்சி காரணமாக வறட்சிப்பணிகளுக்கு 10 கோடி ரூபாய் மாவட்ட ஆட்சியாளர்கள் மூலமாக உடனடியாக நாம் தந்துவிட்டு மத்திய அரசிடமிருந்து முழுவதுமாக நிவாரணப்பணிகளைச் செய்வதற்கு நாம் 30 கோடி ரூபாய் எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். நம்முடைய முதல்வர் அவர்கள் தந்திருந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பது போல, கடந்த 1969-லே கடுமையான வறட்சி ஏற்பட்டு அதற்காக 18.64 கோடி ரூபாய் நாம் செலவழித்தோம். அப்படிச் செலவழித்ததைப்பற்றி ஒரு விவரத்தை இந்த மன்றத்திலே கேட்டபோது, முதலமைச்சர் அவர்கள் அறிக்கை தந்தபின், இந்த 18.64 கோடி ரூபாயையும் வறட்சிப் பணிகளுக்காக மத்திய அரசு தந்துவிட்டது என்று நாங்கள் கருதினோம். ஆனால் முதலமைச்சர் தந்த விளக்கத்திற்குப் பிறகுதான் டெல்லியிலே இருந்து கிடைத்த தொகை 14.25 கோடி என்றும், அப்படி வந்த தொகையில் கடனாக ரூபாய் 11.25 கோடி ரூபாயும், மானியமாக 3 கோடி ரூபாயும் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரமும் தெரிந்தது. அதுபோல 1972–லே கடுமையான வெள்ளச் சேதம் ஏற்பட்டு, விளைநிலங்கள் எல்லாம் மணல் மேடிட்டு விவசாயிகள் அல்லல்பட்ட நேரத்தில் அரசின் செலவிலே, அப்போது மண்ணை எல்லாம் அகற்றி நிலங்களைப் பாதுகாத்து செப்பனிட்டு பல்வேறு நிவாரணப்பணிகளுக்கு இந்த அரசு செய்த செலவு 13.61 கோடி ரூபாய். அதைப்பற்றியும் நாம் என்ன கருதிக்கொண்டிருந்தோம் என்றால், மத்திய அரசிலே இருந்து வந்ததாக. பிறகுதான் டெல்லியிலே இருந்து நமக்கு வந்த உதவி வெறும் ரூ. 9.76 கோடி என்று தெரிந்தது. கடன் கணக்கிலே வந்தது 8.89 கோடி ரூபாய், மானியமாக வந்தது வெறும் 87 லட்சம் ரூபாய்தான். இது நமக்குக் கிடைத்திருக்கின்ற கணக்கு. இப்படிப்பட்ட நிலைமையில் இந்தத் தமிழ் நாட்டின் ஆட்சிப்பொறுப்பை ஏற்று, நாடு முழுவதும் இருக்கின்ற மக்களைப் பாதுகாத்து, அவர்களுடைய கஷ்டத்தைப்போக்குவதற்கு நாம் பொறுப்பு ஏற்றிருக்கிறோம். ஏற்கனவே நிர்வாக அனுபவம் மிக்க பெரியவர் ராஜாஜி அவர்கள் இந்தத் தமிழ்நாட்டின் முதலமைச்சராக 1952–ல் பொறுப்பேற்றார்கள். அவர்கள் பொறுப்பேற்ற காலத்தில் மத்திய அரசினிடத்தில் "நான் சோதனை மிகுந்த காலத்தில் இந்தச் சென்னை மாநிலத்தின் அமைச்சர் பொறுப்பிலே வந்து உட்கார்ந்திருக்கிறேன். இந்தச் சென்னை மாநிலத்தின் அவசரப்பணிக்கு எனக்கு உடனடியாக ஒரு 10 கோடி ரூபாய் பணம் வேண்டும்" என்று மத்திய அரசினிடத்திலே கேட்டார்கள். அன்றைக்குப் பிரதமராக திரு ஜவஹர்லால் நேரு

அவர்கள் இருந்தார்கள். அன்றைய தினம் நிதி அமைச்சர் திரு. சிந்தாமணி தேஷ்முக். இந்த 10 கோடி ரூபாய் வேண்டுமென்று எழுதி ஒரு வார காலம் ஆயிற்று. நம்முடைய முதலமைச்சர் காலையிலே ஒவ்வொரு பிரச்சினைக்கும் தபால் எழுதி, பின்பு எத்தனை தடவை இந்த மாநில அரசின் சார்பில் ரிமைண்டர்கள் என்ற முறையில் தபால் எழுதியிருக்கிறோம், பதில் இல்லை என்ற ஒரு கணக்கைச் சொன்னார்கள். அவர் கவர்னர் ஜெனரலாக இருந்தவர், மறைந்த மஹாத்மா காந்திக்கு சம்மந்தியாக இருந்தவர். Specimen of the South Indian brain என்று சொல்லக்கூடிய அளவுக்கு அறிவிலும், ஆற்றலிலும் சிறந்திருந்தவர் ராஜாஜி. ஒருவேளை அவர்களுடைய ஆற்றல் எங்கள் முதலமைச்சர் அவர்களுக்கு இல்லாமல் இருக்கலாம். நாங்கள் அதைப்பற்றித் தாழ்வாகக் கருதவில்லை. ஆனால் அன்றைக்கு அந்த சென்னை மாநில அமைச்சர் ராஜாஜி அவர்கள் அன்றைக்கு ஒருவார காலம் வரை பொறுத்திருந்து, பின்பு 10 கோடி ரூபாயை ரிசர்வ் வங்கியினுடைய கணக்கிலிருந்து மாநில அரசின் சார்பிலே வாவு வைத்து எடுத்துக்கொண்டு, எடுத்துக் கொண்டதாக டெல்லிக்குத் தகவல் அனுப்பினார்கள். அவசர அவசரமாக டெல்லியிலே இருப்பவர்கள் கூடிப் பேசி என்னதான் மிகப்பெரிய ராஜ தந்திரியாக இருந்தாலும், ஒரு மாநில முதலமைச்சர் அவர்களுடைய வரம்பை மீறி இவ்வாறு நீங்கள் 10 கோடி ரூபாய் எடுத்துக்கொண்டது சரியானதல்ல, அதற்குத் தகுந்த சமாதானம் தேவை என்று ஒரு நீட்டோலை வந்தது, இந்தக் கோட்டைக்கு. அதற்கு, ராஜாஜி அவர்கள் பத்திரிகை நிருபர்களிடத்திலே சொன்னார்கள். "அரசியல் சட்டத்தில் என்ன இருக்கிறது என்பதை ஜவஹர்லால் நேருவோ, மற்றவர்களோ சொல்லி நான் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியத்திலே நான் இல்லை. அரசியல் சட்டத்தை உருவாக்கும்போது நானும் தான் இருந்தேன். நேரு கையெழுத்திட்ட இடத்தில் நானும் கையெழுத்திட்டிருக்கிறேன். ஆகவே இந்த விவகாரத்தை இதோடு விட்டுவிடுவது நல்லது, மேலும் கிளறினால், தமிழ்நாட்டிலே இருக்கின்ற பெரியார் இ. வெ. ராமசாமி அவர்களுடனும், அண்ணாதுரை அவர்களுடனும் நான் சேர்ந்து கொள்வேன்' என்று எச்சரித்து ஒரு அறிக்கை விட்டார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, ரிசர்வ் வங்கி என்பது மத்திய அரசினுடைய முழுப் பொறுப்பில் மட்டுமல்ல. மத்திய அரசு, மாநில அரசு இந்த இரண்டுக்குமே பொறுப்பான வங்கி. மத்திய அரசு ஓவர்டிராப்ட் வாங்கக்கூடாது என்று சொன்ன உடனேயே வாங்கக்கூடாது என்று நிபந்தனை இல்லை. ஒரு கருத்துக்கு அப்படிச் சொல்கிறார்களே தவிர வேறு ஒன்றுமில்லை. அதனால் மாநில அரசு வாங்காமல் இருக்க வேண்டும், வாங்கக்கூடாது என்று பொருள் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. மு. இராமநாதன் : விளக்கத்துக்கு நன்றி சொல்லிக் கொள்ளுகிறேன். அவ்வாறு அந்த சந்தர்ப்பத்திலே ராஜாஜி அவர்கள் பதில் தந்தார்கள். எதற்கு இவற்றையெல்லாம் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நாங்கள் சொல்லுகின்ற இந்த வாதம், இந்த மாநில சுயாட்சி கோஷம் ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கின்ற





சில லட்சம் பேருடைய நல்வாழ்வுக்காக என்று மட்டும் கருத மாட்டார்கள் என்று நம்புகிறேன். இது $4\frac{1}{2}$ கோடி தமிழ் மக்களுடைய வாழ்வை நலம் பெறச் செய்கின்ற ஒரு பிரச்சினை. சுதந்திரப் போராட்ட காலத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, கேரள காங்கிரஸ் கமிட்டி, ஆந்திர காங்கிரஸ் கமிட்டி, கர்நாடகா காங்கிரஸ் கமிட்டி என்று அமைத்து ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைக்க, இந்த நாட்டில் நமக்கென்று இருக்கின்ற உரிமைகள் அனைத்தையும் நிலைநாட்டிக்கொள்ள, அந்தந்த மொழிகள் பேசுகின்ற மக்கள், தங்கள் வெவ்வேறுபட்ட கலை, கலாச்சாரம், பண்பாடு, நாகரீகம் ஆகிய அனைத்துக்கும் ஆட்பட்டிருக்கின்ற அனைத்து மக்களும் சேர்ந்துதான் அந்தப் போராட்டம் நடந்தது. ஆக, அது ஏட்டில் எழுதப்பட்டு இன்றைக்கும் அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

(பிற்பகல் 5-10).

"லிபர்ட்டி, ஈகுவாலிட்டி அண்டு பிரேட்டர்னிடி" என்று சொல்லப்படுகின்ற வாசகங்கள் ஏதோ படிப்பதற்கு ஏற்ற வாசகங்களாக இருக்கின்றனவே தவிர, அதனுடைய பலன்களை தமிழக மக்கள் அனுபவிக்கின்ற நிலை இல்லை என்பதைத்தான் நம் முன்னர் உள்ள புள்ளிவிவரத்திலிருந்து அறிகிறோம். எத்தனை கோடி ரூபாய் தமிழ் நாட்டிலேயிருந்து வசூலித்துக் கொண்டுபோகப்பட்டாலும், மாநிலத்திற்கு என்று ஒரு தேவையான தொகை திருப்பித் தரப்படாமல் டெல்லியிலேயே முடங்கியிருக்கின்றது என்பதை நாம் காண்கிறோம். நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் அமைக்கப்பட்டு அங்கே ஒரு ஆயிரம் மெகாவாட் நமக்குக் கிடைக்கும் அல்லது தூத்துக்குடியிலே ஒரு அனுமின் நிலையம் ஏற்பட்டால் அதனால் தமிழகத்தின் மின்சாரத் தேவை தீரலாம் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். சேலத்திலே இரும்பு உருக்குத் தொழிற்சாலை வேண்டுமென்று கேட்டோம். கடந்த இரண்டாண்டுக் காலமாக சேலம் உருக்காலை வருமா வராதா என்ற சந்தேக நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் அதைத் தான் சொன்னார்கள். "அரசியல் சட்டத்தை உருவாக்குகின்ற நேரத்திலே, நாம் சுதந்திரம் பெற்ற மயக்கத்திலே இருந்தோம். அந்த மயக்கத்தில் இருந்த மக்கள் அவர்களுடைய உணர்வைப் பிரதிபலிக்கின்ற வாய்ப்பு இல்லாமல், நேரடியாக மக்கள் பிரதிநிதிகள் பங்கு பெறாமல், குறிப்பிட்ட ஒரு சிலராலே உருவாக்கப்பட்ட அரசியல் சட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும். பத்து ஆண்டுகளுக்கு ஒருமுறை இன்றைக்கிருக்கின்ற அரசியல் சட்டத்தைப் பரிசீலனை செய்து அதில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் இருக்கின்ற சாதக பாதகங்களை நாம் சிந்தித்து, என்னென்ன அதிகாரங்களை மாநில அரசுகளுக்கு வேண்டுமோ அந்த அதிகாரங்களை நாம் பரிமாறிக் கொண்டாலொழிய இந்தியப் பேரரசிலிருந்து நம்முடைய மாநில அரசுகள் உய்வு பெற்றுவிட முடியாது" என்பதைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த வழியில்தான் இன்றைக்குக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அந்த அவையிலே இருக்கின்ற மாண்புமிகு அங்கத்தினர் திரு. ராஜு அவர்கள் சொன்னார்கள். உலகப்படத்தை எடுத்துப் பார்த்தால், உலகத்திலே "ஆல் அமெரிக்கா" என்று கிடையாது, "ஆல் ஆப்பிரிக்கா" என்று கிடையாது, "ஆல் ஐரோப்பா" என்று கிடையாது, ஆனால் "ஆல் இந்தியா" என்று நம் நாட்டிற்கு இருக்கிறது.

அப்படி இருப்பதன் கருத்து பல்வேறு இனங்கள், பல்வேறு மொழிகள், பல்வேறு கலைகள், பல்வேறு கலாசாரங்கள், பல்வேறு உணர்வுகள் என்று இருக்கின்றவைகள் ஒன்றாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதுதான். அப்படி பல்வேறு மொழிகளைப் பேசிக்கொண்டிருக்கின்ற மக்கள் எல்லோரையும் ஒன்றாக ஆக்கியுள்ளார்கள். அதுதான் "ஆல் இந்தியா" என்பது. இது ஒரே ஒரு நாடு அல்ல. "ஆல் இந்தியா" ஆக இருக்கிறது. இன்றைக்கு பலர் இந்த அவையிலே, மற்ற அவையிலே பேசியிருப்பதைப் பார்த்தோம். காஷ்மீரத்திற்குத் தனி அந்தஸ்து கிடைத்திருக்கின்றது. அது இருக்கின்ற சூழ்நிலை வேறு என்று கூறுகிறார்கள். இன்றைக்கு காஷ்மீரத்திலே முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கின்ற திரு. ஷேக் அப்துல்லா அவர்களை எந்தப் பெயரிலே அழைக்கலாம் என்று நாம் சற்று யோசித்துப் பார்த்தால், இங்கே அழைக்கும்போது முதன் மந்திரி என்றும், அங்கே வசீர்-ஏ-ஆசாம் என்று அழைத்துக் கொள்ளலாம் என்றும் சொல்ல வேண்டியிருக்கிறது. நான் தாக்கிப் பேசுவதாக, தலைவரவர்களே, கருதக்கூடாது. நாட்டுப்புறத்திலே இருக்கின்ற சில ஓட்டல்களுக்குச் சென்றால், ஒரு பிளேட்டில் உப்புமா என்று பெயர் சொல்லி வைக்கிறார். அதற்கு விலை பத்துபைசா. ஆனால் பெரிய ஓட்டலிலே போய் அதையே கேட்டால் அதற்கு பகளாபாத் என்று பெயர் சொல்வான். விலை 50 பைசா என்பான். அது 50 பைசா என்றாலும், உப்புமாதான். ஆக இரண்டுமே ரவையிலே கிளறியதுதான்.

திரு. கே. ராஜாராம் : பகளாபாத் என்பது தயிர்சாதம் போல இருக்கும்.

திரு. மு. இராமநாதன் : தலைவரவர்களே, ஓட்டலுக்கு ஓட்டல் பெயர் மாறிவிடுகிறதோ என்னவோ, அதுபற்றி அவ்வளவாக எனக்குத் தெரியாது. எந்தப் பெயர் வைத்து அழைப்பது என்பதல்ல இப்போதுள்ள பிரச்சினை. அதிலே இருக்கின்ற அடிப்படைப் பிரச்சினைதான் முக்கியம். இன்று வரைக்கும் இந்திய மாநிலத்திலே ஒருவர் வழக்காட ஹைகோர்ட்டுக்குச் சென்று, ஹைக்கோர்ட்டிலே அவர்களுக்குச் சரியான தீர்ப்பு கிடைக்காதபோது சுப்ரீம் கோர்ட்டுக்குப்போக வாய்ப்பாண்டு. ஆனால் இன்றைக்கு திரு. ஷேக் அப்துல்லா பெற்றிருக்கின்ற அதிகாரத்தின்படி காஷ்மீரப்பகுதி மக்கள் காஷ்மீரத்து ஹைகோர்ட்டு தீர்ப்பை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்லும் உரிமை கிடையாது. திரு. ஷேக் அப்துல்லா பெறும் அதிகாரங்கள் பெற்றிருப்பதில நாங்கள் மகிழ்ச்சி அடையக்கூடியவர்களே தவிர, அதனாலே எங்களுக்கு வருத்தம் இல்லை. ஆனால் இன்றைக்கு மத்திய ஆளும் கட்சியினர் தொட்டதற்கெல்லாம் மாநில அரசுகள் மத்திய அரசைக் காட்டித் தப்பித்துக் கொண்டு போகிறார்கள் என்று பேசுகின்றார்கள். நம்முடைய சக்திக்கு ஏற்ப என்னென்ன மக்களுக்குச் செய்ய வாய்ப்பு இருக்கின்றதோ அதைச் செய்திருக்கிறோம். அதைத் தான் நமது முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கண்ணொளி வழங்கும் திட்டம், குடிசை மாற்று வாரியம், ஹரிஜனங்களுக்கு வீடு கட்டும் திட்டம், பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம், இப்போது மீனவர்கள் சீரமைப்புத் திட்டம், அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கின்ற திட்டம், அனாதைக் குழந்தைகள், கணவன் இறந்து போன விதவைகள், அப்படி அனாதையாக இருப்பவர்கள் தமிழ்நாட்டில்



அவதிப்படக்கூடாது என்ற அளவில் திட்டங்கள் எதுவாக இருந்தாலும் சரி, நாம் நம்முடைய சக்திக்கு ஏற்ற வகையிலே நம்முடைய வரம்பிலே இருந்து கொண்டுதான் செய்து கொண்டிருக்கின்றோம்.

இறுதியாக, தலைவரவர்களே, தங்கள் மூலமாக ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எல்லோரையும் கேட்டுக் கொள்கிறேன், நாம் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட உணர்வோடு, கட்சிமாச்சரியங்களுக்கு அப்பாற் பட்ட உணர்வோடு, தமிழ்நாட்டிலே வரும் மக்களை எண்ணிவிட வேண்டாம். எந்தக் கட்சிக் கொடிக்குக் கீழே இருந்து இந்த மன்றத்திற்கு வந்திருந் தாலும், எந்தச் சின்னத்திலே வோட்டுப் பெற்று வந்திருந்தாலும், இந்த நாட்டிலே இருக்கின்ற மக்கள், தமிழ் மக்கள், நிம்மதியாக வாழ்ந்திட வேண்டும். அவர்கள் தேவைக்கேற்ற வகையில் உண்ண உணவும், உடுக்க உடையும், குடியிருக்க வீடும் கிடைக்க வேண்டும், சமுதாயத்திலே உலக அரங்கிலே செம்மையான வாழ்வு நம்முடைய தமிழக மக்களுக்குக் கிடைத்திட வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மன்றத்திலே நாம் வந்து அமர்ந்திருக்கின்றோம்.

நான் ஒன்று சொல்லி முடித்துக் கொள்கின்றேன். மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த திரு. சிந்தாமணி தேஷ்முக், நிதியமைச்சராகப் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருந்த காலத்தில் தான், பம்பாய் பிரிக்கப்பட்டு மராட்டிய மாநிலத்திலே சேர்க்கப்பட வேண்டும் என்று கிளர்ச்சி நடந்தது. இன்றிருக்கும் முதுபெரும் தலைவர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் பம்பாய் பிரிக்கப்படக் கூடாது என்று உண்ணாவிரதம் இருந்தார்கள். பம்பாயில் துப்பாக்கி சூடு நடந்தது. பம்பாயில் 800 ரவுண்டு சுட்டார்கள். பம்பாய் தெருவிலே சுட்டிருக்கின்றார்கள். எண்பது பேர்கள் செத்தார்கள். ஆனால் மராட்டியன் என்ற உணர்வோடு, திரு. சிந்தாமணி தேஷ்முக் பண்டித நேரு அவர்களிடத்தில், "பிடியுங்கள் ராஜிநாமா கடிதத்தை. என்னுடைய இனத்து மக்கள், என்னுடைய நாட்டு மக்கள், கொக்கு, குருவி சுடப்படுவது போல சுட்டு வீழ்த்தப்படுகிறார்கள். இந்த நேரத்தில் நான் இந்த டெல்லியிலே அமர்ந்திருக்க முடியாது" என்று ராஜிநாமா கடிதத்தைக் கொடுத்துவிட்டு ஊர் வந்து சேர்ந்தார்கள். அப்படிப்பட்ட உணர்வில் எள்ளளவுகூட குறைந்தவர்கள் அல்ல, நம் தமிழ்நாட்டு மக்கள். அதுபோலவேதான் உயர்ந்த காந்தியவாதியும், உயர்ந்த லட்சியத்தைக் கொண்டவருமான டாக்டர் பி. சி. ராய் மாநில அரசுக்கு, தன் சொந்த நாட்டிற்கு அநீதி என்றபோது சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்வதற்குக் கூடத் தயங்கவில்லை. இங்கே இருக்கும் தமிழக மக்களும் அதே மான உணர் வோடு இருப்பவர்கள்தான்.

நீல முடி தரித்த பல மலை சேர் நாடு!
நீர் அமுதம் எனப் பாய்ந்து நிரம்பும் நாடு !
கோலமிகு பயன் மரங்கள் செறிந்து வாழும்
குளிர்காவும் சோலைகளும் குலவும் நாடு !
ஞாலமெலாம் பசியின்றி காத்தல் வல்ல !
நன்செய்யும் புன்செய்யும் நலமிக்கோங்க !
பாலடையும், நறுநெய்யும், தேனும் உண்டு !
பண்ணவர்போல் மக்களெல்லாம் வாழ்ந்திருந்தார் !

என்று சொல்கின்ற பழந்தமிழ் மக்கள், தமிழ் நாட்டு மக்கள். வறட்சியாலும், வாட்டத்தாலும், வறுமையாலும், பஞ்சத்தாலும், பசியாலும் வாட்டமுற்றிருந்தாலும், இந்த நாட்டு மக்களை வாழ்வைப்பதற்காக நாம் இங்கே பொறுப்பேற்று வந்திருக்கின்றோம். நாம் ஏற்றுக்கொண்டிருக்கின்ற இந்த மாநில சுயாட்சி லட்சியத்தில் தியாகத்தின் மூலம் வெற்றி பெறுவோம் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்களே சொல்லியிருக்கின்றார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தில் எந்த நாள் வந்து சேர்ந்தேனோ அந்த நாள் முதல் இன்றுவரை 9 முறை சிறைக்கு அழைத்தீர்கள், 9 தடவைகள் சிறையிலே இருந்தேன். மாநில சுயாட்சிக்காக என் வாழ்நாள் முழுவதும் சிறையிலே இருப்பதற்கு நான் சித்தமாக இருக்கிறேன் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, தலைவரவர்களே, தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 5-20).

திரு கே. எஸ். அப்துல் வகாப் : மதிப்பிற்குரிய துணைத் தலைவரவர்களே, நம் மாநிலத்தின் அருமை முதல்வர் அவர்கள் 1975–76-ஆம் ஆண்டுக்காக சமர்ப்பித்திருக்கும் நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதிலே நான் பெருமிதம் கொள்கிறேன். இந்த நிதி நிலை அறிக்கையிலே அரசு ஊழியர்களுக்கு ஊதியம் இருப்பதால்தான் உயர்வு என்ற பிரச்சினை வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இதைப் பற்றிச் சரியாகச் சொல்ல வேண்டுமென்றால், அவர்களை மையமாக வைத்துக்கொண்டு தான் நாம் பொருளாதாரப் புரட்சியை உருவாக்க வேண்டுமென்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தக் கருத்தை விவரிக்கும் அறிக்கை தான் இந்த அறிக்கை என்று நான் கொள்கின்றேன். செஸ் விளையாட்டைப் பற்றி நன்றாக அறிந்தவர்களுக்குத் தெரியுமென்று நினைக்கின்றேன். செஸ் விளையாடும் அரசனை வீழ்த்துவதற்காக முன்னதாகவே அரசனுடைய படைகளைத் திட்டமிட்டுத் தாக்குவார்கள். அதே முறையிலே தான் இந்த 4 வரிகளிலே கண்டுள்ள கருத்தை நிறைவேற்றுவதற்கான விரிவான திட்டம் தான் 140 பககங்கள் கொண்ட இந்த நிதி நிலை அறிக்கை. அந்தக் கருத்தை நிறைவேற்றும் வகையில் இந்தத் திட்டம் பெருமளவுக்கு வெற்றி கண்டிருக்கிறது என்பதை நான் உணர்கின்றேன். அதை வரவேற்கின்றேன். அதைப் பாராட்டுகின்றேன். அத்தகைய ஒரு நல்ல திட்டத்தை அளித்த முதலமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன். இந்த நிதி நிலை அறிக்கையிலே 25-வது பக்கத்தில் நாம் பார்ப்போமானால், சமுதாயத்தின் அடித்தளத்து மக்களுக்கான பல்வேறு சமூக நல நடவடிக்கைகளை நமது அரசு அனைவரும் பாராட்டத் தக்க வகையில் நிறைவேற்றி வருகிறது என்பதை நாம் காணலாம். தொழுநோய் பிச்சைக்காரர்களுக்குப் புது வாழ்வு அளிப்பது, கண்ணொளி வழங்கும் முகாம்களைப் பரவலாக அமைப்பது, கை ரிக்ஷாக்களை நீக்கிவிட்டு சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்குவது, உடல் ஊனமுற்றோர்க்கு நல்வாழ்வு தருவது, ஆகிய அரிய திட்டங்களின் வாயிலாக நமது அரசு இந்தியாவிலேயே சமூகப் பணியில் முன்னணியில் நிற்கிறது. இப்பொழுது புதிய திட்டங்களாக அனைத்து சிறார்களையும் பராமரிப்பது, விதவைப் பெண்களைப் பாதுகாப்பது போன்று வாழ்க்கையின் கீழ் மட்டத்தில் உள்ளவர்



களின் நல்வாழ்வுக்காக புது வாழ்வை அளிக்கக் கூடிய நல்ல திட்டங்கள் தமிழக ஏழை எளிய மக்களுக்காகத் தீட்டப்படுகின்றன. நான் கேட்க விரும்புகிறேன், இந்த நலன்களெல்லாம் தமிழக மக்களுக்கு மட்டும் தான் கிடைக்க வேண்டுமா? வேறு மாநிலங்களில் கீழ் மட்டத்திலே உள்ள மக்களும் இது போன்ற நலன்களைப் பெறக்கூடாதா? அவர்களும் நம்முடைய சகோதரர்கள் தானே, அவர்களும் இது போன்ற நலன்களைப் பெறுவதற்கு நம்முடைய அருமை முதலமைச்சர் அவர்கள் வசீர்-ஏ-ஆசம் ஆக வேண்டும் என்பது தான் என்னுடைய ஆசை. அப்படி நான் சொல்வதென்றால், திரு. ஷேக் அப்துல்லா மாதிரி ஆக வேண்டும் என்பதல்ல.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அப்போதும் மற்ற மாநிலங்களில் உள்ளவர்கள் இந்தச் சலுகைகளை அனுபவிக்க முடியாதே.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, நான் சொல்லுவதெல்லாம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திரு. ஷேக் அப்துல்லா மாதிரி ஆக வேண்டுமென்பதல்ல. காஷ்மீரத்திலே திரு. ஷேக் அப்துல்லா, டெல்லியிலே இந்திரா காந்தி என்று இரு பிரதமர்கள் இந்தியாவிலே இருக்க முடியாது. அம்மையார் அவர்கள் அழுகின்ற குழந்தைக்கு அழுகையை நிறுத்த தாயார் செய்யும் தந்திரம் போல் திரு. ஷேக் அப்துல்லா என்ற குழந்தையின் அழுகையை "வசீர்-ஏ-ஆசம்" என்ற பெயரைக் கொடுத்து அழுகையை அடக்கியிருக்கிறார்கள். அவ்வளவுதான். ஆனால் தமிழ் நாட்டினுடைய வசீர்-ஏ-ஆசமாக, பிரதமராக இங்கே வீற்றிருக்கின்ற நம்முடைய முதல்வர் அவர்கள் இந்த மாநிலத்திலுள்ள ஏழைகளுக்கு மட்டுமல்ல, பாரத தேசத்தினுடைய அத்தனை ஏழைகளுக்கும் நல்வாழ்வு தருவதற்கு இறைவன் அருள் புரிய வேண்டுமென்று நான் என்னுடைய வேண்டுகோளை இறைவனிடத்தில் சமர்ப்பிக்கின்றேன். இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே நடைபெற்ற விவாதத்தின்போது மேலவையிலும் சரி பேரவையிலும் சரி "மாநில சுயாட்சி" பற்றித்தான் நீண்ட நேரமாக விவாதங்கள் நடைபெற்றன. இந்த அறிக்கையிலும் அவர்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து இந்த விவாதங்கள் நடைபெற்றன. மாநில சுயாட்சியைப் பொறுத்தவரையில், நான் தெளிவாக இந்த அவையிலே ஒரு முறை அல்ல, பல முறை என்னுடைய சொந்தக் கருத்தை நான் தெளிவாக விளக்கியிருக்கின்றேன். சில மாதங்களுக்கு முன்பு மாநில சுயாட்சி பற்றி நான் பேசிக்கொண்டிருந்த சமயத்திலே, கரன்சி உட்பட மாநிலங்களுக்கு அதிகாரங்கள் தரப்பட வேண்டுமென்று நான் குறிப்பிட்ட நேரத்திலே, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூட கரன்சி நோட் அடிக்க மாநிலங்களுக்கு அதிகாரம் கொடுப்பதா என்று கேட்டார்கள். முதலமைச்சர் அவர்கள் கூட எழுந்து, கரன்சி நோட் அச்சடிக்கும் அதிகாரத்தை மாநிலத்துக்குக் கேட்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். ஆனால் இன்றைக்கு இந்த நிதி நிலை அறிக்கையைப் பார்க்கும்போது நம்முடைய முதல்வர் அவர்கள் இன்னும் ஒரு படி மேலே சென்று விட்டார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் வெளியிட்ட கருத்து ஒன்றை நிதி நிலை அறிக்கை

யின் 39-வது பக்கத்திலே வெளியிட்டிருக்கிறார்கள். அதில் 'நாட்டுப் பாதுகாப்பு, தவிர மற்ற அதிகாரங்கள் அனைத்தையும் பற்றிச் சிந்திப்போம்'. என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நாட்டுப் பாதுகாப்பு தவிர்த்த மற்ற அத்தனை அதிகாரங்களையும் பற்றிப் பரிசீலிக்க வேண்டிய நிலையிலே இருப்பதாக அவர்கள் கருத்து வெளியிட்டிருப்பதை நாம் உணர்கின்றோம். கரன்சி வெளியிடும் அதிகாரம் ஏன் மாநில அரசிடம் இருக்க வேண்டுமென்பதற்கு நான் ஒரு உதாரணம் தருகிறேன். என் இளமைப் பருவ நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. நான் ஒரு பீடி வியாபாரி. சிறு. குழந்தை பிராயத்திலிருந்து பீடி இலை வாங்கி வர ஹைதராபாத் செல்லுவேன். அன்று வெள்ளைக்கார ஆட்சி இருந்தாலும் கூட, ஹைதராபாத் மன்னருக்கு கரன்சி வெளியிடக்கூடிய அதிகாரம் இருந்தது. அப்பொழுது 100 ரூபாய் நோட்டுகள் என் கையில் ஆயிரம் ஆயிரம் இருக்கும். அப்பொழுது அதற்கு கல்தார் என்று பெயர். 100 ரூபாய் நோட்டுகளே என் கையில் 10 ஆயிரம், 20 ஆயிரம் என்று புழங்கும். ஆங்கிலேயன் காலத்திலேயே 100 ரூபாய் நோட்டுகளை அச்சடிக்க ஹைதராபாத் மன்னனை அனுமதித்திருந்தான் என்றால், அவனுக்குச் சுதந்திர ஆட்சி கொடுக்கப்பட்டிருந்தது என்று தானே பொருள். இதைக் கேட்பவர்களுக்கு விசித்திரமாகத்தான் இருக்கும். ஆனால் நடந்த உண்மை. அன்றைய நிலையில் இது ஒரு சாதாரண அதிகாரம்தான். நம்முடைய கோரிக்கையான மாநில சுயாட்சிபற்றி நாம் சொல்லி வந்த கருத்து, 4 அதிகாரங்கள் மத்திய அரசிடம் இருக்க வேண்டும், ஏனைய அதிகாரங்கள் அத்தனையும் மாநில அரசாங்கத்துக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்பது. அந்த நான்கு எவையென்றால் டிஃபன்ஸ் ஒன்று, பாரின் அபையர்ஸ் இரண்டு, டிரான்ஸ்போர்ட் பினான், ரெயில் போன்றவை மூன்று, இன்டர் ஸ்டேட் கம்யூனிகேஷன்ஸ் நான்கு. ஆக இந்த நான்கு அதிகாரங்கள் தவிர அனைத்து அதிகாரங்களும் ஸ்டேட்டுகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும். ஆனால் இந்த நிதி நிலை அறிக்கையிலே நாட்டுப் பாதுகாப்பு தவிர மற்ற அதிகாரங்கள் அனைத்தையும் மாநிலங்களுக்குக் கொடுப்பது பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று கூறியிருப்பதை நான் வரவேற்கிறேன். இப்பொழுது இந்தியாவிலுள்ள மாநிலங்களுக்கு மூன்று வகையான அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. ஏ.பி.சி. என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அதைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. பாண்டிச்சேரி போன்ற மத்திய அரசின் நேரடிப் பார்வையில் இருக்கும் மாநிலங்கள் "ஏ" பிரிவைச் சேர்ந்தவை. அவை கொஞ்சம் அதிகாரம் கொண்டவை. ஹைதராபாத் போன்ற ஸ்டேட்டுகள் கொஞ்சம் கூடுதலாக அதிகாரம் உடையவை, அவை "பி" பிரிவைச் சேர்ந்தவை. "சி" பிரிவு என்று அவர்கள் சொல்லுகின்றவைகள் தமிழ்நாடு, மகாராஷ்டிரம், வங்காளம் போன்ற மாநிலங்கள். அதை நானும் ஒப்புக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் "ஏ" "பி" "சி" என்று சொல்லும்போது அவற்றைத் தலை கீழாகச் சொல்லுகிறார்கள்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவர் அவர்களே, சி.பி.ஏ. என்று தலை கீழாக நான் கூறியதை மாற்றிக் கொள்ளலாம்.





(பிற்பகல் 5-30)

இந்த மூன்றுக்கும் அப்பாற்பட்ட நான்காவது அயிட்டமாக இன்றைக்கு காஷ்மீர் காட்சியளிக்கிறது. ஐந்தாவது ஒன்றை நான் சொல்வேன். அது சிலருக்கு ஆச்சரியமாகக்கூட இருக்கலாம். சிக்கிம் இன்றைக்கு இந்த தேசத்தின் பகுதி. சிக்கிமுக்கு இன்றைக்கு காஷ்மீருக்கு உள்ள அதிகாரத்தைவிட கூடுதல் அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறது. அது ஐந்தாவது பகுதி என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். நாம் கேட்கக்கூடிய மாநில சுயாட்சி சிக்கிம் நாட்டிற்குள்ள அதிகாரத்தின் அடிப்படையிலே கொடுக்க வேண்டும் என்பது. சிக்கிமிலே நான் சொன்ன நான்கு அதிகாரங்களோடு மட்டும்தான் இந்திய அரசு செயல்படுகிறது. மற்ற அதிகாரங்கள் பூராவையுமே சிக்கிமே வைத்துக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம். அந்த அடிப்படையிலே உள்ள மாநில சுயாட்சிதான் இந்த மாநிலத்திற்கும் கொடுக்கப்பட வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை.

மாண்புமிகு நண்பர் திரு. இராமநாதன் அவர்கள் பேசும்போது, 150 கோடி ரூபாய் வரைக்கும் மத்திய அரசு இந்த மாநிலத்திலிருந்து வரி வசூலிக்கின்றது, அதிலே நமக்கு வரக்கூடிய பங்கு மிக சொற்பமாக இருக்கின்றது என்று குறிப்பிட்டார்கள். நான் ஒரு கேள்வியை மேல் சபையிலே கேட்டேன். "சுமார் 10 ஆண்டுகளுக்கு நம் மாநிலத்திலிருந்து மத்திய அரசின் சார்பில் வசூலிக்கக்கூடிய வரி எவ்வளவு? இப்படி வசூலிக்கப்படும் மொத்தத் தொகையிலே எவ்வளவு தொகை நம் மாநிலத்தில் செலவிடப்படுகின்றது?" என்று கேட்டேன். அந்தக் கேள்வி அங்கீகரிக்கப்படவில்லை. அந்தக் கேள்வி பாராளுமன்றத்தில் கேட்கப்பட வேண்டிய கேள்வி என்று எழுதி எனக்குத் திருப்பி அனுப்பி விட்டார்கள். நம் மாநிலத்தில் மத்திய அரசின் சார்பில் வசூலிக்கப்படும் மொத்த வரி எவ்வளவு என்பது எனக்குத் தெரியாமலேயே இவ்வளவு காலம் இருந்தது. நான் எல்லோரையும் கேட்டுக்கொண்டிருந்தேன். யாரும் சொல்லவில்லை. இன்றைக்கு நண்பர் திரு. இராமநாதன் சொல்லும்போது ஆச்சரியப்பட்டேன். அவர் எங்கிருந்து இந்தத் தகவலை வாங்கினார் என்பதை நான் அறிந்துகொள்ள முடியவில்லை. எப்படியோ இருக்கட்டும். அவர்கள் 150 கோடி என்று சொன்னதை என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. அது 500 கோடிக்கு மேல் இருக்கும் என்று நினைக்கிறேன். இன்னும் அதிகமாக இருக்கும். பீடிக்கு வரி ஒரு பாக்டரி மட்டும் ஒரு வருடத்திற்கு மூன்று கோடி ரூபாய் கொடுக்கக் கூடிய நிலை இந்த மாநிலத்தில் இருக்கிறது. நான் பீடி வியாபாரி. அதனால் அந்தப் புள்ளி விபரம் எனக்கு சரியாகத் தெரியும். அந்த அளவுக்கு வரி உயர்வு மட்டும் இருக்கிறது. அதற்கு முன்பு பீடிக்கு வரி உண்டு. அது அப்படியே இருக்கிறது. வரி உயர்த்தப்பட்ட காரணத்தால், ஒரு பீடி பாக்டரி 3 கோடிக்கு மேல் வரி கொடுக்கக்கூடிய நிலை. இப்படி எல்லாம் வசூலிக்கின்றார்கள். எல்லாம் 150 கோடி என்பது நிச்சயமாக உண்மையாக இருக்க முடியாது. ரூ. 500 கோடிக்கு மேல் அவர்கள் வசூலிக்கிறார்கள். அவர்கள் திருப்பிச் செலவிடுவது 50 கோடி ரூபாய்கூட இருக்காது என்று நான் நினைக்கிறேன். இதற்கு ஒரு வழி கண்டுபிடிக்க வேண்டும். அவர்கள் நம் மாநிலத்தில் வரி வசூலிக்கவே கூடாது. அவர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டுமென்றால், நாம் வரி வசூலித்து அதிலே ஒரு சத விகிதம் மத்திய அரசிற்குச் செலுத்த வேண்டும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அறிக்கையிலே ஒரு திட்டத்தைப் பார்த்து நான் ரொம்பவும் மகிழ்கிறேன். தூத்துக்குடியிலே ஒரு புதிய உரத் தொழிற்சாலையை 90 கோடி ரூபாய் செலவில் துவக்கப்போவதாக நான் படித்தேன். பஞ்சாப் மாநிலத்திற்கு நான் சென்றபோது, பக்ரா நங்கலிலே ஒரு உரத் தொழிற்சாலையைப் பார்த்தேன். ஆசியாவிலே ஒரு பெரிய தொழிற்சாலை இதுதான் என்று சொன்னார்கள். ஆனால் தூத்துக்குடி தொழிற்சாலை அந்தத் தொழிற்சாலையை விட பெரியது, உயர்ந்தது என்று படிக்கும் போது, உண்மையிலேயே அதைச் சாதித்த நம்முடைய முதல்வர் அவர்களை உளமாரப் பாராட்டாமல் என்னால் இருக்க முடியவில்லை. மற்றுமொன்று. இந்த லெவியைப் பொறுத்தமட்டில் முஸ்லீம் லீக்கைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேரவையிலும் குறைகூறிப் பேசியதை நான் நினைவுபடுத்துகிறேன். முஸ்லீம் லீக்கைச் சார்ந்தவர்கள் அரசாங்கம் எடுக்கும் ஒரு நடவடிக்கையைக் குறை கூறுகின்றார்கள் என்றால், நியாயத்தின் அடிப்படையில்தான் அவர்கள் பேசுவார்கள் என்பதை இந்த அரசு கவனத்தில் வைத்து அதைப் பரிசீலிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறேன். ஒரு லெவியின் சீட்டைப் பார்த்தேன். $2\frac{1}{4}$ எக்கர் நிலம், அதிலே விளையக்கூடிய நெல் 40 மூட்டை. அதில் 19 மூட்டை லெவி. பாதிக்குப் பாதி கேட்கிறார்கள். என்னிடத்தில் அந்தக் காகிதமே இருக்கிறது. திரு. பக்கர் ஒரு சீட்டைக் காட்டினார். $3\frac{1}{4}$ எக்கர் நிலத்திற்கு 36 மூட்டை லெவி. விளைவது 60 மூட்டைதான்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நபிகள் நாயகமே பொய் சொல்லலாம் என்று சொல்லியிருப்பது திரு. வகாப்புக்குத் தெரியுமா? சண்டை போட்டுக் கொண்டிருக்கிற போது சமாதானப்படுத்தவும், மனைவியை சமாதானப்படுத்தவும், போர்க்களத்திலே பின்னடைகிற வீரர்களை உற்சாகப்படுத்தவும் இப்படி மூன்று பேர்களிடத்திலேயும் பொய் சொல்லலாம் என்று நபிகள் நாயகம் சொல்லி இருக்கிறார்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவர் அவர்களே, நான் சொல்வதை நிரூபிக்க முடியும். இந்த லெவி மிகமிக அதிகம். இதைக் குறைக்க வேண்டும். இதைப் பரிசீலனை செய்ய வேண்டும். அத்துடன் லெவிக்குக் கொடுக்கப்படக் கூடிய ஒரு மூட்டைக்கு 57 ரூபாய் கொடுக்கிறார்கள். அதே சமயத்தில் ஓப்பன் மார்க்கெட்டிலே நெல் 120 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. பாதிக்கும் குறைவான விலை லெவிக்குக் கொடுத்தால், எந்த விவசாயி, எந்த வியாபாரி மனம் உவந்து கொடுப்பான்? இந்த லெவியின் காரணமாக விவசாயிகளிடத்திலும் இந்த அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர். நிலச்சுவான்தார்களிடத்திலும் இந்த அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர். ஒன்று லெவியினுடைய கொள்முதல் விலையை உயர்த்த நமக்கு அதிகாரமில்லை, மத்திய அரசு தடையாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. நான் அதை ஒப்புக் கொள்கிறேன். ஓப்பன் மார்க்கெட் விலை ரூபாய் 120. எனவே அதையாவது நாம் கட்டுப் படுத்த வேண்டும். 70 ரூபாய்க்குத்தான் விற்க வேண்டும். அதற்கு மேல் விற்றால், மீசாவிலே பிடித்து நான்கு பேரை உள்ளே வையுங்கள். யார் கூடுதல் விலை விற்கிறார்கள் என்று பார்ப்போம். இப்படி ஓப்பன் மார்க்கெட் விலையைக் கட்டுப்படுத்த நடவடிக்கையாவது எடுத்து, இதைக் கட்டுப்படுத்த வேண்டும். அத்துடன் ஒரு வருஷத்திற்கான தேவையை





ஒவ்வொருவரும் வைத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும். லெவி என்பதற்கு உபரி தானியத்தை வாங்குவது என்று முன்பு சொல்லப்பட்டது. ஒரு குடும்பத்தில் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று சர்க்கரை கார்டு முதலியவற்றில் கணக்கு இருக்கிறது. அந்த அடிப்படையில் ஒருவருக்கு எவ்வளவு வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லலாம். ஒருவருக்கு 10 எக்கர் இருக்கலாம். இன்னொருவரிடத்தில் ஒரு எக்கர் இருக்கலாம். யாராக இருந்தாலும் அவர் குடும்பம் அவர் விவசாயியாக இருந்தாலும், குத்தகைதாரராக இருந்தாலும் அவருக்கு எவ்வளவு நெல் வேண்டுமோ, அதைக் கொடுத்துவிட்டு மிஞ்சியதை அரசாங்கமே எடுத்துக் கொள்ளட்டும். அதிலே நியாயம் இருக்கும். பதினைந்து எக்கரா வைத்திருப்பவர்கள் ஆறுமாத ஸ்டாக்குக்கு மேல் வைத்துக்கொள்ளக்கூடாது என்றிருக்கும் சட்டத்தில் நியாயமில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உருது பேசக்கூடிய முஸ்லீம்களை அரசாங்கம் பிற்பட்டோர் என்று அறிவித்தது. முஸ்லீம்கள் 30 வருஷ காலமாகக் கேட்டுக்கொண்டிருந்த அந்தக் கோரிக்கையை நிறைவேற்றியமைக்காக இஸ்லாமிய சமுதாயத்தின் சார்பிலே பல தடவை நன்றி சொல்லியிருந்தோம். ஆனால் இது நடைமுறையிலே நடத்தப்படவில்லை என்ற குறையை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். தாசில்தார்களிடம் சர்டிபிகேட் கேட்டால் கொடுப்பதில்லை. இதை நான்கு ஐந்து தடவை சபையிலேயே பேசி விட்டேன். அதற்குப் பரிகாரமில்லை. அரசு கொடுத்த அதிகாரத்தின்படி சர்டிபிகேட்டுகள் மறுக்கிறார்கள், கீழ் அதிகாரிகள். அவர்களுக்கு நீங்கள் சொல்லி அந்த சர்டிபிகேட் கொடுக்கச் செய்யுங்கள் என்று பல சங்கங்கள் சார்பாக பல தீர்மானங்கள் போட்டனுப்பியும் அரசு கவனிப்பதில்லை.

(பிற்பகல் 5-40)

இப்படி உருது பேசும் முஸ்லீம்களுக்கான சான்றிதழ்களை, சர்டிஃபிகேட்டுகளைக் கொடுக்க மறுக்கும் அதிகாரிகளைத் தண்டிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்றைச் சொல்லி முடித்துக்கொள்ளுகிறேன், திருச்சி நகரிலே இரண்டு முஸ்லீம் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. ஒன்று ஆண்களுக்காகவும், மற்றொன்று பெண்களுக்காகவும் இருக்கின்றது. உருதுப் பள்ளிக்கூடங்கள் அவை. இந்த இரண்டு பள்ளிக்கூடங்களையும் கல்வித் துறை அதிகாரிகள் சரிவரக் கவனிப்பதே இல்லை. அங்கே மிகவும் மோசமான ஆசிரியர்கள்தான் இருக்கின்றார்கள். அந்தப் பள்ளிக்கூடங்களின் தரம் நாளுக்கு நாள் மிகமிக மோசமாகிக்கொண்டே இருக்கின்றது. எப்படி எப்படிப் பார்த்தாலும், அதைச் சீர்திருத்த முடியாத அளவிற்குக் கீழே போய்க்கொண்டே இருக்கின்றன. வரக்கூடிய அதிகாரிகள் அதை மிக ஏளனமாகவே பார்த்துக்கொண்டு போய்விடுகின்றார்கள். அவை மூடி விடக்கூடிய நிலைமைக்கு வந்துவிட்டன. இவற்றைச் சரியாக உருவாக்க வேண்டுமானால், இந்த இரண்டு முஸ்லீம் பள்ளிக்கூடங்களையும் முஸ்லீம்களிடத்திலேயே மீண்டும் திருப்பித் தரவேண்டும். இந்த இரண்டு பள்ளிக்கூடங்களையும் "வக்ஃப்" போர்டிடம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை நிறைவு செய்துகொள்ளுகிறேன்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, நமது பாராட்டுதலுக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் அளித்திருக்கின்ற நிதி நிலை அறிக்கையின்மீது பேசுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

சாதாரணமாக மிகக் கொடுமையான வறட்சியும், நிதி நெருக்கடியும், விலைவாசி ஏற்றமும், பற்றாக்குறை நிதியமைப்பும் ஏற்பட்டுள்ள இந்த மிக்க நெருக்கடியான நேரத்திலே ஒரு நிலையான நிதிநிலைத் திட்டத்தைத் தயாரிப்பது என்பது அவ்வளவு எளிதன்று. ஆனாலும் நமது முதலமைச்சர் அவர்கள் உள்ளதை வைத்துக்கொண்டே மிகவும் அருமையாக இதைச் செய்திருக்கின்றார்கள்.

குறிப்பாக இந்த நிதிநிலை திட்டத்தில் நமது கவனத்திற்குரிய இரண்டு பதிய தலைப்புக்களைச் சேர்த்திருக்கின்றார்கள் என்பது வரவேற்கத்தக்கது. இதுவரையில் இல்லாத சமூக நலத் துறையும் அடுத்து, தமிழ் வளர்ச்சிக்கு என்று ஒரு தலைப்பும் கொடுக்கப்பட்டிருக்கின்றதைப் பார்க்கிறோம். இந்தத் தலைப்புகளிலே இதற்கு முன்பே செலவினங்கள் பல ஏற்பட்டிருந்தாலும் இப்போது நமது கவனத்தை ஈர்க்கும் அளவிற்கு இவற்றுக்குத் தனித் தன்மை அளித்திருப்பது மிக்க மகிழ்ச்சியினைத் தருகின்றது.

பொதுவாக இந்திய தேசம் ஒன்று என்று நாம் கருதுகிறோம். இந்திய தேசம் ஒரு வலிமை மிக்க நாடாக இருக்க வேண்டும் என்பதிலே யாருக்கும் இரண்டுவித அபிப்பிராயங்கள் இருக்க முடியாது. ஆனாலும் நாட்டிலே நடைபெறும் பல்வேறு பிரச்சினைகளை வைத்துப் பார்க்கும்போது இந்திய ஒருமைப்பாடு என்பது பெரும் இன்னலுக்குள்ளாகிவிடுமோ என்ற கவலை ஏற்படுகின்றது. காவிரி நீர் பிரச்சனை, வறட்சி நிவாரணப் பணிகள் இவற்றுக்கு மத்திய அரசு கொடுக்கும் உதவி முறைகளைப் பார்க்கும் போது, இந்திய ஒருமைப்பாடு என்பது நம்மால் கட்டிக் காப்பாற்ற முடியாத அளவிற்கு, கவலைக்குரியதொன்றாகப் போய்விடுமோ என்ற கவலைதான் ஏற்படுகின்றது. இதை நாடு தழுவிய அரசியல் சிந்தனையாளர்கள் சற்று செம்மையாக எண்ணிப்பார்க்க வேண்டும் என்று பரிவோடு அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நிதிநிலையறிக்கையினில் விலைவாசிபற்றிக் குறிப்பிட்ட நமது முதல்வர் அவர்கள் உணர்ச்சிப் பெருக்கோடு சொல்லியிருக்கின்றார்கள், "ஏதோ பட்டம் பறப்பதைப்போல விலைவாசி உயர உயரப் போய்க் கொண்டே இருக்கின்றது என்ற கவலை தெரிவித்திருக்கின்றார்கள். முறையான வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளவர்கள் தங்கள் ஊதியத்தைப் படிப்படியாக உயர்த்திக்கொண்டே போகின்றார்கள். ஆனால் கிராமங்களிலுள்ள மிகமிகச் சாமானிய மக்கள், விவசாயத் தொழிலாளர்கள் தங்கள் ஊதியத்தை அந்த அளவிற்கு விகிதாச்சாரமாக உயர்த்திக் கொண்டிருக்கின்றார்களா என்றால், இல்லை. அதனால்தான் நகரங்களில் இன்றைக்குப் பார்த்தால் கூட பஞ்சம், வறட்சி வந்திருப்பதாகச் சொல்ல முடியாத அளவிற்கு இருக்கின்றது. சென்னையிலோ, மதுரையிலோ உலா வந்தால் அங்குள்ள மக்கள் வறட்சியாலோ பஞ்சத்தாலோ பாதிக்கப்பட்டிருப்பதாகச் சொல்ல முடியவில்லை. ஆனால் கிராமப் புறங்களிலே மக்கள் படும் அவலம் மிகுதியாக இருக்கின்றது. இதை



நமது முதலமைச்சர் அவர்கள் மிகக் கவனமாகக் குறிப்பெடுத்துக்கொண்டு ஏறிவரும் விலைவாசியை எட்டிப்பிடிக்க முடியாத அளவிற்கு கிராமப்புற மக்கள் அல்லலுறுகின்றார்கள் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். இந்தக் குறிப்புகளை நாம் கோடிட்டு வைத்துக்கொண்டு, நமது அரசின் எதிர் காலச் செயல்முறைகள், நடைமுறைகள் யாவும் இந்த நலிவுகளைப் போக்கக்கூடியவையாக அமைய வேண்டும். இதை நமது நண்பர் திரு இராமநாதன் அவர்கள் மிக அழகாக நினைவூட்டிப் பேசினார். ஏழை மக்களுக்கென பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயலாற்றினாலும் நடைமுறையில் வசதி படைத்தவர்களே தங்கள் வாய்ப்புகளைப் பெருக்கிக்கொள்கின்றார்கள். ஆனால் கிராமப் புறங்களிலே வாழும் மக்கள் நாளுக்கு நாள் நலிவுற்றுப் போகின்றார்கள். இதை நமது முதலமைச்சர் அவர்கள் நல்ல வகையில் உணர்ந்திருக்கின்றார்கள் என்பதை அவரது வரவு-செலவுத் திட்டம் மிக அழகாக எடுத்துக்காட்டியிருக்கின்றது.

அவருடைய இந்த உணர்வு இந்த நிதிநிலை அறிக்கையோடு நின்று விடாமல் இன்னும் என்னென்ன வகையிலேயெல்லாம் கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தலாம் என்ற முறையில், அவருடைய இந்த உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் செயலமையவேண்டுமென்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன். விலைவாசி உயர்வுபற்றி பலரும் தங்கள் உணர்வினை வெளிப்படுத்தும் வகையில் பேசினார்கள். இப்படி மக்கள் நெருங்க முடியாத அளவிற்கு விலைவாசி உயர்ந்து விட்டதே, இதற்கு என்ன பரிகாரம் என்பதைக் காண உடனடியாக நமது அரசு இதற்கென தனியாக ஆய்வு ஒன்றை மேற்கொண்டு, இதற்குத் தீர்வு காண வேண்டுமென்று மிக்க அன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதுபோல அரிசன மக்களுக்காக குடியிருப்புகளை ஏற்படுத்தும் பணி மிக விரைவாக வளர்ந்துவருகின்றது. நாட்டிலே லட்சக்கணக்கான வீடுகளை இவர்களுக்காகவும் வசதியற்ற ஏழை மக்களுக்கும் உருவாக்கிவரும் இந்த நேரத்திலே, குடியிருப்பு மனை பெறாதவர்களே நாட்டிலே இல்லை என்று சொல்லத்தக்க அளவிற்கு குடியிருப்பு மனைகளை வீடற்ற ஏழை மக்களுக்குக் கொடுப்பதும், வீடுகட்டித்தரும் திருப்பணியும் வளர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மிகக் கொடூரமான, கொடுமையான வறட்சித் துன்பம் நமக்கு வந்திருக்கின்றது. இதைச் சமாளிப்பதற்காக இந்த அரசு துணிவாகப் பல காரியங்களை மேற்கொண்டிருப்பது பாராட்டத்தக்கதாகும். இப்படி வறட்சிப் பணிகளென பல்வேறு ஏரிகுளங்களைச் செப்பனிடும் இந்த நேரத்திலே, நமது முதலமைச்சர் மேற்கொள்ள வேண்டிய பணி ஒன்றினை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவது கடமையெனக் கருதி இதைச் சொல்லுகிறேன். திருச்சி மாவட்டம் அரியலூர் வட்டத்தில் கண்டராதித்தன் ஏரி— 421 ஏக்கருக்கு மேலே வளப்படுத்தக்கூடிய ஏரி— இன்று தூர்ந்துபோன நிலையில் இருக்கின்றது. இந்த வறட்சி நிவாரணப் பணியோடு இந்தக் கண்டராதித்தன் ஏரியைச் செப்பனிடும் பணியையும் மேற்கொண்டால், கண்டராதித்த சோழனின் பெயரும் நிலை பெறும், அதன் மூலம் இரண்டு மூன்று கிராமங்களும் இந்தக் கொடுமையான வறட்சியின் பிடியிலிருந்து விடுபடும். எனவே இதை மேற்கொள்ள வேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கிராமப் புறங்களிலே இப்படிப்பட்ட வறட்சி நிவாரணப்பணிகளை மேற்கொள்ளும்போது, நான் நமது ஆளுநர் அவர்களுடைய உரையின்மீதும் பேசியபோது சொன்னேன், வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதியிலே மண் காய்ந்துள்ள நிலையில் காய்ந்த மண்ணை வெட்டுவது சுலபமல்ல. ஆனால் அண்மைக்காலத்திலே கொஞ்சம் மழை பெய்திருக்கின்றது. வெட்டவரலாம். ஆனால் இப்படி உலர்ந்து போய் வெட்டுவதற்குக் கடுமையாக உள்ள இடங்களிலே, பொதுப் பணித் துறையோடு கலந்தாலோசித்து, அதற்கான கூலியினைச் சற்றுக் கூட்டித் தர முடியுமா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு வாழ்வதற்கான கூலியாவது கிடைக்கும். நமது நாட்டிலே சாதாரணமாக மழை பொய்ப்பது என்பது நடவாத ஒன்று. ஆனாலும் நடந்திருக்கின்றது இப்போது. இப்படிப்பட்ட நேரத்திலே,வான்பொய்க்கும் இந்த நேரங்களிலே, தமிழ் நாட்டிலே எல்லோரும் சேர்ந்து பிரார்த்தனை செய்ய வேண்டுமென்றும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட நேரங்களிலே, பிரார்த்தனை செய்யும் இடங்களிலே மழை பெய்திருப்பதைப் பார்த்திருக்கிறோம். பிரார்த்தனை செய்தால்தான் மழை பெய்யும் என்ற அளவிற்கு கடவுள் அவ்வளவு சுயநலக்காரரா என்று கூடக் கேட்கலாம். நாம் செய்யும் பிரார்த்தனை கடவுளுக்குச் செய்யும் பிராத்தனை அல்ல. மனிதன் பிரார்த்தனை செய்யும்போது அவனிடமிருந்து உஷ்ணக்காற்று நீங்கி குளிர்ந்த காற்று வெளிப்படுகிறது. அது மழை பெய்ய உதவுகின்றது. மனிதன் பிரார்த்தனை செய்யும்போது தன்னைத் திருத்திக் கொண்டு தன்னைச் சுற்றிலும் அன்புமயமான உணர்வுகளை வெளிப்படுத்துகிறான். அதன் மூலம் குளிர்ந்த காற்றினை வெளிப்படுத்தி, இதன் மூலம் மழை பெய்கின்றது. வரும் 23-ம் தேதியன்று தமிழ் நாடு முழுவதும் இப்படிப்பட்ட பிரார்த்தனைக் கூட்டங்களை நடத்த வேண்டும் என்று தெய்வீகப் பேரவையின் மூலம் வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். பேரூரில் நடைபெற்ற அப்படிப்பட்ட பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அன்று பெருமழை பெய்து சிறுவாணி ஆற்றிலும் பெருவெள்ளம் வந்ததைப் பற்றிப் பத்திரிகையின் வாயிலாக அறிந்தேன். மகிழ்ச்சிகரமான செய்தி.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர் :</u> சென்னையில் மழை கிடையாது. தண்ணீரே இல்லை.

<u>தவத்திரு குன்றக்குடி அடிகளார் :</u> சென்னையிலும் வரும், 23-ம் தேதியன்று, அன்றைக்குப் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற இருக்கிறது. மாண்புமிகு தலைவர் அவர்களும் விருப்பம் இருந்தால், வந்து கலந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுகொள்ளுகிறேன்.

எனவே நான் மீண்டும் நினைவூட்டவிரும்புவது, அரசியலில் மாச்சரியங்கள் இருந்தாலும்கூட, அவற்றை சற்று ஒதுக்கிவிட்டு நல்ல மனத்தோடு அனைவரும் செயலாற்ற வேண்டும். காழ்ப்புணர்ச்சிகளைக் கைக்கொண்டிருப்பதனால் நல்ல பல திட்டங்கள் பாதிக்கப்படுகின்றன. இதனால் சமுதாய நலன்களுக்காகச் செயல்படுத்தும் திட்டங்கள் பாதிக்கப்பட்டு நின்றுவிடுகின்றதைப் பார்க்கிறோம்.





(பிற்பகல் 5–50)

எனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமநாதன் அவர்கள் குறிப்பிட்டது போல, எல்லோருமாக நம்முடைய சமுதாயத்தின், குறிப்பாக தமிழ் சமுதாயத்தினுடைய மேம்பாட்டிற்கு அடிமட்டத்தில் இருக்கின்ற மக்களுடைய வாழ்க்கைத் திட்டங்களுக்கு, கட்சி வேறுபாடுகளைக் கடந்து, கட்சி மாச்சரியங்களைக் கடந்து கைகொடுத்து உதவி, இந்தத் திட்டங்கள் நிறைவேறும்படியாக உதவி செய்யவேண்டும். அப்படிச் செய்கின்றபோது நல்லமுறையில் மக்களுடைய வளம் வளரும்.

அடுத்து, காடுகளைப் பொறுத்த வரையில், நாம் இன்னும் அதிகக் காடுகளை வளர்த்து, அதனால் காற்று மண்டலத்தை குளிர்வுடையதாக ஆக்கி, அதிக மழையைப் பெய்விக்கவேண்டும். தன்னிச்சையாக காடுகளில் மாடுகள் அதிக அளவில் மேய்வதைப் பற்றி வனத்துறையிலிருந்து அரசுக்குப் பரிந்துரைகள் வந்திருப்பதாகத் தெரிகிறது. காடுகள் வளர்ப்புக்கு தன்னிச்சையாக மாடுகள் மேய்ப்பும், வெள்ளாடுகள் வளர்ப்புய பெரிய தடையாக இருக்கிறது. அவைகளை அகற்ற வேண்டுமென்று அரசுக்குப் பரிந்துரைகள் வனத்துறையால் அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அரசு அதில் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கல்வித்துறையிலும் தக்க மாற்றங்கள் வருகிற ஆண்டில் ஏற்படும் போல் தோன்றுகிறது. கல்வி அமைச்சர் அவர்கள் இன்றைக்குக் காலையில்கூட தொழில் கல்வியைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். நம்முடைய நாட்டில் நிறைய பேர் படித்துக்கொண்டிருக்கிறார்கள். கலைக்கல்லூரிகளாக நிறைய தொடங்கி நிறைய இளைஞர்கள் இன்றைய தினம் வெளியே வந்துகொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் தொழில் கல்வியைப் பற்றிச் சிந்திப்பது தவிர்க்க முடியாத பணி. அதுதான் அவர்களுடைய எதிர் காலத்திற்கு நல்லது. 8-வது வகுப்பிலிருந்து தொழிற்கல்வியைத் தொடங்கி புகுமுக வகுப்புக்கு உள்ளாக டிப்ளோமா கோர்ஸ் என்று சொல்வதையும், சர்டிபிகேட் கோர்ஸ் என்பதையும் முடித்து அவர்கள் மேஸ்திரி, சூப்பர்வைசர்களாக மாறுகிற ஒரு நிலைக்கு அவர்களை அழைத்துச் செல்லும் விதத்தில் அந்த கல்வி அமைப்பை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நம் நாட்டில் நம்முடைய மொழி வளர வேண்டும். தமிழ் வளர்ச்சித் துறை இன்னும் விரைவாக நடத்தப்பட வேண்டும். நம்முடைய அரசு குறிப்பாக அறிஞர் அண்ணா அவர்கள் அமைத்த அரசு, அதற்குப் பிறகு கலைஞர் அவர்களின் தலைமையில் அமைந்திருக்கின்ற இந்த அரசு, தாய் மொழியின் வளர்ச்சியை, தமிழ் மொழி மரபுகளை, தமிழ் நாட்டு மரபுகளைக் காப்பதையே மிகப் பெரிய பணியாக மேற்கொண்டிருக்கிறது. இந்த அடிப்படையிலே அண்மைக்காலத்தில் சில செய்திகள் கிடைத்திருக்கின்றன. தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டவர்கள் கூட தமிழிலே தேர்வு எழுதாமல் ஆங்கிலத்திலே தேர்வு எழுதுகிறார்கள். அவர்களுக்கு உரிய பணத்தைத் திருப்பித் தரவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது என்பது போன்ற செய்திகள் கிடைக்கின்றன. தமிழ் பயிற்சி மொழி என்பது நமது அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்பே

ஏற்றுக்கொண்ட கொள்கை. எனவே, தமிழ் பயிற்சி மொழியில் நம்முடைய அரசு உறுதியாக இருந்து, அதை முறையாக வளர்த்து, தமிழை பழங்கால இலக்கியச் செறிவோடு மட்டுமல்லாமல் அதை புதிய இலக்கியங்களை, புதிய அறிவியல் கலைகளைப் பெற்று வளர்கிற புது மொழியாக வளர்க்கவேண்டும். அந்தத் துறையில் நம்முடைய அரசு அதிகத் தொகை மேலும் ஒதுக்கி அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

சட்டக் கல்லூரி மாணவர்கள் நம்முடைய கோட்டையை தேடி வந்து தமிழில் தேர்வு எழுத வேண்டுமென்று கேட்கிறார்கள். நம்முடைய அரசு தமிழை வளர்ப்பதற்காகவே ஏற்பட்டிருக்கிற போது, மாணவர்கள் தமிழிலே தேர்வு எழுத வேண்டுமென்று உரிமை கேட்கிற அளவுக்கு எங்கே மெத்தனம் இருக்கிறது என்று நமக்குத் தெரியவில்லை. அது ஒருகால் அரசினிடத்திலே இருக்குமானால், அரசு தன்னை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். அல்லது பல்கலைக் கழகத்தில் இருக்குமானால், பல்கலைக் கழகத்தைத் தூண்டி இந்தத் துறையை வளர்க்கவேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய அறநிலையத் துறையைப் பொறுத்த வரையில், அது நல்ல முறையில் வளர்ந்துகொண்டிருக்கிறது. நிறைய திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நேற்று முன்தினம் சட்ட சபையில் கூட பக்திமான் யார் என்பதைப் பற்றி சர்ச்சை செய்திருக்கிறார்கள். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதுதான் அண்ணாவின் கொள்கை, அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளுகிறோம் என்று நம்முடைய மாண்புமிகு திரு. ராஜாங்கம் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு நன்றி கூறி, பாராட்டுக்கூறி, இந்த ஒரே குலம், ஒருவனே தேவன் என்பதை என்றைக்கு நாம் முறைப்படுத்துவது என்பதுதான் நமக்கு இருக்கிற பிரச்சினை. அந்த ஒரு குலம் எது, ஒரு தேவன், எது என்பதை நாம் இன்றைக்கு முறைப் படுத்துவது எப்படி, அதை யார் முறைப்படுத்துவது? நாம் ஏதாவது சீர்திருத்தம் செய்யப் புகுந்தால், நம் நாட்டில் இருக்கிற சமயத் துறையைச் சார்ந்த சிலர் உயர்நீதிமன்றத்திற்குப் போகிறார்கள். அர்ச்சகர்கள் சம்பளம் முடக்கப்பட்டிருக்கிறது. இந்த மாதிரிச் சூழ்நிலையில் நம்முடைய திருக்கோயில்களைப் பற்றிச் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று சொன்னால், அதற்கு ஆதாரபூர்வமான கருத்துக்களை முன்மொழிந்து பரிந்துரை செய்கின்ற பேரவை போன்ற வலிவு சார்ந்த அமைப்புக்களை சட்ட பூர்வமான அமைப்புக்களாக ஆக்கி, அவைகள் இந்தச் சீர்திருத்தத்தைப் பரிந்துரை செய்யும்படியாகச் செய்ய வேண்டும். நிறைய கோயில்கள் வளர்ந்தாலும் கூட, வருமானம் உயர்ந்தாலும் கூட, இன்றைக்கு இந்து மதத்திற்கு இன்னும் சிறந்த பாதுகாப்பு ஏற்படவில்லை. சாதாரணமாக மதமாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே, கோயில்கள் மட்டும் வளர்ந்தால் போதாது. கோயில்களைச் சேர்ந்த குடிமக்கள் வளர வேண்டும். அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்கள் மத மாற்றங்களுக்கு ஆளாகாமல் தடுக்கப்பட வேண்டும். இவைகளையெல்லாம் நாம் முறையாகச் செய்து, கோயிலைத் தழுவிய குடிகளும், குடிகளைத் தழுவிய கோயில்களும் என்ற பழைய





வாழ்க்கை முறை அமைப்பை, சோழர் காலத்துத் திருக்கோயில் அமைப்பு முறைகளை நாம் மீண்டும் உருவாக்கி, அந்த வகையில் நம்முடைய சமுதாய அமைப்பு முறையை எப்படி உருவாக்கலாம், சீர்திருத்தலாம் என்பதை ஆராய்ந்து அறிந்து, அரசுக்குப் பரிந்துரை செய்ய தனியாக சமுதாய சார்பற்ற அமைப்பு என்ற பெயரில் வழக்கு மன்றங்களுக்குப் போகாமல், சமுதாய சார்புடையவர்களைக் கொண்டு ஒரு நல்ல பரிந்துரை செய்து அந்த வகையிலே நம்முடைய சமுதாயத்தையும், நம்முடைய மரபுகளையும் காப்பாற்ற வழிவகை காண வேண்டும். அந்த வகையில் நம்முடைய அரசு போதிய கவனம் எடுத்துக்கொண்டு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் வளர்ச்சித் துறையில் அகரமுதல அகராதி செய்வதற்காக பாவாணர் அவர்களைத் தலைமையாக்கிக் கொண்டு ஒரு வேலை தொடங்கப்பட்டிருக்கிறது. அது மனமாரப் பாராட்டுதலுக்குரியது. அது நீண்ட காலமாக வரலாற்றிலே பசுமையாக இருக்கக்கூடிய பணி, அதை நான் நெஞ்சாரப் பாராட்டுகிறேன். அதுபோன்ற புதுமையும், பொலிவும் தருகின்ற தலைசிறந்த பணிகளை அரசும் தொடர்ந்து செய்கிறது. அதற்கு நம்முடைய நன்றியையும் பாராட்டுதல்களையும் கூறிக்கொண்டு, குறிப்பாக நிதிநிலை அறிக்கை அடிமட்டத்திலே இருக்கிற மனிதனைப்பற்றிக் கவலைப் பட்டிருக்கிறது, அந்தக் கவலையைக் காரியங்களாகவும், செயல் வடிவங்களாகவும் மாற்ற நம் அனைவருடைய ஒத்துழைப்பும், இந்திய அரசினுடைய ஒத்துழைப்பும், ஆண்டவனுடைய ஒத்துழைப்பும் தேவை என்பதைக் கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் 1975–76 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நான் பலமுறை படித்துப் பார்த்தேன். அதில் பல குறைபாடுகள் இருக்கின்றன, பல நிறைபாடுகளும் இருக்கின்றன. இந்த அறிக்கையைப் பார்க்கும்போது, நமது முதலமைச்சர் அவர்கள் பெரும் புலமையுடையவர்கள், அறிவுடைமை படைத்துள்ளவர்கள், மிக அழகான முறையில் இப்பணியைச் செய்திருக்கின்றார்கள் என்று சொல்ல முடியுமேயொழிய, அவர்களைக் குறைத்துப்பார்ப்பதற்கில்லை. புலமைத் தன்மை என்ற முறையிலே தான் இந்த நிதி நிலை அறிக்கை நன்றாக அமைக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக எனக்கு ஏற்பட்டிருக்கும் துன்பங்கள் அத்தனையையும் உங்கள் முன்பு நான் எடுத்து வைக்க முன்வருகிறேன். ஒரு பஞ்சாயத்து யூனியன் என்று எடுத்துக்கொண்டால்—நான் ஒரு பஞ்சாயத்து யூனியன் சேர்மென்—அதில் எவ்வளவு இன்னல்கள் ஏற்படுமோ அத்தனையும் ஏற்பட்டு அத்தனைக்கும் பரிகாரம் தேடி மேலிடத்திற்கு அதைத் தெரியப்படுத்துகிறோம். இன்றுவரை எவ்விதப் பரிகாரமும் இல்லை. கீழ் உள்ள அதிகாரிகளோ பல இன்னல்களுக்கு ஆளாகி அவர்கள் கஷ்டப்பட்டு என்னுடைய நியாயத்தை நிலைநாட்ட முடியாதவாறு நடந்து கொள்ளுகிறார்கள். சமீபத்தில் கூட ஒரு வாரத்திற்கு முன்பு எனக்கு ஒரு உத்தரவு டி.ஆர்.டி. யிலிருந்து வந்திருக்கிறது. இராசசிங்கமங்கலம் பஞ்சாயத்து யூனியனிலே உள்ள ஆசிரியர்கள் தங்கள் கோரிக்கையை வைத்து உண்ணாவிரதம் இருந்தார்கள். அதைப்பற்றி நாங்கள்

[திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்] [1975 மார்ச 10

சிந்தனைக்கு எடுத்துக்கொள்ளவில்லை. ஆர்.டி.ஓ. வந்தார்கள். டி.இ.ஓ. வந்தார்கள். மற்றவர்கள் எல்லாம் வந்து பார்த்தார்கள். பார்த்துவிட்டு எந்தவிதமான ஒரு முடிவும் இல்லாமல் போய்விட்டார்கள். பின்பு நான்கு ஐந்து நாட்கள் கழித்து இருந்துவந்த உண்ணாவிரதத்தை அவர்கள் முடித்துக்கொண்டார்கள். அதேபோல தேவகோட்டை பஞ்சாயத்து யூனியனிலே ஆசிரியர்கள், அவர்களுடைய கோரிக்கையை வைத்து இருந்தார்கள். உடனடியாக ஆர்.டி.ஓ. ஒரு சுற்றறிக்கை விட்டார்கள். அந்தந்த யூனியனிலே உள்ள ஆசிரியர்களுக்கு உடனடியாக அறிக்கை அனுப்பி அவர்களுக்கு லீவு கொடுக்கக்கூடாது, லீவு போட்டால் அனுமதிக்கக்கூடாது என்று அறிக்கை விட்டார்கள்.

[பிற்பகல் 6-00]

இதே நிலைமையில் இந்த இராசசிங்கமங்கலம் யூனியனிலே இருந்த ஆசிரியர்களுக்கு என் விட்டிருக்ககூடாது என்று நான் ஆரம்பித்தேன். இதற்கு முன்னாலே இராசசிங்கமங்கலத்திலிருந்து வந்த ஆசிரியர்கள் அறிக்கை இங்கே இருக்கின்றது, தேவகோட்டை ஆசிரியர்கள இப்படிக் கண்டனம் கொடுத்திருக்கின்றார்களே என்று கேட்டேன். இம்மாதிரியுள்ள காரியங்களையெல்லாம் வைத்து, அந்த ஆர். டீ. ஓ., டீ. ஓ. வும் நடந்து கொண்ட முறை தவறு, அவர்கள் தவறாக நடந்து கொண்டார்கள், பஞ்சாயத்து யூனியனில் அவர்கள் செய்த தவறுகளுக்கு மேலதிகாரிகள் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கண்டனத் தீர்மானத்தைப் போட்டோம். அது கலெக்டர் அவர்களிடம், ஆர். டி. ஓ. அவர்களிடம் போயிற்று. அவர்கள் கெஜட் ஆபீசர்கள் மீது கண்டனத தீர்மானம் போடக்கூடாது என்று சொல்லி திருப்பி எங்களுக்கு வந்தது. "நீங்கள் கண்டனத் தீர்மானம் போட்டது சரியல்ல. அப்படிப் போட்டிருந்தால் நீங்கள் அதைத் திருத்திக்கொள்ள வேண்டும், ரிமூவ் பண்ணிக் கொள்ள வேண்டும்" என்று வந்தது. நான் "கவுன்சிலிலே வைத்துத் தீர்மானம போட்டிருக்கிறோம். ஆர்.டி. ஓ. அவர்கள் செய்தது தவறு, அதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன, இந்த மாதிரிச் செய்திருக்கிறார்கள், நியாயம் இல்லாமல் செய்திருக்கின்றார்கள். திருத்த வேண்டியதில்லை" என்று கேட்டுக்கொண்டேன். அப்போது ஆர். டி. ஓ. அவர்கள் கூப்பிட்டு "நீங்கள் சட்டப்படி இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவரக்கூடாது. அந்தத தீர்மானத்தை வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள். தவறாக நடந்து கொண்டவர்கள் பேரிலே டிப்பார்ட்மெண்டிலே நாங்கள் ஆக்ஷன் எடுத்துக்கொள்கிறோம். தீர்மானத்தை வாபஸ் வாங்கிக் கொள்ள ஒப்புக்கொள்ளுங்கள். நாங்கள் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்கிறோம்" என்று சொல்லி உத்தரவு போடுகிறோம் என்று சொன்னார்கள். கவுன்சிலில் வைத்து தீர்மானம் போட்டு, கவுன்சிலுக்கு விரோதமாக நடந்த அதிகாரிகள் மீது டிப்பார்ட்மெண்டிலே நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவார்கள் என்று உத்தரவு போடுவதாகச் சொல்லியிருககிறார்கள். அவர்கள் நம்மிடம் தீர்மானத்தை வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்லுகிறார்கள். "1962-ஆம் ஆண்டிலேயே ஒரு ஜி. ஓ. வந்திருக்கின்றது. அதில் அப்படித் தீர்மானம் போடக் கூடாது என்று உள்ளது. ஆகவே உங்கள் தீர்மானத்தை ரிமூவ் பண்ணிக் கொள்ளுங்கள்" என்று சொல்கின்றார்கள். இனிமேல் கோர்ட்டுக்குப் போவதைத் தவிர வேறு வழியே இல்லை. இனிமேல் அமைச்சர்களை கன்சல்ட் பண்ணிக்கொண்டு போகலாமா என்று இருக்கிறோம்.



1976 மார்ச 10]

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர் :</u> அமைச்சர் அவர்களை முதலில் பார்த்துப் பேசுங்கள்.

<u>திரு. கே. ராஜாராம் :</u> முதலில் அமைச்சர் அவர்களைப் பார்த்துப் பேசிவிட்டு பினபு கோாட்டுக்குப் போக வேண்டும். அதுதான் முறை.

<u>திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் :</u> தலைவரவர்களே, நீதியில்லை, நல்ல நிாவாகம் இலலை. நீதி, நிர்வாகம இரண்டும் இல்லை. இவைகளைப் பாதுகாபபது அவைகளை நிர்வகிக்கின்ற அதிகாரிகளிடம் இருக்கின்றது. அதைத் திறம்பட நியாயமான முறையில் நடக்கவிட வழியில்லை. அதைத் தான் நான் சொல்ல முடியும். சமீபத்திலே என்னுடைய தேவகோட்டைப் பகுதியிலே புளியாலில் ஒரு ஹெட்மென் ஒருவரை அடித்து தூக்குப் போட்டு விட்டுப் போய்விட்டார்கள். அப்போது நான் சென்னையில் இருந்தேன். 10 நாட்களுக்குப் பிறகு நான் ஊருக்குப் போனேன். நடவடிக்கை எடுத்து அந்த அடிபட்டவனை போஸ்ட் மார்ட்டம் பண்ணி புதைத்து விட்டார்கள் என்று சொன்னார்கள். அந்தப் பகுதியில் உள்ளவர்கள், அவரை அடித்து தூக்குப்போட்டுவிட்டதாகத்தான் சொல்கின்றார்கள். அவர்கள் பஞ்சாயத்தாரை வைத்து நாங்கள் புதைத்துவிட்டோம் என்று சொன்னார்கள். நான் வேண்டிய அதிகாரிகள் மூலம் எஸ்.பி.ஐ-ப் பார்த்து அந்தப் பிரேதத்தைப் பழையபடி எடுத்துப் பரிசீலனை செய்யச் சொல்லுங்கள் என்று சொன்னேன். அதன்படி டீ. எம். ஓ. பரிசீலனை பண்ணி 3, 4 மாதங்களுக்கு முன் ரசாயனப் பரிசோதனைக்கு உறுப்புக்கள் எடுக்கப்பட்டு பரிசோதனைக்குப் போயிருக்கின்றன. அது வரவே இல்லை. எங்கே அது என்று கேட்டால் அது வந்துவிடும் என்று சொல்கின்றார்கள். சமீபத்திலே ஒரு 15 நாட்களுக்கு முன்னால் அந்த டி. எம். ஓ. செக்ரட்டேரியட்டுக்கு வந்திருந்தார்கள. எம். எல். ஏ., எம். எல். சி. க்கள் வந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது பரிசீலனை பண்ணியது என்ன ஆயிற்று என்று கேட்டேன். அவர்கள் "என்னை போலீஸ்காரர்கள் வந்து விசாரித்திருக்க வேண்டும். எனக்கு இதில் சந்தேகமில்லை. என்னிடம் போலீஸ்காரர்கள் வந்து கேட்டிருந்தால் நான் ஸ்டேட்மெண்ட் கொடுத்திருப்பேன்" என்று சொன்னார்கள். இதை நான் என் முருகன் அறியச் சொல்கிறேன் ரசாயன பரிசோதனைக்குப் போனதே வந்ததா என்று சர்க்கிள் இன்ஸ்பெக்டரிடம் திருவாடானையில் கேட்டேன். அவர் தூக்குப் போட்டுக்கொண்டு செத்துப் போய்விட்டான் என்று தகவல் வந்து விட்டது என்று சொன்னார்கள். அதற்குப் பின் அதைப் பரிசீலனை செய்து அந்த கேசை "குளோஸ்" பண்ணிவிட்டதாகச் சொன்னார்கள். அப்படித் தகவல் வந்திருக்கின்றது. இந்த நிலைமையிலே கிராமங்களிலே வாழ்கின்ற நாங்கள் எப்படி வாழ்வது? இந்த நிலைமையிலே அதிகாரங்கள் உங்கள் கையிலே வரவேண்டும் என்று சொல்கின்றீர்கள். இப்படியெல்லாம் இருக்கின்ற நிலைமையில் மாநில சுயாட்சி வாங்கிய பின்னர் எங்களையெல்லாம் என்ன செய்வீர்களோ தெரியவில்லை.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> தலைவரவர்களே, மாநில சுயாட்சி வந்தால் ஏதோ கெடுதல் வரும் என்று நினைத்துச் சொல்கிறார்கள். இப்போது இருக்கின்ற அதிகாரத்தால் இவ்வளவு கஷ்டம் என்று சொல்கிறார்கள். 1976-ல் திரு. காமராஜர் அவர்கள் வந்துவிட்டால், மாநில சுயாட்சி வேண்டுமா வேண்டாமா என்பது பற்றிச் சொல்லுங்கள்.

[1975 மார்ச் 10

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் : என்னுடைய சர்ச்சை மாநில சுயாட்சி வேண்டுமா வேண்டாமா என்பதைப் பற்றி அல்ல.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஒரு ஒன்றரை வருட காலம் கழித்தாவது மாநில சுயாட்சி கேட்கலாமா என்று சொல்லுங்கள்.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் : தலைவரவர்களே, நான் இங்கே, அதைப் பற்றி அவ்வளவு தூரம் வாக்குவாதம் பண்ணிப் பேசுவதற்குத் தயாராக இல்லை.

இந்தமாதிரி பல இன்ஸிடெண்டுகள் நடந்து கொண்டிருக்கின்றன. நான் சொல்வதை மனதாரச் சிந்தியுங்கள். முனிசிபல் டவுனிலே தெருவிலே போட்டு அடிக்கின்றார்கள். தெருவிலே அடித்துப் போட்டு விடுகிறான். அதற்கு இது வரையிலே சரியான நடவடிக்கை இல்லை. நாலு நாளைக்கு முன்னர் கூட ஒரு தி. மு. க. கட்சியைச் சேர்ந்தவர், ஒரு முக்கியமான ஆள், அவரை திருவாடானையிலே பட்டப்பகலில் ஒரு காபி ஓட்டலிற்கு முன்னால் காலை ஒடித்துவிட்டான் என்று அவனை உடனே ரிமாண்ட் பண்ணி போலீஸ்காரர்கள் வைத்துவிட்டார்கள். அப்புறம் அவன் எப்படி எதையும் எடுத்துச் சொல்ல முடியும்? நிர்வாகத்தில் நியாயம் இல்லை. உங்களுக்கு என்ன எது என்று தெரியப்போகிறது? நாங்கள் நாலு பேர்கள் வந்து இங்கே சொல்கிறோம். தெரிந்து கொள்வீர்கள். தங்கமான மனிதன் இருந்தால் இந்த நாட்டிலே நன்மைகள் நடக்கும் என்று சொல்லிவிட்டு, சரி என்று இருப்பீர்கள். அதுதான் உங்களால் முடியும். இந்த நிலைமையிலே நாங்கள் என்ன செய்ய முடியும்? எங்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? ஒரு யூனியனை வைத்துக்கொண்டு சரியாக நடத்த முடிகிறதா ? இங்கு ஒரு நண்பர் சொன்னார், மத்திய சர்க்கார் வரி வசூலித்துக்கொண்டு திரும்ப நமக்குக் கொடுக்காமல் இருக்கிறது என்று சொன்னார்கள். ஒரு சின்ன பஞ்சாயத்து யூனியனில் ரூ. 2,20,000 யூனியன் பொது நிதியிலிருந்து செலவு பண்ணிவிட்டு அதைத் திரும்ப வாங்கவில்லை. எத்தனை பேர் சேர்ந்து எடுத்துக்கொண்டார்களோ, என்ன பண்ணினார்களோ எனக்குத் தெரியாது. அவர்கள் என்ன பண்ணியிருக்கின்றார்கள் என்பதைப் பற்றியும் சொல்ல முடியாது. இன்று தேதி வரையிலும் ரி-இம்பர்ஸ்மெண்ட் கேட்கக்கூடாது என்று சொல்லப்படுகிறது. வறட்சி நிவாரணம் வந்திருப்பதால் என்று கூட ரீ-இம்பர்ஸ்மெண்ட் கேட்கக் கூடாது என்று

(பிற்பகல் 6-10)

சொன்னார்கள். 1961-ஆம் வருஷத்திலிருந்து இதுவரை 2 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயை ஒரு பஞ்சாயத்து யூனியன் வாங்காமலிருந்தால், அந்த நிர்வாகம் எப்படி இயங்குகிறது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளலாம். 8 தடவை ஒரு வருஷத்துக்கு ஆடிட் செய்கிறார்கள். இந்த நிலையில் நிர்வாகம் இருந்தால், எப்படி நாங்கள் இயங்க முடியும்? உண்மைக்கு மாறாக நடக்கிறார்கள். வறட்சி வந்தவுடன் எங்களுக்கு வந்து நீங்கள் ஒரு நல்ல ஏற்பாடு செய்தீர்கள். அதை நாங்கள் மறக்கவும் முடியாது, மறுக்கவும் முடியாது. ஆனால் அதற்காக எங்களுக்கு ஏற்பட்டிருக்கிற கஷ்டங்களை நான் இங்கே சொல்லாமல் இருக்கவு



1975 மார்ச் 10] [திரு. எஸ். ராமகிருஷ்ணத்தேவர்]

முடியாது. ஒரு கோவாப்பரேட்டிவ் சொசைட்டியை எடுத்துக்கொண்டால், நியாயம் செய்கிறோம் என்று சொல்லுகிறார்கள். என்ன நியாயம் செய்கிறார்களோ அது எனக்குத் தெரியாது. 5 பேரை, நான்-மெம்பராகப் போடுகிறார்கள். நீங்கள் நியமிப்பது 5 பேர். ஆக மொத்தம் பத்து பேர் ஆகிறது. நாங்கள் மொத்தம் 4 பேரை வைத்துக்கொண்டு எப்படித் தலைவர் ஆக முடியும்? ஒரு காலத்தில் மார்க்கெட்டிங் சொசைட்டிகள் ரொம்ப நஷ்டத்தில் நடந்து வந்தன. அதை நாங்கள் கட்டிக் காத்து வந்தோம். 80 ஆயிரம் ரூபாய் பாக்கி வைத்திருந்ததை குறைத்துக் குறைத்துப் படிப்படியாக 20 ஆயிரம் ரூபாய் பாக்கிக்குக் கொண்டு வந்தோம். உடனே அவர்கள் தலைவரை நியமித்தார்கள். எங்களுக்கு அப்புறம் என்ன வேலை? இதற்குத்தான் நீங்கள் மாநில சுயாட்சி வேண்டுமென்று கேட்கிறீர்கள். உங்களிடம் இப்போது இருக்கிற கொஞ்சம் அதிகாரத்திலேயே எங்களுக்கு இந்த கதி என்றால், இதற்கு மேலும் அதிகாரம் கொடுத்தால், எங்களைத் தூக்கிலிடுவீர்கள். இல்லை, உயிருடன் தான வாழ விடுவீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த மாதிரிக் கடுமையான வார்த்தைகளைச் சொல்லக்கூடாது.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் : தலைவர் அவர்களே, நான் சொன்ன வார்த்தை கடுமையான வார்த்தையாக இருக்குமேயானால், அந்த வார்த்தையை வாபஸ் வாங்குகிறேன். என்னுடைய மனதிலே இருக்கிற கொதிப்பினால் அந்த மாதிரிச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொதிக்கலாம். அதற்காக தூக்குக்கூட போடுவார்கள் என்று பேசலாமா ?

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் : தலைவரவர்களே, குனிய குனிய கொட்டுறதும் தவறு, கொட்ட கொட்ட குனிகிறதும் தவறு அல்லவா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களுக்கு முதுகுளத்தூர் சம்பவத்தை ஞாபகப் படுத்துகிறேன்.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் : தலைவர் அவர்களே, எங்கோ, ஓரிரு இடத்தில் தவறு நடந்திருக்கலாம். நான் எதையுமே மறுக்க விரும்பவில்லை. தவறு எந்தக் காலத்தில்தான் நடக்கவில்லை? சரித்திர காலத்தில் கூட அந்தக் காலத்தில் வாழ்ந்த முனிவர்களும் தவறு பண்ணியிருக்கிறார்கள், ரிஷிகள் கூட தவறு பண்ணியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் காலத்தில் வாழ்ந்த அடிகளார் யாரும் தவறு பண்ணவில்லையா ?

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் : தலைவரவர்களே, அந்தக் காலத்தில் இருந்த அடிகளார் தவறு செய்தார்களோ செய்யவில்லையோ, ஆனால் இன்று நம்முடன் இருக்கும் அடிகளார் சரியாக இருக்கிறார்கள். உலகத்திலே இருக்கக்கூடிய அத்தனை பேரும் . . .

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவர் அவர்களே, நான் எப்படிப் பட்டவன் என்பதை உறுப்பினர் அவர்கள் சொல்லுவார்களா?

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: தலைவர் அவர்களே, நான் யாரையும் குறிப்பிட்டு தவறு இழைத்தார்கள் என்று சொல்லவில்லை. உலகத்திலே நல்லவர்களே இல்லையென்றும் சொல்ல வில்லை. அத்தனை பேரும் கெட்டவர்கள் தான் என்று நான் சொல்லவில்லை, திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருப்பவர்கள் அனைவரும் கெட்டவர்கள் என்று நான் சொல்லவுமில்லை, காங்கிரஸ் கட்சியிலே இருப்பவர்கள் அனைவரும் நல்லவர்கள் என்றும் நான் சொல்ல மாட்டேன். எந்த இடத்திலும் தவறு செய்பவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அதற்காக வேண்டி இந்தக் கேள்வி கேட்கிற சமாசாரத்தை மட்டும் என்னிடம் வைத்துக் கொள்ள வேண்டாம். நான் என்ன சொல்கிறேன் என்றால், தவறை தவறு என்று தெரிந்து யார் தவறு பண்ணினாலும் அது தவறுதான். தவறை திரு. ராமகிருஷ்ணத் தேவர் பண்ணினால் என்ன, திரு. ராஜ கோபால் பண்ணினால் என்ன, யார் பண்ணினாலும் தவறு தவறுதான். ஆகையால் நல்லபடியாக நிர்வாகம் நடத்த வேண்டும். பஞ்சாயத்து யூனியனை இந்த மாதிரி தவறு பண்ணக்கூடிய அளவில் வைக்கக் கூடாது. பஞ்சாயத்து யூனியனில் "பிராடு" பண்ணுகிறார்கள். எந்த நோக்கத்தோடு காந்தியடிகள் கிராம ராஜ்யத்தைக் கொண்டு வந்தாரோ அந்த நோக்கம் ஈடேறாமல், அது பிறகு பஞ்சாயத்து யூனியனாக மாறி, இன்றைக்கு எந்த விதமான நல்ல காரியமும் செய்யாமல் இருக்கிறது. நல்ல காரியம் ஒன்று செய்ய வேண்டுமென்று முற்படுகையில், உடனே அதைச் செய்ய வேண்டாமென்று ஒரு ஜீ.ஓ. வந்து விடுகிறது. அந்த ஜீ.ஓ. விலே அந்த வேலையைச் செய்ய உனக்கு அதிகாரம் இல்லையென்று தெரிவிக்கிறார்கள். 1962-லே நடந்த தவறை இதுவரை திருத்தவில்லை. அதிகாரிகள் தவறு செய்தால், அதைக் கண்டிக்க நாதியில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: 1962-லே தவறு நடந்தது என்றால், அப்பொழுதே காங்கிரஸ் ஆட்சியே அந்தத் தவறைத் திருத்தியிருக்கலாமே?

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர்: தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் தப்பு பண்ணுகிறார்கள் என்பதல்ல, யார் தப்பு பண்ணினாலும் தவறு தவறுதான். இதிலே நான் பேச வருவதெல்லாம் நல்ல அரசாட்சி வர வேண்டும். ஏனென்றால் மக்களாலே அரசாளுபவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள், நல்ல நிர்வாகம் ஒன்றை நீங்கள் அமைத்துக் கொடுக்க வேண்டும். இதுதான் என்னுடைய கோரிக்கை. வறட்சி சம்பந்தமாக நீங்கள் எடுத்துக் கொண்ட ஒரு பெரு முயற்சிக்கு நான் என் பாராட்டைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். வறட்சியால் பாதிக்கப்பட்ட எங்கள் பகுதியிலே இப்பொழுது ஆடு மாடுகளுக்கு குடிப்பதற்குத் தண்ணீர் கிடைத்திருக்கிறது. அதோடு இந்த வறட்சி வேலைகள் எல்லாம் துரிதமாக நடந்து கொண்டிருக்கின்றன. ஒரு சின்ன பஞ்சாயத்து யூனியனில் 2 லட்சத்து



20 ஆயிரம் ரூபாய்க்கு ரீ இம்பர்ஸ்மெண்ட் வாங்காது முழித்துக் கொண்டிருக்கிறது. இப்படி எவ்வளவோ நடந்து கொண்டிருக்கிறது. சின்னச் சின்ன பஞ்சாயத்துக்களுக்குப் பெரும அளவு பணத்தைக் கொடுத்து விடுகிறார்கள். அவர்கள் தவறு இழைக்கிறார்கள். நீங்களெல்லாம் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள எங்கள் பகுதிகளுக்குக் கட்டாயம் வர வேண்டும். எங்களுடைய நோக்கமும் அதுதான். பொதுவாக எங்கள் ஏரியா பூராவும் கண்மாயை நம்பிப் பாசனம் செய்யும் ஏரியா. சின்னஞ் சிறிய கண்மாய்கள் இருக்கிற பகுதிகளிலே நஞ்சையும் புஞ்சையும் அதிகமாக இருக்கிறது. நஞ்சைதான் அதிகமாக இருக்கிறது. ரொம்ப வறட்சியாலே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்திலே இங்கும் அதிகமான பணம் ஒதுக்கி, "அலாட்" பண்ணி கண்மாயையெல்லாம் சீர்படுத்த வேண்டும். எங்கள் பகுதியிலே ஒரு தவறான நோக்கம் இருந்து கொண்டிருக்கிறது. மேலே கண்மாயில் இருக்கிற தண்ணீரைக் கீழே கொண்டுவருவதற்காக ஒரு ஸ்கீம் போட்டார்கள். அந்தப் பெரிய கண்மாயைப் பாசனப் பகுதிகளுக்குத் தேவைப்படும் தண்ணீர் போக மீதித் தண்ணீரைக் கீழே கொண்டு வருவதற்கான வேலைகள் எல்லாம் இன்னும் துரிதமாக நடக்கவில்லை. உடனடியாக மறு முறையும் அந்த ஸ்கீமுக்குத் தக்க பரிகாரம் கண்டு பிடிக்க வேண்டும்.

நாங்கள் அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கிறோம், மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அதற்காக நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். முன்னாலேயும் கூட கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். என் தொகுதியிலே காரங்காடு என்ற ஊரிலே 50 பேருக்குக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இப்போதைய சுகாதார வசதியிருக்கலாம், நல்ல முறையிலே அமையலாம். என் தொகுதியிலே அரிசனங்களும் மீனவர்களும் சற்று அதிகம். அரிசனங்களும் மீனவர்களும் அதிகமாக வசிக்கிற இடங்களில் அவர்களுக்குப் போதிய வசதியைத் தேடிக் கொடுக்க வேண்டும். நேவுனல் லைசென்சிலிருந்து சேது ஏஸ்தா போடுகிறார்கள். அதனால் அவர்களுக்குக் கொஞ்சம் வேலை கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதோடு நீங்களும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதனால் தான் மக்கள் இப்பொழுது அங்கு இருக்கிறார்கள். சமீபத்திய மழையால் ஆடு மாடுகளும் இப்பொழுது உயிருடன் பிழைத்திருக்கின்றன. சமுத்திரக் கரையோரத்திலே இருக்கும் அழிகளை அழப்படுத்துகிற இயந்திரங்களை எல்லாம் அனுப்பி வைத்து அவைகளை அழப்படுத்த வேண்டும். இராமநாதபுரம் மாவட்டத்திலே எங்கும் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக கிழக்கு இராமநாதபுர மாவட்டம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதி மக்களுக்கு இன்னும் உதவ வேண்டும், நிரந்தரமாக ஒரு பரிகாரம் காண வேண்டும். ஆர். எஸ். மங்கலம் பகுதியிலே இருக்கிற மக்களுக்கும் ஏதாவது திட்டத்தை வகுத்து வாழ வழி ஏற்படுத்த வேண்டும், சமுத்திரத்திலுள்ள தண்ணீரைவிட கிணற்றுத் தண்ணீர் அதிகமாக உப்புத் தண்ணீராக இருப்பதால், மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இவற்றையெல்லாம் நிவர்த்தி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். சமீபத்திலே . . . .

1975 மார்ச் 10]

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மூன்று தடவை மணியடித்தும் உறுப்பினர் பேச்சை நிறுத்தவில்லை. சட்டமன்ற மரபுகளை உறுப்பினர் தெரிந்திருக்க வேண்டும்.

திரு. எஸ். ராமகிருஷ்ணத் தேவர் : தலைவர் அவர்களே, ரெவின்யூ மினிஸ்டர் எங்கள் மாவட்டத்துக்கு வர வேண்டும், மேலும் முதலமைச்சர் அவர்களும் நிச்சயம் வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்......

(பிற்பகல் 6–20)

* திரு. ஜார்ஜ் கோமகன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1975–76 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை இந்த மாமன்றத்தில் சமர்ப்பித்து அவர்கள் ஆற்றிய உரையை வரவேற்று, என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விழைகின்றேன்.

ஒன்பதாம் ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசில் அதனுடைய தலைவர், முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிதிநிலை அறிக்கையினை இந்த மாமன்றத்திலே சமர்ப்பித்திருக்கின்றார்கள். ஒரு சொட்டு மழைத் துளி விழாதா என்று ஏங்குகின்ற சாதக பட்சியைப் போல் தமிழக மக்கள் மழைக்காக ஏங்கிக் கொண்டிருந்த காலத்தில், இன்றைக்கு தென் மாவட்டங்களில் எல்லாம் மழை பொழிகின்றது என்ற மகிழ்ச்சியான செய்தி நம்முடைய காதுகளிலே விழுகின்றபோது நாமெல்லாம் மகிழ்வெய்துகின்றோம். மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மயிலையிலே நடைபெற்ற கூட்டத்திலே, “எனக்கு மேகத்தை அப்படியே பிழிந்து மழையைப் பொழிய வைக்கலாமா என்ற கோபம் வருகிறது” என்று குறிப்பிட்டார்கள். அதே நேரத்திலே, நம்முடைய அடிகளார் அவர்கள் குறிப்பிட்டார்கள், பிரார்த்தனை செய்து அதன் மூலமாக இன்றைக்கு மழை வந்திருக்கிறதா என்ற சர்ச்சையில் இறங்காமல், உள்ளபடியே மழை வந்ததற்காகப் பாராட்டுகிறோம் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அதையே தமிழக முதல்வர் அவர்கள் அழகாகச் சொன்னார்கள். எல்லா மதத்தவர்களும் பிரார்த்தனை செய்திருக்கிறார்கள். அவர்கள் பிரார்த்தனை செய்த உணர்வை மதிக்கிறேன், அந்த உணர்வுக்காக வணக்கம் செலுத்துகின்றேன் என்றார்கள். ஆக தென் மாவட்டங்களில் மழை பொழிகிறது, பொழிந்திருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை ஏற்றுக் கொண்டு, இந்த மாமன்றத்திலே நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பேசுகின்ற அருமையான வாய்ப்பைப் பெற்றவனாக இருக்கின்றேன். ஒரு நல ஆட்சி—வெல்ஃபேர் கவர்ன்மெண்ட் என்று சொல்வார்கள், அப்படிப்பட்ட நல ஆட்சியின் சின்னமாகத்தான் இந்த அறிக்கை விளங்குகின்றது. தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையை பல உறுப்பினர்கள் பலவிதமாக விமரிசனம் செய்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கா அவர்கள் பேசுகின்றபோது குறிப்பிட்டார்கள். நம்முடைய மாண்புமிகு டாக்டர்



1975 மார்ச் 10] [திரு. ஜார்ஜ் கோமகன்]

கலைஞர் அவர்கள் இந்த அறிக்கையை மிகச் சாதுர்யமான நடையிலே அளித்திருக்கிறார்கள் என்றார்கள். அவர்கள் வேறு முகாமுக்குச் சென்றிருந்தாலும், சாதுர்யமான நடை என்று ஒப்புக்கொண்டதற்காக நான் மெத்த மகிழ்வடைகிறேன். ஆனால் அதே நேரத்தில், இந்த நிதிநிலை அறிக்கை வெறும் நிர்வாக அறிக்கைபோல இருக்கிறது என்று சொன்னார்கள். உள்ளபடியே இது வேதனை தரத்தக்க செய்தி என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். காரணம், சிறந்த வல்லவர்களும், நல்லவர்களும், அறிஞர் பெரு மக்களும் இந்த அறிக்கையை வரவேற்று பலவிதமாக விமர்சித்திருக்கிறார்கள். இதே மாமன்றத்திலே நம்முடைய பெருமைக்குரிய உறுப்பினர் திரு. வ. ஆர். தாமோதரன் அவர்கள் பேசுகிற நேரத்தில், தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை அதனுடைய இலக்கிய நயத்திற்காகப் பாராட்டப்பட வேண்டியதொன்று, இந்திய நாட்டில் காங்கிரஸ் அல்லாத எதிர்க் கட்சி ஆளுகின்ற மாநிலத்தில் தொடர்ந்தாற்போல் ஒன்பதாவது நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்துள்ள ஒரே மாநில அரசு தமிழக அரசுதான் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனது மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் சுதந்திரா கட்சி உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் பேசுகிறபோது, 1975–76 ஆம் ஆண்டின் தமிழக நிதிநிலை அறிக்கை நல்ல முறையிலே தயாரிக்கப்பட்டுள்ளது, யாராக இருந்தாலும், இந்த வரம்பிற்கு உட்பட்டு, இதைவிடச் சிறப்பாகச் செய்ய முடியாது என்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டார்கள். “நமக்கு இருக்கிற வரம்பிற்கு நமக்கு இருக்கிற அதிகாரத்திற்கு உட்பட்டு யாராக இருந்தாலும்” என்ற வார்த்தையை திரு. சுவாமிநாதன் அவர்கள் அளந்தே போட்டிருக்கிறார்கள். யாராக இருந்தாலும் வரம்பிற்கு உட்பட்டு இந்த அளவுக்குச் செய்ய முடியாது என்று அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். நாட்டிலே விலைவாசி ஏறி இருக்கிறது. அதனுடைய காரணத்தையெல்லாம் நம்முடைய முதல்வர் அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே மிக திட்டவட்டமாகவே வெளியிட்டிருக்கிறார்கள். இன்றைய இந்திய நிலைமை, உலக நிலைமை இவற்றையெல்லாம் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கா அவர்கள், விலைவாசி உயர்வுக்கு மத்திய அரசுதான் பொறுப்பேற்க வேண்டும் என்பதல்ல, மாநில அரசின் நிர்வாகத் திறமையின்மையும் காரணம் என்று குறிப்பிட்டார்கள். உள்ளபடியே இந்த அறிக்கையை அவர்கள் மேலெழுந்த வாரியாக, இன்னும் சொல்லப் போனால் நுனிப்புல் மேய்ந்த மாதிரி, பார்த்திருக்கிற காரணத்தாலே, ஆழமாகப் பார்க்காத காரணத்தாலே, இப்படிச் சொல்லியிருக்கிறார் என்று கருதுகிறேன். நமது அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் மிக அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். விலையேற்றத்திற்கு யார் காரணம் என்ற வினாவை எழுப்பி, 1967–68 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை அண்ணா அவர்கள் வைத்து ஆற்றிய உரையின்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். “அரசியல் சட்டத்தில் 7–வது அட்டவணையில் 36 முதல் 38 வரையில் வரி விதி முறைகள், பணம் வெளியிடுதல், அந்நியச் செலாவணி போன்ற துறைகளை மத்திய அரசிடமே வைத்திருப்பது, பண வீக்கம், பற்றுக்குறை நிதிநிலை என்பதற்கு மத்திய அரசே முழுப் பொறுப்பேற்கச் செய்திருக்கிறது. இதனால் விலையேற்றம் ஏற்படுவதற்கான பொறுப்பும் மத்திய அரசையே சார்ந்தது.” இப்படி அண்ணா

அவர்கள் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள். விலையேற்றத்திற்குக் காரணம் மத்திய அரசுதான். அதுதான் பொறுப்பேற்க வேண்டும் என்பதாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே விலையைக் கட்டுப்படுத்துவதற்கான பொறுப்பை மத்திய அரசே ஏற்க வேண்டியிருக்கிறது. மத்திய அரசின் நடவடிக்கையால் இந்த விலை கட்டுக்கடங்காமல், மாநில அரசு தாங்கித் தத்தளிக்க வேண்டியிருக்கிறது என்று அண்ணா அவர்கள் 1967-68 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்த காலத்திலே வெளியிட்டிருக்கிறார்கள். அண்ணா அவர்களின் பெயரைச் சொல்லி இன்றைக்குக் கட்சி நடத்துகின்றவர்கள் அறிஞர் அண்ணா அவர்களின் இந்த உரையைச் சற்றுக் கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வேன். அப்பொழுதே அண்ணா அவர்கள் தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். அதையே நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையிலே திட்டவட்டமாக, ஒரு புதிய கண்ணோட்டத்தோடு ஒரு புதிய சிந்தனையோடு, "சைன்டிபிஃக் அப்ரோச்" என்று சொல்வார்களே, அது மாதிரி ஒரு விஞ்ஞான ரீதியான நோக்கோடு நோக்கியிருக்கிற காரணத்தாலே இதை வல்லோரும் நல்லோரும் இன்றைக்கு பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

இன்னும் ஒன்றையும் திரு. வெங்கா அவர்கள் சொன்னார்கள். நாட்டிலே விலைவாசி ஏறி இருக்கிறது. இதற்குக் காரணங்களையெல்லாம் அலசி ஆராய்கிறபோது, ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் எல்லாம் ஏதோ செய்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். நான் ஒன்றை இந்த மாமன்றத்தில் குறிப்பிடுவதற்காக, தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியைப் பெறவேண்டியவனாக இருக்கின்றேன். வட ஆற்காடு மாவட்டத்திலே திருப்பத்தூர் தாலுகாவிலே ஜோலார்ப்பேட்டை ரயில்வே ஸ்டேஷனிலே ஒரு வேகனை உடைத்து ஐந்து லட்ச ரூபாய்க்கு மேல் களவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் களவிலே ஈடு பட்டவர்கள் யார் தெரியுமா? அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் என்ற தகவல் தெரிகிறது. இதற்காக 10 பேர்களை, அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள்தான், கைது செய்து ஜாமினிலே விடப்பட்டிருப்பதாக நான் தகவல் அறிகிறேன். இப்படிப்பட்ட நிலையில் சமூக விரோதிகள் அங்கே இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சமூக விரோதிகள் தான், இன்றைக்கு மக்களை வேதனைக்கு ஆளாக்குகின்ற நிலை இருக்கிறது.

திரு. வி. வெங்கா: தலைவர் அவர்களே, சமூக விரோதிகள் எல்லா இடத்திலேயும் இருக்கிறார்கள். சமூக விரோதிகளை அரசு தண்டிப்பதிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை, ஜோலார்பேட்டையிலே நடந்த சம்பவத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அது உண்மையாக இருந்தால், அவர்களைத் தண்டிப்பதிலே எந்த விதமான ஆட்சே





பணையும் இல்லை. ஆனால் அரசே தவறு செய்யலாமா என்பதுதான் என்னுடைய கேள்வி. இரண்டாவது, நான் மத்திய சர்க்கார் விலையேற்றத்திற்குப் பொறுப்பில்லை என்று பேசியதாக மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்கள். மத்திய சர்க்காருடைய நிதிக் கொள்கையும் விலையேற்றத்திற்குக் காரணம், மாநில சர்க்காரின் நிர்வாகத் திறமையின்மையும் காரணம் என்றுதான் நான் குறிப்பிட்டேன். அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாகச் சொன்னார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதை நானும் உணர்ந்துதான் இருக்கிறேன். நான் ஏதோ நுனிப்புல் மேய்ந்துவிட்டுப் பேசியதாக மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அது தவறு. நான் பேசிய போது அண்ணா அவர்கள் அரசுப் பொறுப்பேற்றிருந்தபோது, விலைவாசியைக் குறைக்க திட்டத்தைக் கொடுத்தார் என்று சொன்னேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஜார்ஜ் கோமகன்: தலைவர் அவர்களே, அவர் மத்திய அரசுதான் காரணம் என்று திட்டவட்டமாகச் சொல்லாமல், மாநில அரசும் பொறுப்பேற்க வேண்டும் என்று சொன்ன காரணத்தால்தான், அதைக் குறிப்பிடுகிறேன். அறிஞர் அண்ணா அவர்களின் வாசகமே, மத்திய சர்க்கார்தான் இதற்கு முழுப் பொறுப்பு ஏற்க வேண்டும் என்பது. அதுதான் இந்த நிலவரத்திற்குக் காரணம், ஆனால் மக்களுக்கு என்ன தெரிகிறது? நேரடியாக மாநில சர்க்கார்தான் பொறுப்பாகத் தெரிகிறது. இதைத்தான் மக்களிடத்திலே விளக்க வேண்டுமென்று அறிஞர் அண்ணா அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையை சிறப்பான அறிக்கை என்று அடிகளார் பாராட்டி, வாழ்க்கையின் அடிமட்டத்திலே இருப்பவர்கள், வேதனையின் சீழ் தளத்திலே வெந்து செத்துக்கொண்டிருப்பவர்கள் எல்லாம் முன்னேறுவதற்கான திட்டம் இருக்கிறது என்று சொன்னார்கள். உள்ளபடியே அடிமட்டத்திலே இருக்கிற மக்களின் சார்பாக இருக்கிற நான் இந்த அறிக்கையைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், அறிஞர் அண்ணா அவர்கள் வழியில், தந்தை பெரியார் அவர்கள் வழியில் வந்த காரணத்தால், சமுதாய மாற்றத்தை, இன்னும் சொல்லப்போனால், சமுதாயப் புரட்சி செய்ய வேண்டும் என்று அவர்கள் விரும்புகிற காரணத்தாலேதான் இன்றைக்கு தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்கும் 11 கோடி ரூபாயும், 6 கோடி ரூபாயும் ஒதுக்கி அவர்களுக்காக வேண்டிய வழிமுறைகளைச் செய்வதற்கு முன்வந்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 6-30)

ஆனால் மத்தியப் பேரரசு தாழ்த்தப்பட்டவர்களுக்காக ரூ. 50 லட்சம்தான் தருகின்றது. பிற்பட்டோருக்காக அதுகூட இல்லை. ஆக இந்த நிலையில்தான் நான் நமது தமிழக அரசினை டாக்டர் கலைஞர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்

[திரு. ஜார்ஜ் கோமகன்] [1975 மார்ச் 10

இன்னொரு வாதம் எழுப்பப்படுகின்றதையும் பார்க்கிறோம். இப்படிப் பின்தங்கியுள்ள மக்களுக்குச் சலுகைகள் தேவைதானா, ஏன் பொருளாதார அடிப்படையில் சலுகைகளைக் கொடுக்கக் கூடாது, சமுதாய அடிப்படையில்தான் தரப்பட வேண்டுமா என்றும் பேசப் படுகிறது. இதற்கும் பதிலை நமது டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு பொதுக் கூட்டத்தில் மிக அழகாகச் சொல்லியிருக்கின்றார்கள். ஓட்டப் பந்தயங்களிலே பலவீனமானவர்களைச் சற்று முன்னதாக நிறுத்தி பந்தயம் விடுகின்றார்கள். அதைப்போல சமுதாயத்திலே மிகவும் பலவீனமாக, பின்தங்கியிருப்பவர்களுக்கும் பிற்பட்டவர்களுக்கும் மற்றவர்களைக் காட்டிலும் இப்படிப்பட்ட சலுகைகளைக் கொடுக்கிறோம் என்று பேசியிருக்கின்றார்கள். இதன் மூலம் கழகத்தின், கழக அரசின் கொள்கைகளை மிகத் தெளிவாக, மிக அழகாக எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள் நமது கலைஞர் அவர்கள். எனவே இந்த நிதிநிலை அறிக்கை மூலம் நாட்டிலுள்ள எல்லா விதமான பிரச்சினைகளுக்கும் வழிவகை காண முயன்றிருக்கின்றார். இன்னும் ஒன்று, தமிழக அரசுக்கும் பிற மாநில அரசுகளுக்கும், தமிழக அரசுக்கும் மத்தியப் பேரரசுக்கும் உள்ள வித்தியாசங்கள் பலப்பலவாகும். அவர்களுக்கும் நமக்கும் இடையிலே கலாச்சாரத்திலும் நாகரீகத்திலும் பல்வேறு வித்தியாசங்களை எடுத்துக் காண்பிக்க முடியும். அவர்களுக்கு வேண்டியதெல்லாம், "ரொட்டி, கப்படா ஔர் மக்கான்".

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அப்படியென்றால் என்ன ?

திரு. ஜார்ஜ் கோமகன் : உணவு, உடை, இருக்க இடம் இவற்றைத்தான் குறிப்பிடுகிறேன். அவர்களுக்கு இந்த மூன்றும் இருந்து விட்டால் போதும். ஆனால் நமது கலாச்சாரத்தில் திளைத்துள்ள நமக்கு இந்த மூன்று மட்டும் இருந்தால் போதுமா என்றால், போதாது என்றே சொல்லலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எந்த அளவுக்கு இந்தி தெரியும் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜார்ஜ் கோமகன் : ஓரளவிற்குத் தெரியும். தமிழக அரசு இந்த மூன்றை மக்களுக்கு அளிப்பதுடன் நின்றுவிடவில்லை. தமிழக கலாச்சாரத்தை, பண்பாட்டை, தன்மானத்தைக் காப்பாற்றுவதற்காகப் பாடுபடும் அரசு நமது அரசு என்பதை எடுத்துக் காட்டுவதைப் போல பல திட்டங்களை இந்த நாட்டிலே ஆரம்பித்திருக்கின்றது நமது அரசு. தாழ்த்தப்பட்ட மக்களுடைய முன்னேற்றத்திற்கென பல திட்டங்கள் இருந்தபோதிலும், சமுதாயத்தில் பின்தங்கிய மக்களுடைய மேம்பாட்டிற்காக பல திட்டங்களைத் தீட்டிய போதிலும், தமிழனுடைய கலாச்சாரத்தை, பண்டைய பண்பாட்டை முன்னோடியாக வைத்துத்தான் இத்தகைய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது நமது அரசு. அவர்களே தமிழக அரசு சரித்திரத்தை



1975 மார்ச் 10] [திரு. ஜார்ஜ் கோமகன்]

போக்குவது மட்டுமின்றி சரித்திரத்தையே படைக்கின்றது, பாதுகாக்கின்றது என்று குறிப்பிட்டார்கள். இதைத்தான் நமது டாக்டர் கலைஞர் அவர்கள் செய்து வருகின்றார்கள்.

பூம்புகாரைப் பார்க்கும் போது, நமக்கு பண்டைய சிலப்பதிகாரத்தின் சிறப்பு மட்டும் தெரிவதில்லை. வரலாறும் சரித்திரமும் அத்துடன் பண்பாடும் பின்னிப் பிணைந்திருப்பதைத் தெளிவாக நமக்கு உணர்த்துகின்றது. இன்றைக்கு யார் யாரோ இருக்கின்றார்கள், பேசுகின்றார்கள். "என் பேச்சைத்தான் கேட்பார்கள், தங்கள் கணவன்மாருடைய பேச்சுக்களை பெண்கள் கூட கேட்கமாட்டார்கள்" என்று. என் பேச்சை — நான் சொல்லவில்லை. ஒருவர் குறிப்பிட்டதையே சொன்னேன். ஆனால் இந்த வாதத்தைவைத்து பூம்புகாரைப் பார்க்கும்போது, நினைவிற்கு வருகின்றது. கண்ணகி கணவனைப் பிரிந்து தவிக்கின்றாள். அப்போது அவர்களுடைய தோழி தேவந்தி அவளைத் தேற்றும் வகையில், "நீ முன் பிறவியில் ஒரு நோன்பிருக்கத் தவறிவிட்டாய். எனவே, இப்போது அதற்காக சூரிய குண்டம், சோம குண்டம் என்ற தடாகத்தில் மூழ்கி, காமவேள் கோட்டமாகிய சூரிய குண்டத்தில் நின்று தவமிருந்தால், மன்மதன் ஆலயத்தில் வழிபட்டால், உன் வாழ்வில் வசந்தம் ஏற்படும், அதை மேற்கொள்" என்று சொல்லுகின்றாள். ஆனால் கண்ணகி அதை ஏற்றுக்கொள்ள வில்லை. "பீடு அன்று" என்று கூறுகிறாள். தமிழ்ப்பெண் கணவனைத் தவிர வேறு ஒருவரையும் மனத்தாலும் வரிக்க மாட்டாள், கணவனையே தெய்வமாகப் போற்றுபவள் தமிழ்ப் பெண் வேறு தெய்வத்தை வணங்க மாட்டாள் என்று கூறி அவள் சொல்லுவதை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டாள் கண்ணகி. இதைத்தான் பூம்புகார் நமக்குச் சொல்கிறது. இதைப்போன்று பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைப் பார்க்கும்போது, இந்த நாட்டின் வீரமிக்க சகாப்தத்தை நமது கண்முன் கொண்டுவருகின்றது. வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய முதல் வீரனின் தீரமிக்க செயல்கள் நமது கண்முன் தோன்றுகின்றன. வள்ளுவன் கோட்டத்தைப் பார்க்கும் போது, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நமது நாட்டு மக்களுக்கு மட்டுமின்றி உலக மக்களுக்கே வாழ்க்கை இலக்கணத்தை உருவாக்கிக் கொடுத்த அந்தப் பெருமை மிக்க பாடல்கள் நம் நினைவிற்கு வருகின்றன. இப்படிப்பட்ட அருமையான திட்டங்கள் தமிழக அரசின் சாதனையாக இந்த நிதி நிலை அறிக்கையில் அமைந்திருப்பதை நாம் பார்க்கிறோம். இது போன்ற இன்னும் பல அரிய திட்டங்களை நாம் சமைத்திட வேண்டுமென்றால், நமது கலைஞர் அவர்கள் மிக அழகாக எடுத்துச் சொன்னார்கள், நமக்கு நிச்சயமாக மாநில சுயாட்சி தேவை. மாநில சுயாட்சி என்று நாம் சொல்லும் போது, மத்தியிலே கூட்டாட்சி என்றுதான் சொல்லி இருக்கிறோம். இதைப் புரிந்து கொள்ளாதவர்கள் நம்மைப்பார்த்து பிரிவினை வாதிகள் என்கின்றார்கள். இங்கே பேசிய திரு. வெங்கா அவர்கள் இப்போதுள்ள அதிகாரங்கள் போதும் என்றாலும் மாநில சுயாட்சிக் கொள்கையை ஏற்கிறோம். ஆனால் இப்படிப்பட்டவர்கள் ஆட்சியில் இருக்கும் போது அது வேண்டாம். என்கின்றார்கள். அண்ணா சொன்ன இந்த மாநில சுயாட்சித் தத்துவம் மக்களுடைய நல்

வாழ்விற்காக எடுத்துச் சொன்ன தத்துவமாகும். இப்படிப்பட்ட இந்த மாநில சுயாட்சித் திட்டத்தை, தத்துவத்தை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக் கொள்கிறதா என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கா அவர்கள் சொல்ல வேண்டும் என்று, தலைவர் அவர்களே, உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். அண்ணா அவர்கள் மாநில சுயாட்சி என்று சொல்லும் போது மத்தியில் கூட்டாட்சி என்று அழகாக எடுத்துரைக்கின்றார்கள். இதைத்தான் டாக்டர் கலைஞர் அவர்களும் இன்று பெரும் முழக்கமாக தமிழக மக்களின் இதய கீதமாக வைத்திருக்கின்றார்கள். நமது அவையில் மாநில சுயாட்சித் தீர்மானம் வந்த நேரத்திலே இதற்கென பல ஆதாரங்களை எடுத்து வைத்திருக்கின்றோம். மாநில சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி என்று சொல்லும் போது நாம் இந்த நாட்டின் ஒருமைப்பாட்டிற்காகப் பாடுபடுகிறோம் என்பதையும் நினைவு படுத்தி மாநில சுயாட்சி நிச்சயமாகத் தேவை என்று சொல்கிறோம். இதைத் தர முடியாது என்று மத்தியிலுள்ள தலைமை அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களானால், அது நிச்சயமாக ஒரு கேள்விக் குறியாகப் புறப்படுமானால், அத்தகைய கேள்விக்குறி நாட்டிலே பெரும் பிரச்சினைக்கு வித்திடும். அப்படிப்பட்ட நிலைக்கு மத்திய அரசு போகவேண்டாமென்று தெரிவித்துக் கொண்டு மாநில சுயாட்சிக் கோரிக்கை மிக அருமையான தத்துவத்தை உள்ளடக்கிய கோரிக்கை, இதை நமது கலைஞர் அவர்கள் மிக அழகாக எடுத்து வைத்திருக்கின்றார்கள். அப்படிப்பட்ட தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள இந்த நிதி நிலை அறிக்கையினைப் பாராட்டி, வரவேற்று இந்த அளவோடு அமருகிறேன், வணக்கம்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்</u>: இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

[பிற்பகல் 6-40]

## 5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

127. Notification issued with G.O. Ms. No. 2889, Home, dated the 31st December 1974 in respect of increase of Tax on Stage Carriages and Contract Carriages under sub-sect on (2) of section 3 of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974. (*Laid on the table of the House under section* 25(2) *of the Tamil Nadu Motor Vehicles Taxation Act*, 1974 (*Tamil Nadu Act* 13 *of* 1974).

128. Notification issued with G. O. Ms. No. 2657, Rural Development and Local Administration, dated the 18th December 1974 relating to declaration of Madurantakam as Local Planning Area under section





10(1) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (*Laid on the table of the House under section* 123(2) *of the Tamil Nadu Town and Country Planning Act*, 1971 (*Tamil Nadu Act* 35 *of* 1972).

129. Notification issued with G.O. Ms. No. 677, Rural Development and Local Administration, dated the 16th March 1974 relating to declaration of Kadayanallur as Local Planning Area under section 10(4) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (*Laid on the table of the House under section* 123(2) *of the Tamil Nadu Town and Country Planning Act*, 1971 (*Tamil Nadu Act* 35 *of* 1972).

### B. *Reports, Notifications and other Papers.*

50. Notification issued with G.O. Ms. No. 31, Commercial Taxes and Religious Endowments, dated the 10th January 1975 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the sale deed to be executed in favour of the Panchayat Union, Ponnamaravathi.

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை

---

செவ்வாய்க்கிழமை, 1975 மார்ச் 11.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### *Inclusion of Rajakkamangalam Circle in Thuckalay Educational District.*

*147. Q.—THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether complaints have been received from the public and panchayats regarding the inclusion of Rajakkamangalam Circle which was in Nagercoil Educational District, in Thuckalay Educational District; and

(b) if so, the action taken thereon?

### தக்கலைக் கல்வி மாவட்டத்துடன் இராசாக்கமங்கலம் சரகம் சேர்க்கப்படல்.

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) நாகர்கோவில் கல்வி மாவட்டத்துடன் இருந்த இராசாக்கமங்கலம் சரகம், தக்கலைக் கல்வி மாவட்டத்துடன் சேர்க்கப்பட்டதையொட்டி ஊராட்சி மன்றங்களிலிருந்தும், பொது மக்களிடமிருந்தும் புகார்கள் வந்துள்ளனவா?

(இ) ஆமெனில், அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இராசாக்கமங்கலம் சரகத்தை தக்கலை கல்வி மாவட்டத்திலிருந்து பிரித்து, நாகர்கோவில் கல்வி மாவட்டத்துடன் இணைப்பதற்கில்லையென ஏற்கெனவே முடிவெடுக்கப்பட்டது.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவில் கல்வி மாவட்டம், தக்கலை கல்வி மாவட்டம் என்று இரண்டு இருந்ததை குழித்துறை கல்வி மாவட்டத்துடன் சேர்த்து மூன்ருகப் பிரிக்கிறபோது அந்தச் சரக சீரமைப்பிலே நாகர்கோவில் கல்வி மாவட்டத்தோடு இருந்த ராஜாக்கமங்கலம் சரகத்தை தக்கலையோடு சேர்த்திருக்கிருர்கள். ராஜாக்கமங்கலம் சரகம், நாகர்கோவில் சரகத்தில் உள்ள பள்ளித் தலைமை ஆசிரியர்களோ மற்றவர்களோ முதலில் நாகர்கோவிலுக்கு வந்து அதற்குப் பிறகு 10 மைல் தக்கலைக்குப் போக வேண்டும். ஏனென்ருல் நாகர்கோவிலுக்குத் தெற்கே கடற்கரையையொட்டி அந்தப் பகுதி அமைந்திருக்கிறது. அவர்கள் நேரடியாகத் தக்கலைக்குப் போக முடியாது. ஆக, நாகர்கோவிலோடு இருப்பதுதான் சிறப்பாக அமையும் என்றும், வசதியாக இருக்கும் என்றும் அங்குள்ள பஞ்சாயத்துக்களும் பொதுமக்கள், ஆசிரியர் ஆகிய அனைவரும் வந்து முறையீடு செய்திருக்கிருர்கள். எனவே, அரசு இதைத் திரும்பப் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தக்கலை, நாகர்கோவில் கல்வி மாவட்டங்களின் வேலைப் பளுவைக் குறைக்கவே குழித்துறைக் கல்வி மாவட்டம் தனியாக ஆரம்பிக்கப்பட்டது. ஆக மூன்று கல்வி மாவட்டங்கள் வருகின்றபோது வேலைப்பளு சமமாக ஆகிவிடும். அந்த நிலையில்தான் நாகர்கோவில் கல்வி மாவட்டத்திலிருந்து பிரித்து இந்தச் சரகம் குழித்துறை கல்வி மாவட்டத்தோடு இணைக்கப்பட்டது. அதை மறுபடியும் நாகர்கோவிலோடு இணைக்க வேண்டுமென்ருல் வேறு ஏதேனும் ஒரு சரகத்தை குழித்துறையுடன் இணைக்க வேண்டும். எந்தச் சரகத்தை எப்படி எடுத்து இணைக்கலாம் என்று முடிவு செய்வார்களேயாருல், அதுபற்றி யோசிக்கலாம். இல்லாவிட்டால் ஒன்றில் வேலைப்பளு அதிகமாகவும், இன்னென்றில் வேலைப்பளு குறைவாகவும் இருக்கும் நிலை ஏற்படும். வேலைப்பளு சமமாக இருக்க வேண்டுமென்றுதான் இவ்வாறு செய்யப்பட்டது. புதுக் கல்வி மாவட்டம் என்று வரும்போது, இரண்டு மாவட்டங்களிலிருந்தும் பிரித்து எடுத்துதான் இவ்வாறு புதிதாக ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது. ஆக, எந்தெந்த சரகங்களை—ஆருல் சமமாக வேலைப்பளு இருக்கும் விதத்தில் அமைய வேண்டும்; மூன்று கல்வி மாவட்டங்கள் அமைய வேண்டும்—எதனுடன் இணைக்கலாம் என்று அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கான யோசனைகள் வருமேயாருல், அது பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, வேலைப்பளு சமமாக இருக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொல்வதை நான் ஒத்துக்கொள்ளுகிறேன். ஒன்பது பஞ்சாயத்து யூனியன்களும், 4 நகரங்களும் கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்றன. நாகர்கோவில் கல்வி மாவட்டத்திலிருந்து இந்த ராஜாக்கமங்கலம் யூனியனைப் பிரித்துவிட்டால், இரண்டு யூனியன்கள்தான் அதில் இருக்கின்றன. ஒரு நகரம் இருக்கிறது. அதே நேரத்தில் தக்கலை கல்வி மாவட்டத்தில் இரண்டு நகரங்களும், 4 யூனியன்களும் வருகின்றன. வேலைப்பளுவை அடிப்படையாக வைத்தால் கூட, நாம் சொல்லுவதுதான் சரியாக இருக்கும். ஆருல் இங்கு சென்னையிலே கல்வி இலாக்கா அலுவலகத்தில் இருந்துகொண்டு



படத்தை வைத்துக் கொண்டே, அந்த ஊர்களின் இருப்பிடம் தெரியாமல் பிரித்ததனுல்தான் இவ்வாறு ஏற்பட்டது. மேலும் உயர்நிலைப் பள்ளிகளை மட்டும் கணக்கில் வைத்துக் கொண்டு, 27 பள்ளி, 27 பள்ளி என்று பிரித்திருக்கிருர்கள். ஆரம்பப் பள்ளி, நடுத்தரப் பள்ளிகளினுடைய வேலைப் பளு இதோடு சேர்க்கப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எனவே, அரசு புனர் பரிசீலனை செய்ய உத்தரவிட வேண்டுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நான் முதலில் கூறியபடி, இந்த மூன்று மாவட்டங்களினுடைய பெயர்களை வேண்டுமாருல் எடுத்துவிடுவோம். மொத்தம் மூன்று கல்வி மாவட்டங்கள் அமைய வேண்டும். எதையெதை எடுத்துக் கொண்டு, எதையெதை வைத்துக் கொண்டு மூன்று கல்வி மாவட்டங்கள் அமைக்கலாம் என்று உறுப்பினர் அவர்கள் யோசனை சொல்லலாம். குழித்துறை என்று கூட வேண்டாம், வேறு ஒரு பெயர் வேண்டுமாருல் சொல்லுங்கள். மூன்று கல்வி மாவட்டங்கள் அமையும் வண்ணம், அவற்றில் சமமான வேலைப்பளு வரத்தக்க அளவுக்கு, பிரித்துத் தருகின்ற ஒரு யோசனை தருவார்களேயாருல் மறுபடியும் இதை யோசிக்கலாம். தக்கலை, நாகர்கோவில், குழித்துறை என்பதையெல்லாம்கூட எடுத்துவிட்டு, விளவங்கோடு என்ற பெயர்கள் கூட போடலாம். பெயரைப்பற்றிக் கவலையில்லை. மூன்று கல்வி மாவட்டங்கள் அமைய வேண்டும். அதற்குக் கீழே வேலைப்பளு சமமாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலேதான் அதிகாரிகள் முடிவு செய்திருக்கிருர்கள். வேறு ஏதாவது முறையில் மாற்றியமைப்பதற்கு வாய்ப்பு இருக்கும் என்று கருதப்படுமாருல், மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் ஒரு யோசனை அதற்காகத் தந்தால், அதைப்பற்றி ஆராய்வதற்கு முயற்சி செய்யலாம்.

### *Lalgudi Educational District*

*148 Q. THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state :—

(*a*) whether it is a fact that the Headmasters' Association of Turaiyur Taluk in Tiruchirappalli District has represented to Government to reallocate the newly formed Lalgudi Educational District; and

(*b*) if so, the action proposed to be taken thereon?

### லால்குடி கல்வி மாவட்டம்

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) புதிதாக அமைக்கப்பட்ட லால்குடி கல்வி மாவட்டத்தை மீண்டும் பிரித்தளிக்குமாறு கோரி திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டத் தலைமை ஆசிரியர்கள் சங்கம் அரசுக்கு முறையீடு செய்துள்ளதா ?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு மேற்கொள்ளக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, சென்ற கேள்வியைப் போலவே இதுவும் தொடர்புடைய கேள்வி. அந்த அடிப்படையிலே கல்வி மாவட்டம் ஒன்று ஏற்படுத்தப்படும்போது, அங்குள்ள பள்ளித் தலைமையாசிரியர்களைக் கலந்தாலோசித்து, எந்த மாவட்டத்துடன் இணைக்கலாம் என்று அவர்களுடைய கருத்தை மனதில் வைத்து ஏற்படுத்தினால், இதுபோன்ற விவகாரம் ஒன்றும் ஏற்படாது. அந்த அடிப்படையில் மறுபடியும் பரிசீலனை செய்யும்போது அங்கே உள்ள தலைமை ஆசிரியர்களுடைய கருத்துக்களையும் அறிந்து, அதற்குப் பிறகு அரசு முடிவு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதிலும் பல சிக்கல்கள் வருகின்றன. அவரவர்கள் தங்களுக்கு இருக்கின்ற நலன்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு முடிவெடுக்கிறார்கள். இப்போது இருக்கிற திருச்சி கல்வி மாவட்டத்தில் திருச்சி தாலுக்காவும், முசிறி தாலூக்காவும் அமைந்திருக்கின்றன. அரியலூரிலே, அரியலூர் தாலூக்கா, பெரம்பலூர் தாலூக்கா, துறையூர் தாலூக்கா ஆகியவை அமைந்திருக்கின்றன. லால்குடி கல்வி மாவட்டத்தில், லால்குடி தாலூக்கா, உடையார்பாளையம் தாலூக்கா என்பவைகள் அடங்கியிருக்கின்றன. கரூர் கல்வி மாவட்டத்தில் கரூர் தாலூக்கா, குளித்தலை தாலூக்கா, மணப்பாறை தாலூக்கா ஆகியவை அமைந்திருக்கின்றன. ஆகவே அந்தப் பெயரைப் பார்க்கின்றபோது, அதோடு ஒட்டிய பகுதிகளாகத்தான் வருகின்றன. சில பல மாற்றங்கள் செய்ய வேண்டுமென்று சொல்லும்போது நான் முதலில் சொன்னதுபோல அமையுமானால், அதுபற்றிப் பரிசீலிக்கலாம். பணிகள் சிறப்பாக நடைபெற வேண்டும். ஒரு மைய இடத்திலிருந்து கண்காணிப்புக்கு ஏற்றபடி அது அமைந்திருக்க வேண்டும் என்றுதான் இதையெல்லாம் போடுகிறோம். புது மாவட்டம் என்ற ஒன்றை உருவாக்கும்போதுதான், இந்தச் சங்கடங்கள் எல்லாம் வருகின்றன. மதிப்பு மிகுந்த உறுப்பினர் போன்றவர்கள் எழுதி அனுப்புவார்களானால் பரிசீலனை செய்யலாம்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் தாலூக்கா வாரியாகப் பிரிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் தஞ்சாவூர் மாவட்டத்திலே ஒரு தாலூக்கா இரண்டாகப் பிரிக்கப்படும் நிலைமைகள்கூட உண்டு. அந்த அடிப்படையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல, நாங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கிறோம். அரசு மனமுவந்து மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.





### Selection Grade to Secondary Grade Teachers

***149Q. Thiru K. S. GANAPATHI :** Will the Hon. the Minister for Education be pleased to state :—

(*a*) whether it is a fact that the Government have directed that the services of the Secondary Grade Teachers and other Specialist Teachers in that category under different managements and agencies be taken into account for the purpose of granting Selection Grade Scales of Pay ; and

(*b*) if, so the reason for the denial of the same benefit to B.T. Assistants and others in the pay scale of Rs. 300—15—420—20—500?

### இடைநிலை ஆசிரியர்களுக்கு தேர்வுத்தரம்

திரு. கே.எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தேர்வுத்தர சம்பள வீதத்தை வழங்குவதற்காக, வெவ்வேறு நிர்வாகத்தின் கீழும், நிறுவனங்களின் கீழும் பணியாற்றும் இடை நிலை ஆசிரியர்கள், ஏனைய சிறப்பு ஆசிரியர்கள் ஆகியோரின் பணி கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்று அரசு கட்டளையிட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், ரூ. 300—15—420—20—500 சம்பள வீதத்தில் பணியாற்றும் பி.டி. ஆசிரியர்களுக்கு அதே நன்மை மறுக்கப்படுவதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா .நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இது பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, இது 1974-ஆம் ஆண்டு ஜூலை மாதம் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு. அதை மறு பரிசீலனை செய்வதற்கு கிட்டத்தட்ட 9 மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டது. இதனால் பல ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலை ஊதியம் கிடைக்கவில்லை. ஆதலால் உடனடியாக முடிவெடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இயக்குநர் அவர்கள் அந்த அளவுக்குச் சமமாக இருப்பவர்களுக்குக் கொடுக்கலாம் என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதன் காரணமாக எவ்வளவு நிதி செலவாகும் என்ற விவரம் அவரிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அது வந்தவுடன் இது பற்றி முடிவெடுக்கப்படும்.

*Opening of a Tourist Reception Centre near Madurai Junction.*

*150 *Q.* THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that a request has been made by the Tourist Traffic Advisory Committee, Madurai, to open a Tourist Reception Centre there near the Railway Junction ; and

(*b*) if so, the action taken thereon?

மதுரை ரயில்வே சந்திப்புக்கு அருகே ஒரு சுற்றுலாப் பயணிகள் வரவேற்பு நிலையம் அமைத்தல்.

திரு. பி.ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) மதுரை ரயில்வே சந்திப்புக்கு அருகே சுற்றுலாப் பயணிகள் வரவேற்பு நிலையம் ஒன்றை அமைக்க மதுரை சுற்றுலாப் பயணிகள் போக்குவரத்து ஆலோசனைக்குழு கோரியுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை. 1961–ம் ஆண்டு முதற்கொண்டே மதுரை சுற்றுலா அலுவலகத்தைச் சார்ந்ததொரு, சுற்றுலா தகவல் நிலையம் மதுரை இரயில் சந்திப்பில் சுற்றுலாப் பயணிகளின் நன்மைக்காக செயல்பட்டு வருகிறது.

THIRU G. VASANTHA PAI : Cannot the Government open some Tourist Information Offices both at Madurai Junction and at Air-port for the convenience of foreign tourists?

மாண்புமிகு டாக்டர் இரா .நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மதுரை ஜங்ஷனில் இப்போது " Information Office " ஒன்று இருக்கிறது. Air-port–ல் office இருக்கிறதா என்பதுபற்றித் தகவல் இல்லை. அதுபற்றி ஆராயலாம்.

*Deepening of Tanks in Kanyakumari District*

*151 *Q.* THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state —

(*a*) whether it is a fact that the Special Minor Irrigation Programme of depening tanks has not been implemented in Kanyakumari District; and



(*b*) if so, the steps proposed to be taken by the Government to implement the Scheme in the District?

கன்னியாகுமரி மாவட்டத்தில் குளங்களை ஆழப்படுத்தல்.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குளங்களை ஆழப்படுத்தும் தனித் திட்டம் கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அத்திட்டத்தை அம்மாவட்டத்தில் செயல்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் குளங்களை ஆழப்படுத்தும் திட்டங்கள் எதும் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, குளங்களை ஆழப்படுத்துவதற்கு ஒரு கிராஷ் புரோகிராம் மற்ற மாவட்டங்களில் செயல்படுவதாக அறிகிறேன். சென்ற ஆண்டு நான் அணுகிக் கேட்டபோது, அந்தத் திட்டம் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு, டிரான்ஸ்பார்ட் டெரிடரிக்கு. எக்ஸ்டென்ட் ஆகவில்லை என்று சொல்லப்பட்டது. அதனால்தான் இந்தக் கேள்வியை நாங்கள் போட்டோம். அப்படியிருக்குமானால் பரிசலனை செய்து அந்தத் திட்டத்தை நம் அரசு அமுல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அங்கு இருக்கிற நிலைமையே வேறு. ஏற்றத் தாழ்வு நிறைந்த பூமி. அங்கு இருக்கிற குளங்கள், ஏரிகள் எனலாம். ஆற்றுப் பாசனத்திற்கு நேரடியாகத் தண்ணீர் சேருகின்ற பகுதி ஏரிகள் ஆகும். அவைகளை ஆழப்படுத்துவது என்பது சாதாரண காரியம் அல்ல. மேலும் அது தேவையில்லை என்று தலைமைப் பொறியாளர்கள் எழுதியிருக்கிறார்கள். மேலும் அதை ஆழப்படுத்தி மண்ணை எடுத்து எங்கே கொட்டுவது என்பது பிரச்சினை. பக்கத்திலே உள்ள பூமிகளெல்லாம் விலையுயர்ந்த பூமி. கொட்டுவதற்கு வேறு இடம் இல்லை. ஆகவேதான், இப்போது சாத்தியமில்லை என்று நான் சொன்னேன்.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் ஏற்றத் தாழ்வு மிகுதியான பூமி. ஆற்றுப்பகுதி கால்வாயே கிணறுகளில் வந்து பாய்கிறது. ஆதலால் மழைகாலத்தில்தான் மண்மேடிட்டு விடுகிறது. ஆனால், அந்த மண்ணை எங்கே கொண்டுபோய்ப் போடுவது என்று வருகின்ற போது, அந்தந்தக் கரைகளிலேயே கரைகொள்கிற அளவுக்கு

கரையை பலப்படுத்தினால் தண்ணீருடைய கொள்ளளவும் அதிகப்படும், மற்ற மாவட்டங்களைப்போல பெருமளவு மண்ணை வேறு எங்கும் போட முடியாவிட்டாலுங்கூட, கரைகொள்ளும் அளவுக்குச்செய்ய பரீட்சார்த்தமாகவாவது ஒரு திட்டம் வகுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே. அதிலேயும் சில சிக்கல்கள் இருக்கின்றன. கரை கொள்ளும் அளவிற்கு அதிகமாக ஆக்கலாம் என்றால், பாசனத்திற்கு இருக்கின்ற பூமி ரொம்ப மேடான இடத்திலே இருக்கிறது. இதை எவ்வளவு அதிகமாக ஆக்கினாலும், கீழே தண்ணீர் போய்ப் பாய்வதில் சங்கடம் இருக்கிறது. இருந்தாலும் அங்கு அவர்கள் சொல்கின்ற யோசனையை ஆராய்ந்து, இந்த இலாகாவைப் பரிசீலிக்கச் சொல்கிறோம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவரவர்களே, விவசாயிகள் இதை உரங்களாகப் பயன் படுத்தினால் ஏதாவது ஆட்சேபணை இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு திரு. வெங்கடேஸ்வர தீக்ஷிதர் அதை எடுத்துக் கொள்வது பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவரவர்களே, இது வண்டல் மண். வண்டல் மண்ணை உரம் போல உபயோகிக்கலாம். உரம் விற்கின்ற விலையிலே கம்போஸ்ட் உரம் மாதிரி நிறைய ஜனங்கள் ஆசைப்பட்டு இதனை உபயோகப்படுத்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அப்படி யாராவது விவசாயிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இருந்தால், அதற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. அரசாங்கமும் தடுக்காது.

### *Desilting the Kandarathithan Tank in Ariyalur Taluk*

*152 *Q.* THIRU C. V. RAJAGOPAL (on behalf of Thavathiru Kundrakkudi Adigalar): Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether the Government have received any request to desilt the Kandarathithan Tank, Ariyalur Taluk, Tiruchirappalli District ; and

(*b*) if so, the action taken thereon by the Government?



அரியலூர் வட்டத்திலுள்ள கண்டராதித்தன் ஏரியை தூர் எடுத்தல்.

திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் வட்டத்திலுள்ள கண்டராதித்தன் ஏரியை தூர் எடுக்கும்படி அரசுக்கு கோரிக்கை வந்ததா ?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) இத்திட்டத்திற்கான மதிப்பீடு தலைப் பொறியாளர் தயாரித்து முடியும் நிலையில் உள்ளது.

### *Primary Marketing Societies.*

*153 Q. THIRU D. SANTOSHAM (on behalf of Thiru D.V. D'Monte) : Will the Hon. the Minister for Food a d Co-operation be pleased to state :

(*a*) the number of Primary Marketing Societies registered in Tamil Nadu during the calendar years from 1971 ; and

(*b*) the number of societies which are (i) doing business and (ii) defunct now?

தொடக்க விற்பனைச் சங்கங்கள்.

திரு. டி. சந்தோஷம் (திரு. டி. வி. டி. மாண்டி சார்பில்) : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971ஆம் ஆண்டிலிருந்து தமிழ் நாட்டில் எத்தனை தொடக்க விற்பனைச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன ?

(இ) அவற்றில் (1) தற்போது செயல்படும் சங்கங்கள் எத்தனை ? (2) செயலற்றுப் போன சங்கங்கள் எத்தனை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 9 சங்கங்கள்.

(இ) (1) 4 சங்கங்கள்.

(2) 3 சங்கங்கள்.

## Samayanallur Thermal Station.

*154. Q.—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(a) the ways in which the former site of the Samayanallur Thermal Station is being utilised; and

(b) the proposals, if any, for the fuller utilisation of the site, buildings and staff?

## சமய நல்லூர் அனல் மின் நிலையம்.

திரு. டி. சந்தோஷம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சமய நல்லூர் அனல் மின் நிலையம் முன்னர் இருந்த இடம் எவ்வகையில் இப்போது பயன் படுத்தப்பட்டு வருகிறது?

(இ) அந்த இடத்தையும் கட்டிடங்களையும், பணியாளரையும் முழு அளவில் பயன் படுத்திக்கொள்வதற்கான திட்டங்கள் எவையேனுமிருப் பின், அவை யாவை?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: (a) A pre-stressed concrete pole manufacturing Centre, a workshop manufacturing line materials, an auto-section for maintaining Board's vehicles and a body-building section for lorries and vans are now located in the site.

(b) Shifting of special maintenance sub-division from Pasumalai, a regional work-shop and utilisation of existing Railway siding at Power House premises for forming a Regional Stores for iron and steel materials are under way. Establishment of a Transformer Repair Bay is under consideration.

THIRU D. SANTOSHAM: Sir, considering the vast resources available there, will it not be possible to start a sophisticated industry like Bulb making and so on?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, அது தனியாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய விஷயம்.



திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, இந்த ரயில்வே சைடிங் இன்னும் அங்கு இருக்கிறது. வருடா வருடம் ரெயில்வேக்கு அரசு பணம் கட்டிக்கொண்டிருக்கின்றது. அது தேவைதானு? அப்படித் தேவையில்லை என்றால் எடுத்து விடலாமே. அதற்கு அவசியம் இருக் கிறதா? ஏன் வருடா வருடம் பணம் கட்டிக்கொண்டிருக்க வேண்டும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இப்போது திட்டத்தின் அடிப்படையிலே அது தேவை என்று கருதப் படுகிறது. அதற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 8,000 ஆகிறது என்று செலவுக் கணக்குக் கொடுத்திருக்கின்றார்கள். நாம் கருதிக்கொண்டிருக்கிற திட்டங் களுக்காக அந்த ரயில்வே சைடிங் பயன் படும் என்று சொல்கிறார்கள்.

(பிற்பகல் 4-10)

## Gherao of Deputy Chief Accounts Officer in the Revenue Unit Office at Podanur.

*155. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state:

(a) whether it is a fact that the Deputy Chief Accounts Officer in the Revenue Unit Office; at Podanur was gheraoed by some persons on 31st May 1974,

(b) if so, the reason therefor; and

(c) the action taken on the persons who kept the Officer in illegal confinement?

## போத்தனூர் வருவாய் பிரிவு அலுவலகத்திலுள்ள கணக்குத் துணை தலைமை அதிகாரியை முற்றுகையிடல்.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) போத்தனூர், வருவாய்ப் பிரிவு அலுவலகத்திலுள்ள கணக்குத் துணை தலைமை அதிகாரியை 1974 மே திங்கள் 31 ஆம் நாளன்று சிலர் சூழ்ந்து கொண்டு முற்றுகையிட்டது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) அந்த அதிகாரியைச் சட்டவிரோதமாக அடைத்து வைத்திருந் தவர்கள் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) பைக்காரா மின் வழங்கு ஏற்பாடு, போத்தனூர் வருவாய்ப் பிரிவில் பணிபுரியும் சிலர், அப்பிரிவைச் சேர்ந்த உதவிக் கணக்கு அதிகாரி 31-5-1974 அன்று பிற்பகல் அலுவலகத்தை மூடிவிட்டு வீட்டிற்குச் செல்வதைத் தடுத்து நிறுத்தினர்.

(இ) நெதமம் என்ற இடத்தில் புதிதாக வருவாய்ப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தியதன் விளைவாக, போத்தனூர் வருவாய்ப் பிரிவில் பணிபுரியும் 20 பணியாளர்களை இடமாற்றம் செய்வதற்கு இடமாற்ற ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. அவர்கள் 31-5-1974 அன்று பிற்பகல் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டனர். இடமாற்ற ஆணைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து, இடமாற்றம் செய்யப்பட்டவர்கள், அந்த ஆணைகளைப் பெற்றுக்கொள்ள மறுத்தனர்.

(உ) காவல்துறை உதவியை அதிகாரி நாடினார். காவல் துறை இன்ஸ்பெக்டரும் சம்பந்தப்பட்ட அதிகாரியும் அலுவலகத்தை விட்டு பணியாளர்களை போகச் சொன்னதற்கு அவர்கள் இணங்காததால், ஆர்ப்பாட்டக்காரர்களில் பத்துப்பேர் காவலர்களால் கைது செய்யப்பட்டனர். காவலர் அவர்கள் மீது குற்றவியல் நடை முறை சட்டக் கோவையின் 147-வது, 341-வது பிரிவுகளின் கீழ் வழக்குகளைப் பதிவு செய்தனர். அவர்கள் சொந்தப் பிணையம் அளித்ததன் பேரில் அன்றிரவே ஜாமீனில் விடப்பட்டனர். இவ்வழக்குகள் இன்னும் நீதி மன்ற விசாரணையில் இருந்து வருகின்றன.

THIRU G. SWAMINATHAN: What is the departmental action taken against those people?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, கிரிமினல் ஆக்ஷனை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கோர்ட்டிலே அந்த வழக்கு விசாரணையில் இருப்பதாகச் சொல்கின்றார்கள்.

THIRU G. SWAMINATHAN : Sir, I wanted to know what the departmental action taken against those people was ?

MR. CHAIRMAN : First of all, the Court will have to decide the case.

THIRU G. SWAMINATHAN : In spite of the criminal case, the department also can take action against persons who are indulging in indiscipline and are resorting to gheraos against the officers. The Courts may decide the case after a period of one or two years and during that time, these people will be continuing to work and this will lead to indiscipline and consequently discipline could not be enforced. What is the departmental action taken ?





THE HON. THIRU S. J. SADIQ PASHA : The hon. Member had put the question about the action taken and I had answered it.

THIRU G. SWAMINATHAN : Yes, Sir. But the Department has to enforce discipline. Unfortunately, there is much indiscipline and there is gherao of the officials. Therefore, some action has to be taken by the Department without waiting for the police to take the appropriate action. Till then, those people will have to continue in the office and discipline has to be enforced. The point involved in this is that there are a lot of gheraos in this Department and the higher officials are afraid of the officials in the lower rung. It is always the question of tail wagging the head and not the head wagging the tail.

MR. CHAIRMAN : The case is pending before the Court.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, காவல்துறை உதவி அதிகாரிகளை அவர் அணுகினார். He himself approached the Police. செக்ஷன் 147, செக்ஷன் 341-ன் கீழ் கேஸ் நடக்கிறது. இந்தக் கேஸ் முடிவுறவில்லை. விசாரணையில் இருக்கிறது.

THIRU D. SANTOSHAM : Have they been placed under ad interim suspension at least pending the decision of the Court ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Sir, I have no information about that.

THIRU G. SWAMINATHAN : The Hon. Minister says that he has no information on the point. How can we get the information ? We cannot put another question and wait for two years.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது அவர்கள் கேட்டது 31—5—1974-ல் நடைபெற்றதா என்பது. தனிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டார்கள். போலீஸ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எனக்கு வந்த தகவல்படி 147, 341 வது பிரிவுகளின் கீழ் வழக்கு நடைபெற்று வருகிறது. மற்ற விவரங்கள் என்னிடத்தில் இல்லை.

THIRU G. SWAMINATHAN: Sir, my question was about "the action taken on the persons who kept the Officer in illegal confinement". My subsequent question was: "What was the departmental action taken?" The Hon. Minister is referring to the action taken by the Police. As regards the question about the action taken by the department, the Hon. Minister says that he wants time. அதிகாரிகளை சட்ட விரோதமாக அடைத்து வைத்திருந்தவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சொல்லவேண்டும் Action being taken by the Police or by the Department. என்பது பற்றி விளக்கம் தேவை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்று கேட்டார்கள். நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்று சொன்னேன். டிப்பார்ட்மெண்டல் நடவடிக்கையா என்று கேட்கிறார்கள். அதற்கு விவரம் கையில் இல்லை என்று சொல்கின்றேன்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, பொதுவாக காவல் துறையிலே அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கும்போது, அந்த நடவடிக்கை முடியும் வரையில் "சஸ்பெண்ட்" செய்வது என்பது பல இலாக்காக்களில் இருக்கும் முறை. அந்த மாதிரி ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றதா என்பதுபற்றிதான் இப்போது கேள்வி. அதைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பு இல்லை என்கிறார்கள். அப்படி "சஸ்பெண்ட்" செய்யப்பட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுடைய கேள்வியிலிருந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று எண்ணுகிறேன். நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், மாண்புமிகு அங்கத்தினர்கள் கேள்வியை வைத்துக்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த இலாக்காவிற்குச் சொல்கின்றேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: என்ன திரு. ராஜகோபால்? பேசுவதற்கு கையை உயர்த்திவிட்டு, பக்கத்தில் பேசிக்கொண்டிருந்தால், என்ன செய்வது? பேசவில்லை என்றால் ஏன் கையைத் தூக்குகின்றீர்கள்?

THIRU C. V. RAJAGOPAL: Sir, the matter is already over here.

MR. CHAIRMAN: The hon. Member raised his hand. When he is called, he is talking with other members.





THIRU C. V. RAJAGOPAL: The question which I wanted to put has already been answered.

MR. CHAIRMAN: Then the hon. Member should have withdrawn his request. Why should the hon. Member raise his hand?

*Prosperity Brigade Scheme.*

*156 Q. THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state the amount allotted District-wise, under the Prosperity Brigade Scheme during 1972-73 and 1973-74?

சீரணி திட்டம்.

திரு. எல். பலராமன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1972-73, 1973-74-ஆம் ஆண்டுகளில் சீரணி திட்டத்தின்கீழ் மாவட்ட வாரியாக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அவை முன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, இது எந்த அடிப்படையில் மாவட்ட வாரியாக ஒதுக்கப்படுகிறது?

இந்த ஒதுக்கப்பட்ட தொகை சீரான முறையில் செலவழிக்கப்பட்டிருக்கிறதா என்று பரிசீலிக்கப்பட்டதா? சில மாவட்டங்களில் நல்ல முறையில் செலவழிக்கப்படவில்லையென்று புகார்கள் அரசுக்கு வந்திருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், சம்பந்தப்பட்ட இலாகாவைச் சேர்ந்தவர்களும் அனுப்புகின்ற விவரக் குறிப்புகளை வைத்துக்கொண்டு இந்தப் பணம் ஒதுக்கப்படுகிறது. இந்தப் பணம் சரியாக ஒதுக்கப்படுகிறதா என்பது பற்றி கணக்குகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, சில மாவட்டங்களில் ஒதுக்கப்பட்ட பணம் சரியான முறையில் செலவழிக்கப்படவில்லையென்ற புகார் அரசுக்கு வந்திருக்கிறதா? அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது என்று நான் அறிய விரும்புகிறேன்.

---

@ 409 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

(பிற்பகல் 4·20)

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, அப்படி ஒன்றும் வரவில்லை. ஆனால் அதிகமாகப் பணம் தேவை என்று தான் பல மாவட்டங்களிலிருந்து மனுக்கள் வந்திருக்கின்றன.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, எங்கள் மாவட்டத்தில் கூட மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணம் முறையாகச் செலவழிக்கப்படவில்லை என்று கூறப்பட்டது. அங்கே அது பற்றி நடவடிக்கை எடுப்பதாகக் கூறியும் இதுவரை நடவடிக்கை எடுக்கப் படவில்லை என்ற நிலை இருப்பது அரசுக்குத் தெரியுமா? அது குறித்து அரசு என்ன கருதுகிறது என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, இது சம்பந்தமாக மாவட்ட அபிவிருத்தி மன்றத்திலிருந்து அரசுக்கு எந்த விதமான முறையீடுகளும் வரவில்லை.

*Candidates allotted to the Board of Revenue (Land Revenue).*

*157 Q. THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Revenue be pleased to state with reference to the answer given to Legislative Council Question No. 16, on the floor of the Council on 16—12—1974—

(a) whether the Government are aware of the fact that some of the candidates recruited through Group IV Services during the year 1973 and allotted to the Board of Revenue (Land Revenue) during the years 1973 and 1974 by the Tamil Nadu Public Service Commission have been retrenched from service;

(b) if so, the reasons therefor; and

(c) whether the Government propose to re-employ them in the Board of Revenue (Land Revenue) or request the Tamil Nadu Public Service Commission to re-allot them elsewhere?

வருவாய் (நில வருவாய்) வாரியத்திற்கு ஒதுக்கீடு பெற்றவர்கள்.

திரு. செ. முத்துசாமி: 16—12—1974-ல் சட்டமன்ற மேலவையில் வினா எண் 16-க்கு அளிக்கப்பட்ட விடையையொட்டி மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:



(அ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகம் நடத்தும் தொகுதி IV பணித் தேர்வுகள் மூலம் 1973-ல் நியமிக்கப்பட்டு, இக் கழகத்தால் 1973–74-ல் வருவாய் (நில வருவாய்) வாரியத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சிலர் பணியிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) வருவாய் வாரியத்தில் (நில வருவாய்) அவர்களை மீண்டும் பணியிலமர்த்த அல்லது அவர்களை மீண்டும் வேறெங்காவது பணியிலமர்த்துமாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் கழகத்தைக் கேட்டுக் கொள்ள அரசு கருதியுள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) மதுவிலக்கை மீண்டும் செயலுக்குக் கொண்டு வந்ததனால், சில பதவிகள் நீக்கப்பட்டன. இதனால் ஆட்குறைப்புச் செய்யவேண்டியது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

(உ) ஆட்குறைப்புச் செய்யப்பட்ட பணியாளர்கள் அனைவரும் வருவாய்த் துறை வாரிய அலுவலகத்தில் (நில வரிப்பிரிவில்) மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

*Underground Drainage System in Madras City.*

*158 Q. THIRU M. SANKARALINGAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(a) whether there is any proposal under the consideration of the Government to construct an Underground Drainage System, with a view to prevent the flow of drainage water from several parts of the city into the Cooum River and Buckingham Canal, in Madras City; and

(b) if so, the present stage of the Scheme?

சென்னை நகரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்.

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை நகரினுள் ஓடும் கூவம் நதி, பக்கிங்காம் கால்வாய் ஆகியவைகளில், நகரின் பல பகுதிகளிலிருந்து வரும் சாக்கடை நீரைத் தடுக்கும் பொருட்டு பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

(இ) ஆமெனில், அத் திட்டம் எந்நிலையில் உள்ளது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) கூவம் ஆற்றிலே கழிவு நீர் கலப்பதைத் தடுப்பதற்கான மாநகர் வடிகால் II-வது மண்டலத் திட்டம் முடிக்கப்பட்டு செயல்படத் தொடங்கியுள்ளது. மேலும் கழிவு நீரைச் சேகரித்து, சாக்கடைகளில் விடுவதற்காக, கூவம் ஆற்றின் கரைகளில் வெவ்வேறு இடங்களில் கழிவுநீர் சேகரிக்கும் எட்டு கிணறுகளை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றில் ஆறு கிணறுகள் கட்டி முடிக்கப்பட்டு அவற்றில் கழிவுநீர் விடப்பட்டுள்ளன. எஞ்சிய இரண்டு கிணறுகள் முடிக்கப்பட்டு, மிக விரைவில் அவை பயனுக்குக் கொண்டு வரப்படும். பக்கிங்ஹாம் கால்வாயைப் பொறுத்தவரையில் இக் கால்வாயில் கழிவுநீர் கலப்பதைக் கட்டுப்படுத்துவதற்கான 5-வது மண்டல மாநகர வடிகால் திட்டம் முடிக்கப்பட்டு, அது ஓரளவு பயனுக்குக்கொண்டு வரப்பட்டுள்ளது.

THIRU G. VASANTHA PAI : Sir, cannot the sewage be diverted into the sea by putting pipes, mile-long pipes through the sea?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, முதலிலேயிருந்து ஒரே பகுதியாக வருகின்ற ஒரு திட்டம் இருந்தது. இப்பொழுது அதை மாற்றி 5 மண்டலமாகப் பிரித்து, ஐந்து பாதைகளாக அதற்கு பைப்புகள் போடப்பட்டிருக்கின்றன. அந்தத் திட்டம் ஜார்ஜ் டவுனிலிருந்து ஒரு திட்டமாக 289 இலட்சத்திலும், புரசைவாக்கத்திலிருந்து 211 இலட்சத்திலும், கோடம்பாக்கத்திலிருந்து 135 இலட்சத்திலும், சைதை பகுதியிலிருந்து 116 இலட்சத்திலும் தென் சென்னைப்பகுதிக்கு 278 இலட்சத்திலும் இப்பொழுது ஐந்து மண்டலங்களாக பிரித்து, அதைத் தனித் தனியே கொண்டு போய் அந்தத் தண்ணீரை ஒரு இடத்திலே சேகரித்து, பிறகு அந்தத் தண்ணீரை சுத்தப்படுத்தி, அதிலிருந்து புல் விளையவைத்து, அதை இப்பொழுது ஒரு நல்ல திட்டமாகச் செயல் படுத்திக் கொண்டு வருகிறோம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, கூவத்திலே சாக்கடை நீர் போகாமல் நல்ல நீர் வந்து அதிலே நாம் படகிலேயும் பிரயாணம் செய்கிற மாதிரி ஏற்பாடுகள் எல்லாம் செய்ய வேண்டுமென்பதற்காகத் தான் கூவம் சீரமைப்புத் திட்டம் வந்தது. ஆனால் சீரமைப்புத் திட்டம் எல்லாம் முடிவடைந்த பிறகு, அதற்கு ஒரு விழாவும் எடுத்த பிறகு, மறுபடியும் இன்றைக்கு அந்தச் சாக்கடை நீர் அதற்குள்ளே ஓடிக் கொண்டிருந்தால், அந்தத் திட்டம் என்ன ஆயிற்று, ஏன் அந்த நிலைமை ஏற்படுகிறது என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னது போல, ஐந்து மண்டலமாகப் பிரித்து இப்பொழுது திட்டமிட்டு பணி நடந்து கொண்டிருக்கிறது. இரண்டாவது மண்டலம் என்று சொல்லக்கூடிய புரசைவாக்கம் பெரம்பூர் பகுதியிலிருந்து வரும் தண்ணீர் மட்டும் தான் கூவம் நதியில் கலந்து கொண்டிருந்தது. அந்தத் திட்டம் இப்பொழுது முடிந்து விட்டது. இனி கூவத்திற்குள் சாக்கடைத் தண்ணீர் செல்வாய்ப்பிருக்காது.





THIRU G. VASANTHA PAI : Sir, my question was this. Why should the sewage not be sent into the sea through pipes? But the Hon. Minister is mentioning something about Mandalams and the use of the sewage water internally. Why is this sewage not being pumped into the sea by mile-long pipes as it is done in the other places?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, தேவையில்லாத அந்த நீரைப் பயன்படுத்தி அதைச் சுத்தப்படுத்தி வேளாண்மைத் துறைக்குப் பயன்படுத்தலாம். இன்னும் அதை சுத்தப்படுத்தினால் அதையே இண்டஸ்ட்ரீஸ் இருக்கிற இடத்துக்குப் பயன்படுத்தலாம் என்ற ஒரு ஆராய்ச்சியும் நடக்கிறது. அதனால் அதைக் கடலுக்குக் கொண்டுபோக வேண்டிய அவசியம் இல்லையென்றுதான் இந்த ஐந்து திட்டங்களும் போட்டிருக்கிறோம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்தப் பிரச்சினைகள் எல்லாம் பேசப்பட்டு மொத்தமாகத்தான் கூவம் சீரமைப்புத் திட்டம் போடப்பட்டது. ஆனால் எடுக்கப்பட்ட பிறகு மறுபடியும் இப்படி ஒரு திட்டம் போட வேண்டிய அவசியம் என்ன? அந்தத் திட்டம் ஏதாவது தோல்வியடைந்ததா? நாம் அதில் எதிர்பார்த்த அளவு செய்ய முடியாமல் இருந்ததா? என்ன காரணத்தினால் இப்பொழுது மறுபடியும் ஏற்பட்டிருக்கிறது? அந்தத் திட்டம் 3, 4 ஆண்டுகளாக நடந்து கொண்டிருந்த திட்டம். பல விதமாகப் பேசப்பட்ட திட்டம். நிபுணர்களை எல்லாம் கலந்து ஆலோசிக்கப்பட்ட திட்டம். எல்லாம் செய்த பிற்பாடு மறுபடியும் இந்தச் சாக்கடை ஓடுகிறது. மறுபடியும் அந்தப் பிரச்சினை இப்பொழுது பேசப்படுகிறது ஏன் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இந்த ஸ்டார்ம் வாட்டர் முழுவதும் கூவத்தில் போய் வீழ்ந்து கொண்டிருக்கிறது. சில பெரிய வீடுகளில் கார்ப்பரேஷனுக்குத் தெரியாமலேயே தங்களுடைய சூவேஜுகளை, ஸ்டார்ம் வாட்டரைக் கொண்டு வந்து சேர்த்துவிட்டார்கள். வாய்க்கால்களில் ஓடி அந்தச் சாக்கடை நீர் எல்லாம் இப்பொழுது கூவத்தில் வந்து சேர ஆரம்பித்து விட்டது. ஆங்காங்கே அதுமாதிரி இருக்கிறது என்று கண்டுபிடித்து வீட்டுக்காரர்களுக்கெல்லாம் தெரிவித்து நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். மாநகராட்சி அதிகாரிகளை நான் கூப்பிட்டு முழுமையாக இது பற்றி விசாரித்தேன். அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது இப்பொழுது போடப்பட்டதல்ல. 7, 8 ஆண்டு காலமாக போடப்பட்டு வந்த இயந்திரம் இப்பொழுது தான் நிறுவப்பட்டு கமிஷன் செய்யப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். கமிஷன் செய்யப்பட்ட பிறகு கூவத்தில் வந்து விழுகிற சாக்கடைத் தண்ணீரின் அளவு குறைந்திருக்கும், ஏனென்றால் பல மனிதர்களுடைய வீடுகளிலே அரசாங்கத்திற்குத் தெரியாமலே இப்படி விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் கண்டு பிடித்து அடைத்துக் கொண்டிருக்கிறார்கள். சீக்கிரத்தில் அவைகளையெல்லாம் கண்டுபிடித்து அடைத்து முடித்து விடுவதாக மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

THIRU G. VASANTHA PAI : Is it not a fact that all the sewage water from the General Hospital comes into the cooum ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, உண்மை தான். அதையும் எப்படித் தடுப்பது என்பது பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது வீடுகளில் வரும் கழிவு நீரைப்பற்றி மட்டும் சொன்னார்கள். நானே அந்தக் கேள்வியை கேட்க வேண்டுமென்று தான் இருந்தேன். ஏன் அமைச்சர் அவர்கள் அதை விளக்கவில்லை என்று தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நான் ஒத்துக் கொண்டேன். அதைப்பற்றி அதிகாரிகளிடத்தில் கலந்து பேசினேன். அதை எப்படித் தடுத்து நிறுத்தி வேறு பக்கமாகக் கொண்டு செல்வது என்பது பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

*Representation from the Panchayat Unions.*

159 *Q.* THIRU D. SANTOSHAM (on behalf of THIRU D.V.D.' Monte) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(*a*) whether any representation was made to the Government on behalf of the Panchayat Unions in the State to accord permission to appoint teachers according to their requirements ; and

(*b*) if so, the action taken by the Government thereon?

ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து முறையீடு.

திரு. டி. சந்தோஷம் : (திரு. டி.வி.டி' மாண்டி சார்பில்) : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) இம்மாநிலத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களின் தேவைகளுக்கேற்ப ஆசிரியர்களை நியமிக்க அவற்றிற்கு அனுமதி அளிக்க வேண்டுமெனக் கோரி அவற்றின் சார்பில் முறையீடு ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் பேரில் அரசு எடுத்த நடவடிக்கை யாது ?



மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) & (இ) : ஆம். தற்பொழுது அரசு அனுமதிக்கும் கூடுதல் ஆசிரியர் பதவிகள் ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மற்ற பள்ளிகளுக்கும் மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக பள்ளிக் கல்வி இயக்குநர் பகிர்ந்தளிக்கிறார். அவ்வாறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்படும் கூடுதல் ஆசிரியர் பதவிகள் தவிர, ஊராட்சி ஒன்றியங்களே தங்கள் தேவைக்கேற்ப கூடுதல் ஆசிரியர்களை நியமனம் செய்ய அவைகளுக்கு அனுமதி அளிக்கமுடியாது.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, இப்படி டி. இ. ஓ. அவர்களால் வழங்கப்பட்டிருக்கக்கூடிய பதவிகள் நிர்வாகத்திலே இருக்கக் கூடிய தகராறுகள் காரணமாக நிரப்பப்படாமலேயே "சாண்டர்" செய்யப் பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே. அப்படித் தகவல் இல்லை.

*Trustees of Arulmigu Ranganathaswami Devasthanam.*

*160 *Q.* THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether it is a fact that 2 posts of trustees of Arulmigu Ranganathaswami Devasthanam, Srirangam, have not been filled up from November 1973; and

(*b*) if so, the reason therefor?

அருள்மிகு அரங்கநாத சுவாமி தேவஸ்தான அறங்காவலர்கள்.

திரு. கே. எஸ். கணபதி ; மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருவரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி தேவஸ்தானத்தில் இரண்டு அறங்காவலர்கள் பதவிகள் 1973-ஆம் ஆண்டு நவம்பரிலிருந்து நிரப்பப்படாமல உள்ளனவா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) மேற்படி திருக்கோயிலின் நிர்வாகத்திற்கென போர்டாரால் ஏற்படுத்தப்பட்ட நிர்வாகத் திட்டத்தின்படி நியமனம் செய்யப்படவேண்டிய மாத்வர் தென்கலை மற்றும் வடகலை வைணவர் வகுப்பினருக்காக இடங்களை

நிரப்ப வேண்டி மேற்படி இனத்தைச் சேர்ந்த தகுதி வாய்ந்த நபர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளதால், இரண்டு இடங்கள் காலியாக உள்ளன.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, இந்தக் காலியான இடங்கள் 2 ஆண்டுக் காலமாகக் காலியாக இருக்கின்றன. சாதாரணமாக அறங்காவலர்களுடைய பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னாலேயே விண்ணப்பங்கள் பெற்று நிரப்பப்படுவது முறை. இருந்தும், விண்ணப்பங்கள் பெறப்பட்டும் இன்னும் நிரப்பப்படாமல் இருப்பதன் நோக்கம் என்ன என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, நிரப்பப்படாமலிருப்பதற்கு எந்த நோக்கமும் இல்லை. 22—11—1973-ல் இந்த இடங்கள் காலியாயின. 18—12—1973-லேயே ஆணையருக்கு விண்ணப்பங்கள் எல்லாம் விசாரணை செய்யப்பட்டு வந்து விட்டன. ஆனால் ஏற்கெனவே நாம் இயற்றியிருக்கின்ற சட்டத்தின்படி, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவரைக் கட்டாயம் கோயிலில் நியமிக்க வேண்டுமென்ற சட்டத்தின்படி, தாழ்த்தப்பட்டவர்களை இந்தக் கோயிலில் நியமிக்க முடியுமா முடியாதா என்ற ஒரு பிரச்சினை இருந்தது. ஆகவேதான் அதைப் பரிசீலனை செய்து கடைசியில் சென்ற 3 மாதங்களுக்கு முன் நியமிக்கலாமென்று முடிவெடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை நியமிக்க வேண்டுமென்று முடிவு எடுத்ததற்குப் பிறகு, மேலும் ஒரு இடம் காலி ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினால், அதையும் சேர்த்து நிரப்பலாம் என்று விண்ணப்பங்கள் கேட்கப்பட்டுள்ளன.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தென்கலையைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டுமா அல்லதுவட கலையைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வடகலையைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு வாரம், தென்கலையைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு வாரம் என்று வைத்துக் கொள்ளலாமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தென்கலை, வடகலை என்ற இரு வகைக் கலையைச் சார்ந்தவர்களும் அந்தத் தாழ்த்தப்பட்ட பிரிவிலே இருக்கின்றார்கள். ஆகவே, எந்தப் பிரிவில் உள்ளவர்களும் தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தால் விண்ணப்பிக்கலாம். தகுதியுடையவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவரவர்களே, திருவரங்கம் கோயில் என்பது ஒரு ஆல் இண்டியா விசிட்டர்ஸ் சென்டர். தேசிய அளவிலே போற்றப்படக்கூடிய சிறப்பு வாய்ந்த யாத்திரிக ஸ்தலம். இங்கு முதலில் இரண்டு பதவிகள் காலியாக இருந்தன. பிறகு மூன்று பதவிகள் காலியாக இருந்தன. நான் சமீபத்திலே வரும்போது எனக்குக் கிடைத்த தகவல்படி, நான்கும் காலியாக இருக்கின்றன என்று தெரிகிறது. "ரொட்டேசன் டிரஸ்டியைத் தவிர்த்து இந்த செண்டரிலே உடனே இந்தப் பதவிகளை நிரப்ப வேண்டியிருப்பதனால், இதுவரை நிரப்பப்படாததற்குக் காரணம் என்ன ? தகுதியுடையவர்கள் மனுப் போடவில்லையா ? அல்லது அந்த அரிசனுக்கு ஒதுக்கப்பட்ட இடத்துக்குத் தகுதியுடையவர்கள் விண்ணப்பிக்கவில்லையா ? அப்போதைக்கப்போது ஏற்படும் காலியிடங்களை உடனுக்குடன் நிரப்பாமலிருப்பதன் காரணம் என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.



(பிற்பகல் 4–30)

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அதற்கான உண்மையான காரணத்தைத்தான் நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். சில வகுப்பினரை மட்டுமே போட வேண்டுமென்று ஏற்கெனவே ஒரு திட்டம் இருக்கின்றது. அந்தத் திட்டத்தின்கீழ் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவரை நியமிக்க முடியுமா என்ற கேள்வி எழுந்தது. சென்ற ஆண்டு அதற்கான விண்ணப்பங்கள் எல்லாம் வாங்கப்பட்டதற்குப் பிறகு, சட்டத் துறையும் அறநிலையத் துறையும் பரிசீலனை செய்து தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர், வடகலை, தென்கலையைச் சேர்ந்தவர்கள், ஆகியவர்களிடத்தில் விண்ணப்பங்கள் வாங்கி நியமிக்கலாம் என்ற கருத்து தெரிவித்த பிறகு, மீண்டும் இப்போது விண்ணப்பங்களைக் கேட்டுள்ளோம். அதற்குப் பிறகு, மீண்டும் ஒரு அறங்காவலர் பதவி காலியாகியது. எனவே மூன்றாவது இடத்திற்கும் இப்பொழுது விண்ணப்பங்கள் கேட்டிருக்கிறோம். இப்போது மேனேஜிங் டிரஸ்டியாக இருக்கக்கூடியவர் பணியாற்றுகிறார். நிர்வாகம் எந்தக் காரணத்தைக் கொண்டும் அதனாலே கெட்டுவிடவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, இந்த ஐந்து ஆண்டுகளிலே ஒரு இடம் தவிர நான்கு இடங்களில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு இடம் காலியாகிறது. இப்படி இருக்கும்போது தாழ்த்தப்பட்ட வகுப்பினரை எந்த ஆண்டு வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளலாம். அதற்காக மூன்று ஆண்டுகளாகக் காலியாக வைத்திருப்பதற்கு ஏதாவது உள நோக்கம் இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்வதற்குத்தான் இந்த வினாவையே எழுப்பினேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இதிலே உள்நோக்கத்திற்குப் பிரச்சினையே கிடையாது. தென்கலை வைணவர், வடகலை வைணவர், மாத்வர் போன்றவர்களை நியமிக்கலாம் என்று இருக்கிறது. 22—11—1973-அன்று இடம் காலியானது. தென்கலை, வடகலை ஆக இரண்டு பிரிவினரையும் நியமனம் செய்ய வேண்டிய இடங்கள் காலியானது. ஆகவே இந்த இரண்டு இடங்களுக்கும் அவர்கள் வழக்கமாகக் கேட்கின்றதைப்போல விண்ணப்பங்கள் கோரப்பட்டு, ஆணையாளரிடம் வந்து சேர்ந்தது. நாம் ஏற்கெனவே சட்ட சபையிலே கொடுத்திருக்கிற வாக்குறுதி என்னவென்றால், அறங்காவலர் பதவிக்கு எந்த ஒரு இடம் காலியானாலும், அதற்கு முதலிடம் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பது. ஆகவேதான் இரண்டு

இடங்களில் ஏதாவது ஒரு இடத்திலே தாழ்த்தப்பட்ட சமூதாயத்தைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டு, அதன் பேரிலே இந்த இரண்டு பிரிவினரும் தாழ்த்தப்பட்ட சமூதாயத்திலே வருகிறார்களா என்று சட்டத் துறையைக் கேட்டு, அதற்குப் பிறகு விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அதற்குப் பிறகு, 14—10—1974 அன்று வடகலை வைணவர் இடம் காலியானது. ஆகவே அதற்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, அவை வந்திருக்கின்றன. அவை இப்பொழுது பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம் : தாழ்த்தப்பட்ட வகுப்பினரில் தென் கலை, வட கலை என்ற பிரிவினர் இருக்கின்றனரா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இருப்பதாகத்தான் சொல்கிறார்கள்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, இப்பொழுது மூன்று இடங்கள் காலியாகி உள்ளன. தென் கலை, வட கலை, மத்வர் ஆகிய மூன்று பிரிவுகளில், எந்தப் பிரிவு இடத்திற்கு தாழ்த்தப்பட்டவரை நியமிப்பதாக அரசு பரிசீலனை செய்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, எந்தப் பிரிவிலே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் வருகின்றார்களோ, அந்த இடத்திற்கு நியமிக்கப்படும்.

## *Renovation of Arulmigu Athitheeswar Temple*

*161Q—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state:—

(*a*) whether there is any proposal with the Government to repair and renovate Arulmigu Athitheeswar Temple in Devasthanam village, Vaniambadi taluk, North Arcot district; and

(*b*) if so, the estimate of expenditure thereof?

## அதிதீஸ்வரர் ஆலயத்தைப் புதுப்பித்தல்

திரு. எல். பலராமன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வாணியம்பாடி தாலூக்கா தேவஸ்தானம் கிராமத்தில் உள்ள அருள்மிகு அதிதீஸ்வரர் ஆலயத்தைப் புதுப்பித்து திருப்பணி செய்ய அரசிடம் திட்டம் ஏதும் உண்டா?

(இ) ஆமெனில், அதன் உத்தேச மதிப்பீடு யாது?



மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) உண்டு.

(இ) திருக்கோயிலின் திருப்பணி வேலைகளுக்கான ரூ. 37,000-க்கு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, இந்தப் பணி எப்பொழுது ஆரம்பிக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அறநிலைய ஆட்சித் துறையினால் 21—6—1972-லேயே அனுமதிக்கப்பட்டிருக்கிறது. திரு. வெங்கடேச முதலியார் அவர்களைத் தலைவராகக் கொண்ட திருப்பணிக் குழு ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் கோயில் வருமானம் மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலும், திருப்பணிக் குழுவினர் சரியான முயற்சியிலே ஈடுபடமுடியாத காரணத்தினாலும், போதுமான பணவசதி இல்லாமல் இந்த வேலை தடைபட்டுள்ளது. விரைவில் ஆரம்பித்து முடிப்பதற்கான நிலைமை எதிர்காலத்திலே ஏற்படலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. உரிமைப் பிரச்சினை.

### "நாத்திகம்" நாளிதழில் அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட பகுதி பிரசுரிக்கப்பட்டது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்ற மேலவை 157-வது விதியின்கீழ் திரு வி. வெங்கா அவர்கள் கீழ்க்கண்ட உரிமைப் பிரச்சினைக்கு முன்னறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். அது பின்வருமாறு :

"மார்ச் திங்கள் 7 ஆம் நாள் மேலவை உறுப்பினர் திரு. பக்கர் அவர்கள் பேசும்போது அவரது பேச்சின் ஒரு பகுதி முதல்வர் அவர்களின் வேண்டுகோளின்படி மேலவைக் குறிப்பிலிருந்து தலைவர் அவர்களின் ஆணைப்படி நீக்கப்பட்டு விட்டது. மேலவைத் தலைவர் அவர்களால் நீக்கப்பட்ட அப்பகுதி 8—3—1975 அன்றைய நாத்திகம் ஏட்டில் கட்டம் போட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இது மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது உரிமை மீறல் நிகழ்ச்சியாக இருப்பதால் இதை தலைவர் அவர்கள் உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கும்படி வேண்டிக்கொள்கிறேன் ".

உறுப்பினர் முன்னறிவிப்பில் சொல்லியவாறு நாத்திக நாளேட்டில் இந்த அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட பகுதி கட்டமிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப் பட்ட பகுதிகள் பிரசுரிக்கப்படக் கூடாது. அவ்வாறு பிரசுரித்தால், அது இந்த அவையின் உரிமையை மீறுவதாகும்.

இப்பிரச்சினை மீது முடிவெடுப்பதற்கு முன்பு பத்திரிகையின் ஆசிரியரையும் அதைப் பிரசுரித்தவரையும் விளக்கம் கேட்டு, அவர்கள் அளிக்கும் விளக்கத்திற்குப்பின் இந்த பிரச்சினையை மேலும் பரிசீலிக்கலாமென்று கருதுகிறேன். அதன்படி ஆசிரியரையும் அதைப் பிரசுரித்தவரையும் விளக்கம் கேட்ட பின் அவையில் அறிவிப்பேன்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### வேலூர் சி.எம்.சி. மருத்துவ மனையில் வேலைநிறுத்தம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திரு. டி. சந்தோஷம் அவர்கள் சி.எம்.சி. மருத்துவமனைப் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்துள்ளார்கள்.

Negotiations are going on. It may be taken up after 21st March.

## 4. அறிவிப்பு

### அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு குறித்து

MR. CHAIRMAN: At a meeting of the Business Advisory Committee held at 3-30 p.m. to-day, the following revised programme of business has been decided:





| | |
|---|---|
| 12—3—1975 to 21—3—1975 | No meeting. |
| 22—3—1975 | 1. Presentation of Final Supplementary Statement of Expenditure for the year 1974–75 (subject to fixing of date by the Governor).<br>2. Passing of vote on Account Bill.<br>3. Government Bills to replace Ordinances. |
| 23—3—1975 | Holiday. |
| 24—3—1975 | Discussion on the Final Supplementary Statement of Expenditure for the year 1974–75. |
| 25—3—1975 | Discussion on the Policy Note on Food and Civil Supplies. |
| 26—3—1975 | Holiday—Meeladi Nabi. |
| 27—3—1975 | Discussion on the Policy Note on Medical, Public Health and Urban Development. |
| 28—3—1975 | Holiday—Good Friday. |
| 29—3—1975 | 1. Passing of Appropriation Bill, 1975.<br>2. Discussion on Policy Note on Road Transport. |
| 30—3—1975 | Holiday—Sunday. |
| 31—3—1975 | Discussion on the Policy Notes on Head of State, Ministers, Headquarters Staff and District Administration. |
| 1—4—1975 and 2—4—1975 | Discussion on the Policy Note on Education. |
| 3—4—1975 to 10—4—1975 | No meeting. |
| 11—4—1975 | Consideration of Appropriation Bill, 1975. |

12—4—1975 to 15—4—1975 } No meeting.

16—4—1975 to 18—4—1975 } Consideration of Official Bills.

The Council will meet daily from 4 p.m. to 7 p.m.

5. கவன ஈர்ப்பு

தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மாவட்டங்களில் தாளடி நெற்பயிருக்கு அதிகமான லெவி குறித்து.

THIRU K.S. GANAPATHI: Hon. Chairman, Sir, I wish to call the attention of the Hon. the Minister for Food to a matter of urgent public importance, namely, the very poor paddy yield from the Thaladi paddy crop in the districts of Thanjavur and Tiruchirappalli and the exorbitantly high quantity of paddy levy and the consequent hardship caused to the agriculturists of the district.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 1975-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 2-ம் நாள் முதல் தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் நிலவி வரும் லெவி விகிதங்கள் பின்வருவன :—

| (1) | ஆற்றுப் பாசன வசதி பெற்ற நிலங்கள். (2) | குளங்கள் சிறு நீர்ப்பாசன வசதி பெற்ற நிலங்கள். (3) |
|---|---|---|
| | குவி. | குவி. |
| 0·50 ஏக்கருக்குமேல் 1 ஏக்கர் வரை .. | 0·75 | .. |
| 1 ஏக்கருக்குமேல் 2 ஏக்கர் வரை .. .. | 3·50 | 1·00 |
| 2 ஏக்கருக்குமேல் 3 ஏக்கர் வரை .. .. | 4·50 | 2·00 |
| 3 ஏக்கருக்குமேல் 5 ஏக்கர் வரை .. .. | 5·70 | 3·00 |
| 5 ஏக்கருக்குமேல் 7 ஏக்கர் வரை .. .. | 7·00 | 4·00 |
| 7 ஏக்கருக்குமேல் .. .. .. .. | 7·50 | 4·00 |



திருச்சி மாவட்டம்:

மாவட்ட வருவாய்த்துறை அதிகாரியின் குறிப்பின்படி 39,000 ஏக்கர் நிலங்கள் தாளடி பருவத்தில் பயிரிடப்பட்டுள்ளது. அவற்றில் 75 சதவீதம் சாவி ஆகிவிட்டது.

அரசாணையில் கண்டுள்ள லெவி விகிதங்கள்படி, முன்னதாகவே லெவி முன்னறிவிப்புகள் விவசாயிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஆனால் விளைச்சல் குறைவாக உள்ள இடங்களில் நிலைமையை பரிசீலனை செய்து ஆங்காங்கு லெவி வசூலிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். தாளடிப் பருவத்தில் நெல் பயிரிடப்பட்டுள்ள உற்பத்தியாளர்களிடமிருந்து லெவி வசூல் வற்புறுத்தப்படவில்லை.

தஞ்சை மாவட்டம் :

தாளடி பயிர் 305,606 ஏக்கர் நிலங்கள் பயிரிடப்பட்டுள்ளன. ஆனால் பஞ்சத்தின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மன்னார்குடி, தஞ்சை, பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு வட்டங்களில் ஏறத்தாழ 50,000 ஏக்கர்களில் பயிர் சாவியாகிவிட்டது. விளைச்சல் குறைவாக உள்ள இடங்களில் நிலைமையை பரிசீலனை செய்து ஆங்காங்கு லெவி விகிதங்கள் அதிகாரிகளால் குறைக்கப்பட்டு வருகின்றன.

நம் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள மிக நெருக்கடியான உணவு நிலைமையை கருத்திற்கொண்டு விவசாய பெருமக்கள் கொள்முதலுக்கு முழு மனதுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, சென்ற மாதம் 26-ம் தேதியன்று அந்த இடங்களைப் பார்வையிட்டு வந்த அதிகாரி, ஐ.ஏ.டி.பி. ப்ரோக்ராம் டைரெக்டர் அவர்கள் அந்தப் பகுதியிலே கிட்டத்தட்ட எட்டாயிரம் ஏக்கர் நிலத்திலே தாளடி அறுவடையாகியிருக்கின்றது என்றும் அவற்றிலே சராசரி ஏக்கருக்கு ஐந்து குவிண்டால், அதாவது 500 கிலோகிராம்தான் விளைந்திருக்கிறது என்றும் சொல்லியிருக்கின்றார். அந்த அடிப்படையில் பார்க்கும்போது, அங்கே சாதாரணமாக இரண்டு ஏக்கர் உள்ளவர்களுக்கே லெவி 4·5 குவிண்டால் என்று போடப்பட்டிருக்கின்றது. விளைவது அதைவிடக் குறைவாக இருக்கும்போது, என்ன செய்ய முடியும் ? அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்கின்றார். ஆனால் போடப்பட்டுள்ள உத்தரவுகளின்படி செயல்படுவதில்லை என்பதுதான் பொதுவாக இருக்கிறது. டி.எஸ்.ஓ. போன்ற அதிகாரிகள் கொள்முதல் செய்வதிலே தீவிரமாக ஈடுபட்டிருப்பதால், அவர்கள் பகலிலே அலுவலகத்திலே இருப்பதேயில்லை. விவசாயிகள் இவற்றால் பெருத்த வேதனைக்குள்ளாகியிருக்கின்றார்கள். இவற்றைப் போக்கவாவது மீண்டும் அரசாங்கம் தெளிவான முறையில் உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன் :</u> தலைவரவர்களே, லெவி கொள்முதலைப் பொறுத்த மட்டிலே, முன்பு எல்லா இடங்களிலும் மகசூல் நன்றாக இருக்கும் அடிப்படையில் இந்திந்த விகிதத்தில் இருக்க வேண்டும் என்று அரசாங்கம் முதலில் உத்தரவிட்டது. இதற்குப் பிறகு மாறிய நிலையில் அதை மறுபரிசீலனை செய்து முன்னர் போடப்பட்ட உத்தரவு திருத்திப் போடப்பட்டது. இதற்குப் பிறகும் பல இடங்களிலே மகசூல் சரியாக இல்லை என்ற. குறைசொல்லப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கங்கே சென்று பார்த்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றார்கள். விலையைப் பொறுத்தவரையில், விவசாயிகளிடம் குறை இருப்பது உண்மை.

<u>திரு. கே. எஸ். கணபதி :</u> தலைவரவர்களே, விலை குறைவாக இருக்கும் நிலையில் லெவி நெல்லைப் போடுவதிலே சிலருக்குத் தயக்கம் இருப்பது மனிதசுபாவம்தான். ஆந்திரப் பிரதேசத்திலேயும் லெவி இருக்கின்றது. அங்கே இரண்டரை ஏக்கர் நிலம் வரையில் வைத்திருப்பவர்களுக்குக்கூட இரண்டு குவிண்டால்தான் லெவி என்று போட்டிருக்கின்றார்கள். பத்து ஏக்கருக்கு மேலே உள்ளவர்களுக்குத்தான் ஐந்து குவிண்டால். இவ்வளவிற்கும் அங்கெல்லாம் அதிகமான விளைச்சல் இருக்கின்றது. ஆனால் இங்கே இரண்டு ஏக்கர் உள்ளவர்களுக்கே நாலரை குவிண்டால் என்று இருக்கிறது. விளைவதே ஐந்து ஏக்கர்தான். இந்த நிலையில்தான் லெவி கொள்முதலைக் கொடுப்பதா வேண்டாமா என்று அவர்கள் சங்கடப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

மாவட்ட ஆட்சியாளர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கின்றது என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். ஆனால் தெளிவான உத்தரவு அரசாங்க உத்தரவு கெஜட்டில் வந்திருக்கின்றது. இதற்குப் பிறகாவது ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சென்று பார்த்து, அவர்களுடைய அறிக்கையின் பேரிலே அரசு மீண்டும் மறு உத்தரவினை வெளியிடுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன் :</u> தலைவரவர்களே, ஐந்து லட்சம் டன் முதல் எட்டு லட்சம் டன் வரையில் விளையும் ஆந்திர மாநிலத்திலேயே—உற்பத்தியாகும் இடத்திலேயே லெவி கொள்முதல் செய்ய வேண்டும் என்று முயற்சித்தும் அதிலே வெற்றி பெறுவதில் பலவகைக் கஷ்டங்களுக்குள்ளாகி, உற்பத்தியாளர்களிடமிருந்து நெல்லைப் பெறுவதற்கு பாதுகாப்புச் சட்டத்தையே பயன்படுத்த வேண்டியிருக்கின்றது என்று நேற்றுதான் ஆந்திர் முன்னாள் அமைச்சர் விவசாயச் சங்கத் தலைவரிடம் கூறியிருக்கின்றார். நமது மாநிலம் அவ்வளவு மோசமாக இல்லை. நாம் இப்போது இவ்வளவு கஷ்டப்பட்டும் நமக்கு மூன்று லட்சம் டன் கிடைக்குமா என்பது சந்தேகமாகத்தான் இருக்கின்றது.



(பிற்பகல் 4–40)

## 6. தகவல் கோரல்.

### போலீஸ் ஐ. ஜி. அலுவலகத்தில் தேசீயக் கொடிக்குப் பதிலாக வேறொரு கொடி பறப்பது குறித்து.

<u>திரு. மு. மாசிலாமணி :</u> தலைவரவர்களே, நான் முதலமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு விளக்கத்தைப் பெற ஆசைப்படுகிறேன்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர் :</u> கவன ஈர்ப்பின் மீது அதைக் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர்தான் இருமுறை பேசலாம். இதிலே வேறு யாரும் பேச அனுமதிப்பதற்கில்லை.

<u>திரு. மு. மாசிலாமணி :</u> தலைவரவர்களே, நான் அரசாங்கத்தின் விளக்கத்தைப் பெற விரும்புவது வேறு ஒரு விஷயத்தைப் பற்றியது இன்று காலை கடற்கரை வழியாக வரும்போது ஐ.ஜி. அலுவலகத்தில் வழக்கமாக நமது தேசியக் கொடி பறப்பதற்குப் பதிலாக வேறு ஒரு கொடி பறந்து கொண்டிருப்பதைப் பார்த்தேன். இது குறித்து இன்று காலை சட்டப் பேரவையில் நமது முதலமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்தையும் கேட்டேன். ஆனால் சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் தேசீயக் கொடி பறந்து கொண்டிருக்கின்றது. அங்கேயும் இப்படிப்பட்ட புதிய கொடி பறக்கவிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> தலைவரவர்களே, காலையில் சட்டப் பேரவையில் அளித்த விளக்கத்தை அவர் கேட்ட பிறகும், புதிதாக விளக்கமளிக்கத் தேவையில்லை என்று கருதுகிறேன்.

<u>திரு. ம. பொ. சிவஞானம் :</u> தலைவரவர்களே, சட்டப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் என்ன விளக்கம் கொடுத்தார் என்று தெரியாது. இது தனி அவை. துணை அவை இல்லை.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> தலைவரவர்களே, அங்கே கொடுத்துவிட்டதால் அந்த விளக்கத்தை இம்மன்றத்தில் கொடுக்கக் கூடாது என்று சொல்லவில்லை. இதைப் பற்றிக் குறிப்பிட்ட உறுப்பினர் அவர்கள் பிரச்சினையை எழுப்பிய போதே "சட்டப் பேரவையில் கொடுத்த விளக்கத்தை நான் கேட்டேன்" என்று சொல்லி விட்டார். ஆகவேதான் அந்த பதிலை நான் சொன்னேன்.

<u>திரு. ஜி. சுவாமிநாதன் :</u> அதை இப்போது சொல்லலாமே?

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> கடந்த வாரம் டெல்லியிலிருந்து மத்திய அரசிடமிருந்து நமது மாநில காவல்துறைத் தலைவர் அலுவலகத்திற்கு வந்த உத்தரவின்படி, ஐ.ஜி. அலுவலகத்திலே தேசீயக் கொடியைப் பறக்கவிடக் கூடாது என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. கடந்த 20 ஆண்டு காலமாகப் பறந்து கொண்டிருந்த தேசீயக் கொடி

(டாக்டர் மு. கருணாநிதி) [1975 மார்ச் 11

பறக்கத் தேவையில்லை என்ற உத்தரவு வந்த பிறகு, ஐ.ஜி. அவர்கள் அரசுக்கு இது பற்றி எழுதினார்கள். "தேசீயக் கொடியைப் பறக்க விடக் கூடாது என்று உத்தரவு வந்திருக்கின்றதே, அதற்குப் பதிலாக வேறு எந்தக் கொடியைப் பறக்க விடலாம்?" என்று கேட்டு எழுதியிருந்தார்கள். "அதற்குப் பதிலாக போலீஸ் துறை பயன்படுத்தும் வண்ணமான நீல வண்ணக் கொடியில் தமிழக அரசின் சின்னத்தைப் பதித்து அதைப் பறக்க விடுங்கள்" என்று தமிழக அரசு அவர்களுக்குச் சொல்லியிருக்கிறது. அதன்படி இன்று காலையிலிருந்து அந்தக் கொடி பறக்க விடப்படுகின்றது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, என் தேசீயக் கொடியைப் பறக்கவிடக் கூடாது என்று மத்திய அரசு உத்தரவிட்டிருக்கின்றது? அதற்கான காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, கோவா, பாண்டிச்சேரி போன்ற மாநிலங்களிலே இது பற்றிய பிரச்சினை எழுந்ததாகவும் அதன் தொடர்பாக எல்லா மாநிலங்களிலுமே ஐ.ஜி. அலுவலகங்களில் இந்தக் கொடியினைப் பறக்கவிட வேண்டாம் என்றுதான் இந்த உத்தரவு வந்திருக்கின்றது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, தலைமைச் செயலகத்தில் தேசீயக் கொடி பறக்கலாமா அல்லது வேறு ஏதாவது கொடி பறக்கலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இரண்டு கொடிகளுமே பறக்கலாம் என்று சொன்னால் மகிழ்ச்சியோடு வரவேற்கலாம்.

திரு. வி. வெங்கா : தலைவரவர்களே, தேசீயக் கொடி ஐ.ஜி. அலுவலகத்தில் மட்டுமா அல்லது அனைத்து போலீஸ் அலுவலகங்களிலும் பறக்க விடக் கூடாது என்று சொன்னார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இப்போது வந்துள்ள உத்தரவில், ஐ.ஜி. அலுவலகங்களில் மட்டும் பறக்க விடக் கூடாது என்று கண்டிருக்கின்றது.

## 7. 1975–76 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது விவாதம்—தொடர்ச்சி.

*திரு. ஆர். சக்தி மோகன் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே 1975–76 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பித்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையினை என் கட்சியின் சார்பில் வரவேற்றுச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.



1975 மார்ச் 11] (திரு. ஆர். சக்திமோகன்).

எந்த வகையில் பார்த்தாலும் இந்த நிதி நிலை அறிக்கையின் மீது குறை சொல்லக் கூடிய அளவிற்கு எதுவுமே இல்லை. மிகக் கொடுமையான வறட்சியுள்ள இந்தக் காலத்திலே, இதனால் மக்கள் பெருமளவிற்குப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர்களுடைய துயரங்களைப் போக்குவதற்கான திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான வருவாயைத் தேடுவதற்குப் போதுமான வரிகளை விதிப்பதற்கு அதிகாரம் இல்லாத நிலையில், பணக்காரர்களும் பாதிக்கப்படாமல், பாமரர்களும் பாதிக்கப்படாமல், இப்படிப்பட்டதொரு நிதிநிலை அறிக்கையைத் தயாரித்திருப்பது சாதாரணமாக எல்லோராலும் முடியாது. மக்களுடைய நிலையை நன்கு அறிந்தவர்களால்தான் முடியும் என்ற வகையில் இது அமைந்திருப்பதற்காக நமது முதல்வர் அவர்களையும் அரசாங்கத்தையும் பாராட்டுகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் ஏறத்தாழ 26 கோடி ரூபாய் பற்றுக்குறை என்று இருந்தாலும், அதை அப்படியே விட்டுவிட்டு, வெறும் ஆறு கோடி ரூபாய்க்குத்தான் வரி போடப்பட்டிருக்கின்றது. முதலில் பிண்ணாக்குக்கும் வரி என்று இருந்த குறை மாறி, முதலமைச்சர் அவர்கள் நேற்று பேரவையில் அறிவித்ததைப் போல பிண்ணாக்குமீது போடப்பட்டிருந்த வரி எடுக்கப்பட்டுவிட்டதாக அறிவித்த அவரைப் பாராட்டுகிறேன்.

மேலும் இதுவரையில் காகித அளவில் துருப்பிடித்துக் கிடந்த திட்டங்கள் எல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையின் மூலம் செயல்படுத்தப்பட இருக்கின்றது என்பது மகிழ்ச்சியான செய்தி. பாராட்டுகிறேன்.

மக்களின், "நெஞ்சறிந்து உதவிட வேண்டியது கடவுளைச் சார்ந்தது. நிலை அறிந்து உதவிட வேண்டியது அரசைச் சார்ந்தது" என்ற முறையில் இன்றைக்கு ஏழை மக்கள் படும் பல தொல்லைகளை அறிந்து பஞ்சம் பற்றாக் குறையால் அவதியுறும் மக்களுக்கு உதவிகளை அளிக்கத் தக்க விதத்தில் இந்த நிதிநிலை அறிக்கை தயாரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இவ்வளவு திறமையான—எவரையும் பாதிக்காத—நிதிநிலை அறிக்கையை, மக்கள்மீது நல்லெண்ணம் கொண்டவர்களாகவும், அந்த அளவுக்கு பொருளாதார நிபுணத்துவம் கொண்டவர்களாகவும் இருந்தாலன்றி, இப்படியொரு பட்ஜெட்டைத் தயாரிக்க முடியாது. அவ்விரு சிறப்பியல்புகளும் முதல்வரவர்களிடம் இருக்கின்றன என்பதை இவ்வறிக்கை நிரூபிக்கின்றது. குறிப்பாக திட்டங்களைச் செயலாக்குவது பற்றிச் சொல்லும்போது, கிருதமால் திட்டம் நீண்ட நெடுங் காலமாக இருந்து வருகிறது. இதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று பல மனுக்களைக் கொடுத்தும் இதுவரையில் அது நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்து வந்தது. இந்த நிதிநிலை அறிக்கையின் மூலம் அந்தத் திட்டம் அமுலுக்கு வரும் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அடுத்து பொய்கைப் பாலம் புதுப்பிக்கப்பட இருக்கின்றது. மதுரையில் திருமலை மன்னன் கட்டிய மகால் இன்று நல்ல முறையில் ஒரு சர்வ தேச பில்கிரிம் செண்டராக மாற்றப்பட்டு சிறந்த ஒரு பொருள் காட்சி கூடமாக அதை மேம்பாடடையச் செய்வதற்காக அரசு நடவடிக்கை எடுக்க இருப்பதை நாம் பாராட்டியாக வேண்டும்.

(பிற்பகல் 4-50)

அடுத்தபடி, அதிருஷ்டத்தால் கைவிடப்பட்ட விதவைகள், அனாதைகளுக்கு நல்ல மாதிரி திட்டம்...........

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அதிருஷ்டத்தால் கைவிடப்பட்டவர்கள் அல்ல, துரதிருஷ்டத்தால் கைவிடப்பட்டவர்கள்.

திரு. ஆர். சக்தி மோகன்: அதிருஷ்டத்தால் கைவிடப்பட்டவர்கள்தான். அனாதைகளுக்கும், விதவைகளுக்கும் உரிய ஒரு நல்ல திட்டம் இது. அந்த வகையில் எத்தனை தடவை அதைப் பாராட்டினாலும் தகும். ஏனென்றால் அனாதைகளுக்கான விடுதிகள் இருந்தாலும்கூட, அவைகள் எந்த அளவுக்குப் பராமரிக்கப்படுகின்றன என்று விளக்கம் சொல்வதற்கு நான் தயாராக இல்லை. விதவைகளைப் பொறுத்த மட்டில், இது நல்லதொரு திட்டம். ஆனால் நல்ல முறையில் அவர்கள் இந்தத் திட்டத்தைப் பயன்படுத்தக் கூடிய அளவிலே, இந்தத் திட்டத்தைப் பற்றி இப்படி ஒரு திட்டம் இருக்கின்றது, இதைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று கலெக்டர்கள், மாவட்ட ஆட்சி அலுவலகங்கள் மூலமாகவும் அல்லது அதற்குக் கீழுள்ள தாலுகா அலுவலகங்கள் மூலமாகவும் நல்ல முறையில் பிரச்சாரம் செய்து ஆதரவற்ற விதவைகள் பயன்படக் கூடிய அளவுக்கு இந்தத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதில் எந்த விதமான நிபந்தனையும் இல்லாமல் அவர்களுக்கு உறவினர்கள் இருக்கிறார்களா, வருமானம் இருக்கிறதா, உற்றார் உறவினர்கள் உதவி செய்ய யாராவது இருக்கிறார்களா என்று ஆராய்ந்து பாராமல், உண்மையில் எந்த விதவை நான் நிர்கதியாக இருக்கிறேன், எனக்கு உதவி வேண்டும் என்று மனுப் போடுகிறார்களோ அந்த விதவைகளுடைய வேண்டுகோளை தலைமை அதிகாரிகள் நேரடியாக விசாரித்து உடனடியாக இந்தத் திட்டத்தின் பயனை அவர்கள் அனுபவிப்பதற்கு தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ஒரு முக்கிய வேண்டுகோள். நாடெங்கும் இருக்கின்ற உயர்நிலைப் பள்ளிகளுக்கு, ஆங்காங்கு இருக்கின்ற நகராட்சிகள், மாநகராட்சிகள் சொத்து வரி என்ற பெயரில் ஏராளமான வரிகளைப் போட்டு தொல்லைகள் கொடுக்கின்றார்கள் என்று பல புகார்கள் என்னிடம் கொடுத்திருக்கின்றார்கள். அரசாங்கத்திலிருந்து உயர்நிலைப் பள்ளிகளுக்கு மானியமும் தரப்படுவதில்லை. மாணவர்கள் மூலம் பெறப்படுகின்ற ஸ்பெஷல் பீஸ் தவிர வேறு வருமானம் எதுவும் இல்லை. சொத்துக்களுக்கு வரி அதிகமாகப் போட்டால், அதை நாங்கள் கட்டுவதற்கு முடியாத நிலையில் இருக்கிறோம். ஆதலால் அரசாங்கம் ஏதாவது ஒரு மாற்று ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கு உண்மையில் மது அரசாங்கம் நல்ல முறையிலே................





திரு. சி. வி. ராஜகோபால்: தலைவர் அவர்களே, ஒரு சந்தேகம். விதவை, விதவை, விதவை என்று விதவைக்கு மட்டும்தான் விதிவிலக்கு இருக்கிறதா என்ன? மற்ற வாழ்க்கையிலே வழுக்கிவிழுந்த பெண்கள்—கைம்பெண்கள் அப்படிப்பட்டவர்களுக்குக்கூட ஆறுதல் அளிப்பதாக இருந்தால் மிகப் பொருத்தமாக இருக்கும். வெறும் விதவைகளுக்கு மட்டும் ........................

திரு. ம. பொ. சிவஞானம்: விதவைகள் வாழ்வை இழந்தவர்கள். கைம் பெண்கள், வாழ்க்கையில் வழுக்கி விழுந்தவர்கள், இரண்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: வழுக்கி விழுந்தவர்கள். வாழ்க்கையில் தவறிப்போனவர்கள்.

திரு. ஆர். சக்தி மோகன்: விதவைகள் வேறு, சமுதாயத்தில் சறுக்கி விழுந்தவர்கள் வேறு. * * *

மாண்புமிகு மேலவைத் தலைவர்: பத்திரிகையில் இதெல்லாம் வரக் கூடாது. அசிங்கமாக இருக்கின்றதல்லவா? அந்த வார்த்தைகளை **expunge** பண்ணுகிறேன்.

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பேசும்போது வரியைப் பற்றி சொன்னார்கள். அவர்கள் சொன்னது அர்பன் லேண்ட் டாக்ஸா அல்லது முனிசிபல் பிராப்பர்ட்டி டாக்ஸா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர். சக்தி மோகன்: தலைவர் அவர்களே, நகரச் சொத்து வரிதான். சில உயர் நிலைப் பள்ளிகளிலே எந்தவிதமான வருமானமும் இல்லாமல் சிரமப்படுகிறார்கள். ஒரு காலத்தில் கல்வி சேவையாக இருந்தது, இந்தக் காலத்தில் அது ஒரு வியாபாரமாகக் கூட மாறிவிட்டது. அப்படி இருந்தாலும் கூட, சில உயர்நிலைப் பள்ளிகள் மிக நேர்மையான முறையிலே கல்வித் தரத்தை உயர்த்தி மாணவர்களுக்குத் தக்க போதனைகள் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்கெனவே நகரவைகளால் போடப்பட்டிருக்கிற வரிகளுக்கு மேலாக மாநகராட்சி ஏற்பட்டதன் பிறகு அதிக வரிகள் போடுவதால், அவர்கள் கட்ட முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே, அப்படி வரி போடுவது என்றால், அரசாங்கமே அவர்களுக்குப் பதிலாக அந்த வரியைக் கட்டலாம் அல்லது வரி போடாமலே ரத்து செய்யப்படலாம் என்ற யோசனையை, கோரிக்கையை, தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

---

* * * **Expunged as ordered by the Chair.**

(திரு. ஆர். சக்தி மோகன) [1975 மார்ச் 11

அடுத்தபடியாக, ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள், "இல்லாத" மக்களுக்கு இதுவரை எப்படி எப்படி நலன்கள் புரிய வேண்டும் எனத் திட்டமிட்டு அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் விதத்தில் எப்படி நாட்டம் செலுத்தியிருக்கிறார்களோ அதுபோல இந்த நிதி நிலை அறிக்கையிலும் ஏற்பாடு செய்துள்ளார். இன்னும் நல்ல முறையில் மக்களுக்கு நல்வாழ்வு அளிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய நமக்கு அதிகாரம் போதவில்லை என்றும், ஆகவே, மாநில சுயாட்சி வேண்டும் என்றும் ஒரு கோரிக்கை இணைப்பைச் சேர்த்து, இரண்டு மன்றங்களிலும் நல்ல கருத்துக்களை கடந்த ஒரு வாரமாக மோதவிட்டிருக்கிறார்கள். அருமையான கருத்துக்களை நாம் கேட்டோம். இதில் எனக்கும் ஈடுபாடு உண்டு. மாநில சுயாட்சி வேண்டும், அதிக அதிகாரம் வேண்டும், இருக்கின்ற அதிகாரம் போதவில்லை என்பதை நாம் பல தடவை இந்த மாமன்றத்தில் அதிகமாக விவாதித்து இருக்கிறோம். அதைப்பற்றி எடுத்துக் கூறியும் இருக்கிறோம். இந்த மாநில சுயாட்சி என்பது—நான் கடந்த ஆண்டு நடந்த அவைக் கூட்டத்திலே கூட கூறியிருக்கிறேன்—திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் குரல் அல்ல, இது ஏற்கெனவே, தேசீய முகாமிலிருந்து ஏற்பட்ட குரல் என்று. கராச்சியில் நடந்த காங்கிரஸ் மாநாட்டுத் தீர்மானத்திலே மொழிவழி மாகாணம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து, 1947 அல்லது 1948 என்று கருதுகிறேன், அப்போது மாண்புமிகு துணைத் தலைவர் திரு. ம. பொ. சி. அவர்களுடைய தலைமையின் கீழ் நாங்களே மாநில சுயாட்சிக்கான தீர்மானங்கள், திட்டங்கள் போட்டு பொதுக்கூட்டங்கள் நடத்தியிருக்கிறோம். அன்றைக்கு திரு. ம. பொ. சி. அவர்கள் தமிழகத்திற்கு சோஷலிச குடியரசு வேண்டும் என்று கேட்டார்கள். 1937 அல்லது 1938 என்று கருதுகிறேன், மாகாண சுயாட்சி என்ற புத்தகத்தை ப. ராமசாமி அவர்களோ திரு. ஏ. என். சிவராமன் அவர்களோ மணிக்கொடி பிரசுராலயத்திலிருந்து எழுதியிருக்கின்றார்கள். தேசீயத்தை மையமாக வைத்து, மாநில சுயாட்சி தேவை என்பதற்குரிய விளக்கங்கள் அதிலே இருக்கின்றன. நான் இயலுமானால் அந்தப் புத்தகத்தைத் தேடி தலைவர் அவர்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன். இப்போது முதல்வர் அவர்கள் சொல்லுகின்ற மாநில சுயாட்சியிலே மேலும் சில விளக்கங்கள் தேவைப்படுகின்றன. மாநில சுயாட்சி என்றால், அதிக அதிகாரம் இது வரை கேட்டோமே அதுதானா, அல்லது பிரிவினையா? பிரிவினை அல்ல என்பதற்கு உத்தரவாதம் கொடுக்கப்பட்டுவிட்டது. இதிலே எந்தவிதமான மாநில சுயாட்சி வேண்டும் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். நிதிநிலை அறிக்கையில் இருக்கிறவாறு அண்ணா அவர்கள் கூறியதாக முதல்வர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்களே, அதைப் பார்த்தால், பாதுகாப்பு என்ற ஒன்றைத் தவிர இதர எல்லா அதிகாரங்களையும் மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுத்துவிட்டு அந்த மாநிலங்கள் கொடுக்கின்ற அதிகாரத்தை மட்டும் மத்திய அரசு வைத்துக் கொள்ள வேண்டும் என்றால், மத்திய அரசு என்ற ஒன்று தேவை தானா என்ற கேள்வி ஏற்படும். ஆகவே, எந்த முறையிலேயான மாநில சுயாட்சி என்பதை விளக்க வேண்டும். அமெரிக்கா மாதிரியான மாநில சுயாட்சியா, பிரிட்டன் போன்ற இடங்களில் இருக்கின்ற மாநில சுயாட்சி போன்றதா? ஜனநாயகம் என்று சொல்லும் போது, பெயர்தான் பொதுவேயன்றி



1975 மார்ச் 11] (திரு. ஆர். சக்தி மோகன்)

நாட்டுக்குநாடு ஜனநாயக நடைமுறை மாறுபட்டிருக்கின்றது என்பதைப் பார்க்கிறோம். ஆகவே, மாநில சுயாட்சி என்பது பிரிந்து போவதாக அமைந்துவிடாது. தேசீய ஒருமைப் பாட்டிலே நம்பிக்கையுள்ள நாம் பிரிந்து போவதை ஒருகாலும் அனுமதிக்கப்போவதில்லை. என்றாலும் கூட பல நண்பர்கள் திரு. ஷேக் அப்துல்லா மாதிரி முதல்வர் அவர்கள் ஆக வேண்டும், முஜிபுர் ரகுமான் போல ஆக வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். அப்படியெல்லாம் ஆகத் தேவையில்லை. நமக்கு கலைஞர் அவர்கள் கலைஞர் ஆகவே, தமிழ் நாட்டின் தளபதியாக, தானைத் தலைவனாக, தள நாயகனாக இருக்க வேண்டும் என்றுதான் நான் இந்த அவையில் கேட்டுக் கொள்ளுகிறேன். திரு. ஷேக் அப்துல்லாவுக்கு அவர்கள் கொடுத்திருக்கிற உரிமை, அவர் இன்று பெற்றிருக்கிற அதிகாரம் இது பற்றி எல்லாம் விளக்கினால், நீண்ட நேரமாகும். திரு. ஷேக் அப்துல்லா பிரதமர் இந்திராஜியை ஜெயித்திருக்கிறாரா அல்லது பிரதமர் இந்திராஜி திரு. ஷேக் அப்துல்லாவை ஜெயித்திருக்கிறாரா என்பதற்கு அடுத்து வருகின்ற மாதங்களில் விளக்கம் தெரியும். ஆகவே, மாநில சுயாட்சி என்றால், பிரிந்து போகாத அளவுக்கு அமெரிக்க மாநில சுயாட்சி போல என்று நாம் தனியாக ஒரு திட்டமிட்டு, முதலில் அதை விளக்கக்கூடிய அளவிலே இந்தியாவில் இருக்கக்கூடிய முதலமைச்சர்களில் ஒரு பாதிப் பேரையாவது நம்முடைய பக்கத்திலே சேர்த்து அதன் பிறகு மாநில சுயாட்சியைப்பற்றி, தேசீயத்தை மையமாக வைத்து அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற ஒரு கோரிக்கைதானே தவிர வேறல்ல என்பதை மக்களிடம் விளக்க வேண்டும். அது நாட்டைப் பிரிக்கின்ற, துண்டாடுகின்ற கோரிக்கை அல்ல என்பது தெளிவாக்கப்பட வேண்டும். முதலில் முதலமைச்சர் அவர்கள் ஒரு 4, 5 மாநில முதலமைச்சர்களையாவது நம் பக்கத்தில் சேர்த்து அதன் பிறகு மக்கள் மத்தியிலே இந்தத் திட்டத்தை நாம் வைத்து மக்களுடைய ஆதரவை முதலில் பெற்றதற்குப் பிறகு அதற்கான போராட்டத்தை நாம் ஆரம்பிக்கவேண்டுமே தவிர, அவசரப்படக்கூடாது. அரசியலிலே அவசரமும் கூடாது, அதே சமயத்தில் அசமந்தமும் கூடாது. இந்த இரண்டு சூழ்நிலைக்கு ஏற்ற ஒரு நிலையில் இருக்க வேண்டும். அதிகாரப் பற்றாக்குறையினால் இன்றைக்கு மக்களுக்கு ஒன்றும் செய்ய முடியவில்லை. குறிப்பாக, இன்னும் சொல்லப்போனால் இந்த ஜனநாயக முறை இப்படியே இருந்தால் இந்த ஏழை மக்களுக்கு, இல்லாத மக்களுக்கு எந்த நலனையும் எந்த அரசும் செய்ய முடியாது. எப்படியோ கலைஞர் அவர்கள் இருக்கிற அதிகாரத்தை வைத்துக்கொண்டு, தனக்கு ஏழை மக்களின் மேல் இருக்கும் நல்லெண்ணத்தை வைத்துக்கொண்டு முடிந்த வரையில் நன்மைகளைச் செய்திருக்கிறார். லெவி கொள்முதல் பற்றியெல்லாம் சொன்னார்கள். நமது விவசாயிகளிடத்திலே இன்னும் அதிகம் கருணை காட்டி அவர்களுக்கு லெவிக்கு அதிகமான விலை கொடுத்து, மத்திய அரசு விதித்திருக்கிற அளவுக்கும் மேல் அதிக விலை கொடுத்து, அந்த விவசாயிகளைத் திருப்தியாக வைத்துக்கொண்டால், அவர்கள் மூலம் அரசாங்கத்துக்குக் கிடைக்கின்ற உதவி ஏராளமாக இருக்கும். வியாபாரிகள் மூலம் கிடைக்கிற உதவியைக் காட்டிலும் அதிகமாக இருக்கும். ஆகவே, மக்களுக்கு நல்லது செய்வதற்காக மத்திய அரசாங்கத்தின் வரம்பை

(திரு. ஆர். சக்தி மோகன்) [1975 மார்ச் 11

மீறிக் கூட சில அயிட்டங்களை நாம் செய்து அதன் மூலம் அவர்களுக்குக் கோபம் ஏற்படுமானால், அந்தக் கோபத்தை எதிர்த்துப் போராட அத்தனை கட்சிகளும் ஒன்றுபடும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 5-00)

கவர்னர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் உரையிலே நான் இந்த விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வருமான உச்ச வரம்பு ரூ. 100 என்பதை நீக்க வேண்டும். அல்லது அதை ரூ. 300க்கு உயர்த்த வேண்டும் என்று வேண்டினேன். முதலமைச்சர் அவர்கள் ஏழை மக்களுக்கு எல்லா நலன்களையும் அளிக்கின்ற எண்ணம் படைத்தவர்கள். புதுப்புது அறிவிப்புகளை பேரவையிலே அறிவித்த மாதிரி, இதற்கான ஒரு அறிவிப்பையும் இங்கே தருவார்கள் என்று எதிர் பார்க்கிறேன்.

அடுத்து, குற்றப்பரம்பரை சட்டத்திற்குட்பட்ட முதுகுளத்தூர் மறவர்கள் மறுவாழ்வுக்கான திட்டத்தை விரைவிலே ஆரம்பிக்கிறோம் அல்லது அதற்கு ஏற்பாடு செய்கிறோம் என்ற அறிவிப்பைக் கொடுக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

பேச வாய்ப்பளித்தமைக்காக தலைவரவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

*திரு. ம. பொ. சிவஞானம்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த அவையின் முன்பு தமிழக முதல்வரும், நிதி அமைச்சருமான கலைஞர் அவர்கள் வைத்துள்ள 1975-76 ஆம் ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கை தமிழ் மணம் கமழ்வதாக இருப்பதைப் பார்த்து, நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அறிக்கையின் தொடக்கத்திலே, கலைஞருடைய தமிழ் மணக்கிறது. அறிக்கையின் இறுதியிலே, அண்ணாவின் அழகு தமிழ் காட்சியளிக்கின்றது. அறிக்கையின் தொடக்கமும் இறுதியும் தமிழ் வளர்ந்து வருகிறது, மறுமலர்ச்சி அடைந்து வருகிறது என்ற உண்மையை உணர்த்துகின்றன. வானம் பொய்த்ததால் கலைஞருடைய கை, அதாவது தமிழக அரசினுடைய கை, வறண்டாலும், அவர் கையிலேயுள்ள தமிழுக்கு வறட்சி கிடையாது என்ற உண்மையை இந்த அறிக்கை நன்றாக எடுத்துக் காட்டுகிறது. யாரோ ஒரு நண்பர் சொன்னார், "நாவல் போல இருக்கின்றது நிதிநிலை அறிக்கை" என்று. இலக்கியப் பயிற்சி இல்லாத குறை என்று நினைக்கிறேன். இந்த அறிக்கையைப் படிக்கின்றவர், இலக்கியப் பயிற்சியும், பண்பும், ரசிக்கும் தன்மையும் பெற்று இருப்பாரானால், நான் பெற்றது போன்ற மகிழ்ச்சியையே பெற்றிருப்பார். நான், என்னுடைய ஊன் உணர்வெல்லாம் ஒன்றிச் சொல்கின்றேன்; இப்படிப்பட்ட நல்ல தமிழ் அரசியலிலே மணக்க வேண்டும் என்பதற்காகத்தான் காலம் எல்லாம் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றேன். "தமிழ் வளர்ந்தால் என்ன கிடைக்கும்? சோறு கிடைக்குமா?" என்று கேட்பவர்களுக்கு நான் பதில் சொல்ல முடியாது. இதிலே தமிழ் மணம் கிடைக்கும்; அதனால் தமிழர் மானம் செழிக்கும்.



1975 மார்ச் 11]

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, வயிற்றுக்கு உணவு இல்லாத போது சற்று செவிக்கு ஈயப்படும் என்பது போல..

திரு. ம. பொ. சிவஞானம்: இங்கே எதிர்க் கட்சித் தலைவரவர்களும் ஏற்றுக்கொள்வதுபோல, வயிற்றுக்கு உணவு இல்லாத நேரத்தில் செவிக்கு இனிய தமிழ்-அழகு தமிழ்கொடுத்ததற்காக நான் முதலமைச்சர் அவர்களை முதலிலே பாராட்டுகிறேன்.

இன்னொன்று; இதே நேரத்தில் மத்திய ஆட்சியினுடைய நிதிநிலை அறிக்கையை அங்கு—டில்லியில்—ஒரு தமிழர் பாராளுமன்றத்திலே கொடுத்தார். இங்கு-தமிழகத்திலே நிதி நிலை அறிக்கையை ஒரு தமிழர் சட்ட மன்றத்திலே வைத்தார். அவர் கொங்கு மண்டலத்தார்; இவர் சோழ மண்டலத்தார். அது ஆதிக்கப் பட்ஜெட்டாக அமைந்து விட்டது. ஆனால், இது அடித்தளத்திலே உள்ள மக்களுக்கு வாழ்வளிக்கும் பட்ஜெட்டாக அமைந்து விட்டது. நான் மாநில சுயாட்சி கேட்பதால் டில்லி மீது காழ்ப்பு கொண்டு இதைச் சொல்கிறேன் என்று யாரும் எண்ண வேண்டாம். அதற்காகத்தான் நான் தொடக்கத்திலே மத்திய நிதியமைச்சர் நம்மவர் என்று சொன்னேன். ஆட்சி வேறுபட்டாலும், கட்சி வேறுபட்டாலும் அமைச்சர் தமிழர்தானே! அந்தக் காரணத்தால், அந்தத் தமிழர் தந்த மத்திய பட்ஜெட், இதைவிட இன்னும் நன்றாக இருந்து தமிழருக்குப் பெருமை தேடித் தந்திருக்கக்கூடாதா என்று நான் நினைக்கிறேன்.

மத்திய அரசினுடைய பட்ஜெட் 10 ஆயிரம் கோடி ரூபாய். நம்முடைய பட்ஜெட் 536 கோடி ரூபாய்தான். நமக்குக் கொடுப்பதற்கு கடமைப்பட்டிருக்கின்ற—கொடுப்பதற்கான நிதி வளம் உள்ள மத்திய அரசு நாம் மனநிறைவு பெறக்கூடிய வகையில் நிதி உதவி கொடுக்கவில்லை. இந்த நிலையிலே இப்படிப்பட்ட ஒரு அருமையான பட்ஜெட்டை அரசு தயாரித்திருக்கிறது. இது நான் இந்த பட்ஜெட்டைப் பாராட்டுவதற்குக் காரணமாக அமைந்திருக்கின்றது.

இந்த பட்ஜெட்டிலே மக்களுக்கு வேண்டியவை எல்லாம் கிடைத்து விட்டன என்று நான் சொன்னால், ஒன்று, நான் என்னை ஏமாற்றிக் கொள்வதாகும் அல்லது ஆளுவோரை ஏமாற்றுவதாகும். மக்கள் எதிர் பார்த்துக்கொண்டிருப்பனவற்றையெல்லாம் கொடுக்க வசதி இருந்தும் இந்த அரசு கொடுக்கத் தவறிவிட்டது என்று சொன்னால், குற்றம் சொல்லவேண்டிய இடத்தை மாற்றிச் சொன்ன குற்றத்திற்கு நான் ஆளாவேன். ஆகவே, குறைந்த நிதி வசதியை வைத்துக்கொண்டு, இதைவிடவும் சிறந்த அளவுக்குத் தயாரித்திருக்க முடியாது என்பதை நான் இந்த அவையிலே கூறி, முதல்வர் அவர்களைப் பாராட்ட விரும்புகிறேன். நமக்குக் கொடுக்கப் பணம் இருந்தும் கொடுக்க டில்லிக்கு மனம் இல்லை. அது தரித்திர புத்தி. மக்களுக்குக் கொடுக்க மனம் இருந்தும், இங்கே பணம் இல்லை. இது தரித்திரம். இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, தரித்திர பட்ஜெட் இங்கே, தரித்திர புத்தி பட்ஜெட் அங்கே என்ற நிலையைப் பார்க்கிறோம்.

(திரு. ம. பொ. சிவஞானம்) [1975 மார்ச் 11

மத்திய அரசின் மான்ய உதவி, கடன் இவைகளை எல்லாம் எதிர் பார்த்துத்தான் இங்கே பட்ஜெட்டைத் தயாரித்திருக்கின்றோம். ஆம்; மாமி யார் வீட்டுப் பணத்தை மூலதனமாக வைத்து மருமகன் கடை தொடங் கினால் எப்படியோ, அப்படி! இந்த அரசு தனக்காகத் தானே நிதி திரட்ட வாய்ப்பு இருந்தும், உரிமை இல்லாத காரணத்தால் இதற்கு வருகிற வருவாய் பெருவாரியாக அதாவது, கணிசமான அளவுக்கு மத்திய மான்யம், கடன் உதவி என்ற நிலையிலேதான் இருக்கிறது. இந்த நிலை மாறுகிற நல்ல நாள் வரவேண்டும் என்று நான் பிராத்திக்கின்றேன்.

இன்னொன்றும் நான் சொன்னால், இங்குள்ள பட்டதாரி நண்பர்கள் என்னைத் தவறாக எண்ணக்கூடாது. பல்கலைக்கழகப் பட்டம் பெறாத ஒருவர் முதலமைச்சராகவும், நிதியமைச்சராகவும் இருந்து, இவ்வளவு சிறந்த பட்ஜெட்டைத் தயாரித்துக் கொடுத்திருக்கின்றார்கள். இப்படியே 7 ஆண்டு காலமாக தொடர்ந்து கொடுத்து வந்திருக்கின்றார்கள். தமிழ் மட்டும் வளரவில்லை; தமிழறிந்த தமிழனும் வளர்கின்றான். "எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்" என்று. ஆனால், தமிழ் நாட்டை தமிழ் மட்டுமே அறிந்தவன் எப்படி ஆள முடியும் என்று கேட்கின்றார்களே, அவர்களுக்கு, "இப்படித்தான் ஆள முடியும்" என இந்த பட்ஜெட்டே காட்டுகிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பல்கலைக் கழகம் முதல்வர் அவர்களுக்கு டாக்டர் பட்டமே வழங்கிவிட்டது. எனவே மற்ற பட்டங்களை விட இதுவும் உயர்வுடையது. அப்படிப்பட்ட பட்டத்தை பல்கலைக் கழகம் வழங்கிய பின்னரும், இன்னும் பட்டம் பெறாதவர் என்று சொல்வது அவ்வளவு சரியல்ல.

திரு. ம. பொ. சிவஞானம் : தலைவரவர்களே. டாக்டர் என்பது மரியாதைப் பட்டம்தான். மெக்காலே கல்வித் திட்டப்படி பட்டம் கொடுக் கிறார்கள் படிப்புக்காக. அதைத்தான் நான் சொன்னேன். டாக்டர் பட் டத்தை ஒரு முறைதான் கலைஞர் வாங்கினார். நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்கள் ஒவ்வொன்றும் அவரைக் கூப்பிட்டு டாக்டர் பட்டம் கொடுக்கு மானால், நானும் மகிழ்ச்சியடைவேன். எனக்கும் தந்தால், நானும் போய் வாங்கிக்கொள்வேன்.

மத்திய நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதிலே அங்குள்ள நிதி யமைச்சர் அவர்களே பெரும்பங்கு எடுத்துக்கொண்டார்கள் என்று பத்திரி கையில் படித்தபோது, நான் மகிழ்ச்சியடைந்தேன். ஒரு தமிழர் தனது ஆற்றலை அங்கே காட்டினார் என்பதற்காக இங்கும் கலைஞர் அவர்களுடைய கை வண்ணம், வரிக்கு வரி..........

ஒரு மாண்புமிகு உறுப்பினர் : இலாகாவினர் தயாரித்திருப்பார்கள்.

திரு. ம. பொ. சிவஞானம் : தலைவரவர்களே, இலாகாவினர் தயாரித் தாலும் கூட, அதிலே கலைஞருடைய கைவண்ணத்தைக் காண்கிறோம். அதிலே உள்ள குறை ஒன்றை நான் இங்கே குறிப்பிட்டாகவேண்டும்.



1975 மார்ச் 11] [திரு. ம. பொ. சிவஞானம்]

"ஊதிய உயர்வுக்குக் கோரிக்கை வைப்பதற்கு வாய்ப்பற்ற பல கோடி மக்கள் இந்திய நாட்டில் இருக்கின்றார்கள். காரணம்—அவர்களுக்கு எந்த ஊதியமும் இல்லை! ஊதியம் இருந்தால்தானே உயர்த்த வேண்டு மென்ற குரலே எழப்போகிறது? அவர்களுக்கும் சேர்த்துத்தான்—சரி யாகச் சொல்வதானால், அவர்களை முக்கியமாக வைத்துத்தான், நமது பொருளாதாரப் புரட்சியை உருவாக்க வேண்டும்" என்று நமது முதல்வர் சொல்லியிருக்கின்றார்.

இந்தத் தத்துவம், பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு, அரசின் ஒவ்வொரு இலாகாவினுடைய அலுவலகந்தோறும் வைக்க வேண்டிய ஒன்று என்பதில் ஐயப்பாடே கிடையாது. ஆனால், பட்ஜெட்டின் உள்ளே புகுந்து பார்க்கின்றபோது, இந்தத் தத்துவம் நடைமுறைக்கு வரவில்லை என்ற மனக்குறையே எனக்கு ஏற்படுகின்றது. ஊதிய உயர்வு கோரிக் கையை வைப்பதற்கு வாய்ப்பற்ற பல கோடி மக்கள் இந்த நாட்டிலே இருக்கின்றார்கள். ஊதிய உயர்வு கோரிக்கை மாத்திரம் அல்ல; அக விலைப்படி உயர்வு கோரிக்கை வைக்கவும் அவர்களுக்கு வாய்ப்பு கிடையாது. அவர்கள், மக்களிலே நூற்றுக்கு எண்பது சதவிகிதத்தினர். எஞ்சியுள்ள இருபது சதவிகிதத்தினர் டிரேட் யூனியன் முறைக்கு உட்பட்டவர்கள். இந்த டிரேட் யூனியனுக்குட்பட்ட இவர்கள் தான் ஊர்வலத்தை நடத்தி, ஆர்ப்பாட்டம் நடத்தி, அரசை இசை பாடி, வசை பாடி, எப்படியோ ஊதிய உயர்வு—அகவிலைப்படி உயர்வு வாங்கி விடுகின்றார்கள். இவர் களுக்கு ஊதிய உயர்வு கொடுப்பதால்—அகவிலைப்படி உயர்வு ஏற்படு வதால், விலைவாசி இன்னும் உயர்ந்து சாதாரண மக்கள் கஷ்டப்படு கின்றார்கள். நான் பல நேரங்களில் கேட்டிருக்கிறேன். ஏதேனும் ஒரு வேலை நிறுத்த ஊர்வலமோ, ஊதிய உயர்வு கோரிக்கை ஊர்வலமோ வீதிகளில் போய்க்கொண்டிருக்கின்றபோது, அதைப் பார்த்து, இன்னொரு பக்கம் மூட்டை சுமந்து கொண்டு போகின்ற தொழிலாளி, கூடை சுமந்து கொண்டு போகின்ற தாய், "ஆமாம், நீங்கள் எல்லாம் சம்பள உயர்வு வாங்கிவிட்டு, விலைவாசியை உயர்த்தி, எங்கள் வயிற்றிலே அடியுங்கள்" என்று சொல்லிக்கொண்டு போவதை நாம் கேட்கிறோம். ஆனால், வாய் இருந்தும் குருடராய்க் கிடக்கின்ற இந்தக் கோடிக்கணக்கான மக்களுக்கு இங்கு ஆளுவோர் தங்கள் உள்ளத்தில் இடம் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த அறிக்கை காட்டுகின்றது. ஆனால், பயன் என்ன ? அகவிலைப்படி உயர்வாக 24 கோடி ரூபாய் கொடுக்கப்படுகிறது. முதலில் சொன்ன 12 கோடி ரூபாய் போதாது என்று இப்போது 24 கோடி ரூபாய் கொடுக்கப்படுகிறது பட்ஜெட்டில் வழி வகுக்க. அதனை நான் தவறு என்று சொல்லவில்லை. அரசாங்கம் தன் அலுவலர்களைத் திருப் திப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால் நாட்டின் பொருளாதார நிலையையும் நாம் பார்க்கவேண்டு மல்லவா? இதிலே ஒரு நியதியை ஏற்படுத்திக் கொள்வது நல்லது. அரசாங் கத்திற்குக் கிடைக்கிற வருவாயிலே நிர்வாகச் செலவுக்கென இத்தனை சதவிகிதம்தான் ஒதுக்க வேண்டும் என்பதை ஒரு தத்துவம் ஆ வேண்டும். 35 சதவிகிதம் அல்லது 30 சதவிகிதம் என்று நிர்வாகச் செலவுக்கு ஒரு வரம்பு வைக்க வேண்டும். வருவாயின் மற்ற அல்லது 70 சதவிகிதத்தை மக்களின் நலனுக்காக என்று ஒதுக்கு

தத்துவத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இல்லையேல், அரசாங்கம் தனது வருவாயைத் தனக்காகவே செலவழித்துக்கொள்வதாகத்தான் ஏற்படும். இதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது என்பதை இந்த அறிக்கை காட்டுகிறது.

அடுத்தபடியாக, இந்த வரவு-செலவுத் திட்டத்திலே, பிற்பட்டவர்களுக்காக—தாழ்த்தப்பட்டவர்களுக்காக, குடியிருப்புகளும், ஆஸ்டல்களும் கட்டும் திட்டங்கள் காணப்படுகின்றன. அதைப்பற்றி இங்கே எனக்கு முன் பேசியவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவைகளையெல்லாம் நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். அதைவிடவும் சிறப்பாக, அனாதைக் குழந்தைகளுக்கும், காப்பாரற்றுவிட்ட கைம்பெண்களுக்கும் வாழ்வளிக்க இந்த அரசு பொறுப்பேற்குமென்று அறிவிக்கப்பட்டிருப்பது, அதற்காகத் திட்டமும் வகுக்க இருப்பது, நாட்டை அதிகமாகக் கவர்ந்ததாகத் தெரியவில்லை. சமுதாயத்திலே அப்படிப்பட்ட மனப்பான்மை இருக்கிறது. விதவைப் பெண்களுக்கு வாழ்வளிக்க அரசு முயற்சி எடுக்கிறது என்றால், திரு வி. கல்யாணசுந்தரனார் இன்று இருந்திருந்தால், அவர் கலைஞரை வாழ்த்தி ஒரு காப்பியமே பாடியிருப்பார். பெண்ணின் பெருமை பற்றி காலம் எல்லாம் பேசி வந்த அவர் இன்று இருந்திருந்தால், வாயார வாழ்த்தியிருப்பார். காந்தியடிகள், திரு வி. கல்யாணசுந்தரனார், வ. உ. சிதம்பரம் பிள்ளை, பாரதியார், பாரதிதாசன், பெரியார், அண்ணா ஆகியவர்கள் எல்லாம் வற்புறுத்தி வந்த சமூதாய சீர்திருத்தத்திலே விதவைகள் துயர் துடைப்பதும் ஒன்றாகும்.

(பிற்பகல் 5-10).

ஆனால், அவர்களையும் ஒருபடி மிஞ்சியிருக்கிறார் கலைஞர். அவர்கள் கூட விதவைகளுக்கு உதவி அளிக்க அரசு முன் வர வேண்டுமென்று சொல்லவேயில்லை. சமுதாயத்தைப் பார்த்துத்தான் அவர்கள் அப்படிச் சொன்னார்கள். அதைவிடவும் ஒரு படி மேலே போய், "இது அரசு பொறுப்பேற்க வேண்டிய ஒன்று; மக்களைப் பார்த்துச் சொற்பொழிவாற்ற வேண்டிய ஒன்றல்ல; பிரச்சாரம் செய்ய வேண்டிய ஒன்றல்ல" என்று கலைஞர் சொல்லாமல் சொல்லி விட்டார். அனாதைக் குழந்தைகளுக்கும் ஆதரிப்பாரற்ற விதவைகளுக்கும் வாழ்வளிக்க இந்த ஆட்சியே பொறுப்பேற்க முன் வந்திருப்பதற்காக நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நான் போற்றும்—முதல்வர் போற்றும்—சிலப்பதிகார கலைக் கூடம் அமைக்க காரணமாக இருந்திடும்—இளங்கோவடிகள் தம்முடைய சிலப்பதிகாரக் காப்பியத்திலே, விதவைகள் துயரை வருணிக்கிறார்.

கண்ணகி பூம்புகாரிலே பிறந்து, மதுரையிலே கணவனை இழந்த போது—கோவலன் கொலையுண்டான் என்ற செய்தியை முதன் முதலாகக் கேட்டபோது, அவள் முதலில் குமறியழுது சொன்னது,

'இன்புறு தன்கணவர் இடர் எரி அகம் மூழ்கத்
துன்புறு வனநோற்றுத் துயருறும் மகளிரைப் போல்
மன்பதை அவர்தூற்ற மன்னவன் தவறிழைப்ப
அன்பனை இழந்தேன் யான் அவலங்கொண்டு அழியவோ'





என்பதாகும். "கணவனை இழந்த கைம்பெண்ணாக நான் எப்படி வாழ்வேன்?" என்று அழுதாள். 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இந்த நிலை. வ.உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள், தாம் உயிர் விடுகிறபோது, விடுதலை பெறாத நாட்டிலே உயிர் விட நேர்ந்ததற்கு வருந்தினார். அதோடு, தம் அருகிலிருந்த தூத்துக்குடி மாசிலாமணி பிள்ளை என்ற நண்பரிடம், "பிள்ளைவாள், உங்களுக்குத் தெரியுமா? இந்த நாட்டிலே இளம் விதவைகள் எவ்வளவோ பேர் வாழ்வற்று கண்ணீர் விடுகிறார்கள். ஒரு சான்று சொல்லுகிறேன். கம்பன் ஒரு நாள் அதிகாலை நேரத்திலே கிராமப் புறத்திலே சென்றுகொண்டிருந்தபோது, ஒரு வீட்டிலிருந்து ஒரு அழுகைக் குரல் வந்தது. யாரோ அழுதவள் வாயை அடைத்ததால், அழுகை நின்று விட்டது. அந்த வீட்டின் திண்ணையில் அமர்ந்து, "அழுவது யார்? என் அழுகிறார்?" என்று கம்பர் கேட்டார். கணவனை இழந்தவள் காலையில் ஒப்பாரிப்பாடி அழுவது அந்த நாளில் வழக்கம். அதன்படி, அந்த வீட்டு அம்மாள் கணவனை இழந்ததற்காக ஒப்பாரிப்பாடி அழுதார்கள் என்று கேள்வியுற்றார். "நாளை அதிகாலையிலும் அழுவார்களோ?" என்று கேட்டார். "அழுவார்கள்" என்று பதில் கிடைத்தது. மறு நாள் வந்து கேட்டதிலே,

"சில்லென்று பூத்த
சிறுநெருஞ்சிற் காட்டினுள்ளே
நில்லென்று சொல்ல
நிறுத்தி வைத்துப் போனீரே."

என்று பாடினாள். "கணவனை இழந்த விதவைக்கு உலக வாழ்வு என்பது நெருஞ்சிக் காடு போன்றது. அந்த நெருஞ்சிக் காட்டின் நடுவே என்னை விட்டு விட்டுப் போய்விட்டாயே! நான் முன்னே போகவும் இந்த சமுதாயம் அனுமதிக்காது. நான் பின்னே போகவும் முள்காடானதால், முடியாது. என் நிலை என்னே!" என்று அவள் அழுதாள். இதைப் போன்ற விதவைகள் எத்தனை ஆயிரம் பேரோ? எத்தனை இலட்சம் பேரோ? என்று சொல்லி பிள்ளை அவர்கள் கண்ணீர் விட்டு அழுதார் என்று மாசிலாமணி பிள்ளை அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அந்த சிதம்பரம் பிள்ளையுடைய கண்ணீரைத் துடைப்பதற்கு இது ஒரு நல்ல திட்டம் என்று சொல்லி, மனமார அரசை வாழ்த்துகின்றேன்.

அனாதைக் குழந்தைகளை அனாதை இல்லங்களில் கொண்டுபோய் விட்டால் தாயும் தந்தையும் இல்லாமல் இருந்தால்தான் ஏற்றுக் கொள்ளுகிறார்கள். தந்தை இல்லாது தாய் மட்டும் இருந்தால் அனாதை என்று ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். உண்மையில் தந்தை இல்லாமல் தாய் இருந்தால், அவளும் ஒரு அனாதைதான். எனவே, அந்த குழந்தையை நிச்சயமாக அனாதை என்று ஏற்றுக்கொள்ள வேண்டும். பல அனாதை இல்லங்களுக்கு நானே பரிந்துரை செய்து அனுப்பியிருக்கிறேன். தாயிருக்கிற காரணத்திற்காக ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார்கள்.

[திரு. ஆர். சக்திமோகன்] [1975 மார்ச் 11

ஆதரிப்பாரற்ற விதவைகளுக்கு நீங்கள் வாழ்வளிக்கிறபோது—மானியமோ அல்லது வேறு உதவியோ தருவதோடு அல்லாமல், அவள் எத்தனை குழந்தைகளோடு அல்லல்பட்டுக்கொண்டிருக்கிருளோ, அந்தக் குழந்தைகள் அனைத்தையுமே சர்க்கார் எடுத்து கல்வியளிக்கவும், வளர்க்கவும், வாழ்வளிக்கவும் பொறுப்பேற்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆறு கோடி ரூபாய்க்கு வரி போடப்பட்டிருக்கிறது, 26 கோடி ரூபாய் பற்ருக்குறை இருப்பதால். நான் வரி போடுவதே தவறு என்று சொல்லக்கூடியவனல்ல, யாருமே அப்படிச் சொல்ல முடியாது. தாங்கக்கூடிய சக்தி படைத்தவர்களுக்கு வரியைப் போட்டு, தேவைப்படுகின்றவர்களுக்கு அந்த வரியிலிருந்து நிவாரணம் தருவதுதான் ஆட்சியினுடைய கடமை. வரியே போடாமல் ஆட்சியை நடத்த முடியாது. மக்களுக்கு புதிய புதிய நலன்கள் வழங்கவும் முடியாது. ஆனல், யாருக்கு வரி போட்டால் தாங்கிக் கொள்வார்களோ, அவர்களுக்கு வரி போட அரசியல் சட்டம் அரசுக்குச் சாதகமாகவே இல்லை. அந்த அதிகாரம் மத்தியிலே இருக்கின்றது. அங்கு ஆயிரம் கோடி ரூபாய் வருவாயாக இருந்தது 1950ஆம் ஆண்டிலே! 25 ஆண்டுகளுக்குள் 10 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது மத்திய ஆட்சியினுடைய வருமானம். அந்த வளமான நிலை தமிழகத்திற்கு இல்லாதிருந்தும், கூடுமானவரை சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்கள் பாதிக்கப்படாத வகையில் வரி போட்டிருக்கிறீர்கள். ஆறு கோடி ரூபாய்க்குத்தான் வரி போட்டிருக்கிருர்கள். அதே நேரத்தில் தாழ்த்தப்பட்டோர், மீனவர், விதவைகள், அனாதைக் குழந்தைகள் இவர்களுக்கெல்லாம் வாழ்வுதர இந்த ஆறு கோடி ரூபாயைவிடவும் அதிகமான தொகை—அபிவிருத்தித் திட்டத்திலே செலவழிக்க—ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறேன்.

நிதிநிலை அறிக்கையில் ஒரு குறையை என்னல் பார்க்க முடிகிறது. அந்தக் குறையை என்னல் எடுத்துக் காட்டாமல் இருக்க முடியவில்லை. தமிழுக்கென ஒரு தனி நிதி இந்த ஆண்டிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. நான் போன ஆண்டிலும் இங்கு சொன்னேன். அதற்கு முன் சட்டப் பேரவையிலும் சொன்னேன், "எல்லாவற்றிற்கும் நிதி ஒதுக்குகிறீர்கள், தமிழுக்கு என்று ஒரு தனி நிதி ஒதுக்கவில்லையே" என்று. இந்த பட்ஜெட்டிலே தமிழுக்கென தனி நிதி ஒதுக்கியிருக்கிருர்கள். நான் நினைக்கிறேன் ஏற்கனவே தமிழுக்கென செய்யப்பட்டு வரும் செலவுகள் எல்லாம் அதிலே தொகுத்துத் தரப்பட்டிருக்கிறது என்று. முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். எழுபத்தேழு இலட்சம் ரூபாய் தமிழுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு புதிய திட்டத்திற்கான புதிய நிதி ஆகாது. "அகர முதலி"க்கும் மற்றவற்றுக்குமாக ஏற்கனவே செலவழிக்கப்பட்டிருப்பது—கல்வி பட்ஜெட்டிலே சேர்க்கப்பட்டிருப்—தனியாகப் பிரித்துக் காட்டப்பட்டிருக்கிறது வரவு-செலவுத் திட்டத்திலே. அதிலே, நான் திருப்தியடைய முடியவில்லை. ஒரு புதிய திட்டம் வேண்டும். அந்தத் திட்டத்திற்கு என்று பல கோடி ரூபாய் புதிதாக ஒதுக்கப்பட வேண்டும். அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த சர்க்கார்



1975 மார்ச் 11] [திரு. ம. பொ. சிவஞானம்]

இலாகாவையே நம்பியிராமல் உத்தியோகப் பற்றற்றவர் தலைமையில் தமிழ் வாரியம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். இதைச் செய்தாலொழிய, தமிழ் ஒரு அங்குலமும் முன்னேற முடியாது. இதை அரசு செய்ய வேண்டுமென்று நான் போன ஆண்டிலே பட்ஜெட் சொற்பொழிவிலே கேட்டேன். அப்பொழுது முதல்வர் "விரைவிலே இந்த வாரியம் அமைக்கப்படும்" என்று பட்ஜெட் விவாத முடிவிலே சொன்னது எனக்கு அதிருஷ்டமிருந்தால் அவருக்கும் நினைப்பிருக்கும். எனக்கு நன்ருக நினைப்பிருக்கிறது. இந்த பட்ஜெட் விவாத முடிவிலும் அவர்கள் உறுதிமொழி சொல்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் நிறைவேறியது 1956-ல். அப்பொழுதிருந்த கல்வி அமைச்சர் சொன்னர், 10 ஆண்டு காலத்திற்குள் ஆங்கிலத்துக்குப் பதிலாக—"அரசு தலைமை அலுவலகங்களில் தமிழை ஆட்சி மொழியாக்கும் பணி முடிவு பெற்றுவிடும்" என்று. பத்து ஆண்டு என்ன, 19 ஆண்டு ஆகிவிட்டது; இன்னும் ஒரு அங்குலம் கூட நகரவில்லை என்பதை நான் சொன்னல், அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் உண்மை நிலை எதுவென்று சொன்னல், நானும் ஏற்றுக்கொள்வேன். சிலப்பதிகார கலைக் கூடமும், கட்டபொம்மன் நினைவுச் சின்னமும் ஏற்பட்டிருக்கின்றன. இங்கே கூட, இத்தனை நாள் ஆங்கிலத்தில்—மேலவைத் தலைவர் அவைக்கு வருங்கால்—கட்டியம் கூறும் நிலை மாறி தமிழிலேயே கட்டியம் கூறுவதைக் கேட்கிறபோது, என்னுடைய காதெல்லாம் இனிக்கிறது. அமைச்சர்கள் இல்லங்கள் பெயர்கள் மாறுகின்றன. தெருக்களின் பெயர்கள் மாறுகின்றன. ஊர்ப் பெயர்கள் மாறுகின்றன. ஆனல் தமிழின் தலையெழுத்து மாறவில்லை. தமிழ்த்தாய்க்கு முன்பு 3 வேளை பூஜை நடந்து வந்தது, இப்பொழுது 6 வேளை பூஜை நடக்கிறது. அலங்கார ஆராதனை எல்லாம் மிக அழகாக நடக்கிறது. ஆனல், கை விலங்கு கால் விலங்கு கழற்றப்படவேயில்லை. ஆங்கிலத்தின் ஆதிக்கம் எவ்வளவு குறைக்கப்படுகிறது என்பதை வைத்துத்தான் தமிழுக்கு ஏற்பட்ட வளர்ச்சி, வாழ்வுபற்றி முடிவு கட்ட வேண்டும். தெருப் பெயர்களும், ஊர்ப் பெயர்களும், பூங்காப் பெயர்களும், சோலைப் பெயர்களும், மண்டபங்களின் பெயர்களும் தமிழாகி விடுவதால் மட்டுமே தமிழ் வளர்ந்துவிட முடியாது. சுதந்திரம் வந்து 29 ஆண்டுகளுக்குப் பிறகும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த 9-வது ஆண்டு கொண்டாடப்படுகிற நிலையிலும் ஆங்கில ஆதிக்கத்தை முறியடித்து ஒரு அங்குலம் கூட தமிழ் முன்னேறவில்லை என்று சொன்னல், வேறு யார் முன்னேற்றிவிடப் போகிருர்கள்? மேலும் நான் இங்கே முறையிட்டுக்கொள்கிறேன். இந்தக் குறைபாட்டை நான் இங்கே சொல்லாவிட்டால் என் மனச்சாட்சிப்படி நான் நடந்துகொள்ளவதாகாது. ஆனதால்தான் அதை நான் தெளிவாக இங்கே சொல்ல விரும்புகிறேன். இந்த ஆண்டிலே பட்ஜெட்மீது பேசியவர்கள் எல்லாம்..

மாண்புமிகு மேலவைத் தலைவர்: "பட்ஜெட்" என்று ஆங்கிலத்தில் ஏன் சொல்லுகிறீர்கள்? நீங்களோ ஆங்கிலத்தில் சொல்லலாமா? தமிழிலே சொல்லலாமே.

திரு. ம. பொ. சிவஞானம் : தலைவரவர்களே, இதெல்லாம் ஆங்கில ஆதிக்கத்தை நீக்கச் சொல்வதற்கு எதிராகச் சொல்லுவது. அம்மாதிரி தாங்களும் சொல்லக்கூடாது. ஏனென்றால், தாங்கள் எங்களை ஆதரிக்கின்றவர்கள். நான் தெளிவாகச் சொல்கிறேன், நான் ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை எதிர்க்கிறேனேயொழிய ஆங்கிலச் சொற்களை அல்ல. "ஆங்கிலச் சொற்களைச் சொல்கிறாயே" என்பது, எதிர்வாதமாகாது. எங்கும் தமிழ், எதிலும் தமிழ், ஆனாலும்கூட, பிறமொழிச் சொற்கள் அங்குமிங்கும் வரத்தான் செய்யும். அதை எதிர்க்கிற அளவுக்கு எனக்கு மொழி வெறி கிடையாது என்பதைப் பெருமையோடு நான் இந்த அவையிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : "பட்ஜெட்" என்பதற்கு சுத்தமான தமிழ் "வரவுசெலவுத் திட்டம்" என்று இருக்கிறதே. தாங்கள் சுத்தமான தமிழிலேயே சொல்லியிருக்கலாமே! "கவர்னர் புரொக்ரோ என்று நான் ஆங்கிலத்திலே சொல்வதற்குக் காரணம் அதற்கு சுத்தமான தமிழ் இல்லை. அதனால்தான் அதுமாதிரி சுத்தமான தமிழ் இல்லாத இடத்தில் ஆங்கில எழுத்தைக் கையாள்கிறோம் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

திரு. ம.பொ. சிவஞானம் : தலைவரவர்களே, நான் அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்கிறேன். தமிழிலே எல்லாம் நடப்பதற்கு என்ன செய்யப் போகிறீர்கள் என்று தெரிய வேண்டும். தமிழில் மாறுவதற்கு எதிர்ப்பு இருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். சூழ்நிலை சரியாக இல்லை என்பதையும் ஒப்புக்கொள்ளுகிறேன்—ஏற்றுக்கொள்ளுகிறேன். ஆனால், அந்தச் சூழ்நிலையை மாற்றியமைக்கத் தானே நீங்கள் வந்தது ? அந்தச் சூழ்நிலையை மாற்றியமைப்பீர்கள் என்று நம்பித்தானே உங்களை ஆதரிக்கிறது இந்த நாடு. அந்த நிலையில், சூழ்நிலையை மாற்றுவதற்கு உங்களால் முடியவில்லையெனில், மாற்றுவதற்கு வேறு என்ன திட்டம் கொண்டு வரப்போகிறீர்கள் ? மாற்றியமைப்பதற்கு என்ன வழிவகை காணப் போகிறீர்கள் ? அது முடியாது என்று சொன்னால், அதற்குப் பிறகு நான் அதைப்பற்றி ஒன்றுமே சொல்வதற்கில்லை. முதலமைச்சர் அவர்கள் அப்படிச் சொல்லமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

இந்த வரவு–செலவுத் திட்டத்தைப்பற்றிப் பேசுகிறபோது எல்லோருமே "மாநில சுயாட்சி" பற்றிப் பேசினார்கள். இங்கும் பேரவையிலும் எல்லா இடங்களிலும் சுயாட்சி என்பதே பேச்சு! பாரதியார் பாடினார், "எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு. நாம் எல்லோரும் சமம் என்பது உறுதியாச்சு—இதை சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே தரணிக்கெல்லாம் எடுத்து ஓதுவோமே" என்று. சுதந்திரம் என்ற சொல்லுக்கு நாடு முழுவதும் ஆதரவு கிடைத்தபொழுது, அந்த மகா கவி பொங்கியெழுந்து—பூரித்தெழுந்து பாடிய பாடல் இது. இப்பொழுது நானும் பூரிப்படையலாமா என்று பார்க்கிறேன். ஏனென்றால், எங்கும் சுயாட்சி என்பதே பேச்சு. எந்தப் பேச்சு வந்தாலும் சுயாட்சி என்ற வார்த்தை வராமல் இல்லை. பிரதமர்கூட "இப்பொழுது ஒரு மேனியாகப் போச்சு,





மாநில சுயாட்சிபற்றிப் பேசுவது" என்று சொன்னார். ஆனால், பாரதியார் சொன்னது சுதந்திரத்திற்கு ஆதரவான குரலை. இப்பொழுது நாம் என்ன பார்க்கிறோம் ? நேற்றுவரை திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்தபோது ஆதரித்தவர்கள், நேற்றுவரை டில்லியின் இராணுவத்தையே தமிழ்நாட்டுத் தெருவில் சந்திக்கத் தயாராக இருந்தவர்கள்—திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தபோது மாநில சுயாட்சிக்காக உயிர் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன் என்று கலைஞருக்கு உறுதி கூறியவர்கள்—கட்சி மாறிய உடனே சுயாட்சிக்கு எதிரிகளாக மாறிவிடுகிற ஒரு நிலையைத்தான் பார்க்கிறோம்.

(பிற்பகல் 5-20).

நல்ல வேளையாக, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் நண்பர் திரு. வெங்கா அவர்கள், "சுயாட்சியை அண்ணா அவர்கள் சொன்னார் என்பதை ஒப்புக்கொள்கிறோம்" என்று சொன்னார்கள். நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். அதை ஏற்றுக்கொண்டு, அவர் மூலமாக அவர் கட்சி நண்பர்களுக்குச் சொல்கிறேன், ஒரு கட்சியைவிட்டு—தனி நபர் மீதுள்ள கோபத்தால்—வேறு கட்சி மாறினாலும், வேலைத் திட்டம் மாற வேண்டுமே ஒழிய, தலைமை மாறவேண்டுமே ஒழிய, கொள்கை மாறிவிடக்கூடாது. மாநில சுயாட்சி என்பது வேலைத் திட்டமல்ல ; கொள்கை. அந்தக் கொள்கையை எங்கிருந்தாலும் ஏற்றுக்கொண்டு நடத்துவதற்கு உறுதி இருக்க வேண்டும். அங்கே இருக்கிற தலைமை அதற்குச் சாதகமாக இல்லையென்றால், அப்பொழுது அந்தத் தலைமையின் பிறப்பும் வளர்ப்பும் சூழ்நிலையும் அதற்குக் காரணமா என்று ஆராய்ந்து பார்த்து, அதுதான் காரணம் என்றால், அங்கு உந்தும் சக்தியாக, முன்னோடும் சக்தியாக, திரு வெங்காவைப் போன்றவர்கள் இருந்து வேலை செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொள்ளத்தான் அவர்களுடைய பெயரை இங்கு குறிப்பிட்டுச் சொல்கிறேன்.

திரு. வி. வெங்கா : தலைவர் அவர்களே, நேற்று மேலவையிலே நான் மட்டும் ஏற்றுக்கொள்ளவில்லை. என்னுடைய கட்சியே ஏற்றுக் கொண்டிருக்கிறது. இதற்கு உதாரணமாக எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்பதை பாராளுமன்றத்திலே வலியுறுத்தியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எங்களுடைய கட்சி இந்தச் சூழ்நிலையில், இப்போது இருக்கக்கூடிய முதல் அமைச்சருக்கு அதிக அதிகாரங்கள் தேவையில்லை என்றுதான் சொல்கிறதே தவிர, தமிழ் நாட்டிற்கு அதிக அதிகாரங்கள் தேவையில்லை என்று சொல்லவில்லை.

திரு. ம. பொ. சிவஞானம் : காங்கிரஸ் சுதந்திரம் கேட்டபோதுகூட காந்தியடிகள் சுதந்திரப்போர் நடத்தியபோதுகூட, ரொம்பப் பேர் இப்படித்தான் சொன்னார்கள். "தமிழ் நாட்டிற்குச் சுதந்திரம் வந்துவிட்டால், அது பார்ப்பான் கைக்குப் போய்விடும்"—அவர்கள் சொன்ன வார்த்தையைச் சொல்கிறேன் – என்று பார்ப்பனர் அல்லாதார் சொன்னார்கள்

"இந்தியாவிற்குச் சுதந்திரம் வந்துவிட்டால், அது உயர் ஜாதியார் கையில் போய்விடும்" என்று தாழ்த்தப்பட்டவர்கள் பயந்தார்கள். முஸ்லிம்களோ, சுதந்திரம் வந்துவிட்டால் இந்துக்கள் கையில் போய்விடும் என்று பயந்தார்கள். இந்தப் பயங்கள் எல்லாம் ஒரு ஏகாதிபத்தியம் நிலைப்பதற்குத் துணையாக இருந்ததே தவிர, சுதந்திரம் பெறுவதற்கு உறுதுணையாக இல்லை என்பதைச் சரித்திரம் காட்டுகிறது. ஆகவே, நண்பர்களைக் கேட்கிறேன், சுயாட்சி, அதிகாரப் பரவல் இரண்டையும் போட்டுக் குழப்ப வேண்டாம். சுயாட்சி வேறு, அதிகாரப் பரவல் வேறு. இப்போதும் நான் சொல்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகமும், தமிழரசுக் கழகமும் மாநில சுயாட்சி கேட்கின்றன என்றால், அதனுடைய பொருள் என்ன? அமெரிக்காவிலே, மாநிலத்திற்குத் தனிக்கொடி; மாநிலத்திற்கு ராஜ்ய கீதம் தனி, ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனி அரசியல் சட்டம். மலேசியாவில் கூட, மாநிலத்திற்குத் துறைமுகம் வைத்துக்கொள்ள உரிமை இருக்கிறது. பெருந் துறைமுகம் பெருந் மாநிலத்திற்குரியது. மத்திய சமஷ்டிக்குச் சேர்ந்தது அல்ல. இவையெல்லாம் சேர்ந்ததுதான், மாநில சுயாட்சி. நான் இன்னும் ஒன்றையும் சொல்கிறேன், கலைஞர் அவர்கள் மிக தீர்க்கதரிசனமாக, பிரத்தியட்ச உணர்வோடு, இங்கே கொண்டுவந்து நிறைவேற்றிய தீர்மானம், அந்த மாதிரியாக சுயாட்சி கோரிக்கை கூட அல்ல. அதிகாரப் பரவல்தான் கோரிக்கை. உண்மையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கேட்பது, அதிகாரப் பரவல்தான்—கூடுதலான அதிகாரம்தான் என்றால், அந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு, அதைச் செயல்படுத்த வேண்டும். நீங்கள் கூடுதலான அதிகாரம் கேட்கிறீர்கள்; திராவிட முன்னேற்றக் கழகமும் தமிழரசுக் கழகமும் மாநில சுயாட்சி கேட்கின்றன என்றால், அப்பொழுது என்ன ஆகிறது? நீங்களும் நாங்களும் சேர்ந்து மத்திய ஆதிக்கத்திற்கு எதிரிகள் என்றுதானே ஆகிறது? அந்த உண்மையை ஒத்துக்கொள்கிற துணிவு, உங்களுக்கு ஏற்பட வேண்டும். நீங்கள் கூடுதல் அதிகாரம் கேட்டாலும், நாங்கள் அதைவிடக் கூடுதலான அதிகாரம் கேட்டாலும், அப்பொழுதும் டில்லியில் குவிந்த அதிகாரத்திற்கு நாம் எதிரிகள்தானே! கூடுதல் அதிகாரத்திற்காக நீங்கள் மத்திய ஆட்சியை எதிர்த்துப் போராடத் தொடங்கினால், உங்கள் பின்னாலே வருவதற்கு நான் தயாராகக் காத்துக்கொண்டிருக்கிறேன் என்பதை வணக்கத்தோடு இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் சுயாட்சிக் கோரிக்கையை எதிர்ப்பதற்காக அதிகாரப் பரவல் கோருகிறோம் என்று மக்களுக்கு முகம் காட்டப் பயந்து சொல்கிற வாதம் ஒருநாளும், எடுபடாது, எடுபடக்கூடாது.

கிராம சுயாட்சி வேண்டும் என்று நண்பர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் சொன்னார்கள். கிராம சுயாட்சிக்கு நான் எதிரி அல்ல. நான் காந்தியவாதி. கிராம சுயாட்சியை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதிகாரப் பரவல் முறைப்படிதான் கிராம சுயாட்சி கேட்க வேண்டும். ஆனால், மாநில சுயாட்சி என்பது இன அடிப்படையில் கேட்கப்படுகிறது. அது, தமிழ் இனத்தின் பிறப்புரிமையாகும். தமிழ் நாடு என் தாய்வீடு. அதற்கு, தன்னைத்தான் ஆண்டுகொள்ள உரிமை உண்டு. ஆனால் இந்த அணுகுண்டு-ஹைட்ரஜன் குண்டு சகாப்தத்திலே, வல்லரசுகள் மிரட்டுகிற காலத்திலே, ராஜராஜ சோழன் காலத்து சுதந்திரம் இன்றைக்கு ஜீரணிக்க





முடியாத ஒன்று என்று எண்ணப்படுவதால், பாதுகாப்பும், அயல்நாட்டு உறவும், போக்குவரத்தும்—மத்தியில் கொடுக்கிறோம். மற்றவற்றையெல்லாம் மாநிலங்களுக்கு இருக்க அனுமதி கேட்கிறோம். இந்தச் சுயாட்சிக்கு நீங்கள் தயாராக இல்லையென்றால், நீங்கள் கேட்கிற கூடுதல் அதிகாரத்திற்காகவேனும் மத்திய ஆட்சியை எதிர்த்துப் போராடுங்களேன். அதை விட்டுவிட்டு, அவர்களிடம் சரணடைந்துவிட்டு, "நாங்கள் கேட்பது மாநில சுயாட்சி அல்ல; கூடுதல் அதிகாரம் கேட்கிறோம்" என்று தப்பித்துக்கொண்டு விடுவது?

கிராமங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். கிராம சுயாட்சி என்பது நிர்வாகச் சீர்திருத்தம். ஆனால் மாநில சுயாட்சி என்பது தேசிய இனங்களின் பிறப்புரிமை. இதையும் அதையும் போட்டுக் குழப்புவது, ஒன்று, பலவீனத்தாலே இருக்கலாம் அல்லது கொஞ்சம் அவகாசம் எடுத்து யோசிக்காத குறைபாடாக இருக்கலாம். எனவே அவகாசம் எடுத்து யோசித்துப் பார்க்க வேண்டும். கிராம சுயாட்சிக்கு நான் எதிரானவன் அல்ல என்று கூறிக்கொள்கிறேன்.

காஷ்மீரத்தின் நிலை தனி நிலை என்று ஷேக் அப்துல்லா கூட நம்முடைய முதல்வரிடம் சொன்னார். "தமிழ் நாடு அப்படி அல்ல. ஆகவே, அவரவர்கள் நிலைக்கு ஏற்பக் கேட்க வேண்டும்" என்றார். அதையே பிரதமரும் சொல்லிவிட்டார். நான் சொல்கிறேன், தமிழ் நாட்டிற்கும் தனியான சூழ்நிலை உண்டு. காஷ்மீரத்திற்கு ஒரு தனி சூழ்நிலை என்றால், அதே சூழ்நிலை இங்கும் இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. ஆனால், இங்கேயும் ஒரு தனி சூழ்நிலை உண்டு. இது வேறுவிதமான சூழ்நிலை. எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரியும். வயதானவர்களாதலால். இந்த மாநிலத்திலேதான், 1920-ஆம் ஆண்டு முதற்கொண்டு 1936 வரை 16 ஆண்டுகள்—இரட்டை ஆட்சிமுறை வெற்றிகரமாக நடந்தது. மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தம் இந்திய மாநிலங்களிலேயே வெற்றிகரமாக நடந்த மாகாணம் இது. இதிலிருந்து என்ன தெரிகிறது? இதற்கு ஒரு தனி நிலை இருக்கிறதென்பதுதானே! அதுமட்டுமல்ல; இந்தி மொழியை ஏற்றுக்கொள்ள மறுத்து, பள்ளிகளில் பாடமாகக் கூட வைக்கக்கூடாது என்று தீர்மானம் கொண்டுவந்து, எதிர்ப்பாரின்றி நிறைவேற்றப்பட்டது இந்த நாட்டில் என்பதை மறந்துவிடக்கூடாது. வேறு எந்த மாநிலத்திலும் அப்படிச் செய்யப்படவே இல்லை. காங்கிரஸ்கூட எதிர்த்து ஓட்டுப் போடாமல் அமைதியாக இருந்தது; இந்த மாகாணத்தின் சூழ்நிலை காங்கிரசைக்கூட நடுநிலை வகிக்க வைத்தது, இந்தி எதிர்ப்புத் தீர்மானத்தின் மீது; மதிப்புக்குரிய தலைவர் திரு. காமராஜர் அவர்கள், புதுவை மாநிலத் தேர்தலின்போது "தமிழ்நாட்டின் சூழ்நிலைக்கு ஏற்ப, இங்கே உள்ள ஸ்தாபன காங்கிரசின் கிளை அதற்கு எதிரியான புதிய காங்கிரசோடு நட்பு கொள்ள வேண்டும்" என்றார். பழைய காங்கிரசுக்கு அகில இந்திய ரீதியில் புதிய காங்கிரசும் எதிரி. அந்தப் புதிய காங்கிரசோடு தமிழ் நாட்டின் ஸ்தாபன காங்கிரஸ் கிளை "தமிழ் நாட்டளவில் உறவு கொள்ள வேண்டும் என்றார். "ஏன்" என்றால் "தமிழ் நாட்டின் நிலை தனி" என்று அவர் சொன்னார். தமிழ் நாட்டிற்கு இன்னும் எத்தனையோ வகையில்

ஒரு தனி சூழ்நிலை இருக்கிறது. தமிழ் மொழி சமஸ்கிருதத்தின் கிளை மொழி அல்ல. இந்தி மொழியோடு உறவுடைய மொழியல்ல; கலாச் சாரத்திலேயும் தமிழ் மக்கள் வந்தேறிகளோடு ஐக்கியமாகிவிடவில்லை. கலை, கலாச்சாரம், வரலாறு, பழக்க-வழக்கங்கள், மொழி, இலக்கியம் ஆகிய அனைத்திலும் தனித்தன்மை பெற்றது தமிழ் நாடு. காஷ்மீரத் திற்கு அடுத்து ஒரு தனிச் சூழ்நிலையைப் பெற்றுள்ள மாநிலம் தமிழ் நாடுதான். அதனாற்றான், இதற்கு சுயாட்சி வேண்டுமென்று கேட்கிறேன். நேற்றுவரை அனைத்து மாநிலங்களுக்கும் சுயாட்சி என்பதுதான் எனது கோரிக்கை. அதனால்தான் "தமிழக சுயாட்சி" அல்லது "சுயாட்சித் தமிழகம்" என்று சொல்லாமல், மாநில சுயாட்சி என்று நாம் சொல்லிக்கொண்டு வந்தோம். நான் கலைஞர் அவர்களை வேண்டிக் கொள்ளுகிறேன்; நாம் கொள்கையை மாற்ற வேண்டாம். ஆனால், குரலை மாற்ற வேண்டும். அனைத்து மாநிலங்களுக்கும் சுயாட்சி வேண்டும் என்பதுதான் நம்முடைய கொள்கை. ஆனால் அவர்களே, அந்த அந்த மாநிலத்தின் சூழ்நிலைக்கு ஏற்பதான் இதற்கு முடிவுகட்ட முடியும் என்று சொல்லிவிட்ட பிறகு, தமிழ் நாட்டிற்கு உள்ள சூழ்நிலை குஜராத்திற்கு இல்லை. குஜராத்திற்கு உள்ள சரண்டல் சூழ்நிலை தமிழ் நாட்டிற்கு இல்லை. தமிழ் நாட்டிற்கு உள்ள சூழ்நிலை உத்தரப் பிரதேசத்திற்கு இல்லை. உத்தரப் பிரதேசத்திற்கு இருக்கிற-அகில இந்தியாவிலும் ஆதிக்கம் செலுத்துகிற—சூழ்நிலை நமக்கில்லை. அதனால், தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், இதற்கு ஒரு தனிச் சூழ்நிலை இருப்பதால், "தமிழ் நாட்டுக்கு சுயாட்சி கொடு" என்றே நாம் கேட்க வேண்டும். இதற்கொரு கிளர்ச்சி நடத்த வேண்டும். அனைத்து மாநிலங் களுக்கும் சுயாட்சி கொடுத்தால், நமக்கு மகிழ்ச்சி. இதற்காக, உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், பீகார், ராஜஸ்தான், அரியானா எல்லாம் சேர்ந்து வரும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. அவர்கள், இந்திக்காரர்கள், ஆளுகிற ஜாதியாகப் போய்விட்டவர்கள்.

காஷ்மீருக்குத் தனிச்சூழ்நிலை இருக்கிறதென்று சொன்ன அப்துல்லா, பிரிவினை கேட்டவர் அல்ல. யார் யாரிடம் சரணாகதி அடைந் தார் என்று இங்கு வாதம் நடந்தது. நான் அதில் புக விரும்பவில்லை. அப்துல்லாவிடம் இந்திரா சரணாகதி அடைந்தார் என்று சொல்ல என் தேசபக்தி அனுமதிக்கவில்லை. இந்திராவிடம் அப்துல்லா சரணாகதி அடைந் தார் என்று சொல்ல என் லட்சியப் பிடிப்பு அனுமதிக்கவில்லை. அப்துல்லாவின் நிலை என்ன? காஷ்மீர் இந்தியாவில் சேர்ந்ததற்கு காஷ்மீர் மன்னரும் ஜவகர்லால் நேருவும் செய்துகொண்ட உடன்படிக்கை தான் காரணம் என்றாலும், அந்த உடன்படிக்கையின் உயிர்நாடி, அப்துல்லாதான். அப்துல்லாதான் காஷ்மீரை இந்தியாவோடு இணைத் தார். இணைக்கிறபோது என்ன ஒப்பந்தம்? ஒரு அமைதியான சூழ் நிலையில் இந்த இணைப்பைப்பற்றி ஓட்டெடுக்க வேண்டும் என்பதாகும். காந்தியடிகளே, "அப்துல்லா பிரதமராக இசைந்தது அவருடைய தேச பக்தியைக் காட்டுகிறது, ஒப்புக்கொண்டபடி அமைதியான சூழ்நிலையில் ஓட்டெடுப்பு நடத்த வேண்டும்" என்று சொன்னார். அந்த ஒப்பந்தத்தில் இருக்கின்ற வாக்கெடுப்பு ஷரத்தை அமுல் நடத்தக் கேட்டதுதான் அப்துல்லா செய்த பாவம். "வாக்கெடுப்பு முன்னணி" என்று அவர்



வைத்தது பிரிந்து போக அல்ல; எனவே இவர்கள் ஒப்பந்தத்திலேயிருந்து மீறினார்கள். அவர் "ஒப்பந்தத்தை அமுல் நடத்து" என்றார். இது வெல்லாம் முடிந்தவொன்றாகப் போனதிலே நமக்கு மகிழ்ச்சி. வடகோடி யில் உள்ள காஷ்மீர் சுயாட்சி பெற்ற நிலையில், நாம் நம்முடைய கிளர்ச்சியை, "சுயாட்சிக் கிளர்ச்சி" என்பதைவிட, "காஷ்மீர் பாணி கிளர்ச்சி" என்று பெயர் வைத்து நடத்தினால், அது தவறல்ல.

ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களுடைய கிளர்ச்சியைப்பற்றியோ மத்திய அரசு மீது அவர் சொல்லும் குற்றச்சாட்டைப்பற்றியோ நான் இங்கே ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. அது ஒரு தனிப் பிரச்சினை. அவர் ஒன்று சொன்னார், "இந்தியா சர்வாதிகார நாடாக மாறினால், தமிழ்நாடு பிரிந்து போய் விடும்" என்று. அவர் உத்தரப் பிரதேசம் பிரிந்து போய்விடும் என்று சொல்லவில்லை. அவர் பிறந்த பீகார் பிரிந்து போய்விடும் என்று சொல்லவில்லை. குஜராத்தைச் சொல்ல வில்லை. கம்யூனிஸ்ட் செல்வாக்குள்ள மாநிலங்களைச் சொல்லவில்லை. தமிழ்நாடு பிரிந்து போய்விடும் என்றார். நான் அதற்கு இதுதான் பொருள் என்று நம்புகிறேன்; ஜனநாயகம் இல்லாத ஒரு ஆட்சியில் தமிழ்நாடு இருக்காது. சோஷலிசத்திற்கு எதிரான ஒரு சர்வாதிகார ஆட்சியில் தமிழ்நாடு இருக்காது. ஒரு சமய சார்புடைய ஆட்சியிலே தமிழ்நாடு இருக்காது. சமய சார்பற்ற தத்துவம் தமிழ் நாட்டின் பிறப்புரிமை. ஜனநாயகம் என்பது தமிழ் நாட்டினுடைய பிறப்புரிமை. இதற்கு மாறுபட்ட சர்வாதிகாரத்தின்கீழ் தமிழ்நாடு இருக்காது என்பதை ஜெயப்பிரகாஷ் நாராயண் மிக அருமையாகக் கண்டுபிடித்ததற்கு நான் மகிழ்ச்சி அடைவதோடு, அவரைப் பாராட்டுகிறேன். மற்ற வகையிலே எல்லாம் அவரோடு எனக்கு வேற்றுமை இருந்தாலும், இந்த ஒன்றை அவர்கள் ஏற்றுக்கொண்டதற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

(பிற்பகல் 5-30)

முதலமைச்சர் அவர்களை நான் கடைசியாகக் கேட்டுக்கொள்ளுவது ஒன்று உண்டு. நாம் இங்கே சுயாட்சித் தீர்மானத்தை நிறைவேற்றி விட்டோம். நாம் வெற்றி கண்டு விடுவோம் என்று இருந்தால் போதாது. ஏதாவது செய்தாக வேண்டும். ஒரு அதிர்ச்சி நடவடிக்கையை எடுத்தாக வேண்டும். அன்று நாம் நமது சட்ட மன்றத்தில் தீர்மானத்தை நிறை வேற்றி டில்லிக்கு அனுப்பி வைத்தோம். அதிலே நாம் வற்புறுத்தியது அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும் என்பதைத்தான். அப்போது "இது மாநில சுயாட்சிக்கோரிக்கை அதிகாரங்களைப் பரவலாக்கக் கோருகிறது" என்று சொன்னேன். மீண்டும் அதை உறுதிப்படுத்துகிறேன். ஆனால், அந்தத் தீர்மானத்திற்கு மத்திய அரசு கொடுத்த மதிப்பென்ன? சிக்கிம் சட்ட மன்றம் தீர்மானம் போட்டது, இந்தியாவோடு இணைய வேண்டும் என்று. மத்திய

அரசு அதை ஏற்றுக்கொண்டது. அது ஜனநாயகம் என்கிறார் பிரதமர். தமிழ் நாட்டிலுள்ள சட்ட மன்றம தீர்மானம் போடுகிறது, அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் என்று. அது ஜனநாயகம் அல்லவாம். என்ன இது? இப்படிப்பட்ட ஒரு ஜனநாயகம் டெல்லியில் அமைந்திருக்கிறது என்றால் என்னவென்று சொல்வது?

சுயாட்சித் தீர்மானத்தை மத்திய அரசிற்கு அனுப்பி வைத்து அவர்கள் அதற்கு மதிப்புத் தர தவறிய பிறகு, இரண்டு முறை நமது முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று வந்திருக்கிறார்கள். இரண்டு முறை பிரதமர் அவர்களைச் சந்தித்தார்கள். முதல்வர்கள் மாநாட்டில், இதை எழுப்பியிருக்க வேண்டும். "சட்ட மன்றத்தில் தீர்மானம் போட்டு அனுப்பினோமே என்ன ஆயிற்று? என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்?" என்று கேட்டிருக்க வேண்டும். கேட்டார்களா, இல்லையா என்பது தெரியாது. பிரதமர் அவர்கள் சொல்லியிருக்க வேண்டும், "இதை ஏற்றுக் கொள்ளுகிறோம் அல்லது மறுக்கிறோம்" என்று. அதுதான் ஜனநாயகப் பண்பாடு. "மறுக்கிறோம்" என்று சொல்லியிருக்கட்டும், பரவாயில்லை. அதுவும் ஜனநாயகம்தான். ஆனால் அதையும் சொல்லவில்லை. நாம் ஒரு முடிவிற்கு வர வேண்டும். சட்ட மன்றத்தில் இருந்துகொண்டு, தீர்மானங்களைப் போட்டுக்கொண்டே சுயாட்சி பெற முடியுமா என்றால் முடியாது. முஜிபுர் ரெஹ்மான் வங்க தேசத்திற்கு சுதந்திரம் பெற்றது அதிகாரத்தில் அமர்ந்துகொண்டல்ல. நாம் சுதந்திரம் கூட கேட்கவில்லை, சுயாட்சியைத்தான் கேட்கிறோம். முஜிபுர் ரெஹ்மான் வங்க மாநில சட்ட மன்றத்தில் 200 இடங்களில் 198 இடங்களைப் பிடித்துவிட்டும், சட்ட மன்றத்திற்கு உள்ளே வர மாட்டேன் என்று சொல்லிவிட்டார். 100-க்கு 55 சதவிகித இடங்களை பாகிஸ்தான் தேசிய அசெம்பிளியில் பெற்றுவிட்ட பின்னரும், சுயாட்சித் தீர்மானம் போடும் உரிமை தந்தால் உள்ளே வருகிறேன், இல்லையெனில் வரமாட்டேன் என்று சொல்லிவிட்டார். சுயாட்சி கேட்கும் ஒரு கட்சி, உரிமை கேட்கும் ஒரு கட்சி, அதை மறுக்கும் மேல் ஆதிக்கத்தினரின்கீழ் இருந்தால் அவர்களுடைய அதிகாரத்திற்கு உட்பட்டிருந்தால், காலப் போக்கில் உரிமையைக் கேட்கும் கட்சி வலிவிழந்துவிடும்; அதனுடைய உரிமைக் கிளர்ச்சியும் பலவீனப்பட்டுவிடும். இதை உணர்ந்துதான் ஷேக் அப்துல்லாவும், முஜிபுர் ரெஹ்மானும் அவர்களுடைய மேல் ஆதிக்கத்தின்கீழ் அதிகாரத்திற்கு வர மறுத்தார்கள். முஜிபுர் ரெஹ்மான் பாகிஸ்தான் பிரதமரிடம், "சுயாட்சிக்காக நாங்கள் தீர்மானம் போட்டால், அதை மறுக்க மட்டோம்" என்ற உத்தரவாதத்தைக் கொடுங்கள் என்று கேட்டார். அதை மறுக்க வேண்டாம். இங்கே நீங்கள் செக்ரடேரியட்டுக்கு, வந்ததைத் தப்பு என்று சொல்லவில்லை. இது ஒரு முறை, வந்தோம். தீர்மானம் போட்டு அனுப்பிப் பார்த்தோம். பயனில்லை. சட்ட மன்றத்தில் நிறைவேற்றி அனுப்பிய தீர்மானம்தான் கடைசி முயற்சியாக இருக்க வேண்டும். அதை அவர்கள் மறுத்தால், அதற்குப் பிறகு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த நடவடிக்கை



டெல்லியில் அமர்ந்துள்ள இந்தி சாம்ராஜ்யத்தை எதிர்த்துப் போராடி சிறையில் நாம் சந்திப்பதாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு கே. ராஜாராம்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, 1973–74-ம் வருஷ வரவு-செலவுக் கணக்கையும், 1974–75-ம் வருஷத்திய திருத்தப்பட்ட வரவு-செலவு திட்டத்தையும், 1975–76க்கான வரவு-செலவுத் திட்டத்தையும் பற்றி நமது அவையில் அநேகமாக எல்லா உறுப்பினர்களும் தங்கள் அபிப்பிராயங்களைச் சொல்லிவிட்டார்கள். பல பிரச்சினைகள் இங்கே எழுப்பப்பட்டு அவற்றுக்கெல்லாம் நமது முதலமைச்சர் அவர்களுடைய பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இந்த நேரத்திலே, தமிழ் நாடு எப்போதும் கண்டிராத ஒரு பஞ்சம் ஏற்பட்டு அந்தப் பஞ்சம் எப்போதும் இப்படியே தொடர்ந்து இருக்காது, நமக்கும் நல்ல காலம் வரும் என்று எண்ணும்படியான நிலைமையில் கடந்த ஒரு வாரமாக தஞ்சை, கோவை, இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற பகுதிகளிலே நல்ல மழை பெய்து நமக்குக் கொஞ்சம் நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையில் இங்கே நாம் பஞ்சம், வறட்சி மற்ற பல பிரச்சினைகள் பற்றி இங்கே விவாதம் நடத்திக் கொண்டு வருகிறோம்.

இந்த மாநிலத்திலே மதுவிலக்கை ரத்து செய்து, மீண்டும் அதை அமுலுக்குக் கொண்டு வந்ததுடன், குதிரைப் பந்தயத்தையும் ரத்து செய்ய முடிவு செய்திருப்பதனால் நாம் ஒரு கணிசமான தொகையை நமது வருவாயினத்திலிருந்து இழந்து விடக்கூடிய நிலைமை நடப்பு வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பட்டிருக்கின்றது. இதையெல்லாம் நமது அரசாங்கம் எப்படி சரிகட்டப் போகின்றது என்று எதிர்க் கட்சியிலுள்ள நாங்கள் எதிர்பார்ப்பது முறைதான். இந்த வரவு-செலவினங்களைச் சரிகட்டுவதற்கு பற்றுக்குறையாக ரூ. 20 கோடியை அப்படியே விட்டுவிட்டு மேலும் பற்றுக்குறையாக இருந்த ரூ. 6 கோடிக்கு வரிகள் விதிப்பதின் மூலம் அதைச் சரிகட்டியிருக்கின்றார்கள். இந்த இருபது கோடியை அப்படியே பற்றுக்குறையாக விட்டுவிடுவது என்பது நம் மாநிலத்தின் நிதித்துறையின் திறமையை எடுத்துக்காட்டுகிறது என்று நான் சொன்னால் அது குறைவாகாது என்றே நினைக்கிறேன். ஏன் என்றால் நாம் 1973–74லிலிருந்து நமது மாநிலத்தின் வரவு-செலவுத் திட்டத்தை எடுத்துப் பார்த்தால், இந்த இருபது கோடி ரூபாய் பற்றுக்குறையாக இருப்பது வருஷக் கடைசியில் அநேகமாக துடைக்கப்பட்டுவிடும் என்பதில் சந்தேகமில்லை.

நமது முதலமைச்சரும் தைரியமாகத்தான் இந்த இருபது கோடி ரூபாய் பற்றுக்குறையை அப்படியே விட்டுவிட்டார். பட்ஜெட் மெமோராண்டம் என்று நமக்குக் கொடுத்திருப்பதில் பார்த்தால், முதல் பக்கத்திலே சொல்லப்பட்டிருக்கும் விளக்கத்தைப் பார்த்தால், இது நன்றாக விளங்கும். இரண்டாவது பத்தியில் 1973–74 வரவு-செலவுத் திட்டம்

தான் முடிவான கணக்கு. 1973–74 ஆம் வருஷத்திற்கான வரவு-செலவுத் திட்டத்தின் முடிவான கணக்கு என்ன என்று நமக்கு இந்தத் திட்டத்தில் சமர்ப்பித்திருக்கிறார்கள். 1974–75 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் வரும் மார்ச் 31-ம் தேதியோடு முடிவடைய வேண்டியது, அதற்குத் திருத்தப்பட்ட திட்டம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்த முடிவான கணக்கை 1973–74ஐப் பொறுத்தவரையில் பார்க்கும் போது, ரூ. 484 லட்சம் வருவாய் பற்றாக்குறை இருக்கும் என்று எதிர் பார்க்கப்பட்டது. ஆனால் முடிந்த கணக்குப்படி அந்த ஆண்டில் ரூ. 1,367 லட்சம் அதாவது 13·67 கோடி உபரியாக இப்போது தெரியவருகிறது. முதலில் 4·84 கோடி ரூபாய் நமக்குக் பற்றாக்குறையாக இருக்கும் என்று இந்த அவையிலும் பேரவையிலும் வைத்து நிறைவேற்றிய அந்தத் திட்டத்தின் இறுதிக் கணக்கை மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு பார்க்கும்போது ரூ. 8·84 கோடி குறைவுக்குப் பதிலாக ரூ. 13.67 கோடி மிச்சமாக இருக்கிறது. இதே மாதிரித்தான் பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் இருந்து வருகிறது என்றால், இது தமிழ் நாட்டின் நிதி இலாகாவின் திறமையைக் காட்டுகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இன்றைக்கு இல்லை, இருபது இருபத்தைந்து ஆண்டுகளாக நமக்குத் தெரியும், நமது நிதி இலாகா, அந்தத் துறையில் பெரிய "ஜயண்ட்ஸ்" என்று சொல்லத்தக்கவர்களால் நிர்வகிக்கப்பட்டுவரும் இலாகா. இதற்காக அவர்களைப் பாராட்ட வேண்டும். நிதித் துறையைப் பாராட்டும்போது முதலமைச்சர் அவர்களை என் பாராட்டவில்லை என்று சொல்லக்கூடாது. ஏனென்றால் இலாகாவுக்குத் தலைவரே அவர்தான்.

(பிற்பகல் 5-40)

மதுவிலக்கு மூலமும், மற்ற துறைகளிலும் பெருத்த தொகைகளை நாம் இழந்திருக்கிறோம். வருவாய் வரக்கூடிய 50 கோடி ரூபாயை நாம் இழந்திருக்கிறோம். இதைச் சரிக்கட்டுவதற்கு எத்தனையோ இனங்களில் முக்கிய செலவுகள் குறைக்கப்பட்டுள்ளன. ஆனால் கிராம அபிவிருத்தித் திட்டங்களும், சமுதாய அபிவிருத்தித் திட்டங்களும், கிராமங்களுக்குச் செய்ய வேண்டிய நல்ல காரியங்களும் இம்மாதிரி பாதிக்கப்பட்டிருக்க வேண்டிய அவசியமில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. கிராம அபிவிருத்தித் திட்டம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டில் 1 கோடி 80 லட்சம் ரூபாய் கம்யூனிட்டி டெவலப்மெண்டுக்காகக் கொடுத்ததை இப்போது 98 லட்சமாகக் குறைத்திருக்கிறார்கள். சென்ற ஆண்டில் 75 லட்சம் ரூபாய் செலவழித்து 'Project programmes of Rural Development and Employment' என்று 35 லட்சம் ரூபாயாக ஆக்கப்பட்டிருக்கிறது. இன்னும் கிராம சம்பந்தமான திட்டங்கள் பூராவுக்கும் சென்ற ஆண்டில் எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருந்ததோ அது பூராவும் பாதியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. எந்த கிராமத் திட்டங்களை எடுத்தாலும், கிராமங்களுக்காக என்றிருக்கின்றவை பூராவும் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி பாதித்துதான் இந்த நிதி பற்றாக்குறையைச் சமாளித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பட்ஜெட் மெமோராண்டத்தில் கூட விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சமுதாய வளர்ச்சி





யும், ஊராட்சிகளும் என்பதில் 1974–75-ல் ஒதுக்கிய தொகை 1 கோடி 80 லட்சம் ரூபாய். ஆனால் நடப்பாண்டில் ஒதுக்கியிருப்பது 98 லட்சம் ரூபாய். கிராம வளர்ச்சி வேலை சம்பந்தமான பணித் திட்டங்களுக்கு சென்ற வருஷம் ஒதுக்கியதற்கு மேலே செலவழித்திருக்கிறார்கள் ; ரூ. 50 லட்சம் . அதற்கு ஒதுக்கி ரூ. 75 லட்சம் செலவழிக்கப்பட்டது. ஆனால் பாண்டில் ரூ. 35 லட்சமாக அது குறைக்கப்பட்டிருக்கிறது. நமது அரசுதான் இப்படிச் செய்திருக்கிறது என்றால், கிராம அபிவிருத்திக்காக மத்திய அரசு கொடுக்கும் பணம் கூட சென்ற ஆண்டிலே கொடுத்ததைப் பாதியாகக் குறைத்திருக்கிறார்கள். பின்தங்கிய வகுப்பினர்களுக்கு சென்ற ஆண்டிலே 78 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு ரூ. 50 லட்சம்தான் மத்திய அரசு கொடுத்திருக்கிறது. சிறு பாசனம் என்பது பஞ்சாயத்து யூனியன் மூலம் கிராம மக்களுடைய அபிவிருத்திக்கு செய்யக்கூடிய "மைனர் இரிகேஷன்", அதற்கும் சென்ற ஆண்டு ஒதுக்கியது 152 லட்சம் ரூபாய். ஆனால் இந்த ஆண்டு 25 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மதுவிலக்கை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவந்ததன் மூலம் அதிகமாக பாதிக்கப்பட்டிருப்பது கிராமங்கள்தான். கிராமத்தில் நடக்க வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் பூராவும் அரை பாதியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி பூராவும் குறைந்துவிட்டது என்று சொன்னால், மிகையாகாது. அதே நேரத்தில் சென்னை போன்ற நகரங்களுக்கு சென்ற ஆண்டில் ஆன செலவைக் காட்டிலும் இப்பொழுது இரண்டு மடங்கு ஆகியிருக்கிறது. நமது மாநிலத் தலைநகரில் அதிகமாகச் செலவழிப்பதைப் பற்றி நான் பொறாமைப்படவில்லை, அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் அதே நேரத்தில் கிராமங்கள் எவ்வளவு பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது நிவாரண வேலைகள் நடக்கின்றன. நண்பர் திரு. ராமகிருஷ்ணத் தேவர் அவர்கள் சொன்னதிலிருந்து மிக நல்ல நிலைமையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் நிவாரண வேலைகள் நடந்து வருகின்றன. ஒவ்வொரு ஊரிலும் நடந்து வருகின்றன, அந்த வேலைகளை அவரே நேராக இருந்து பார்த்து வந்து சொன்னதிலிருந்து நானும் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் நான் அன்றைக்கே, கவர்னர் உரை மீது பேசும் போதே இந்த வறட்சி நிவாரணப் பணிகளுக்குக் கூலி கொடுப்பதில் தான் பெரிய தவறுதல்கள் ஏற்படுகின்றன என்று சொன்னேன். 5 ரூபாய், 6 ரூபாய் சம்பளம் என்று கொடுக்கிறார்கள். இந்தக் கூலியை கண்டிராக்டர்கள் மூலமாகக் கொடுப்பதனால், 2 ரூபாய், 3 ரூபாய்க்கு மேல் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. இம்மாதிரித் தகராறு வருகிறது. ஆகையால் அவர்களுக்கு தானியமாகப் போட்டுவிடுங்கள் என்று யோசனை சொன்னேன். இதே யோசனையை நமது உணவமைச்சர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் சுற்றுப்பிரயாணம் செய்யும் போது, அதைப் பாராட்டிப் பேசி, நிவாரணப் பணியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு தானியத்தைக் கூலியாகப் போடுவது பற்றி அரசு யோசிக்கும் என்று சொன்னது கொஞ்சம் ஆறுதலளிக்கிறது. அதைத் தாமதமில்லாமல் சீக்கிரம் கொடுத்து விடுங்கள். அதில் முக்கால் வாசி தானியமாகக் கொடுத்து

விடுங்கள், கால் வாசி ரொக்கமாக அப்படியே கொடுத்துவிட்டால் உப்பு, புளி, மிளகாய் வாங்க அவர்களுக்கு மிக வசதியாக இருக்கும். ஆக, நிவாரணப் பணியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு முக்கால் வாசி தானியமும், கால் வாசி ரொக்கமும் கொடுத்தால் நலம் என தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த லெவி. எக்கருக்கு என்ன கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஒவ்வொரு எக்கருக்கும் இவ்வளவு கொடுக்க வேண்டுமென்று விதித்திருக்கிறார்கள். ஆனால் அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் பார்த்துக் கொள்ள வேண்டும், நிலமென்றால் எல்லாம் ஒரே மாதிரி நிலமல்ல. ஒரு எக்கரில் 20 மூட்டைகள் விளைகிற நிலமும் இருக்கிறது. 30 மூட்டை விளைகிற நிலமும் இருக்கிறது. 10 மூட்டை, 5 மூட்டை விளைகிற நிலமும் இருக்கிறது. ஆகவே, எல்லா கிராமங்களிலும் உள்ள நிலங்களுக்கும் லெவி ஒரே மாதிரியாகப் போட்டுவிடக் கூடாது. ஒவ்வொரு கிராமத்திலும், அந்த கிராமத்தில் உள்ள முக்கியஸ்தர்களை நியமித்து அந்த கிராமத்திலே எத்தனை எக்கர் இருக்கிறது என்று பார்த்து, எத்தனை மூட்டைகள் கொடுத்துவிட வேண்டும் என்று சொன்னால், அவர்கள் பார்த்து, பகிர்ந்து யாருக்கு அதிகமாக விளைகிறதோ அவர்களிடமிருந்து அதிகமாகவும், யாருக்குக் குறைவாக விளைகிறதோ அவர்களிடமிருந்து குறைவாகவும் வாங்கி, அவர்களுடைய கோட்டாவைக் கொடுத்து விடுவார்கள். அந்த வகையில் தமிழ் நாட்டிலுள்ள கிராமங்கள்— அநேகமாக நான் போகாத கிராமங்கள் இல்லை என்று சொல்ல முடியும் கடந்த 25 ஆண்டுக் காலமாக—எல்லா கிராமங்களும் இந்த வகையில் மிகவும் ஒற்றுமையாக இருக்கும். தாசில்தார் அவர்களோ, சிவில் சப்ளைஸ் ஆபீசரோ சென்று கிராம மக்களைக் கூட்டி வைத்து உங்கள் கிராமத்திற்கு இத்தனை எக்கர் நஞ்சை இருக்கிறது, இத்தனை மூட்டைகள் கொடுத்துவிட வேண்டும் என்று சொல்லிவிட்டால், அவர்களே வசூல் செய்து கொடுத்து விடுவார்கள். அப்படியில்லாமல் ஒருவனுக்கு விளைந்திருப்பது 5 மூட்டை. அவன் எக்கரேஜ்படிக்கு 8 மூட்டை கொடுக்க வேண்டும் என்று சொன்னால் எங்கிருந்து கொடுக்க முடியும்? இந்த மாதிரி கஷ்டங்கள் தான் ஒவ்வொரு ஊரிலும் இருப்பதாக இப்போது புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. கொஞ்சம் லோக்கலாக உள்ள உத்தியோகஸ்தர்கள் இதைச் சரியானபடி தாராள சிந்தையுடன் அரசுக்கும் கிடைக்க வேண்டிய கோட்டா குறையாமல் கிடைக்கச் செய்ய வேண்டும். அதே நேரத்தில் மக்களுக்கும் கஷ்டமில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அரசாங்கம் சென்னையில் இருந்து கொண்டு என்ன செய்ய முடியும்?

மதுரையில் மஹாத்மா காந்தி அவர்கள் தங்கியிருந்த வீட்டை— சரித்திர சம்பந்தப்பட்ட விஷயம், அந்த வீட்டிலிருந்து தான் "நான் இனிமேல் முழு ஆடை உடுத்துவதில்லை, முழங்கால் வரை தான் உடுத்துவேன்" என்று அவர்கள் முடிவு செய்தது—அந்த வீட்டை விலைக்கு வாங்குவதற்காக அரசாங்கம் முயற்சி செய்வதற்கும், இப்போது மதுவிலக்கை மீண்டும் அமுலுக்குக் கொண்டு வந்ததற்கும் நான் என்னுடைய மனப்பூர்வமான பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நல்ல காரியம் இதுதான். நல்ல காரியம்



செய்யும்போது, யார் செய்தாலும் பாராட்ட நாம் கடமைப்பட்டிருக்கிறோம். மதுரையில் அந்த வீட்டை—விலை அதிகமாக இருந்தாலும் கூட பரவாயில்லை—விலைக்கு வாங்கி நல்ல காரியம் செய்ய முதலமைச்சர் அவர்கள் மனம் வைத்தார்கள். இது ஒரு பெரிய காரியம். அதை வாங்கி சும்மா வைக்காமல் காந்தியடிகளுக்கு மிகவும் பிரியமான கதர் டிப்போவாகவே வைத்து அதைச் செயல் படுத்தப்போகிறேன் என்று முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இது மிகப் பெரிய காரியம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அதே மாதிரி, குதிரைப் பந்தயத்தை இப்படியே தள்ளிப் போட்டுக் கொண்டே போவார்கள் என்று நினைத்து முதலில் தெரிந்து பேசுவோம் என்று அவரைக் கேட்டேன். நான் இங்கே அதைப் பற்றிப் பேசும்போது அதைப் பற்றி முழுவதும் தெரிந்து கொண்டு பேசலாம் என்று தான் அவரிடம் பேசினேன். ஆனால் அவர், இந்த குதிரைப் பந்தயத்தை இன்னும் நீட்டிக்கொண்டு போவேன் என்று சந்தேகப்பட வேண்டாம் என்று தெரிவித்தார்கள். அதற்கு அடுத்த நாள் மிக உறுதியாக பேரவையில், "நான் கண்டிப்பாக குதிரைப் பந்தயத்தை மார்ச் மாதம் 31 ஆம் தேதிக்கு மேல் இருக்க விடமாட்டேன், ஒழித்துவிடுவேன்" என்று சொன்னது இந்த நாட்டு மக்கள் வயிற்றில் பால் வார்த்தது போல் இருக்கிறது. இது ஒரு பெரிய காரியம். எத்தனையோ ஆண்டுகளாக, நல்லவர்கள் எல்லோரும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால் அதை உங்கள் கரத்தினால் எடுக்கும்படியான ஒரு நிலை, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பெரும் புகழைக் கொடுக்கும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 5-50)

இங்கே துணைத் தலைவர் அவர்களே முந்திக் கொள்வார்கள் என்று நினைத்தேன். அவர்கள் விட்டு விட்டார்கள். எனக்குத் தெரிந்தவரையில் காங்கிரஸ் கட்சி 30 ஆண்டுகாலமாக ஒவ்வொரு வருடமும் குதிரைப் பந்தயத்தை ரத்து பண்ண வேண்டுமென்று சொல்லிக் கொண்டு, மகாநாடுகளிலும், சட்டசபையிலும் பேசுவது என்றுதான் இருந்து கொண்டிருந்தது. வருகிற எப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து இது நிச்சயமாக அமுலுக்கு வருகின்றது என்று முதலமைச்சர் அவர்கள் என்னிடம் சொன்னது எனக்குப் பெரு மகிழ்வைத் கொடுத்தது. அதற்காக என்னுடைய தனிப்பட்ட பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். பட்ஜெட்டில் துண்டு விழுவதைப் பற்றிச் சொன்னார்கள். நம்முடைய நிதி இலாகா இதைச் சமாளித்துவிடும் என்று முதலமைச்சர் அவர்கள் ஒரு நம்பிக்கையான வார்த்தையைச் சொல்லியிருக்கின்றார்கள். நமக்கு உரிமை இருக்கிறது. நாம் உரிமையோடு கேட்க வேண்டும். நானும் உரிமை என்ற வார்த்தையைச் சொல்கிறேன். ஆறு கோடி ரூபாய் துண்டு விழுந்திருக்கிறது. மத்திய அரசு ரூ. 20 கோடி அல்லது ரூ. 25 கோடி என்ற அளவிலாவது வறட்சி நிவாரணத்திற்குக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால்தான் நல்லது. துயர் துடைப்பதற்கு என்று ரூ. 55

கோடி அல்லது ரூ. 60 கோடி என்று செலவழிப்பதில் பாதியாவது அவர்கள் ஏற்றுக் கொள்வது நியாயமாகும். ஆகையினால் குறைந்தது ரூ. 25 கோடி வந்தாலும், இப்போது விழுகின்ற பற்றுக்குறைக்குச் சரியாகப் போய்விடும். நாம் யாரும் துண்டு விழுகிற பட்ஜெட்டை நமது முதலமைச்சர் அவர்கள், நிதி அமைச்சர் அவர்கள் சரிக்கட்டாமல் விட்டுவிட்டார் என்று சொல்ல வேண்டியதில்லை. கணக்கு முடிக்கும் போது, துண்டு விழாமல் கொடுக்கப்படும் என்ற தைரியம் எனக்கு இருக்கிறது. இத்தனை கஷ்டங்களுக்கு இடையிலேயும் எத்தனையோ காரியங்கள் செய்ய வேண்டும். மத்திய அரசு ஏற்றுக் கொள்ளாமல் இருக்கின்றது என்று இந்த அவையில் சொல்லியிருக்கின்றார்கள். இதனை மத்திய அரசு ஏற்று விரைவில் உதவ முன் வரும் என்று நம்புகிறேன் என்று அவரைப்போல் நானும் நம்புகிறேன். மத்திய அரசு அவசியம் இதை ஒத்துக்கொள்ளும் என்று நான் நினைக்கின்றேன்.

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை.)

தூத்துக்குடி தமிழ் நாட்டில் முக்கியமான ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கின்றது. நடப்பு ஆண்டிற்கு சமர்ப்பித்திருக்கும் வரவு செலவுத் திட்டத்தைப் பார்ப்போமானால், இன்னும் ஐந்தாறு ஆண்டுக் காலத்திற்குள் தூத்துக்குடி ஒரு பெரிய இண்டஸ்ட்ரியல் செண்டராக ஆகிவிடும் என்று தெரிகிறது. அதோடு சேது சமுத்திரத் திட்டத்தையும் பார்க்க வேண்டும். என்னவோ தெரியவில்லை, இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒரு வார்த்தைகூட அதைப்பற்றிச் சொல்லவில்லை. வேண்டுமென்றே விட்டிருக்கலாம் என்று எண்ணுகிறேன். அதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும் என்றே விட்டிருக்கின்றார்கள். சேது சமுத்திரத்தைப் பற்றி இப்போது ஒன்றுமே சொல்லவில்லை. சேது சமுத்திரத்திட்டம் நிறைவேறினால்தான் தூத்துக்குடியில் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழிப்பதற்கு தக்க பிரயோஜனம் உண்டு. இல்லையென்றால் அதனாலே நஷ்டம்தான் ஏற்படும். தூத்துக்குடித் துறைமுகத்திற்கு கோடிக்கோடியாகக் கொட்டியும் பெரிய துறைமுகமாக அதை நாம் உபயோகப்படுத்த முடியாது. இன்றைக்கு சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தைக் கைவிடக் கூடாது. அப்படி இல்லாமல் கை விட்டுவிட்டோம் என்றால், கப்பல்கள் எல்லாம் கொழும்புக்குச் சென்று தூத்துக்குடியைத் தொடாமலே போய்விடும்; வேறு வழியும் இல்லை. ஆனால் சேது சமுத்திரம் கால்வாயை வெட்டி விட்டால், இலங்கையைச் சுற்றிச் செல்ல வேண்டிய அவசியமில்லை. அந்த வாய்க்காலால் தூத்துக்குடித் துறைமுகத்திற்குப் பலன் ஏற்படும்; வட்டியாவது கட்டும். இல்லையென்றால் பயனில்லை.

சேது சமுத்திரத்திட்டம் இல்லையென்றால் அதை மத்திய அரசுக்கு நாம் எடுத்துக் காட்டவேண்டும். சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சி. எம். சி. ஆஸ்பத்திரி விவகாரம் தமிழ் நாட்டிலே எல்லோருடைய மனதையும் பாதித்துக் கொண்டிருக்கக் கூடிய ஒரு விவகாரம். ஒரு வாரமாக இருந்து கொண்டிருக்கிறது.





முதலமைச்சர் அவர்களிடம் பேசிக் கொண்டிருந்தேன். இன்று நண்பர் திரு. பலராமன் அவர்கள் அங்கிருந்து வந்திருக்கின்றார்கள். நல்ல ஒரு சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது என்று தெரிகிறது. அங்கு எந்தக் கட்சி சார்பும் இல்லாத ஒரு கமிட்டி நியமித்திருக்கின்றார்கள். முதலமைச்சரைச் சந்திக்க வருகிறார்கள். நானும் திரு. பலராமனும் முதலமைச்சர் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தோம். அவர் பேசியதிலிருந்து எப்படியாவது இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று எண்ணுகின்றார்கள் என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனெனில், அவர் சொன்ன வழி நல்ல வழியாகத் தெரிகிறது. அரசு தலையிட்ட பிறகு, அந்த மேனேஜ்மெண்டாரும், முதலமைச்சர் அவர்களிடம் வந்து பேசி "செட்டில்" பண்ணிக் கொண்டு விடுவதுதான் நியாயம். பிடிவாதமாக இருக்கக் கூடாது என்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். திரு. பலராமன் அவர்கள் வேலூரைச் சேர்ந்தவர்கள்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்</u> : நானும் வேலூர் தான்.

<u>திரு. கே. ராஜாராம்</u> : அவைத் தலைவரும் வேலூரைச் சேர்ந்தவர் தான். தமிழ் நாட்டில் கவலையோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற ஒரு விஷயம். இதை சீக்கிரம் முடித்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். இந்த மேனேஜ்மெண்டாரும் அதிகத் தாமதமில்லாமல் சீக்கிரம் முதலமைச்சர் அவர்களைக் கலந்து பேசி இதை "செட்டில்" செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காலம் தாழ்த்துவதால் விரும்பத்தகாத காரியங்கள் ஏற்படுகின்றன. ஒரு நாள், ஒரு நாள் என்று காலதாமதமாகிக் கொண்டே போகிறது. அதற்கு இடம் கொடுக்காமல் "செட்டில்" செய்ய வேண்டுமென்று நான் வேண்டுகோள் விடுக்கிறேன். முதலமைச்சர் அவர்களிடம் நான் அப்பீல் பண்ண வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் நிர்வாகத்தோடு பேசி இதைச் செய்ய அவர்கள் தயாராக இருக்கிறார்கள். அவர்களும் இந்த ஆட்சியின் தலைவர் என்ற முறையில் முதலமைச்சர் அவர்களிடம் வந்து பேசி முடித்துக் கொள்வதில் கவுரவக் குறைவு ஒன்றும் ஏற்பட்டுவிடாது. பேசி முடித்துக் கொண்டால், அவர்களுக்கும் கவுரவமாகப் போய்விடும். தமிழ் நாட்டு ஆட்சித் தலைவரிடம் வந்து பேசி இதை முடித்துக் கொள்ள வேண்டும் என்று அவர்களுக்கும் வேண்டுகோள் விடுகிறேன்.

அடுத்தபடியாக, மாநில சுயாட்சி பற்றி இப்போது ஒரு வார காலமாக அதிகமாகப் பேச்சுக்கள் அடிபடுகின்றன. ஏற்கெனவே இரண்டு சபைகளிலும் தீர்மானத்தை நிறைவேற்றி அனுப்பி வைத்திருக்கப்பட்டிருக்கும் ஒரு விஷயம். அப்போதே நான் சொன்னேன். மாநில சுயாட்சி என்றால் அதிக அதிகாரம் வேண்டும் என்று கேட்கும் பட்சத்தில், எங்கள் கட்சியைப் பொறுத்த வரையில், எந்த விதமான ஆட்சேபனையும் கிடையாது. இந்த வார்த்தைதான் ஒரு மாதிரியாக இருக்கிறது. புரொவின்சியல் இண்டிபெண்டன்ஸ், மாநிலத்திற்குத் தனி ஆட்சி, சுயாட்சி, இந்தியா சம்பந்தம் இல்லாத ஒரு ஆட்சி என்றும் அதற்கு அர்த்தம் கொள்ளலாம். அப்படி இருப்பதனாலே இதைப் பல பேர் ஆட்சேபிக்

இருர்களே தவிர, வேறு ஒன்றுமில்லை. அதிக அதிகாரங்கள் வேண்டும் என்பதிலே யாருக்கும் ஆட்சேபணை இல்லை. ஆகையால் என்னென்ன அதிகாரங்கள் நமக்கு வேண்டும் என்பதை வகுத்து அதிலே எழுதி அனுப்பவேண்டும் என்று சொன்ன பிறகுதான், இந்த அவையில் விவாதமே வைத்தோம். பலவிதமான விஷயங்களைப் பற்றிப் பேசினோம். மீண்டும் அதைப்பற்றிப் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டுமே தவிர இதற்குப் போராட்டம் எதுவும் தேவையில்லை.

இந்த அவையின் துணைத் தலைவர் அவர்கள் என்னுடன் சிறையில் இருந்தவர்கள். இரண்டு பேரும் நாடு கடத்தப்படுபவர்கள்போல தமிழ் நாட்டிலிருந்து ஆயிரம் மைல்களுக்கு அப்பால் கொண்டு போகப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருந்தோம். அப்படி எல்லாம் நாங்கள் கஷ்டப் பட்டு இந்த நாட்டிற்குச் சுதந்திரம் பெற்றோம். அசோகன் காலத்திலே கூட இந்தியா ஒரு தேசமாக இருந்ததில்லை. கடைசியில் மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல் இவர்களெல்லாம் செய்த முயற்சியின் மூலம் இந்த நாடு ஒரு சுதந்திர நாடாக நமக்குக் கிடைத்தது. இதைத் துண்டாடி சிறுசிறு நாடுகளாகப் பிரிந்து செல்லக் கூடிய எந்தவிதமான யோசனையையும் நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. அதற்காக நாம் சிறைக்குச் செல்லவில்லை. இதைப்பற்றி நான் பேசியபோது முதலமைச்சர் அவர்கள் தெளிவாக அன்று சொன்னார்கள். அது இன்றும் காதில் தெளிவாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. நாம் கேட்பது அதிக அதிகாரமே தவிர, இந்தியாவிலிருந்து பிரிந்து செல்வதாகச் சொல்லவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். ஆகையால் நாங்கள் அந்தத் தீர்மானத்திற்கு அன்று எதிர்த்து ஓட்டுப் போடாமல் இருந்தோம்.

(பிற்பகல் 6–00)

இப்பொழுதும் அதைத்தான் சொல்கிறேன். அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று நீங்கள் மத்திய அரசைப் பார்த்து கேட்பதிலோ போராடு வதிலோ எங்களுக்கு ஆட்சேபனையில்லை. மத்திய அரசை பலவீனப்படுத்தி மீண்டும் சிறுசிறு துண்டாக்கி இந்தியா பல்வேறு பாகங்களாகச் சிதறுண்டு போகக்கூடிய நிலைமைக்கு நீங்கள் செல்வீர்களானால், அதைக் கேட்டுக் கொள்ளுவதற்கு நாங்கள் தயாராக இல்லை. துணைத் தலைவர் அவர்கள் இந்த மாநில சுயாட்சியை இவ்வளவு தூரம் ஆதரித்துப் பேசினாலும் கூட இந்த நாடு சிதறுண்டு போவதற்கு அவர்களும் தயாராக இல்லை என்று நான் சொல்லுவதை ஒப்புக் கொள்ளுவார்கள். இந்திய நாட்டினுடைய ஐக்கியம், ஒற்றுமை கெட்டுப் போகாமல் நமக்கு எவ்வளவு அதிகாரங்கள் மத்திய அரசிடமிருந்து பெற முடியுமோ அவ்வளவு அதிகாரங்களைப் பெறுமளவுக்கு நடத்தும் முயற்சிக்கு உங்களோடு ஒத்துழைக்க நாங்கள் தயாராக இருப்போம். ஆனால் அதே நேரத்தில் நாடு மட்டும் துண்டு ஆகக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொண்டு தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, முடித்துக் கொள்கின்றேன்.





<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இந்த ஆண்டு அவை முன் வைக்கப்பட்ட நிதி நிலை அறிக்கையின் மீது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்ற கட்சிகளினுடைய தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் நல்ல பல கருத்துக்களை எடுத்துக் கூறியமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதி நிலை அறிக்கை குறித்து என்னுடைய நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் பேசுகிறபொழுது, மாநில அரசினுடைய நிதி நிலை அறிக்கை எந்த வகையிலே அமைந்திருக்கிறது என்பதைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, ஒன்றைத் தெளிவாகச் சொன்னார்கள். மத்திய அரசினுடைய நிதி உறவுகளைப்பற்றித் தொடாமல் மாநிலத்திலுள்ள நிதி உறவுகளைப்பற்றி, தன்னுடைய நிதிக்கொள்கை பற்றிய கருத்தைச் சொல்ல இயலாது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கான காரணத்தையும் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். மத்திய அரசினுடைய நிதியும் மாநில அரசினுடைய நிதியும் கிட்டத்தட்ட பிணைப்புடையவை என்பதை நான் வலியுறுத்துகின்றேன் என்றும் அவர்கள் கோடிட்டுக் காட்டினார்கள். இங்கு வைக்கப்பட்டுள்ள நம்முடைய 1975–76ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தில் வருவாய்க் கணக்கை நாம் எடுத்துக் கொண்டால் 537·5 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், மூலதனக் கணக்கு என்று எடுத்துக்கொண்டால் 41·8 கோடி நிகர செலவாகவும், கடன் கணக்கு என்று எடுத்துக் கொண்டால் 42·3 கோடி என்றும் வகை செய்யப்பட்டு, மொத்தம் 621·6 கோடி ரூபாய் என்ற அளவில் இருக்கிறது. பல்வேறு நிறுவனங்களுடைய வாயிலாகச் செலவிட செய்யப்பட்டுள்ள வழிவகைகளில் 80 கோடி ரூபாய். ஆக மொத்தம் 701·6 கோடி ரூபாய் செலவுக்கு இந்த வரவு–செலவுத் திட்டத்தின் வாயிலாக வகை செய்யப்படுகிறது. அதாவது 702 கோடி ரூபாய் என்று நாம் வைத்துக் கொள்ளலாம். இந்த 702 கோடி ரூபாயில் திட்டச் செலவு 170 கோடி ரூபாய் என்று நிதி நிலை அறிக்கையில நான் குறிப்பிட்டிருக்கின்றேன். திட்டத்தில் சேராத செலவு என்பதில் வளர்ச்சித் திட்டங்கள் எல்லாம் இணையும் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. காவல் துறை, நிதி நிர்வாகம், மாவட்ட நிர்வாகம், நம்முடைய சட்டப்பேரவை, மேலவை நடவடிக்கைகள், இவைகள் எல்லாம் வளர்ச்சிப் பணிகளிலே சேராதவை. இவைகளுக்காக ஆகின்ற மொத்தச் செலவு 185 கோடி ரூபாய். இதை ஒரு சதவிதமாக வைத்துப் பார்த்தால் திட்டச் செலவுக்காக 24 சதவிகிதமும் திட்டத்தில் சேராத வளர்ச்சிப் பணிச்செலவுகளுக்காக 49 சதவிகிதமும், மொத்தம் 73 சதவிகிதமும், வளர்ச்சிப் பணிகள் அல்லாத செலவுகளுக்காக 27 சதவிகிதமும் நம்முடைய வரவு செலவுத் திட்டத்திலே அடங்குகின்றன என்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன். இந்த 702 கோடி ரூபாயில் மத்திய அரசு ஏற்கின்ற பொறுப்பு என்ன என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். மத்திய அரசிடமிருந்து நிதி ஆணைக் குழுவினுடைய பரிந்துரைகளையொட்டி நமக்கு வருகின்ற வரவு இனம் என்று பார்த்தால். வருமான வரி, எக்ஸைஸ் டியூட்டி என்று எல்லாம் சொல்லப்படுகின்ற இந்த வரிகளின் வாயிலாக மாநிலங்களுடைய பங்காக 97 கோடி ரூபாய் கிடைக்கிறது. மத்திய அரசு வரிவிதித்து அதன் காரணமாக எல்லா மாநிலங்களிலும் வரி திரட்டப்பட்டு அந்தப் பங்காக நம்முடைய மாநிலத்துக்குக் கிடைக்கிற தொகை 99 கோடி ரூபாயாகும். மாநிலத் திட்டப் பணிகளில் மத்திய அரசு ஊக்குவிக்கின்ற திட்டங்கள் என்கின்ற

அளவில் மத்திய அரசு தருகின்ற மானியத் தொகையாக 22 கோடி ரூபாய் தான் நம்முடைய மாநிலத்திற்குக் கிடைக்கிறது. கடன்களிலே எவ்வளவு கிடைக்கிறது என்று பார்த்தால், அது தான் வேடிக்கை. உதாரணமாக இந்த ஆண்டு நிகரமாக கடன் மூலமாக நமக்குக் கிடைப்பது ஒரு கோடி ரூபாய். பார்த்தால் 25 கோடி ரூபாய், 30 கோடி ரூபாய் மத்திய அரசு கடனாகத் தருகிறது என்ற கணக்கு வரும். அந்தக் கணக்கிலேயே சென்ற ஆண்டிலே நாம் தர வேண்டிய கடனை கழித்துக்கொண்டு மிச்சமுள்ள நிகரக் கடன் என்று வரவு வைக்கப்படும். உதாரணத்திற்கு 45 கோடி ரூபாய் இந்த ஆண்டு கடனாகத் தருகிறது என்று நாம் வைத்துக்கொண்டால், நாம் மகிழ்ச்சியடைகிற அதே நேரத்திலே அதிலே சென்ற ஆண்டு கடனிலேயிருந்து 44 கோடி ரூபாயைக் கழித்துக் கொண்டு நிகரக் கடன் 1 கோடி ரூபாய் என்று தருகிறது. ஆக நான் குறிப்பிட்ட, மாநிலத்துக்குரிய வரிகளிலே வர வேண்டிய பங்கு 99 கோடி ரூபாய். மாநிலத் திட்டப் பணிகளில் மத்திய அரசு ஊக்குவிக்கும் திட்டங்கள் என்கின்ற வகையிலே 22 கோடி, நிகரமாக வருகின்ற கடன் ஒரு கோடி, ஆக 122 கோடி ரூபாய் மத்தியிலிருந்து நமக்குக் கிடைக்கிறது. அப்படிக் கிடைப்பதிலும் நம்முடைய வரி அங்கே சென்று திரும்பிக் கிடைப்பது 99 கோடி ரூபாய். ஆகவே 22 அல்லது 23 கோடி ரூபாய் தான் நமக்கு மத்திய அரசிடத்திலிருந்து கிடைக்கிறது என்கின்ற கணக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். இது நான் குறிப்பிட்ட மொத்தச் செலவான 702 கோடி ரூபாயில் 17 சதவிகிதமாகத் தான் அமைகிறது என்பதை எண்ணிப் பார்த்தால், நம்முடைய நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள், அவர்களுடைய உரையின் தொடக்கத்திலே குறிப்பிட்டதைப்போல், மத்திய அரசினுடைய நிதி உறவுகளோடு மாநில அரசினுடைய நிதி உறவுகள் எந்த அளவுக்கு பின்னிப் பிணைந்து கிடக்கின்றன என்பது தெரியும். அது மாத்திரமல்ல, பின்னிப் பிணைந்து கிடக்கின்றன என்று சொன்னால் கூட, அதை மகிழ்ச்சிகரமாக ஏற்றுக்கொள்ளலாம். சிக்கிச் சீரழிந்து தவிக்கின்றன என்று வேறு வாசகத்தை அதற்கு அமைப்பதுதான் பொருத்தமுடையதாக இருக்கும். இவைகளையெல்லாம் மனதில் கொண்டுதான், ஏற்படுகின்ற சங்கடங்களையெல்லாம் நினைத்துத்தான், நிதி நிலை அறிக்கையிலே நான் தொடக்கத்திலே, மத்திய அரசினுடைய பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எடுத்துக் கொள்ளாத முயற்சிகள், இந்த வேதனையின் நிழல் எல்லாம் நம்முடைய மாநில அரசினுடைய வரவு—செலவுத் திட்டத்திலே படிந்திருக்கின்றன என்கின்ற எண்ணத்தோடு இந்த நிதி நிலையை ஆராய்ந்திட வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டேன். அந்தக் காரணத்தினாலேதான் நமக்கு ஏற்பட்ட பற்றுக்குறை, அந்தப் பற்றுக்குறையை எப்படி நிறைவு செய்வது என்கின்ற வகையிலே எழுந்த பிரச்சினை, அதற்காக நாம் விதித்திருக்கின்ற வரிகள் என்பவையெல்லாம் இங்கே எடுத்துக் காட்டப்பட்டன. நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிற நேரத்திலே வரி அதிகமில்லை என்கின்ற அளவிலே அதைப்பற்றி அதிகமாகத் தாக்கா விட்டாலும் கூட, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இந்த வரி விதிப்பு நியாயமற்றது என்கின்ற வகையிலே தங்களுடைய கருத்துக்களை இந்த மாமன்றத்தில் எடுத்து வைத்திருக்கின்றார்கள். இந்த வரி விதிப்புகள்





சாமான்ய மக்களைத் தொடக் கூடியவை என்கின்ற கருத்துக்களும் எடுத்துச் சொல்லப்பட்டன. குறிப்பாக நம்முடைய மாண்புமிகு அங்கத்தினர் திரு. தாமோதரன் அவர்கள் வாசனை திரவியங்களுக்கு, வாசனை சாமான்களுக்கு வரி போட்டதற்காக மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டார்கள். மத்தியிலே இருக்கிற நிதியமைச்சரும் இந்தப் பெண்கள் ஆண்டு கொண்டாடுகிற நேரத்திலே வாசனை திரவியங்களுக்கு வரி போட்டு விட்டார், இங்கே இருக்கிற நிதியமைச்சரும் வாசனை திரவியங்களுக்கு வரி போட்டு விட்டார், பெண்களின் கோபத்துக்கு, சாபத்துக்கு இவர்கள் ஆளாவார்கள் என் றெல்லாம் சொன்னார்கள். இலக்கியப்படி சொல்வோமேயானால், பெண் களுக்கு இயல்பாகவே மணம் உண்டா இல்லையா என்பதைப்பற்றி ஒரு பெரிய ஆராய்ச்சியே சிவபெருமானுக்கும் நக்கீரருக்கும் ஏற்பட்டு, அது பெரிய இலக்கியமாகவே உருவெடுத்திருக்கிறது. அந்த வகையிலே நாம் செயற்கை வாசனை தர வேண்டியதில்லை என்கின்ற வகையிலும், அப்படி செயற்கை வாசனை தேவைப்படுமேயானால், அதற்கு அதிக விலை கொடுத்து அதைப் பெறட்டும் என்கிற வகையிலேயும் தான் அந்த வரி உயர்த்தப் பட்டிருக்கின்றதேயல்லாமல் வேறு அல்ல.

(பிற்பகல் 6–10)

சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையில் 59 பொருள்களின் மீது விதிக்கப்பட்டிருந்த பல முனை விற்பனை வரியை ஒரு முனை வரியாக நாம் மாற்றியமைத்தோம். அப்படி மாற்றியமைத்த நேரத்தில் இன்றைக்கு 4 சதவிகிதமாக ஆக்கி இருக்கின்ற பருப்பு, எண்ணெய், பிண்ணாக்கு இப்படிப்பட்ட சில பொருள்களுக்கு 3½ சதவிகிதமாகவே அமைந்தது. ஆனால் இந்தப் பலமுனை வரியை ஒருமுனை வரியாக மாற்றியமைக்கின்ற காலம் வரையில், பல கட்டங்களில், 7 சதவிகிதம், 8 சதவிகிதம் என்று இந்தப் பொருள்களுக்கு வரி செலுத்த வேண்டிய சங்கடம் இருந்தது. நாம் 59 பொருள்களுக்கு ஒரு முனை வரியாக மாற்றி அமைத்த போது, பருப்பு, எண்ணெய் வித்துக்கள் போன்றவைகளுக்கு 3½ சதவிகிதமாக, அப்படியே இருக்கட்டும் என்று விட்டுவிட்டோம். இப்பொழுது ½ சதவிகிதம் உயர்த்தி அதை 4 சதவிகிதமாக ஆக்கியிருக்கின்றோம். பலமுனை வரியின் படி 7 சதவிகிதம் தரப்பட வேண்டிய வரி இன்றைக்கு 4 சதவிகிதம் ஆகியிருக்கிற நிலையில் 3 சதவிகிதம் இன்னமும் குறைவாகத்தான் இருக்கிறதேயல்லாமல், இந்த வரி உயர்ந்து விட்டதாக நாம் யாரும் கூறிட முடியாது என்பதையும் நான் சொல்லிக் கொள்வேன்.

நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருந்ததைப்போலவும், நேற்றைய தினம் பேரவையிலே பதிலளித்த நேரத்திலே எடுத்துக் காட்டியதைப் போலவும், விதிக்கப்பட்டிருக்கின்ற அல்லது உயர்த்தப்பட்டிருக்கின்ற இந்த வரிகள் எல்லாம், ½ சதவிகிதம், ¼ சதவிகிதம் என்று அல்லது கணக்கு ஒழுங்காக வரவேண்டும் என்ற சூழலில் இன்றைக்கு உயர்த்தப்பட்டிருக் கிறதே அல்லாமல், அண்டை மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில், அதிகமாக ஒன்றும் இல்லை என்கின்ற எடுத்துக் காட்டுக் களையும் நான் தந்திருக்கின்றேன். சிக்கரி காபி, பிரன்ச் காபி போன்ற வைகளுக்கு ஆந்திரத்திலே 6 சதவிகிதம் இருப்பதைப்போல, கேரளத்திலே 6 சதவிகிதம் இருப்பதைப் போல, கர்நாடகத்திலே 10 சதவிகிதம் இருந் தாலும் கூட, மராட்டியத்திலே இருப்பதைப்போல நாம் 5½ சதவிகிதத்தை

½ சதவிகிதம் உயர்த்தி 6 சதவிகிதமாகத்தான் ஆக்கியிருக்கின்றோம். தேயிலைக்கு ஆந்திரத்திலே 6 சதவிகிதம். கர்நாடகத்திலே 6 சதவிகிதம். மராட்டியத்திலே 6 சதவிகிதம். கேரளத்திலே மட்டும் தான் 5 சதவிகிதம். இங்கே 5½ சதவிகிதத்தை 6 சதவிகிதமாக நாம் மாற்றியிருக்கின்றோம். இதைப் போலவே இந்த வரி உயர்வு என்பது மிகக் குறைவான சதவிகிதம் தான் ஆக்கப்பட்டிருக்கிறதே அல்லாமல் பெரிதும் பாதிக்கக் கூடிய அளவுக்கு ஆக்கப்படவில்லை. அதிலேகூட பிண்ணாக்குக்குப் போடப்பட்ட ½ சதவிகித வரியை ரத்து செய்திருக்கிறோம் என்ற அறிவிப்பை நான் பேரவையிலே தந்தேன். அதை மேலவையிலே தரவேண்டாமா என்று உறுப்பினர்கள் கேட்கக் கூடும் என்பதற்காக மீண்டும் அதனை இங்கேயும் அறிவிக்கின்றேன். அதற்காக பேரவையிலே கூட உடனடியாக நன்றி யெல்லாம் தெரிவிக்கப்பட்டது. அதுபோல நன்றியை யாரும் இங்கே தெரிவிக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். மனதிற்குள்ளேயே எண்ணிக்கொண்டால் போதுமானதாகும்.

நம்முடைய நிதி நிலை, நமக்கு ஏற்படுகின்ற சங்கடங்கள் இவைகளை மனதிலே வைத்து ஒவ்வொரு முறையும், மத்திய திட்டக் குழுவிடத்தில் நாம் வாதாடிக்கொண்டிருக்கின்றோம். அப்படி வாதாடுகிற நேரத்தில், நம்முடைய மாநிலத்தினுடைய நிதி நிலை, வருவாய், இவைகளை உயர்த்துவதற்கு, நீங்கள் மேலும் முயற்சி எடுத்துக் கொள்ளுங்கள் என்கின்ற வகையிலேதான் மத்திய திட்டக்குழுவினுடைய அறிவுரைகள் அமைகின்றன. இந்த மன்றத்திலேயே பலமுறை நான் அப்படி மத்திய அரசு அனுப்பிய தாக்கீதுகளையெல்லாம் படித்துக்காட்டியிருக்கிறேன். வேறு எந்த முறையிலும் வரி போட இயலாவிட்டால், விவசாய முனையிலே வரி போடுங்கள் அல்லது விவசாயத்திற்குத் தந்திருக்கிற சலுகைகளை யெல்லாம் ரத்து செய்யுங்கள், நிலவரிக்குத் தந்திருக்கிற சலுகையை ரத்து செய்யுங்கள், நிலவரிக்கு நீங்கள் இன்றைக்கு விலக்களித்திருக்கி றீர்கள் என்றால், மறுபடியும் போடுங்கள் என்கின்ற வகையிலே பல்வேறு விதமான தாக்கீதுகள் மத்திய அரசின் சார்பாகவும், திட்டக்குழுவின் சார்பாகவும் இந்த அரசுக்கு வந்துகொண்டிருக்கின்றன. நாம் அவ்வப் பொழுது இதற்கு மேல் விவசாய முனையிலே வரிகளைப் போட்டால், விவசாயத் துறை தாங்காது என்பதை எடுத்துரைத்து வந்திருக்கின்றோம். 1975–76ஆம் நிதியாண்டில் வறட்சி நிவாரணத்திற்காக, திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவாக, மேலும் 20 கோடி ரூபாய் ஒதுக்க வேண்டுமென்று அண்மையிலே டெல்லிக்குச் சென்றிருந்த போது, திட்டக்குழுத்தலைவ ரிடமும், உறுப்பினர்களிடமும் அரசின் சார்பிலே வாதாடியிருக்கின்றோம். அதற்கு மேலே 1975–76 ஆம் வருடத் திட்டத்தில் நமக்கு ஏற்பட்டிருக்கின்ற பற்றுக்குறையை சரிக்கட்டுவதற்கு 15 கோடி ரூபாய் மத்திய அரசு நிதி உதவி அதிகமாகத் தர வேண்டும் என்று நாம் கேட்டிருக்கின்றோம். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே, மதுவிலக்கை நாம் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிற காரணத்தால் எவ்வளவு இழப்புக்கு ஆளாகியிருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். அந்தக் கணக்கையும் நாம் மனதிலே பதியவைத்துக்கொள்ள வேண்டியது சிறப்புடையது என்று நான் கருதுகின்றேன். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், வருகிற நான்காண்டுகளிலே மாத்திரம் மதுவிலக்கை மீண்டும் நடைமுறைப்படுத்து கிற காரணத்தால், நமக்கு ஏற்பட்டிருக்கிற இழப்புத் தொகை 234 கோடி



ரூபாய் ஆகும். இந்த 234 கோடி ரூபாயில் 50 சதவிகிதம் ஆன 117 கோடி ரூபாயை ஆண்டு ஒன்றுக்கு 29 கோடி ரூபாய் வீதம் எங்களுக்கு, மாநில அரசுக்கு, ஒரு கொள்கையின் காரணமாக மத்திய அரசு தர வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றோம். இன்னும் அவர்கள் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை. ஆனாலும் மேலும் நாம் வற்புறுத்தி வருகிறோம். இந்தத் திட்டம் குழுவினுடைய கூட்டத் திலேகூட சென்னை நகரத்தினுடைய வளர்ச்சிக்கு, பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களோடு, இதனை ஒப்பிட்டு திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவுத் தொகையாக 10 கோடி ரூபாய் தரவேண்டுமென்று நாம் கேட்டிருக்கிறோம். திட்ட உதவிகள் எந்த அளவுக்கு வகுக்கப்படுகின்றன, இதிலே நம்முடைய மாநிலம் எப்படி பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான சில குறிப்புக்களை உங்களுக்கு நான் தர விரும்புகிறேன். 1975–76-ஆம் ஆண்டிற்கான பல் வேறு மாநிலங்களுடைய திட்ட அளவு எப்படி அமைந்திருக்கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும். நிதிநிலை அறிக்கையில் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி நான் குறிப்பிட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் கள் எல்லாம் எடுத்துக் காட்டினார்கள். நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே கூட, "நான் சென்ற ஆண்டு சொன் னேன், ஐந்தாண்டுத் திட்டத்திற்கு அல்லது பொதுவாக திட்டத்திற்கு விடுமுறை அளிக்க வேண்டும் என்ற கருத்தைச் சொன்னேன், அதை முதலமைச்சர் அவர்கள் பிற்போக்கு வாதம் என்று குறிப்பிட்டார். ஆனால் இப்பொழுது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் எங்கே இருக்கிறது என்றே தெரியவில்லை" என்று அவர்கள் என்னைக் குத்திக் காட்டுவது போல் பேசினார்கள். அப்படிப் பேசுவார்கள் என்பதை நான் முன்பே அறிந்துதான், நிதிநிலை அறிக்கையிலே, திட்டத்திற்கு விடுமுறை அளிக்க வேண்டும் என்கின்ற வாதம் பிற்போக்கு வாதம் என்று கூறிக்கொண்டே, அப்படிப்பட்டவர்களுடைய அணியிலே சேர்ந்துவிட்டதைப் போல மத்திய அரசு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்து, ஆண்டுத் திட்டமாவது ஒழுங்காக நடைபெறுமா என்கிற ஐயப்பாட்டிற்கு வந்திருக்கிறது என்று நான் குறிப்பிட்டிருக்கின் றேன். அப்படிப்பட்ட ஆண்டுத் திட்டத்திலும் நமக்கு எந்த அடிப்படையிலே திட்டத் தொகை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். திட்டத் தொகை ஒதுக்கீட்டிற்கு, நபர்வாரி திட்ட அளவு, பெர் காபிடா என்கின்ற அளவிலே ஒரு முறையை வகுத்துக் கொண்டிருக் கிறார்கள். அதிலே ஆந்திரத்திற்கு 157 கோடி ரூபாய் அளவுக்கு திட்டத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அங்கே உள்ள பெர் காபிடா நபர் வாரி திட்ட அளவு ரூபாய் 36.36. குஜராத்திற்கு 172·65 கோடி ரூபாய்க்கு திட்டம் ஒப்பளிக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய பெர் காபிடா ரூபாய் 64·66 ஆக இருக்கிறது. ஹரியானா மாநிலத்திற்கு ஒப்புக்கொண்டி ருக்கிறதிட்டம் 92·25 கோடி ரூபாய். அதனுடைய பெர்காபிடா 92·52 ரூபாயாக இருக்கிறது. மக்கள் தொகையால் அந்தத் தொகையை வகுக்கின்றபோ 92·52 ரூபாய் அளவுக்கு பெர் காபிடா திட்டம் ஹரியானாவிலே அமை கிறது. கருநாடகத்திலே, நம்மைவிட குறைவாகத் தோன்றினாலும், 139 கோடி ரூபாய்க்கு ஒப்பளிக்கப்பட்டிருக்கிறது. என்றாலும் அதனுடைய பெர் காபிடா அளவு ரூபாய் 47.44 என்கிற அளவுக்கு உயர்ந்து காணப்படு கிறது. கேரளத்தில் நம்மைவிட குறைவான திட்ட ஒதுக்கீடு இருந்தாலும்,

90 கோடி ரூபாய் திட்டம் இருந்தாலும், பெர் காபிடா அளவு 42·25 ரூபாய் என்கிற அளவுக்கு உயர்ந்து நிற்கின்றது. மாராட்டியத்திற்கு 350 கோடி ரூபாய்க்கு திட்டம் ஒப்பளிக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய பெர் காபிடா திட்ட அளவு 69·58 ரூபாய் ஆகும். மத்தியப் பிரதேசத்திற்கு 215 கோடி ரூபாய்க்கு திட்ட அளவு ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதனுடைய பெர் காபிடா 51·77 ரூபாய் ஆகிறது. பஞ்சாபுக்கு 169 கோடி ரூபாய் அளவுக்கு திட்டம் ஒப்பளிக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய பெர் காபிடா ரூபாய் 120·96 என்கின்ற அளவுக்கு உயர்ந்து நிற்

(பிற்பகல் 6–20)

கிறது. இராஜஸ்தானுக்கு ரூ. 105 கோடி என்ற அளவிற்கு திட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கின்றது. உத்திரப்பிரதேசத்திற்கு 388 கோடி ரூபாய் என்ற அளவிற்கு திட்டம் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கின்றது. அதன் பெர் கேபிடா ரூ. 43.89 என்ற அளவிற்கு உயர்ந்து நிற்கின்றது. மேற்கு வங்கத்திற்கு ஒதுக்கப்பட்டது ரூ. 170 கோடி. அதன் பெர் கேபிடா ரூ. 38.28 என்ற அளவிற்கு இருக்கின்றது. தமிழ்நாட்டிற்கு ரூ. 142·59 கோடி என்கின்ற அளவிற்கு திட்டத்திற்கான தொகை ஒதுக்கப்பட்டிருக்கின்றது. நாம் பெறும் பெர் கேபிடா ரூ. 34.69 என்ற அளவில்தான் இருக்கின்றது. இப்படி 120, 92, 47, 64 என்கின்ற மாதிரி மற்ற மாநிலங்களுடைய பெர் கேபிடாவைப் பார்க்கும்போது, அந்த அடிப்படையில் பார்த்தாலும் நமக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கின்ற திட்டத் தொகை ரூ. 142 கோடி என்பது குறைவானதுதான் என்பதை நாம் திட்டக் குழுவினிடத்தில் பல நேரங்களிலே எடுத்துச்சொல்லி வருகின்றோம். ஆனால் மாநிலங்களுடைய குரலை, நமது நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இன்றைக்கு மத்திய திட்டக் குழுவில் இருக்கின்றவர்கள் சரிவரப் புரிந்துகொள்கின்றார்களா அல்லது புரிந்துகொண்டும் நம்முடைய தமிழரசுக் கழகத் தலைவர் சிலம்புச் செல்வர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, ஒரு நிதி ஆதிக்கம் அங்கே இருந்தே தீரவேண்டும் என்கின்ற அளவில் நடந்துகொள்கின்றார்களா என்கின்ற கேள்விக்குறி எழுகின்ற அளவில்தான் மாநிலங்களுடைய கோரிக்கைகள் எல்லாம் மத்திய திட்டக் குழுவிலாகட்டும் அல்லது மத்திய அரசுடைய நிர்வாக அமைப்புகளிலாகட்டும் உதாசீனப்படுத்தப்படுகின்றது.

நான் நேற்று பேரவையில்கூடக் குறிப்பிட்டேன், நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தில் இரண்டாவது சுரங்கத்தை உடனடியாக அமைக்க வேண்டிய அவசியம்பற்றி நாம் நீண்ட நெடுங்காலமாக வலியுறுத்தி வருகின்றோம். இன்னும் சொல்லப்போனால், காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே, அந்த இரண்டாவது சுரங்கம், ஸெகண்டு மைன்கட் என்றுசொல்லப்படும், அந்த இரண்டாவது சுரங்கத்தை வெட்டுவதற்கான திட்டம், நிதி ஒதுக்கீடு, எப்போது வரும், எப்போது வரும் என்று பல முறை கோரி, அப்போதே அது வந்திருந்தால்கூட, இப்போதுதான் அதன் பலன்களை நாம் அனுபவித்திருக்க முடியும். இன்றைக்கு அதற்கு ஒப்புதல் அளித்தால் கூட, இன்னும் ஆறு அல்லது ஏழு ஆண்டுகாலம் கழித்துத்தான்





அதன் பலன்களை அடைய முடியும். இப்போது இந்தத் திட்டத்தை ஏற்று நடத்தினாலும், அதனால் நமக்குக் கிடைக்கும் ஒரு ஆயிரம் மெகாவாட் மின்சாரம் இன்னும் ஆறாண்டுகள் கழித்துத்தான் நமக்கு வரும். ஆனால் இந்தத் திட்டம் இன்னும் கேட்பாரற்ற சூழ்நிலையில்தான் இருக்கின்றது. இதற்கு மாறாக நாம் விரும்பத்தக்க அளவிற்கு 1974–75 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் நெய்வேலி சுரங்கத்திற்காக மத்திய அரசு மூலதனச் செலவு என்கின்ற வகையில் ரூ. 33 கோடி ஒதுக்கி, பின்னர் திருத்திய ஒதுக்கீட்டில் ரூ. 54 கோடி என்ற அளவிற்கு உயர்த்தி, இப்போது 1975–76-ல் ரூ. 15 கோடி என்கின்ற அளவிற்குக் குறைக்கப்பட்டிருக்கின்றது என்றால், இந்த நெய்வேலி திட்டத்தின் மூலம் நாம் எதிர்பார்க்கும் பழுப்பு நிலக்கரி அல்லது மின் உற்பத்தி அல்லது உர உற்பத்தி இவைகளெல்லாம் எந்த அளவிற்கு நமக்குக் கிடைக்கும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தக் கோரிக்கை, இரண்டாவது சுரங்கம் வெட்டப்பட வேண்டும் என்கின்ற இந்தக் கோரிக்கை என்னவாயிற்று என்பதுபற்றி நமக்குத் திட்டவட்டமான பதிலும் கிடையாது. வருமா வராதா என்கின்ற அந்தக் கேள்விக்குச் சரியான விடையும் கிடையாது. ஒதுக்கிய தொகை இந்த வரவு-செலவுத் திட்டத்தில், மத்திய அரசின் சார்பில் மேலும் மிக அதிகமாகக் குறைக்கப்பட்டிருக்கின்றது.

இவைகளைப் பார்க்கின்ற நேரத்திலே மாநிலங்களுடைய எண்ணைஅலைகளுக்கு மத்திய அரசில் வரவர மதிப்பு குறைந்து வருகிறது என்கின்ற குற்றச்சாட்டினைத்தான் நான் சொல்ல முடியும். நமது காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. காமராஜர் அவர்கள் கூட இந்த ஆறேழு ஆண்டுக் காலத்தில் விவசாயத் துறையில், விவசாயத்தைப் பெருக்கும் காரியத்தில் கழக அரசு தவறி விட்டது என்று மேடைகளில் பேசுகின்றதை பத்திரிகைகளின் வாயிலாகப் பார்க்கின்றோம் என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்த ஒன்றுதான். ஆனால் அதே நேரத்திலே இரண்டு லட்சம் பம்புசெட்டுகள் இருந்த தமிழகத்தில், அதை ஏழு லட்சமாக உயர்த்திய பெருமை கழக அரசுக்குத்தான் உண்டு. பம்புசெட்டுகளின் எண்ணிக்கையைப் பெருக்கிடும் அதே நேரத்திலே மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கான முயற்சிகளையும் இந்த அரசு எடுத்துக்கொள்ளாமல் இல்லை. சோழத்திபுழா நீர் மின் திட்டத்தினை 1968–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களிலிருந்து முயற்சித்து வருகிறோம். இதன் விளைவாக 60 மெகாவாட் திறனுள்ள மின்சாரம் நமக்குக் கிடைக்கும். 1968-லிருந்து இதற்காக நாம் முயற்சித்து வருகிறோம். அடுத்து, பரளியாறு திட்டத்திற்காக 1971-லிருந்து முயற்சித்து வருகிறோம். மதுரை மாவட்டத்திலுள்ள மேல மராவதி திட்டத்திற்காக ஜனவரி 1972-லிருந்து முயற்சித்து வருகிறோம். இன்னும் சண்முகாநதி திட்டத்தை 1972-லிருந்து கேட்டு வருகிறோம். மேல் தாமிரபரணி மற்றும் ஐந்து பகுதிகள் நெல்லை மாவட்டத்தில் இருக்கின்றன. இவற்றுக்காகவும் 1973-லிருந்து முயற்சித்து வருகிறோம். சேலம் மாவட்டத்தில் கீழ் மேட்டூர் திட்டம் 160 மெகாவாட்ஸ் திறனுள்ளது. இதையும் 1974 மே திங்களிலிருந்து முயற்சித்து வருகிறோம். இவைகள் மூலம் 535 மெகாவாட்ஸ் மின்சாரம் நமக்குக் கிடைக்கத்தக்க வாய்ப்பு இருக்கின்றது. இந்த அளவிற்கு மின்சக்தி கிடைக்கக்கூடிய இந்தத் திட்டங்களுக்கு இதுவரையில் ஒப்புதல் மத்திய அரசின்

சார்பில் நமக்கு வழங்கப்படவில்லை. இவைகள் அன்னியில் மேட்டூர் நீர் மின் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அக்டோபர் 1972-லிருந்து நாம் மத்திய அரசுக்கு மனுக்களைக் கொடுத்து வருகிறோம். இதன் மூலம் 330 மெகாவாட் திறனுடைய மின்சக்தி நமக்குக் கிடைக்கும். இதுவும் கவனிக்கப்படாமல் உள்ள சூழ்நிலையில்தான் இருக்கின்றது. ஆக நாம் ஒரு ஆயிரம் மெகாவாட் திறனுடைய நெய்வேலி திட்டத்தை வற்புறுத்தி வருகிறோம். இன்னும் நான் குறிப்பிட்ட பல்வேறு திட்டங்கள், மொத்தமாக 875 மெகாவாட் மின் திறனுடைய திட்டங்கள், இவைகள் அனைத்தும் மத்திய அரசின் ஒப்புதலுக்காகக் காத்துக் கிடக்கின்றன.

இந்த நிலையில் சேலம் உருக்காலைக்கும் ஆபத்து வந்திருக்கின்றது என்ற சூழ்நிலையில்தான் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த உருக்காலையின் அடிக்கல் நாட்டுவிழாவினை மிகச் சிறப்பாக நடத்தியாகி விட்டது. தமிழ்நாட்டு மக்கள் அத்தனை பேரும் நீண்ட நெடுங்காலமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்த மாபெரும் திட்டம்—இதற்கு. பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் வந்து அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்கள். ரூ. 518 கோடிக்கு இந்தத் திட்டம் மதிப்பிடப்பட்டது. முதல் கட்ட வேலைகளைத் தொடங்க ரூ. 120 கோடி தேவை என்று கணக்கிடப்பட்டது. 1974–75-ஆம் ஆண்டு நிதி நிலையில் மத்திய அரசு இதற்காக ஒதுக்கிய தொகை 15 கோடி ரூபாய்தான். ஆனால் வந்து சேர்ந்த தொகை மூன்று கோடிதான். பதினைந்து கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு மூன்று கோடி ரூபாய் வந்து சேர்ந்தது. இந்த ஆண்டும் மூன்று கோடி ரூபாய் என்கின்ற அளவில் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. எவ்வளவு வந்து சேருமோ நாமறியோம் பராபரமே என்றுதான் சொல்ல வேண்டியிருக்கின்றது. ஆக நேற்று நான் பேரவையில் தெரிவித்ததைப் போல, சேலம் உருக்காலை என்பது எழுத்தளவில், ஏட்டளவில் தான் இருக்குமா அல்லது நிச்சயம் வருமா என்கின்ற நம்பிக்கையற்ற சூழ்நிலை தான் சேலம் உருக்காலையைப் பொறுத்தவரையில் ஏற்பட்டிருக்கின்றது. நான் நேற்றும் குறிப்பிட்டேன், இந்த அவையிலும் குறிப்பிட வேண்டியது இன்றியமையாதது என்று நான் கருதுகிறேன். நாடாளுமன்ற அவையில் பேசிய மதிப்பு மிக்க உறுப்பினர் திரு. அனுமந்தையா அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். தென் பகுதியிலே உள்ள ரெயில்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூ. 5.5 கோடி நிதி—தென் பிராந்திய ரெயில்வேயின் சீரமைப்பிற்காக அல்லது புதிதாக ரயில்களை அமைத்தல் ஆகிய காரியங்களுக்காக ஒதுக்கப்பட்ட 5.5 கோடி ரூபாயை பீகார் மாநிலத்திற்குத் திருப்பிவிடப்பட்டிருக்கின்றது என்று. இந்தக் குற்றச்சாட்டை திரு. அனுமந்தையா அவர்கள் பாராளுமன்றத்தில் எழுப்பினார். அனைவருக்கும் நினைவிருக்கும், 1972-ஆம் ஆண்டு நீண்டகாலமாகச் சொல்லப்பட்டு வருகின்ற ஒரு கன்னியாகுமரி ரெயில் பாதை. அந்த மாவட்டத்தில் ரெயில் பாதையே கிடையாது. எப்படி தஞ்சை மாவட்டத்திலே மலைகளே இல்லையோ அதைப் போல கன்னியாகுமரி மாவட்டத்தில் ரயில்களே கிடையாது. அந்தக் கன்னியாகுமரி மாவட்டத்தில் ரயில் போடப்படும் என்று பிரகடனம் செய்யப்பட்டது. ஏனென்றால் இதைச் சாதாரண அறிவிப்பாகச் சொல்ல முடியாது, எனவேதான் கூறினேன், பிரகடனம் செய்யப்பட்டது என்று. பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் வந்து அந்த விழாவினைத் தொடங்கி வைத்தார்கள். அதோடு அந்த விழாவில்



பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ என்கின்ற அளவுக்கு, நமது மதிப்பிற்குரிய காமராஜர் போன்றவர்கள் கலந்து கொண்டு—பேசாதிருந்த காரணத்தினால், பேசவும் வேண்டுமோ, என்று கூறினேன்—அதை மிகச் சிறப்பாகச் செய்தார்கள். அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் அங்கே நடைபெற்றிருந்தும், இன்னமும் அந்த வேலை அங்கே தொடங்கப்படாமல், 1976-லே அது முடிந்துவிடும், அனைவரும் இனி ரயிலிலே பயணம் செய்யலாம் என்கின்ற அளவிற்கு மக்களிடம் ஆர்வத்துடன் எடுத்துச் சொல்லப்பட்டும் ஒருவேளை தமிழக அரசு தொடங்கி வைத்துள்ள கட்டபொம்மன் போக்குவரத்துக்கு வசூல் குறைந்து விடக்கூடாது என்கின்ற காரணத்தினாலோ என்னவோ, இன்னமும் அந்த ரயில்பாதை அமைக்காமலேயே இருக்கின்றார்கள். எதிர்பார்க்கின்ற ஒரு மாபெரும் திட்டத்தை இன்றைக்கும் மத்திய அரசு ஆரம்பித்துவிட்டு, அந்த வேலையைத் தொடங்காமலிருப்பது உள்ளபடியே விரும்பத்தக்கதா என்று கேட்கிறேன். கண்டிக்கத்தக்கது என்றுகூடச் சொல்லலாம். இதைப்போல் பல்வேறு சட்டங்கள், நிலச்சீர்திருத்தச் சட்டங்கள் இவைகளையெல்லாம் ஒன்பதாவது ஷெட்யூலில் சேர்த்திடவேண்டும். இது நம் நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்களுக்குப் பிடிக்காது என்றாலும், நமது நண்பர் திரு. ஆறுமுகசுவாமி அவர்கள் வரவில்லை, அவர்களைப் போன்றவர்களுக்கு இது பிடிக்கும் என்கின்ற காரணத்தினால் சொல்லுகின்றேன். இந்த சமதர்மத் திட்டங்கள் எல்லாம் நிறைவேறுவதற்கு 9-வது ஷெட்யூலில் இந்தச் சட்டங்கள் எல்லாம் இணைய வேண்டும் என்று கடந்த இரண்டு மூன்று ஆண்டுக் காலமாக தமிழக அரசின் சார்பாக நாம் வலியுறுத்தி வருகின்றோம். அதையும் மத்திய அரசு கவனிக்க முன்வரவில்லை. மற்றொரு சமதர்மத் திட்டமாக தொழிலாளர்களுக்கு முதலீட்டிலே பங்குகொள்கின்ற, நிர்வாகத்திலே பொறுப்பேற்கின்ற ஒரு புதிய லட்சியத்திற்கு, இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் யாரும் தொடங்காத ஒரு லட்சியத்திற்கு, நாம் இங்கே செயல் வடிவம் கொடுத்துத் தொடங்கி, அதற்கு ஒரு திருத்தம் தேவை, அந்தத் திருத்தத்திற்கு ஒப்புதல் அளியுங்கள் என்று மத்திய அரசுக்கு கடந்த இரண்டாண்டு காலமாகக் கடிதம் எழுதியும், நேரிலே பேசியும், விண்ணப்பித்து வருகின்றோம். அதுவும் நமக்கு இன்னும் கிடைத்தபாடில்லை. தேசிய மைய கொள்கையிலே அழுத்தமான நம்பிக்கையுள்ள இந்த அரசு மால்கோ நிறுவனத்தை, அந்த அலுமினியத் தொழிற்சாலையை தேசியமயமாக்குவோம் என்று 1973–74-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே அறிவித்தது. அதற்குப் பிறகு, பல கடிதப் போக்குவரத்துக்கள் நடந்தும், பல நேரங்களிலே நானும் நம்முடைய முன்னாள் தொழில் அமைச்சர் திரு. மாதவன் அவர்களும் பிரதமரையும், மோஹன் குமாரமங்கலம் போன்றவர்களையும் சந்தித்தும், பல நேரங்களில் பேசியும், இதுவரையிலே, அதற்கான ஒப்புதலை, சமதர்மத்தை வளர்த்துக் கொண்டிருப்பதாகச் சொல்லுகின்ற டெல்லி பட்டணத்திலேயிருந்து நாம் அடைந்திட இயலவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். சமுதாயத்தில், சமூகத்தில் புரட்சிகரமான மாறுதல்களை, பொருளாதாரத்துறையிலே மாத்திரமல்லாமல் சமுதாய அந்தஸ்திலே ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக இரு அவைகளிலேயும் விவாதித்து நாம் 1971-ஆம் தமிழ்நாடு இந்து மத அறக்கட்டளைகள் திருத்தச் சட்டம் என்பதை நிறைவேற்றினோம். அதன்படி அர்ச்சகர்

ஆவதற்கு அந்தப் பயிற்சியிலே தேர்ச்சி பெறுகின்றவர்கள், எந்த வகுப்பாராக இருந்தாலும் அவர்கள் அனைவருக்கும் இந்து மதம் ஒப்புக்கொண்டிருப்பதற்கு இணங்க, அவர்கள் ஆண்டவன் பிள்ளைகள்தான் என்பதற்கேற்ப, சம வாய்ப்பு வேண்டும். ஏதோ அர்ச்சகர்களாக ஆகிவிடுவதால் பெரிய அந்தஸ்து வந்துவிடுவதாக அர்த்தமல்ல. அரிசன சமூதாயத்தைச் சேர்ந்த ஒரு நண்பர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக ஆகிவிட முடிகிறது. ஆனால், ஒரு ஆலயத்திலே அர்ச்சகராக முடியாது என்றால், அந்தச் சமூதாயக் கொடுமையைத் தீர்த்துக்கட்ட வேண்டும் என்பதற்காகத்தான் அடித்தளத்திலே சமூதாயக் கொடுமையைக் கிள்ளி எறிய வேண்டும் என்பதற்காகத்தான், நம்முடைய தமிழக அரசு அந்தத் திட்டத்தை நிறைவேற்றியது. உச்ச நீதி மன்றத்திலே அளிக்கப்பட்ட தீர்ப்பின் காரணமாக முடக்கப்பட்டுக் கிடக்கின்ற அதை எழுந்து நடமாடச் செய்வதற்கு அரசியல் சட்டத்திலே திருத்தம் தேவை என்று, மஹாத்மா காந்தியடிகளுடைய வாரிசுகள் மத்தியிலே ஆளுகிறார்கள் என்ற நம்பிக்கையோடு, நாம் நீண்ட நெடுநாட்களாக எடுத்துச் சொல்லி வருகின்றோம். அதற்கேற்ப அரசியல் சட்டத்தை மாற்றுங்கள் என்று கேட்டோம். அதற்காகப் போராட்டம் நடத்தப்போகிறோம் என்று நாள் குறித்த மதிப்புக்குரிய தந்தை பெரியார் ராமசாமி அவர்கள் அந்தப் போராட்ட நாளுக்கு முன்பு மறைந்து விட்டார்கள். அந்த மறைந்த நேரத்திலே கூட பெரியார் அவர்களுடைய நினைவாகவாவது இந்தச் சட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு அரசியல் சட்டத்திலே மாற்றம் செய்யுங்கள் என்ற வேண்டுகோளை தமிழக அரசு சார்பாக நாம் விடுத்தோம். இன்னும் அது கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. இப்படி மாநிலங்களுடைய கோரிக்கைகள் மத்திய அரசால் அலட்சியப்படுத்தப்படுகின்ற தன்மைகளைத்தான் இங்கு நான் சுட்டிக்காட்டிய ஓரிரு எடுத்துக்காட்டுக்கள் மூலமாக விளக்கினேன். இதே சூழ்நிலை மராட்டிய மாநிலத்திற்கு ஏற்பட்டு, அந்த மாநிலத்தினுடைய முதலமைச்சர் நண்பர் திரு. நாயக் அவர்கள் பிப்ரவரி 11-ஆம் தேதி மராட்டிய மாநிலத்தினுடைய பாராளுமன்ற உறுப்பினர்களுடைய கூட்டத்தைக் கூட்டி, மராட்டியத்தினுடைய கோரிக்கைகள் எவை எவை மத்திய அரசினால் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன, எந்தெந்தத் திட்டங்கள் தேங்கிக் கிடக்கின்றன என்கின்ற ஒரு பட்டியலைப் போட்டு. அது ஒரு புத்தகமாக அச்சடிக்கப்பட்டு, அதை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தார்கள். புத்தகம் போனது 11-ஆம் தேதி, 21-ஆம் தேதி பதவி போனது திரு. வி.பி. நாயக் அவர்களுக்கு என்ற செய்தியைத்தான் நாம் பார்த்தோம். ஆகவே, ஒரே கட்சியினுடைய ஆட்சியில் இப்படிப்பட்ட சங்கடங்கள். மத்தியிலே இருக்கிற கட்சிதான் எல்லா மாநிலங்களையும் சுற்றி வளைத்து ஆளவேண்டும் என்கின்ற எண்ணம் வருகிற நேரத்திலேதான் மத்தியிலே இருக்கின்ற கட்சியினுடைய தலைவர்கள்—பிரதமரோ மற்ற அமைச்சர்களோ—ஆட்டி வைத்தபடி ஆடுகின்றவர்களாக மாநிலத்தினுடைய முதலமைச்சர்கள் இருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் பேசும்போது நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் ஒன்பதாவது வரவு—செலவுத் திட்டத்தை இந்த அவையிலே வைத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இந்தியாவிலேயே ஒரு எதிர்க்கட்சி தொடர்ந்து 9 ஆண்டுகள் பரிபாலனம் செய்து தன்னுடைய நிதிநிலை அறிக்கையை வைக்கின்ற



ஒரேயொரு மாநிலம் நம்முடைய தமிழ் நாடு தான் என்று திரு. தாமோதரன் மகிழ்ச்சி பொங்க இந்த அவையிலே குறிப்பிட்டார்கள். 1967-ஆம் ஆண்டு இந்தியத் திருநாட்டில் பல மாநிலங்களில் அந்தந்த மாநிலக் கட்சிகளுடைய ஆட்சிகள் உருவாயின. ஒரிசாவிலே சிங் தேவ் அவர்களுடைய தலைமையிலே சுதந்திரா கட்சியினுடைய ஆட்சி, மேற்கு வங்காளத்திலே எதிர்க் கட்சியினுடைய ஆட்சி, கேரளத்திலே எதிர்க் கட்சியினுடைய ஆட்சி,. குஜராத்திலே எதிர்க் கட்சியினுடைய ஆட்சி, இப்படி பல்வேறு பகுதிகளில் எதிர்க்கட்சிகளுடைய ஆட்சி, தமிழகத்தில் 1967-ல் எதிர்க் கட்சியினுடைய ஆட்சி—திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி உருவாயிற்று. அந்த நேரத்திலே பொறுப்பேற்றுக் கொண்ட பேரறிஞர் அண்ணா அவர்கள், மற்ற முதலமைச்சர்களை எல்லாம் சந்திக்கிற நேரத்திலே அடிக்கடி ஒன்றைச் சொல்வார்கள், "தொடர்ந்து ஒரு கட்சியினுடைய ஆட்சி 20 ஆண்டுக் காலமாக இருந்ததைப் பொறுத்துக் கொள்ள முடியாத இந்திய நாட்டு வாக்காளப் பெருமக்கள் 1967-ல் ஒரு புதிய மாற்றத்தைத் தந்திருக்கிறார்கள். இந்த மாற்றத்திற்கு நாம் அவர்களுக்கு ஏகப்பட்ட நன்மைகளைச் செய்கிறோம் என்பது இரண்டாவதாக இருந்தாலும் எதிர்க்கட்சிகளால் ஒரு நிலையான ஆட்சியை நடத்திக் காட்ட முடியும் என்பதை மெய்ப்பித்தாக வேண்டும்" என்ற கருத்தை தோழர் திரு இ.எம்.எஸ். நம்பூதிரிபாடு அவர்களைச் சந்தித்த நேரத்திலும் அல்லது திரு. அஜாய் முகர்ஜி அவர்களைச் சந்தித்த நேரத்திலும், திரு. சிங் தேவ் அவர்களைச் சந்தித்த நேரத்திலும் குறிப்பிட்டதை நாங்கள் எல்லாம் அருகிலிருந்து கேட்டிருக்கிறோம். ஆனால் என்ன காரணத்தினாலோ, மத்திய அரசின் தாக்குதல் அல்லது மாநில அளவிலே உள்ள கட்சிகளுடைய சூழ்ச்சிகள் இவைகளின் காரணமாக பல மாநிலங்களில் எதிர்க்கட்சி ஆட்சிகள் ஓராண்டுக்காலம், இரண்டாண்டுக் காலம்கூட தாக்குப் பிடிக்க முடியாமல் கவிழ்ந்து விட்டன. நம்முடைய தமிழ் நாடு ஒன்றிலேதான் இரண்டு பொதுத் தேர்தல்களிலே தொடர்ந்து வெற்றி பெற்று, எட்டாண்டு காலத்தைக் கடந்து, ஒன்பதாவது ஆண்டிலே அடியெடுத்து வைத்திருக்கின்ற ஒரு மாநிலக் கட்சி, எதிர்க் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்டு கொண்டிருக்கின்ற பாங்கினை நாம் காண்கிறோம். இதை ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மாத்திரம் தனிப் பெருமையாக எடுத்துக் கொள்கிறோம் என்று முஸ்லீம் லீகினுடைய தலைவர் நண்பர் திரு. அப்துல் வகாப் அவர்களோ, தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம.பொ.சி. அவர்களோ, பார்வார்ட் பிளாக்கினுடைய தலைவர்களோ, மற்ற கட்சிக்காரர்களோ கருதிக் கொள்ளக் கூடாது. தோழமைக் கட்சிகளுடைய நல்லெண்ணம் பொதிந்த அந்த உறவோடு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி கடந்த 8 ஆண்டுக் காலமாக நடைபெற்று வருகின்றது, 9-வது ஆண்டிலே அடியெடுத்து வைத்திருக்கின்றது இந்த 9-வது ஆண்டிலும் இங்கு மேலவையிலே பேசிய நமது எதிர்க் கட்சித் தலைவர் ஆனாலும், நண்பர் திரு சுவாமிநாதன் அவர்கள் ஆனாலும், சிலம்புச் செல்வர் திரு ம.பொ.சி. ஆனாலும், திரு. வகாப் அவர்கள் ஆனாலும், மற்றும் திரு ராமசாமி படையாச்சி, திரு. சக்தி மோகனைப் போன்றவர்களானாலும், இவர்கள் எல்லாம் எடுத்துச் சொன்ன கருத்துக்களில் குற்றங்குறைகளைச் சுட்டிக் காட்டவும் அவர்கள் தவறவில்லை. அதே நேரத்தில் நல்லவைகளைப் பாராட்டவும் தவறவில்லை என்பதை எண்ணுகிற நேரத்தில், நான் அவர்

களுக்கெல்லாம் என்னுடைய நன்றியை. ஒன்பதாவது ஆண்டிலே அடியெடுத்து வைத்திருக்கின்ற இந்தத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிச் சக்கரத்தை இயக்கிக் கொண்டிருக்கின்ற அத்தனை பேரின் சார்பிலும் மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்ள பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றேன். நீங்கள் ஆற்றியிருக்கின்ற உரைகள் எல்லாம் எங்களை மேலும் எங்களுடைய பணிகளிலே ஊக்கப்படுத்துவதற்கு மெத்தவும் பயன்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். இந்த வரவு செலவுத் திட்டத்தில் கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன என்கின்ற ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். இந்த வரவு செலவுத் திட்டத்திலே ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை குறைவு என்று தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். பத்திரிகைக்காரர்கள் வேண்டுமானால் தி.மு. கழக ஆட்சியில் கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதாகப் போடலாம். அது அவர்களுக்குக் கூட நல்லது தான். ஆனால் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையில் கிராமங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை குறைவாக ஆகியிருக்கிறது என்கின்ற கணக்கைச் சொன்னார்கள். சமுதாய நலத் திட்டம் என்கின்ற தலைப்பின் கீழ் செலவிடுவதற்காக இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 180 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. அவர்கள் திருத்த மதிப்பீட்டில் அது ரூ. 148 லட்சமாக குறைத்து ஒதுக்கப்பட்டிருக்கிறது, வரும் ஆண்டில் ரூ. 98 லட்சம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்கின்ற விவரங்களையெல்லாம் சொன்னார்கள். அதே நேரத்தில் ஒன்றை நான் நினைவூட்ட விரும்புகிறேன். உள்ளூர் மேல்வரி ஈட்டு மானியம், அதாவது லோக்கல் செஸ், சர்-சார்ஜ், மேச்சிங் கிராண்ட் என்பதை 7 கோடி 1974–75-ல் ஒதுக்கியதற்குப் பதிலாக 1974–75 திருத்த மதிப்பீட்டில் 10 கோடியாக உயர்த்தியிருக்கிறோம் என்பதைக் கணக்கில் எடுத்துக் கொண்டால், நாம் பணத்தைக் குறைத்து விட்டோம் என்ற குற்றச்சாட்டு வராது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 6-40)

பொதுவாக சிற்சில பகுதிகளில் நாம் சற்றுக் குறைவாக கிராமக்களுக்கு ஒதுக்கியிருக்கின்றோம் என்றாலும், சிறப்பாக இந்த ஆண்டு வறட்சி நிவாரணப் பணிகள் அனைத்தும் கிராமங்களைச் சுற்றிச் சுற்றித் தான் நடைபெற்றிருக்கின்றன. நடப்பு ஆண்டிலே 12 கோடி ரூபாயும், அடுத்த ஆண்டு ரூ. 20 கோடிக்கு மேலும் நாம் வறட்சிப் பணிகளுக்காக கிராமங்களிலே செலவிட இருக்கின்றோம் என்று கணக்கில் எடுத்துக் கொண்டால், கிராமங்களை இந்த நிதி நிலை அறிக்கையில் புறக்கணித்து விட்டோம் என்று கருதுவதற்கு இடமில்லை.

இந்தக் கழக, ஆட்சியைப் பொறுத்தவரையில், கிராமங்களுக்கு முன்னுரிமை கொடுத்து பல காரியங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. குடியிருப்பு மனைச்சட்டம் நகரத்திலே இருப்பவர்களுக்காக மட்டும் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்படும் சட்டம் அல்ல. இந்தக் குடியிருப்புச் சட்டத்தின் மூலமாக மாத்திரம் 31—12—1974 வரை கொடுக்கப்படிருக்கின்ற



குடியிருப்புப் பட்டாக்களின் எண்ணிக்கையை இங்கே கூறுகிறேன். புதுக்கோட்டை மாவட்டத்திலே, 2,913 விவசாயத் தொழிலாளர்களுக்கும், கோவில்பட்டியில் 1,311 விவசாயத் தொழிலாளர்களுக்கும், மதுரை மாவட்டத்தில் 155 விவசாயத் தொழிலாளர்களுக்கும்; இராமநாதபுரம் மாவட்டத்தில் 99 விவசாயத் தொழிலாளர்களுக்கும், தஞ்சை மாவட்டத்தில் 1,66,950 விவசாயத் தொழிலாளர்களுக்கும், நெல்லையிலே 1,014 பேர்களுக்கும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 244 விவசாயத் தொழிலாளர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சில மாவட்டங்களிலே குறைவாக இருப்பதற்கும், சில மாவட்டங்களில் எண்ணிக்கை இல்லாமல் இருப்பதற்கும் காரணம் அங்கெல்லாம் இருக்கின்றவர்களுக்கு குடியிருப்பு மனையை சொந்தமாக்க வேண்டும் என்ற சூழ்நிலையில் உள்ள விவசாயத் தொழிலாளர்கள் இல்லாதது. அந்தக் காரணத்தினாலே அந்த ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்றன. ஆகமொத்தம் 1,73,748 குடியிருப்பு மனைகள் சட்டத்தின் மூலம் விவசாயத் தொழிலாளர்கள் பயன் பெற்றிருக்கின்றார்கள். அந்த 1,73,748 விவசாயத் தொழிலாளர்களில் 1,03,470 பேர் ஹரிஜனங்கள், 50,560 பேர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்கள் எல்லாம் கூட கிராமங்களைச் சேர்ந்தவர்கள் தான். இந்தக் குடியிருப்புமனைச் சட்டத்தின் மூலம் விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுத்தது மட்டும் இல்லாமல், கடந்த 1967-ஆம் ஆண்டிலிருந்து இது வரையில் நிலமற்ற விவசாயிகளுக்கு பட்டா செய்து கொடுத்து, ஒப்படை செய்யப்பட்டு அதனால் பயனடைந்தவர்களுடைய எண்ணிக்கையைப்பார்த்தால், 1967–68-ல் 22 ஆயிரத்து சொச்சம் ஏக்கர். பயனடைந்தவர்கள் 7 ஆயிரம் பேர்கள். 1968–69-ல் 51 ஆயிரத்து சொச்சம் ஏக்கர், பயனடைந்தவர்கள் 24,600 பேர்கள். 1969–70-ல், 1,55,000 சொச்சம் ஏக்கர், பயனடைந்தவர்கள் 71 ஆயிரம் பேர்கள். 1970–71-ல், 1,73,558 ஏக்கர், பயனடைந்தவர்கள் 99 ஆயிரம் பேர்கள். 1971–72-ல் 1,25,414 ஏக்கர், பயனடைந்தவர்கள் 62,643 பேர்கள், 1972–73-ல் 85 ஆயிரம் ஏக்கர், பயனடைந்தவர்கள் 47 ஆயிரம் பேர்கள், 1973–74-ல் 61 ஆயிரம் சொச்சம் ஏக்கர்கள், பயன் பெற்றவர்கள் 31 ஆயிரம் பேர்கள், 1974–75-ல் ஜனவரி முடிய 28,815 ஏக்கர், பயனடைந்தவர்கள் 14 ஆயிரம் பேர்கள். ஆக 1967-லிருந்து, 1975 ஜனவரி முடிய 7 லட்சம் ஏக்கர், 3 லட்சத்து 61 ஆயிரம் விவசாயிகளுக்குச் சாகுபடி செய்ய பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு முன்பு பல ஆண்டுகள் ஆட்சியில் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் தான் பல்லாயிரக்கணக்கானவர்களுக்குத் தரப்பட்டது என்பதைத் தவிர லட்சக் கணக்கிலே தரப்படவில்லை. இந்த 7 அல்லது 8 ஆண்டுக் கால ஆட்சியிலே தான் 3 லட்சத்து 61 ஆயிரம் பேர்கள் பயன் அடைந்தார்கள். அந்த வகையிலே 7 லட்சம் ஏக்கர் நிலம், நிலமற்ற சிறு விவசாயிகளுக்கு ஒப்படை செய்யப்பட்டிருக்கின்றது. இத்தனை சாதனைகள் கிராமங்களிலே நடைபெற்றிருக்கின்றன. அதைப் போலவே, ஒப்படை செய்யப்பட்ட குடியிருப்பு நிலங்கள், குடியிருப்பு மனைகள் தவிர்த்து, 1966–67-ல் 12 ஆயிரம் பேர்களுக்கும், 1968–69-லே 19,900 பேர்களுக்கும், 1969–70-லே 89 ஆயிரம் பேர்களுக்கும், 1970–71-லே 1,43,000 பேர்களுக்கும், 1971–72-லே 86 ஆயிரம் பேர்களுக்கும், 1972–73-லே 62 ஆயிரம் சொச்சம் பேர்களுக்கும், 1973–74-லே 50,600 பேர்களுக்கும், 1974–75-லே 29 ஆயிரம் சொச்சம் பேர்களுக்கும், ஆக மொத்தம் 4 லட்சத்து 94 ஆயிரம் பேர்களுக்கு குடியிருப்பு நிலம் பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த 8 ஆண்டுக் காலத்திலேதான் சிறு பாசனக் குளங்கள், ஏரிகள் சீர்திருத்தப்பட்டவற்றின் எண்ணிக்கை 6,600 என்பதையும், கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டுவிட்டனவா என்று யாராவது சந்தேகப்படுவார்களானால், அவர்களுக்கு விடையாகத் தெரிவித்துக் கொள்கிறேன், அவர்களுக்காக ஏறத்தாழ 30 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதனால் பயன்பட்ட நிலங்கள் கிட்டத்தட்ட 10 லட்சம் ஏக்கர். புதிய சாகுபடி, அபிவிருத்தி, நிரந்தரப்படுத்துவது என்ற வகையில் 10 லட்சம் ஏக்கர் அதனால் பயன்பட்டது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கிராமங்களுக்குக் குடி தண்ணீர் திட்டங்களின் மூலமாக, 1970-ஆம் ஆண்டிலே ஆரம்பித்த குடி தண்ணீர் வாரியத்தின் மூலமாக, கிட்டத்தட்ட 5 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஊர்களுக்கு குடி தண்ணீர் வசதியை நாங்கள் அளித்திருக்கின்றோம். அதைப்பற்றி நான் இப்போது மிக விவரமாகச் சொல்ல விரும்பவில்லை. ஏற்கனவே ஒருமுறை அதைப்பற்றி விவரமாகத் தந்திருக்கிறேன்.

1,500-க்கு மேற்பட்ட மக்கள் வாழ்கின்ற கிராமங்களை முக்கியமான சாலைகளோடு இணைக்க வேண்டும் என்று ஒரு திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. 1972–73-ல் அதற்கு ரூ. 3 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, கப்பி போடப்பட்ட சாலைகள் அப்போது 668 கிலோ மீட்டர்கள், தார் போடப்பட்ட சாலைகள் 159 கிலோ மீட்டர்கள், மொத்தம் பயன் அடைந்த ஊர்கள் 610. 1973–74-ல் கப்பி போடப்பட்ட சாலை 1,131 கிலோ மீட்டர், தார் போடப்பட்டது 974 கிலோமீட்டர், 1974–75-ல் $3\frac{1}{2}$ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு கப்பி போடப்பட்ட சாலை முடிக்கப்பட்ட வேலை 535 கிலோ மீட்டர். தார் போடப்பட்ட சாலை முடிக்கப்பட்ட வேலை 645 கிலோ மீட்டர், மொத்தம் பயன் அடைந்த ஊர்கள் 463. 1,500 மக்கள் தொகைக்குக் குறைவாக உள்ள கிராமங்களுக்கு செம்மண் பரப்பப்படுகிற சாலைத் திட்டம் 1974-ல் எடுத்துக்கொள்ளப்பட்டது. இப்போது அவைகள் நடைபெற்று வருகின்றன. ஆகவே கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டுவிட்டன என்று குறைகூறுவது சரியல்ல. இந்த அரசு வந்த பிறகு தான் எல்லா கிராமங்களுக்கும் மின் விளக்கு வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று திட்டமிட்டு இதுவரையிலும் தமிழகத்திலே உள்ள குக்கிராமங்கள் உட்பட 61,209 கிராமங்களுக்கு மின் இணைப்பு தந்திருக்கிறோம். இன்னும் மின் இணைப்பு கொடுக்க வேண்டிய கிராமங்களுடைய எண்ணிக்கை 1,283 கிராமங்கள் தான். இந்தியாவிலேயே ஹரியானாவிலே 5 ஆண்டுகளுக்கு முன்பே கொடுத்துவிட்டார்களே, என்று கேட்டார்கள். ஹரியானா என்பது நம்முடைய செங்கற்பட்டு மாவட்டம் போன்று ஒரு மாநிலம். பல செங்கற்பட்டுகள் உள்ளடங்கிய தமிழக மாநிலத்தில் 61,209 கிராமங்களுக்கு குக்கிராமங்கள் உட்பட நாம் மின் இணைப்பு தந்திருக்கிறோம். இன்னும் தரவேண்டியது 1,200. 23,897 ஹரிஜன காலனிகளுக்கு மின் இணைப்பு தந்திருக்கிறோம் அதிலே இன்னும் பாக்கி இருக்கிறது என்ற கணக்கும் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.





(பிற்பகல் 6-50)

பேரவையில் நான் சில அறிவிப்புகளை வெளியிட்டேன். அவைகளை மேலவையில் வெளியிடுவது முறை என்ற காரணத்தினால், அந்த அறிவிப்புகளை இங்கே வெளியிட விரும்புகின்றேன். வறட்சியின் காரணமாக கிணறுகளை ஆழப்படுத்த கூட்டுறவுக் கடன்களை வாங்குவதிலே உள்ள சங்கடங்களை உணர்ந்து மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கான "தக்காவி" கடன்கள் வர வேண்டுமென்று என்னிடம் பல முறையீடுகள் வந்தன. இன்றியமையாத தேவையை உணர்ந்து கிணறுகளை ஆழப்படுத்த ரூபாய் 500 முதல் ரூபாய் இரண்டாயிரம் வரை தக்காவி கடன் வழங்க அரசு முடிவு செய்திருக்கிறது. இதற்காக முதற் கட்டமாக ரூபாய் ஐந்து கோடியை அரசு ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பதையும் நான் மிகுந்த மகிழ்ச்சியோடு இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். நாவலர் அவர்கள் சொல்லுகிறார்கள் "இதுவும் கிராமத்துக்குத்தான்" என்று. (சிரிப்பு).

அகவிலைப்படி குழு அளித்த பரிந்துரையில் இனிமேல் அகவிலைப்படி தரும்பொழுது அரசு ஊழியர்களுக்கு அளிக்கும் அகவிலைப் படியில் 33·80 பங்கை ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் அளிக்க வேண்டுமென்று பரிந்துரை செய்துள்ளது. அரசு ஊழியர்களுக்கு நாம் தற்போது ரூபாய் 20 முதல் ரூபாய் 30 வரை அகவிலைப்படி உயர்வு வழங்கியிருப்பதையொட்டி ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு 8 ரூபாய் கூடுதலாக வழங்க முடிவு செயதிருக்கின்றோம். பொங்கலின்போது அறிவிக்கப்பட்ட 5 ரூபாய் அகவிலைப்படி உயர்வுக்குப் பதிலாக இந்த 8 ரூபாய் உயர்வு கிடைக்கும். ஏற்கனவே அவர்கள் பெற்று வந்த இருபது ரூபாயோடு இந்த 8 ரூபாயும் சேர்ந்து 28 ரூபாய் அகவிலைப்படியாக ஓய்வூதியம் பெறுபவர்கள் அனைவரும் பெறுவார்கள். இதனால் ஓய்வூதியம் பெறும் 62,000 பேர் பயனடைவார்கள் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். 14—1—1970க்கு முன்பு ஓய்வு பெற்ற நகராட்சி ஊழியர்கள் 25 ரூபாய் அல்லது அவர்கள் கடைசியாக வாங்கிய சம்பளத்தில் கால் பகுதி இவற்றில் எது அதிகமோ அதைத் தற்காலிக ஓய்வூதியமாக 14—1—1970 முதல் பெற்று வந்தார்கள். 1—4—1974 முதல் அவர்களுக்கு ரூபாய் 10 ஓய்வூதியம் உயர்த்தப்பட்டது. அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படும் குறைந்த அளவு ஓய்வூதியம் 50 ரூபாய் என்று இருப்பதைப் போலவே ஓய்வு பெற்ற நகராட்சி ஊழியர்களுக்கும் 1—4—1975 முதல் குறைந்த அளவு ஓய்வூதியமாக ஐம்பது ரூபாய் அளிக்க அரசு முடிவு செய்திருக்கின்றது. (கைதட்டல்) நீலகிரி மாவட்டத்து விவசாயிகளுடைய கோரிக்கைக்கிணங்கி அவர்கள் செலுத்த வேண்டிய விண்ணப்பக் கட்டணம், பூச்சிக்கொல்லி மருந்துக் கட்டணம் ஏறத்தாழ 10 இலட்சம் ரூபாய் ஓராண்டுக்கு ஒத்தி வைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. முன்னாள் இராணுவத்தினருக்கு வேலை வாய்ப்பு அளித்திடவும், உணவு வழங்கும் நிறுவனத்திற்குப் பயன்படும் வகையிலும், அரசின் பல்வேறு துறைகள் பொருள் போக்குவரத்திற்குத் தனியார் துறையை நம்பும் போக்கைப் படிப்படியாகக் குறைக்கவும் தமிழக அரசு "தமிழ் நாடு பொருள் போக்குவரத்துக் கழகம்" (தமிழ் நாடு கூட்ஸ் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன்) ஒன்றை நிறுவுவது என தீர்மானித்திருக்கிறோம். சில பத்திரிகை

களில் "புட் . டிரான்ஸ்போர்ட்" என்று வந்திருக்கிறது. இது "புட் டிரான்ஸ்போர்ட்" அல்ல "தமிழ் நாடு கூட்ஸ் டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன்" என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். தமிழ் நாடு பொருள் போக்குவரத்துக் கழகத்தின் முதலீடு 120 இலட்சம் ரூபாயாகும். ரூபாய் 40 இலட்சம் ஆரம்ப முதலாகவும், ரூபாய் 80 இலட்சம் வங்கிகள் மூலம் பெறும் கடனாகவும் இது அமையும். இந்த நிறுவனம் 100 லாரிகளோடு ஆரம்பித்து, படிப்படியாகத் தனது எண்ணிக்கையைப் பெருக்கிக் கொள்ளும். ஆரம்பத்தில் சுமார் 600 பேரும் இரண்டு மூன்றாண்டுகளில் சுமார் இரண்டாயிரம் பேரும் முன்னாள் இராணுவத்தினர் இதன் மூலம் பயன் பெறுவார்கள். "முதலீட்டில் பங்கு, நிர்வாகத்தில் பொறுப்பு" என்ற இந்த அரசின் கொள்கைக்கொப்ப, முதலீட்டில் 24 சதவிகிதம் தொழிலாளர்கள் பங்காக அமையும். நிர்வாகக் குழுவில் இரண்டு தொழிலாளர் இடம் பெறுவர். இதன் தலைமையகம் சென்னையில் அமையும். இந்தத் திட்டம் மேலும் வளர இந்திய அரசின் முன்னாள் இராணுவ மறுவாழ்வுத் துறை நிதி உதவியினை இதுவரையில் வழங்க முன் வரவில்லை என்றாலும், இனிமேலாவது வழங்குமென்று நம்புகிறேன். இந்த அறிவிப்புகளை இந்த மேலவையிலே நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். சிலம்புச் செல்வர் அவர்கள் பேசுகிற நேரத்தில் தமிழுக்குத் தனித் துறை என்கின்ற ஒரு தலைப்பு இருந்தாலும், அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற 1 கோடி ரூபாய் இதுவரையிலே செய்யப்பட்டு வருகின்ற செலவுகளின் அடிப்படையிலே அமைந்திருக்கிறது, புதிதாக என்ன செய்யப் போகிறோம் என்பதற்குத் தனியாகவே தமிழ் வளர்ச்சி சிறப்புத் திட்டத் துறை என்கின்ற வகையிலே ஒன்று அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். இந்த அரசின் சார்பிலே அவர்கள் குறைப்பட்டுக்கொண்டது போல தமிழைப் பயிற்று மொழியாக ஆக்குவோமென்ற முயற்சியில் நாம் பெரு வெற்றியை, முழு வெற்றியைக் காண முடியாவிட்டாலும் தமிழ் ஆட்சி மொழியாக ஆவதற்கு வேண்டிய பல்வேறு முயற்சிகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம். ஆகவே பல்வேறு துறைகளிலே, குறிப்பாக கல்வி போன்ற துறைகளில், நாம் செலவழிக்கின்ற பணம் தமிழுக்காகவும் சேர்ந்துதான் பயன்படுகிறது என்பதை நாம் மறந்துவிடலாகாது. ஆகவே சிலம்புச் செல்வர் அவர்களும் மறுத்திட மாட்டார்கள் என்று நம்புகிறேன். "தமிழுக்கு, தமிழ் இலக்கியத்தை வளர்க்க, தமிழர்களுடைய வரலாறுகளைப் புதுப்பிக்க, தமிழர்களுடைய வரலாறுகள் மங்கி மறையாமல் பாதுகாக்கப்பட அகர முதலி போன்ற காரியங்கள் இன்னும் மேலும் மேலும் வளர்ச்சியடைய திட்டங்களை சிறப்புத் திட்டங்களாக அமைக்க வேண்டுமென்ற பொருளிலே தான் அவர்கள் தமிழ் வளர்ச்சி சிறப்புத் திட்டத்துறை ஒன்று அமைக்க வேண்டும், சென்ற ஆண்டிலேயே சொன்னேன், எனக்கு அதிருஷ்டம் இருந்தால் அது முதலமைச்சருக்கு நினைவிருக்கும் என்று கருதுகிறேன்" என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். எப்பொழுதுமே சிலம்புச் செல்வர் போன்ற பெரியவர்களுடைய எந்தச் சொல்லும் எங்களுடைய உள்ளத்திலே அழியாமல் நிலைத்து நிற்கும் என்பதை நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன். இந்த அரசு தமிழுக்காக வாழ்கிற அரசு, தமிழைப் பாதுகாப்பதற்காகப் போராடியவர்களால் நடத்தப்படுகின்ற அரசு என்பதை



அவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே இன்னும் எந்தெந்த வகையிலே இந்தச் சிறப்புத் திட்டத் துறையை வளர்க்கலாம் என்பவைகளுக்கான ஆலோசனைகளை அவர்களைப் போன்றவர்கள் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். அதற்கேற்ற வகையில் அந்தத் துறையை நான் கல்வி அமைச்சரோடும் மற்றும் இந்தத் துறை அதிகாரிகளோடும் கலந்து பேசி உருவாக்குவதற்காக எல்லாவிதமான முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொள்ளும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்வேன் (கைதட்டல்). நம்முடைய நண்பர் திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அதைப் போலவே திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசுகிற நேரத்திலும் கன்னியாகுமரி முனையில் அண்ணாவுக்கும் திருவள்ளுவருக்கும் சிலைகள் எல்லாம் வைக்கப்பட வேண்டுமென்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அவைகளெல்லாம் படிப்படியாகச் செய்யப்பட வேண்டிய காரியங்கள் என்பதை இந்த அரசு நிச்சயமாக உணர்ந்திருக்கிறது. சிலை வைப்பதற்கு இப்பொழுது எங்கே இடமிருக்கிறது என்று நாம் தேடுகின்ற அளவுக்கு ஏற்கெனவே இருந்த அரசு விவேகானந்தருடைய அந்த மண்டபத்திற்கு அனுமதி கொடுத்து பிறகு தொடர்ந்து வந்த அரசு அனுமதியை நிறைவேற்றித் தரக்கூடிய கட்டத்திலே இருந்து இன்று நல்ல சுற்றுலா இடமாக அந்த விவேகானந்தர் பாறை அமைந்திருக்கிறது. எனினும் நம்முடைய தமிழகத்தினுடைய தலை சிறந்த மேதையான திருவள்ளுவருடைய சிலை அங்கே வைக்கப்பட வேண்டுமென்கின்ற கருத்தை இந்த அரசு ஏற்றுக் கொள்ளுகின்றது. "அண்ணா அவர்களுடைய சிலை கன்னியாகுமரி முனையிலே தான் வைக்கப்பட வேண்டுமா? அது நாகர்கோவிலில் இருப்பது போதாதா?" என்கின்ற கேள்விகளுக்கெல்லாம் நாம் பதிலளித்து ஆக வேண்டும். அது மாத்திரமல்ல அங்கே சிலைகள் வைப்பதற்குப் போதுமான இடங்கள் இருக்கின்றனவா என்பதையெல்லாம் நாம் எண்ணிப் பார்த்திடல் வேண்டும்.

தமிழ்த்தாய் கோயில் ஒன்றை காரைக்குடியில் அமைப்பதற்கு இந்த அரசு உதவி செய்வதாகத்தான் சொல்லியிருக்கிறதேயல்லாமல் சில பத்திரிகைகளில் வந்திருப்பதுபோல, தமிழ்த்தாய் கோயில் அமைப்பதை சில பேர் ஆட்சேபிக்கிறார்கள். சில பேர் மறுக்கிறார்கள் என்று யாரும் எண்ணிடத் தேவையில்லை. நானே காரைக்குடியைத் தேர்ந்தெடுத்து நானே போய் அங்கே தமிழ்த்தாய் கோயிலைக் கட்டவில்லை. இந்த அவையினுடைய உறுப்பினராக இருந்த, தமிழின்பால் மெத்த பற்றுடைய நம்முடைய பெரியவர் திரு. சா. கணேசன் அவர்கள் அங்கே தமிழ்த்தாய்க்கு என்று ஒரு கோயிலை உருவாக்கியிருக்கிறார்கள். அதற்கு அரசினுடைய உதவியை நாடினார்கள். நடத்தினால் அரசு தன்னால் முடிந்த உதவியைச் செய்யும் என்று வாக்களித்திருக்கின்றது. அந்த வகையிலேதான் அந்த உதவி செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுவேன்.

கடைசியாக, மேலவையிலும் பேரவையிலும் நீண்ட விவாதத்திற்கு பல நாட்களாக ஆளாகி வருகின்ற "மாநில சுயாட்சி"யைப் பற்றியும் சில கருத்துக்களைக் கூற வேண்டியது அவசியம் என்பதை நான் உணராமலில்லை. இப்போது இருக்கிற பிரச்சினையே • மாநில சுயாட்சியை யாரிடம் கொடுப்பது என்பது தான். அது தான் பெரிய பிரச்சினை

இந்திரா காந்தி இதைச் சொன்னால், நான் ஏற்றுக்கொள்ளுகின்றேன். உன்னிடம் கொடுக்க மாட்டேன், நாவலர் நெடுஞ்செழியனை உட்கார வை தருகிறேன், அல்லது காமராஜரை உட்கார வை தருகிறேன், அல்லது ராஜாராம் நாயுடுவை உட்கார வை தருகிறேன், அல்லது சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானத்தை உட்கார வை தருகிறேன், நீ மட்டும் உட்காரக் கூடாது என்று திருமதி இந்திரா காந்தி சொல்லி, அப்படி மாநில சுயாட்சி வருவதாக இருந்தால், இந்த நொடியிலேயே நான் இந்தப் பதவியிலிருந்து போகத் தயாராக இருக்கிறேன் (கரகோஷம்) என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இன்றைக்கு மாநில சுயாட்சி தருவதாக வைத்துக் கொள்வோம் அல்லது நான் இருப்பதால் தர வேண்டாமென்று இருப்பவர்கள் தடுத்து திருமதி இந்திராகாந்தி சற்று பொறுத்துதிருப்போம், இவன் போன பிறகு அல்லது கழக அரசு அல்லது இந்த அரசு போன பிறகு, நாவலரோ அல்லது பேராசிரியரோ அல்லது மற்றவர்கள் எல்லாம் போன பிறகு, பிறகு வருகிறவர்களிடம் கொடுப்போம் என்று வைத்திருந்து, 1976லே கொடுப்பதாக வைத்துக் கொள்வோம். அப்படி வராது 1976ல். வருவதாக வைத்துக்கொள்வோம் கற்பனை செய்து. அப்படிக் கொடுத்துவிட்டு புதிதாக வருகிறவர்கள் மாநில சுயாட்சியை அனுபவித்துக் கொண்டிருக்கும்போது மறுபடியும் 1981லே ஒரு தேர்தல் வந்து அந்தத் தேர்தலிலே மக்கள் வேறு விதமாக வாக்களித்து நாங்கள் வந்து விட்டால், மறுபடியும் மாநில சுயாட்சியைத் திரும்ப எடுத்துக்கொண்டு விடுவார்களா? எனக்குப் புரியவில்லை. எவ்வளவு வேடிக்கையான, கிண்டலுக்குரிய, கேலிக்குரிய வாதங்கள் எல்லாம் இன்றைக்கு நாட்டிலே நடத்தப்படுகின்றன என்பதை எண்ணிப் பார்க்கின்ற நேரத்திலே, எனக்கு உள்ளபடியே வருத்தமாக இருக்கின்றது. ஒரு கொள்கையினுடைய அடிப்படையிலே நின்று இன்றைக்கு இதைச் செய்து கொண்டிருக்கிறோம். திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்களைப் பற்றியெல்லாம் பேசப்பட்டது. திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்களிடத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்ன உறவு? எப்போது அந்த உறவு ஆரம்பம்? எப்படி அந்தப் பிணைப்பு ஏற்பட்டது? திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர் அல்ல என்றாலும், வட பகுதியிலே மிகச் சிறந்த தலைவர், இந்தியா முழுமைக்கும் பெரிய தலைவர் என்கின்ற அந்தப் புகழொளி படைத்தவர் என்பதால், ஜெயப்பிரகாஷ் நாராயணன் போன்ற பெரியவர்களிடத்தில் என்றைக்குமே மதிப்பும் மரியாதையும் வைக்கக் கற்றுக் கொண்டிருக்கும் ஒரு இயக்கம் திராவிட முன்னேற்ற கழகம்.

(பிற்பகல் 7–00).

அதைத்தான் நாங்கள் அறிஞர் அண்ணா அவர்களிடத்தில் பெரியார் ராமசாமி அவர்களிடத்தில் பாடமாகப் பெற்றிருக்கின்றோம். மற்றவர்களை மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதைத்தான் பாடமாகப் பெற்றிருக்கிறோம். அந்த வகையிலே தான் நாங்கள் திரு. ஜெயபிரகாஷ் நாராயணனை மதிக்கிறோம். இன்றல்ல நேற்றல்ல பல ஆண்டுக்காலமாக



நாங்கள் மதிக்கத்தகுந்த பெரியவர்களில் திரு. ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்கள் ஒருவர் ஆவார். மத்தியப் பிரதேசத்திலே துப்பாக்கிக்குப் பயப்படமால், ராணுவத்திற்குப் பயப்படாமல், பீரங்கிக்குப் பயப்படாமல், பயங்கரக் கொள்ளைக்காரர்களையெல்லாம் தன்னுடைய இதயத்தாலே மாற்றியமைத்த பெருங்குணசீலர், திரு. ஜெயபிரகாஷ் நாராயண். இந்திய விடுதலைப் போராட்டத்திற்காக அவர் ஆற்றிய பணிகள் சாதாரணமானவை அல்ல. அப்படிப்பட்ட திரு. ஜெயபிரகாஷ் நாராயண் அவர்கள் இன்றைக்கு நடைபெற்றதாக அனைவரும் மகிழ்ச்சி தெரிவித்துப் பேசினோமே................

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர் :</u> முதல்வர் உரை முடியும வரை அவையின் கூட்ட நேரம் நீட்டிக்கப்படுகிறது.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> திரு. ஷேக் அப்துல்லாவிற்கும் திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கும் இடையிலே ஏற்பட்ட சமரச உடன்பாடு ஏற்படவேண்டும் என்று 1974–ஆம் ஆண்டிலேயே "பீபிள்ஸ் ஆக்ஷன்" என்கின்ற ஒரு பத்திரிகையில் திரு. ஜெயபிரகாஷ் நாராயண் ஒரு கட்டுரையில் தீட்டியிருக்கிறார்கள். இப்படி அச்சுறுத்துவதால், அடக்குமுறைக்கு ஆளாக்குவதால், மிரட்டுவதால் காரியங்கள் நடைபெறாது. பேச்சு வார்த்தைகளின் மூலமாக இதைத் தீர்த்துக்கொள்ளுங்கள் என்று மத்திய சர்க்காருக்கு காஷ்மீர் பிரச்சினை குறித்து திரு. ஜெயபிரகாஷ் நாராயண் அறிவுரை கூறினார். அப்படி அறிவுரை கூறி அதே கட்டுரையில் தான் குறிப்பிட்டிருக்கிறார்.

**"The only question that may still be considered to be relevant is that of the quantum of autonomy that Jammu and Kashmir should enjoy within the Union of India and Jammu and Ladakh regions, in their turn, should enjoy within the Constitutional framework of that State. But this is not a question in any way on peculiar to Jammu and Kashmir. There are several States in this country which have been demanding larger measure of autonomy. There is, for instance, the Rajamannar Committee's Report in regard to Tamil Nadu. But, at the same time, it must be recalled with pride the ringing words of Chief Min ster Mr. Karunanidhi which he is recently reported to have spoken at a public meeting at Thanjavur; 'The demand for greater autonomy to the States' he declared "was never meant to d vide the country but only to promote the welfare of the people".**

இப்படி திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் சொன்ன பிறகு, எதிர்க் கட்சித் தலைவருக்குச் சந்தேகம் ஏற்படலாமா? மாநில சுயாட்சி கேட்பது பிரிவினையாக இருக்கக்கூடாது என்கின்ற சந்தேகம் ஏற்படத் தேவையில்லை. திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் சொல்லுகிறார் அவரே குறிப்பிட்டதைப் போல எதிர்க் கட்சித் தலைவரோடு சிறைச்சாலையிலே உடனிருந்து இந்திய

நாட்டு விடுதலைக்குப் போராடிய சிலம்புச் செல்வர் திரு. ம. பொ. சி. அவர்கள் மாநில சுயாட்சியின் பக்கம் இருக்கிறார். அவர் அந்த முழக்கத்தை எழுப்புகிறார் என்றால், இதிலே பிரிவினை எங்கிருந்து வந்துவிடும். அண்ணா அவர்கள் திராவிட நாட்டுப் பிரிவினையைக் கைவிட்டுவிட்டேன் என்று திட்டவட்டமாக அறிவித்து பொதுக் குழுவும் முடிவெடுத்த பிறகு, இன்றைக்கு மாநில சுயாட்சியை இந்தக் கட்சியிலே இருந்து வெளியேறியவர்கள் ஆனாலும், அல்லது எதிர்க் கட்சியிலே அல்லது மாற்றுக கட்சியிலே இருப்பவர்கள் ஆனாலும், இது ஒரு பிரிவினை வாதம் என்கின்ற ஒரேயொரு திரையைப்போட்டு மறுக்கிறார்கள் என்றால், அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லி நாம் ஏற்றுக்கொள்வதா என்கின்ற வகையிலேதான் இதை எதிர்க்கிறார்களே அல்லாமல் வேறு அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

"மாநிலத்தில் வாழும் மக்கள் நல்வாழ்வுக்கு அத்தியாவசியமான எத்தனை அதிகாரங்களை மத்திய அரசைவிட மாநில அரசு செம்மையாக நிறைவேற்ற முடியுமோ அத்தகைய அதிகாரங்களை மத்திய அரசின் தலையீடும் குறுக்கீடுமின்றி பிரயோகிக்கும் மாநில அரசுக்குள்ள அரசுரிமை என்பதற்குப் பெயர்தான சுயாட்சி. பலமான மத்திய அரசு வேண்டுமென்ற கோரிக்கை பலமான மாநில அரசு வேண்டுமென்ற கோரிக்கைக்கு முரணானது அல்ல. மத்திய அரசும் மாநில அரசும் கூட்டாட்சியின் ஒரே அம்சங்கள்", என்று சென்னையிலே 20—6—1974-ல் முன்னாள் சுப்ரீம கோர்ட் தலைமை நீதிபதி திரு. சுப்பாராவ் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

கேரள காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஜார்ஜ் அவர்கள் "பாதுகாப்பு, தகவல் ஒலிபரப்பு, வெளிநாட்டு விவகாரங்கள் ஆகிய அதிகாரங்களை மட்டும் மத்திய அரசு வைத்துக்கொண்டு மீதமுள்ள எல்லா அதிகாரங்களையும் மாநில அரசுகளுக்கு வழங்க முன்வரவேண்டும்" என்று 10—5—1974 அன்று கோட்டயத்திலே நிருபர்களிடத்திலே எடுத்துக்கூறியிருக்கிறார்கள்.

பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு வீரேந்திர பட்டீல் இன்றைக்கும் ஸ்தாபன காங்கிரஸ் கட்சியிலேதான் இருக்கிறார். கருநாடக மாநிலத்தின் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அவர். அவர் 9—6—1974 அன்று சென்னையிலே பேசியபோது, "மாநில சுயாட்சி என்னும் புனிதப் போரில் தமிழக முதல்வர் நிச்சயம் வெற்றிவாகை சூடுவார். மாநில சுயாட்சிக்காக திரு. கருணாநிதி புனிதமிக்க போரைத் தொடர்ந்திருக்கிறார். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவை. பல்வேறு துறைகளில் அதிக சுயாட்சி தேவை. அப்போதுதான் தவறுகள் இழைக்கும் மத்திய அரசின் பிடியில் சிக்காமல் மாநிலங்கள் பாதுகாப்போடு இருக்க முடியும். இந்த விஷயத்தில் திரு. கருணாநிதி அவர்களின் வாதத்தை முழுவதும் ஒப்புக்கொள்கிறேன். இந்தப் புனிதப் போரில் அவர் வெற்றி பெறுவார் என்று நம்புகிறேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.



நேற்றைய தினம் பஞ்சாபிலே கூட திரு. குரு சரண்சிங் தாரா என்ற நாடாளுமன்ற உறுப்பினர் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாநில சுயாட்சிக் கொள்கைக்கு தன்னுடைய முழு ஆதரவு உண்டு என்றும், தன்னுடைய கட்சியும் அந்தக் குரலை எழுப்பும் என்றெல்லாம் உறுதியாகத் தெரிவித்திருக்கிறார்.

இன்றைக்கு 'வெள்ளையனே வெளியேறு' என்கின்ற தீர்மானத்தை நிறைவேற்றி இந்தியாவை விடுதலைபெற்ற நாடாக ஆக்கிய பெருமைக்குரிய காங்கிரஸ் கட்சி 1942ஆம் ஆண்டு அதனுடைய ஏ.ஐ.சி.சி. கூட்டத்தில் ஆகஸ்ட் மாதம் 8-ந் தேதி அன்று நிறைவேற்றிய தீர்மானம் :

"The c nstitution according to the Congress view should be a federal one, with the largest measure of Autonomy for the federating units with the residuary powers vesting in these units"

வெள்ளையனே வெளியேறு என்று சொன்ன நேரத்தில், இந்திய நாட்டு மக்கள் அத்தனை பேருக்கும், எல்லாப் பகுதிக்கும், காங்கிரஸ் கட்சி வழங்கிய உறுதிமொழி அந்தத் தீர்மானம். மத்திய அரசின் அந்த உறுதிமொழியைத்தான் நிறைவேற்ற வேண்டும் என்று நாம் கேட்கிறோமேயல்லாமல் வேறல்ல. இதிலே "அண்ணா சொன்னாரா இல்லையா? அண்ணா என்ன சொன்னார்?" என்கின்ற வாதங்கள் எல்லாம் எழுந்து இப்பொழுது அண்ணா சொல்லவில்லை என்று சொன்னவர்கள் எல்லாம், "ஆமாம், அண்ணா சொன்னார்" என்கின்ற அளவுக்காவது ஒத்துக்கொண்டு வந்திருக்கின்றார்கள். அண்ணா போன்ற அறிஞர்கள் ஒரு கருத்தை எடுத்துச சொல்கிறார்கள் என்றால், அதற்குப் பின்னால் அவர்களால் வளர்க்கப்பட்டு வருகின்றவர்கள் அதற்கு வடிவம் கொடுப்பதுதான் அவர்களால் நாங்கள் வளர்க்கப்பட்டோம் என்பதற்குச் சரியான சான்றே தவிர, அண்ணா எதற்கோ சொன்னார், எப்பொழுதோ சொன்னார் என்று உதறி விடுவது என்பது அவர்களால் வளர்க்கப்பட்டவர்கள் என்பதற்கு அடையாளம் அல்ல. ஆகவே, அன்றைக்கு அவர்கள் தந்த அந்தச் சொற்களை யெல்லாம் இன்றைக்கு வடிவமாக ஆக்கி அந்தக் கொள்கையை திராவிட முன்னேற்றக் கழகம் மக்கள் மத்தியிலே எடுத்து வைக்கின்றது. அதைத்தான் இந்த அரசின் சார்பிலே நாம் தீர்மானமாக நிறைவேற்றினோம். மேலவையிலும், பேரவையிலும் நீண்ட பெரும் வாதங்களை நடத்தி, அந்தத் தீர்மானத்தை அனுப்பி வைத்திருக்கின்றோம். அதுகூட இன்னும் தீவிரமாக இருக்க வேண்டும் என்கின்ற கருத்தை நமது சிலம்புச் செல்வர் அவர்கள் இங்கே எடுத்துரைத்தார்கள். அண்ணா அவர்கள் ஒன்று சொன்னார்கள். திராவிட நாட்டுக் கோரிக்கையை விட்ட பிறகு, முதலமைச்சராகவே இந்த அவையிலே பேசிய நேரத்தில் 1967 ஜூன் 27 ஆம் நாள் பேரவையிலே பேசும்போது அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

"சிலர் ரொம்ப ஆராய்ந்து உண்மையை கண்டுவிட்டவர்கள் போலப் பேசுகிறார்கள். முன்னாலே நாங்கள் கேட்டுக் கொண்டு வந்த திராவிட நாட்டைத்தான் இன்றைக்கு மத்திய சர்க்காரோடு போராடி பெற்றுவிட சுற்றி வளைத்துக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள், அது தவறு."

அண்ணா யாருக்கு சொல்கிறார் என்று புரிந்து கொள்ளுங்கள். "நான் திராவிட நாட்டு கோரிக்கையை விட்டு விட்டேன். ஆனால் திராவிட நாடு கேட்பதற்கு என்ன என்ன காரணங்கள் இருந்தனவோ அவற்றில் ஒன்றைக்கூட விடவில்லை. அதில் ஒளிவு மறைவு இல்லை. அதைச் சொல்லிக்கொள்வதற்கு வெட்கப்படுவதற்கு ஒன்றும் இல்லை. திராவிட நாடு என்று தனியாக இருந்தால் நாம் தொழில் வளர்ச்சிபெற முடியும் என்று சொன்னோம். திராவிட நாடு வேண்டுமென்று கேட்டதற்கு காரணமே இங்கே தொழில்வளர்ச்சி ஏற்பட வேண்டும், அதை நாங்கள் விட்டுவிடவில்லை. அடுத்து மொழி பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக திராவிட நாடு கேட்டோம். அதை விட்டுவிடவில்லை. மத்திய சர்க்காரிடம் அதிகாரங்கள் குவியலாக இருக்கக்கூடாது என்பதற்காக கேட்டோம். அதை விட்டுவிடவில்லை. மாநில சர்க்கார் பல அதிகாரங்களை பல துறைகளிலும் பெறவேண்டும் என்பதற்காகக் கேட்டோம். அதை நாங்கள் விட்டுவிடவில்லை. பண்பாடு காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகக் கேட்டோம். அதை நாங்கள் விட்டுவிடவில்லை. ஆகவே, திராவிட நாடு நாங்கள் கேட்டதற்கான காரணங்களில் ஒன்றைக்கூட விட்டுவிடவில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால் அவை நியாயமான காரணங்கள். மனமார்ந்து ஏற்றுக் கொண்ட காரணங்கள். நாங்கள் திராவிட நாட்டை விட்டுவிட்டோம். திராவிட நாடு கிடைத்தால் என்ன என்ன பெறுவோமோ அவை ஒவ்வொன்றையும் இந்திய யூனியனின் உள்ளே இருந்தே பெறலாம். பெற வேண்டும், பெற முடியும் என்ற நம்பிக்கையிலேதான் இருக்கிறோமே தவிர திராவிட நாட்டுக்கான காரணங்கள் ஒன்றையும் நாங்கள் விட்டுவிடவில்லை. மாமியார் வீட்டை விட்டுவிட்டான் என்றால் மனைவியை உடன் அழைத்துச் சென்றுவிட்டான் அல்லது வியாழக்கிழமை வா என்று மனைவிக்கு சொல்லி விட்டுக் கிளம்பிவிட்டான் என்பதுதானே தவிர மனைவியையே விட்டுவிட்டான் என்பது அல்ல. நாடு பிளவுபடக்கூடாது என்றார்கள். ஒத்துக்கொண்டோம். தனித்திருந்தால் அன்னியர் தலையீடு ஏற்படும் என்றார்கள். உணர்கிறோம். திராவிட நாட்டைப் பெறுகின்ற காரணத்தினால் ஏற்படக்கூடிய நன்மைகளை உள்ளே இருந்தே பெறலாம் என்றார்கள். அதை நம்புகிறோம். திராவிட நாட்டைக் கைவிட்ட நீங்கள் சேலம் என்றும், தூத்துக்குடி என்றும் பிரதேச மனப்பான்மை காட்டாதீர்கள் என்றால் நாங்கள் ஒத்துக் கொள்ள மாட்டோம். திராவிட நாட்டை கைவிட்ட நீங்கள் இந்தி படித்தால்தான் என்ன என்றால் நாங்கள் ஒத்துக் கொள்ளமாட்டோம். ஆந்திரப் பண்பாடு, கன்னடப் பண்பாடு, வடவர் பண்பாடு, தமிழர் பண்பாடு என்றெல்லாம் பிரித்துப் பிரித்துப் பேசலாமா என்றால் நாங்கள் ஒத்துக்கொள்ள மாட்டோம். திராவிட நாடு எதற்காக வேண்டுமென்றோமோ அதற்கான காரணங்கள் ஒன்றையும் விட்டுவிடவில்லை. அப்படியே வைத்திருக்கிறோம். திராவிட நாடு பிரிந்துபோக வேண்டுமென்ற அளவில் நான் சொல்லவில்லை. இந்த மன்றத்தின் மூலமாக பொதுமக்களுக்கும், பொதுமக்களுக்கு மட்டுமல்லாமல் மத்திய சர்க்காருக்கும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். திராவிட நாட்டை விட்டுவிட்டோம் என்றதாலே காரணங்களையும் விட்டுவிட்டோம் என்பது பொருள்



அல்ல. அந்தக் காரணங்கள் அப்படியே இருக்கின்றன. மத்திய சர்க்காரோடு போராடவில்லை. நமது அரசியல் சட்டத்தின் அடிப்படை பிரிவுகளிலே திருத்தங்கள் வேண்டுமென்பதற்கு வாதாடுகிறேன். அனுபவத்தின் காரணமாக எந்தெந்த வகையில் திருத்தப்பட வேண்டும், எந்தெந்த வகையில் மாற்றப்பட வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்."

(பிற்பகல் 7-10)

இதைத்தான் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்ற பிறகு, 1967-ம் ஆண்டு பேரவையிலே ஆற்றிய சொற்பொழிவிலே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். இதற்காகப் போராட வேண்டாமா? போராட்டம் தேவைதானா? இங்கே திரு. சக்தி மோகன் அவர்கள்கூட சொன்னார்கள். எனக்கே ஆச்சரியமாக இருந்தது. திரு. சுவாமிநாதன் போன்றவர்கள் சொன்னால நான் ஆச்சரியப்பட்டிருக்கமாட்டேன். அவர் எதையும் சற்று நிதானமாகச் சொல்லுவார். ஆனால் இதிலே வேடிக்கை என்னவென்றால், நண்பர் திரு. சுவாமிநாதன் உடனே போராடவேண்டும் என்றும், திரு. சக்தி மோகன் அவர்கள் அவசரப்படக்கூடாது என்றும் சொன்னது சற்று வேடிக்கையாக இருந்தது. திரு. சக்தி மோகன் திரு. முத்துராமலிங்கத் தேவர் அவர்களால் வளர்க்கப்பட்டவர். நமது நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் இராஜாஜி அவர்களாலும் சிலம்புச் செல்வர் அவர்களாலும் வளர்க்கப்பட்டவர். இவர் திடீரென்று போராட வேண்டும் என்றும், அவர் சற்று நிதானமாகப் போகவேண்டும் என்றும் சொன்னதும் சற்று வேடிக்கையாக இருந்தது. ஆனாலும் என்னால் ஒன்றைப் புரிந்துகொள்ள முடிகின்றது. பொறுமையாக இருப்பவர்கள்கூட போராட வேண்டிய கட்டத்திற்கு வந்துவிட்டார்கள் என்ற அளவிற்கு இன்றைய தினம் மத்திய அரசு மாநில அரசினை அவமானப்படுத்திக் கொண்டிருக்கின்றது. எப்படி எப்படி அவமானப்படுத்துகின்றது? பேரவையில்கூட என் அண்ணன் திருப்பூர் மொய்தீன் அவர்கள் பேசியபோது, "இங்கே கோட்டை வெளியில் முளைத்துக்கிடக்கிற புல் பூண்டுகளைச் செதுக்கக்கூட மத்திய அரசிடம் அனுமதி வாங்கவேண்டிய நிலைமை இருக்கின்றது" என்று மிக்க வேதனையோடு குறிப்பிட்டார். சிலர் கேட்டார்கள், "அந்தக் கோட்டை மத்திய அரசுக்குச் சொந்தம், எனவே அனுமதி வாங்கவேண்டாமா? நீங்கள் வாடகைதானே கொடுத்துக் கொண்டிருக்கின்றீர்கள்" என்று. நான்கூடச் சொன்னேன், வாடகை வீட்டில் வசிப்பதாக இருந்தால் கூட, அந்த வீட்டை இடித்துப் புதிதாகக் கட்டுவதாக இருந்தால் அல்லது மிகப் பெரிய மாற்றத்தைச் செய்வதாக இருந்தால்தான், வீட்டிற்குரியவரிடம் அனுமதி வாங்கவேண்டும். ஆனால் வீட்டு வாசலில் உள்ள அழுக்கைப் போக்கக்கூட வீட்டு உரிமையாளரிடம் கேட்கவேண்டுமா? என்று. அதைப்போல இங்குள்ள புல்பூண்டுகளைச் செதுக்குவதற்குக்கூட அப்போது பாதுகாப்புத் துறை துணை அமைச்சராக இருந்த திரு. கிருஷ்ணா அவர்களை நேரடியாக அழைத்து வந்து, இந்த இடங்களைச் சுற்றிக் காட்டி, "இவற்றைச் செதுக்கலாமா?" என்று கேட்டு, "கடிதம் எழுது, யோசிக்கிறேன்" என்று சொல்லி, பிறகு கடிதம் எழுதி, "சரி, செதுக்கு" என்று சொன்ன பிறகு இன்றைக்கு செதுக்கி சீராக்கப்பட்ட இடம்தான்

நீங்கள் கோட்டைக்குப் புறவெளியில் காண்கின்றீர்கள் என்று சொன்னால், இதைவிட அவமானம், இதைவிட அடிமைத்தனம், இதைவிடக் கேவலம் ஒரு மாநில அரசுக்கு இருக்குமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

தஞ்சையில் கட்டப்பட்டுள்ள கோவிலில் அக்கோவிலைக் கட்டிய இராஜராஜ சோழனது சிலையினை வைக்க வேண்டுமென்று கேட்டோம். அனைவரும் கேட்டோம். தமிழ் உணர்ச்சிபடைத்தவர்கள் அனைவருமே கேட்டோம். ஆனால் அவர்கள் "உள்ளே வைக்கக்கூடாது, வேண்டுமானால் வெளியே வைத்துக்கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டார்கள். இன்னும்கூடச் சொன்னோம், அந்தக் கோவிலின் நுழைவாயிலிலாவது வைத்துக்கொள்ளலாமா என்று கேட்டோம். "முடியாது" என்று சொல்லி விட்டார்கள். ம்க்களை ஏமாற்றுவதற்கு அதற்காக என்ன காரணத்தினை அவர்கள் சொன்னார்கள்? "தொன்மையான இடங்களிலே அதனுடைய பழமை கெட்டுவிடக்கூடாது, புதிய சிலைகளை அப்படிப்பட்ட தொன்மையான இடங்களிலே வைத்தால் அதனுடைய வரலாற்றுத் தொன்மை ஊனமுற்றுவிடும், ஆகவே வைக்கக்கூடாது" என்று சொன்னார்கள். பிறகு நான் இந்த விஷயத்தைப் போய் ஒரு பெரிய போராட்டமாக நடத்த வேண்டுமா என்று பலரும் கருத்துக்களைத் தெரிவித்த பிறகு, இராஜராஜ சோழன் சிலையை உள்ளே கொண்டுபோய்த்தான் வைப்போம் என்ற உறுதியிலிருந்துகூட நாம் சற்றுத்தளர்ந்து, அவர்கள் சொன்ன இடத்திற்கும் இன்னும் வெளியிலேயேபோய் இராஜராஜசோழன் சிலையை வைத்தோம். விழா எடுத்தோம். அதற்குப் பிறகு என்ன நடந்திருக்கிறது? இன்றையதினம் வராகியம்மன் சிலை என்கின்ற சிலையை வைப்பதற்குப் புதிய கோவிலைக் கட்டியிருக்கின்றார்கள். அந்தக் கோவிலுக்குள் நான் பத்திரிகையாளர்களிடம், "அதைக் கட்டக்கூடாது" என்றுகூடச் சொல்லவில்லை, "இப்படித் தொன்மை கெடக்கூடாது என்று சொன்னவர்கள், இன்றைக்கு உள்ளேயே ஒரு புதிய கோவிலைக் கட்டியிருக்கின்றார்களே, பின்னர் சோழனுடைய சிலையை வைத்தால் என்ன கெட்டுவிடும்" என்று பத்திரிகையாளர்களிடம் அந்தப் படத்தையும் கொடுத்தேன். உடனே அவசரம் அவசரமாக மத்திய அரசின் தொல்பொருள் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் பத்திரிகையில் மறுப்புவிடும் முறையில் அறிக்கைகளைவிட்டு, பெரிய பெரிய விளம்பரங்களை யெல்லாம் கொடுத்து, "இதைப் புதிதாகக் கட்டவில்லை. அது பழைய கோவில்தான்" என்றெல்லாம் சொன்னார்கள். நான் உடனே நம்முடைய மாநில தொல்பொருள் ஆய்வுத் துறை இயக்குநர் திரு, நாகசாமி அவர்களை நேரில் போய்ப் பார்த்துவிட்டு வாருங்கள் என்று அனுப்பிவைத்தேன். அவர் எனக்கு 8—3—1975-ல் அனுப்பிய தகவலைப் படிக்கின்றேன்:

தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 7—3—1975 அன்று தஞ்சை சென்று, பெரிய கோவிலில் உள்ள வராகி சிற்றாலயத்தைப் பார்வையிட்டேன். கோவிலின் நிழற்படம் எடுக்கப்பட்டது. பெரிய கோயில் பரம்பரை தர்மகர்த்தா இராஜாராம் அவர்களையும் நிர்வாக அதிகாரிகளையும் கண்டு சம்பந்தப்பட்ட கோர்வைகளையும் பார்வையிட்டேன். அதன்படி கீழ்க்கண்ட அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்



பார்வைக்குச் சமர்ப்பிக்கின்றேன்:— "இப்பொழுது புதிதாக எடுக்கப்பட்டுள்ள வராகி கோவில் இருக்கும் இடத்தில் முன்னர் ஒரு செங்கற்சுவர் தான் இருந்தது. இங்கே சுவாமி சன்னதித் தோப்பு இருந்தது. தோப்பின் கீழ்ப்புறத்தில் இச்சுவர் இருந்தது. இச்சுவரில் ஒரு பிறை போன்ற கோட்டத்தில் உடைந்த வாராகி சிலை வைக்கப்பட்டு இருந்தது. அப்பொழுது இவ்வாராகிக்குச் சிறப்பு வழிபாடுகள் எதும் இல்லை. பின்னர் தோப்பில் இருந்த மரங்கள் ஏலத்தில் விடப்பட்டு அகற்றப்பட்டன. செங்கற்சுவர் இடிந்து இருந்ததால் சுவரும் அகற்றப்பட்டது. வாராகி சிலை இருந்த இடத்திலேயே சிறியதாக தகரக் கொட்டகை போன்ற சதுரமான ஒரு அமைப்பும், சுற்றிவர ஒரு மேடும் அமைக்கப்பட்டன. அந்தக் கோவில் தான் இப்போது கருங்கல்லால் புதியதாகக் கட்டப்பட்டுள்ளது. இக்கோவிலைப் புதிய கற்களைப் பயன்படுத்திக் கட்டியுள்ளார்கள். கோவில் அமைப்பிற்குத் தேவையான பகுதிகள் இதில் இடம் பெறவில்லை." என்று குறிப்பிட்டிருக்கின்றார். இந்த வாராகிச் சிலைக்கு சிறப்பு வழிபாடுகள் அப்போதும் இல்லை, இப்போதும் இல்லை. நான் சொன்னதைப்போல, மத்திய தொல்பொருள் கழகத்தினர் "இது புதிதாகக் கட்டப்படவில்லை, பழைய கோவில்தான்" என்று அறிக்கை விட்டார்கள். நமது மாநில அதிகாரி நேரில் சென்று பார்த்துவிட்டு இந்த அறிக்கையினைத் தருகின்றார். நானும் அந்தக் கோவிலுக்குப் பலமுறை போயிருக்கின்றேன். நமது நண்பர் திரு. சுவாமிநாதன் தஞ்சாவூரைச் சேர்ந்தவர்தான். இந்தக் கோபுரத்திற்குப் பக்கத்தில் இப்படி ஒரு கோவில் என்றைக்காவது அங்கே இருந்ததாக யாராவது பார்த்திருக்கமுடியுமா? இல்லை. புதிதாகக் கட்டியிருக்கின்றார்கள். 1973–74-ல் கட்டியிருக்கின்றார்கள். அவர்கள் வைத்துள்ள சிலை இதுதான் (நிழற் படத்தினைக் குறிப்பிட்டு). இராஜராஜ சோழன் சிலையை வைக்கக்கூடாதாம். ஆனால் இந்தப் பன்றி முக உடைந்துபோன சிலை அங்கே வைக்கப்பட்டிருக்கின்றது.

பாராண்ட மன்னன் இராஜராஜ சோழன் சிலைக்கு அங்கே இடம் கிடையாது. ஆனால் பன்றி முக உடைந்துபோன சிலை அங்கே இடம் பெற்றிருக்கின்றது என்றால், இதைவிட மாநில அரசினை அவர்கள் கேவலப்படுத்துவதற்கு வேறு என்ன ஆதாரம் வேண்டும்? திராவிட முன்னேற்றக் கழகம் மாநில சுயாட்சிக்காக எந்த வகையில் போராடும் என்றால், நாங்கள் பாராளுமன்ற முறைப்படி அமைதியான முறையில் அணுகுவோம். அது சரியான ஆயுதம் இல்லை என்கின்ற அளவிற்கு மத்திய சர்க்கார் எங்களைத் தள்ளிவிடுமானால், அப்போது இராஜராஜ சோழன் சிலையைத் தூக்கிக்கொண்டு போய் தஞ்சாவூர் கோவிலுக்குள்ளே நுழைவோம். மாமல்லபுரத்திலே இருக்கின்ற மத்திய சர்க்காருடைய தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தினர் அதை விட்டு வெளியேற வேண்டும் என்று சொல்லுவோம். கங்கைகொண்ட சோழபுரத்திலே இன்றைக்கு இடிபாடுகளுக்கு இடையிலே உள்ள அந்தக் கோவில் இன்னும் பத்தாண்டு காலமானால், அது இருந்த இடமே தெரியாமல், புல் முளைத்துப்போய், இருக்குமிடம் தெரியாமல், எதிர்காலச் சந்ததியினர், பேரன், பேத்தி இவர்களுக்கும் தெரியாமல், இந்த இடம்தான் கங்கை கொண்ட சோழபுரம், இதுதான் கங்கைகொண்ட சோழன் கட்டிய கோவில் என்று எண்ணி, இதைக்கூட நமது மூதாதையர்களால் காப்பாற்ற முடியவில்லையா, இப்படிப் பாழாவதையெல்லாம் அவர்கள் பார்த்துக் கொண்டு

இருந்தார்களா என்று நம்மைச் சபிக்கும். ஆகவே மாநில சுயாட்சி என்றால் மாமல்லபுரம்தான், கங்கைகொண்ட சோழபுரம்தான், வேலூர் கோட்டைதான், தஞ்சை கோவில்தான் என்று வேண்டுமானால் யாராவது நம்மைக் கிண்டல் செய்வதற்குப் பயன்படுத்தலாம். இது தமிழர்களுடைய தன்மானப் பிரச்சினை, எனவேதான் இதை முதலில் வற்புறுத்துகின்றேன். இப்படிப்பட்ட இடங்களையெல்லாம் கூட இன்றைக்கு மத்திய அரசு தங்கள் கையில் வைத்துக்கொண்டு, அவற்றின் சரித்திரம் பற்றிக் கவலைப்படாது உள்ள நிலையில், அவற்றை மாநில அரசிடம் ஒப்படையுங்கள் என்று கேட்டால், அதை இங்குள்ள சுக்கிராச்சாரியார்கள் தடுக்கிறார்கள். நான் வேறு யாரையும் சொல்லுவதாகக் கருதிவிடக் கூடாது. நல்லதைச் செய்வதைத் தடுப்பவர்கள் அவர்கள் என்ற முறையில் குறிப்பிட்டேன். நாம் மாமல்லபுரத்தை ஒரு ஆண்டுகாலத்திற்கு எங்களிடம் கொடுத்துப்பாருங்கள் என்று கேட்கிறோம். நாங்கள் அதை ஏதாவது தொன்மை கெடும்படிச் செய்தால் திரும்ப எடுத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டால், ஒரு யானையைப் போட்டு அதன் மேலே கருணாநிதியின் சிலையை வைத்து, இவர்களிடம் விட்டால், இப்படியெல்லாம் மாறிவிடும் என்று பத்திரிகையில் படம் போடுகின்றார்கள். கட்டபொம்மன் கோட்டையைக் கட்டினோமே, அங்கே என்ன கருணாநிதியின் சிலையையா வைத்தார்கள்? நாவலர் அவர்களுடைய சிலையையோ அல்லது அன்பழகன் அவர்களுடைய சிலையையா வைத்தார்கள்? அல்லது கட்டபொம்மனின் சரித்தை நாட்டிலே பரப்பிய சிலம்புச் செல்வர் அவர்களுடைய சிலையையா வைத்திருக்கின்றார்கள்? மாமல்லபுரத்தை எங்களிடம் கொடுத்தால் அதன் தொன்மையைக் காப்பாற்ற மாட்டோமா? நாங்கள் இப்படிச் சொல்லுவதை சிலர் கிண்டலுக்கு எடுத்துக்கொண்டாலும், நான் முன்பே குறிப்பிட்டபடி, இது தமிழர்களுடைய மானப் பிரச்சினை. மற்ற அதிகாரங்கள் தொடர்ந்து வரவேண்டும் என்பதற்காகத்தான் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் இதை அழுத்தம் திருத்தமாக எடுத்துக்கூறுகிறது. இந்தக் கருத்துக்களுக்கு ஆதரவு தெரிவித்துப் பேசியவர்களையும் அக்கருத்துக்கு மேலும் வலிவூட்டத்தக்க வகையில் மேலும் பல கருத்துக்களை வழங்கியவர்களையும் பாராட்டி இந்த நிதி நிலை அறிக்கையின் மீது சீரிய கருத்துக்களைச் சொன்ன அவ்வளவு பேருக்கும் நன்றிகூறி இந்த அளவில் அமருகின்றேன்.

<u>மாண்புமிகு மேலவைத் தலைவர்</u> : இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 22—3—1975, சனிக்கிழமை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 7-20).





## 8. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

### *A. Statutory Rules and Orders.*

130. Notification issued with G.O. Ms. No. 2583, Rural Development and Local Administration, dated the 6th December 1974, relating to declaration of Mettupalayam as Local Planning Area under section 10 (1) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [*Laid on the table of the House under section* 123 (2) *of the Tamil Nadu Town and Country Planning Act*, 1971 (*Tamil Nadu Act* 35 *of* 1972.]

131. Notification issued with G.O.Ms.No. 96, Rural Development and Local Administration, dated the 22nd January 1975, in regard to inclusion of Public Works Department Circuit House within the jurisdiction of Courtallam Township. [*Laid on the table of the House under section* 4 (3) *of the Courtallam Township Act*, 1954 (*Tamil Nadu Act, XVI of* 1954.]

132. Order issued with G.O. R. No. 374, Commercial Taxes and Religious Endowments, dated the 10th December 1974 exempting from liability to entertainments tax, show tax and additional surcharges on entertainments tax and additional surcharge on show tax the cinemotagraph film shows proposed to be held by the general Manager, Heavy Vehicles Factory, Avadi at Vijayantha Club, one each on 14th December 1974 and 15th December 1974 to raise funds for starting a New School in Heavy Vehicles Factory Estate, Avadi. [*Laid on the table of the House under section* 16 (4) *of the Tamil Nadu Entertainments Tax Act*, 1939 (*Tamil Nadu Act X of* 1939).]

133. Sixteenth Annual Administration Report of the Tamil Nadu Electricity Board for the year 1972-73 (Tamil). [Laid on the Table of the House under section 75 (1) (A) of the Electricity (Supply) Act, 1948) Central Act 54 of 1948.]

### *B. Reports, Notifications and other papers*

51. Notification issued with Memorandum No. 122820/CE/74-2, Rural Development and Local Administration, dated the 16th October 1974, in regard to errata to the Rural Development and

Local Administration Department Notification No. II (2)/RUL/3649 (b)/74, dated the 12th August 1974, published at pages 1 and 2, in Part II—Section 2 of the Tamil Nadu Government Gazette Extraordinary, dated the 12th August 1974.

52. Notification issued with Memorandum No. 164916/ME/74-1, Rural Development and Local Administration, dated the 30th December 1974 in regard to the schedule appended to the Rural Development and Local Administration Department Notification No. II (2) RUL/283/(aai)/74, dated the 18th January 1974, published at pages 10 to 14 of Part II--Section 2 of the Tamil Nadu Government Gazette Extrordinary, dated the 19th January 1974.

53. Returns of Assets of the following Members of the Tamil Nadu Legislative Council as on 31st March 1974 placed on the table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislature on the 28th August 1969:—

1. Thiru A. Ayyanan Ambalam.

2. Thiru M. Masilamani.



இணைப்பு.

(335............ஆம் பக்கத்தில் 156ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

1972–73, 1973–74ஆம் ஆண்டுகளில் சீரணித்திட்டத்தின் கீழ் மாவட்ட வாரியாக கீழ்க்கண்ட தொகை ஒதுக்கப்பட்டது :—

| தொடர் எண். | மாவட்டம். | ஒதுக்கப்பட்ட நிதி. 1972–73. ரூ. | ஒதுக்கப்பட்ட நிதி. 1973–74. ரூ. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | செங்கற்பட்டு | 1,00,000 | 1,09,500 |
| 2. | வடஆற்காடு | 1,10,000 | 1,27,000 |
| 3. | தென்னாற்காடு | 1,10,000 | 1,09,500 |
| 4. | சேலம் | 1,10,000 | 1,12,000 |
| 5. | தர்மபுரி | 77,500 | 60,000 |
| 6. | கோயம்புத்தூர் | 1,10,000 | 1,09,500 |
| 7. | திருச்சிராப்பள்ளி | 1,17,500 | 1,09,500 |
| 8. | தஞ்சாவூர் | 1,12,500 | 1,09,500 |
| 9. | மதுரை | 1,39,000 | 1,09,500 |
| 10. | இராமநாதபுரம் | 1,10,000 | 1,09,500 |
| 11. | திருநெல்வேலி | 1,04,000 | 1,09,500 |
| 12. | கன்னியாகுமரி | 62,500 | 1,05,000 |
| 13. | நீலகிரி | 50,000 | 40,000 |
| 14. | சென்னை | 69,500 | 80,000 |
| | மொத்தம் .. | 13,82,500 | 14,00,000 |

# Index to
# Tamil Nadu Legislative Council
# Debates

FIFTIETH SESSION OF THE LEGISLATIVE COUNCIL
UNDER THE CONSTITUTION OF INDIA.

(5th to 8th, 10th and 11th March 1975.)

VOLUME CXXX (Nos. 1 to 6).

## A


*Pages*

ABDUL WAHAB, Thiru K. S.—
Budget for 1975-76, general discussion on ... 282, 294—299

ACCIDENTS—
Question *re* number of—in which Pallavan Transport Corporation buses were involved ... 14—18

ADJOURNMENT MOTION *re*—
Strike in C.M.C. Hospital, Vellore ... ... 346

AGRICULTURE—
Detailed—Budget for 1975-76, laid on the table. 61

ALAGAR ANAI SCHEME—
*See* Dams.

ANBAZHAGAN, The Hon. Thiru K.—
Budget for 1975-76, general discussion on ... 360

Pages

A—cont.

ANIMAL HUSBANDRY DEPARTMENT—

Question *re* number of doctors in—deputed for Post-Graduate Course in Sheep Husbandry in Australia and International Course in Sheep Husbandry in Australia and New Zealand during 1972-74 ... ... ... ... ... 131—132

ARIVUDAINAMBI, Pulavar O.—

Budget for 1975-76, general discussion on ... 234, 237, 243—251, 279

ARULMIGU ATHITHEESWAR TEMPLE—

*See* Temples.

ARULMIGU RANGANATHASWAMY DEVASTHANAM, SRIRANGAM—

*See* Temples.

ASSISTANT PROFESSORS—

*See* Teachers.

B

BAKKAR, Thiru M. M.—

Budget for 1975-76, general discussion on ... 149—159

BALASUBRAMANIAM, Thiru A.—

Budget for 1975-76, general discussion on ... 163—169, 174

BALASUBRAMANIAM, Thiru Ku. Ma.—

Budget for 1975-76, general discussion on ... 99—103

BILLS—

Cultivating Tenants (Right to Purchase Landowners' Rights) Bill, 1973—

Message from the Assembly *re* nomination of Hon. Thiru A. P. Dharmalingam as additional member of Joint Select Committee on ... ... ... ... ... 138



Pages

B—cont.

BILLS—cont.

Point of order *re* continuance of Joint Select Committee on ... ... ... ... ... 138—140

Occupants of Kudiyiruppu (Confermant of Ownership) Second Amendment Bill, 1974—Message from the Assembly *re* nomination of Hon. Thiru A. P. Dharmalingam as additional member of Joint Select Committee on ... ... ... ... ... 138

BOARD OF REVENUE—

Question *re* Board of Revenue (Land Revenue), retrenchment of candidates recruited by Public Service Commission in 1973 and 1974 to—through Group IV Services Examination ... 336—337

BRIDGES—

Question *re* overbridge across Level Crossing near Ariyalur on Perambalur-Ariyalur Highways, construction of ... ... ... ... 5

BUDGET—

Summary of Financial Position, 1973-74, of Government of Tamil Nadu, laid on the table. 62

BUDGET FOR 1975-76—

General discussion on ... ... ... ... 24—61, 95—116, 149—185, 200—258, 278—318, 352—406

BUSINESS ADVISORY COMMITTEE—

*See* Committees.

C

C.M.C. HOSPITAL, VELLORE—

*See* Hospitals and Dispensaries.

CATTLE FARM—

Question *re* establishment of—in North Arcot district ... ... ... ... ... ... 198

Pages

C—cont.

CEMENT—

Question *re* export of—produced in Tamil Nadu to Uttar Pradesh, Centre's directive *re* ... 11

CENTRAL INVESTIGATION TRAINING SCHOOL—

Question *re* establishment of—in Tamil Nadu ... 4—5

CHAIRMAN, Mr.—

Adjournment motion *re* strike in C.M.C. Hospital, Vellore ... ... ... ... ... ... 346

Announcement *re*—

Message from the Assembly *re* Cultivating Tenants (Right to Purchase Landowners' Rights) Bill, 1973 and Occupants of Kudiyiruppu (Conferment of Ownership) Second Amendment Bill, 1974, nomination of Hon. Thiru A. P. Dharmalingam as additional member of Joint Select Committee on ... 138

Business Advisory Committee's decision ... **346—348**

Budget for 1975-76, general discussion on ... 160, 161, 167, 168, 173, 183, 200, 204, 207, 215, 216, 218, 280, 281, 295, 298, 302, 307, 309, 310, 316, 354, 355, 365, 366, 379, 399

Point of Order *re*—

Continuance of Joint Select Committee on Cultivating Tenants (Rights to Purchase Landowners' Rights) Bill, 1973 ... ... 139, 140

Meeting of Joint Select Committee on Cultivating Tenants (Right to Purchase Landowners' Rights) Bill, 1973 ... ... ... ... 199—200

Privilege issue *re* publication of expunged portion of Council Proceedings in 'Nathigam' **345—346**

COLLEGES—

Assistant Professors working temporarily in Government Arts Colleges with less than Grade 'B' in Post-Graduate Course, Minister's attention called to ineligibility of—for recruitment by Public Service Commission ... ... **18—24**



Pages

C—cont.

COMMITTEES—

Business Advisory Committee, decision of ... 346—348

CONFERENCES—

Information *re* Chief Ministers' Conference at Delhi, decisions regarding import of rice ... 277—278

CO-OPERATIVE SOCIETIES—

Question *re*—

Fishermen Co-operative Society in Madurai district, establishment of ... ... ... 126—131

Kanyakumari district—, complaints regarding distribution of fertilizers ... ... ... 266

Primary Marketing Societies registered in Tamil Nadu from 1971, number of ... ... 329

Small Farmers Co-operative Irrigation Societies in East Ramanathapuram district, number registered and functioning ... ... ... 270—271

COURTALLAM TOWNSHIP ACT, 1954—

Inclusion of Public Works Department Circuit House within jurisdiction of Courtallam Township, notification laid on the table ... ... 407

CULTIVATING TENANTS (RIGHT TO PURCHASE LANDOWNERS' RIGHTS) BILL, 1973—

*See* Bills.

D

DAILY ALLOWANCE—

Question *re* Teacher—Educators in in-service Centre and Trainees, disparity in—paid to ... 79—82

DAM(S)—

Question *re* Alagar Anai Scheme in Srivilliputhur taluk, sanction for ... ... ... ... 119

DAMODARAN, Thiru A. R.—

Budget for 1975-76, general discussion on ... 34—43

Pages

D—cont.

DEPUTY CHAIRMAN—

Budget for 1975-76, general discussion on ... 237, 239, 243, 246, 248, 295

DOCTORS—

See Medical Officers.

DRAINAGE—

Question re underground—system in Madras City to prevent flow of drainage into Cooum and Buckingham Canal, construction of ... 337—340

DRAVIDAMANI, Thiru A.—

Budget for 1975-76, general discussion on ... 55—61

E

EDUCATION—

Question re characterisation of present system of—by Director of Collegiate Education as asphyxiating at Tirunelveli meeting ... ... 194—196

EDUCATIONAL DISTRICT(S)—

Question re—

Including of Rajakkamangalam Circle in Thuckalay—, complaint re ... ... ... 321—323

Lalgudi—, reallocation of ... ... ... 323—324

ELECTRICITY—

Question re—

High Level Meeting in Hogenekal in June 1974 between representatives of Governments of Karnataka and Tamil Nadu, decisions at ... 135—138

Samayanallur Thermal Station site, utilization of ... ... ... ... ... ... 330—331

ELECTRICITY BOARD, TAMIL NADU—

Serious situation caused by abrupt demand on all consumers for four months' deposit based on November 1974 consumption, Minister's attention called to ... ... ... ... 140—145



Pages

E—cont.

ELECTRICITY BOARD, TAMIL NADU—cont.

Sixteenth Annual Administration Report of—for 1972-73, laid on the table ... ... ... 407

ENTERTAINMENTS TAX—

Exemption of cinematograph film shows by General Manager, Heavy Vehicles Factory, Avadi at Vijayantha Club on 14th and 15th December 1974 from—, show tax and additional surcharge, notification laid on the table ... 407

F

FAMILY PLANNING—

Question re incentives to persons undergoing—operations like allotment of cement, rice, etc. 82—84

FOOD—

Question re—

Hoarding of food and other essential commodities, number of persons prosecuted in Ramanathapuram district from March to June 1974 and seizure of essential commodities ... ... ... ... ... ... 7—8

Paddy procured by Civil Supplies Corporation from 1st September 1973 to 31st August 1974, quantity procured, cost of procurement and net profit ... ... ... ... ... 267—270

FORESTS—

Question re cutting of teakwood, Otti and Ayiani trees in—, after prescribed period ... ... 90—91

FUEL OIL—

Question re factory for the manufacture of—from coal, approaching Central Government for establishment of ... ... ... ... ... 272

Pages

G

GANAPATHI, Thiru K. S.—

Non-teaching staff of Aided High Schools, calling attention to termination of services due to implementation of G.O. Ms. No. 168, Education, dated 5th February 1968 ... ... ... 275, 276, 277

Thaladi Paddy, calling Minister's attention to high quantity of levy in Thanjavur and Tiruchirappalli districts ... ... ... ... 348, 349, 350

GEORGE KOMAGAN, Thiru—

Budget for 1975-76, general discussion on ... 177—178, 284, 313—318

GHERAO—

Question *re* gherao of Deputy Chief Accounts Officer in Revenue Unit Office, Podanur on 31st May 1974 ... ... ... ... ... ... 331—335

H

HEADMASTERS—

*See* Teachers.

HINDU RELIGIOUS AND CHARITABLE ENDOWMENTS (THIRD AMENDMENT) ACT, 1974—

Date of coming into force of—, notification laid on the table ... ... ... ... ... 117

HOGENAKAL PROJECT—

*See* Electricity.

HOSPITALS AND DISPENSARIES—

Adjournment motion *re* strike in C.M.C. Hospital, Vellore ... ... ... ... ... ... 346

HOSTEL(S)—

Hostel for Narikurava students at Saidapet, Minister's attention called to imminent closure of—due to non-sanction of financial aid to ... 145—149

HOUSING—

Question *re* cheating under pretext of providing on instalment basis in Madras ... ... **73—74**



Pages

I

ILAMPARITHI, Thiru—

Budget for 1975-76, general discussion on ... 103—111

INDIAN STAMP ACT, 1899—

Remission of stamp duty on sale deed in favour of Panchayat Union, Ponnamaravathi, notification laid on the table ... ... ... ... 319

INDUSTRIES—

Detailed—Budget for 1975-76, laid on the table. 62

IRRIGATION—

Detailed—Budget for 1975-76, laid on the table. 62

K

KANDARATHITHAN TANK—

*See* Tank(s).

KARUNANIDHI, The Hon. Dr. M.—

Budget for 1975-76, general discussion on ... 30, 31, 32, 108, 109, 115, 116, 153, 163, 168, 174, 175, 219, 221, 222, 297, 307, 308, 309, 381—406

Hostel for Narikurava students at Saidapet—

Statement *re* imminent closure of—due to non-sanction of financial aid to ... ... ... 148—149

Information *re*—

Chief Ministers' Conference at Delhi, decisions regarding import of rice ... ... ... 278

Flying of Police Flag instead of National Flag in Office of Inspector-General of Police ... 351—352

KOLAPPA, Thiru C. R.—

Budget for 1975-76, general discussion on ... 111—115

Pages

K—*cont.*

KUNDRAKKUDI ADIGALAR, Thavathiru—

Budget for 1975-76, general discussion on ... 300—305

Hostel for Narikurava students at Saidapet, calling Minister's attention to imminent closure of —due to non-sanction of financial aid to ... 145—146, 148

L

LANDS—

Question *re* assignment of—to the landless in Ramanathapuram district from 1970 to November 1974, details *re* ... ... ... ... 9—11

M

MADHAVAN, The Hon. Thiru M.—

Thaladi Paddy, statement *re* high quantity of levy in Thanjavur and Tiruchirappalli districts ... ... ... ... ... ... ... ... 348—349, 350

MASILAMANI, Thiru M.—

Budget for 1975-76, general discussion on ... 240

Information *re* flying of Police Flag instead of National Flag in Office of Inspector-General of Police ... ... ... ... ... ... 351

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—

Assistant Professors working temporarily in Government Arts Colleges with less than Grade 'B' in Post-graduate Course, calling attention to ineligibility of—for recruitment by Public Service Commission ... ... ... ... 18—24

Electricity Board, Tamil Nadu, calling attention to serious situation caused by abrupt demand on consumers for four months' deposit based on November 1974 consumption by ... ... 140—145



Pages

M—*cont.*

MATTER OF URGENT PUBLIC IMPORTANCE—*cont.*

Hostel for Narikurava students at Saidapet, calling attention to imminent closure of—due to non-sanction of financial aid to ... ... 145—149

Non-teaching staff of Aided High Schools with four years of service and more, calling attention to termination of services due to implementation of G.O. Ms. No. 168, Education, dated 5th February 1968 ... ... ... ... 275—277

Tamil Pandits, Grade II, in Government 'A' Wing High Schools and Tamil Pandits, Grade I in Pudukottai Town, calling attention to non-payment of B.T. scale of pay to ... ... 91—95

Teachers in Panchayat Union and Private Schools, calling attention to non-sanction of surrender leave and 18 months' medical leave with full pay, etc., to ... ... ... ... ... ... 92—95

Thaladi Paddy, calling attention to high quantity of levy in Thanjavur and Tiruchirappalli districts ... ... ... ... ... ... 348—350

MEDICAL OFFICERS—

Question *re* Animal Husbandry Department Doctors deputed to undergo Post-graduate course training in Sheep Husbandry in Australia and International Course in Sheep Husbandry in Australia and New Zealand during 1972-74, number of ... ... ... ... 131—132

MEMBERS OF LEGISLATURE—

Return of assets of Thiru A. Ayyanan Ambalam and M. Masilamani, M.L.C.'s as on 31st March 1974 ... ... ... ... ... ... ... 408

MESSAGE FROM THE ASSEMBLY—

*See* Bills.

MOTOR VEHICLES RULES, 1940—

Amendment to—, notification laid on the table 117

Pages

M—*cont.*

MOTOR VEHICLES TAX—

Exemption of certain goods vehicles of private carriers operating on routes partly in Kerala and partly in Tamil Nadu from—, notification laid on the table ... ... ... ... ... 117

Increase of tax on stage carriages and contract carriages, notification laid on the table ... 318

Reduced rate of tax on lorry MDN 2762, notification laid on the table ... ... ... ... 116

MUTHUSWAMY, Thiru S.—

Budget for 1975-76, general discussion on ... 24—34

Tamil Pandits, Grade II in Government 'A' Wing High Schools and Tamil Pandits, Grade I, in Pudukottai Town, calling Minister's attention to non-payment of B.T. scale of pay to ... 92—93, 94

Teachers in Panchayat Union and Private Schools, calling Minister's attention to non-sanction of surrender leave and 18 months' medical leave with full pay, etc., to ... ... 92—93, 94

N

NARAYANASAMY, The Hon. Thiru Mannai P.—

Budget for 1975-76, general discussion on ... 222

NARAYANASWAMY, Thiru S.—

Electricity Board, Tamil Nadu, calling Minister's attention to serious situation caused by abrupt demand made on consumers for four months' deposit based on November 1974 consumption by ... ... ... ... ... ... ... 140, 142—143, 145

NATIONAL FLAG—

Information *re* flying of Police flag instead of—in Office of Inspector-General of Police ... 351—352

NEDUNCHEZHIYAN, The Hon. Dr. V. R.—

Assistant Professors working temporarily in Government Arts Colleges with less than Grade 'B' in Post-graduate Course, Statement *re* ineligibility of—for recruitment by Public Service Commission ... ... ... ... ... 19—20, 21, 22, 23, 24



Pages

N—*cont.*

NEDUNCHEZHIYAN, The Hon. Dr. V. R.—*cont.*

Budget for 1975-76, general discussion on ... 33, 222

Non-teaching staff of Aided High Schools, statement *re* termination of services due to implementation of G.O. Ms. No. 168, Education, dated 5th February 1968 ... ... ... ... 276—277

Tamil Pandits, Grade II in Government 'A' Wing High Schools and Tamil Pandits, Grade I in Pudukkottai Town, statement *re* non-payment of B.T. scale of pay to ... ... ... ... 91—92, 93, 94, 95

Teachers in Panchayat Union and Private Schools, statement *re* non-sanction of surrender leave and 18 months medical leave with full pay, etc., to, ... ... ... ... ... 93, 94, 95

O

OCCUPANTS OF KUDIYIRUPPU (CONFERMENT OF OWNERSHIP) SECOND AMENDMENT BILL, 1974—

*See* Bills.

P

PADDY—

Thaladi—, Minister's attention called to high quantity of levy in Thanjavur and Tiruchirappalli districts ... ... ... ... ... 348—350

*See* Food.

PANCHAYAT UNIONS—

Question *re* representation from—for permission to appoint teachers according to requirements. 340—341

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—

Agriculture, Detailed Budget for 1975-76 ... 61

Budget of Government of Tamil Nadu, summary of Financial Position, 1973-74 ... ... ... 62

PAGES.

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Courtallam Township Act, 1954, inclusion of Public Works Department Circuit House within jurisdiction of Courtallam Township—(G.O. Ms. No. 96, Rural Development and Local Administration, dated 22nd January 1975) ... 407

Electricity Board (Tamil Nadu), Sixteenth Annual Administration Report for 1972-73 ... 407

Entertainments tax, exemption of cinematograph film shows by General Manager, Heavy Vehicles Factory, Avadi at Vijayantha Club on 14th and 15th December 1974 from—, show tax and additional surcharge—(G.O. R. No. 374, Commercial Taxes and Religious Endowments, dated 10th December 1974) ... ... ... ... 407

Hindu Religious and Charitable Endowments (Third Amendment) Act, 1974, date of coming into force of—(G.O Ms. No. 787, Commercial Taxes and Religious Endowments, dated 28th December 1974) ... ... ... ... ... 117

Indian Stamp Act, 1899, remission of stamp duty on sale deed in favour of Panchayat Union, Ponnamaravathi—(G.O. Ms. No. 31, Commercial Taxes and Religious Endowments, dated 10th January 1975) ... ... ... ... 319

Industries, Detailed—Budget for 1975-76 ... 62

Irrigation, Detailed—Budget for 1975-76 ... 62

Motor Vehicles Rules, 1940, amendment to—(G.O. Ms. No. 2760, Home, dated 4th December 1974) ... ... ... ... ... ... 117

Motor Vehicles Tax—

Exemption of certain goods vehicles of private carriers operating on routes partly in Kerala State and partly in Tamil Nadu from—(G.O. Ms. No. 2297, Home, dated 24th September 1974) ... ... ... ... ... ... 117

Increase of tax on Stage Carriages and Contract Carriages—(G.O. Ms. No. 2889, Home, dated 31st December 1974) 318



P—*cont.*

Pages

PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE—*cont.*

Motor vehicles tax—*cont.*

Reduced rate of tax on lorry MDN 2762—(G.O. Ms. No. 2557, Home, dated 31st October 1974) ... ... ... ... ... ... 116

Parks, Play-fields and Open Spaces (Preservation and Regulation) Act, 1959, approved list of open spaces and parks within Thanjavur Municipal limits, variation in—(G.O. Ms. No. 2232, Rural Development and Local Administration, dated 16th October 1974) ... ... ... ... 116

Return of assets of Thiru A. Ayyanan Ambalam and Thiru M. Masilamani, M.L.C.'s as on 31st March 1974 ... ... ... ... ... 408

Roads and Bridges, Detailed—Budget for 1975-76. 61

Rural Development and Local Administration Department Notification No. II (2)/RUL/3649 (*b*)/74, dated 12th August 1974, errata to—(Memorandum No. 122820/CE/74-2, Rural Development and Local Administration, dated 16th October 1974) ... ... ... ... 407—408

Rural Development and Local Administration Department Notification No. II (2)/RUL/283/(*aai*)/74, dated 18th January 1974, schedule appended to—(Memorandum No. 164916/ME/74-1, Rural Development and Local Administration, dated 30th December 1974) ... ... 408

Town and Country Planning Act, 1971—

Declaration of Kadayanallur as Local Planning Area under—(G.O. Ms. No. 677, Rural Development and Local Administration, dated 16th March 1974) ... ... ... ... 319

Declaration of Madurantakam as Local Planning Area under—(G.O. Ms. No. 2657, Rural Development and Local Administration, dated 18th December 1974) ... ... ... ... 318—319

Declaration of Mettupalayam as Local Planning Area under—(G.O. Ms. No. 2583, Rural Development and Local Administration, dated 6th December 1974) ... ... ... ... 407

Pages

P—*cont.*

PARKS, PLAY-FIELDS AND OPEN SPACES (PRESERVATION AND REGULATION) ACT, 1959—

Approved list of open spaces and parks within Thanjavur Municipal limits, variation in—, notification laid on the table ... ... 116

PICK-POCKETING—

Question *re* number of persons apprehended in Madras City during 1973 for—in buses ... 3—4

PLANNING COMMISSION, STATE—

Question *re* number of posts and their scales of pay ... ... ... ... ... ... ... 1—2

POINT OF ORDER *re*—

Meeting of Joint Select Committee on Cultivating Tenants (Right to purchase Landowners' Rights) Bill, 1973 ... ... ... ... 199—200

PRIMARY MARKETING SOCIETIES—

*See* Co-operative Societies.

PRIVILEGE ISSUE *re*—

Publication of expunged portion of Council Proceedings in 'Nathigam' ... ... ... 345—346

PROCEEDINGS OF THE COUNCIL—

Privilege issue *re* publication of expunged portion of—in 'Nathigam' ... ... ... ... 345—346

PROSPERITY BRIGADE SCHEME—

Question *re* amount allotted during 1972-73 and 1973-74, districtwise, under ... ... ... 335—336

Q

QUESTIONS AND ANSWERS—

Arivazhagan, Thiru K.—

Question *re*—

Secondary Grade Teachers promoted to Selection Grade from January 1971, loss in emoluments of ... ... ... ... 77



Q—*cont.*

Pages

QUESTIONS AND ANSWERS—*cont.*

Arivazhagan, Thiru K.—*cont.*

Question *re*—*cont.*

Tamil Nadu Inter-Collegiate Employees Welfare Association, representation to Education Minister at its First Conference on 11th February 1973 ... ... ... ... 263—266

Arumugaswami, Thiru M.—

Question *re* State Planning Commission, number of posts and their scales of pay ... 1—2

Ayyanan Ambalam, Thiru A.—

Question *re* Fishermen Co-operative Society in Madurai district, establishment of ... ... 126—131

Balaraman, Thiru L.—

Question *re*—

Arulmigu Athitheeswarar Temple in Devasthanam village, Vaniambadi taluk, renovation of ... ... ... ... ... 344—345

Cattle Farm in North Arcot district, establishment of ... ... ... ... 198

Housing, cheating under pretext of providing on instalment basis in Madras ... ... 73—74

Prosperity Brigade Scheme, amount allotted during 1972-73 and 1973-74, districtwise ... ... ... ... ... ... 335—336

Sodium Dichromate Factory in Ranipet, amount invested towards machines and buildings and installed capacity ... ... 272—273

Balasubramaniam, Thiru A.—

Question *re* wells in Salem district, Engineer's note *re* deepening of ... ... ... ... 120

Pages

QUESTIONS AND ANSWERS—*cont.*

D'Monte, Thiru D. V.—

Question *re*—

Accidents in which Pallavan Transport Corporation buses were involved, number of. 14—15

Panchayat Unions, representation for permission to appoint teachers according to requirements ... ... ... ... ... 340—341

Primary Marketing Societies registered in Tamil Nadu from 1971, number of ... 329

Ganapathi, Thiru K. S.—

Question *re*—

Animal Husbandry Department Doctors deputed to undergo Post-Graduate Course training in Sheep Husbandry in Australia and International Course in Sheep Husbandry in Australia and New Zealand during 1972-74, number of ... ... 131—132

Apprentice Secondary Grade Teachers in Tiruchirappalli Revenue district appointed after 1st June 1972, non-sanction of teaching grant to ... ... ... ... ... 196—197

Arulmigu Ranganathaswami Devasthanam, Srirangam, non-filling of two posts of trustees in ... ... ... ... ... 341—344

Director of Collegiate Education, characterisation of present educational system as asphyxiating at Tirunelveli meeting ... 194—196

Ex-District Board Elementary School Teachers absorbed in Panchayat Union Service, counting previous service for seniority ... ... ... ... ... 124—125

Family Planning operations, incentives to persons undergoing—like allotment of cement, rice, etc. ... ... ... ... 82—84

Lalgudi Educational district, re-allocation of ... ... ... ... ... ... 323—324



PAGES.

QUESTIONS AND ANSWERS—*cont.*

Ganapathi, Thiru K. S.—*cont.*

Question *re*—*cont.*

Paddy procured by Civil Supplies Corporation from 1st September 1973 to 31st August 1974, quantity of—, cost of procurement and net profit ... ... ... 267—270

Selection Grade scales of pay to B.T. Assistants, counting service under different managements as in the case of secondary grade and specialist teachers for ... ... 325

State Transport Department and Transport Corporations, concession in bus fares to teachers and students on educational tours and excursions ... ... ... ... 12—14

Tamil Nadu Industrial Investment Corporation, fall in profits of ... ... ... 89—90

Kundrakkudi Adigalar, Thavathiru—

Question *re*—

Arulmigu Sankaramurthy Nainar Koil at Courtallam, Tirunelveli district, representation to bring—under control of Hindu Religious and Charitable Endowments (Administration) Department ... ... 273—274

Assistant Commissioners of Hindu Religious and Charitable Endowments (Administration) Department, delegation of powers analogous to Sub-Registrars of Co-operative Societies to—to recover arrears due to temples ... ... ... ... ... 274—275

Government High School at Nemili, North Arcot district, refusal of admission for not mentioning caste name ... ... 74—76

Kandarathithan Tank, Ariyalur taluk, Tiruchirappalli district, desilting of ... ... 328—329

Pages

QUESTIONS AND ANSWERS—*cont.*

Kundrakkudi Adigalar, Thavathiru—*cont.*

Question *re*—*cont.*

Medical examination of school children, districts where scheme introduced ... 84—88

Small Farmer's Co-operative Irrigation Societies in East Ramanathapuram district, number registered and functioning ... 270—271

Temple properties, representation *re* removal of time-limit for redemption of ... ... 132—134

Muthuswamy, Thiru S.—

Question *re* Board of Revenue (Land Revenue), retrenchment of candidates recruited to—by Public Service Commission in 1973 and 1974 through Group IV Services Examination ... ... ... ... ... ... 336—337

Ramakrishna Thevar, Thiru S.—

Question *re* lands assigned to the landless in Ramanathapuram district from 1970 to November 1974, details *re* ... ... ... 9—11

Sankaralingam, Thiru M.—

Question *re*—

Cement produced in Tamil Nadu, Centre's directive to export—to Uttar Pradesh ... 11

Government Forests, cutting of teakwood, etti and ayiani trees after prescribed period ... 90—91

Kanyakumari District Co-operative Societies, complaints regarding distribution of fertilisers ... ... ... ... ... 266

Protected Drinking Water-supply Scheme in Tirur Town Panchayat, completion of survey *re* ... ... ... ... ... 125—126

Rajakkamangalam Circle, complaint *re* inclusion in Thuckalay Educational district ... 321—323

Tamil Nadu Typists and Steno-typists' Association, representation from ... ... 74



Pages

QUESTIONS AND ANSWERS—*cont.*

Sankaralingam, Thiru M.—*cont.*

Question *re*—

Tamil Pandits, Grade I, Tirunelveli district, non-sanction of increments to those promoted as—after 1st April 1970 ... ... 78—79

Tanks, implementation of Special Minor Irrigation Programme for deepening of—in Kanyakumari district under ... ... 326—328

Underground Drainage System in Madras City to prevent flow of drainage into Cooum River and Buckingham Canal, construction of ... .. ... ... 337—340

SANTOSHAM, THIRU D.—

Question *re*—

Alagar Anai Scheme in Srivilliputhur taluk, sanction for ... ... ... ... ... 119

Samayanallur Thermal Station site, utilization of ... ... ... ... ... 320—321

SWAMINATHAN, THIRU G.—

Question *re*—

Deputy Chief Accounts Officer in Revenue Unit Office, Podanur, gherao of—on 31st May 1974 ... ... ... ... ... 331—335

High Level Meeting in Hogenekal in June 1974 between representatives of Governments of Karnataka and Tamil Nadu, decisions at ... ... ... ... ... 135—138

Pick-pocketing in buses in Madras City, number of persons apprehended during 1973 ... ... ... ... ... ... 3—4

Teacher-educators in in-service Centres and trainees, disparity in daily allowance paid to ... ... ... ... ... ... 79—82

THANGAPANDIAN, THIRU V.—

Question *re* hoarding of food and other essential commodities, number of persons prosecuted in Ramanathapuram district from March to June 1974 and seizure of essential commodities ... ... ... ... ... 7—8

Pages

QUESTIONS AND ANSWERS—*cont.*

THOMAS, THIRU P. R.—

Question *re*—

Craft teachers, appeal by Craft Teachers' Association to make them full-time ... 259—262

Craft teachers having passed B.A. Degree Examination, permission to join shortened B.Ed. Course ... ... ... ... ... 262—263

Engineering Staff Members in Bifurcated Courses of Study, sanction of Selection Grade posts for ... ... ... ... 197—198

Headmasters of High Schools, renewal of duty allowance and sanction of Selection Grade scale of pay to ... ... ... 76

Secondary Grade Teachers qualified as B.T. Assistants, awaiting posting, number of ... 189—194

Teachers charged with possessing bogus certificates, number of—affected ... 187—189

Teacher-educators in in-service Centres and trainees, disparity in daily allowance paid to ... ... ... ... ... ... 79—82

Tourist Reception Centre near Madurai Railway Junction, opening of ... ... ... 326

VENKATESWARA DIKSHIDAR, THIRU Y.—

Question *re*—

Central Investigation Training School, establishment of—in Tamil Nadu ... ... 4—5

Drinking water scarcity in Madras City, emergency scheme to relieve—before execution of Veeranam Project ... ... 120—124

Factory for manufacture of fuel oil from coal, approaching Central Government for establishment of ... ... ... ... 272

'Mottai Gopuram' inam dry lands donated for 'Panguni Uthiram' festival to Thiruvarangam temple, alienation of ... ... 135



Pages

QUESTIONS AND ANSWERS—*cont.*

WILSON APPOLLOS, THIRU—

Overbridge across level crossing near Ariyalur on Perambalur-Ariyalur Highways, construction of ... ... ... ... 5

Question *re* Sub-way near Shanthi Theatre in Anna Salai, construction of ... ... ... 6—7

R

RAJAGOPAL, THIRU C. V.—

Budget for 1975-76, general discussion on ... 157, 167, 169—180, 310, 355

Electricity Board, Tamil Nadu, calling Minister's attention to serious situation caused by abrupt demand from consumers for four months' deposit based on November 1974 consumption by. 145

RAJAKKAMANGALAM EDUCATIONAL CIRCLE—

Question *re* inclusion of—in Thuckalay educational district, complaint *re* ... ... ... 321—323

RAJAMANICKAM, THIRU S. A.—

Budget for 1975-76, general discussion on ... 43—51, 281

RAJANGAM, THE HON. THIRU N.—

Budget for 1975-76, general discussion on ... 235—236

Hostel for Narikurava students at Saidapet, statement *re* imminent closure of—due to non-sanction of financial aid to ... ... ... 146—147, 148

RAJARAM, THIRU K.—

Budget for 1975-76, general discussion on ... 108, 109, 159, 170, 171, 174, 175, 177, 178, 179, 206—207, 293, 307, 355, 359, 373—380

Point of Order *re*—

Continuance of Joint Select Committee on Cultivating Tenants (Right to Purchase Landowners' Rights) Bill, 1973 ... ... 139

Meeting of Joint Select Committee on Cultivating Tenants (Right to Purchase Landowners' Rights) Bill, 1973 ... ... ... ... 199

*Pages*

RAMAKRISHNA THEVAR, THIRU S.—
Budget for 1975-76, general discussion on ... 305—312

RAMANATHAN, THIRU M.—
Budget for 1975-76, general discussion on ... 284—294

RAMA SUBBIAH, THIRU—
Budget for 1975-76, general discussion on ... 256—258

RAMASWAMI PADAYATCHI, THIRU S. S.—
Budget for 1975-76, general discussion on ... 223—231

RICE—
*See* Food.

ROADS AND BRIDGES—
Detailed—Budget for 1975-76, laid on the table. 61

RULINGS AND OBSERVATIONS OF THE CHAIR—

Call-Attention Notice—
A member who calls the attention of the Minister can put only two questions after the Minister's reply ... ... ... ... 24, 145

Bills—
Cultivating Tenants (Right to Purchase Landowners' Rights) Bill—When a Member pointed out that the Bill having not been re-considered within six months from the date of return of the Bill by the Governor, the Bill had lapsed and the Joint Select Committee on the Bill was defunct and sought to know whether he should attend the meeting of the Joint Select Committee, the Chairman observed:

"The point raised by the hon. Member seems to have some force. However, as the Joint Select Committee is a Committee of the Legislative Assembly, it is for the Com-



*Pages*

RULINGS AND OBSERVATIONS OF THE CHAIR—*cont.*

Bill—*cont.*
mittee and the Hon. Speaker of the other House to consider the point raised by the hon. Member Thiru G. Swaminathan. As far as this House is concerned, it would be premature now and hence I am not giving my ruling. This can be raised by the hon. Member if the same Bill comes up before the House again" ... ... ... 199, 200

Debate—
Grievances of private individuals should not be ventilated in the House ... ... ... 31

Members should not read out their speeches but may have hints in their hands ... ... 105

Decorum—
Members may sleep in the House but not snore. 246

Privilege Issue *re*—
Publication of expunged portions of the Council proceedings in "Nathigam"—The Chairman informed the House that he would write to the publisher and editor of the paper and that the matter might be examined after receipt of an explanation from them ... 346

RURAL DEVELOPMENT AND LOCAL ADMINISTRATION DEPARTMENT NOTIFICATION No. II (2)/RUL/283 (*aai*)/74, DATED 18TH JANUARY 1974—

Schedule appended to—,notification laid on the table ... ... ... ... ... ... 408

Pages

R—cont.

RURAL DEVELOPMENT AND LOCAL ADMINISTRATION DEPARTMENT NOTIFICATION No. II (2)/RUL/3649 (b)/74, DATED 12TH AUGUST 1974—
Errata to—, notification laid on the table ... 407—408

RUSSEL RAJ, THIRU C.—
Budget for 1975-76, general discussion on ... 95—99

S

SADIQ PASHA, THE HON. THIRU S. J.—
Budget for 1975-76, general discussion on ... 156, 157, 158, 236
Electricity Board, Tamil Nadu, statement *re* serious situation caused by abrupt demand on consumers for four months' deposit based on November 1974 consumption by ... ... 140—142, 143, 144, 145

SAKTHI MOHAN, THIRU R.—
Budget for 1975-76, general discussion on ... 352—358

SAMAYANALLUR THERMAL STATION—
Question *re* utilization of site of ... ... ... 330—331

SCHOOLS—
Question *re*—
Government High School at Nemili, North Arcot district, refusal of admission for not mentioning caste name ... ... ... 74—76
Medical examination of school children, districts where scheme introduced ... ... 84—88
Non-teaching staff of Aided High Schools with four years of service and more, Minister's attention called to termination of services due to implementation of G.O. Ms. No. 168, Education, dated 5th February 1968 ... ... 275—277



S—cont.

Pages

SHANMUGAM, THE HON. THIRU P. U.—
Budget for 1975-76, general discussion on ... 218

SIVAGNANAM, THIRU M. P.—
Budget for 1975-76, general discussion on ... 355, 360—373
Information *re* flying of Police Flag instead of National Flag in Office of Inspector-General of Police ... ... ... ... ... ... 351

SODIUM DICHROMATE FACTORY, RANIPET—
Question *re* amount invested in—towards machines and buildings and installed capacity. 272—273

SUB-WAY—
Question *re*—near Shanthi Theatre in Anna Salai, construction of ... ... ... ... ... 6—7

SUNDARESA THEVAR, THIRU N.—
Budget for 1975-76, general discussion on ... 201, 231—240

SWAMINATHAN, THIRU G.—
Assistant Professors working temporarily in Government Arts Colleges with less than Grade 'B' in Post-Graduate Course, calling Minister's attention to ineligibility of—for recruitment by Public Service Commission. 18, 21, 22, 23
Budget for 1975-76, general discussion on ... 33, 157, 171, 178, 204, 207—223, 234, 236, 237, 290, 316
Electricity Board, Tamil Nadu, calling Minister's attention to serious situation caused by abrupt demand on consumers for four months' deposit based on November 1974 consumption by... 140, 143, 144, 145

T—*cont.*

Pages

TEACHERS—*cont.*

Question *re*—*cont.*

Headmasters of High Schools, renewal of duty allowance and sanction of Selection Grade scale of pay to ... ... ... ... ... 76

Number of—charged with possession of bogus certificates ... ... ... ... ... 187—189

Secondary Grade—qualified as B.T. Assistants awaiting posting, number of ... ... 189—194

Secondary Grade teachers promoted to Selection Grade from January 1971, loss in emoluments of ... ... ... ... ... 77

Tamil Pandits, Grade I, in Tirunelveli district, non-sanction of increments to those promoted as—after 1st April 1970 ... ... ... 78—79

Teacher-educators in in-service centres and trainees, disparity in daily allowance paid to ... ... ... ... ... ... ... 79—82

Tamil Pandits, Grade II in Government 'A' Wing High Schools and Tamil Pandits, Grade I in Pudukottai Town, Minister's attention called to non-payment of B.T. scale of pay to ... ... 91—95

Teachers in Panchayat Union and Private Schools, Minister's attention called to non-sanction of surrender leave and 18 months medical leave with full pay, etc., to ... ... ... ... 92—95

TEMPLE(S)—

Question *re*—

Arulmigu Athitheeswar Temple, Devasthanam village, Vaniambadi taluk, renovation of ... 344—345

Arulmigu Ranganathaswamy Devasthanam, Srirangam, non-filling of two posts of trustees in ... ... ... ... ... ... 341—344

Arulmigu Sankaramurthy Nainar Koil at Courtallam, Tirunelveli district, representation to bring—under control of Hindu Religious and Charitable Endowments (Administration) Department ... ... ... 273—274



T—*cont.*

Pages

TEMPLE(S)—*cont.*

Question *re*—*cont.*

Assistant Commsisioner of Hindu Religious and Charitable Endowments (Administration) Department, delegation of powers analogous to Sub-Registrars of Co-operative Societies to—to recover arrears due to temples ... 274—275

'Mottai Gopuram' inam dry lands donated for Panguni Uthiram festival to Thiruvarangam temple, alienation of ... ... ... ... 135

Temple properties, representation *re* removal of time-limit for redemption of ... ... 132—134

THAMIZHARASI, SELVI C.—

Budget for 1975-76, general discussion on ... 169, 251—256

THANGAVEL, THIRU A.—

Budget for 1975-76, general discussion on ... 180—185

THOMAS, THIRU P. R.—

Budget for 1975-76, general discussion on ... 51—55

TOURISM—

Question *re* Tourist Reception Centre near Madurai Railway Junction, opening of ... 326

TOWN AND COUNTRY PLANNING ACT, 1971—

Declaration of Kadayanallur as Local Planning Area under—, notification laid on the table ... 319

Declaration of Madurantakam as Local Planning Area under—, notification laid on the table ... 318—319

Declaration of Mettupalayam as Local Planning Area under—, notification laid on the table ... 407

TRANSPORT—

Question *re* concession in bus fares to teachers and students on educational tours and excursions in State Transport and other Transport Corporation buses ... ... ... ... 12—14

Pages

V

VASANTHA PAI, THIRU G.—
Budget for 1975-76, general discussion on ... 200—207
Electricity Board, Tamil Nadu, calling Minister's attention to serious situation caused by abrupt demand on consumers for four months' deposit based on November 1974 consumption by ... 140

VENGA, THIRU V.—
Budget for 1975-76, general discussion on ... 183—184, 278, 284, 289, 314—315, 367
Information *re* flying of Police Flag instead of National Flag in Office in Inspector-General of Police ... ... ... ... ... ... 352

VICE-CHAIRMAN (Balasubramaniam, Thiru A.)—
Budget for 1975-76, general discussion on ... 153

W

WATER-SUPPLY—
Question *re*—
Drinking water scarcity in Madras City, emergency scheme to relieve—before execution of Veeranam Scheme ... ... ... ... 120—124
Protected Drinking—Scheme in Terur Town Panchayat, completion of survey *re* ... 125—126

WELLS—
Question *re* deepening of—in Salem district, Engineer's note *re* ... ... ... ... ... 120

Y

YELLAMANDA, THIRU P.—
Budget for 1975-76, general discussion on ... 159, 163

63158